SRI RAMA JAYAM

# ஸ்ரீ இராமாயணம்

# SRI RAMAYANAM

டாக்டர்.ஜெ.பெருமாள்.M.B.A,Ph.D



ஞானக்கண் கண்ட காட்சி

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே



கங்கை நதிபாயும் நீர் வளமும் திலவளமும் குடிவளமும் பொருந்திய நாடு கோசல நாடு. வளமை மிகுந்த இந்தக் கோசல நாட்டின் தலைநகரம் அயோத்தி என்ற திருநகராகும். இந்நகரத்தில் வாழும் மக்கள் மறந்தும் தீங்கு செய்யாதவர்கள். வறுமையால் வாடி யாசிப்பவர் இந்நகரில் இல்லாததால் தருமகுணசீலர்கள் அள்ளிக் கொடுக்கும் தன்மை இன்றி வாழ்ந்தனர். அயோத்தி என்ற சொல்லுக்கு யுத்தம் இல்லாத ஊர் என்று பொருள். இந்த நகரம் போரும் சினமும் இந்றிச் சாந்தி நிகேதனமாகத் திகழ்ந்தது. எல்லோரும் எல்லா நலங்களும் பெற்று இன்புற்று வாழந்தார்கள்.

இந்த அயோத்திமா நகரை ஆதித்தன் குலத்தில் அஜமகா ராஜனுக்கும் இந்துமதிக்கும் மகனாகப் பிறந்த தசரத சக்ரவர்த்தி தாய்போல் மக்களுக்குத் தண்ணருள் புரிந்து அரசு புரிந்து வந்தார். பயிருக்குத் தண்ணீர் துணை புரிவது போலவும், உயிருக்கு உடம்பு ஆதாரமாக இருப்பது போலபும் மக்களுக்கு இம்மன்னவர் கருணை புரிந்து வந்தார். இவருடைய ஆட்சியிலே தருமம் தழைத்து ஒங்கியது. இவருடைய ஆட்சி மாட்சியுடன் விளங்கியது. பகைவர்களாலும், விலங்குகளாலும், கள்வர்களாலும் துன்பம் இன்றி மக்கள் இன்பம் பெற்று வாழந்தார்கள். தசரத மன்னருடைய கரங்கள் ஈந்து ஈந்து சிவந்தன. இவருக்குக் கௌசலை, கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவயர் இருந்தார்கள். இவருக்கு மக்கட்பேறு இல்லாமையினால் அவ்வப்போது வேறு வேறு மாதர்களைத் திருமணம் செய்து கொண்டார். அவ்வாறு செய்துகொண்ட பெண்கள் 360 பேராகும். இவர் அறுபதினாயிரம் ஆண்டுகள் அறநெறி வழுவாமல் நல்லற நாயகனாக நின்று அரசு புரிந்தார். மக்கள் மன்னரை நெஞ்சார நினைத்து வாயார வாழ்த்தினார்கள்.

தசரதர் தமக்குப் பின் தருமநெறி தவறாமல் தரணியை அரசு புரிய ஒரு மகன் பிறக்கவில்லையே என்று பெரிதும் வருந்தினார்.

தசரதர் நாட்டைக் காக்க நன்மகன் இல்லையே என்று வருந்துவது பொது நலமாகும். அரசவையில் தசரத சக்ரவர்த்தி, தமது குலகுருவாகிய வசிஷ்ட முனிவரை வணங்கி, குருநாதா ! அடியேன் தங்கள் ஆசியினால் கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் பத்துத் திசைகளிலுமிருந்து வந்த பத்து ரதங்களை வென்று, தசரதன் என்று பேர் பெற்றேன், சம்பரனை வென்று இந்திரனுக்கு உதவி புரிந்தேன், ஆனால், அடியேனுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை தலைவனின்றி மக்கள் வருந்துவார்களே என்று எண்ணி அடியேன் வருந்துகின்றேன். தாங்கள் பிரம புத்திரர். தங்களை குருநாதராகக் கொண்ட எனக்கு இந்தக் குறை இருந்தால் அது தங்களுக்குத்தானே இழிவு ? குழல், யாழ் என்ற இன்னிசைக் கருவிகளின் நாதங்களைக் கேட்கும் என் செவியில் அப்பா ! என்று அழைக்கம் மழலைச் சொல் கேட்கும் பாக்கியம் பெற்றேனில்லை. வானளாவி வளர்ந்த மரம் பழுக்கவில்லையானால் அம்மரத்தால் யாது பயன் ? என்னுடைய மனுக்குலத்தில் இதுவரை குழந்தையில்லாத மலட்டுத் தன்மை ஒருவருக்கும் இல்லை. பெரும் தவமுனிவராகிய தங்கள் சீடனாகிய எனக்கு இந்தக் குறை இருந்தால் அது தங்களுக்குத்தானே அவமானம் ? அடியேனுக்கு மகப்பேறு உண்டாகத் தேவரீர் அருள்புரிய வேண்டும் என்று கூறி முறையிட்டார்.

வசிட்ட முனிவர் ஊனக்கண்களை மூடினார். அப்பொழுது அவருக்கு ஞானக்கண் திறக்கப் பெற்றது. அதிலே கண்ட காட்சி அடியில் வருகின்றது.

திருமால் திருப்பாற்கடலில் அரவணையில் அறிதுயில் புரிகின்றார். இராவணாதி அரக்கர்களால் பலகாலமாகத் துன்பப்படுகின்ற பிரமாதி தேவர்கள் நாராயணரிடம் தஞ்சம் புகுந்து கருணைக்கடலே ! கமலக்கண்ணா ( நீலமேக வண்ணா ( இராவணன் முதலிய அரக்கர்களால் நாங்கள் ஆலைக்கரும்புபோல் நொந்து வெந்து வருந்துகிறோம் ). நாங்கள் அரக்கர்களால் பஞ்சுபடாத பாடுபடுகின்றோம். அசுர குலத்தை அழித்து, நாங்கள் செழித்து வாழ அருள் புரியவேண்டுமென்று சரண் அடைந்தார்கள்.

திருமால் தேவர்களை நோக்கி அமரர்களே ! நான் பூவுலகில் இராமனாக அவதரித்து இராவணாதி அரக்கர்களைத் தொலைத்து உங்கள் துயர் துடைத்து அருள்புரிவேன். இராவணன் பிரமதேவனிடம் மனிதர்களையும்,

வாநரங்களையும் சிறிய பிராணிகள் என்று விட்டு விட்டான். ஆகவே, நான் மனிதனாக வந்து அவதரிப்பேன். தேவர்களாகிய நீங்கள் முன்னதாகவே வாநரங்களாகப் பிறந்து இருங்கள் என்று கட்டளையிட்டார்.

திருமாலின் கட்டளையின்படி வானவர்கள் வாநரங்களாகப் பிறந்தார்கள். இந்திரன் வாலியாகப் பிறந்தான். சூரியன் சுக்கிரீவனாகப் பிறந்தான். அக்கினித்தேவன் நீலனாகப் பிறந்தான் ( நீலன் சேனைத் தலைவன் ). விசுவபிரம்மா நளனாகப் பிறந்தான், வாயுதேவன் அனுமனாகப் பிறந்தான். ருத்ராம்சமும் அதில் கலந்து நின்றது. உபேந்திரன் அங்கதனாகப் பிறந்தான்.

பிரமதேவர், நான் ஏற்கெனவே கரடிக் குழுத் தலைவன் ஜாம்பவந்தனாகப் பிறந்திருக்கிறேன் என்று கூறினார்.

கங்கைக்கரையில் தர்மாங்கதர் என்ற ஓர் அந்தண முனிவர், "ஓம் நமோ நாராயணாய" என்ற அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபித்துக் கொண்டு தவம் செய்து கொண்டிருந்தார். ஓர் அக்கிரகாரத்தில் ஓர் அந்தணர் வாழ்ந்தார். அவர் மிகவும் சாந்தசீலர். சந்தனம் போல குளிச்சியாக இருப்பவர். இவருடைய மனைவி பெயர் கலகை. இவள் அக்கினித் திராவகம் போன்றவள். நெருப்பு மலை போல் கணவன் மீது சீறிச் சீறி விழுவாள். அவர் வேண்டாம் என்பதை வேண்டும் என்று செய்வாள். வேண்டும் என்பதை வேண்டாம் என்று செய்யமாட்டாள். ஏட்டிக்குப் போட்டியாக எதையும் செய்வாள்.

கலகை ! எனக்கு சீதளத்தால் நீர்க்கொண்டிருக்கின்றது. மிளகுக் குழம்பு வை ! என்றார். அவள் நீற்றுப் பூசணிக்காய் மோர்க்குழம்பு வைத்தாள். அது சீதளத்தை அதிகரிக்கச் செய்தது.

மற்றொரு நாள், கலகை ! குடு அதிகமாகிச் சீதபேதியாகின்றது. மிளகாய் இல்லாமல் மிளகு ரசம் வை ! என்றார். அவள் கத்திரிக்காயும், பச்சை மிளகாயும் கடைந்து வைத்தாள். கலகை ! கண் எரிகின்றது. எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும் என்றார். அவள் குளிர்ந்த நீரைத் தலையில் விட்டுக் கொதித்து நின்றாள். கலகை ! உறக்கம் வருகின்றது. நான் படுக்க

வேண்டும் என்றார். படுக்கின்ற இடத்தில் தண்ணீரை வார்த்துக் குளமாக்கிப் படுக்க விடாமல் அவள் செய்து விட்டாள். இவ்வாறு எல்லவற்றுக்கும் எதிர்மறையாகச் செய்து வந்தாள். இதனால் வெறுப்படைந்து வேதியர் தலையில் துண்டு போட்டுக் கொண்டு வெளியில் கிளம்பிச் சென்றார். ஏதிரில் ஓர் ஆப்த அன்பர் வந்தார். அவர் ஐயரே ! எங்கே போகிறீர் ? என்று கேட்டார்.

மனைவியின் துன்பம் என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவள் பேய். ஆதனால் வீட்டைவிட்டு வெளியேறிப் போகின்றேன் என்றார்.

பேய் வேப்பிலை அடித்தால் ஓடிப்போகுமே என்றார் அன்பர்.

இவள் மிருகம் என்றார்.

மிருகங்களையெல்லாம் சர்க்கஸில் அடக்கி ஆளுகின்றார்களே ! ஒரு பெண்ணை உன்னால் அடக்கி ஆளமுடியவில்லையே ! என்றார்.

இவள் பூதம் என்றார்.

பிருதிவி, வாயு, தேயு, அப்பு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களை நாம் அடக்கி ஆள்கிறோமே ! இந்தப் பெண் பிள்ளையை அடக்கி ஆளமுடியவில்லையா ? அவள் என்னதான் செய்கிறாள் ? விவரமாகச் சொல் என்றார்.

ஐயா ! அவள் செய்யும் கொடுமை ஒன்றா, பத்தா, நூறா, ஆயிரமா ? லட்சோப லட்சம் குற்றங்கள் செய்கிறாள். அவற்றை நான் எங்ஙனம் சொல்வேன் ? சுருக்கமாகச் சொல்லுகிறேன். வேண்டாம் என்பதை வேண்டும் என்று செய்கிறாள். வேண்டும் என்பதை வேண்டாம் என்று செய்கிறாள்.

அன்பரே ! நான் சொல்வதைக் கடைப்பிடியுங்கள். உங்களுக்கு வேண்டாம் என்பதை, வேண்டும் என்று சொல்லுங்கள். “முயற்சி உயர்ச்சி தரும்“ என்று கூறினார்.

அந்தணர் வீட்டுக்குச் சென்றார். அவருக்கு அகோரப்பசி. கலகை ! இன்று நான் சாப்பிடமாட்டேன் என்றார்.

அவள் கோபத்துடன், உனக்காகச் சமைத்து வைத்திருக்கிறேன். சாப்பிடு என்று உணவு கொடுத்தாள்.

கலகை ! நான் உடுத்திய வேட்டியை நீ தொடக் கூடாது. உன் கை படக்கூடாது.

அவள், உனக்கு ஆசாரம் மிகுந்து விட்டதா ? ஞானம் முதிர்ந்துவிட்டதா ? நான் இன்று முதல் உன் வேட்டியைத் தோய்த்துப் போடுவேன். நீ செய்வதைச் செய் என்று கூறி அவருடைய உடைகளைத் தூய்மையாகத் தோய்த்து உயர்ந்த கொடியில் உலர்த்தி விடுவாள்.

கலகை ! உன்மேல் பட்ட காற்று என்மேல் படக்கூடாது என்றார். அவள், உனக்கு இவ்வளவு உயர்வு வந்துவிட்டாதா ? என்று சீறிவிழுந்து சிறிய வசிறியை எடுத்துச் சுகமாக வீசிவிட்டாள்.

கலகை ! எண்ணெய் தேய்த்துக் குளிக்க மாட்டேன் என்றார். அவள் நமது நாட்டுத் தட்பவெப்ப நிலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பது மிகவும் நல்லது. எண்ணெய் தேய்த்துக் குளித்துத்தானாக வேண்டும் என்று கூறி எண்ணெயைக் கொண்டு வந்தாள்.

சரி, நானே எண்ணை தேய்த்துக் கொள்கிறேன். நீ போ என்றார்.

அவள் ஏன் ! நான் எண்ணெய் தேய்த்தால் என்ன குற்றம் ! நான்தான் தேய்ப்பேன். வாயை மூடிக்கொண்டு இரு என்று கூறி, கணவனுடைய உடம்பு முழுவதும் எண்ணெய் தேய்த்தக் குளிக்க வைத்தாள்.

அந்த அந்தணர் கலகையிடம் வேண்டும் என்பதை வேண்டாம் என்று கூறியும், வேண்டாம் என்பதை வேண்டும் என்று கூறியும் காரியத்தைச் சாதித்துக் கொண்டு சுகமே வாழ்ந்தார். அந்த ஆப்த அன்பரை ஒருநாள் சந்தித்தார். ஐயரே ! இப்பொழுது உன் வீட்டுக்காரி எப்படி நடந்து கொள்கிறாள் ! என்று கேட்டார்.

இப்பொழுது எல்லாம் வெகு சுகமாக நடைபெறகின்றன. ஆனால், வேண்டாம் என்பதை வேண்டும் என்றும் வேண்டும் என்பதை வேண்டாம் என்று கவனமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்பொழுது அவள் துணி

தோய்த்துப் போடுகின்றாள, எண்ணெய் தேய்க்கின்றாள். விசிறி விடுகின்றாள். படுக்கை விரிக்கின்றாள், எல்லாத் தொண்டும் செய்கின்றாள். ஒரு குறையும் இல்லை என்றார்.

ஒருநாள் அந்த வேதியர் மனைவியைப் பார்த்து, கலகை ! நாளை என் தந்தையாருடைய சிரார்த்தம். வீடு வாசல் மெழுகாதே. நீராடாதே. சமைக்காதே என்ற கூறினார். அவள் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து வைத்தாள். பிண்டப்பிரசாதம் வோட்டு இதை ஜலதாரையில் கொட்டுமாற சொல்லியருக்க வேண்டும். சொல்லிருந்தால் சுத்தமான தண்ணீரில் கொட்யிருப்பாள். அவர் சற்றுக் கவனக்குறைவாக, பிதுர் பிரசாதத்தைச் சுத்தமான நீரில் கொட்டுமாறு கூறிவிட்டார். அவள் அதைக் கொண்டு போய் அசுத்தமான தண்ணீரில் கொட்டிவிட்டாள். கோபமே வராத குணக்குன்றமாகிய அந்த அந்தணர் கோபித்து, பாவி ! எனக்கு ஆயிரமாயிரம் குற்றங்கள் செய்தாய். அத்தனையும் பொறுத்துக்கொண்டேன். பிதுர்களின் தூய பிரசாதத்தை ஜலதாரை தண்ணீரில் கொட்டினாயே ! இது எவ்வளவு பெரிய பாவம் ? கலகை ! நீ அலகையாகப் போகக் கடவது என்று சாபமிட்டார். அந்த வேத வித்தின் சாபத்தால் அவள் பெண் பேயாக மாறினாள். குடிக்க நீரும், தங்க நிழலுமின்றி அங்கும் இங்குமாக அலைந்து உலைந்து. திரிந்து வேதனைப்பட்டாள்.

கங்கைக்கரையில் "ஓம் நமோ நாராயணாய" என்று மந்திர ஜபம் செய்து கொண்டிருந்த தர்மாங்கதரை இந்தப் பெண் பேய் பிடிக்கச் சென்றது. நெருப்பை விழுங்கச் சென்ற எறும்பு போல் இருந்தது. முனிவர் புன்னகை புரிந்து கமண்டலத் தண்ணீரை, "ஓம் நமோ நாராயணாய" என்று தெளித்தார். அந்த மந்திர நீரால் அவளது பாவமும் சாபமும் விலகிவிட்டன. அவள் அவருடைய அடிமலர் மீது பீழ்ந்து தொழுது, அழுது, தபோதனரே ! நான் கலகை என்ற பெயருள்ள பெண். கணவன் மனம் நோகப் பலப்பல குற்றங்கள் செய்த பாவத்தால், அவருடைய சாபத்தால் பேயாகத் திரிந்து அலைந்து நொந்தேன். எனக்கு அருள் புரிவீராக என்று வேண்டி நின்றாள். தர்மாங்கத முனிவர் அவளுக்குத் தண்ணருள் புரிந்து அம்மா ! அழாதே. நான் அறிவு தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை செய்த தவத்தில் பாதி உனக்குத் தந்தேன் என்றார்.

வைகுண்டத்திலிருந்து பொன்மணி விமானம் ஒன்று வந்து இருவரையும் வைகுண்டத்துக்கு அழைத்துச் சென்றது. அவர்கள் பரவாசுதேவனைச் சேவித்தப் பேரின்பத்தை எய்தினார்கள்.

ஸ்ரீமன் நாராயணர் தர்மாங்கதரைப் பார்த்து, தர்மாங்கதரே ! நீ பூவுலகில் ஆதித்தர் குலத்தில் பிறந்து தசரதன் என்ற பேர் பெற்று அறுபதினாயிரம் ஆண்டு தவம் செய்வாயாக. நான் உனக்கு மகனாகப் பிறந்து ராமன் என்ற பெயருடன் விளங்கி இராவண வதம் செய்து நாட்டுக்கு நலம் செய்வேன். அம்மா ! கலகை ! நீ கேகய நாட்டில் அசுவபதி என்ற மன்னனுக்கு மகளாகப் பிறந்து கைகேயி என்ற நாமத்துடன் வளர்வாய். தர்மாங்கதருடைய தவத்தில் பாதி பெற்றதனால் கௌசலை வயிற்றில் நான் பிறந்தாலும் என்னை நீ அன்பு மகனாக வளர்ப்பாயாக. நீ பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் பெருமையுடன் வாழ்வாய். சமயம் வரும்பொழுது என்னைக் கானகம் போகச் சொல்லிக் கலகம் செய்வாய் என்றார்.

திருமாலுடைய சக்கரம்-பரதராகவும், சங்கு-சத்துருக்கனனாகவும், ஆதிசேஷன் - இலக்குமணனாகவும் பிறக்குமாறு திருமால் கட்டளையிட்டருளினார்.

இவற்றையெல்லாம் வசிட்டர் ஞானக் கண்ணால் கண்டார்.

## வேள்வி செய்தல்



வசிட்ட முனிவர், தசரதரே ! உனக்கு எதிர்காலம் சிறப்பாக இருக்கும். சிறந்த மகப்பேறு கிடைக்கும். அங்க நாட்டில் மனுகுலத்தில் உத்தானபாதனுடைய புதல்வன் ரோமபாதன் என்னும் மன்னன் அரசு புரிகிறான். அந்த நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகளாக மழையில்லாமல் பஞ்சம் நேர்ந்தது. கலைக்கோட்டு முனிவரை அங்கு அழைத்து வந்தபடியால் மழை பொழிந்து வளம் பெருகியது. உன்னுடைய புதல்வியாகிய சாந்தையை உரோமபாத மன்னனுக்கு ஸ்வீகாரமாகக் கொடுத்தனையல்லவா ? அப்பொழுது அந்தச் சாந்தையைக் கலைக்கோட்டு முனிவர் திருமணம் செய்து கொண்டார். அதனால், அவர் உனக்கு மருமகராவார். அவர் அளவற்ற தவம் செய்தவர். சமான மில்லாதவர். அவரை அழைத்துக் கொண்டு வந்து புத்திர காமேஷ்டி யாகம் செய்வாயானால் உனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும் என்று கூறினார். தசரதச் சக்கரவர்த்தி பரிஜனங்கள் புடைசூழ, தேரேறி அங்க நாட்டை அடைந்தார். உரோம பாதர் அன்புடன் வரவேற்று உபசரித்தான். கலைக்கோட்டு முனிவரை அயோத்திக்கு அனுப்புமாறு வேண்டிக் கொண்டான். தசரதருடைய வேண்டு கோளுக்கிணங்கி கலைக்கோட்டு முனிவர் என்கின்ற ரிஷ்யசிருங்கர் தன் மனைவியாகிய சாந்தையுடன்

அயோத்தி மாநகருக்கு எழுந்தருளினார். தசரதர் ஓராண்டு அவருக்கு வந்தனை வழிபாடு செய்தார்.

அவர் ஒருநாள் ரிஷ்யசிருங்கரை வணங்கி தவ முனிவரே ! அடியேன் அறுபதினாயிரம் ஆண்டு இவ்வுலகை ஆண்டேன். பிறிதொன்றை வேண்டேன். எனக்குப் பின் நல்ல தலைவன் இல்லையே என்று மக்கள் வருந்துவார்களே என்று நான் வருந்துகின்றேன். அதலால், இந்த உலகத்தை அறநெறியில் நிறுத்தி ஆட்சி புரியும் மாட்சியுடைய ஒரு புத்திரன் உண்டாக அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

தார்காத்த நறுங்குஞ்சித் தனயர்களென் றவமின்மை
வார்காத்த வனமுலையார் மணிவயிறு வாய்த்திலரால்
நீர்காத்த கடல்காத்த நிலங்காத்தே னென்னிற்பின்
பார்காத்தற் சூரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான்.

கலைக்கோட்டு முனிவர், புத்திராகாமேஷ்டி யாகம் செய்தால் உனக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கும் என்று கூறினார். பின்னர் கலைக்கோட்டு முனிவர், நகர்ப்புறத்தே பெரிய யாகசாலை அமைத்து யாகத்துக்குரிய திரவியங்களைக் குவித்து வசிட்ட முனிவர் முதலிய தவசீலர்கள் துணைபுரிய வேதமந்திரங்களைக் கூறி மிகச் சிறந்த வேள்வியைச் செய்தார்.

பூர்ணாகுதி கொடுத்தவுடன் ஒரு தெய்வபூதம் யாகத்தில் தோன்றி யாக



பாயசத்தை வழங்கி மறைந்தது. கலைக்கோட்டு முனிவரின் கட்டளைப்படி யாகபாயசத்தை ஒரு பாதி கௌசலைக்கும், மற்றொரு பாதி கைகேயிக்கும் மன்னர் வழங்கினார். கொடுத்து பழகிய கௌசலையும், கைகேயியும் தங்களுக்கு மன்னர் வழங்கிய பாயசத்தில் பாதி, பாதி சுமித்திரைக்கு வழங்கினார்கள். மன்னவரால் கொடுபடாமல் விடுபட்ட சுமித்திரைக்கு இரண்டு பங்கு கிடைத்தது. மூன்று தாய்மார்களும் கரு உற்றார்கள். பன்னிரண்டு மாதங்கள் கரு இருந்தார்கள்.

நாம் எல்லாருமே பன்னிரண்டு மாதம் கருவில் இருக்கின்றோம். அது எவ்வாறெனில் ஆன்மாக்கள் வானத்திலிருந்து மழை

வழியாக மண்ணுலகத்தை அடைகின்றன. அவ்வாறு வந்த உயிர்கள் காய்கனி தானியங்களில் கலந்த தந்தையார் வயிற்றில் 2 மாமதங்கள் கரு இருந்த பின், தாய் வயிற்றில் பத்துமாதம் கரு இருந்து மகவாகப் பிறக்கின்றன. ஆகவே, உயிர்கள் கருவில் பன்னிரண்டு மாதங்கள் இருக்கின்றன. முதலில் நம்மை, கருச்சுமந்தவர் தந்தையார். ஆதனால்தான் நம்முடைய பெயருக்கு முன்னால் தந்தையார் எழுத்தைப் பொறிக்கின்றோம்.

இராமருடைய கரு மன்னவன் பாலின்றி பாயச வழியாகத் தாய்வயிற்றை அடைந்ததால் இவர்கள் 12 மாதம் கருச்சுமந்தார்கள்.

## திரு அவதாரம்





சித்திரை மாதம் நவமி த்தி புனர்வசு நட்சத்திரம் கடக லக்கினத்தில் இராமபிரான் திரு அவதாரம் செய்தார்.

ஒருபகல் உலகெலாம் உதரத் துள்பொதிந்(து)
அருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை.

மறுநாள் பூச நட்சத்திரத்தில் பரதரும். அதற்கு மறுநாள் ஆயில்ய நட்சத்திரத்தில் இலட்சுமணரும் சத்ருக்னரும் தோன்றினார்கள்.

மன்னவர்க்கு மகப்பேறு உண்டானதால் வரம்பில்லாத மகிழ்ச்சி அடைந்தார். அன்னதானமும், சொர்ண தானமும் வஸ்திர தானமும், பூதானமும், கோ தானமும் அள்ளி, அள்ளி தன தருமங்கள் செய்தார். ஏழாண்டுகள் வரியில்லை என்று பறை அறையச் செய்தார். கருவூலத்தைத் திறந்து எல்லாரும் அங்குள்ள நிதிகளை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். ஆலயங்களைப் புதுப்பிக்குமாறு கட்டளையிட்டார்.

எல்லாரும் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார்கள். அயோத்தி மாநகரம் இன்பவெள்ளத்தில் நீந்தியது. வசிட்ட முனிவர் இராம், பரதன், இலட்சுமணன், சத்ருக்னன் என்று பெயர் சூட்டினார். நான்கு வேதங்களைப் போல் நான்கு குமாரர்களும் இனிது வளர்ந்தார்கள். ஐந்து வயதுக்கு மேல் அவர்கள் வசிட்டருடைய ஆசிரமத்தில் வளர்ந்து கலை பயின்றார்கள்.

இராமர் வசிட்டருடைய குடிசையில் வளர்ந்தபடியினால் ஞானம் வளர்ந்தது. மாற்றாந் தாயாகிய கையேகி, கானகம் போ என்றவுடன் உடுத்த உடையுடன் காட்டுக்குப் போனார். அரண்மனையில் வளர்ந்திருந்தல் அட்வகேட் வீட்டுக்குப் போயிருப்பார். இராமர் தானே வலிந்து சென்று வறியவர்க்கு உதவி செய்வார். அவர்களுடைய குறைகளைக் கேட்டு நிறைவு செய்வார்.

## விசுவாமித்திரர் வருகை



இராமருக்குப் பன்னிரண்டு வயது நிரம்பியது. சகல கலைகளிலும் வல்லவராக, மக்களுக்கு நல்லவராக விளங்கினார். சக்ரவர்த்தி அரசவையில் இந்திர பகவானைப் போல் சுந்தர வடிவுடன் வீற்றிருந்தார். வசிட்டர், சுமந்திரர், யாபாலி முதலிய அறிஞர்கள் அவரைச் சூழ்ந்த அமர்ந்திருந்தார்கள்.

உலகத்தை இரண்டாவதாக, சிருஷ்டிக்கத் தொடங்கினவரும், காயத்ரி மந்திரத்துக்கு அதிதேவரையும், அளவற்ற தவம் செய்தவருமாகிய விசுவாமித்திர முனிவர் அங்கு எழுந்தருளினார்.

கடைக்காவலன் ஓடிவந்து மன்னர் பெருமானை வணங்கி, வேந்தர் பெருமானே ! விசுவாமித்திர முனிவர் வருகின்றார் என்று கூறினான். சக்ரவர்த்தி பிரமதேவரை எதிர்கொள்ளச் செல்லும் இந்திரபகவானைப்போல் பூசைக்குரிய சாதனங்களுடன் எதிர் சென்று, என் குலம் செய்த புண்ணியம் என்று வலம் செய்து வணங்கி, அவரை அழைத்துக்கொண்டு போய் மணித்தவிசில் இருத்தி, களபகஸ்தூரி சந்தனங்களாலும் மலர்களாலும் பாதபூசை செய்தார்.

நாம் ஓர் அதிகாரியைப் பார்க்கப் போவோமானால் அவரது அருகில் உள்ளவரைப் புகழுரை கூறி, அவரை நம் வசமாக ஆக்கிக்கொள்ள வேண்டும். இல்லையேல் நாம் அதிகாரியிடம் கூறிய கோரிக்கையை அவர் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்துவிடுவார். இந்த உலகியல் ஞானத்தை உடைய விசுவாமித்திரர், வசிட்டரை வணங்கித் தசரதரைப் பார்த்துக் கூறுகின்றார்.

தசரதா ! வசிட்டரைக் குருநாதராகப் படைத்த உன் தவம் அளவிடற்கரியது. வசிட்ட முனிவருடைய கருணை உனக்கிருப்பதால் உனக்கு உல்லா கருமங்களும் எளிதில் சித்தியாகும். மன்னர் மன்னரே ! நேற்று நான் இந்திர உலகம் சென்று இந்திரனைச் சந்தித்தேன். இந்திரனே ! சுகமா ? என்று கேட்டேன். இந்திரன் தசரதருடைய கருணையினால் சுகமாக இருக்கிறேன் என்றான். இந்திரனுடைய பொன்னுலகைச் சம்பராசுரன் கவர்ந்து கொண்டான். தசரதர், கைகேயி தேர் நடாத்தச் சென்று சம்பரா சுரனைக் குலத்தோடு அழித்துப் பொன்னுலகை இந்திரனுக்கு அளித்தார். அந்த வெற்றித்திறத்தை விசுவாமித்திரர் இங்கே குறிப்பிடுகின்றார்.

தசரதா ! உன்னைப் போன்ற உத்தம அரசனை எங்கும் காண இயலாது. நீ சத்திய சம்பந்தன. பரோபகாரி. நல்லற மூர்த்தி, நற்குண சீலன். உனக்கு எல்லாம் தெரியும். இல்லை என்ற கேட்பவருக்கு இல்லையென்று சொல்லத் தெரியாது. அளவற்ற பெருமையுடைய அரசர் பெருமானே ! என்னைப்போன்ற முனிவர்களும், தேவர்களும் தங்களுக்கு ஓர் இடையூறு

வந்தால் மலைகள் தோறும் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானிடம் சென்று முறையிடுவோம். கயிலை மலை சென்று கண்ணுதற் பெருமானிடம் முறையிடுவோம். திருப்பாற்கடலில் சென்று அரவணையில் அறிதுயில் புரிகின்ற அரிமுகுந்தனிடம் முறையிடுவோம். சுத்தியலோகம் சென்று பரம தயாளமூர்த்தியாகிய பிரம தேவரிடம் முறையிடுவோம். பொன்னுலகம் சென்று அமராவதியை அரசு புரிகின்ற இந்திரனிடம் முறையிடுவோம். இங்கெல்லாம் சென்று நிறைவேறாத குறைகளை அயோத்தி மாநகரம் வந்து உன்னிடம் முறையிடுவோம். எங்களக்கு உன்னைத்தவிர புகலிடம் ஏது ? என்று இனிய வசனங்களால் கனியமுதம் போல் கூறினார்.

புகழுரைக்கு மயங்காதார் யார் ? கரடியைக் கண்ணாடிக் காட்டிப் பிடிக்க வேண்டும். சிங்கத்தைத் தோல்வலை போத்திப் பிடிக்க வேண்டும். யானையைக் குழி தோண்டிப் பிடிக்க வேண்டும். பெயரி மனிதர்களைப் புகழுரையால் வசம் செய்ய வேண்டும் ! இந்த யுக்தியைத் தெரிந்த விசுவாமித்திரர் தசரதரைத் தன்மை நவிற்சியால் புகழ்ந்து பேசினார். தசரதர் அகமும், முகமும் மலர்ந்தது. குருநாதா ! என்னிடத்தில் ஏதாவது ஒரு சிறப்பு இருக்குமானால் அதை தேவரீருடைய ஆசீர்வாதத்தினால்தான். நான் தங்களுடைய அடிமை. நான் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும் ? கட்டளையிடுங்கள். செய்கின்றேன் என்றார்.

விசுவாமித்திரர் கூறினார் , ஆதித்தன் குலந்தழைக்க வந்த அரசரேறே ! நான் சந்நியாசி. எனக்கு என்ன வேண்டும் ? எனக்கு எதிலும் விருப்பு வெறுப்பு இல்லை. யாகம் மூன்று வகைப்படும்.

1. பகைவரை அழிக்க செய்வது. அது அபிசார ஓமம் எனப்படும்.

2. தான் உய்யப் பயன் கருதிச் செய்வது. அது புத்ர காமேஷ்டி - அசுவமேதம் முதலியன.

3. உலகம் உய்யப் பொது நலங்கருதிச் செய்வது. அது உத்தம யாகம் எனப்படும். வேந்தர் பெருமானே ! உலக நலங்கருதி நான் தருக்கள் நிறைந்த குளிர்ந்த கானகத்தில் யாகம் செய்வேன். அதனை அரக்கர்கள்

தடுத்து இடையூறு செய்கின்றார்கள். ஆதலால், அந்த வேள்வியைக் காவல் புரிய ஒருவனையனுப்ப வேண்டும் என்று கூறினார்.

நல்லது, சுமந்திரரே ! ஒரு போர் வீரனை அனுப்பு மன்னவனே ! சாமான்யமான போர் வீரனால் ஆகாது.

சுவாமீ ! சேனைத் தலைவனை அனுப்புகின்றேன்.

அன்பனே ! சேனாதிபதியால் ஆகாது.

ஐயனே ! அடியேன் வருகின்றேன்.

வேந்தனே ! உன்னாலும் ஆகாது, உன்னைப் பார்க்கினும் சிறந்தவன் ஒருவன் இருக்கின்றான் அவனை அனுப்புக.

குருநாதா ! என்னைப் பார்க்கிலும் சிறந்தவன் அயோத்தியில் இருக்கின்றானா ? நான் பத்து ரதங்களை வென்றவன். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் அடியேன் சம்பரனை அழித்தவன். தோள்வலியும் வாள்வலியும் மிக்கவன். சுமந்திரரே ! என்னைப் பார்க்கிலும் சிறந்தவன் அயோத்தியில் இருக்கின்றானா ?

கொற்றவரே ! உம்மைவிடச் சிறந்தவர் சுவர்க்க மத்திய பாதலம் ஆகிய மூவுலகங்களிலும் இல்லை.

குருநாதா ! சுமந்திர், அதிநுட்பமான மதிநுட்பம் உடையவர் அவர் கூறியதைக் கேட்டீரா ? என்னைவிடச் சிறந்தவன் இல்லை. இல்லாததை இருப்பதாக எண்ணி கூறுகின்றீர். ஒருவன் ஆமை மயிர்க்கம்பளம் கேட்டானாம். இன்னொருவன் குதிரைக் கொம்பு பொடிடப்பி கேட்டானாம். அதுபோல எனக்கு நிகர் ஒருவரும் இல்லை. உண்டு என்று தாங்கள் கூறுகின்றீர்கள்.

தசரதா ! உன்னைப் பார்க்கிலும் ஒரு கோடி மடங்கு உயர்ந்தவன் அயோத்தியில் இருக்கிறான். அவனை அனுப்பு. இல்லாத ஒன்றை இருப்பதாக நான் ஒருபோதும் கூறமாட்டேன். என் வாக்கு சத்தியம்.

விசுவாமித்திருடைய வசனங்களைக் கேட்டுத் தசரதர் சிறிது சிந்தித்தார். குருநாதா ! என்னைப் பார்க்கிலும் பலமடங்கு உயர்ந்தவர் வசிட்ட முனிவர். அவரை அழைத்துப் போங்கள் !

விசுவாமித்திரர் புன்னகை பூத்தார் ! அவர் ஒரு தாடி நான் ஒரு தாடி. இரு தாடிகளும் சென்று தாடகையிடம் வாதாடி நிற்க வேண்டும். நான் கூறுவது வசிஷ்டரை யன்று. அவன் வேத வேத்யன். அவன்தான் இராமன், மன்னவனே, நீ பெற்ற நான்கு மைந்தர்களில் கரிய செம்மல் அரிய ஆற்றல் படைத்தவன். இராமனை அனுப்புக என்றார்.

இராமனையனுப்பு என்ற சொல் புண்ணிலே வேல் பாய்ந்தது போல் மன்னவனை வாட்டி வதைத்தது. அளவில்லாத அல்லல் அடைந்தார். விசுவாமித்திரருடைய திருவடியில் வீழ்ந்தார். கவலைக் கடலில் ஆழ்ந்தார்.

குருநாதா ! இராமன் இளம் பாலகன். போர் முகம் அறியாதவன். மாயத்தில் வல்ல அரக்கர்களை வெல்லும் திறம் அறியாதவன். அடியேன் பல போர்களில் வெற்றி பெற்றவன். நான் வருகின்றேன். அரக்கர்களைக் கொன்று வேள்வியை முடித்துக் கொடுப்பேன் என்றார்.

தசரதர் இராமனைத் தன்னுடன் அனுப்ப மயங்கிய தன்மையினால் விசுவாமித்திர் முனிவர் வெகுய்டு எழுந்தார். அவருடைய கோபக்கனல் உலகங்களை வெதுப்பியது. சூரியன் மேலண்டத்துக்குப் போய் மறைந்தான். நிலம் நடுங்கியது, திசை யானைகள் அஞ்சி ஒடுங்கின, சராசரங்களெல்லாம் அசைந்தன.

வசிட்ட முனிவர் விசுவாமித்திர முனிவரின் சீற்றத்துக்கு அஞ்சித் தசரதரைப் பார்த்து மன்னவரே ! இராமனை விசுவாமித்திரருடன் அனுப்பி வையுங்கள். அதனால் இராமனுக்கு அதித்த குலத்துக்கும் நன்மை உண்டாகும். என் வார்த்தையைத் தட்ட வேண்டாம் என்று கூறினார்.

தசரதர் சுமந்திரரைப் பார்த்து, இராமனையும், இலட்சுமணனையும் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். சுமந்தரர் கௌசலையின் அரண்மனைக்குச் சென்று. இந்தத் தகவல்களைக் கௌசலையிடம் கூறி இராமனை அழைத்துக்கொண்டு வந்தார்.

இராமர் வசிட்டரையும், விசுவாமித்திரரையும், தந்தையாரையும் திருவடியில் வீழந்நது வணங்கினார். தசரதர் இராம இலட்சமணரின் கரங்களைப் பற்றி விசுவாமித்திரருடைய கரத்தில் வைத்து, சுவாமி ! இவர்களுக்குத் தாய், தந்தை, குரு எல்லாம் தேவரீர்தாம். இவர்களைப் பெறுவதற்கு நான் அறுபதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தேன். என் உயிரைத் தங்களிடம் ஒப்படைத்திருக்கிறேன். திரும்பவும் கொண்டு வந்து சேர்க்கவும் என்று தழுதழுத்த குரலில் சொன்னார்.

விசுவாமித்திர் முனிவர் விடைபெற்றுப் புறப்பட்டார். வாகனங்களில் சென்றால் எறும்பு, புழு முதலிய சிற்றுயிர்கள் மாண்டொழியும். அதனால், முனிவர்கள் தேர் முதலிய ஊர்திகளில் செல்லாமல் நடந்தே பிரயாணம் செய்வார்கள். அதனால், விசுவாமித்திரரி நடந்த போவதனால், இராம, இலட்சுமணர் தொடர்ந்து போவதாயிற்று. வழியில் மிகப் புனிதமான சரயு நதியைக் கண்டார்கள். அதில் நீராடி மகிழ்ந்து ஒரு மலர்ச் சோலையை அடைந்தார்கள். அங்குக் காயத்ரி மந்திரத்தை ஜெபித்துச் சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்தார்கள்.


காணாமல் கொடு, கோணாமல் கொடு, கண்டு கொடு என்பது பழமொழி. சூரியன் உதிப்பதற்கு முன்னமேயே சூரியனுக்கு அர்க்கியம் கொடுப்பது, காணாமல் கொடுப்பதாகும். சூரிய பகவான் உச்சியிலிருக்கம் பொழுது அர்க்கியம் கொடுப்பது கோணாமல் பொடுப்பதாகும். சூரிய பகவான் மேற்கடலில் மூழ்கும்பொழுது சூரியனைப் பார்த்துக்கொண்டே அர்க்கியம் எவ்வாறறு படுப்பார்கள் ?

அசோகங்கொழுந்து, மாங்கொழுந்து முதலிய கொழுந்துகளை விரித்து அரச குமாரர்களைப் படுக்க வைத்தார். கிழக்கே தலைவைத்துப் படுப்பது நல்லது. கண்கள் இடப்பக்கம் கீழே இருக்குமாறு படுத்தால் பிராண வாயு சூரிய நாடியில் ஜெபம் செய்துகொண்டே கண்ணுறங்கி விட்டார். இராமருடைய கால்மாட்டில் இளைய பொருமாள் படுத்துக் கண்ணுறங்கினார். உலக சொத்தாகிய அரச குமாரர்களை அரக்கர்களும், பேய்களும், விலங்குகளும் வாழ்கின்ற காட்டில் உறங்க வைத்துவிட்டு, முனிவருக்கு உறக்கம் வருமா ? இராமருடைய தலைமாட்டில் அமர்ந்த இராமரையே உற்று நோக்கி

கொண்டிருந்தார். இராமருடைய திருமுகத்தில் கருணை வழிந்துகொண்டிருந்தது. மற்றவர்கள் உறங்கினால் கருணையா வழியும் ?

இராமா ! உன் தந்தையாகிய தசரதன் நான் உரட்டிய உரட்டலுக்குப் பயந்து இந்தப் பொல்லாத கானகத்தில் உன்னை எவ்வாறுதான் அனுப்பினானோ ? அவன் கல்மனம் படைத்தவன் போலும். நீ எனக்கு மகனாகப் பிறந்திருந்தால் ஆயிரம் வீசுவாமித்திரன் வந்தாலும் உன்னைக் கானகத்துக்கு அனுப்பியிருக்கமாட்டேனே. நீ பாற்கடலில் பாம் பணையில் துயின்ற பரம்பொருள் அல்லவா ? உலகம் உய்ய மனிதனாகப் பிறந்து ஒரு சுகமும் இல்லாத இந்த வெய்ய கானகத்தில் பெறுந்தரையில் உறங்குகின்றாயே ! என்று மனிதற்கள் கூறிக்கொணடு கண்விழித்துக் கொண்டிருந்தார்.

## தாணு ஆசிரமம்



விடியற்காலையில் மூவரும் எழுந்து நீராடிக் காயத்ரி மந்திர ஜெபம் செய்த புறப்பட்டார்கள். வழியில் சிறந்த ஓர் ஆசிரமத்தைக் கண்டார்கள். விசுவாமித்திரர் இராம இலட்சுமணரைப் பார்த்து, ரகு குல ரத்திங்களே ! இது மூவரும், தேவரும் யாவரும் போற்றும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் யோகம் செய்த ஆசரமாகும். சிவமூர்த்தியே தவநிலையியல் நின்ற இந்த

ஆசிர்மம் மிகவும் வலிமை வாய்ந்தது. அளவிடற்கரிய மகிமை உடையது. சிவமூர்த்தியின் யோகத்தைக் கலைக்க மன்மதன் முயன்ற போது சிவமூர்த்தியின் நெற்றிக் கண்ணால் அவன் அங்கம் அற்ற விபந்தபடியால் இது அங்கதேசம் என்று வழங்கப்படுகிறது என்று கூறினார்.

அன்று அங்குச் சிவசிந்தையுடன் தங்கினார்கள்.

## சீதையின் பிறப்பு

தாடகைவதம் மறுநாள் மூவரும் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு புறப்பட்டார்கள். வழியில் கொடிய பாலைவனம் தென்பட்டது. தாங்கமுடியாத வெப்பமுடைய அக்கானகத்தில் பசி தாகத்தால் அரச குமாரர்கள் அல்லல் பட்டார்கள். விசுவாமித்திரர் இராம இலட்சுமணர்களுக்கு பலை, அதிபலை என்று இரண்டு விஞ்ஞைகளை உபதேசித்தார். அவர்களுக்கு அப்பொழுது பதினாயிரம் யானை பலம் உண்டாயிற்று. பசி தாகங்கள் மறைந்தன.

இராமர் முனிவரை நோக்கி, "குருநாதா ! இந்தக் கானகம் புல் பூண்டு இல்லாமல் பாலைவனமாக இருப்பதற்க என்ன காரணம் ? சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணால் எரிந்ததா ? என் தந்தையாருடைய ஆட்சியில் இப்படிக் அழியக் கூடாதே !" என்று வினாவினார்.

விசுவாமித்திர முனிவர் கூறுகின்றார். "இராகவா, இதுதான் தாடகை வார்கின்ற கானகம். ஊலோபகுணம் ஒன்றே ஆயிரமாயிரம் நற்குணங்களை அழிப்பதுபோல் தாடகை ஒருத்தியே இந்த வளமான கானகத்தை அழித்துப் பாலைவனமாக்கி விட்டாள்."

சகேது என்ற யட்சன் பிரமதேவரை வேண்டித் தவம் செய்து ஆயிரம் யானை பலத்துடன் ஒரு பெண் மகளைப் பெற்றான். அவளுக்குத் தாடகை என்று பெயர் சூட்டினான். அவள் சுந்தன் என்ற யட்சனைத் திருமணம் செய்த கொண்டாள். அவளுக்குச் சுபாகு, மாரிசன் என்ற இரண்டு புதல்வர்கள் பிறந்தார்கள்.

தாடகையின் கணவனாகிய சுந்தன், அகஸ்தியரின் சிவபூசைக்குரிய பூமரங்களை ஒடித்துவிட்டான். அவர் தழல் எழ விழித்தார். அவன் சாம்பலாகினான. இதனை அறிந்த தாடகையும், அவளுடைய மக்களும் அகஸ்தியரை வணங்கிக் குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்று கேட்கும் பண்பை விட்டு, அசுரர்களைப்போல் கல்லும் மண்ணும் வீசி எறிந்து ஆரவாரம் செய்தார்கள். அகஸ்தியர் சினந்து, நீங்கள் அசுரர்களாகப் போகக் கடவது என்று சாபம் கொடுத்தார். யட்சர்களாகிய அவர்கள் அரக்கர்களாக மாறி முனிவர்களுக்கு எண்ணில்லாத கொடுமை புரிந்துகொண்டிருக்கின்றார்கள்.

அவள் மலைப்பாம்புகளைக் கையில் வளையல்களாக அணிந்தகொண்டிருப்பாள் சூலத்தை ஏந்திக் கொண்டிருப்பாள்.

இராமா ! தாடகையிம், அவள் புதல்வர்களும் சதா முனிவர்களுக்குக் கொடுமை விளைவித்த வருகின்றார்கள். உலக நலன் கருதி நான் செய்யும் வேள்விகளைத் தடுத்துக் கெடுத்து விடுகின்றார்கள். தாடகை இராவணனிடம் உறவு கொண்டு அவன் ஏவலினால் அளவற்ற கொடுமைகளைச் செய்து வருகின்றாள் என்றார்.

தாடகை மனிதர்கள் வரம் வாசனையை மோப்பத்தால் உணர்ந்து ஆலகால விஷம் போலவும், வடவா முகாக்கினி போலவும் சீறி எழுந்தாள். இராமர் அவளைப் பெண் என்று கருதிப் போர செய்யத் தயங்கி நின்றார். விசுவாமித்திரர் இராமனைப் பார்த்த, ரகுவீரா ! இவளைப் பெண் என்று கருதாதே. ஏத்தனை எத்தனை கொடுமை உளவோ அத்தனையும் செய்பவள். முனிவர்களாகிய எங்களைக் கொண்று தின்னாமல் விட்டிருக்கின்றாள். அது கருணையினாலன்று. நாங்கள் தவத்தால உடம்பை வாட்டிச் சதைப்பற்ற இல்லாமல் இருப்பதனால், சாறு சீங்கிய கோது என்ற எங்களை விட்டிருக்கின்றாள். ஆதலால், இவளைக் கொல்லுவது அறம் ஆகும் என்றார்.

தாடகை, இராமன்மீது ஒரு சூலத்தை ஏவினாள். இராமர் அதனைப் பொடியாக்கினார். அன்றோர்கள் வாக்கே மறை மொழி என்றெண்ணி இராமர் தாடகைமீது சிறந்த அம்பினை ஏவினார். துாடகை மாண்டு விழுந்தாள்.

தேவர்கள் மலர் மழை பொழிந்தார்கள். இராமபிரானக்குச் சிறந்த பாணங்களைத் தருமாறு தேவர்கள் பணித்தார்கள்.

விசுவாமித்திரர் தவஞ்செய்து சிவபெருமானிடம் பெற்ற 500 வகையான அத்திரங்களையும், அதனைத் திருப்பியழைக்கின்ற உபசம்மாரங்களையும் இராமருக்கு முனிவர் பெருமான் உபதேசித்தருளினார்.

ஆந்த அத்திரதேவதைகள் அராமர் முன் தோன்றி, நீர் அழைக்கின்றபோது நாங்கள் வந்து உனக்கு உதவி புரிவோம் என்று கூறி மறைந்தன.

இராமரால் விசுவாமித்திரர் அடைந்த பயன் பத்தச் சதமாகம், விசுவாமித்திரரால் இராமர் அடைந்த பயன் 90 சதமாகும். ஜெபம் புரிபவனுக்க ஜெபமாமலை வேண்டும். பூஜை புரிபவனுக்கு நல்ல சுநாதமுள்ள மணி வேண்டும். எழுதுகின்றவனுக்கு எழுதுகோல் வேண்டும். இந்த அத்திர லாபத்தை முனிவரால் இராமர் பெற்றார்.

வேள்வி காவல் மூவரும் கோமதி என்ற நதி சரயு நதியில் கலக்கும் சங்கமத்தில் ஓர் இரவு தங்கினார்கள். விசுவாமித்திர முனிவருடைய தமக்கையும் ரிசீகமுனிவருடைய மனைவியுமாகிய கௌசீகை என்பவள் உலகத்தக்க நன்மை செய்யும் பொருட்டு நதியக ஆனாள். ஆந்த நதியின் பெருமை அருமைகளை முனிவர் இராமருக்குக் கூறி அங்கிருந்து புறப்பட்டுச் சித்தாசிரமத்தை அடைந்தார்களா. அந்த ஆசிரமம் கற்புடைய மங்கையரின் உள்ளம்போல் தூய்மையாக இருந்தது. திருமால் அங்குப் பலகாலம் தவம் செய்தார்.

அப்பொழுது மகாபலிச் சக்ரவர்த்தி மிக்க வலிமையுடன் விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் கவர்ந்துகொண்டான். திருமால் அதிதி வயிற்றில் ஆயிரம் ஆண்டுகள் கருவிருந்து வாமன மூர்த்தியக அவதரித்தார். அப்பொழுது மகாபலிச் சக்ரவர்த்தி அசுவமேதயாகம் செய்து கொண்டிருந்தான். பெருங்கொடையாளியாகிய அவனை வலிமையால் அடக்க முடியாது. அவனைத் தானத்தில் வெல்ல வேண்டும் என்று கருதி யாகசாலையை அடைந்தார். அவருடைய குறுகிய வடிவத்தைக் கண்டு எல்லாரும் எள்ளி நகையாடினார்கள்.

அசுர குரவாகிய சுக்கிராசாரியார், மகாபலி ! இந்தக் குறளன் திருமால் என உணர்வாய். உன்னை மாயம் செய்து அடக்க வந்திருக்கிறான். எச்சரிக்கை ! என்றார்.

மகாபலி, குருவே ! மாய்ந்தவர் - மாய்ந்தவர் அல்லர். ஈந்தவர்தான் என்றும் வாழ்ந்தவர்கள். கொடுக்கும்போது தடுக்கின்றவர்களின் சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என்று கூறி வாமன மூர்த்தியை வந்தனை வழிபாடு செய்து, உமக்கு என்ன வேண்டும் ? என்று கேட்டான். வாமன மூர்த்தி, அள்ளிக் கொடுக்கம் வள்ளலே ! என் காலால் மூவடி மண்தானம் வேண்டும் என்றார்.

மகாபலி புன்முறுவல் பூத்து. மூவுலகத்துக்கும் தலைவனாகிய என்னிடம் மூன்று நகரங்களைக் கேட்கலாமே ? உமது காலால் மூவடி என்றால் அது சிறிய பொருள்தானே ? என்றான்.

வாமனர், என் காலால் மூவடி மண் கொடுத்தால் போதும் என்றார். அவர் கையில் தண்ணீரைத் தாரை வார்த்து, மூவடி மண் அளந்த கொள்ளும் என்றான்.

சிறிய குறள்வடியில் இருந்த அவர் உயர்ந்தவர் உதவி யொப்ப, மூதண்ட கூட முகடு முட்ட வளர்ந்தார், அவருடைய பேருருவைக் கண்டு அதியித்தவர்கள், அஞ்சினார்கள். திருமால் ஓரடியால் விண்ணுலகத்தையும் ஓரடியால் மண்ணுலகத்தையும் அளந்து. மூன்றாவது அடிக்கு இடம் எங்கே ! என்றார்.

மகாபலி, தங்கள் மூன்றாவரு அடிக்கு இடம் என் சென்னி என்றான். வாமன மூர்த்தி அவனுடைய தலையில் திருவடியை வைத்து அதல உலகத்திலேயே இருந்தினார்.

ரகுநந்தனா ! இத்தகைய வித்தகரான வாமன மூர்த்தி அவதரித்த இடம் இது. மிகவும் புனிதமானது என்றார் முனிவர்.

அந்தச் சித்தாசிரமத்தில் பாம்பும் கீரியும், மயிலும் பாம்பும் ஒன்றுபட்டு உறவாடின. நுலிவாரும் மெலிவாரும் பகையின்றி ஒன்றுபட்டு நின்றனர்.

மாமுனிவர், இராமா ! இனி நான் யாகத்தைத் தொடங்குவேன், தாடகையின் புதல்வர்களாகிய சுபாகுவும் மாரீசனும் அவர்களுடைய சேனைகளான அரக்கர்களுகம், உதிரத்தையும் மாமிசங்களையும் யாகத்தில் சொரிந்து அசுத்தப்படுத்தி இடர் புரிவார்கள். இனி நான் மௌன நிலையில் இருந்து யாகம் புரிவேன். அரக்கர்களை வதைத்த யாகத்தை நிறைவேற்றுவாயாக என்று கூறி யாகத்தைத் தொடங்கினார்.

முனிவர்கள் பலர் வேதமந்திரங்கள் கூறியும், யாகத்துக்கு உரிய திரவியங்களைச் சேகரித்துத் தந்தும் உதவினார்கள். வேதமந்திரங்களுடன் வேள்வி தொடங்கியது.

இராமர் யாகசாலையில் தெற்க வாசலிலும், இலட்சுமணர் வடக்க வாசலிலும் வில்லேந்தி நின்ற காவல் புரிந்தார்கள். தாடகையின் மக்களாகிய சுபாகுவும், மாரீசனும் ஆயிரம் ஆயிரம் அரக்கர்களம், உதிரத்தையும் மாமிசத்தையும் கல்லையும் மண்ணையும் சொரிந்து ஆரவாரம் செய்தார்கள். இராமர் சரக்கூடம் கட்டி யாகத்தில் தீய பொருள்கள் விழாதவண்ணம் செய்தார். ஒரு சிறந்த அம்பினால் சுபாகுவை கொன்றார். மாரீசன் மீது ஓர் அம்பை ஏவினார். முாரீசனை அந்த அம்பு கடலில் எறிந்தது. அவன் பாதாள உலகம் போய் இராவணனுடைய உதவி பெற்று உயிர்பெற்றான். அரக்கர்களைக் கண்டதுண்டங்களாக வதைத்து மாய்த்தார். பலர் ஓடி ஒளிந்தார்கள். தேவர்கள் பொருட்டு யாகம் ஐந்து நாள்கள் நடந்தது.

எட்டு நுதலையுடைய பிரம தேவனாலும் செய்தற்கரிய யாகம் பரம மங்களமாக நிறைவேறியபின் முனிவர்களி அவபிருது ஸ்நானம் செய்தார்கள். விசுவாமித்திரர் இராமரைக் கண்குளிரக் கண்டு, ரகுநாதா ! எல்லாவுலகங்களையும் உன் உதரத்துள் வைத்துக் காத்தருளும் கடவுளாகிய நீ, இந்த வேள்வியைக் காத்தருளியதில் என்ன வியப்பு ? இராகவா ! உன் நாமம் வாழ்க. உன் புகழ் ஓங்குக ! என்று கூறினார்.

சீதையின் பிறப்பு

பத்மாட்சன் என்ற பார்த்திபன் இந்தப் பரத கண்டத்தை ஆட்சி புரிந்தான். அவன் மகப்பேறு வேண்டி மாதவனை வேண்டி மாதவம் புரிந்தான்.

திருமால் அவன் முன் தோன்றி, உனக்கு என்ன வரம் வேண்டும் ? என்று கேட்டார்.

ஆரா அமுதம் அளித்த நாராயணா ! திருமகள் எனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்று வரம் கேட்டான்.

திருமால் ஒரு மாதுளங்களியை அவனுக்கு அளித்தார. அவன் அதைப் பிறத்தபோது ஒர பாதி செழும்பிதையும், மற்ற பாதியில் இலட்சுமியும் இருக்கக் கண்டு மகிழ்ந்தான். மாதுளங்கனி போன்ற நிறமுடைய அம்மங்கைக்குப் பத்மாட்சி என்று பெயர் சூட்டினான். பத்மாட்சி திருமாலை வேண்டித் தவம் செய்தாள். பத்மாட்சன் மகளுக்குச் சுயம்வரம் வைத்தான்.

சுயம்வரம் என்றால் பெண் தானே மணமகனை வரிப்பது. 56 சிற்றரசர்களும் சுயம்வரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பத்மாட்சி தந்தையைப் பார்த்து, அப்பா ! நான் திருமாலை மணந்துகொள்ளத் தவம் செய்கிறேன். சுயம்வரம் எப்படி அமைத்தீர் ? என்று கேட்டாள். பத்மாட்சன் சுயம்வர மண்டபத்தில் நிறைந்திருக்கின்ற மன்னர்களைப் பார்த்து, வேந்தர்களே ! விண்ணில் தெரிகின்ற நீலநிறத்தை எவன் உடம்பில் பூசிக்கொள்வானோ ! அவன் என் மகளுக்கு மாலை போட வேண்டும். இது என் மகளின் விருப்பம் என்றான்.

இது ஆகாத காரியம் என்று அரசர்கள் சீறி, பத்மாட்சன் மீது போர்தொடுத்தார்கள். போரில் பத்மாட்சன் வெற்றி பெற்றான். பத்மாட்சி தவம் செய்துகொண்டிருந்தாள். வானவீதியிலே விமானத்தில் சென்று கொண்டிருந்த இராவணன் பத்மாட்சியைக் கண்டு காதல் கொண்டு பத்மாட்சியைத் தனக்குத் தருமாறு கேட்டான்.

பத்மாட்சன், பெண்ணைத் தரவதில் தடையில்லை. வானத்தில் தெரிகின்ற நீல நிறத்தை உடம்பில் பூசிக்கொண்டால் என் மகள் உனக்கு மாலை போடுவாள் என்றான்.

இராவணன் பத்மாட்சனுடன் போர் புரிந்து அவனைக் கொன்றுவிட்டான். இராவணன் பத்மாட்சியைப் பற்றுவதற்கு முயன்றான். அவள் மறைந்துவிட்டாள். அந்த நகரத்துக்கு இராவணன் தீ வைத்தான். அந்த செயல் இலங்கை எரிவதற்குக் காரணமாயிற்று.

மற்றொருநாள் இராவணன் வான்வழியே செல்லும் பொழுது நகரம் எரிந்து கொண்டேயிருப்பதையும், அதன் அருகில் பத்மாட்சி தவம் செய்து கொண்டிருப்பதையும் கண்டான். இராவணன் பத்மாட்சியைப் பற்ற முயன்றான். பத்மாட்சி எரிகிற தீயில் விழுந்துவிட்டாள். இராவணன் தண்ணீரை விட்டுத் தீயை அணைத்தான். அதில் ஒரு பெரிய மாணிக்கத்தைக் கண்டு எடுத்து, அதனை வண்டோதரிக்குத் தரவேண்டுமென்று பெட்டியில் வைத்துக் கொண்டான். பல அலுவல் காரணமாக அதனை மறந்து விட்டான்.

ஒருநாள், வண்டோதரி ! பெண் மாணிக்கமாகிய உனக்க ஒரு மாணிக்க மணியை கொண்டு வந்தேன் என்று கூறிப் பெட்டியைத் திறந்தான். அப்பெட்டியில் ஒரு பெண் குழந்தை இருந்தது. இராவணன் அதிர்ச்சி அடைந்தான். இவள் மாயக்கன்னி, மயக்கும் கள்ளி ! என்ன என்ன வடிவம் எடுக்கிறாள் என்று கூறி, வாளை எடுத்து வெட்டுவதற்கு ஓங்கினான்.

வண்டோதரி கணவனார் கரத்தைப் பற்றித் தடுத்து, பெருமானே ! இந்தக் குழந்தையை வெட்டாதீர்கள். மாறி மாறிப் பல வடிவங்கள் எடுத்த இவள் பத்ரகாளியாக மாறி உன்னைக் கொன்றுவிடுவாள். இந்தப் பெட்டியில் வைத்து மூடி எங்காவது புதைத்துவிடுங்கள் என்று கூறினான். பெட்டியை மூடி அரக்கர்களின் கையிலே கொடுத்து, இமயமலைச் சாரலிலே புதைத்து விடுங்கள் என்றான். அவ்வாறே அவர்கள் புதைத்து விட்டார்கள்.

சிலர் இலங்கையிலே சீதை பிறந்தாள் என்றும், சீதை பிறக்க இலங்கை அழியும் என்றும் கூற, இராவணன் பெட்டியில் குழந்தையை வைத்துக் கடலில் விட்டுவிட, மிதிலாபுரியில் கரை தட்டியது என்று கூறுவார்கள். மிதிலாபுரிக்கம், கடலுக்கும் சம்பந்தமே இல்லை. மிதிலாபுரி இப்பொழது ஜனக்பூர் என்று வழங்குகிறது. அதற்குப் பாட்னாவிலிருந்து ஜீப்பில் போகவேண்டும் நேபாளத்தின் பார்டரில் இந்த நகரம் இருக்கின்றது.

மிதிலாபுரியை அரசு புரிகின்ற சீரத்துவஜ ஜனகர் பரமஞானி மரவுரியைத் தன்கொடியில் எழுதிக் கட்டியதினால் சீரத்துவஜ ஜனகர் என்று பெயர் பெற்றார். இவருடைய தம்பி குசத்துவஜர் என்பவர். சாங்காஸ்யம் என்ற நகரத்தை ஆட்சி புரிந்து வந்தார். ஜனகரிடம் கௌதமரின் புதல்வராகிய

சதானந்தர் புரோகிதராக இருந்து வந்தார். ஜனகர் வேதாந்த வித்தகர். மகப்பேறு வேண்டிப் பொற்கொழுவால் வேதமந்திரம் சொல்லி உழுகின்றபொழுது இராவணனால் புதைக்கப்பட்ட பெட்டி கிடைத்தது. திறந்து பார்த்தார். மகாலட்சுமியே குழந்தையாக விளங்கிக் கொண்டிருந்தாள. ஜனகர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து சீதை என்று பெயர் சூட்டினார். தான தருமங்கள் செய்தார்.

பின்னர், ஆறுமாதம் கழித்து ஜனகருடைய மனைவி ஸுநயனி கருவுற்ற வேறு ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அப்பெண்ணுக்கு ஊர்மிளை என்று பேர் சூட்டினார்கள். ஜனகருடைய தம்பிக்கு மாண்டவி, சுருதகீர்த்தி என்ற இரண்டு பெண்கள் பிறந்தார்கள்.

ஒருநாள் இந்த நான்கு பெண் குழந்தைகளும் அரண்மனையில் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்களா. சீதாதேவி வீசிய பந்து ஜனகர் பூசை செய்கின்ற சிவன் வில்லின் அடியில் சிக்கிக் கொண்டது. சீதை, ஊர்மிளை ! பந்தை எடுத்துப் போடு என்றாள். ஊர்மிளை, அக்கா ! பந்து சிவ தனுசின் கீழே அகப்பட்டுக் கொண்டது. அது அறுபதினாயிரம் பேர் எடுக்கக் கூடியது என்றாள்.

என்னம்மா ! ஒர பந்தை எடக்க அறுபதினாயிரம் பேரா ? என்று கூறி, அன்னம்போல் நடந்து இடக்கையில் வில்லை எடுத்து மூலையில் சார்த்தி வைத்துவிட்டுப் பந்தை எடுத்தக் கொடத்தாள். பழையபடியே வில்லை எடுத்து மேடையில் வைக்க மறந்துவிட்டாள்.

மறுநாள் காலையில் பூசை செய்யவந்த ஜனகர் வில் மேடையில் இல்லமல் மூலையில் இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார். பாராச் சேவகனை அழைத்து வில்லை யார் எடுத்தது ? என்று கேட்டார்.

பாராச் சேவகன் இங்கு ஒருவரும் வரவில்லை. சீதா தேவி தன் தங்கையுடன் பந்து விளையாடினார்கள் என்றான். ஜனகர் சீதையை அழைத்து வில்லை யார் எடுத்தது ? என்ற கேட்டார். அப்பா நான்தான் எடுத்து வைத்தேன. என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறி, வில்லை இடக்கையால் எடுத்து மேடையில் வைத்துவிட்டாள். இந்த நிகழ்ச்சி ஜனகருக்கு ஆசய்சரியத்தை அளித்தது.

அறுபதினாயிரம் பேர் எடுக்க வேண்டிய வில்லை. இந்த ஐந்து வயது குழந்தை அநாயாசமாக இடக்கையால் எடுத்து வைத்ததே ! இந்தப் பெண்ணை யாருக்குத் திருமணம் செய்து கொடுப்பது என்ற சிந்தித்தார்.

வில்லை வளைத்தவனுக்கே பெண்ணைத் தருவதாகப் பிரகடன் செய்தார். பலர் வந்து வளைக்காமல் தோல்வி அடைந்தார்கள். அப்போது சீதைக்கு 12 வயது. சீதையின் திருமணம் பரம மங்களமாக நடைபெறும் பொரட்டு ஒரு சத்ரயாகம் தொடங்கினார். அந்த யாகத்துக்கு மன்னர்களும், மறையவர்களும் குபமினார்களா. அந்த யாக அழைப்பு சித்தா சிரமத்தில் இருக்க விசுவாமித்திரரை அடைந்து. விசுவாமித்திரர் இராமரை நோக்கி, இராமா ! உன்னால் ஒரு பெயரி காரியம் நடக்க இருக்கிறது. அதற்கிடையில் ஜனகருடைய யாகத்துக்குப் போகவேண்டும் என்று கூறி, இராம இலட்சுமணருடன் மிதிலையை நோக்கி புறப்பட்டார். வழியில் சோனை நதியைக் கண்டார்கள். கங்கா நதியைத் தரிசித்தார்கள். பகீதரன் கங்கை கொண்டு வந்த வரலாற்றை விசுவாமித்திரர் இராமருக்குக் கூறினார். வழியில் முருகப் பெருமான் திருவவதாரம் செய்த சரவணப் பொய்கையைக் கண்டு முருகப் பெருமனை நினைத்து வணங்கி மகிழ்ந்தார்கள்.

ஓடக்காரன் சந்திப்பு மூவரும் தேவரும் போற்றும் மிதிலைக்கருகிலே சேர்ந்தார்கள். அங்கு ஒரு பெரிய நதி குறுக்கிட்டது. அதற்குப் பாலம் இல்லை. அந்நதியைக் கடக்க வழி என்ன என்று சிந்தித்துக் கொண்டிருந்தபொழுது கரிய நிறத்துடன் ஒருவன் வந்து வணங்கி நின்றான். நீ யாரப்பா ? உனக்கு என்ன பேரப்பா ? என்று கேட்டார்கள். அவன் நான் வீரப்பன் என்றான். அக்கரைக்குப் போகவேண்டுமென்ற அக்கறை. ஓடம் கிடைக்குமா ?

நான் ஓடக்காரன். மீனவர் மரவில் வந்தவன். நான் பரம்பரையாக ஓடம் செலுத்துபவன்.

இப்போ ! ஓடம் தயாராக இருக்கின்றதா ? எத்தனைப் பேர் ஏறலாம் ?

அறுபது பேர் ஏறலாம். நீங்கள் மூவர்தான் வந்திருக்கின்றீர்கள்.

அப்பா ! இன்னும் 57 பேர்கள் சேரும் வரையிலும் நாங்கள் காத்திருக்க வேண்டுமா?

நீங்கள் உலகத்தைக் காக்கும் தெய்வங்கள். உங்களைக் காக்க வைக்கமாட்டேன். உங்கள் மூவருக்கும் ஓடம் செலுத்துவேன்.

அப்படியானால் அறுபது பேருக்குரிய கட்டணத்தை நாங்களே தந்துவிடுவோம்.

நீங்கள் மூவரும் ஏறினால் மும்மூர்த்திகள் ஏறியது போலாகும். உங்களிடத்தில் காசு வாங்கமாட்டேன். உங்கள் ஆசி இருந்தால் போதும். ஏறுங்கள்.

விசுவாமித்திரர் ஓடத்தில் ஏறினார். இராமர் ஏறுகின்ற பொழுது அந்த மீனவன், பச்சை ! பச்சை ! ஓடத்தில் கால் வைக்காதே. அப்பன் ஆணை என்றான்.

இராமர் துக்கிய காலை கீழே வைத்துவிட்டார். இலட்சுமணருக்குச் சீற்றம். இவனை அறைந்துவிட்டு நாமே ஓடம் செலுத்தலாம் என்று எண்ணினார். இராமர், தம்பி ! அவன் பரம்பரையாக ஓடம் செலுத்திக் கொண்டிருக்கிறான். தனியார் துறையில் அரசாங்கம் கை வைக்கக்கூடாது. அரசாங்கம் மேற்கொண்ட இலாக்கா ஒழுங்காக இருப்பதில்லை. பச்சையாக இருக்கின்ற என்னைப் பச்சை என்று அழைத்தால் என்ன ? அவனுக்குச் சொந்தமான ஓடத்தில் கால் வைக்காதே என்று சொல்ல அவனுக்கு உரிமை உண்டுதானே ?

அப்பா ! மீனவனே ! நான் ஏன் ஏறக்கூடாது ?

ஐயா ! தங்களை ஏற்றிக்கொள்ள மாட்டேன். சீறுகின்ற சின்ன ஐயாவை ஏற்றிக்கொள்வேன். நீங்கள் யார் ?

அப்பா ! அயோத்தியை ஆளுகின்ற தசரதச் சக்ரவர்த்தியின் மக்கள் நாங்கள்.

அம்மீனவன் உள்ளம் துடித்து, கண்ணீர் வடித்து வணங்கி, என்னை மன்னிக்க வேண்டும் இராமச்சந்திரமூர்த்தி ! தாங்கள் பிறந்த அன்று எங்களுக்கு அன்னமும் ஆடையும் வழங்கினார்கள். அமைச்சர்கள் வந்தாலே

மிகப்பெரிய வரவேற்புச் செய்கிறார்கள். நீங்கள் சக்ரவர்த்தித் திருக்குமாரர். உங்களுக்கு ஒரு கோடி வணக்கம். தாங்கள் மட்டும் ஓடத்தில் கால் வைக்கவேண்டாம்.

ஏனப்பா ! நான் ஏறக்கூடாது ?

ஐயனே ! சிறிது தூரத்தில் ஒரு கருங்கல் பாறை இருந்தது. நாங்கள் இளமையில் அதில் சருக்கும்பாறை ஆடுவோம். அந்தக் கல்லில் தங்கள் கால் பட்டவுடனே அது பெண்ணாக மாறிவிட்டது. இதில் கல்லும், மரமும், இரும்பும் இருக்கின்றன. தாங்கள் கால் வைத்தவுடனே ஓடம் பெண்ணாக மாறிவிடும். நான் வீட்டிலுள்ள பெண்ணைக் காப்பாற்றுவேனா ? இந்தப் பெண்ணைக் காப்பாற்றுவேனா ? தனவந்தர்கள் இரு தாரத்தடன் அல்.லல் படுகிறார்கள். நான் ஏழை. இந்த ஓடத்தை வைத்தக்கொண்டுதான் ஜீவனம் பண்ணுகிறேன்.

அப்பா ! நாங்கள் கால் வைத்தால் பெண்ணாகாது. நாங்கள் அவசியம் அக்கரைக்குப் போகவேண்டும்.

அப்படியானால் ஒன்று செய்யுங்கள். நதியில் இறங்கிச் சுத்தமாகக் காலைக் கழுவிவிடுங்கள். கல்லைப் பெண்ணாக்குகின்ற மருந்து தண்ணீரில் கரைந்து போகட்டும் பின்னர் ஏறிக்கொள்ளலாம்.

இராமர் நதியில் இறங்கிக் கால் கழுவச் சென்றார். மீனவன், ஐயனே ! கால்வைத்துத் தேய்க்கக் கூடாது என்று வசிட்டர் உமக்குச் சொல்லவில்லையா ? கால் கழுவும் பணியை எனக்கு கொடும். நான் சுத்தமாய்த் தேய்த்துவிடுவேன் என்று கூறி, இராமருடைய சரணார விந்தங்களைச் செப்புத் தாம்பாளத்தில் வைத்து, ராம ராம என்று கண்ணீரும் பன்னீரும் விட்டு அபிஷேகம் செய்தான். காட்டு மலர்களை எடுத்து அர்ச்சனை செய்தான். எம்பெருமானே உன் பாத பூசைக்குச் சரபங்கர், பாரத்துவாஜர், தண்டக வனத்த மகரிஷிகள், சபரி முதலிய மகரிஷிகள் பலகாலம் காத்திருக்க தவம் செய்யாத தமியேனுக்கு முதல் பாதபூசை கிடைத்ததே என்று துதி செய்து வந்தனை வழிபாடு செய்தான்.

இராமர், தம்பி இலட்சுமணா ? இவனை அறைந்துவிடலாமா ? என்று எண்ணினாயே ! நமது பாதபூசைக்காக இவ்வாறு செய்தான்.

மீனவன், இராமா ! கல்லைப் பெண்ணாக்கும் மருந்து தண்ணீரில் இறங்கிவிட்டது. இதைக் கீழே விட்டால் கீழேயிருக்கிற கற்களெல்லாம் பெண்களாகிவிடும். ஏன் மனமாகிய கல் பெண்ணாகட்டும் என்று கூறி ஆசுமனம் செய்து தலையில் ஊற்றிக்கொண்டான். மூவரும் ஓடத்தில் ஏறினார்கள். அவன் பகவானுடைய கீதத்தைச் சொல்லியே ஓடத்தைச் செலுத்தினான். ஓடத்தை விட்டு இறங்கியவுடன் இராமர் தன் கையிலிருந்த நவரத்தின மோதிரத்தை இனாமாகத் தந்தார். அவன் அதை வாங்க மறுத்தவிட்டான்.

இராமச்சந்திர மூர்த்தி ! நீயும் ஓடக்காரன், நானும் ஓடக்காரன். தொழிலாளியிடம் தொழிலாளி இனாம் வாங்க கூடாது. நான் இந்த நதிக்க ஓடம் விடுபவன். தாங்கள் பிறவிப் பெருங்கடலுக்குத் திருவடி ஆகிய ஓடத்தை விடுபவர். இப்பொழுது நான் இதற்க இனாம் வாங்கினால் அப்பொழுது நான் பொருள் தர எங்கே போவேன் ! என்று கூறி, தொழுது அழுது இராமர் மலரடிமீது வீழ்ந்து வணங்கினான். அவன் அன்பைக் கண்டு இராமர் உள்ளம் உருகினார். மூவரும் மிதிலையை நோக்கி புறப்பட்டார்கள்.

மணிக் கோபுரத்திலுள்ள கொடிகள், இராகவ ! நான் செய்த மாதவத்தால் மலர்மகள் என்னிடம் வந்து பிறந்திருக்கின்றாள். அத்திருமகள் உனக்கத்தான் என்று அசைந்து அழைப்பதுபோல இருந்தது. மலர்ச் சோலைகளும், அறச் சாலைகளும், கல்விக் கூடங்களும், செல்வ மாடங்களும் நிறைந்து அழகுடன் விளங்கும் மிதிலை மாநகரத்திற்குள் நுழைந்து, அரச வீதியில் மூவரும் சென்றார்கள்.

சீதையின் சந்திப்பு கன்னிமாடத்தில் கல்லும் புல்லும் உருகத் தாதியர்கள் குழ ஆயிரமாற்று மெருகிட்ட தங்க விக்கிரகம் போல் சீதாதேவி நின்ற கொண்டிருந்தாள். இராமர் அக்குல மகளை நோக்கினார். அத்திருமகளும் இராமனை நோக்கினாள். சீதையின் உள்ளத்தில் இராமரும், இராமர் உள்ளத்தில் சீதையும் குடி புகுந்தனர். அவர்கள் உள்ளம் ஒன்றியது. இராமர் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இவர் யாரோ ! என்ன

பேரோ ! முபமதியைப் போன்ற முகமும், வாள் போன்ற கூரிய கண்ணும், பவளம் போன்ற அதரமும், தவளவெண் நகையும் கொண்ட இவர் என் உள்ளத்தை உருக்குகின்றார். பண்டைப் பிறப்பின் தொடர்பினால் இவருடைய சந்திப்பு ஏற்பட்டது போலும் என்று எண்ணினார்.

தெரு வளைவில் மூவரும் மறைந்தனர். சீதாதேவி இராமர் மீது காதல் கொண்டு கூறுகின்றார். இவர் மன்மதனோ ! மன்மதனாக இருந்தால் கரும்பு வில் இருக்குமே! மூங்கில் வில் இருப்பதனால் இவர் மன்மதன் அல்லர். இந்த மூங்கில் இவருடைய தோளைத் தழுவுவதற்கு என்ன தவம் செய்ததோ ! என் உள்ளத்தில் குடியிருந்த நாணம், மடம் முதலிய குணங்கள் போன வழி தெரியவில்லையே ! இவர் என் கண்வழி நுழைந்து களவு செய்துவிட்டார். அந்த முனிவர் சிறிது மெல்லப் போயிருந்தால் இந்த சுந்தர ரூபனை இன்னும் சிறிது நேரம் பார்த்திருப்பேனே. இவர் எனக்க கமணவாளனாக வரவேண்டுமானால் அறுபதினாயிரம் பேர் தூக்கவேண்டிய சிவதனுச் குறுக்கே நிற்கின்றதே. ஆந்த மேருமலை போன்ற மகத்தான வில்லை இவர் வளைத்தால்தானே எனக்கக் கணவனாக வரமுடியும் ! கண்களக்குத் தெரியாமல் விண்ணில் உறையும் தேவர்களே ! சித்தர்களே ! முனிவர்களே ! இந்த வீதி வழியாகச் சென்ற சுந்தர சீலன் கையில் அநதப் பெரிய வில் பூமாலைப் போல் வளையுமாறு செய்தால் நான் உங்களுக்காக 14 ஆண்டு வனவாசம் செய்வேன் என்று பிராரத்தனை செய்து கொண்டாள். பொழுது போனபடியால் ஜனக மகாராஜாவின் கட்டளைப்படி சதான்நதர் மூவரையும் வரவேற்ற விருந்தினர் மாளிகையில் தங்க வைத்த உணவு முதலியன தந்து உபசரித்தார்.

அயோத்தியிலிருந்து மிதிலாபுரி 450 மைல். 14 நாள் கடந்து வந்து சேர்ந்தார்கள். வழியில் தூங்காமல இருந்த விசுவாமித்திர முனிவர் அயர்ந்து தூங்கினார். இளைய பெருமாளும் நன்கு உறங்கிவிட்டார். படுத்த உடனே உறங்கும் இராமர் அன்ற உறக்கம் வராமல் புரண்டு புரண்மு படுத்தார். தூக்கம் வராமைக்க என்ன காரணம் ? ஏ ! மனமே ! இன்ற மாலை மாடிமேல் நின்ற அழகிய பெண்மணியைக் கண்டு காதல் கொண்னையே ! இது முறையா ? அவள் முகம் மட்டுமே தெரிந்தது. கழுத்து தெரியவில்லையே ! அவள் கழுத்தில் மங்கல நாண் இருந்தால் பிறன்மனை விழைந்த பெரும் பாவம் உனக்கு வருமே ! பாவங்களில் தலையாயது பரதார கமனம் கமனத்தைக் கண்டிப்பதற்கல்லவா ! நீ வில்லை வைத்திருப்பது பரதார

கமனத்தைக் கண்டிப்பதற்கல்லவா ! நீயே அந்தப் பாவத்தைச் செய்தால் அறநெறி பிழைக்குமா ? என்னைப் பாவக் குரியில் தள்ளிவிட்டாயே ! என்று பலவாறு சிந்தித்துக் குழம்பினார். முடிவில், நான் எந்தப் பெண்களைப் பாரத்தாலும் என் தாய் கௌசலையாகவே பார்ப்பேன். இன்ற இவளைப் பார்த்த என் மனம் விரும்பிது. இதுவரை நல்வழியில் போகும் என் மனம் அல்வழியில் போனதில்லை. குற்றம் செய்யாத என் மனம் அவளை விரும்பியதால் அவள் கன்னியாகத்தான் இரக்கவேண்டும் என்று முடிவு கட்டி உறங்கினார்.


வில் வளைத்தல் மறுநாள் காலை சந்தியா வந்தனங்களைச் செய்துவிட்டு மூவரும் வேள்விச்சாலைக்கு எழுந்தருளினார்கள். ஜனகர் அவர்களை வரவேற்று ஆசனங்களில் அமர வைத்து உபசரித்தார். ஜனகர் விசுவாமித்திர முனிவருடைய இருபுறங்களிலும் இளம் சூரியனைப்போல் ஒளி செய்து கொண்டு அமர்ந்திருக்கிற இராமரையும், இலட்சுமணரையும் குறியாகப் பார்த்து, குருநாதா ! இக்குமாரர்கள் யார் ? என்று வினாவினார். விசுவாமித்திரர் கூறுகின்றார்.

மன்னர் பெருமானனே ! இவர்கள் தசரதச் சக்ரவர்த்தியன் குமாரர்கள். இவன் இராமன் இலக்குமணன். கூிருந்தாக இங்கு வந்திருக்கின்றார்கள். நீ வைதர்திருக்கின்ற வில்லையும் வளைக்கும் பேராற்றல் படைத்தவர்கள். மனுவின் குலத்தில் வந்தவர்கள். இவர்கள் குலத்தின் முதல்வனாகிய இக்ஷுவாகு மன்னன் அணி அரங்கம் தந்தவன். பிருகு. குகுஸ்தன, மாந்தாதா, குசுகுந்தன. சிபிக் சக்ரவர்த்தி, சகரர், பகீரதன், இரகு, அஜமகாராஜன் இவர்கள் இந்தக் குலத்தின் பெருமையை நிலைநாட்டினவர்கள். இந்த இராமர் தாடகையைக் கொன்று நான் செய்யும் வேள்வியை முடித்துக் கொடுத்தார். தள்ளரிய பெருநீதி தங்கும் பள்ளம் போன்ற பரதனை கைகேயி பெற்றெடுத்தாள். மேர மலையோல் உயர்ந்த வீரனாகிய இந்த இலட்சுமணனையும், சத்ருக்கனனையும் சுமித்திரை பெற்றெடுத்தாள். வேந்தர் பெருமானே ! இந்த இராகவனுடைய பெருமை அளவிட முடியாது. இவன் நற்குண நம்பி. இராமருடைய குணநலன்களை எடுத்துக்கூறினார். அறுபதினாயிரம் பேர் வில்லைச் சுமந்துகொண்டு வந்து யாக சாலையில் வைத்தார்கள். அங்குக் குழுமியிருந்த மன்னர்கள் வில்லை

வளைக்கும் ஆற்றலின்றி அடங்கி மடங்கி இருந்தார்களை. ஒரு மன்னவன் வில்லைப் போய்ப் பார்த்துவிட்டுப் வந்த தன் ஆசனத்தில் அமர்ந்தான். அருகில் உள்ளவன். எங்குச் சென்றாய் ? என்று கேட்டான். அவன், நான் வில்லை துகாக்ப் போகவில்லை. பார்க்கப் போனேன் என்றான். இன்னொருவன் வில்லிடம் சென்று கரத்தை நீட்டினான். அவன் கைகளுக்கு அந்த வில் அடங்கவில்லை. வருத்தத்தோடு தன் ஆசனத்தில் வந்த அமர்ந்தான். அருகில் இருந்தவன், எங்குப் போனீர் ? என்று கேட்டான். நான் வில்லை வளைக்கப் போகவில்லை அளக்கப் போனேன் என்றான்.

இன்னொருவன் வில்லிடம் சென்ற எடுக்க முடியாமல் அவமானத்தடன் வந்த அமர்ந்தான். அருகில் இருந்தவன், எங்குப் போனீர் ? என்ற கேட்டான். நான் வில்லை வளைக்கப் போகவில்லை. நிறுக்கப் போனேன் என்றான். ஒரவன் எனக்க மூன்று நாளாகக் சாய்ச்சல் என்றான். ஒருவன் சீதை எனக்குத் தங்கை முறை என்றான். இவ்வாறு எவரும் வில்லை வளைக்க இயலாமல் பின்வாங்கிய பொழுது முனிவர் இராமனைக் கடைக்கண்ணால் நோக்கி, இந்த சிவதனுசு தட்ச யக்ஞத்தில் பழுதுபட்டது. பல ஆண்டுகளாக அபிஷேகம் செய்து இற்றுப் போனது. இது இராவணன் சம்காதத்திற்கு உதவாது. ஊனக்கப் பரசுராமர் கோதண்டத்தைத் தருவார். இதை வளைக்காதே, ஒடித்துவிடு என்று கூறினார். அங்குச் சூழ்ந்திருந்தவர்கள் ஜனகருக்க அறிவே கிடையாது. இந்தப் புத்திர ரத்தினத்திற்கு வலிய மகளைத் தராமல் இநதப் பெரிய வில்லை இப்பிள்ளை முன் வைத்து, இந்த வில்லை வளைத்தால்தான் பெண் தருவேன் என்பது பேதைமையாகும். இந்த வில்லை வளைக்கப் போகின்றவனும் இல்லை. சீதைக்குத் திருமணமும் ஆகாது என்று பலவாறு பேசிக் கொண்டார்கள். மனிவருடைய கடைக்கண் பார்வையை அறநித இராமர வில்லை நோக்கினார். இந்த இடத்தைத் தியாம்பிரம்மம், முனி குனசைக தெலிஸி சிவதனுசு விரிசேஸமயமு அலகலல் லாடககனி ஆராண்முனி எடு பொங்கெனோ என்று பாடுகின்றார்.


இராமர் மேருகிரி போல் நடந்து அந்தப் பெரிய வில்லை அநாயாசமாக எடுத்த நாணைப் பிடித்த இழுத்தார். வில் படார் என்று ஒடிந்தத. அண்ட சராசரங்கள் அதிர்ந்தன. எட்டுத் திசைகளிலும் அந்த ஓசை கேட்டது. தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள்.





ஜனகர் பெரிதும் மகிழ்ச்சியுற்றார். மிதிலாபுரியிலுள்ள அனைவரும் பெருமகிழ்ச்சியுற்றார்கள்.

## சீதா கல்யாணம்



நீலமாலை என்ற தாதி சீதையிடம் சென்று இராமர் வில்லை வளைத்த செய்தியைக் கூறினாள். தாதியின் வார்த்தையைக் கேட்டு, சீதாதேவி பெருமகிழ்ச்சியுற்றாள். இவள் சொன்ன குறிப்பினால், நேற்ற நான் கண்ட வீரன்தான் வில் வளைத்திருக்க வேண்டும். வேறு ஒருவன் வில் வளைத்திருந்தால் நான் மாண்டுவோவேன் என்று எண்ணினாள்.

சுபையில் ஒரு பெண்மணி இராமரைப் பார்க்கச் சீதைக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் என்றாள். இன்னொருத்தி சீதையைப் பார்க்குந்தோறும் இராமருக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் என்றாள். இராமருடைய தம்பியைப் பாருங்கள் அண்ணனுக்க இவர் இளையார். குணங்களில் இளையார் என்றாள்.

இந்தப் புண்ணிய புருஷர்களை மிதிலாபுரிக்க அழைத்துக் கொண்டு வந்த விசுவாமித்திரருக்க நன்றி சொல்லுங்கள் என்றாள். ஜனகர் விசுவாமித்திர முனிவரின் ஆலோசனைப் படி அயோத்திக்குத் திருமண ஒலை அனுப்பினார்.

ஓலைக்கொண்டு வந்து கொடுத்தவரக்குத் தசரதர் ஆடையும், அணிகலனும் வழங்கினார். எல்லாரையும் மிதிலைக்கப் புறப்படுமாறு கட்டளையிட்டார். ஆன்றோர்களைச் சேர்ந்த சிறியவரும் ஆன்றோராக மாறிவிடுவார்கள். தசரதருடைய பொற்றேரில் தங்கத்தினாலாகிய சக்கரங்கள் உருண்டு உருண்டு இருண்ட கல்லையும் பொன்மயமாக்கி விட்டன. எல்லாரும் மிதிலையைச் சேர்ந்தார்கள். ஜனகர் தசரதரை வரவேற்புச் செய்து உபசரித்தார். இராமர் தந்தையாரை வணங்கினார்.

திருமண நாளன்று மணமக்களை அலங்கரித்துத் திருமண மண்டபத்தில் அமர்த்தினார்கள். சதானந்தர் புரோகிதராக இருந்து வேத மந்திரங்களைக் கூறினார். மணவறையில் சீதை வளையலைத் திருத்துவதுபோல் கடைக்கண்ணால் காகுத்தனைக் கண்டு களித்தாள்.

ஜனகர் சீதாதேவியின் கரமலரை இராமருடைய கரமலரில் வைத்து, வேத மந்திரத்துடன் தாரை வார்த்தத் தந்தார். இராமர் சீதையின் கழுத்தில் மங்கல நாண் கட்டினார்.

இராமர் சீதாதேவிக்குத் தாலிபூட்டியவுன் தாயைப் பார்க்கினும் மிக்க அன்புடன் கைகேயியை முதலில் வணங்கினார். பின்னர், கோசலையையும் சுமித்திரையையும் வணங்கினார். வசிட்டர் விசுவாமித்திரருடைய குருமார்களைப் பணிந்தார். பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் சீதாதேவியின் திருமணம் நடைபெற்றது.

வசிட்டர் முதலிய முனிவர்களின் ஆலோசனையின்படி ஜனகருடைய தம்பி குசத்துவசருடைய புதல்வி மாண்டவியைப் பரதர் திருமணம் செய்துகொண்டார். ஜனகருடைய புதல்வி ஊர்மிளையை இலட்சமணர் திருமணம் செய்துகொண்டார். மாண்டவியின் தங்கை கீர்த்தியைச் சத்ருக்னர் திருமணம் செய்துக்கொண்டார். இவ்வாறு, நான்கு திருமணங்கள் நடை பெற்றன.

விசுவாமித்திரர் விடைபெற்றுக் கொண்டு தமது தவவனம் சென்றார்.

தசரதர் தமது சுற்றமும் பரிவாரங்களும் சூழ, ஜனகரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். ஜனகா, 4 பெண்களுக்கும் 400 படுக்கை,

400 வெள்ளியண்டா, 400 தங்கக்குடம், 400 போர்வை, 400 பசுக்கள் இவ்வாறு நிரம்பச் சீதனந்தந்து, அறவுரை கூறி வழியனுப்பினார். இராமர் சீதையுடன் தனித் தேரில் புறப்பட்டார்

பரசுராமர் வழியில் மயில் வலமாகவும், காகம் இடமாகவும் சென்றன. இது அபசகுனம். ஏதிரில் நிறைகுடம் வந்தது. இது நல்ல சகுனம். ஆகத்திக்கீரை எதிரில் வந்தத. இது கெடுதல். சலவைத் தொழிலாளி அழுக்குத் துணிமூட்டையுடன் வந்தான். இது நல்லது. இவ்வாறு சகுனங்கள், நல்லதும் கெட்டதும் மாறிமாறி வந்தன. தசரதர் நிமித்தங்கள் பற்றிக் கூறும் நிபுணரை அழைத்து இதுபற்றிக் கேட்டார். அவர்கள், மலைபோல ஆபத்து வரும், பனிபோல விலகி விடும் என்றார்கள்.

ஆலகால விடம் போலவும், வடவைத் தீயைப் போலவும், எட்டுத் திசைகளும் அதிர, விண்ணும் மண்ணும் அதிர்ச்சியடைய அஷ்டகுல யானைகள் அஞ்சக் கண்ணிலே நெரப்புப் பொறி சிந்த, மூக்கிலே, காதிலே புகைவர, கையில் வில் ஏந்தி பரசுராமர், அடா ராமா ! அடா ராமா ! என்று காது செவிடுபட, உரத்த குரலில் கூறிக்கொண்டு எதிரில் வந்தார்.

இவர் பரம பராக்கிரமசாலி கார்த்த வீரியார்ச்சுனருடைய ஆயிந் தோள்களை மபவால் துணி செய்தவர். சூரிய குலத்தை 21 தலைமுறை கருவறுத்தவர். சமந்த பஞ்சகம் என்று ஐந்து உதிர மடுவை உண்டாக்கிப் பிதிர்களக்குப் பிண்டம் தந்தவர்.

தசரத மன்னர் அஞ்சி, பரசுராமர் முன் சென்று, அவர் கால்மேல் வீழ்ந்து, முனிவரரே ! இராமன் சிறிய பாலகன். அவன் ஒரு குற்றமும் செய்யாதவன். ஆறியாமல் ஏதாவது பிழை செய்திருந்தாலும் மன்னித்தருள வேண்டும் என்று வேண்டினார்.

நதியின் வெள்ளத்தை உப்பு மூட்டையால் தடுக்க முடியுமா ? அதுபோல் தசரதரின் வேண்டுகோளைப் பரசுராமர் பொருட்படுத்தவில்லை. பேராற்றல் படைத்த பரசுராமன் எங்கே ? இராமன் எங்கே ? பரசுராமனுடைய கோபம் உலகத்தையே எரித்துவிடுமே ! என் மகன் பிழைக்கமாட்டான் என்று எண்ணித் தசரதர் மூர்ச்சையடைந்தார்.

பரசுராமர் இராமனுக்க மன்னே நின்று, இராமா ! நீ அரசன் மகன். ஆதலால், உனக்கு ஆசி என்றார். பெரிய மகான்கள் குலம் குறித்துப் பேசுவது நன்றன்று.

இராமர் பரசுராமா ! உன்னைப் பார்த்தால் வேதியனைப் போல் காணப்பெறுகின்றது. அதனால், உனக்கு வணக்கம் என்றார்.

பரசுராமர், இந்த இளைஞன் நம்மைச் சொல்லம்பால் தொளைத்துவிட்டான். வேதியனைப்போல் என்ற வார்த்தை எத்தனைக் கொடுமையானது ? என்ற எண்ணி, மேலும் கோபக்கனலைச் சிந்தி, ஏ ராமா ! தாடகை என்ற பெண்ணைக் கொன்றாயே அது முறையா ? நீதியா ? என்றார்.

பரசுராமா ! பயிர் செய்கின்றவன் நெல்லை வளர்க்கப் புல்லைப் பிடுங்கி எறிவான். அதுபோல், அரசனாகிய நான் தூயவரைக் காக்கத் தீயவரை அரிப்பது அரச தரமம் ஆகம். பரசராமா ! நீ வேதியனாயிற்றே. வேடர் ஏந்தும் வில்லை. வேதம் ஏந்தும் கையில் ஏந்தி அலைகின்றனையே ? நீ வேதியனா ? வேடனா ? என்று பதிலுக்குக் கேட்டார் இராமர்.

ூாமா ! நீ வில் ஏந்துவது நியாயந்தான். பெண்ணைக் கொன்றது நியாயம் ஆகாதே ? என்றார் பரசுராமர்.

பரசுராமா ! பிறர் கண்ணில் உள்ள கடுகு அளவுள்ள அழுக்கைப் பூதக்கண்ணாடி போட்டுப் பெரிதாகப் பார்க்கின்றாயே. உன் கண்ணில் பூசணிப்பழமத் அளவு அழுக்கு இருக்கின்றதே. காட்டில் வசித்த கொடியவளாகிய தாடகையைக் கொல்லலாமா என்று கேட்கின்றாயே - பத்து மாதம் சுமந்து அங்கமெல்லாம் நொந்து பெற்ற தாயரைக் கொன்றனையே ? அது முறையா ?

இராமா ! மானசீகக் கற்பு நிலையில் சிறிது தாழ்ந்த தாயைக் கொல்லுமாறு என் தந்தையார் கட்டளையிட்டார். தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை. அதனால், நான் தாயைக் கொன்றேன். அது தாய் கொலையாகாது அத முறைதான்.

ரசுராமா ! என் குருவாகிய விசுவாமித்திரர் தாடகையைக் கொல்லுமாற கட்டளையிட்டார். குரு வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லக்கூடாது. அதனால், தாடகையை வதைத்தேன். அது பெண் கொலையாகாது.

இராமா ! நீ ஒரு பழைய கறையான் அரித்த வில்லை ஒடித்ததைப் பெரிதாக எண்ணித் துள்ளுகின்றாய். இதோ ! இந்தப் பிரசண்ட் கோதண்டத்தை வளைத்தால் உன்னை உயிரோடு விடுவேன். இந்தா வில் !

இராமர் ! நீ அந்தக் கோதண்டவில்லை வாங்கி ஒரு விநாடியிலி வளைத்து, ஒரு பாணத்தைத் தொடுத்து, இந்த அம்புக்கு என்ன இலக்கு ? என்று கேட்டார்.

நடுங்கி ஒடுங்கி, தலைக்குமேல் கரங்களைக் கூப்பி, நான் அநதணன், என்னை மன்னித்து அருள் என்றார் பரசுராமர்.

பரசுராமா ! நான் உன்னை மன்னிக்கிறேன். ஆனால் அம்பு மன்னிக்காது. அதற்க வழி சொல்.

என் தவ வலிமையைத் தந்தேன் என்றார் பரசுராமர்.

இராமர் தன் கணையால் பரசராமருடைய தவ வலிமையை அழித்து, பரசுராமா ? நீ அரச தருமத்தை விடுத்துஇ அந்தண தருமத்தை எடுத்து மேல் கடல் ஓரம் போய்த் தவம் செய் என்று கூறி அருள் புரிந்தார்.

அந்தக் கோதண்டத்தை வருணதேவனிடம் தந்து. தக்க தருணத்தில் என்னிடம் தருக என்றார் இராமர் பரசுராமர்.இராமரைத் தொழுது விடை பெற்றச் சென்றார்.

பிறகு, இராமர் தம் தந்தையாரை எடுத்து மூர்ச்சை தெளிவித்துப் பரசுராமர் தோல்வியடைந்ததைக் கூறினார்.


தசரதர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். எல்லாரும் அயோத்தியை அடைந்தனர்.

கைகேயின் சகோதரர் யுதாசித்து வந்து, தம் தகப்பனார், தம் பேரப்பிள்ளைகளை அழைத்துவரச் சொன்னதாகக் கூறினான். தசரதர் பரத

சத்துக்னரைத் தங்கள் பாட்டன் நாட்டுக்குக், கேகய நாட்டுக்குப் போய்வரக் கட்டளையிட்டார். பரதரும், சத்ருக்னரும் இராமரை வணங்கி அவரிடம் விடை பெற்றுக் கேகய நாட்டுக்குப் புறப்பட்டனர்.

இராமர் சுகமே அயோத்தியில் வாழ்ந்தார்.

முடிசூட்டுவிழா



இராமாயணமாகிய இதிகாசத்தை நீட்டி வளரச் செய்தவர்கள் சிறிய இரு பெண் பாத்திரங்கள் ஆவார்கள். ஒருத்தி கூனி, மற்றொருத்தி சூர்ப்பணகை. இந்த இருவர்களும் இழிந்த பாத்திரங்கள் என உணர்க.

சூர்ப்பணகை இவ்வரலாற்றை வளர்த்திவிட்டாள். பத்து மாதக் கதைதான் மூன்றரைக் காண்டங்களாகும்.

சீதா தேவியின் திருமணத்துக்குப்பின் தசரதச் சக்ரவர்த்தி அயோத்தியை ஆட்சி புரிகின்றார்.

மக்கள் மனக்கவலையின்றி மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார்கள். அயோத்தியில் அமைதியும் அறநெளியும் நிறைந்து நின்றன.

இராமபிரான் அதிகாலையில் எழுந்து நீராடி. நித்திய வழிபாடுகளை முடித்துத் தாய் தந்தையரை வணங்குவார் குருநாதராகிய வசிட்டரை வணங்குவார். ஆலயம் சென்று இறைவழிபாடு புரிவார். ஏழை எளியவர்கட்கு உதவி புரிவார். சீதா தேவிக்கு வேதவேதாங்களை உபதேசிப்பார். அலையில்லாத கடலின் படகில் சென்றால் எத்தனை இன்பம் இருக்கும் ? இராமமூர்த்தி சுகமாக வாழ்ந்தனர்.

## தசரதருக்கு ஓர் அதிர்ச்சியான அறிவிப்பு

ஒருநாள் காலை தசரதர் நீராடிக் கண்ணாடிக்கு எதிரே நின்று தலைமயிரைச் சிக்கெடுத்து ஒழுங்கு செய்யும் பொழுது காதின் அருகில் ஒரு மென்மையான நரைமுடியைக் கண்டார். அதனைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார். மன்னவனே ! உனக்கு முதுமை வருகின்றது. முதுமை வந்தால் மரணம் வரும். மரணம் வருமுன் இறைவனுடைய சரணத்தை அடையவேண்டும். இனியும் நீர் அரசியலில் வாழ்வது நன்றன்று. இத்தனைக் காலம் உலகுக்கு உழைத்தாய். இனி, உன் உயிருக்கு உழைப்பாய் என்று எச்சரிக்கை செய்வது போல் இருந்தது.

தசரதர் திருவருள் உணர்த்த யாக்கை நிலையாமையை உணர்ந்தார். வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த மலக்கூடு என்ற அறிஞரின் அறிவுரையை உணர்ந்தார். அதனால், அரசியலைத் தம் மைந்தனிடம் ஒப்படைத்துவிட்டு. ஆட்சியைத் துறந்து, கானகம் சென்று வானகம் புகுந்து, முத்தி நலம் பெறச் பெரிதும் விழைந்தார்.

இதனால்தான், இராமருடைய மகுடாபிஷேக விழாவை அதிக ஆடம்பரமாகப் புரிய விரும்பினாரில்லை.

இராமருடைய பட்டாபிஷேக விழாவுக்கு ஜனக மன்னர் வரவேண்டும். பரதர் வரவேண்டும் என்றெல்லாம் அவர் எண்ணினாரில்லை. காலை 11 மணிக்குச் செயற்குழு கூட்டி, மறுநாள் அதிகாலை பட்டாபிஷேக விழா

அமைத்துவிட்டார். இடையில் 19 மணி நேரந்தான் இருந்தது. இது துறவிலே அவருக்க இருந்த அதிதீவிரத்தை உணர்த்துகின்றது.

ஒரு கோடீஸ்வரனுடைய தலைமயிர் தீப்பற்றிக் கொண்டது. அவன் என் தகுதிக்கு எற்பப் பன்னீரால்தான் இதனை அணைக்க வேண்டும். உடனே ஓடி பன்னீர் வாங்கி வாருங்கள் என்றா கூறுவான் ? இத்தகைய உணர்ச்சி உந்திய சக்கரவர்த்தி உடனே மகனுக்கு மகுடம் சூட்டித் தவநெறி மேற்கொள் விழைகின்றார் உன உணர்க.

தனி மண்டபத்தில் இருந்து அமைச்சர்களையெல்லாம் அழைத்தார். வசிட்ட முனிவரை அழைத்தார். அந்த ஆலோசனை மண்டபத்தில் இருந்து, தம் கருத்தைக் கூறுகின்றார்.

அந்த அமைச்சர்கள் அறிவின் சிகரங்கள், அறநெறி வழுவாதவர்கள். வந்ததைக் கண்டு மேல் வருபவற்றை உணர்பவர்கள். இடித்து அறங்கூறும் இயல்பினர். ஊறுதியை இயம்பும் இயல்புடையவர்கள்.

தசரதர், "குருநாதா ! அமைச்சர் பெருமக்களே ! எனக்கு மூப்பு வந்துவிட்டது. இத்தனைக் காலம் புறப்பகையை ஒடுக்கி அரசாட்சி செய்தேன். அரசு ஆட்சியை, அர-சாட்சியாகச் செய்தேன. இனி, நான் அகப்பகையை வென்று தவத்தைச் செய்து பரகதியடைய விரும்புகிறேன்.

மற்றவர்கட்கு மருமகள் திருமகளப் போல் வருவார்கள் எனக்குத் திருமகளே மருமகளாக வந்திருக்கின்றாள்.

அன்பர்களே ! இராமனுக்கு நிலமகளை இரண்டாந்தாரமாகத் திருமணம் செய்து வைக்க விரும்புகின்றேன். நீங்கள் இதற்க அனுமதி தரவேண்டும்" என்றார்.

வசிட்டர், அரசர் பெருமானே ! இராகவன் உண்ணும் நீரினும் உயர்ந்தவன். இராமனுக்கு முடி சூட்டுவதால் உலகம் உய்யும், நாடும் நகரும் மக்களும் நலம் பெறுவார்கள் என்றார்.

தசரதர் ஜோதிட வல்லாரை அழைத்து அவருடன் ஆய்ந்து மறுநாள் சூரியோதயத்தில் முடிசூட்ட வேண்டும் என்று முடிவு செய்தார். தசரதருடைய கட்டளைப்படி, சுமந்திரர் இராமருடைய திருமாளிகைக்குப் போய் இராமரைத் தேரில் ஏற்றிக்கொண்டு அரசவைக்கு வந்து சேர்ந்தார்.

இராமர் வசிட்ட முனிவரை வணங்கி, தந்தையாரை வணங்கினார். வணங்கிய மைந்தனைத் தந்தையார் தோளும் மார்பும் பொருந்தத் தழுவி மகிழ்ந்தார்.

தம் தோளில் உள்ள பூபாரத்தை மகனுடைய தோளில் இட நினைக்கின்றார். ஆதலின், அவருடைய தோள்களையும் மார்பையும் தமது தோளினால் அளப்பதுபோல இருந்தது, அந்தக் காட்சி.

தசரதர், "என் அருந்தவச் செல்வமே ! எனக்கு மூப்பு வந்துவிட்டது. இனி, நான் தவஞ்செய்து பரகதியடைய வேண்டும். சாகும்வரை அரசியலிலேயே உழல்வது அறிவுடையவர் செயல் ஆகாது. கண்ணா ! நமது குலத்தில் தோன்றி முன்னோர்கள் தகுந்த வயதில் மூத்த மகனுக்கு முடி சூட்டிவிட்டுக் காட்டில் தவஞ்செய்து முத்தி நலம் பெற்றார்கள். இது நமது குல தருமம். நாளைக் காலை உனக்கு முடி சூட்டுவிழா நடைபெறும். இன்று நீ விரத நெறியில் இருந்து திருவருளையும் குருவருளையும் பெறுக" என்றார்.

அரசுச் செல்வம் நம்பால் எய்துகின்றதே என்று இராமர் மகிழ்ந்தாரில்லை. இப்போது மகிழ்ந்திருந்தால் சிறிய தாய், வனம் போ என்கிறபோது வருந்தியிருப்பார் என்பது பொதுமறை. தந்தை சொல்லே வேத வாக்காக எண்ணி இருந்தார்.

சுமந்திரே, பட்டாபிஷேக விழாவுக்கு உரிய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் குறைவறச் செய்யும். மன்னர்களே ! நீங்கள் எல்லாரும் இருந்து இராமனுக்கு முடிசூட்டி வைப்பீர்கள் என்றார் தசரதர். அரசவை கலைந்தது.

தசரதர் கௌசலையின் மாளிகைக்குப்போய், கௌசலையைப் பார்த்துப் பெண்மணியே ! நாளைக் காலை உன் மகனுக்கு முடிசூட்டு விழா நடக்கப் போகிறது என்றார்.

கௌசலை தன் அருமந்த மகனுக்குப் பட்டாபிஷேகம் என்றவுடன் மகிழ்ச்சி கடலாகப் பொங்கியது. ஆனால் உடனே அந்த மகிழ்ச்சி வற்றிவிட்டது. பட்டங்கட்டிய மறுநாளே மன்னவர் கானகம் போய்விடுவாரே ? என்ற எண்ணி உள்ளம் வருந்தினாள்.

நமது செயலில் என்ன உள்ளது ? எல்லலம் ஈசன் செயல் என்று கருதினாள். மகனுடைய முடிசூட்டு விழா இனிது நடைபெற, ஆலயஞ்சென்று இறைவனை வழிபட எண்ணிச் சுமித்திரையுடன் சென்று வழிபாடு செய்தாள். அன்னமும் ஆடையும் சொர்ணமும் வறியவர்க்கு வழங்கினாள்.

அரசருடைய ஆணையின்படி யானைமீது முரசு முழக்கி, இராமபிரானுடைய பட்டாபிஷேகத்தை எங்கும் அறிவித்தார்கள். இதனைக் கேட்டு மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். வாழை கமுகுகள் நட்டு, மலர்மாலைகளைத் தொங்கவிட்டு, களப கஸ்தூரி தெறித்து நகரை அலங்கரித்தார்கள் ஆடினார்கள், பாடினார்கள், மெலிந்தவர்கள் மகிழ்ச்சியினால் பருத்தார்கள்.

## வசிட்டர் இராமருக்கு அரச நீதி உபதேசித்தல்



இராமச்சந்திர், வசிட்டரிடம் சென்று வணங்கினார். வசிட்டர் ஆசி கூறி இராகவா ! உனக்கு நாளை முடிசூட்டப்பெறும். நான் கூறும் அறவுரைகளைக் கேட்டு, நீ அதன்படி ஒழுகுவாயாக தணிந்த சிந்தையையுடைய அந்தணர்கள் மிகவும் சிறந்தவர்கள். நீ அவர்களை வணங்கி, அவர்களின் ஆசியைப் பெறுவாயாக. அந்தணர்களின் உள்ளம் உவக்க நடப்பாயாக.

அமைச்சர்களின் அறிவுரையை மதித்து அதன்படி நடப்பாயாக.

இராமா ! இனிமையாகப் பேசவேண்டும், ஈந்து உவக்க வேண்டும். மக்களுக்கு நன்மையே புரிய வேண்டும்.

உயிரை உடம்பு தாங்குவதுபோல் மக்களை மன்னவன் தாங்கிக் காத்து நலம் புரியவேண்டும்.

ஏழை எளியவர்கட்கு உதவி செய்ய வேண்டும். மக்களின் துயரங்களையகற்றி அவர்கள் அச்சம் இன்றி வாழ வழிவகுக்க வேண்டும். அரசனுக்க ஆசையிருக்கக் கூடாது. சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

இவ்வாறு, அரச நீதிகளை உபதேசித்து, இராமரைத் தருப்பையின்மீது அமரச் செய்து, வேத மந்திரங்களைக் கூறி, சடங்குகளைச் செய்தார். இராமருடன் ஆலயம் சென்று இறைவழிபாடு நடத்தினார்.

எல்லாம் திருவருளின் திட்டப்படிதான் நடக்கும். நம் செயலால் ஒன்றும் நடைபெறாது. ஒன்றை நினை, அது ஒழிந்திட்டு ஒன்றாகும். சக்ரவர்த்தி தசரதர் தம் மூத்த மகனுக்கு முடிசூட்டுவிழா என்று சகல ஏற்பாடுகளும் செய்தார். வசிட்டாதி முனிவர்களும் இருந்து செய்த ஏற்பாடு. அது தவிடுபொடியாகிவிட்டது. பட்டாபிஷேகம் நடைபெறவில்லை. திருவருள் துணை புரிந்தாலன்றி எதுவும் நடைபெறாது என்பது இவ்வரலாற்றால் உணர்தல் வேண்டும்.

இந்தப் பட்டாபிஷேகம் 14 ஆண்டுகள் வழிந்து சக்ரவர்த்தியில்லாமல் நடந்தது. மனித முயற்சியால் எதுவும் முடிவு பெறாது என உணர்க.

## கூனியால் வந்த ஆனி



முன் செய்வினையால் உடம்பில் கோணல் ஏற்படும். ஆனால், இராமயணத்தில் வரும் கூனிக்கு உள்ளத்திலும் கோணல்.

கூனி என்ற பேர் பெற்ற இவர் மந்தரை என்ற இயற்பெயரையுடைவள். கேகய நாட்டு மன்னனுடைய அரண்மனையில் பணிபுரிந்தவள, கைகேயிக்குச் செவிலித்தாய், தூக்கி எடுத்து உணவூட்டி வளர்த்தவள். அதனால், கைகேயிடம் அன்பு பூண்டவள். திரேதா யுகமே கூனியாக அவதரித்த மகாமேரு கிரியைப் போன்ற ஒரு பெரிய கேடு சூழ்ந்தாள்.

மனத்திலும் கோணல் உண்டு என்ற பட்டினத்துச் சுவாமிகள் கூறுகின்றார். இறைவனே ! நல்வினையால் ஒருவனுக்குச் செல்வம் பல வழிகளில் வரும். வட்டி மூலம் வரும், வாடகை மூலம் வரும், வியாபாரததின் மூலம் வரும், விவசாயத்தின் மூலம் வரும், மனைவி மூலம் சீதனம் வரும். இதுபோல் இறைவா ! இச்சிறியேனுக்குப் பாவங்கள், கோணல் பட்ட மனத்தாலும், வாக்கினாலும், ஐம்புலன்களாலும் வந்து குவிகின்றன. அப்பாவங்கள் தவம் செய்தாலும் போகமாட்டா.

இவ்வாறு, அயோத்தி மாநகரம் இன்ப வெள்ளத்தில் நீந்துகின்ற நேரத்தில் இராவணனாகிய கொடியவன் முனிவர்களுக்கும் ஏனைய சாதுக்களுக்கும்

செய்யும் கொடுமை திரண்டு ஒரு வடிவங்கொண்டு வந்ததுபோல, கைகேயின் மாளிகையருகில் கூனி தோன்றினாள்.

மேல்மாடியில் பஞ்சணைமீது கைகேயியைத் தூங்க வைத்து விட்டுவந்த கூனி, இன்று என்ன விழா ? நகரம் சொர்க்கம் போல் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதே ? என்று வினாவினாள். அங்கிருந்தவர்கள், கூனி ! உனக்கு இது தெரியாதா ? நாளை இராமச்சந்திர மூர்த்திக்கு மகுடாபிஷேக விழா நடைபெற இருக்கின்றது என்றார்கள்.

இதனைக் கேட்ட கூனியின் மனத்தில் கோபத் தீ மூண்டது. அவள் கண்களில் தீப்பொறி பறந்தது. காதிலே மூக்கிலே புகையுண்டாயிற்று. பட்டாபிஷேகமா ? பட்டாபிஷேகமா என்று கூறிக் கறுவினாள். இதனை நான் தடுத்து நிறுத்துவேன் என்று கூறினாள்.

இராமர் முன்னொரு காலத்தில் மண் உருண்டை வைத்துக் குறி வைத்து வில் ஏந்தி விளையாடிக் கொண்டிருந்தார்.

கூனி மற்ற பெண்களுடன் தண்ணீர்க் குடங்களைச் சுமந்து வந்து கொண்டிருந்தாள். இராமர் இளமைப் பருவ விளையாட்டாக அவள் முதுகில் மண்ணுருண்டை எறிந்தார் என்று கூறுகின்றார்கள். அப்படியன்று, கருணையே வடிவான இராமர் மீது கருணை கொண்டு, பச்சை மண்ணுருண்டையைக் கூன் நிமிரட்டுமே ? என்று எறிந்தார். கும் கீழே விழ அவள் நிலத்தில் விழுந்தாள். அங்குள்ள பெண்மணிகள் கைகொட்டிச் சிரித்தார்கள். கூன் தீரவே மண்ணுருண்டை எறிந்தார் என்ற ஆழ்வார் கூறுகின்ற திறத்தை இங்கு நோக்குங்கள்.

“தைய உண்டைவில் நிறத்திற்
றெறித்தாய்“
-திருவாய்மொழி 1.5.5

முதல்நாள் போரில் தோல்வியடைந்த இராவணன், தன் சிறிய பாட்டனார் மாலியவானிடம் கூறியதையும் இங்கு நினைவு கூர்க.

இராவணன், தாத்தா ! இராமன் என்மீது சினந்து போர் புரியவில்லை. இளமையில் கூனியின் கூன்போக மண்ணுருண்டை கொண்டு

விளையாடியதுபோல் போர் புரிந்தான். கோபித்துப் போர் புரிந்தால் நான் பிழைத்து வந்திருக்க மாட்டேன் என்று கூறினான்.

இந்தச் சிறிய சம்பவத்தைக் கூனி நினைத்து இராமருக்குத் தீங்கு செய்ய முயல்கின்றாள்.

அயர்ந்து உறங்குகின்ற கைகேயியின் கால்களைப் பற்றி, கைகேயீ ! உனக்குப் பகை வந்து சூழ்ந்திருக்கின்றது. இந்த ஆபத்தான நேரத்தில் நீ உறங்குகின்றாயே ? என்றாள்.

கைகேயி, "கூனி! வேதமே யனைய இராமனை மகனாகப் பெற்ற எனக்குப் பகை வருமோ ! ஒருபோதும் வராது. நீ என்ன உளறுகின்றாய். ?" என்றாள்.

"கூனி மதியில்லாத மங்கையே ! நீ இன்னும் சிறு பெண்ணாகவே இருக்கின்றாய். கைகேயீ ! உன் மகனைப் பாட்டன் வீட்டுக்கு அனுப்பிவிட்டுத் தன் கணவனுக்குத் தலையணை மந்திரம் ஓதி, உன் மகன் இல்லாத நேரத்தில், ஆண்கள் எள்ளி நகையாட, தாடகை என்ற பெண்ணைக் கொன்றானே இராமன், அந்த இராமனுக்கு நாளை பட்டாபிஷேகம் நடை பெறும். இத்தைப் பெரிய பூகம்பம் நேர்ந்துள்ளது. நீ ஒன்றும் உணராமல் உறங்குகின்றாயே" என்றாள்.

இராமபிரானுக்கு முடிசூட்டு விழா என்று கேட்டவுடனே கைகேயி அடைந்த ஆனந்தத்துக்க எல்லையே இல்லை. அவள் முகம் பொலிவுற்றது, அகம் மிக மகிழ்ந்தது. துள்ளிக் குதித்தாள். இந்த மங்களமான நிகழ்ச்சியைக் கூறிய கூனிக்குத் தன் கழுத்தில் அணிந்திருந்த விலைமதிக்க முடியாத ஓர் இரத்தின மணிமாலையை அவள் கழுத்தில் பரிசாக இட்டாள்.

கைகேயிக்கு இராமபிரான்மீது அத்துணை ஆழமான அன்பு இருந்தது. அந்த மாலையைக் கூனி கழற்றி வீசி எறிந்தாள்.

நிலம் குழியாகின்ற அளவுக்க மாலையை நிலத்தில் வீசி எறிந்தாள். அந்த மணிமாலை சிதையாதிருந்தது. அது அத்துணை உயர்ந்த மாலை என உணர்க.

கூனி, "கைகேயீ ! இன்னும் நீ சிறு பெண்ணாகவேணிருக்கின்றாய். தன் அதிநுட்பமான மதிநுட்பத்தால் உன் மாற்றவளாகிய கௌசலை வாழ்வு பெற்று உயர்ந்துவிட்டாள். உன் மகன் நடைப்பிணம்போல் ஆகிவிட்டான். சீதையும் இராமனும் சிங்காசத்திலிருக்க உன் தவப்புதல்வன் கைகட்டி, வாய் பொத்தி நிலத்தில் நின்று சேவகம் புரிய வேண்டும். அரச மாதேவியாகிய நீ கௌசலைக்குப் பணிவிடை புரியவேண்டும். கௌசலையின் தாதிக்குத் தாதியாக ஏவல் புரியவேண்டும். இப்படி ஓர் அவல நிலை நேர்ந்துவிட்டதே. முற்றாள் மைந்தனுக்கு முடிசூட்டுவிழா என்றால். நீ வருந்த வேண்டாமா ? மகிழ்கின்றாயே ! பேதையே நவரத்தின மாலையை எனக்குப் பரிசாகத் தருகின்றாயே ? உனக்கு அறிவு இருகின்றதா ?

என் அன்பு மகளே ! வறுமையால் வாடுபவர்கள் உன்பால் வந்தால் அள்ளி அள்ளி வழங்குவாயே ! இனி, உன்னால் அவ்வாறு அறஞ்செய்ய இயலாது. வழக்கமாகத் தந்தவர்க்கு இல்லையென்று கூறவாயா ? கொடுக்க முடியாதபோது அத்துன்பத்தால் மாண்டு போவாயா ? செல்வத்தில் வாழ்ந்த நீ இனி, வறுமையால் வாடுவாயா, உன் எதிர்கால அவலநிலையை நினைத்து வருந்துகின்றேன்" என்றாள்.

இதனைக் கேட்ட கைகேயி புன்னகை புரிந்தாள். "கூனி ! நீ விளங்காமல் பேசுகின்றாய். இராமன் என் அன்புப் புதல்வன்.. . அறிவற்ற நீ ஏன் அரசியலில் புகுந்து பேசுகின்றாய் ? மதி கெட்டவளே. எங்கள் மனுகுலம், மயில் குலத்துரிமையுடையது. மயில் பல முட்டைகள் இடும். மூத்த குஞ்சுக்குத்தான் தலையில் கொண்டையிருக்கும். அதுபோல் எங்கள் ஆதித்தன் குலத்தில் மூத்த மகனுக்கு முடிசூடும் உரிமையுண்டு. இத்தகைய மரபை அழக்கலாமா ? சீதா தேவியின் திருமணம் முடிந்த பின், அயோத்திக்கு வரும் வழியில் எரிமலைபோல எதிர்த்த பரசுராமனைச் சக்ரவர்த்தியா வென்றார் டு பரதனா வென்றான் ? இராமன்தானே வென்றான். இராமன் பரசுராமனை வென்ற நம்மைக் காத்தருளினாரே ! அன்ற நம்மைக் காத்தவன் நான்கு புதல்வர்களில் மூத்தவன் .. . பட்டங்கட்ட ஏற்றவன். சீதைக்கு மாங்கல்யம் தரித்து அத்துணைப் பெரிய சபையிலே இராமன் எனக்குத்தானே முதல் வணக்கம் செய்தான். இராமன் ஆட்சி செய்தால் எல்லாம் எனக்குத் தான் உரியனவாகும். கூனி ! அரசியலுக்கும் உனக்கும்

வெகு தூரம் நீ இதில் தலையிடாதே. நீ எனக்கும் நல்லவள் அல்லள், பரதனுக்கும் நல்லவள் அல்லள், மீண்டும் பேசினால் உனக்குத் தண்டனை கிடைக்கும்" என்றாள்.

கூனி, "கைகேயீ ! உனக்கு ஒன்றும் தெரியவில்லை. பதவியில் அமர்ந்தவுடன் மனிதன் மாறிவிடுவான். இப்போது நான் கூறவதைக் கவனமாகக் கேள். கேகய நாடு வளமையான நாடு, விதேக நாடு வறண்ட நாடு. விதேக நாட்டு மன்னன் கேகள நாட்டு மன்னனாகிய உன் தந்தைமீது பலமுறை படையெடுத்து வந்தான். அப்போது உன் கணவர் தன் மாமனாருக்குத் துணை புரிந்தனால் ஜனகர் தோல்வியுற்றார். இப்போது, அரசர் இராமனுக்கு முடிசூட்டிக் கானகம் போனதால், ஜனகர் தன் மருமகனாகிய இராமருடன் கூடி, உன் தந்தையாரையும் உன் உடன் பிறந்தாரையும் கொன்ற விடுவார். இதனால்தான் இதனை வற்புறுத்திக் கூறுகின்றேன்" என்றாள்.

## தசரதரும் கைகேயியும்



தசரதர் தன் மனைவியர்கட்குப் பட்டாபிஷேக நிகழ்ச்சியை அறிவித்துவிட்டு இறுதியாகச் கைகேயின் பொன் மாளிகைக்குச் சென்றார். எப்போதும் அகமலர்ந்து முகமலர்ந்து வரவேற்று உபசரிக்கின்ற காதல் மனைவி கைகேயியைக் கண்டாரில்லை. படுக்கையறையில் தலைவிரித்துக்கொண்டு அலங்கோலமாகப் படுத்திருக்கின்ற பத்தினியைக் கண்டார். திடுக்கிட்டார். மனைவியை அன்புடன் எடுத்துக் கண்ணீரைத் துடைத்தார். அவள் விம்மி விம்மியழுதாள்.

"பெண்மணி ! உனக்கு என்ன கவலை ? ஏன் அழுகின்றாய் ? நீ வருந்தியழு நான் ஒருநாள் கூடப் பார்த்ததில்லையே ? உன்னை யாராவது இகழ்ந்தார்களா ? நீ உயிர்த் துணைவியாயிற்றே" என்று தசரதர் வினவினார்.

கைகேயி, "பெருமானே ! வேறு ஒன்றுமில்லை - முன் சம்பராயுத்தத்தில் எனக்கு இருவரங்கள் தருவதாக வாக்களித்தீரே அந்த வரங்களை இப்போது கேட்கின்றறேன்." என்றாள்.

தசரதர், "பெண்ணரசே ! இதற்கா இத்தனை சாகஸம் - தொடர்பு இல்லலதவர்களுக்கெல்லாம் அள்ளி அள்ளி வழங்குகின்ற யான் என் உயிரினும் உயர்ந்த உனக்கு இல்லையென்பேனா ? உன் மைந்தன் இராமனமீது ஆணை. உனக்கு என்ன வேண்டும் ?" கேள் என்றார்.

கைகேயி, "மன்னவரே ! ஒருவரம் என் மகன் அரியணையில் அமர்ந்து அரசு புரியவேண்டும், மற்றொரு வரம் இராமன் மரவுரி சடைமுடியுடன் பதினான்கு ஆண்டுகள் வனம் போக வேண்டும்" என்றாள். இதனைக் கேட்டுத் தசரதர் இடி யேறுண்ட நாகம் போல் நடுங்கினார். உயிர்ப்பு அடங்கி ஓவியம்போல் மயங்கிக் கிடந்தார். செய்வது யாது என்ற அறியாது திகைத்தார். நாம் கனவு காண்கின்றோமா ? என்று எண்ணினார். கைகேயியைப் பற்றி எற்றலாமா ? என்று எண்ணினார். மாதரை அடிப்பது முறையன்று என்று கருதினார். சூவதனையால் துடித்தார். கைகேயின் கால்மீது வீழ்ந்தார். அருவிபோல் கண்ணீர் பெருகியது.

"பெண்மணி ! ஐம்பத்தாறு தேயத்து மன்னர்களும் என்னைப் பணிகின்றார்கள். நான் உன்னைப் பணிகின்றேன். உன் மனத்தை மாற்றியவர் யார் ? உன் வரத்தின்படி நான் அரச பதவியைத் தந்தாலும் உத்தம குணமுடைய பரதன் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டான. நாளை நான் இராகவனுக்கு முடிசூட்டுவேன். முடிசூடிக்கொண்டே இராமன் என்னை வணங்குவான். இராமா ! இந்த அரச பதவியைப் பரதனுக்குத் தருவாயாக என்று நான் கூறுவேன். தந்தை சொல்லைத் தட்டாத இராமன் பரதனுக்கு முடிசூட்டுவான். இது எனக்கும் பெருமை. இராமனுக்கு பெருமை. பரதனுக்கும் பெருமை. நீ பிடிவாதம் செய்யாதே" என்றார்.

கைகேயி, "மன்னர் பெருமானே ! ஒரு சொல்லுக்காக மனைவியை விற்ற அரிச்சந்திரனுடைய மரவில் வந்த நீர் சொன்ன சொல்லைத் தவறக் கூடாது. நீர் இதனை என் வரத்தின்படி செய்யவில்லையானால் இப்போதே நான் உயிர் துறப்பேன். அபயனம் புகுந்த ஒரு புறாவுக்காக தன் உடல் தசையை அறுத்துத் தலையில் ஏறிய சிபிச் சக்கரவர்த்தியின் மரவில் வந்த நீர் சொல் தவறலாமா ? பரதன் நாடாள வேண்டும். இராமன் காடு போகவேண்டும்" என்றாள்.

தசரதர் இதனைக் கேட்டு அளவில்லாத துயரத்தையடைந்தார்.

"கைகேயீ ! நான் போக வேண்டிய காட்டுக்கு இராமன் போவதா ? மெல்லணையில் துயின்ற என் அருநமந்த மகன் கல்லணையில் துயில்வதா ? இராமன் அயோத்தியில் இருந்தால் உனக்கோ உன் மகனுக்கோ என்ன தீங்கு செய்வான் ? அவன் சரயு நதிக்கரையில் ஒரு பர்ணசாலையில் இருக்கட்டும். பரதன் முடி சூட்டி ஆட்சி புரியட்டும். வெப்பமான விலங்குகள் வாழும் கானகத்துக்கு இராமனை அனுப்பாதே. துண்மையான உன் பெண்மையுள்ளம் இரும்பா ? கல்லா ? பரதன் நாடாளும் ஒரு வரத்தைத் தந்தேன். மறுவரத்தை மறந்து விடு 60 ஆயிரம் ஆண்டு தவம் புரிந்து பெற்ற மகனாகிய ராமன் 14 ஆண்டுகள் வனவாசம் புரிவதா ? அதனை நினைத்தால் என் இதயம் வெடித்துவிடும்போல் இருக்கின்றதே. இராமா ! இராமா !" என்று புலம்பினார்.

கைகேயி, "தந்த வரத்தை மறுப்பது தகாது" என்று கூறினாள். மன்னவர் "இராமா இராமா" என்று அழுது மூர்ச்சித்தார்.

## இராமர் வனம் போக விடைபெறுதல்



அன்று இரவு கழிந்து பொழுது புலர்கின்றது. அயோத்தியில் வாழும் மாந்தர்கள் மாட்டற்ற மகிழ்ச்சியினால், இராமருடைய மகுடாபிஷேக விழாவைச் சேவிக்க பட்டாபிஷேக மண்டபத்தில் குழுமினார்கள். வசிட்ட முனிவர் வேதியர்கள் புடைகுழ அங்கு வந்தார். சுமந்திரரே ! பட்டாபி ஷேகம் புரியும் நேரம் நெருங்குகின்றது. நீர் போய் மன்னவரை அழைத்து வருக என்றார். சுமந்திரர் மன்னவர் கைகேயியின் அரண்மனையில் இருக்கட்டும் என்ற எண்ணிக் கைகேயியின் திருமாளிகையை அடைந்தார். அங்கே சக்கரவர்த்தி படுக்கை யறையில் அவசமாக இருந்ததை அவர் கண்டாரில்லை.

கைகேயி அமைச்சரைப் பார்த்து, "அமைச்சரே ! நீர் சென்று இராமனை இங்கு அழைத்து வாரும்" என்றாள். சுமந்திரர் மகுடம் சூடிக்கொள்ளும்

மகனை வாழ்த்தியனுப்புவார் போலும் என்று எண்ணி இராமருடைய திருமாளிகையை அடைந்து, இராமரைப் பணிந்து, கைகேயி அம்மையார் அழைக்கின்றார் என்று கூறினார்.

இராமர் "ஜானகி ! முடிசூட்டும் நேரம் நெருங்கிவிட்டது. என்ன என் அன்னை அழைக்கின்றார். சென்ற வருவேன். நீ மகுடாபிஷேகத்துக்கு ஆயுத்தமாக இரு" என்று கூறி விட்டுத் தேரில் ஏறிப் புறப்பட்டார். சுமந்திரர் தேரைச் செலுத்தினார் மக்கள் இராமபிரானக் கண்டு கண்ணுங் கருத்துங் குளிர்ந்து களிப்புற்றனர். இராமரைக் கௌசலாதேவி பெற்றார். ஆனால், வளர்த்தது கைகேயிதானே. ஆதனால், தன் அன்பு மகன் இராமபிரானை வாழ்த்தி அனுப்புகின்றார். என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். வீரர்கள் வாள் ஏந்திக் காவல் புரிந்தார்கள். இளம் மகளிர் வெண்சாமரம் இரட்டினார்கள். பல பெண்கள் இனிமையாகப் பாடினார்கள். பலர் மலர் சொரிந்து தூதி செய்தார்கள். வேத வித்தக்களாகிய அந்தணர்கள் மந்திரங் கூறி வாழ்த்தினார்கள்.

இராமர் கைகேயியின் மாளிகையை அடைந்தார். கைகேயி முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தாள். இராமர் (அம்மா ) என்று அன்புடன் அழைத்த அஞ்சலி செய்தார்.

## கைகேயியின் கட்டளை

"இராமா ! உன் தந்தை இப்போது ஒரு புதிய கட்டளையிட்டிருக்கின்றார். அதனை நான் கூறலாமா என்றாள் கைகேயி. இராமர் அம்மா ! தந்தையின் கட்டளை தாய் மூலம் அமைந்தால் இதனைவிட எனக்கு நலம் வேறு உளதோ ? கட்டளை இடுங்கள். அதனை அடியேன் செய்வேன்" என்றார்.

கைகேயி, "இராமா ! கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் பரதன் ஆட்சி புரியவேண்டும். நீ பதினான்கு ஆண்டுகள் சடை முடியோடும், மரவுரியுடனும் வெப்பமான கானகம் போக வேண்டும். இது அரசனுடைய ஆணை" என்றாள்.

இதனைக் கேட்ட இராமபிரான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். அவருடைய திருமுகம் தாமரையிலும் மிக அழகாக மலர்ச்சியடைந்தது.

பாரம் நிறைந்த வண்டியில் பூட்டிய காளை மாட்டை விழ்த்துவிட்டால் அக்காளை மாடு மகிழ்வதுபோல் அகமும் முகமும் மலர்ந்து இராமன் கூறுகின்றார்.

முன்னறி தெய்வமாகிய அன்னயே ! ஆயிரந் தந்தையர் சேர்ந்தால் ஒரு தாயாகுமா என்னை முந்நூறு நாள் சுமந்து பெற்றுப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த தாயினும் சிறந்த கோயில் உளதோ ? இல்லை. உன் நலத்திலே தங்களுக்குத்தானே அக்கறை யதிகம். அம்மா ! மன்னவருடைய கட்டளையே இல்லை என்றாலும் தங்கள் கட்டளையை மறுப்பேனா ? என் தம்பி பெற்ற செல்வம் நான் பெற்றதன்றோ. அரச பதவி அல்லல் பல தருவது. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. அடியேன் செய்த புண்ணியம் இந்த இனிய வாய்ப்பு கிடைத்தது. இன்றே வனம் போகின்றேன் என்று கூறி விடைபெற்று. இராமர் புறப்பட்டார்.

இராமபிரான், வனம் போகக் கைகேயியிடம் விடைபெற்றுப் புறப்பட்டார். வெண்கொற்றக் குடையில்லை. வெண் சாமரமில்லை. தனியே புறப்படுகின்றார். சக்ரவர்த்தியின் தனிப்பெரும் புதல்வர் துணையின்றித் தனியே போகின்றாரே, என்று கம்பநாடர் எண்ணுகின்றார். இராமருக்கு முன்னும் பின்னும் இருவரைச் சேர்க்கின்றார். இராமருக்கு முன் விதி செல்கின்றது. தருமம் பின்னே அங்குத் தொடர்ந்து செல்லுகின்றது.

இங்கே இழைக்கின்ற விதி என்பது இராமபிரான் செய்த விதி என்று பொருள் செய்யக்கூடாது. இராவணாதி அவுணர்கள் செய்கின்ற விதி என்ற பொருள் செய்ய வேண்டும்.

இராமபிரான் தன்னைப் பெற்ற கௌசலையின் திருமாளிகைக்குச் சென்றார்.

இராமர் தாயரை அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கினார். நிலத்தில் வீழ்ந்து பணிந்த மகனை எடுத்துக் கன்னத்தைக்கிள்ளி முத்தம் தந்து "மகனே, நீடு வாழ்க. உனக்கு மகுடாபிஷேகம் செய்யும் நேரம் ஆயிற்றே. பரதன் வரவேண்டும். ஜனக மாமன்னர் வரவேண்டும் என்று தாமதிக்கின்றார்களா ?

பட்டாபிஷேகம் செய்ய ஏன் தாமதிக்கின்றார்கள்" என்று கௌசலை வினவினார்.

இராமர், "அம்மா ! அப்பா இந்தத் தேசத்தைப் பரதன் ஆளவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கின்றார்" என்றார்.

கௌசலை, "மகனே ! மிகவும் நல்லது. இட்சுவாகு குலத்தில் மூத்தவனக்குத்தான் முடிசூட்டவேண்டும். மூத்தவன் இருக்க இளையவனுக்கு முடிசூட்டுவது முறைமையன்று. ஆனால் உன்னைவிடப் பரதன் நல்லவன். அவன் அரசு புரிந்தால் நாட்டுக்கு நலம், அரசியல் ஒரு சுமை. நீ ஆத்ம நலனுக்கு அதிகம் பாடுபடலாம்" என்றாள்.

"அம்மா ! அப்பாவுடைய கட்டளை மற்றொன்றும் உண்டு. அடியேன் மரவுரியுடன் சடைமுடி தாங்கி 14 ஆண்டுகள் வனம் போகவேண்டும். இது பிதாவின் கட்டளை. ஆதலால், அடியேன் வனம் போகின்றேன்."

இந்த வார்த்தையைக் கேட்ட கௌசலை, "மகனே ! என்ற நிலத்தில் வீழ்ந்தாள். வேதனையால் மனம் வெந்து நொந்த துடிதுடித்தாள். தாம் போகவேண்டிய வெப்பமான கானகத்துக்கு உன் தந்தை உன்னைப் போக் சொன்னாரா ? மெல்லணையில் படுத்த நீ காட்டில் கல்லணையில் படுக்க வேண்டுமா ? உன் மெல்லிய பாதம் கல்லும் முள்ளும் நிறைந்த கட்டில் நடக்க வேண்டுமா ? காய்கனி உண்டு உயிர் வாது வேண்டுமே ? இது என்ன வஞ்சம் ? கல் நெஞ்சம். நீ போகின்ற காட்டிற்கு நானும் வந்த உனக்குத் துணை புரிகின்றேன்" என்று கூறிப் புலம்பி யழுதாள்.

"அம்மா ! தந்தை சொல்தான் எனக்கு மந்திரம். நான் கானகம் போகவில்லையானால் தந்தையாரின் வாய்மை வழுவும். தாங்கள் தந்தையாருக்கு உதவி புரிய இங்கே இருக்க வேண்டும். பல பிறளகளைப் பெறலாம், கணவன் ஒருவன் தானே ! தாங்கள் என்னுடன் வருவது முறையன்று. என் வேண்டுகோளைப் புறக்கணிக்க வேண்டாம். அடியேனுக்கு உளமாற ஆசிகூறி வனம் போக விடை கொடுங்கள்."

கௌசலை கண்ணீர் வடித்தாள். "மகனே ! அயலூர் போகும் மகனுக்குத் தாய்ட்டமுது கட்டித் தருவாள். பரதனுக்க அரசு என்றதனால் கட்டமுதம் தர எனக்கு இயல்பு இல்லை. அப்படியே கடன் வாங்கிக் கட்டமுது தந்தாலும் இரு வேளைக்குத்தானே ஆகும்."

"என் ஆருயிரே ! அருமைப் பாலகனே ! ஒரு தாய் மகனுக்குச் செய்யும் உதவியைச் செய்ய நான் ஆற்றல் இன்றித் துன்புறுகின்றேன். தருமம் என்ற ஒரு கட்டமுதை உனக்குத் தருகின்றேன். நீ அறநெறியில் முவாதிரு. உனக்கு விலங்குகளும் பறவைகளும் உதவி செய்யும். (விலங்கு - வாநரம், பறவை - ஜடாயு)"

"மகனே ! உன் ஆருயிரை அரனார் காக்க, உன் சிரத்தைத் திருமால் காக்க, உன் தோள்களை அசுவிநி தேவர்கள் காக்க, ஏனைய தேவர்கள் உன்னைக் காக்கட்டும். நீ வாழ்கின்ற கானகத்தில் காலமில்லாத காலத்திலும் மரங்கள் பழுத்த உனக்கு உதவுமாக ,, மூலம் இன்றியே அங்கே நறுமணம் வீசுமாக.. . நீ வசிக்கின்ற காடு வெப்பம் இன்றித் தணிந்து குளிர்ந்து உனக்கு நலம் புரியக் கடவது. போய் வருக !" என்ற ஆசி கூறினாள்.

இராமர் சுமித்திரையின் பொன் மாளிகைக்குப் புறப்பட்டார். கௌசலை தசரதரிடம் போய் இராமனை வனம் போகவாவண்ணம் தடுத்து நிறுத்த அனுமதி பெறலாம் என்று எண்ணிக் கைகேயியின் மாளிகைக்குச் சென்றாள். அங்கு மன்னவர் இருக்கும் அவல நிலையைக் கண்டு ஆறாத் துயரங் கொண்டு மன்னவருடைய பாதங்களைப் பற்றி வாய்விட்டுப் புலம்பியழுதாள். அக்குரலைக் கேட்ட வசிட்டர் கைகேயியின் மாளிகையை அடைந்து மன்னவன் மூர்ச்சிருப்பதைக் கண்டார்.

திடுக்கிட்டார். வசிட்ட முனிவர் "கைகேயியைப் பார்த்த அம்மா ! என்ன நிகழந்தது ? மன்னவர் தம்மை மறந்து மூர்ச்சித்திருக்னிறாரே ! என்ன காரணம் ?" என்று வினாவினார்.

கைகேயி, குருநாதா ! சம்பராசுர யுத்தத்தில் மன்னவர் எனக்கு இருவரங்களைத் தந்தார். பரதன் நாடு ஆளவும், இராமன் சடைமுடியுடன் 14

ஆண்டுகள் காடாளவும் வரம் கேட்டேன். வரத்தைத் தந்துவிட்டு இப்போது துயரப்படுகின்றார். சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டாவோ ?" என்றாள்.

வசிட்ட முனிவர் கைகேயியால் விளைந்த விளைவு என உணர்ந்தார்.

"அம்மா ! சக்ரவர்த்தி கொடுத்த வரம் கொடுத்ததுதான். ஆனால், குலகுருவாகிய நான் உன்னை ஒரு வரம் கேட்கின்றேன். பரதன் முடிசூட்டி அரசு புரிவானாக. இராமன் வனம் போகமாமல் அயோத்தியில் ஒரு தவச்சாலையில் இருக்கட்டும் இது நீ எனக்குத் தரும் வரம்" என்றார்.

"கரும்பாறை போன்ற கடிற நெஞ்சமுடைய அக்கொடியவள், கைகேயி, இராமன் காடுபோகவேண்டும். இல்லையேல் நான் இப்போதே உயிரை விடுவேன் என்றாள். வசிட்டர் சீற்றம் அடைந்தார். கைகேயீ ! மூத்தவன்தான் முடிசூடவேண்டும் என்பது மனுகுலத்தில் வழிவழியாக வந்த மரபு. உன்னால் அந்த மரபு அழிகின்றது. மன்னர் பெருமான் மரண வேதனையடைந்துள்ளார். அதனைக் கண்டும் நீ இரங்கவில்லை. நீ பெண்ணா ? பேயா ?" என்று உரத்த குரலில் கடிந்துரைத்தார்.

தசரதர் மூர்ச்சை தெளிந்தார். அழுகின்ற கௌசலையைப் பார்த்து மனம் பதைத்தார். "பெண்மணியே ! நெடு நாளைக்கு முன்னே யானை வேட்டைக்குச் சென்ற யான், சுரக்குடுக்கையில் தண்ணீர் முக்கி எடுத்த ஒரு குரு புத்திரனை, யானை தண்ணீர் குடிக்கிறது என்று தவறாகக் கருதி, சப்தவேதி என்ற கணையைத் தொடுத்தேன. அப்பாலகன் மாண்டுவிட்டான். அவனுடைய தாய் தந்தையர், அழுது புத்திர சோகத்தால் உனக்கு உயிர் புரியும் என்ற சாபமிட்டார்கள். அந்தச சாபம் இப்போது நேர்ந்துள்ளது. இராமன் கானகம் போவதும், யான் வானகம் போவதும் உறுதி. அவ்வினைக்கு இவ்வினை. விதியை வென்றவர் யாவர் ? நீ அழாதே."

"கைகேயீ ! கூற்றுவன் பெண் வடிவிலே வந்து என்ன வதைக்கின்றான். கணவனை உயிருடன் வாட்டி வதைக்கின்ற மகளிர் சிலர் உண்டு. உன்னைப்போல் கணவனை அடிடன் வதைத்த மாதர் யாண்டும் இல்லை."

இராமன் உத்தன குணம் நிறைந்தவன், அவன் அயோத்தியில் இருந்தால் உனக்கோ ? உன் மகன் பரதனுக்கோ என்ன தீங்கு செய்வான் ? அவன் காலில் அகப்பட்ட புழுவும் நசுங்காதே. பாவீ ! கருவூலத்தில் உள்ள பணம் குடிகளின் வரிப் பணமாகும். அதனை ஊதாரித்தானமாகச் செலவு செய்யக் கூடாது. முடிசூட்டு விழாவுக்கு என்று சேகரித்த பொருள்களை என் உத்தரகிரியைக்கு வைத்துக்கொள். பரதனுக்கு முடிசூட்டும் கையில் காப்பு நூல் கட்டுவார்கள். அதற்க வேறு நூல் விலை கொடுத்து வாங்க வேண்டாம், உன் கழுத்தில் இருக்கும் தாலிக் கயிற்றை உன் மகன் கையில் கங்கண நூலாகக் கட்டுக. ஆலகாலவிடமே ஒரு பெண்ணுருவாக வந்துள்ளது.

"குருநாதா ! இந்தக் கைகேயி எனக்கு மனைவியல்லள், பரதன் எனக்கு மகன் அல்லன். அவன் எனக்கு ஈமக்கடன் செய்ய வரியவனாகான். ராம ராம ராம" என்று கூறி மீண்டும் மூர்ச்சையடைந்தார்.

இந்தக் கோர சம்பவத்தைக் கண்டு வசிட்டர் பட்டாபி ஷேக மண்டபத்தை அடைந்த அங்கே கூடியிருந்தவர்களிடம் நிகழந்ததைக் கூறினார். வசிட்ட முனிவர்மூலம் செய்தியைக் கேட்ட மக்கள், வாய்விட்டுப் புலம்பி அழுதார்கள். மனிதர்கள் மட்டும் அழவில்லை. மாடு, ஆடு, யானை, குதிரை, மரம், செடி, கொடி என்ற சராசரங்கள் யாவும் அழுதன.

சுபா மண்டபத்துக்கு வந்த இலட்சுமணன். கைகேயி வரம்வாங்கி பரதன் நாடு ஆளவும், இராமன் காடு போகவும் ஏற்பாடு செய்தார் என்று கேட்டு எரிமலைபோல் கொதித்து நின்றார். கோதண்டத்தை வளைத்து, மகா ஜனங்களே ! சிங்கக் குருளைக்கு என்று சமைத்த ஊனை நாய்க்குட்டிக்கு - இடுவதா ? கைகேயியின் தீய புத்தியின் தன்மை கொடியது ! கொடியது !! வீரம் இருந்தால் போர் புரியுங்கள். ஏழு கடல்களையும் என் அக்கினிப் படையால் வற்றச் செய்வேன் என்று கூறி வில்லை வளைத்து நாண் ஓசையை உண்டாக்கினான். அண்டங்கள் அதிர்ந்தன.

சுமித்திரையின் பொன் மாளிகைக்குச் சென்றுகொண்டிருந்த இராமபிரான் இலட்சுமணனுடைய வில் ஓசையைக் கேட்டார். இலட்சுமணன் சீறினால்

உலகம் அழியுமே என்ற எண்ணிச் சபா மண்டபத்தை அடைந்தார. கிணற்று நீர் கொதிக்குமானால் கடல் வந்த தணியச் செய்யுமாப்போல் இருந்தது.

இலட்சுமணர், "அண்ணா தங்கள் மகுடாபிஷேகத்துக்குத் தடை செய்வதவர்களைத் தவிடு பொடியாக்குவேன். பூவுலகம் மட்டும் அன்று, பதினான்கு உலகங்களையும் தங்கட்கு உரியதாக்கி முடி சூட்டுவேன்" என்றான்.

"தம்பீ ! சாந்த அலைபாயும் இந்த அயோத்தியில் மண்ணுக்கே கோபம் வராதே ? உனக்குக் கோபம் எப்படி எய்தியது ? "

"அண்ணா ! தேவரீருடைய பட்டாபிஷேகத்துக்குத் தடை செய்த இன்று என் ஆற்றல் மிகுந்த சீற்றம் என்ற மணிமாலையைப் பூணாமல் வேறு என்று பூண்பேன் ? "

தம்பி ! தானத்தில் சிறந்தது நிதானம். நதியில் தண்ணீர் இல்லையொன்றால் அது நதியின் பிழையன்று, மழையின் பிழையாகும். இந்த நிகழ்ச்சி மன்னர் பெருமானுடைய பிழையன்று, நம்மைப் பெற்றுப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தாயின் பிழையும் அன்று, பரதன் பிழையும் அன்று இது விதியின் பிழையாகும், சாந்தமடைவாயாக. "

"அண்ணா ! விதிவிதி" என்று பேசி, மதியையிழக்கின்றவன் நானல்லன், விதிக்கும் விதியைக் காணும் என் வில்லாண்மையை இப்போது காண்பீராக. "

தம்பீ ! வேதம் ஓதிய உன் நாவினால் விதியில்லை என்று விளம்புகின்றனையே. விதியை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் நமது மதம் கடைக்கால் இல்லாத கட்டிடம் ஆகும். அது இருக்கட்டும். என்னைக் கானகம் போகச் கட்டளையிட்டவர்கள் தாய் தந்தையராகும். தாய் தந்தையரின ஆணையை மீறலாமா ? "

"அண்ணா ! தசரதர் தந்தையல்லர். சுமித்திரை தாயும் அல்லள். எனக்குத் தாய், தந்தை, தெய்வம் எல்லாம் தாங்கள்தான்."

"தம்பீ ! உனக்கு நான்தான் தந்தை, உன் உரிமையை நான் மறுக்கவில்லை. எனக்கு நல்லுரை கூறி நாறும் வளர்த்தவர் தந்தை தசரதர். அவர் என் தந்தை. அவருடைய கட்டளையை நான் மீறமாட்டேன். உனக்குத் தந்தை நான்தானே. என் கட்டளையை நீ மீறக்கூடாது. சாந்தியடைக" என்றார். அவர் யார் ? செந்தமிழும் வடமொழியும் சேர்ந்த இராமச்சந்திர மூர்த்தி என உணர்க. மந்திரத்தால் கட்டுண்ட நாகம்போல இலட்சுமணர் சினமடங்கி சாந்தியானார். இராமரும் இலட்சுமணரும் சுமித்திரையின் திருமாளிகையை அடைந்தார்கள்.

கைகேயி இராமருக்கு மரவுரியை அனுப்பினாள். மகிழச்சியுடன் இராமர் விலை உயர்ந்த ஆடை அணிகலன்களை அகற்றி மரவுரியை உடுத்துக் கொண்டார்.

சுமித்திரை ஒரு மரவுரியை தன் அருமந்த மகன் இலட்சமணனிடம் தந்து உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகிக் கூறுகின்றாள்.

"மகனே ! நீ இராமனுக்குத் துணையாகக் கானகம் போய் வருக. அண்ணனுக்குப் பாதபூசை செய்து பதம் பெறுவாயாக. காட்டில் அரக்கர்கள் வந்தால் அண்ணனுக்கு முன்னே சென்று போர் புரிக. தம்பியுடையான் படைக்கஞ்சான் என்ற பழமொழியைக் கடைப்பிடிப்பாயாக.

உனக்குத் தாய் சீதா தேவி, தந்தை இராமபிரான். இராமனி உறைகின்ற கானகமே அயோகத்தி மாநகரமாகும். உன் அண்ணன் குறிப்பறிந்து தொண்டு செய்வாயாக. பதினான்கு ஆண்டுகள் கழித்து இராமன் அயோத்திக்கு வந்தால் நீயும் வருக. விதியின் வலிமையால் இராமனுக்கு முடிவு நேருமாயின், அவனக்கு முன் நீ முடிவாயாக. இன்று முதல் நீ இராமனுக்குத் தம்பியல்லன். இரமனுடைய பணியாளன். இராமனுஜன் அல்லன். நீ இராமதாசன், போய் வருக" கண்ணீர் சொரிந்து விடை தந்தாள். இராம

இலட்சுமணர் வசிட்டரையும் ஏனைய தாய்மார்களையும் வணங்கி, சீதா தேவியின் திருமாளிகையை அடைந்தார்கள்.

## இராமர் வனம் புகுதல்



இராமரும் இலட்சுமணரும் மரவுரியுடுத்துத் துறவுக் கோலத்துடன் வருவதைக் கண்டு சீதாபிராட்டினாயார் திடுக்கிட்டார். திருமணம் நடக்கும்போது காசி யாத்திரை என்ற ஒரு சடங்க நிகழுமே, அதுபோல் பட்டாபிஷேகத்தில் இது ஒரு சடங்கோ ? என்று எண்ணினாள்.

சீதாதேவி, இராமருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கினாள். "பெருமானே ! உமக்கு இப்போது மகுடாபிஷேகம் நடக்கும் நேரம் ஆயிற்றே ? இது என்ன துறவுக்கோலம் ?" என்று வினவினாள்.

இராமர், "ஜானகீ ! என் தந்தையார் இந்த அரச பதவியை என் தம்பி பரதனுக்கு அளிக்கின்றார்" என்றார்.

சீதை, "பெருமானே ! தாங்கள் முடிசூடி அரச பதவியில் அமர்ந்தால் வேதவேதாந்தங்களை எனக்கு உபதேசிக்க நேரம் இராதே என்று எண்ணினேன். இப்போது தம்பி பரதர் முடிசூட்டிக் கொண்டால் தாங்கள் அதிக நேரம் என்னுடன் இருந்து எனக்கு மகிழ்ச்சியைத் தருவீர்" என்றாள்.

"தேவீ ! என் தந்தையார் என்னைப் பதினான்கு ஆண்டுகள் வனவாசஞ் செய்யுமாறு கட்டளையிட்டிருக்கின்றார்" என்றார் இராமர். இதைக் கேட்டதும் சீதை, "சுவாமீ ! மிக்க மகிழ்ச்சி. வனத்தில் அருவியில் நீராடலாம். மயில்கள் ஆடும், வண்டுகள் பாடும். குயில்கள் கூவும். செடி கொடிகள் பூத்துக் குலுங்கும் இயற்கை கொழிக்கும். எனக்கு வனவாசம் நிரம்பப் பிடிக்கும்" என்றாள்.

இராமர், "தேவீ ! நீ அயோத்தியில் இரு. நான் வனம் போவேன் !" என்றார். இந்த வெய்ய வார்த்தையைக் கேட்டு, சீதை நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சித்தனள், இராமர் சீதையை எடுத்து, "தேவி ! வனவாசம் கடினமானது. காட்டில் அனல் காற்று வீசும். பாறைமீது படுக்க வேணும். காய்கனியருந்த வேணும். உன் உடம்பு வருந்தும். நீ அரண்மனையில் இரு" என்றார்.

தேவி, "ஐயனே ! உமது பிரிவில் பெருங்காடு சுடுமோ ! நீர் படுக்கின்ற பாறைதான் எனக்குப் பஞ்சணை. நீர் உண்ணும் காய்கனிகள் எனக்கு அமுதமாகும். உன்னைப் பிரியேன் என்று மந்திரத்தைக்கூறி என் கைப்பிடித்தீரே. அதனை மறக்கலாமோ ? ஒருபோதும் உம்மைப் பிரியமாட்டேன். நான் தங்களுடன் வந்து தங்களுக்கு தொண்டு செய்வேன்" என்றாள்.

இராமர், "தேவீ ! கானகத்தில் உன்னை வைத்துக் காப்பது கடினம். ஆதலால், நீ அயோத்தியில் இரு" என்றார்.

"ஐயனே ! ஒரு பெண்ணை வைத்துக் காக்க இயலாதா, ஒரு பெண்ணைக் காக்க முடியாத நீர் உலகத்தை எப்படி காத்தருளுவீர் ? சுவாமீ ! அம்மாவிடம்

கூறி வனவாசத்துக்கு உத்தரவு பெற்றீரா ? அம்மா என்ன சொன்னார்கள் ?" என்று கேட்டாள் சீதை.

"ஜானகி என் தாய் புத்திர பாசத்தால் என்னுடன் வருவதாகக் கூறினார். நான் கற்புடைய மாதர்கள் கணவனை விட்டுப் பிரியக்கூடாது. நீங்கள் அப்பாவுக்குத் துணையாக இருங்கள் என்று கூறினேன்."

சீதை, "ஐயனே ! வயது முதிர்ந்த உமது அன்னை கணவனை விட்டுப் பிரியக் கூடாது என்று கூறினீரே ! இளம் வயதுடைய நான் தங்களை விட்டு பிரிந்திருக்கலாமோ ? தாய்க்கு ஒரு நியாயம், தாரத்துக்கு ஒரு நியாயமோ ! என்னை வரவேண்டாம் என்றால் என் உயிர் நிலை பெறாது" என்று கூறி தான் அணிந்திருந்த அணிகலன்களையெல்லாம் அகற்றி மரவுரி உடுத்துத் தன் கணவனைப் பணிந்து எழுந்தாள்.

இராமர் சீதையுடனும் இலட்சுமணருடனும் வனம்போகப் புறப்பட்டார்.

இராமபிரான் வசிட்டரையும் ஏனைய தாய்மார்களையும் தொழுது புறப்பட்டார். சுமந்திரருடைய வேண்டுகோளின்படி தேர் ஏறிச் சென்றார். அயோத்தியில் வாழும் அன்பர்கள் அனைவரும் அழுது இராமரைத் தொழுது தேரின் பின் சென்றார்கள். இராமர் தமக்குரிய பொன் பொருள் பசு முதலியவற்றை வறியவர்க்கு வழங்கினார்.

## தசரதர் முத்தியடைதல்

ராமர் தேர் மீது ஏறி 16 மைல் சென்றார். ஆதித்தன் மேற் கடலில் வீழ்ந்தான். மக்கள் துன்பக் கடலில் ஆழ்ந்தார்கள். இருள் சூழ்ந்து. இராமர் சுமந்திரரை நோக்கி, "நீர் தேருடன் ஊர் திரும்புவீராக. மக்களும் ஊர் திரும்புவார்கள். என் தந்தையாருக்கும் தாய்மார்கட்கும் என் வணக்கத்தைக் கூறு வீராக" என்றார். சீதை தன் தங்கையர்க்கு ஆசி கூறி, தான் வளர்த்த கிளிகட்கு வேளை தவறாத உணவு தரும்படிக் கூறினாள். சுமந்திரர் திரும்பத் தேரைச் செலுத்தி அரண்மனைக்கு வந்து சக்ரவர்த்தியைச் சந்தித்தார். தசரதர் "சுமந்திரா ! என் மகன் எங்கே ?" என்ற வினவினார். சுமந்திரர் மௌனமாக

நின்றார். அவரடைய மௌனமே இராமர் கானகம் போனதை உணர்த்தியது. தசரதர், "ராம ராம ராம" என்ற கூறினார். அவருடைய ஆன்மா ஒளி மயமாக அவருடைய சிரசில் இருந்து கிளம்பியது. வானவர்கள் வரவேற்க முத்தியுலகத்தைச் சேர்ந்தார். எல்லாரும் கதறியழுதார்கள். வசிட்டர், மன்னனுடைய உடம்பை எண்ணெய்க் கொப்பரையில் இட்டார். பரதனை வருமாறு தூதுவரையனுப்பினார்.

இராமபிரான் சீதையுடனும் இலட்சுமணனுடனும் இருள் மிகுந்த அடர்ந்த கானகத்தில் நுழைந்து போகின்றார். அப்போது அவருடைய திருமேனியில் இருந்து ஒளி வீசுகின்றது. சூரியன் ஒளியில் எல்லா ஒளிகளும் அடங்கும். இதுதான் இயற்கை. ஆனால், இந்த இயற்கைக்கு மாறாக, சூரியனுடைய ஒளி இராமபிரானுடைய திருமேனியின் ஒளியில் அடங்கி ஒடுங்கினதாம். இது ஒரு பெரிய அதிசயமாகும். எம்பெருமானுடைய திருமேனி அஞ்சன மையோ ? மரகதமோ ! நீலச் சுடரோ ? மழை மேகமோ ? இவைகட்கு மீறிய அழகு.

## கங்கை நீராடுதல்

இராமபிரான், பெரும் புண்ணிய நதியாகிய கங்கையையடைந்தார். அந்தக் கங்கைக் கரையில் வாழுகின்ற பெருந்தவ முனிவர்கள் இராமபிரானைக் கண்டு. தாயைக் கண்ட இளம் பிள்ளைகள் போல் பெரிதும் மகிழ்ந்தார்கள். தங்கள் கண்களில் பெருகும் ஆனந்தக் கண்ணீரால் திருமஞ்சனம் புரிந்தார்கள். இன்சொற்கள் என்ற மலர்களைச் சூட்டினார்கள். அழியாத அன்பு என்ற அருமையான அமுதத்தை ஊட்டினார்கள். இதனால், இராமருக்கு வழி நடந்த வருத்தம் நீங்கியது.

இராமரும் சீதாதேவியும் இலட்சுமணரும் புனித கங்கையில் மூழ்கி மகிழ்ந்தார்கள்.

கங்காதேவி, "இராகவா ! உலகில் உள்ள மாந்தர்கள் என்னில் மூழ்கித் தங்கள் பாவங்களைப் போக்குவார்கள். இன்று நீ என்னில் மூழ்கியதால் என்னிடம் தங்கியிருந்த பாவங்கள் அகன்றன. நான் உய்வு பெற்றேன்." என்று கூறிக், கைதொழுது கங்கை மகிழ்ந்தாள். முனிவர்கள் இனிய கனிகள் - காய்கள் தர இராமர் உண்டு உவந்தார்.

## குகனைச் சந்தித்தல்



கங்கைக் கரையில் சிருங்கி பேரம் என்ற நகரில் வாழ்பவன் குகன் என்ற வேடர் தலைவன். ஆயிரம் மரக்கலங்கட்கு அதிபன். கரிய மேனியும் திரண்ட தோள்களும், அகன்ற மார்பும் உடையவன்.

இத்தகைய குகன் இராமரைக் கண்டு மகிழ வேண்டும் என்று எண்ணினான். இலாங்கு மீன்கள் நெய்யில் பொறித்து மிளகுதூள் தூவி, ஊனும் மீனும் தேனும் காவடியாகச் சுமந்து சுற்றத்தார் புடை சூழ வருகின்றான். குகன் இராமபிரானைக் காணப் புறப்பட்டு வருகின்றபோது, கூட்டமாகப் போவது நன்றன்று என்று எண்ணினான். சுற்றத்தாரையும் வில் வாள் முதலிய ஆயுதங்களையும் அகற்றித் தவப்பள்ளியை அடைந்தான்.

ஆசிரமத்தில் முன் நிற்கின்ற வீரனாகிய இலட்சுமணர், "நீ யார் ? எங்கு வந்தனை ?" என்று வினாவினார். குகன், "ஐயனே ! நான் வேடர் தலைவன். என் பேர் குகன் ! உள்ளே இருக்கின்ற கருணாமூர்த்தியைக் காணவந்தேன்" என்றான்.

லட்சுமணர், இங்கு நில் என்று கூறி உள்ளே சென்று இராமரை வணங்கி "அண்ணா ! குகன் என்ற ஒரு வேடர் தலைவன் தங்களைக் காண வந்திருக்கின்றான். சுற்றமும் தானும் உள்ள தூயவன். தாயினும் நல்லவன். உள்ளே விடலாமா ?" என்று கூறினார். இராமர் அவனை என்பால் அனுப்புக என்றார். இலட்சுமணர் குகனுக்கு அனுமதி தந்தார். குகன் ஆசிரமத்துக்குள் சென்று பரந்தாமனைப் பலமுறை வணங்கினான். கண்ணீர் சொரிந்து பரிந்து, "ஐயனே ! மீன்களை நெய்யில் பொறித்துக் கொணர்ந்தேன். தேவீர் திருவுளம் எதுவோ ?" என்றான்.

இராமர் அங்குள்ள முதிர்ந்த முனிவர்களைப் பார்த்துப் புன்னகை செய்தார். "குகனே ! நிரம்ப மகிழ்ச்சி. நீ கொணர்ந்த உணவுகளை நான் அங்கீகரித்துக் கொண்டேன். உன் அன்பு ஆழங் காணாத அலைகடல் போன்றது. இங்கே இரு" என்றார். இராமர் பலமுறை கூறியும் குகன் அமர்ந்தானில்லை. பலமுறை பார்த்தும் குகனுக்குப் போதும் என்ற எண்ணம் வரவில்லை. எம்பெருமானை விழுங்குவதுபோல் கண்டு களிகூர்ந்தான். இராமரைத் தவக்கோலத்தோடு கண்ட கண்களைப் பிடுங்கி எறிய வேண்டும் என்று எண்ணினான்.

இராமருடைய அனுமதி பெற்ற அங்குத் தங்கினான். குகன் இலட்சுமணரைப் பார்த்து, "இராமபிரான் கானகம் வரக் காரணம் யாது ?" என்று கேட்டான். இலட்சுமணர், பரதன் பாட்டன் வீட்டில் இருந்து, தன் தாயாகிய கைகேயியை வரம் செய்தான். எம்பெருமான் எல்லாம் துறந்து இக்கொடிய காட்டில் வசிக்கின்றார் என்றார். இதனைக்கேட்ட குகன் ஆறாத் துயரம் அடைந்தான்.

அன்று இரவு குகன், தானும் சுற்றம் சூழக் காவல் புரிந்தான். மாற்றாங்தாய் மகனாகிய பரதன் அண்ணனைக் காட்டுக்கு அனுப்பினானே. இந்த இலட்சுமணரும் ஒரு மாற்றாந்தாய் மகன்தானே ? இவனை மட்டும் எப்படி நம்புவது என்று எண்ணி, இலட்சுமணரையும் இவன் காவல் புரிந்தானாம்.

இலட்சுமணர் இமைக்காமல் உள்ளம் உவந்த காவல்புரியும் போது நித்திரைத்தேவி தோன்றினாள். இலட்சுமணர், ஏ ! நித்திராதேவீ நீ 14

ஆண்டுகள் என்பால் நெருங்காதே என்றார். அவள், உணவை ஒழித்தால் உறக்கத்தையும் ஒழிக்கலாம் என்றாள். இலட்சுமணர், உண்ணேன் என்றார். நித்திரா தேவி இலட்சுமணரைத் தொழுது சென்றாள்.

பொழுது புலர்ந்தது, இராமர் நீராடி ஜெபதபங்கள் செய்தார். குகனைப் பார்த்து, "ஓடங் கொண்டு வா. நாங்கள் கங்கையைக் கடந்து வனவாசம் புரிய வேண்டும்." என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்ட குகன் அதிர்ச்சியடைந்தான். " ஐயனே ! தாங்கள் இங்கேயே இருக்க வேண்டும். தங்கட்குத் தொண்டு செய்ய அடியேனும் ஐயாயிரம் வேடர்களும் இருக்கின்றோம். கங்கைக்கரை சுகமான இருப்பிடம். பூசைக்கு நறுமணம் நிரம்பிய மலர்கள் இருக்கின்றன. நல்ல நல்ல போர்வைகள் இருக்கின்றன. இனிய கனிகள் இருக்கின்றன. பகைவரை வெல்லுவேன். கிழங்குகளைக் கெல்லுவேன். எட்டுத்திசைகட்கும் வழி சொல்லுவேன் ! அடியேன் எல்லாத் தொண்டுகளையும் அன்புடன் செய்வேன். ஆதலால், இங்கேயே இரும்" என்று உள்ளம் உருகி உரைத்தான்.

இராமர் குகனை மார்புறத் தழுவி "குகனே ! இன்று முதல் தசரதருக்கு ஐந்து புதல்வர்கள், நீ எனக்குத் தம்பி. பரதன் முதலியோர் உனக்குத் தம்பியர். சீதை உனக்கு அண்ணி. ஊர்க்குருவி தலையில் பனங்குலை வைத்ததுபோல பரதனிடம் அரசியலை ஒப்படைத்துள்ளேன். அருகில் இருந்து அவனுக்குத் துணை செய். 14 ஆண்டுகள் 14 நாட்கள் போலக் கழியும். பின்னர், நாம் ஒன்று சேர்ந்து வாழ்வோம். என் சொல்லைத் தட்டாதே ! ஓடங் கொணர்க" என்றார். குகன் கண்ணீர் அரும்ப ஓடத்தைக் கொணர்ந்தான். இராமரும் சீதையும் இலட்சுமணரும் ஓடத்தின் மீது ஏறினார்கள். இராம நாமத்தை இனிமையாகப் பாடிக் கொண்டே ஓடத்தைக் குகன் செலுத்தினான்.

கங்கை வெள்ளத்தில் குகனுடைய ஓடப் பாடலின் நாத வெள்ளமும் அவனுடைய அன்பு வெள்ளமும் கொந்தளித்து ஓடின. அக்கரை சேர்ந்தார்கள். இராமர் குகனைத் தழுவி, "மனம் வருந்தாமல் இரு .. . மீண்டும் ஒன்று சேர்ந்து மகிழ்வோம்" என்று பரிந்துரை கூறினார்.

இராமர் அங்கிருந்து புறப்பட்டுக் கானகத்தில் நடந்து சித்திர கூடம் என்ற மலைச்சாரலையடைந்தார். அங்கு மாதவ மணி விளக்கான பரத்துவாச முனிவரைக் கண்டு வணங்கி மகிழ்ந்தார்கள். பரத்துவாச முனிவரின் சொற்படி சித்திரகூட மலைக்கு அருகில் உள்ள மந்தாகினி நதிக்கரையில் ஓர் ஆசிரமம் அமைத்துத் தங்கினார்கள்.

சின்னாட்கள் கழித்து, இராமபிரான் பயணத்தை மேற்கொண்டபோது வழியில் யமுனா நதியைக் கண்டார். அப்புண்ணிய நதியில் மனைவி, தம்பியுடன் நீராடினார். மூவரும் காய்கனிகளை உண்டு பசியாறினார்கள்.

இலட்சுமணர் மூங்கில்களை வெட்டி ஒரு தெப்பம் அமைத்து, அதில் இராமரும் சீதாதேவியும் ஏற, அந்நதியைக் கடந்து அக்கரையடைந்தார்கள். தம்பியின் தொண்டின் திறத்தைக் கண்டு இராமர் வியப்புற்றார்.

"தம்பி ! நீ எப்படி இந்த மகாநதியைக் கடந்தாய் ?" என்று கேட்டார். இலட்சுமணர் "அண்ணா ! தேவருடைய திருவடியைப் பற்றினோர் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவார்களே ! அடியேன் இந்தச் சிறிய நதியைக் கடந்தது ஒரு பெரிய கருமமா ?" என்று கண்ணீர் ததும்பிக் கழறினார்.

## பரதர் குகனைச் சந்தித்தல்



பரதர் அறுபதினாயிரம் அக்ஷரோணி சேனைகளுடன் கங்கைக் கரையையடைந்தார்.

கங்கைக் கரையில் சிருங்கிபேரம் என்ற நகரில் குகன் என்ற வேடர் தலைவன் இருந்தான். இயமனையும் வெல்லுந் திறமையுடையவன். விற்போரிலும் வாட்போரிலும் வல்லவன். அஞ்சா நெஞ்சு படைத்தவன். எண்ணற்ற படகுகளையுடையவன். ஊனும் மீனும் உண்பவன். துர்நாற்றம் வீசும் உடம்பையுடையவன். ( இராமபிரான்மீது இவன் கொண்டுள்ள அன்பை ஏற்கனவே அறிந்திருக்கின்றோம். )

பரதர் பாட்டன் வீட்டில் இருந்து தாய்க்கு உளவு சொல்லி, அரசாட்சியைக் கவர்ந்து கொண்டதோடு, அமைதி பெறாமல் கானகத்துக்கும் வந்து, அண்ணனுக்கு இடர் செய்கின்றான் போலும் என்று எண்ணிய குகன் சீறி எழுந்தான். சங்க நாதம் செய்தான். "வேடர்களே ! வீறு கொண்டு எழுங்கள். வில்லை வளைத்து நில்லுங்கள். எதிர்த்தவரைக் கொல்லுங்கள்."

தோழர்களே ! நம்முடைய உதவியின்றி இவர்கள் கங்கா நதியைக் கடக்க முடியுமா ? யானைப் படையைக் கண்டு நாம் அஞ்சுவோமா ? பரம ஏழையாகிய என்னை இராமபிரான் தம்பீ ! என்றாரே. அந்த ஒன்றுக்காக

நான் உயிரைக் காணிக்கையாகத் தரவேண்டாமா ? நாடு கொடுத்த நாயகனுக்கு காடுங்கொடுக்காமல், படையுடன் வரும் கொடுமை இவ்வுலகில் உண்டா ? அடியுங்கள், உதையுங்கள், கொல்லுங்கள் என்று கூறிக் குகன் ஆரவாரஞ் செய்தான்.

"போர்ப் பறையறைவதைக் கேட்ட பரதர். சுமந்திரரே ! அண்ணாவைக் காணாமல் வெந்து நொந்து வருகின்ற நம்மீது போர் தொடுக்கின்றவன் யாவன் ?" என்று கேட்டார்.

சுமந்தரர், "எம் பெருமானே ! கங்கைக் கரைக்கு அதிபன் எண்ணில்லாத நாவாய்களை உடையவன். குகன் என்னும் வேடர் கோமான். நீர் இராமருக்கு இடர் செய்ய வருவதாக எண்ணிப் போருக்கு ஆயத்தம் புரிகின்றான்" என்றார்.

பரதர் "கடவுளே ! வேடனுக்குக்கூட என் மீது சீற்றமா ? என்ன பாவஞ் செய்தேனோ ?" என்று கூறிச் சேனைகள நிறுத்திவிட்டுத் தான் மட்டும் வருகின்றார். சத்ருக்னர் அவரைத் தொடர்ந்து வருகீன்றார்.

குகப் பெருமான் தொலைவில் வருகின்ற பரதரைக் கண்ணுற்றார். மரவுரியுடனும் அழுத கண்ணுந் தொழுத கையுமாகக் கல்லும் உருகுமாறு உள்ளம் உருகித் தவக்கோலத்துடன் வரும் உத்தம பரதனைப் பார்க்கின்றார்.

"ஆ ! ஆ ! கெட்டேன். முன்னே வருகின்றவர் இராமண்ணாவைப் போல் இருக்கின்றாரே ! பின்னே வருபவர் இலட்சுமணரைப்போல் காட்சி தருகின்றாரே ! அளவற்ற துன்பத்துடன் இராமபிரான் சென்ற திசை நோக்கித் தொழுகின்றாரே ! ராமண்ணாவிடம் ஒருநாள் பழகிய எனக்கே நற்குணங்கள் இருக்குமாயின் ராமண்ணாவுடன் பிறந்த பரதரிடம் தீயகுணம் இராதுதானே ! நான் அவசர புத்தியுடையவன். நல்லவரைத் தீயவர் என்று எண்ணிவிட்டேன்" என்று கூறிப் பரதரைச் சந்தித்து, அவருடைய மலரடியில் வீழ்ந்து வணங்கினான். பரதர் குகனைத் தழுவிக் கொண்டார்.

"பரதரே ! நீ ஏன் தவக்கோலத்துடன் வனம் வந்தாய் ?" என்று வினாவினான்.

பரதர், "அண்ணலே ! மனுக்குலத்தில் மூத்தவன்தான் அரசுபுரிய வேண்டும் என்ற மரபு உண்டு. அந்த முறையைச் சக்ரவர்த்தி கை நழுவவிட்டார். அண்ணா இருக்க, இளையவனாகிய நான் ஆட்சி புரியலாமா ? அதனால், ராமபிரானை அழைத்துக் கொண்டு போய், முடிசூட்ட எண்ணி வந்தேன்." என்றார்.

குகன் இந்த வசனத்தைக் கேட்டு மகிழ்ச்சியினால் ஒரு குதிகுதித்தான், ஆனந்தக் கண்ணீர் வடித்தான். "பரதா ! தாய் வரம் கேட்க, தந்தை தந்த மகத்தான அரச பதவியை உதறித் தள்ளி விட்டுத் தவக் கோலத்துடன் வந்த உனக்கு, ஆயிரம் இராமர்கள் ஒன்று சேர்ந்தாலும் இணையாகுமா ? உன்னைப் போன்ற உத்தம குணம் பொருந்திய தம்பி 14 உலகங்களிலும் இல்லை" என்றான்.

பரதர் "அண்ணே ! குகப் பெருமானே ! அய்யா எங்குத் தங்கியிருந்தார் ?" என்று கேட்டார். இராமர் தங்கியிருந்த ஆசிரமத்தைக் குகன் காட்டப் பரதர் கண்டு வருந்தினார். குகனைப் பார்த்து "இலட்சுமணன் எங்குப் படுத்து உறங்கினார் ?" என்று பரதர் கேட்டார்.

பரதா ! "இலட்சுமணன் படுத்து உறங்கினானா ? எம்பிரானும் எம்பிராட்டியும் உறங்க, இலட்சுமணன் வில்லை ஊன்றி. நின்று, கண்ணீர் சொரிந்து கொண்டு, வெப்பமான நெடு மூச்சுடன் விடியும் வரை நின்று கொண்டிருந்தான். கண்கள் இமைக்காமல் நின்று காவல் புரிந்து கொண்டிருந்தான்" என்றான்.

சேனைகள் படகுகளில் போய் அக்கரை சேர்ந்தன. அரச குடும்பத்தினர் தனிப் படகில் பிரயாணம் புரிந்தார்கள்.

குகன் கன்றைப் பிரிந்த காராம்பசுமைப்போல் துயரமடைந்து அங்கு அமர்ந்திருந்த கௌசலையைப் பார்த்து "இவர் யார். " என்று குகன்

கேட்டான். "அன்பே கேள், உலகங்களை ஈன்ற பிரம தேவனை, நாபியில் ஈன்ற பரவாசு தேவனைப் பன்னிரு மாதங்கள் சுமந்து பெற்று, உலகமெல்லாம் தனக்கு உரியவனாக இருந்து, சிறியேன் பிறந்ததால் அத்தனையும் இழந்த துர்ப்பாக்கியவதி கௌசலா தேவி" என்றார்.

குகன் கௌசலையின் பாத மலர் வீழ்ந்து பணிந்து அழுதான். "கௌசலை, பரதா, குழந்தைபோல் விம்மியழுதிடும் இந்த உத்தமன் யார் ?" என்று கேட்டாள். பரதர், "அம்மா ! இவர் இராமண்ணாவுக்குத் தம்பி, இலட்சுமணனுக்கும் சத்துருக்னனுக்கும் எனக்கும் தமையன் குகன்" என்றார். கௌசலை, "ஐவரும் ஒற்றுமையாகப் பல்லாண்டு அரசு புரிந்து வாழுங்கள்" என்று வாழ்த்தினாள். மற்றைத் தாய்மார் களையும் அறிமுகம் செய்தார் பரதர்.

இலட்சுமணர் பரதருடைய படைகளைக் கண்டு பிழைபடக்கருதிச் சீறி எழுந்தார். துன்பத்தை ஓர் உருவமாக எழுதியதை ஒத்த பரதர் இராமர் திருவடியில் வீழ்ந்து அழுதார்.

"அப்பா நலமா ?" என்று இராமர் கேட்டார். "சத்தியத்தை நிலைநாட்டி விண்ணுலகம் போனார்" என்று பரதர் கூறினார் தந்தையாரை நினைத்து நெடிது புலம்பி இராமர் அழுதார். வசிட்டர் தேற்றத் தேறி இங்குலி என்ற கிழங்கைச் சுட்டுப் பிண்டம் தந்தார். சக்ரவர்த்திக்குப் பிண்டம் போட காற்படி அரிசிக்கு வழியில்லை இதுதான் உலக வாழ்வு.

பரதர், "அண்ணா நீர் வந்து முடிசூட்டு ஆட்சிபுரிய வேண்டும்" என்று வற்புறுத்தி அழைத்தார். இராமபிரான், "தம்பி ! 14 ஆண்டு வனவாசம் புரிய வேண்டும் என்ற நியதியைக் கைவிடக்கூடாது. என் சொல்லைத் தட்டாதே. 14 ஆண்டுகள் 14 நாள்களாகக் கழித்து வருவேன். அரசு புரிவேன். நீ அயோத்திக்குப்போய் கடமையைச் செய்" என்றார்.

தேவர்கள் அசீரியாக இராமர் வனவாசம் புரிதல் வேண்டும் என்று கூறினார்கள்.

பரதர் எம்பிரானுடைய பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு பலமுறை இராமபிரானைத் தொழுது அழுது புறப்பட்டார்.

அயோத்திக்கு அருகில் நந்திக் கிராமத்தில் மணி மண்டபம் அமைத்து, இராமருடைய பாதுகைகளை வைத்து, அப்பாதுகைகளுக்கு முடிசூட்டி வழிபடுவாராயினார். தென் திசையயன்றி வேறு திசையை நோக்காமல் பொறிபுலன்களை அவித்து உப்பில்லாத கஞ்சியைப் பருகி, இராமரின் பாதுகைகளுக்கு தினந்தினம் ஆயிரம் மந்திரங்களால் அர்ச்சனை புரிந்து இடையறாத இராம பக்தியுடன் தவநெறியில் இருந்தார்.

## விராதனின் காதலும் சாபமும்

தசரதருடைய மரணத்துக்குக் காரணம் யாது ?

மகனுடைய பிரிவினால் தசரதர் மரணம் அடைந்தார் என்று எல்லாரும் கூறுகின்றார்கள். இது பொருந்தாது. ஏன் ?

தசரதர் இராமனுக்கு முடிசூட்டிக், கானகம் போக முடிவு செய்தார். இந்த ஏற்பாட்டின்படி இராமருக்கு முடிசூட்டியிருந்தால் சக்ரவர்த்தி மறுநாள் தவம் புரியக் கானகம் சென்றிருப்பார். இப்போதுதான் பிள்ளைப் பிரிவு நேர்ந்திருக்கும்.

கைகேயியின் திட்டப்படிப் பரதருக்கு முடி சூட்டியிருந்தால் இராமபிரான் போகின்ற கானகத்துக்குத் தசரதரும் இராமபிரானுடன் சேர்ந்து போயிருக்கலாம். இதனால், மகனுடைய பிரிவு ஏற்பட்டிருக்காது. நன்கு சிந்தியுங்கள். தசரதர் ஏன் மரணமடைந்தார். ?

மது குலத்தில் மூத்த மகனுக்குத்தான் முடிசூட்ட வேண்டும். இது வழிவழியாக வந்த மரபு. இந்த மரபின்படி இராமருக்குத்தான் முடிசூட்ட வேண்டும் கைகேயிக்குத் தந்த வரத்தின்படி பரதருக்கு முடிசூட்ட வேண்டும். இது வாய்மை. இராமருக்கு முடிசூட்டினால் வாய்மை அழிகின்றது. பரதருக்கு முடிசூட்டினால் மரபு அழிகின்றது. ஒருபுறம் வாய்மை, மறுபுறம் மரபு. இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தார் தசரதர். ஆனால், வாய்மையைக் காப்பாற்றினால் மரபு கெடுகின்றது. மரபைக் காப்பாற்றினால் வாய்மை

கெடுகின்றது. இந்த இடர்ப்பாட்டால் இதயம் வெடித்து தசரதர் மாண்டார் என உணர்க. இதனை வாலி கூறுகிறான்.

பரதர் அயோத்தியை அடைந்தபின், இராமபிரான் சீதையுடனும் இலட்சுமணனுடனும் புறப்பட்டு அத்திரி முனிவருடைய ஆசிரமத்தை அடைந்தார். காமம், கோபம், மயக்கம் என்று மூன்று குற்றங்களும் இல்லாதவர் அத்திரி முனிவர்.

இவருடைய மனைவி அநுசூயை. அசூயை இல்லாதவள் அநுசூயை. இம்மாதரசி மும்மூர்த்திகளையும் குழந்தைகளாகச் செய்தவள். சமானமில்லாத கற்புக்கரசி.

அத்திரி முனிவரையும் அநுசூயை தேவியையும் மூவரும் பணிந்தார்கள். தங்கள் துயரம் தணிந்தார்கள். அந்த ஆசரமம் பூமரங்கள் சூழ்ந்து குளிர்ந்து இருந்தது. காலமில்லாத காலத்தில் மரங்கள் பழுத்திருந்தன. நறுமணம் வீசியது.

அத்திரி முனிவரும் அநுசுயா தேவியும் அவர்கட்குப் பழங்கள் தந்து பசியாரச் செய்தார்கள், அநுசூயா தேவி, சீதையைத் தழுவி, அன்புக் கண்ணீரால் நனைத்து, "மகளே ! ஜனகராசகுமாரியே, மரவுரியுடன் கணவரைப் பிரியாது கானத்தை அடைந்தனையே ? நீ கற்புக்கரசி, அணிகலன்கள் அத்தனையும் துறந்து வெற்றும்புடன் இருக்கின்றனையே ? நீ சுமங்கலி, கைவளையின்றி இருக்கக்கூடாது. இவை என்னுடைய அணிகலன். நீ என் மருமகள். இந்தா, இந்த அணிகலன்களை அணிந்துகொள்" என்ற வரிந்து கூறி, உச்சி முதல் உள்ளங்காலி வரை நிரம்பப் பாரமான அணிகலன்களை அணிவித்தாள்.

"அம்மா ! உன் கற்புநெறி வாழ்க. ஒரு சமயம் நீ கணவனைப் பிரிந்திருக்க நேரும், உனக்குப் பசியெடுக்காத வரம் தருகின்றேன், என் தவப்புதல்வியே ! உன் புகழ் நீ வாழ்க," என்று அருள்புரிந்தாள்.

இராமபிரான் அத்திரி முனிவரின் தவச்சாலையில் ஓர் இரவு தங்கினார். மறுநாள் காலை முனிவரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டார், தண்டக வனத்தை அடைந்தார்.

வீராதன் என்ற ஒரு கொடியவன் அங்கு வந்தான். கரிய பெரிய உருவத்தையுடன். எதிர்த்த மன்னவர்களைக் கொன்று தின்று கொழுத்தவன். சமான மில்லாத ஆற்றல் படைத்தவன். தேர்களை மலைப்பாம்பில் கோத்து தேர்மலை, புலி மாலை, யானை மாலை, கரடி மாலைகளைத் தரித்தக் கொண்டிருப்பான்.

அவன் முத்தலைச் சூலத்தை ஏந்தியிருப்பான். அந்தச் சூலத்தின் ஒரு புறத்தில் 16 யானைகளையும், நடுவில் உள்ள கதிரில் 32 சிங்கங்களையும், மற்றொரு புறத்தில் 16 யாளிகளையும் கோத்திருப்பான், சூடுகின்ற வடையைப் பிள்ளைகள் ஒரு குச்சியில் குத்தி வைத்திருப்பது போல.

பசி வந்தால் ஒவ்வொன்றாகத் தின்பான். மீண்டும் யானை யாளிகளைப் பிடித்துச் சூலத்தில் குத்திச் கொள்வான். மலைபோன்ற பெரிய உருவமுள்ள அவன் இராம லட்சுமணரைத் தின்னும் பொருட்டு வந்தான். சீதா தேவியைக் கண்டான், மையல் கொண்டான். ஆ ! ஆ ! இவள் என்ன அழகு. இவள் என்ன தங்கச் சிலையா ? என்று கூறிக் கருடன் கோழிக்குஞ்சைக் கவர்வது போல் பிராட்டியாரை எடுத்துக் கொண்டு விண்ணில் பறந்து சென்றான். தேவி பதறிக் கதறி அழுதாள்.

இராமரும் இலட்சுமணரும் அவன் மீது பாணமழையைத் தூவினார்கள். விராதன் பாணங்களைத் தன் கைகளால் விலக்கி "ஏ மனிதச் சிறுவர்களே ! நான் பிரம தேவரிடம் அளவில்லாத வரங்களைப் பெற்றவன். ஏன்னால் சாதிக்க முடியாத கருமங்கள் இல்லை. இந்த அழகிய பெண்மணியை எனக்கு அளித்த நன்றிக்கடனுக்காக உங்கள் உயிரைத் தந்தேன். ஓடிப் போங்கள்" என்றான்.

## தண்ட காருண்யம்



மூவரும் தண்டக வனத்தையடைந்தார்கள்.

தண்டக வனத்தில் பலவகையான முனிவர்கள் வாழ்ந்தார்கள்.

வாலக்கில்லியர் என்ற முனிவர்கள், அங்குட்ட அளவில் உள்ளவர்கள். இவர்கள் பிரம குமாரர்கள். இவர்கள் அளவற்ற பெருந்தவசீலர்கள். ஆதித்தன் அருகில் இருந்து ஆதித்தனுடைய வெயிலை மிதமாக்கி உலகுக்கு அருள்பவர்கள்.

முருகப் பெருமானுடைய பன்னிரு கரங்களில் ஒரு கரம் இவர்களைத் தாங்குகின்றது.

இராமரைக் காண இந்த வாலக்கில்லிய முனிவர்களும் வந்தார்கள்.

தண்டகாருண்யத்தில் வசிக்கும் முனிவர்கள் பல நியமம் பூண்டவர்கள். நிலத்தைத் தொடாமல் கயிற்றின் மேல் இருப்பவர் சிலர். தழையை மட்டும் உண்பவர் சிலர், பத்ராசனர் சிலர் தானியங்களைப் பல்லில் கொறித்து உண்பவர்கள, தந்துாலகர் சிலர் தூங்காமலேயே இருப்பவர். அசையாகியர் மௌன நிலையில் உள்ளவர்கள்.

இத்தகைய சிறந்த முனிவர்கள் இராவணாதி அவுணர்களால் இரவும் பகலும் வேதனைப்பட்டு நிலை குலைந்து துயரத்தால் துள்ளித் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

பல புலிகளுக்கு இடையே உலவும் மான்களைப் போல் துன்புற்றார்கள்.

இந்த முனிபுங்கவர்கள் சாபாநுக்கிரக சக்தி படைத்தவர்கள் இவர்கள் நினைத்தால் அசுரர்கள் அனைவரும் ஒரு வினாடியில் அழிவார்கள். ஆனால், கோபத்தை வேருடன் களைந்து சாந்த சீலர்களாய் விளங்குவதனால் துயரம் அனைந்தார்கள்.

தண்டக வனத்துத் தபோதனர்கள் காகுத்தனைக் கண்டவுடன் கதிரவனைக் கண்ட கமலங்களைப்போல் அகமும் முகமும் மலர்ந்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இராமச்சந்திர மூர்த்தியே, உனக்கு அபயம் அபயம் !

இரக்கமில்லாத அரக்கர்களால் வேதம் ஓதுகின்றோமில்லை. வேள்வி செய்கின்றோமில்லை. மந்திர ஜெபம் செய்கின்றோமில்லை. தவம் புரிகின்றோமில்லை. அதனால், நாங்கள் அந்தணக் தன்மையை இழந்துவிட்டோம். எங்களைக் காப்பது நின் கடன் என்று கூறிச் சரணமடைந்தார்கள்.

இராமபிரான், தவ முனிவர்களே ! இனி, அரக்கருக்கு அஞ்ச வேண்டாம். என் கணை துணை புரியும். உங்கள் ஆசிர்வாதத்தால் இராவணாதி அரக்கர்களை அழிப்பேன். என் வாக்கு சத்திய வாக்கு. நான் பொய் சொன்னதில்லை. அரக்கர்களாகிய என் பாணமாகிய அக்னியில் சாம்பலாகச் செய்வேன் என்றார்.

இந்த இனிய மொழிகளைக் கேட்டு முனிவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

தண்டக வனத்திலே இராமர் பத்து ஆண்டுகள் வசித்தார். நெருப்பு இருந்தால் பனி அணுகாது. இராமர் இருந்ததனால் அரக்கர்கள் கொடுமை அகன்றது.

இராமர், தம்பி இலட்சுமணா ! ஜானகி ! நம் வனவாசம் மிகவும் பயனுடையதாக ஆயிற்று. பசுவின் பொருட்டும், அந்தணர் பொருட்டும், எவன் தன் உயிரைத் தியாகம் புரிவானோ, அவன் மும்மூர்த்திகளும் வணங்கத் தக்கவனாகின்றான். பரம சாதுக்களாகிய இந்தத் தவ சீலர்களுக்கு உதவி செய்யும் பெரும் பாக்கியம் நமக்கு கிடைத்தது. இது பெரும் புண்ணியம் என்றார்.

இராமரைக் காண பல முனிவர்கள் வந்தார்கள். ஆனால் அகத்திய முனிவரைக் கண்டு வணங்க, இராமர் விரும்பினார்.

சுதீட்சினி முனிவர், அகத்திய முனிவரின் உறைவிடத்தைத் தெரிவிக்க, இராமர் அகத்தியருடைய ஆசிரமத்தையடைந்தார். என்றுமுள தென் தமிழை உலகுக்குத் தந்த பெருந்தவமுனிவராகிய அகத்திய முனிவர், இராமரை வரவேற்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். ஆசியுரை கூறினார். நன்கு அவரை உபசரித்தார். சிவ கீதையை உபதேசித்தார். சிறந்த வில்லையும் உயர்ந்த கணைகளையும் தந்தார். இவை இராவைண சம்மாரத்துக்குப் பயன்பட்டன.

அகத்தியருடைய அருளைப் பெற்று மூவரும் பஞ்சவடியை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ஜடாயு சந்திப்பு



காசிப முனிவருக்கு விநதை வயிற்றில் அருண பகவானும் கருட பகவானும் பிறந்தார்கள். இவர்கள் பறவைகளுக்கு வேந்தர்கள். தெய்வப் பறவைகள. பேசும் திறமை படைத்தவர்கள்.

அருண பகவான் பேராற்றல் படைத்தவர். ஆதித்த பகவானுக்கு ரத சாரதியாக இருந்து கொண்டு புரிபவர். இவருக்குச் சம்பாதி, ஜடாயு என்று இரு புதல்வர்கள்.

பலபல ஆண்டுகள் சடைபோல் பின்னிக்கொண்டு நீண்ட காலம் வாழ்ந்ததனால் ஜடாயு என்று பேர் பெற்றார். இந்தப் பறவை மன்னன் ஒரு கருமலையில் பவளக் குன்று வீற்றிருப்பது போல் கம்பீரமாக வீற்றிருந்தார். இராமர் அவரைக் கண்டு., கொடிய ஓர் அரக்கன் பறவை வடிவத்தில் நமக்கு இடர் செய்ய வந்திருக்கின்றான் போலும் என்று எண்ணினார்.

ஜடாயு இராம இலட்சுமணர்களை நெருங்கி, குழந்தைகளே ! நீங்கள் யார் ? என்று வினாவினார்.

நாங்கள் தசரத குமாரர்கள் என்று இராமர் கூறினார்.

இதைக் கேட்ட ஜடாயு, மக்களே ! தசரதன் என் உடன் பிறவாச் சகோதரன். அவன் நலமாக இருக்கின்றானா ? என்று வினாவினார்.

இராமர் என் தந்தையார் பரகதி அடைந்து விட்டார் என்று கூறினார்.

இதைக் கேட்ட ஜடாயு பதைபதைத்துக் கண்ணீர் வடித்து உள்ளம் துடித்துப் புலம்பி அழுதார்.

தம்பி தசரதா ! உன்னுடைய கொடைத் தனத்திற்குச் கற்பகம் தோல்வி அடைந்தது. உன்னுடைய குளிர்ந்த வெண் கொற்றக்குடைக்குச் சந்திரனும் தோற்றுவிட்டான். உன்னுடைய பொறுமைக்கு நிலமகளும் தோற்றுவிட்டாள். உன்னுடைய மறைவினால் கற்பகமும், முழுமதியும், பூமியும் மகிழ்ச்சி அடையும். நான் உடல் நீ உயிர். உடலைவிட்டு உயிர் பிரிந்து விட்டது. இனி ஒருபோதும் வாழமாட்டேன். குழந்தைகளே ! தீ வளர்த்திக் கொடுங்கள். நான் நெருப்பில் விழுந்து மாண்டு போவேன் என்றார்.

இராமர் அவரை வணங்கி, பெரியப்பா ! நாங்கள் வாழும் பொருட்டுத் தாங்கள் மாளாது வாழ வேண்டும் என்று வேண்டினார்.

இலட்சுமணர், தந்தையே ! சிறிய தாய்க்குத் தந்தையார் கொடுத்த வரத்தின்படிப் பரதனுக்கு நாட்டை அளித்து இவர் கானகத்தை அடைந்தார் என்றார்.

தந்தையின் சொல்லைப் பரிபாலிக்கத் தம்பிக்கு அரசைக் கொடுத்த உங்கள் தியாகத்தை மிகவும் பாராட்டுகின்றேன். இந்தப் பெண்மணி யார் ? என்று கேட்டார் ஜடாயு.

நான் இலட்சுமணன். இவர்கள் ஜனக ராஜ குமாரி. அண்ணாவுடைய தர்மபத்தினி என்று கூறினார்.

ஜடாயு சீதையைப் பார்த்து. கற்புக்கு அரசியே ! நின் புகழ் என்றும் வாழ்க. கட்டிய ஒரு துணியுடன் கணவனுடன் வந்தனையே ! உன் கற்பின் திறத்தை யாரால், எவ்வாறு புகழ முடியும் ? மற்ற பெண்களென்றால், என்னைத் தாயார் வீட்டில் விட்டுவிட்டுப் போய் வாருங்கள். வனவாசம் முடிந்ததும் திரும்பி வரும்பொழுது என்னை அழைத்து வாருங்கள் என்று கூறுவார்கள். அம்மா !

ஊசி போன வழியே நூல் போவது போல், கணவன் வந்த கொடிய கானகத்திற்கு உன் மெல்ல பாதங்கள் நோவ வந்தனையே ! உன் கற்புத்திறம் வாழ்க என்று வாழ்த்தினார்.

ஜடாயு பறந்து நிழல் கொடுத்து வழிகாட்டி வர, இராம லட்சுமணர்கள் கோதவரிக் கரையிலுள்ள 5 மாமரங்கள் சூழ்ந்த தபோவனமாகிய பஞ்சவடியில் தங்கினார்கள்.

பஞ்சவடி- மூவரும் புண்ணிய ஏழு நதிகளில் ஒன்றாகிய கோதவரியில் அகமர்ஷண மந்திரம் சொல்லி மூழ்கி மகிழ்ந்தார்கள். அந்த நதி சான்றோர்களின் கவியைப்போல் தெளிவாக இருந்தது.

சக்ரவர்த்தி திருக்கமாரர்களாகிய இராம இலட்சுமணரும், ஜனக ராஜகுமாரியாகிய சீதா தேவியும் விலங்குகளம், அசுரர்களும் நிறைந்த கொடிய கானகத்தில் வசிப்பதைக் கண்டு நிலமகள் கண்ணீர் வடித்து அழுவதைப்போல் இருந்தது அந்த மகாநதி.

சூர்ப்பணகை: சூர்ப்பணகை - முறம் போன்ற நகங்களை உடையவள். பிரம தேவருடைய புதல்வர் புலஸ்திய முனிவர். புலஸ்திய முனிவருடைய புதல்வர் விச்சிர வசு. விச்சிர வசுவின் புதல்வன் குபேரன். அதனால், குபேரனுக்கு வைச்ரவணன் என்ற பெயர் உண்டாயிற்று.

அசுர வேந்தனாகிய சுமாலியின் மகள் கேகசி. இந்தக் கேகசிக்க விச்சிர வசு முனிவரால் பிறந்தவர்கள் இராவணன் கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பணகை ஆகியோர்.

இராவணனுக்குத் தந்தை அந்தணர். தாய் அரக்கி. இவ்வாறு இரு ஜாதி ஒட்டாகப் பிறந்தவன் இராவணன். சூர்ப்பணகை அசுர குலம் அடியோடு அழியக் காரணமானவள். இராமாயண மாகிய காவியத்தை நீட்டி விட்டவர்கள் இரண்டு உதவாக்கரையான பெண்கள். ஒருத்தி கூனி, மற்றொருத்தி சூர்ப்பணகை இராமாயணமாகிய காவியத்தில் சூர்ப்பணகை கலந்தபின் ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் யுத்த காண்டம் இந்த மூன்றரைக் காண்டங்கள் விரிவு பெற்றன.

ஒரு மனிதனுக்கு நோய் பிறக்கும்பொழுதே உடன் பிறந்து உரிய காலத்தில் வெளிப்பட்டு அவனை அழிப்பதுபோல் சூர்ப்பணகை இராவணனோடு பிறந்து அவனைக் குலத்துடன் மூல நாசம் பெற அழத்துவிட்டாள்.

சூர்ப்பணகையின் கணவன் பித்யுத்ஜிஹ்வா. இவன் இராவணனைவிட அதிகம் படித்தவன். இவன் இருந்தால் நமக்குப் பெருமை வராது என்று எண்ணிய இராவணன், தங்கையின் கணவன் என்று கூடப் பாராமல் கொன்று விட்டான். கணவன் மாண்ட செய்தி அறிந்து சூர்ப்பணகை மகிழ்ச்சி அடைந்தாள். நீ எங்கே சென்றாய் ? யாருடன் உறவாடினாய் என்று கேட்பதற்கு ஆள் இல்லை என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தாள்.

சூர்ப்பணகை அடக்குவாரின்றித் தன் விருப்பம்போல் திரிந்த அந்த இடம் ஜனஸ்தானம் என்று பெயர் பெறும்.

இராவணனுடைய தாய் கேகசி. இவளுடைய தங்கை கும்பீனசி. இவளடைய புதல்வர்கள் கரன், திரிசிரன், தூஷணன். கரன் அரனிடம் அறவற்ற வரங்களைப் பெற்றவன், பேராற்றல் படைத்தவன்.

இராமர் வனவாசம் பதிமூன்று ஆண்டுகளும், இரண்டு மாதங்களும் கழிந்தன. எஞ்சியிருப்பது பத்து மாதங்கள்தான்.

ஒருநாள் இராமபிரான் அதிகாலையில் எழுந்து கோதாவரியில் நீராடி, அதன் கரையில், ஒரு சந்தன மரத்தின் கீழ் அமர்ந்து எங்கும் நிறைந்த இறைவனை நினைத்து தியானம் செய்து கொண்டிருந்தார். அந்தக் கானகத்தில் அடக்குவாரின்றி விருப்பம்போல் திரிந்து கொண்டிருந்த சூர்ப்பணகை அழகின் சிகரமாகிய இராமபிரானைக் கண்டாள். அவள் உள்ளத்தில் காமாக்கினி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

ஆ ! ஆ ! இவர் என்ன அழகு ? ஆயிரம் மன்மதர்கள் சேர்ந்தாலும் இவருடைய பாத தூளுக்கு நிகராகார். பிரம தேவன் பெரிதும் முயன்று, இவரை அழகின் கருவூலமாகப் படைத்தான் போலும். புதிய வீட்டில் கண்ணேறு கழிப்பதற்குத் தொடங்க விடுகின்ற விகாரப் பதுமை போல் என்னைப் படைத்தான். இவரை அடைந்து இன்பத்தை நுகர்வேன் என்று எண்ணினாள்.

தன் மாயா சக்தியால் அழகிய தங்கப் பதுமைபோல், தேவ அரம்பைபோல் வடிவத்தை எடுத்துக் கொண்டாள். அண்ணம் போல் நடந்து இராமபிரான் திருமுன் நின்றாள். அவளைக் கண்டவுடன் இராமபிரானுடைய அடி மனம் தீயவள் என்று உணர்த்தியது.

அம்மா ! உன் வரவு எங்களுக்குத் தீமை இல்லாமல் இருக்கட்டும். நீ எந்த ஊர் ? உன் பேர் என்ன ? உன் உறவினர் யாவர் ? என்று வினாவினார்.

சூர்ப்பணகை, பெருமானே ! வணக்கம். நான் பிரம தேவருடைய பேரன் விச்சிரவசுவினுடைய புதல்வி. என்னுடைய அண்ணன் குபேரன். வெள்ளி மலையை அள்ளி எடுத்த இராவணனுடைய தங்கை என் பெயர் காமவல்லி. எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. கன்னியாக இருக்கிறேன் என்றாள்.

இராமபிரான், பெண்மணியே ! இராவணன் அசுர வேந்தன். நீ அவன் தங்கையானால் அசுர வடிவாக இருக்க வேண்டும். நீ தெய்வ மகளாகக் காட்சி அளிக்கின்றனையே ! என்று கேட்டார்.

பெருமானே ! நான் தவம் செய்து அசுர வடிவத்தை மாற்றி இத்தெய்வ வடிவத்தைப் பெற்றேன். என்றாள் சூர்ப்பணகை.

இராமர், பெண்மணியே ! மூன்று உலகங்களையும் ஆளுகின்ற இராவணேசுரனுடைய தங்கையாகிய நீ இந்தக் கொடிய காட்டினில் தனியாக வந்த காரணம் யாது ? என்று கேட்டார்.

என் சித்தத்தில் தித்திக்கும் புத்தமும் போன்றவரே ! நான் அசுரர்களின் தன்மையைக் கண்டு வெறுத்துத் தேவருக்கும் முனிவருக்கும் அன்புடையவளாக இருக்கின்றேன். தங்களைக் கண்டவுடன் அனலில் வைத்த மெழுகுபோல் என் உள்ளம் உருகுகின்றது. தாங்கள் இதய ராஜா, நான் இதய ராணி.. . தங்களை நான் கரும்பென விரும்புகின்றேன். என்னை நீர் மனைவியாக ஏற்றுக் கொள்ளும் என்று சூர்ப்பணகை அழகாகப் பேசினாள்.

அம்மா ! நீ விச்சிரவசு என்ற அந்தணரின் மகள். நான் தசரத ராஜகுமாரன். அந்தணரின் மகளை அரசன் மணந்து கொள்ளக்கூடாது. அன்றியும் இராவணன் முதலிய உன் தமையனார்களின் அனுமதி இன்றி உன்னை நான் மணந்து கொள்வது பிழை. ஆதலால், நீ என்னை விரும்புவது முறையன்று என்றார் இராமர்.

அன்பு அதிகமானால் குலம் தடை செய்யாது. காந்தர்வ மணத்தால் நாம் இருவரும் கூடி மகிழலாம்.

இவ்வாறு சூர்ப்பணகையும் இராமரும் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது சீதாதேவி இராமரை நாடி வருவதைச் சூர்ப்பணகை பார்த்தாள். பார்த்து விம்மிதம் அடைந்தாள். இவள் நம்மைப் போல் இடையில் வந்தவளாக இருக்க வேண்டும். பிரமதேவன் அழகிற்கு ஒரு வரம்பாக இந்த இருவரையும் படைத்தான் போலும். கரும்பை மென்றவன் இரும்பை மெல்லுவானா ? இந்த அழகியை மருவுகின்ற இவர் என்னை விரும்புவாரா ? என்று எண்ணினாள்.

இராமரைப் பார்த்து பெருமானே ! இங்கு வருகின்ற இவள் கொடிய அரக்கி. முனிவர்களை மயக்கி மோசம் செய்கின்றவள். மாயத்தில் வல்லவள். மிகவும் பொல்லாதவள். இவளை நம்பாதீர்கள் என்று கூறினாள்.

சீதையைப் பார்த்து, சிவ பூஜையில் கரடி புகுந்தது போல் நானும், என் கணவரும் பேசி மகிழ்கின்ற பொழுது இங்கு ஏன் வந்தாய் ? இந்த இடத்தைவிட்டு ஓடிப்போ என்று விரட்டினாள்.

சீதாதேவி அஞ்சி இராமரைப் பற்றிக் கொண்டாள். இராமர், இந்த அரக்கியுடன் உரையாடுவது பிழை. இது பெரும்கேடு செய்யும் என்று எண்ணி ஏ! அரக்கியே ! நெருப்பைத் தின்னப் புழு விரும்புவதுபோல் நீ என்னை விரும்புகின்றாள் என்று கூறிவிட்டு, சீதாதேவியின் கரமலரைப் பற்றிக்கொண்டு பர்ணசாலையை அடைந்தார்.

## பொன்மானும் பெண்மானும்



சூர்ப்பணகை முகத்தில் உதிரம் ஒழுக அலங்கோலமாக இலங்கைவாசிகள் திடுக்கிட்டுத், திகைத்து நின்றார்கள். இராவணன் சபா மண்டபத்தில் கம்பீரமாக வீற்றிருந்தான். அரம்பையர்கள் ஆடினார்கள் கந்தர்வர்கள் பாடினார்கள் முனிவர்கள் தங்கக் கிண்ணத்தில் அட்சதையை வைத்துக் கொண்டு "இந்த அரிசியை உன் வாயில் என்று இடுவோமோ" என்ற முணுமுணுத்துக் கொண்டு "நீடு வாழ்க !" என்ற உரத்த குரலில் கூறிக்கொண்டே அட்சதையைத் தெளித்தார்கள். மகோன்னதமான அந்த ராஜ சபையில் நெருப்போடு மேகம் வீழ்வதுபோல், உதிரம் சிந்த சூர்ப்பணகை இராவணன் காலில் வீழ்ந்து அழுதாள்.

இராவணன் தங்கையின் நிலைமையைக் கண்டு கட்டுக்கடங்காத கடுங்கோபத்தைக் கொண்டான். கோபத்தினால் அவன் கண்களிலும் காதுகளிலும், மூக்கிலும் இருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன. அதனால் மீசை மயிர்கள் எரிந்து கரிந்தன. நாவினால் அத்தீயை அணைத்துக் கொண்டான். இடி இடித்ததுபோல் முழங்கி, "என் அருமைத் தங்கையே ! உன் மூக்கையும், காதையும் அறுத்தவர்கள் யார் ? என் அருமைத் தங்கையாகிய உன் மூக்கு அரிய உலகங்களிலும் யாருக்குத் துணிவு ஏற்படும்

? இவ்வாறு செய்தவர்கள் யாராக இருப்பினும், அவர்களை ஒரு நொடியில் நமன் உலகிற்குக் குடியேற்றுவேன்“ என்று முழங்கினான், அவனுடைய சீற்றத்தைக்கண்டு அமரர்கள் அஞ்சினார்கள். கதிரவன் கதிகலங்கினான். எட்டுக்குல மலைகள் அசைந்தன. ஏழு கடல்களும் கொந்தளித்தன.

சூர்ப்பணகை, “அண்ணா இரண்டு சிறிய மானிடர்கள் முப்புரிநூல் தரித்துள்ளவர்கள். தசரத ராஜகுமாரர்கள். சமானமில்லாத வில்லாளிகள், உன்னை ஒரு பொருளாக எண்ணாமல் ஒரு சிறிய துகளாக எண்ணுபவர்கள். மூத்தவனாகிய இராமன் மிகவும் சாந்த சீலன். இளையவன் சீற்ற முடையவன். அவன்தான் என்னை இவ்வாறு செய்தான்“ என்றாள்.

இராவணன், “அன்புத் தங்கையே ! தேள்கூடக் கை வைத்தால் தான் கொட்டும். நீ என்ன செய்தாய் ?“ என்று கோபத்துடன் கேட்டான்.

“அண்ணா ! இராமனுடைய மனைவி அழகு சிகரம் அவளைக் காண லட்சம் கண்கள் வேண்டும். உன் இருபது கண்கள் போதா. அவள் தங்கச்சிலை, அன்னநடை, மின்னலிடை, பால்மொழி, சேல்விழி, அவளை நீ அடைந்தால் அதுவே பெரும்பாக்கியம் ஆகும். அண்ணா ! இந்திரன் சசிதேவியைப் பெற்றான். முருகனின் தந்தையாகிய சிவபெருமான் உமாதேவியை மனைவியாகப் பெற்றார். செந்தாமரைக் கண்ணாகிய் திருமால் லட்சுமிதேவியை மனைவியாகப் பெற்றார். சீதையை நீ பெற்றாயானால், சீதைக்குள்ள அழகு இந்திராணிக்கும், பார்வதிக்கும் திருமகளுக்கும் இல்லாமையினால் நீயே பெரிய புண்ணியவான். அண்ணா ! திருமால் இலக்குமியை மார்பில் வைத்திருக்கின்றார். சிவபெருமான் மலைமகளை தன் உடம்பின் ஒரு பாதியில் வைத்திருக்கின்றார். சீதையை நீ அடைந்தால் அவளை எங்கே வைத்து வாழ்பபோகின்றாய் ? அண்ணா ! அழகின் தெய்வாமாகிய இலட்சுமி சீதைக்குப் பணிவிடை செய்யவும் தகுதியாக மாட்டாள். அவள் கைப்பட்டால் பட்டமரம் துளிர்க்கும். அவள் பேசினால் கல் கரையும், இரும்பு இளகும், ஆதலால், அவளை உனக்குக் கொண்டு வந்து தர வேண்டுமென்று தூக்கப்போனேன். கோபமே வடிவாகிய இலட்சுமணன் மூக்கையும், காதையும் அரிந்துவிட்டான். அண்ணா ! நீ

சீதையைக் கொண்டு வந்து வாழ்கின்றபொழுது அந்த இராமனை எனக்குக் கொடுத்துவிடு“ என்றாள்.

இதனைக் கேட்ட இராவணன், “தங்கையே ! ஜனஸ்தானத்தில் வாழ்கின்ற கரனிடம் சொல்லிருந்தால், கரன் அரனிடம் வரம் பெற்றவன். அவன் அந்த மானிடப் புழுக்களைக் கொன்றிருப்பானே ! அவனிடம் நீ ஏன் முறையிடவில்லை ?“ என்று கேட்டான்.

சூர்ப்பணகை, “அப்படிச் செய்யாமல் இருப்பேனா ! அண்ணா ! நான் கரனிடம் போய் முறையிட்டேன். கரன், திரிசரன், தூஷணன் அறுபது லட்சம் சேனைகளுடன் இராமனிடம் போர் புரிந்து மூன்று நாழிகையில் அத்தனைப் பேரும் மாண்டு போனார்கள்“ என்று கூறியதைக் கேட்டதும் இராவணன், தன் தம்பியாகிய கரன் மாண்டதையும் மறந்தான். தங்கையின் நாசியை அறுத்த லட்சுமணனையும் மறந்தான். சூர்ப்பணகையால் கேள்விப்பட்ட சீதையை மறந்தானில்லை.

அரசவையைக் கலைத்துவிட்டுத் தன் அரண்மனைக்குச் சென்றான். சீதாதேவியை தன் இதயமாகிய சிறையில் வைத்தான். பிராட்டியார் மேல் கொண்ட பெருங்காதலால் காமாக்கினி கொழுந்து விட்டு எரிந்தது. அவன் உடம்பெல்லாம் கருகியது. மையல் பெருகியது. சந்திரனும், தென்றல் காற்றும் அவனுக்கு வடவைத் தீயைப்போல் வெப்பத்தைக் கொடுத்து வாட்டி வதைத்தன., வசந்தருது முதலிய ருதக்களையெல்லாம் மாற்றி மாற்றி அழைத்தான். காலங்கள் அவன் கட்டளைக் கடங்கி மாறி மாறி வந்தன. அன்று இரவு அவன்பட்ட வேதனைக்கு அளவே இல்லை. பொழுது புலர்ந்தது.

கண்ட கண்ட இடமெல்லாம் சீதையின் வடிவம் உருவெளியில் தோன்றின. அந்த மாய வடித்தைத் தடவித்தடவித் பார்த்து ஏமாந்தான். இதைப்போல் சூர்ப்பணகை இராமபிரானையே எண்ணி ஏங்கினாள். அவளுக்கும் கண்ட கண்ட இடங்களெல்லாம் இராகவனுடைய உருவம் தோன்றிக் காட்சி அளித்தது. தூதரை அனுப்பிச் சூர்ப்பணகையை இராவணன் அழைத்தான். பொய்தங்கும் நெஞ்சைவிடக் கொடியவளாகிய சூர்ப்பணகை அங்கு வந்தாள்.

தங்கையே ! இதோ பார் ! மின்னல் இடை, இருண்ட ஜடை, மான் விழி, தங்க மேனி, இவள் தானே நீ சொன்ன சீதை !

சூர்ப்பணகை, “அண்ணா ! நீலமேகம் போன்றி அழகிய மேனி. அழகிய சடைமுடி, மரவுரி, வில்லை ஏந்திய திருக்கை இது இராமன் அண்ணா“ என்றாள். அங்கே சீதையுமில்லை இராமனும் இல்லை.

“தங்கையே ! நாம்தான் இந்திர ஜாலம் செய்கிறோமென்றால், இந்தச் சிறிய மானிடர்கள் மந்திரஜாலம் செய்து நம்மையே ஏமாற்றுகிறார்கள். “

“சூர்ப்பணகை, அண்ணா ! நீ இரவெல்லாம் சீதையையே நினைத்தபடியால் உனக்கு அவள் வடிவம் தெரிகிறது“ என்றாள்.

“தங்கையே ! எனக்குச் சீதை மேலுள்ள ஆசைப்பெருக்கால் சீதையின் வடிவம் தெரிகிறது என்றாள். உனக்கு ஏன் இராமன் வடிவம் தெரிகிறது ?“

“அண்ணா ! இராமன் மீதுள்ள அச்சத்தினால் எனக்கு தெரிகின்றது“ என்றாள்.

இராவணன் காலையில் நீராடினானில்லை. வழக்கம்போல சிவபூசை செய்தானில்லை. வஞ்சனை செய்து சீதையைக் கவர வேண்டும் என்றே எண்ணினான். தாடகையின் மகனான மாயத்தில் வல்ல மாரீசனைத் துணை பற்ற வேண்டும் என்று எண்ணினான். கடற்கரையில் ஓர் ஆலமரத்தின் கீழ் தவம் செய்து கொண்டிருந்த மாரீசனிடம் சென்றான்.

மாரீசன் இராவணனைக் கண்டு துணுக்குற்றான். இந்த காலை நேரத்தில் இவன் எங்கு வந்தான் ? என்று எண்ணினான். “மருகனே ! வருக ! வருக ! எல்லாரும் நலமா ?“ என்று வினாவினான்.

இராவணன், மாரீசனைப் பார்த்து, “மாமா ! எல்லாரும் நலம். உன் மருகியாகிய சூர்ப்பணகையைத் தசரத குமாரர்களாகிய இராம லட்சுமணர் மூக்கையும் காதையும் அரிந்து விட்டார்கள். கரன், திரிசிரன்,

தூஷணாதியரை வதைத்து விட்டார்கள். நம்முடைய குலத்துக்கே இது பெரிய அவமானம். "

"மாமா ! இராகவனுடைய மனைவி சீதை அளவற்ற அழகுள்ளவளாம். அவளை நான் அடைய வேண்டும். இதற்கு நீ துணை செய்ய வேண்டும்" என்று கூறினான்.

மாரீசன், "இராவணா ! உன்னுடைய செய்கையால் நமது அசுர குலமே அழிந்துவிடும். நான் தீயவனாக இருந்தாலும் உனக்குத் தூய உள்ளத்துடன் அறிவுரை கூறுகின்றேன். பாவங்களுக்கெல்லாம் தலையாய பாவம் பரதாரத்தை விரும்புவது. உனக்கு ஒரு லட்சம் மனைவியர் இருக்க, இன்னொருவன் மனைவியை விரும்பலாமா ? பிறன் மனைவியை விரும்பி அழிந்தவர்கள் பலர். இந்திரன் அகலிகையை விரும்பிப் பெருமை குன்றினான். சந்திரன் தாரையை விரும்பி நலம் அழிந்தான். பரதாரகமனம் செய்து அழிந்தவர் பலர். இராவணா ! உனக்கு கிடைத்திருக்கின்ற பதவியும் செல்வமும் எளிதாகக் கிடைத்தவை அன்று. பலகாலும் பட்டினி கிடந்து வேள்வித் தீயில் உன் கரங்களையும், சிரங்களையும் துணித்து, அக்னியில் ஆஹுதி கொடுத்துப் பலகாலம் தவம் செய்து பெற்ற பதவியைப் பெண்ணாசையினால் இழக்காதே" என்று அறவுரை கூறினான்.

செவிடன் செவியில் வீணையின் ஒலி விழுமா ? இராவணன். "மாமா ! அற்பமான மானிடப் பதர்களுக்கு அஞ்சுகின்றாய். ஜானகியை நான் அடைந்தே தீர வேண்டும்" என்றான் தீவிரமாக.

மாரீசன், இராவணன் திருந்தமாட்டான். இவனுக்கு அழிவுகாலம் வந்திருக்கின்றது என்று எண்ணி, "இராவணா ! நீயும் நானும் போர் செய்து இராம இலட்சுமணர்களைக் கொன்ற சீதையைக் கவரலாம்" என்று கூறினான்.

இராவணன், “மாமா ! சீதை அளவில்லாத கற்புள்ளவள். கணவன் இறந்தவுடன் அவளும் இறந்து விடுவாள். ஆதலால், வஞ்சனையாகக் கவர்தல் வேண்டும்“ என்றார்கள்.

மாரீசன், “நான் என்ன செய்ய வேண்டும் ?“ என்று கேட்டான்.

“மாமா ! பெண்களுக்கு அதிசயப் பொருள்களில் விருப்பம் அதிகம். நீ பொன் மானாகச் சென்று சீதைக்கு முன் உலாவுவாய். சீதை மான் பிடித்துத் தருமாறு இராமனை வேண்டுவாள். மான் பின்னே இராமனும், இலட்சுமணனும் செல்வார்கள். நான் சீதையை வஞ்சனையாக அபகரித்துக் கொள்வேன்“ என்றான்.

மாரீசன், “இராவணா ! இராகவன் என் தாய் தாடகையையும் என் சகோதரனாகிய சுபாகுவையும் இளமையிலேயே கொன்றவன். அன்றே என்னைக் கொல்ல பாணத்தைத் தொடுத்தான். அக்கணை என்னைக் கடலில் தள்ளியது. நான் உனக்கு உறவாகி இத்தனைக் காலம் வாழ்ந்தேன். இப்போது என்னை நமன் உலகம் வா ! வா ! என்று கைகாட்டி அழைக்கின்றது. அசுரகுல வேந்தனாகிய நீ மாள்வது திண்ணம். நான் முன் கூட்டியே சென்று உங்களுக்கெல்லாம் நரக உலகத்தில் இடம் பிடித்து வைப்பேன்“ என்று கூறினான்.

பஞ்சவடியில் இராமச்சந்திர மூர்த்தி சந்தியாவந்தனம் செய்துவிட்டு மரகதக் கம்பளம் விரித்தாற்போன்ற புல்தரையில் மனோ சாந்தியுடன் வீற்றிருந்தார். மாரீசன் நவமணிகள் இழைத்த பொன் மானாகச் சீதா தேவியின் திருமுன் உலாவினான். சீதை அந்த மானைக்கண்டு அதன்மீது அளவற்ற ஆசை கொண்டாள். கண்ணை இமைக்காமல் பார்த்துப் பரவசமடைந்தாள். இராமபிரானைப் பார்த்து “பெருமானே ! இந்த மானைப் பாருங்கள் ! எத்துணை அழகாக இருக்கின்றது ? இதனைப் பற்றிக் கொடுங்கள். இதனுடன் நான் விளையாடுவேன்“ என்றாள்.

அரண்மனையில் தனக்கென்றிருந்த விலைமதிக்க முடியாத நவரத்தின் அணிகலன்களையும் பட்டாடைகளையும் தூசாக நினைத்துத் துறந்து வந்த ஜனக ராஜகுமாரி, வனத்தில் உலாவும் மானை விரும்பினாள். அதற்கென்ன காரணம் ? விதி வழி மதி செல்லுகின்றது.

இராமபிரான், "தம்பி ! இலட்சுமணா ! நீ உன் அண்ணிக்கு பாதுகாவலாக இரு., நான் சென்று மானைப் பற்றித் தருவேன்" என்றார்.

கூர்த்த மதியுடைய இலட்சுமணர், "அண்ணா ! அண்ணிக்கு யஜமான் தாங்களிருக்க அந்த மான் ஏன் ? தவம் செய்ய வந்த தங்களுக்குத் துணை செய்ய வந்த அண்ணி காட்டு மானை விரும்புவது நலன் அன்று" என்றார்.

சீதாதேவி, "பெருமானே ! தங்கள் தம்பி எப்போதும் வேதாந்தமே பேசுவார். இந்த மான்மீது எனக்கு அதிக விருப்பம் ஏற்பட்டிருக்கின்றது. தாமதம் செய்தால் மான் ஓடிவிடும். இதனைச் சீக்கிரம் பற்றிக் கொடுங்கள்" என்றாள்.

இராமர், "தம்பி ! நாட்டையும் வீட்டையும் தியாகம் செய்து வந்த உன் அண்ணியின் விருப்பத்தை, நான் நிறைவேற்ற வேண்டும். ஆதலால், நீ இங்கு இரு. நான் சென்று மானைப் பற்றி வருவேன்" என்றார்.

இலட்சுமணர், "அண்ணா ! நெய்கின்றவனுக்குக் குரங்குக் குட்டி ஏன் ? என்று ஒரு பழமொழி உண்டு. இயற்கையான மானுக்கு இத்தனை அழகு இருக்காது. மாரீசன் மான் வடிவாக வந்திருக்கின்றான் என்று எனக்கு தோன்றுகின்றது. அயோத்தியில் அம்மாவின் வார்த்தையால் அப்பா மாண்டு விட்டார். தாங்கள் அண்ணி வார்த்தையைக் கேட்கின்றீர்கள். இதனால், என்ன துன்பம் வருமோ என்று அஞ்சுகின்றேன். இவனை மானாக அனுப்பிய அசுரக் கூட்டம் மேகம்போல் சூழ்ந்து சூழ்ந்து நமக்கு இடர் செய்ய இருக்கின்றது" என்றார்.

சீதை மான் வேண்டுமென்று கண்ணீர் சிந்தி அழுதாள். இராமர், "இலட்சுமணா ! இவன் மாரீசனாக இருந்தால் என்ன ? ஓர் அம்பினால்

இவனைக் கொல்லுவேன். நீ இங்கு இரு“ என்று சொல்லிவிட்டுக் கோதண்டத்தைக் எடுத்துக் கொண்டு மான் பின்னே சென்றார்.

மான் குன்றிடை தவழும், மேகக் குழுவில் நடக்கும், நின்றால் நிற்கும், சென்றால் அதுவும் செல்லும். இப்படி எம்பெருமானை நெடுந்தூரம் அலைக்குழித்தது. இராமர் இவன் அரக்கன் என்று உணர்ந்தார். ஒரு கூரிய பானத்தைத் தொடுத்தார். செத்தும் கெடுத்தான் சீவகத்துச் செட்டி என்ற பழமொழிபோல் மாரீசன் இராமா குரலால், “ஆ! சீதா ! ஆ ! இலட்சுமணா !“ என்று அலரி மாண்டான்.

இதனைக் கேட்ட சீதாதேவி இராமருக்கு ஏதோ ஆபத்து வந்தது என்று எண்ணி, “இலட்சுமணா ! அண்ணா அலறுகிறார். நீ ஓடி உதவி செய்“ என்றாள்.

இலட்சுமணர், “அண்ணி வேதவேத்யனான என் அண்ணனுக்கா ஆபத்து ? என் அண்ணனுடைய கோதண்டம் காதண்டம் வரை வளைந்தால் மூதண்டம் பிளக்குமே ! என் அண்ணன் சுண்டு விரல் அசைந்தால் அண்டங்கள் அசையுமே ! ஆறாயிரம் எறும்புகள் சேர்ந்து ஓர் இரும்புக் குண்டை விழுங்குமா ? எண்ணாயிரம் புழுக்கள் சேர்ந்து நெருப்பைத் தின்னமா ? சூரிய குலத்தை மூவேழு இருபத்தோரு முறை கருவறுத்த பரசுராமனை என் அண்ணா ஒரு விநாடியில் வென்றாரே ! தாங்கள் நேரில் பார்த்துக் கொண்டிருந்தீர்களே ! யாராலும் வெல்ல முடியாத கிராதனை ஒரு விநாடியில் கொன்றாரே. கரன் முதலிய அரக்கர்களை மூன்று நாழிகையில் வதை செய்தாரே ! இவற்றையெல்லாம் அறிந்த தாங்கள் பேராற்றல் படைத்த எம்பெருமானுக்கு ஆபத்து என்று எண்ணலாமா ? நான் தங்களை விட்டுப் பிரிந்தால் அரக்கர்களால் தங்களுக்கு துன்பம் நேரும்“ என்றார்.

சீதாதேவி, “இலட்சுமணா ! நீ மாற்றாந்தாய் மகன். நயவஞ்சகன். நாட்டிலே கைகேயி வெண்கொற்றக்குடையைப் பறித்துக் கொண்டாள். பரதன் அழுதுகொண்டே எம்பெருமான் திருவடியில் முள் குத்தட்டுமென்று பாதுகையைப் பறித்துக் கொண்டான். நீ அடுத்துக் கெடுக்க வந்தனை போலும். உன் கருத்தை நான் உணர்கின்றேன். நீ அண்ணனுக்குத் துணை

செய்யப் போகவில்லையானால், இதோ ! எரிகின்ற காட்டுத் தீயில் வீழ்ந்து மாண்டு போவேன்,“ என்ற அக்கினிக்கருகில் ஓடினாள்.

இலட்சுமணர், “அண்ணி ! நீர் இறக்க வேண்டாம். தாங்கள் சொல்லம்பினால் என்னைத் துளைத்துவிட்டீர். நான் போகின்றேன். வெஞ்சின் விதியினை வெல்ல வல்லவர் யார் ? நான் போகின்றேன்“ என்று பெரும் துயரத்துடன் புறப்பட்டார்.

## ஜடாயுவின் வீரப்போர்



இலட்சுமணர் மிகவும் வேதனைப்பட்டு உள்ளம் உடைந்தார். "தான் பிரிந்து சென்றால் சீதைக்கு என்ன ஆபத்து வருமோ ?" என்று எண்ணிக் கலங்கினார். துன்பம் நேர்ந்தால் ஜடாயு பகவான் காத்தருள்வார் என்று ஒருவாறு மனம்தேறி இராமரை நாடிப் புறப்பட்டுச் சென்றார்.

மாயையில் வல்ல இராவணன் முதிய தவமுனிவனாக, காவித்துணியும் தண்டு கமண்டலமும் உத்திராட்ச மாலையும் ஏந்தி, சீதாதேவியின் பாணசாலையை அடைந்தான்.

பிராட்டியரை உற்று நோக்கினான். பிராட்டியாரின் அழகைப் பார்க்க எனக்குள்ள இருபது கண்கள் போதாதே. ஆயிரங்கண்கள் இல்லையே ? என்று வருந்தினான். வேதகீதங்களை இனிய குரலில் பாடினான். ஆ.. . ஆ.. இப்பெண்மணி எத்தனை அழகாக இருக்கின்றாள் ?

அழுகின்ற முகத்தின் அழகே இப்படி இருக்குமானால் புன்னகை பூத்த முகம் எப்படி இருக்கும் ? நான் இனி இலங்கையை ஆளமாட்டேன். இலங்கை ஆட்சியை இவளை எனக்கு தெரிவித்த என் தங்கை சூர்ப்பணகையிடம் கொடுத்துவிட்டு நான் இந்தப் பெண்மயிலுக்கு ஏவல் செய்து வாழ்வேன் என்றெல்லாம் எண்ணினான்.

சீதாதேவி, சந்நியாசியைப் பார்த்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, முனிவரே ! வருக ! என்று கூறி, ஒரு தருப்பைப் பாயிட்டு அமரச் சொன்னாள்.

இராவணன், "பெருமை நிறைந்த பெண்மணியே நீர் யார் இங்கு ஏன் இருக்கின்றீர்" என்று வினவினான்.

சீதா தேவி, "முனிவரே நான் தசரதருடைய புதல்வரின் மனைவி. என் பெயர் சீதை."

"கணவனாரின் பெயரைக் கற்புடைய பெண்கள் சொல்லக்கூடாது. நான் துறவிகளைத் தெய்வமாக எண்ணுகின்ற ஜனக மாமன்னரின் புதல்வி.. . தாங்கள் எங்கிருந்து வருகின்றீர் ?" என்று கேட்டாள்.

"இராவணன், இலங்கையை ஆளுகின்றவன். அளவில்லாத பெருமையுடையவன். நற்குண சீலன், இந்திரன் முதலிய இமயவர், அவனுக்கு ஏவல் புரிகின்றார்கள். சிவபெருமான் எழுந்தருளியுள்ள வெள்ளிமலையை அள்ளியெடுத்தவன். அவன் பிரமதேவருடைய பேரன். புகழ்பெற்ற நிகரில்லாத வீராதி வீரன். பெண்கள் நாயகமே ! இராவணன் உயர்ந்த பண்புடையவன் இசையிலும் வல்லவன். மிகவும் நல்லவன். அவன் ஒரு மாதரை நாடுகின்றான்" என்று கூறினான்.

சீதாதேவி, "தவமுனிவரே ! தாங்கள் தீயவனைத் தூயவனாகக் கூறுகின்றீர் என் கணவனார், இராவணாதி அரக்கர்களை அழிக்க உறுதி கொண்டுள்ளார். இராவணன் இருபது தோள்களையுடைய வீரன் என்று கூறினீரே. ஆயிரந்தோள்களையுடைய கார்த்தவீரியனை இரண்டு தோள்களையுடைய பரசுராமர் கொன்றதை நீர் அறியவில்லையா ? அசுரர் குலத்தில் வந்த இராவணன் முதலிய தீயவர்களை அழித்துத் தூயவர்களை வாழவைப்பதை என் கணவனார் விரதமாகக் கொண்டுள்ளார்" என்று கூறினாள்.

சீதாபிராட்டியாரின் வீரதீர மொழிகளைக் கேட்ட இராவணன் எரிமலைபோல் சீற்றம் அடைந்தான். அந்த கோபாக்கினியால் அவனுடைய மாய வடிவம் அகன்றது. பத்துத் தலைகளும் இருபது தோள்களும் உடைய அசுர வடிவுடன் நின்றான். சீதாதேவி அவ்வடிவைக் கண்டு அஞ்சி நடுங்கினாள். இராவணன் அவரைத் தீண்ட அஞ்சி, ஆழமாக அகழ்ந்து பூமியுடன் பர்ணசாலையை எடுத்துத் தேரின் மீது வைத்து விண்வழியே புறப்பட்டான்.

சீதாதேவி, எரியில் வீழ்ந்த மலர்க்கொடிபோல் துடிதுடித்தாள். அலறினாள். இரக்கமில்லாத அரக்கனே ! மானை அனுப்பி மாயஞ்செய்து என்னைக் கவர்ந்த தன்மை என் கணவனாருக்கு அஞ்சினாய் என்பதை விளக்குகின்றது. மரங்களே ! மலைகளே ! என்னை இந்த அரக்கன் கவர்ந்ததை எம்பெருமானிடம் கூறுவீர்கள். மாதாவனைய கோதாவரியே ! நீ என் கணவனாரிடம் கூறுவாய் என்று கதறி அழுதாள். தெய்வத்தை நினைத்து தொழுதாள். அவளுடைய துன்பத்தைக் கண்டு சராசரங்கள் எல்லாம் துன்புற்றுன.

ஒரு குன்றின்மீது வயது தளர்ந்த சோர்ந்திருந்த ஜடாயு சீதாதேவியின் குரலைக் கேட்டார். உணர்ச்சியினால் உந்தப்பட்டு பறந்து வந்தார். சீதாதேவியை இராவணன் கவர்ந்து செல்வதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். "ஏ ! மூடனே இந்தப் பெண் தெய்வத்தை நீ அபகரிக்கலாமா ? யாக குண்டத்தின் அருகில் இருக்கின்ற நெய்யை நாய்க்குட்டி விரும்பலாமா ? இவள் உலகமாதா. உனக்கு அழிவுகாலம் வந்துவிட்டது. அதனால், இந்த அதர்மத்தைச் செய்கின்றாய் என்று கூறிச் சிறகினால் வரும் காற்றினால் அங்குள்ள அலைகளையும், மரங்களையும் நடுங்க வைத்தார்.

ஜடாயுவின் ஆற்றலைக் கண்டு அமரர்களும் அதிசயித்தார்கள். இராவணனைப் போகவொட்டாமல் தடுத்துப் போர் புரிந்தார். மூக்கினால் கிள்ளியும் சிறகினால் அடித்தும் அமராடினார். இராவணனுடைய வீணைக் கொடியை மூக்கினால் துணித்து எறிந்தார். அவன் உடம்பில் உதிரம் ஒழுக அடித்தார். தேர்ப்பாகனுடைய தலையை வெட்டித் தள்ளினார். தன் மாமனாராகிய ஜடாயுவின் வீரப்போரைக் கண்டு சீதை மகிழ்ந்தாள். ஜடாயு இராவணனுடைய தேரை அழித்தார்.

இராவணன் மிகச் சிறந்த வேலை அவர்மீது விடுத்தான். அந்த வரபலமுடைய வேல் அவருடைய மார்பில் பட்டுக் கூர் மழுங்கித் திரும்பியது. இராவணன் தண்டாயுதத்தால் ஜடாயுவை அடித்தான். ஜடாயு உடல் புண்ணாகி உதிரம் ஒழுக, மீண்டும் எழுந்து அவனுடன் போர் புரிந்தார். இராவணன் சிவபெருமான் தந்த வாளை எடுத்து ஜடாயுவின் இரு சிறகுகளையும் வெட்டி வீழ்த்தினான். ஜடாயு உதிரம் ஒழுக, "ராம்.. . ராம்.. ." என்று கூறி மண்ணில் வீழ்ந்தார். வானவர் மலர்மழை பொழிந்தார்கள்.

இராவணன் சாலையுடன் சீதையைத் தேரில் வைத்து இலங்கையை நோக்கிச் செல்லலாயினான். அதுகண்டு ஜடாயு பெரிதும் வருந்தினார். "என் சிறை அற்றுவிட்டது. ஆனால், சீதாதேவியின் கற்பு என்றும் சிறையறாது" என்று புலம்பி மூர்ச்சித்து விட்டார்.

சீதாதேவி ஜடாயுவுக்கு நேர்ந்த மரணத்தைக் கண்டு துயரக் கடலில் ஆழ்ந்தர். "தர்மம் தோற்றும் அதர்மம் வெல்வதா ? என்னைக் காக்க வந்த நீர் இந்த நிலையை அடைந்தீரே ? அந்தோ ! தேவரீர் தங்கள் புதல்வரைக் கண்டு என் நிலையைக் கூறுவீராக !" என்று அழுதாள்.

இராவணன் இலங்கையடைந்து தேவியை அசோக வனத்தில் சிறை வைத்தான். கொடிய அரக்கியரைக் காவல்புரிய ஏற்பாடு செய்தான்.

சீதை தனியே இருப்பதால் என்ன இடர் விளையுமோ ? ஏது வருமோ ? என்ற வருந்தி இலட்சுமணர் அண்ணனை நாடிச் சென்றார்.

மாரீசன் குரலை மாற்றிப் புலம்பினானே ! இதனைக் கேட்டுச் சீதை கலங்குவாளே ! என்று இராமர் எண்ணி, வேகமாகத் திரும்பி வந்தார். வருகின்ற வழியில் தொலைவில் தம்பியைக் கண்டார். திடுக்கிட்டார்.. . மனம் பதைபதைத்தார்.

சீதையைத் தனியே விட்டு என் தம்பி வரமாட்டான். மாரீசன் குரலைக்கேட்ட ஜானகி கடுஞ்சொற்களால் என் தம்பியை வைதிருக்கவேண்டும். இல்லையேல் என் தம்பி வந்திருக்கமாட்டான்.

"அண்ணா ! இது மான் அன்று. மாரீச அரக்கன். மான் பிடிக்கப் போகவேண்டாம்" என்று என் தம்பி என்னைத் தடுத்தான். அவன் சொல்லைக் கடந்து நான் மான் பின் சென்றேன். என் தம்பி என் சொல்லைக் கடந்து வருகின்றான். அதலால், என் தம்பி மீது பிழையில்லை. என்மீதுதான் பிழை என்று இராமர் கருதினார்.

இலட்சுமணர், இராமருடைய திருவடியில் வீழ்ந்தார், இராமர், "தம்பீ ! அண்ணியைத் தனியே விட்டு ஏன் வந்தாய் ?" என்று கேட்டார்.

இலட்சுமணர், "அண்ணா ! அரக்கன் குரலைத் தங்கள் குரலாகக் கருதிய அண்ணி, தங்களுக்கு ஆபத்து நேர்ந்துள்ளது நீ சென்று துணை புரிக !" என்றார். நான் பலப்பல கூறியும் அண்ணி கேளாமல் நெருப்பில் வீழ்ந்து மாள்வேன் என்று நெருப்பிடம் நெருங்கினார். "நான் வரவில்லை யென்றால் நெருப்பில் வீழ்ந்து மாண்டுபோவார். ஆதனால், வர நேர்ந்தது" என்றார்.

இராமர், "தம்பி உன்மீது குற்றம் இல்லை.. மானை நோக்கி வந்தது என் பிழை" என்று பர்ணசாலையிருந்த இடம் சென்றார். பர்ணசாலை மண்ணோடு பறிக்கப்பட்டு வெறுமையாக இருந்தது இராமருக்குக் கண் சுழன்றது. விண் சுழன்றது. மண் சுழன்றது. ஆறாத்துயரம் அடைந்தார். அவருக்கு உலகமே இருண்டுவிட்டது.

இலட்சுமணர், "எம்பிராட்டியைத் தீண்டுவதற்கு அஞ்சி பர்ணசாலையுடன் கொண்டு சென்றுள்ளான். தேர்ச்சுவடு தெரிகின்றது. அதுவுந் தெற்கே நோக்கிச் சென்றுள்ளது. நாம் விரைந்து செல்லுவோம் !" என்றார். இராமரும் இலட்சுமணரும் தெற்கு நோக்கிச் சென்றார்கள். வழியில் வீணைக் கொடி வீழ்ந்திருந்தது.

இலட்சுமணர், "அண்ணா இதோ பாருங்கள் வீணைக் கொடி.. இது இராவணனுடைய கொடி.. . நமது பெரியப்பா ஜடாயு போர் புரிந்திருப்பார் போலும்.. . அவருடைய மூக்கினால் கொடி முரிந்துள்ளது என்ற கூறி, மேலும் விரைந்து சென்றார்கள் வழியில் பல தலைகள், பல கரங்கள் அறுபட்டு வீழ்ந்திருந்தன. இதனைக்கண்ட இராமபிரான் தம்பீ ! தலைகள் பல கைகள் பல இருப்பதனால் பலர் சேர்ந்து சீதையை அபகரித்திருப்பார்கள் போலும்" என்றார்.

இலட்சுமணர், "அண்ணா ! தலைகள் பல, கரங்கள் பல ஆனால், கால்கள் இல்லை.. . அதனால் இராவணன் ஒருவன் தான் கவர்ந்துளன், அவனுடைய சிரங்களும் கரங்களும் அறுக்க அறுக்க முளைக்கும் வரம் பெற்றவன்" என்ற கூறி, மீண்டும் விரைந்து செல்வராயினர். உதிரச் சேற்றிலே ஜடாயு நினைவு இன்றி மூர்ச்சிருப்பதைக் கண்டார்கள்.

இராமர், "தந்தையே ! தந்தையே !" என்று வாய் விட்டுப் புலம்பியழுதார்.

"நாட்டில் ஒரு தந்தையை இழந்தேன். காட்டில் ஒரு தந்தையரை இழந்தேன். அந்தோ ! என் செய்வேன். என் பொருட்டுத் தேவரீர் இந்த மரணத்தை எய்தினீர் !" என்று கதறி யழுதார்.

ஜடாயு மூர்ச்சை தெளிந்தார். இராவணனுடைய பத்துத் தலைகளையும் பலமுறை வெட்டி, வெற்றி பெற்ற மூக்கால் இராம லட்சுமணருடைய உச்சியை மோந்தார்.

"மக்களே ! சீதையைத் தனியே விட்டு எங்குச் சென்றீர்கள் ? இராவணன் என் மருகியைச் சாலையுடன் எடுத்துச் சென்றான். நான் என்னால்

ஆனமட்டுந் தடுத்தேன். சிவன் தந்த வாளால், என் சிறையை வெட்டி விட்டான்" என்றார்.

இதனைக்கேட்ட இராமர் எரிமலைபோலச் சீறினார். "சீதையை இராவணன் எடுத்ததையும் தங்கள் சிறகுகளையும் இராவணன் வெட்டியதையும் பார்த்திருந்த விண்ணவரையும் விண்ணவர் உலகையும் அழிப்பேன்" என்ற கோதண்டத்தை வளைத்து நாணொலி செய்தார். இராமருடைண கோபாக்கினியைக் கண்டு உலகம் நடுங்கியது.. . இலட்சுமயரும் அஞ்சினார்.

இவ்வாறு இராமச்சந்திர மூர்த்தி, விண்ணவர்கள்மீது கோபித்தபோது, ஜடாயு பகவான், "இராகவா ! அழகிய இளம் பெண்ணைத் தனியே காட்டில் விட்டு, மான் பின் சென்று குலப்பழியைத் தேடிக் கொண்டீர்கள். உங்கள் குற்றமேயாகும், உலகத்தைக் கோபிக்கலமா ?" என்று சிறிது உரத்த குரலில் கூறினார். இராமருக்கு அறிவுரை கூற, அவரையன்றி வேறுயாருளர் ?

## கவந்தன்

இராம இலட்சுமணர் ஜனஸ்தானத்தில் இருந்து மூன்று குரோச தூரம் அப்பால் சென்று. கிரௌஞ்சாரண்யத்தைக் கடந்து மூன்று குரோச தூரம் சென்று, ஒரு வனத்தை அடைந்தனர். அவ்வனமே கவந்த வனமாகும். நடுப்பகல் எய்தியது. சீதையைத் தேடிச் சென்ற இராம லட்சுமணர் கவந்தன் கைகளுக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள். கவந்தன் என்ற அரக்கன் இந்திரன் வஜ்ஜிராயுதத்தால் அடிக்க, தலை உடம்புக்குள் புதைய, வெறும் முண்டமாக இருந்து அவ்வனத்தில் வாழ்கின்ற முனிவர்களுக்கும் விலங்குகளுக்கும் தீங்கு செய்து வந்தான். அவனுக்கு ஒரு யோசனை தூரம் நீண்ட கரங்கள் இருந்தன. அவன் கையை நீட்டி மடக்குவானால் அவ்வனத்திலுள்ள முனிவர்களும் விலங்குகளும் அவன் வயிற்றுள் சென்று மாண்டு விடுவார்கள்.

இராமரும் இலட்சுமணரும் கவந்தனைக் கண்டு அதிசயம் அடைந்தார்கள். இராமர், "தம்பி ! நாம் இந்தப் புதத்தின் கையில் அகப்பட்டு கொண்டோம்.

என்னை விட்டுச் சீதையும் பிரிந்துவிட்டாள். இனி எனக்கு வாழ்வு வேண்டுமோ ? நீ இந்த இடரிலிருந்து தப்பித்துக்கொள்" என்று கூறினார்.

இலட்சுமணர் முன்னே செல்லவும், இராமர் அவரை முந்திச் செல்லவுமாக ஒருவரை ஒருவர் முந்திச் சென்றார்கள். கவந்தன் இராம லட்சுமணரைக் கண்டு கர்ஜனை செய்தான். இராமரும் இலட்சுமணரும் அவனுடைய இரண்டு கரங்களையும் வாளினால் வெட்டி வீழ்த்தினார்கள். கவந்தனுடைய உடம்பிலிருந்து ஓர் ஒளிமயமான உருவம் விண்ணிலே நின்று இராமரைத் துதி செய்தது.

"இராமச்சந்திர மூர்த்தி ! என் மாயப் பிறப்பை நீக்கித் தூய உடம்பினைத் தந்தனை. உனக்கு ஒரு கோடி வணக்கம்". இராமர் அவனைப் பார்த்து, "உன் வரலாறு யாது ?" என்று கேட்டார்.

"இராகவா ! நான் தனு வம்சத்தில் பிறந்தவன். ஒரு முனிவருடைய சாபத்தால் அரக்கனாயினேன். இந்திரன் வஜ்ஜிரத்தால் அடித்தால் தலை உடம்புக்குள் செருகியது, அதனால் கவந்தனானேன். உன் கருணையினால் நல்லுருப் பெற்றேன். இராமச்சந்திர மூர்த்தி ! உன் திருவடிக்குப் பலகோடி வணக்கம். எம்பெருமானே ! பரந்து விரிந்த இவ்வுலகத்தில் நீங்கள் இருவருமே சீதையைத் தேடிச் கண்டுபிடிக்க இயலாது. துணையின்றி ஒரு பெரிய காரியத்தை முடிக்க முடியாது. துணை இன்றியமையாதது. இனம் இனத்துடன் சேர வேண்டும். மதங்க வனத்தில் சுக்ரீவன் என்ற வானர வீரன் இருக்கின்றான். அவன் சூரிய குமாரன். சூரிய குலத்தில் உதித்த நீயும் அவனும் ஓர் இனமாகும். எந்த வகையில் என்றால் உன்னுடைய மனைவியை இராவணன் கவர்ந்து கொண்டான். சுக்ரீவன் மனைவியை வாலி கவர்ந்து கொண்டான். மனைவியை இழந்தவனுக்குத்தான் மனைவியை இழந்த கவலை தெரியும். கடையில் உண்டவனுக்குத்தான் கடையின் உணவினால் வருந் துன்பந் தெரியும். சுக்ரீவன் நற்குண சீலன். நீ வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு அவன் மனைவியை மீட்டுக் கொடுப்பாயாக. அவன் எழுபது வெள்ளம் வானரங்களுக்குத் தலைவன். அவன் சீதையைத் தேடவும், இராவண சம்மாரத்திற்கும் உதவி செய்வான்.

எனவே, நீ சீதையைத் தேடுகின்ற முயற்சியை விடுத்து சுக்ரீவனை அடைவாயாக என்று கூறித்தொழுது தன் உறைவிடம் சேர்ந்தான்.

## சபரி முக்தி

ராம லட்சுமணர் பல காதங்கள் மலையுங் காடுங் கடந்து, நடந்து பம்பா நதிக்குமேல் கரையிலுள்ள மதங்காஸ்ரமத்தை அடைந்தனர். அங்கு மதங்க முனிவர் தவம் செய்த ஆசிரமத்தைக் கண்டனர்.


சபரி என்ற நரை மூதாட்டி, இராம லட்சுமணரைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்தாள். ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அழுதாள். தொழுதாள்.

சபரி, மதங்க முனிவருடைய மாணவி. அவள் பல காலம் தவஞ்செய்து இராமரைக் காண வேண்டுமென்று காத்திருந்தாள். இராமருடைய வரவை முன்கூட்டியே யோகக் காட்சியால் கண்டு பலப்பல கனிகளைக் கடித்துச் சுவை பார்த்து, இராம லட்சுமணருக்குக் கனிகளைக் கொடுத்துச் விருந்து செய்தாள். இராமர், அவளது அன்புக்கு மிகவும் மகிழ்ந்து உள்ளம் நெகிழ்ந்து உருகினார்.

சபரி இராகவனை நோக்கி, "இராமா ! சூரிய குமாரராகிய சுக்கீவனைத் துணையாகக் கொண்டு, சீதா தேவியைத் தேடி அவளை அடைவாயாக !" என்றாள். இராம இலட்சுமணர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவள் முக்தியடைந்தாள்.

இராம லட்சுமணர் பம்பா நிதியை நோக்கிச் சென்றார்கள்.

## அநுமனின் அறிமுகம்



பம்பா நதி- இராமரும் இலட்சுமணரும் சபரி வாழ்ந்த மதங்க ஆசிரமத்தைவிட்டு, சீதையைத் தேடுகின்ற தன்மையை விடுத்துச் சுக்ரீவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டார்கள். சபரியினுடைய ஆலோசனைப்படி சுக்ரீவனைக் கண்டு அவனுடைய துணையுடன் சீதையைக் கண்டுபிடித்து அவளை யடையலாமென்று ரிசியமூக பர்வதத்தை அடைந்தார்கள்.

ரிஸ்யம் - மான்

மூகம் - ஊமை

அங்குள்ள மான்கள் நாம் இரைந்து ஓசையிட்டால் இங்குள்ள முனிவர்களின் தவநிலை கலையும் என்று கருதி, வாயிருந்தும் பேசாமல் ஊமைபோல் இருப்பதனால், அந்த மலை ரிசியமூகம் என்ற பெயரைப் பெற்றது.

அந்த மலைச்சாரலில் பம்பாநதி, ஞானிகள் திருவுள்ளம் போல் தெளிவாக ஓடிக் கொண்டிருந்தது. அந்த நதியில் செந்தாமரை மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசிக்கொண்டிருந்தன. அந்தச் சிவந்த தாமரை மலர்களில் அன்னப் பறவைகள் புகுந்தன. அக்காட்சி அன்னங்கள் இராமருடைய துயரத்தைப் பார்த்து, நாம் என் இனி வாழ வேண்டும் ? இவருடைய

துன்பத்தை நம்மால் களைய முடியவில்லையே ? இறந்து போவதே நல்லது என்று எண்ணிச் செந்தாமரையாகிய அக்னியில் வீழ்வனபோல் இருந்தது.

இராம இலட்சுமணர் பம்பா நதியில் அகமர்ஷணம் ( பாபத்தைக் கெடுக்கும் மந்திரம் ) மந்திரத்தை ஓதி நீராடி ஜபதபங்களைச் செய்து அதன் கரையில் தங்கினார்கள்.

இராமர், தம்பியை நோக்கி, "தம்பி ! சீதை இருந்தால் என்னுடன் சேர்ந்து இந்த நதியில் நீராடி மகிழ்வாள். அவள் என்ன துன்பத்தை அனுபவிக்கிறாளோ ? தம்பி ! அவள் என்னை நினைந்து வருந்துவாள்" என்று கூறினார்.

இலட்சுமணர், "அண்ணா ! சீதாதேவி தங்களை நினைக்க மாட்டார்" என்றார்.

இதைக் கேட்ட இராமர் அதிர்ச்சியடைந்தார்.

"தம்பி ! உன் சொல் விசித்திரமாக இருக்கின்றதே. கற்புடைய பெண்கள் கணவனைப் பிரிந்தபோது கணவனை நினைப்பார்களே, சீதை கற்புடையவளாயிற்றே. என்னை நினைக்காமல் இருப்பாளா ?"

"அண்ணா ! கற்புடைய பெண்கள் தன்னைப் பிரிந்திருக்கிற போது கணவனை நினைப்பார்கள். ஆனால், அண்ணி நினைக்கமாட்டார் என்றேன். அண்ணி மகா மகா மகா பதி விரதா சிரோன்மணி. அவர் கற்புக்கு அரசி. தங்களை மறந்தால்தானே நினைப்பார்கள். என் அண்ணி கணப்பொழுதும் தங்களை மறக்கவே மாட்டார்கள். ஆகவே, நினைக்க மாட்டார்கள் என்று சொன்னேன்."

இலட்சுமணருடைய பேசுந்திறத்தைக் கண்டு இராமர் வியப்பு அடைந்தார். இராமர் சுக்ரீவனைக் காணவேண்டுமே ! அவன் எங்கு இருக்கின்றானோ ? அவனை எப்படிக் காண்பது ? சீதாதேவி எங்கு உறைகின்றாளோ ? என்ன துன்பத்தை நுகர்கின்றாளோ ? அவளை மீண்டும் காண முடியாதோ ? என்னை நம்பி என்னைத் தொடர்ந்து வந்த மனைவியின் துயரத்தைப் போக்கும் ஆற்றல் இல்லாத எனக்கு இந்தக் கோலமும் இனி வேண்டுமோ ?

மனைவியின் துயரத்தைப் போக்காத இவனுக்கு வில் ஏன் ? என்று உலகம் பழிக்குமே. வில்லைச் சுமப்பதுடன் பழிச்சொல்லையும் சுமக்கின்றேனே.

ஒரு பெண்ணின் துயரத்தை அகற்ற மாட்டாத யான் உலக மக்களின் துயரத்தை எவ்வாறு மாற்றுவேன் ? என்று கூறி இராமர் புலம்பியழுதார். இலட்சுமணர் தேற்ற, ஒருவாறு தேறினார்.

சந்திரன் உதித்தான். சந்திர உதயத்தால் நிலம் குளிர்ந்தது, எங்கும் நலம் விளைந்தது. ஆனால், இராமருடைய உளம் குளிரவில்லை. மேலும் மேலும் வருந்தினார். இரவு முழுவதும் உறங்காமல் உள்ளம் உலைந்தார். தன் குலத்து மைந்தனுக்கு இந்தத் துன்பம் வந்ததே. நான் போய் அத்துயரை மாற்றுவேன் என்று வருவான் போல் ஆதித்தன் உதித்தான்.

இராமரும் இலட்சுமணரும் பம்பையில் விதிப்படி நீராடி, சூரியனுக்கு அர்க்கியங் கொடுத்தார்கள், தெய்வத்தை வணங்கினார்கள்.

எழுந்தவுடன் இறைவனை வணங்க வேண்டும். ஏன் வணங்க வேண்டும். நன்றிக் கடனுக்காக வணங்க வேண்டும். வேறு எந்த உயிர்களுக்கும் இல்லாத பகுத்தறிவாகிய ஆறாவது அறிவுடன் இந்த மனிதப் பிறவியை இறைவன் நமக்குத் தந்தான். அவன் கொடுத்தான் உடம்பால் அவனை வழிபட வேண்டும்.

எழுந்தவுடன் இறைவனை வணங்குவதை வடமொழியில் சந்தியாவந்தனம் என்று கூறுவார்கள். சந்தியாவந்தனம் என்பதற்குப் பொருள், நன்றாகத் தியானித்து வணங்குவது என்பதாகும். தமிழில் காலைக்கடன் என்று கூறுவார்கள். கடனைத் திரும்பிக் கொடுக்கவில்லையானால் பாவமாகும். இறைவன் தந்த உடம்பால் அவனை வழிபடவில்லையானால் நமக்கு நன்றி கொன்ற பாவம் வரும். சந்தியாவந்தனம் என்பதைக் காட்டிலும் காலைக்கடன் என்பது பொருட்செறிவு உள்ளதாகும்.

நடையினாலுயர் நாயகனாகிய இராமச்சந்திர மூர்த்தி வில்லை யெடுத்துக்கொண்டு சுக்ரீவனைத் தேடிக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

அநுமன் சந்திப்பு- அடங்காமையே ஒருவடிவாகிய வாலி தன் தம்பியாகிய சுக்ரீவனைப் பலமுறை கொல்லுவதற்கு முயன்றான். சுக்ரீவனுடைய மனைவியாகிய "ருமா" என்ற பெண்மணியைக் கவர்ந்து கொண்டான். இந்த ரிசயமூக மலைக்கு வாலி வருவானாயின் அவன் தலை ஆயிரம் துண்டாக வெடித்துவிடும். இது மதங்க முனிவருடைய சாபம். அந்தச் சாபத்துக்கு அஞ்சி வாலி அம்மலைக்கு வருவதில்லை. தமையனுடைய கொடுமைக்கு அஞ்சிய சுக்ரீவன் அநுமன் முதலிய முப்பத்திரண்டு வானர வீரருடன் அம்மலையில் வாழ்வானாயினான்.

சுக்ரீவன் தன்னைக் கொல்லும் பொருட்டு வாலியினால் அனுப்பப்பட்டு இவர்கள் வருகின்றார்களோ என்று இராம இலட்சுமணரைக் கண்டு அஞ்சினான், நடுங்கினான். மிகவும் ஒடுங்கினான். சிங்கத்தைக் கண்ட குறுநரிபோல் ஓடி ஒரு பாறையின் கீழ் ஒளிந்து கொண்டான். அவனுக்குத் துணை செய்கின்ற வானர வீரர்கள் அவனுக்கு முன்னரே சென்று ஒளிந்து கொண்டார்கள்.

ஒரு மன்னவன் தன் பரிவாரங்களுடன் கானகம் போனான். ஒரு புலி துரத்திக் கொண்டு வந்தது. அப்பரிவாரங்களில் ஒருவன் நீங்கள் புலிக்குப் பயப்பட வேண்டாம். நான் தரையில் படுத்துக் கொள்வேன் புலிக்குப் பயந்தவர்களெல்லாம் என் மேல் படுத்துக் கொள்ளுங்கள் என்றானாம். புலி மேலே இருப்பவனைத்தானே அடித்துக் கொல்லும் ? இதுபோல் இருந்தனர் சுக்ரீவனின் துணைவர்கள்.

இராம இலட்சுமணரைக் கண்டு அநுமன் அஞ்சவில்லை. அறிவுடையார் ஒன்றுக்கும் அஞ்சமாட்டார்கள். அஞ்சுவதில்லை, அஞ்ச வருவதுமில்லை என்பார் அப்பர்.

ஆகவே, அறிவுடையார் எதற்கும் அஞ்சமாட்டார்கள். ஆனால், அஞ்சாதவர்கள் எல்லாம் அறிவுடையவர்கள் அல்லர். பால் வெண்மையாக இருக்கும். ஆனால், வெண்மையாக இருப்பதெல்லாம் பால் ஆகா.

ஆஞ்சநேயர் சுக்ரீவனைப் பார்த்து, "நான் சென்று இங்கு வருகின்றவர்கள் யார் என்று அறிந்து வருவேன்" என்று கூறி விட்டு மரங்களில் மறைந்து இராம இலட்சுமணரைக் கூர்ந்து நோக்குவாராயினார்.

இவர்கள் தேவகுலத்துக்கே தலைவராக இருக்க வேண்டும். ஆனால், தேவருக்குத் தலைவர் பிரமன், திருமால், சிவன் என்ற மூவராயிற்றே. இவரகள் இருவராக இருக்கின்றார்கள். இவர்களை இன்னார் என்று எளிதாகக் கண்டுக்கொள்ள இயலாது. இவர்கள் எல்லாம் செய்ய வல்லவர்கள். இவர்களால் ஆகாத காரியம் ஒன்றும் இருக்க முடியாது. இவர்களுடைய பார்வையினால் ஏதோ ஒரு பொருளை நாடி வருவதாகத் தெரிகிறது. மிக உயர்ந்த பொருளைத் தேடி வருகின்றார்கள். தேவர்களுக்குக் கால் நிலம் தோயாது. இவர்களுக்குக் கால் நிலம் தோய்வதால் இவர்கள் தேவர்கள் அல்லர், மனிதர் களாகத்தான் இருக்க வேண்டும்.

தருமம், கருணை பெருந்தன்மை, மாண்பு, பண்பு முதலிய குணநலன்கள் அனைத்தும் ஒரு வடிவாக இவர்கள் காட்சி தருகின்றார்கள். இவர்கள் தம்மிடமிருந்த மிக்க அரிய பொருள் காணாமல் போக, அதனை இவர்கள் தேடி வருகின்றார்கள் என்பது இவர்கள் பார்வையினால் விளங்குகிறது.

இவர்களிடத்து இல்லாதது சினம் ஒன்றுதான். பொறுமையே ஒரு வடிவாக வந்த சாந்த சீலர்கள். இவர்களுடைய முகத்தில் அருள் வெள்ளம் வழிகின்றது. கண்களில் கருணை பொழிகின்றது. ஒழுக்கமும் பேராற்றலும் படைத்தவர்களாக இருக்கின்றார்கள். மன்மதனும் நாணக்கூடிய பேரழகு படைத்தவர்களாக இருக்கின்றார்கள். ஆ ! ஆ ! சிங்கம், புலி, கரடி காண்டாமிருகம் முதலிய விலங்குகள் அதன்தன் கன்றுகளைக் கண்டு காதல் செய்வது போல, கொடிய விலங்குகள் வால்களை அசைத்துக் கொண்டு இவர்களைக் கண்ட மாத்திரத்தில் விலங்குகள் கொடுமை மாறி அடிமையாக அன்பு செய்கின்றன. இவர்களின் பாதங்கள் மண்ணில் தோய்கின்ற பொழுது கல்லும் முள்ளும் மலர்களைப் போல் குழைந்து விடுகின்றன. இத்தகைய அதிசயம் நான் எங்குப் பார்க்க முடியும் ?

மக்களுக்குத் தீமை செய்யும் பேய்களும் இவர்களை கண்டு உள்ளம் உருகி நன்மை செய்கின்றன. வானளாவிய மரங்களும் இவர்களைக் கண்டு சாய்ந்து

சாய்ந்து தொழுகின்றன. இவர்கள் தங்கள் அருள் ஆற்றலால் சராசரங்களை எல்லாம் தன்வசப்படுத்துகின்றனர். மயில் முதல் பறவை யினங்கள் இவர்கள்மீது வெயில்படா வண்ணம் நீண்ட சிறகுகளை விரித்து நிழல் தருகின்றன. மேகங்கள் இவர்கள் மீது தண்ணீர்த் திவலைகளைச் சிந்திக் குளிர்ச்சியைத் தருகின்றன. அம்மம்மா ! இவர்கள் அருள் ஆற்றல்தான் என்னே ! என் உள்ளம் நீறாய் உருகின்றதோ !

இப்படி எண்ணி இராம இலட்சுமணருக்கு முன் சென்று அநுமன் அன்புடன் அஞ்சலி செய்து நின்றார்.

இராமர் அநுமனைப் பார்த்து, "நற்குணம் அமைந்த நம்பியே ! நீ யார் ?" என்று வினாவினார்.

அநுமன் கூறுகின்றார், "பயிர் தழைக்க வருகின்ற மஞ்சுபோல் உயிர்தழைக்க வந்த திருமேனியை உடையவரே ! பெண்களை உற்றுப்பார்க்காத, ஒழுக்கமுள்ள கண்களையுடையவரே ! ! சிறியேனுடைய தந்தை வாயுதேவன், என் தாய் அஞ்சனா தேவி, கருணையங்கடலே ! நான் இதோ ! இம்மலையில் வாழும் வானர வீரனாகிய சுக்ரீவனுடைய பணியாளன். தங்களை வரவேற்கும் பொருட்டு வந்திருக்கின்றேன். உங்கள் வரவு நல்வரவாகுக .. .." என்றார்.

இராமர், "ஐயனே ! அந்தச் சுக்ரீவனைத்தான் நாங்கள் தேடிக் கொண்டு வருகின்றோம். அந்தச் சுக்ரீவன் எங்கிருக்கின்றான். உடனே, அவனைக் காட்டு. நாங்கள் அவனைப் பார்க்க வேண்டும்" என்றார்.

அநுமார் சிந்திக்கின்றார். "இவர்கள் வாலியினால் அனுப்பப்பட்டுத் தன்னைக் கொல்ல வருகின்றார்களோ என்று அநுமானிக்கின்றார். இப்போது இவர்கள் சுக்ரீவனைத் தேடி வருவதாகச் சொல்கின்றார்கள். வாலியினால் அனுப்பப்பட்டு வந்திருப்பார்களாயின் இவர்கள் திருமுகத்திலே கோபக்குறி இருக்க வேண்டும். கொடுமை நிலவ வேண்டும். ஒருகால் சுக்ரீவனுடைய கருத்தின்படி இவர்கள் வாலியினால் அனுப்பப்பட்டுச் சுக்ரீவனைக் கொல்லத்தான் வந்தவர்களாயின் நாம் சுக்ரீவனைக் காட்டினால். இவர்கள்

சுக்ரீவனைக் கொன்று விடுவார்களாயின், அது பெருந்தீமையாக விளைந்துவிடுமே" என்று எண்ணினார்.

இராமரைப் பார்த்து "எம்பெருமானே ! பேராற்றலும் பெருங்கருணையும் படைத்த தாங்கள் சுக்ரீவனைத் தேடிக் கொண்டு வருவீர்களாயின் அவனும் அவன் குலமும் உய்யும். வாய்க்கால் மகாநதியை நோக்கிச் செல்லவேண்டும். மகாநதி வாய்க்காலை நோக்கிச் செல்லக்கூடாது. நீங்கள் மகாநதி. சுக்ரீவன் வாய்க்கால். நீங்கள் இங்கே இருங்கள். நான் சென்று என் தலைவனாகிய சுக்ரீவனை அழைத்துக் கொண்டு வருவேன்" என்று கூறி இராமருடைய திருமுகத்தை உற்று நோக்கினார்.

ஒரு வியாபாரி துணியெடுத்து, வாங்க வந்தவனுக்குக் காட்டி விலை கூறி அவன் முகத்தை உற்றுப் பார்ப்பதுபோல் இருந்தது இந்த நிகழ்ச்சி. இராமர் முகத்தில் எந்த மாறுபாடும் இல்லை. ஒரு சந்தன மரத்தை ஒடித்து இராமருக்கு முன் இட்டு அதில் அமருமாறு செய்தார். இவர்கள் யாரென்று உணர முடியவில்லையே என்றும், மிகவும் தகுதி வாய்ந்தவர்களை நீங்கள் யாரென்று கேட்பது முறையல்லவே என்று கருதினார்.

"பெருமானே ! என் தலைவனை நான் அழைத்து வருவேன். யார் அழைப்பதாக அவரிடம் கூற வேண்டும் ? தங்களை யாரென்று அவரிடத்தில் தெரிவிக்க வேண்டும் ? எனக்கு இதனைக் கட்டளையிடுங்கள்" என்று வணக்கத்துடன் கூறினார்.

இராமர் தங்களை யாரென்று அறிந்து கொள்ளும் பொருட்டு அநுமான் பேசும் இனிய நுண்ணிய சொற்களைக் அகமிக மகிழ்ந்தார்.

"தம்பி ! இலட்சுமணா ! இந்த வானரவீரன் கல்லாத கலைகளே இல்லை என்பது இவன் சொல்லாலே விளங்குகின்றது. இவன் சொல்லின் செல்வனாக விளங்குகிறான். இவன் கலைமகளை நாவில் வைத்திருக்கின்ற பிரமதேவனா ? அல்லது சிவபெருமானா ? நம்மை நேரடியாக யாரென்று கேளாமல் என் தலைவனுக்கு உங்களை யாரென்று சொல்லுவேன் என்று கேட்கின்ற சொல் திறம் மிகவும் பாராட்டுக்குரியது".

இலட்சுமணர், "அன்பனே ! சூரியகுலத் தோன்றலாகப் பத்து ரதங்களை வென்று உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆளுகின்ற தசரதச் சக்ரவர்த்தியின் திருமைந்தர் இவர். இராமர் என்றும் பெயரை உடையவர். சிறிய தாயாரின் சொல்லுக்கு இணங்கித் தன் அரசச் செல்வத்தைத் தன் தம்பியாகிய பரதனுக்கு வழங்கிவிட்டுத் தவம் புரியக் கானகம் வந்திருக்கின்றார். நான் இவருடைய பணியாளன்."

"தம்பி என்னும் படிக்கு அன்று, அடியாரின் ஏகுதி" என்று சுமத்திரை இலட்சுமணரை நோக்கிக் கூறியிருப்பதனால் இங்கு இலட்சுமணர் தம்மைத் தம்பி என்று சொல்லிக் கொள்ளாமல் அடியவன் என்று அடக்கத்துடன் கூறினார். ஆனால், மாருதி இராமருடைய தம்பி இலட்சுமணர் என்று தெரிந்து கொண்டார்.

மாருதி தாம்போய், தம் தலைவனை அழைத்து வருவதாகக் கூறிவிட்டுச் சுக்ரீவனிடம் வந்தார். தனக்கு என்ன இடர் விளையுமோ என்று துடிதுடித்திருக்கின்ற சுக்ரீவனிடம போய், வாலிக்குக் காலன் வந்திருக்கின்றார் என்று கூறினார். சுக்ரீவன் வாலிக்கு அஞ்சி ஒளிந்து அங்கு வாழுகின்றான். அவனுக்கு இராமன் வந்தார் என்று கூறினால் அவனது அச்சம் அகலாது.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

என்ற திருக்குறளின் படி சுக்ரீவனுக்கு யாரிடம் அச்சம் அகாலதிருக்கின்றதோ அவனுக்கு எமன் வந்தான் என்று கூறும் திறம் மிகமிக உயர்வானது.

"சுக்ரீவா ! உன்னுடைய துன்பம் நீங்கி இன்பம் விளையப் போகின்றது. இராமர் வாலியைக் கொன்று உனக்க வாழ்வு தருவார். நராயணராகிய பரம்பொருளே இராமராக ஆதரித்திருக்கின்றார். நீதி நிறைந்தவர். விசவாமித்திரர் தந்த அளவில்லாத தெய்வப் படைக்கலன்கள் உடையவர். தாடகையையும் சபாகுவையும் ஒரே பாணத்தால் வதைத்தவர். அகலிகைக்குக் கல்லுரு அகற்றி நல்லுரு தந்தவர். அளவில்லாத கற்புடைய சிறிய தாயராகிய கைகேயியின் கட்டளைக்கிணங்கித் தன் அரச பதவியைத் தம்பிக்கு ஈந்தவர். பரசுராமனை ஒரு விநாடியில் வென்றவர். விராதனைக் கொன்றவர்,

அரனிடம் வரம் பெற்ற கரன் முதலிய அரக்கர்களை எளிதாகக் கொன்றவர். எனவே, இராமருடைய தொடர்பினால் உனக்கு வாழ்வும் வளமும் உண்டாகும்" என்று அநுமார் கூறினார்.

## அண்ணியின் அணிகலன்கள்

சுக்ரீவன் தனது முதலமைச்சராகிய அநுமனுடைய அமுத வசனங்களைக் கேட்டு அக மிக மகிழ்ந்தான். தொலைவில் நின்று பகவானை உற்ற நோக்கினான். அவருடைய திருமேனியையும் திருவருட்பொலிவையும் கண்டு அப்படியே நிலைத்து நின்றுவிட்டான். கண்கள் இமை கொட்டாமல் கண்டு களித்தான். பிரமதேவன் படைத்த உலகங்களிலே உள்ள அத்தனை ஆன்மாக்களும் செய்யும் புண்ணியம் முழுவதும் திரண்டு இரண்டு வடிவங்களாக வந்திருக்கின்றன போலும் என்று எண்ணி இறும்பூதடைந்தான்.

பெருமானை அணுகி அவரை அஞ்சலி செய்தான். இராமச்சந்திரமூர்த்தி அவனைத் தழுவி அக மகிழ்ந்தார். இராமனும் சுக்ரீவனும் இருந்த காட்சி, முன் செய்த தவமும் முயற்சியும் ஒருங்கு இணைந்ததுபோல் இருந்தது. இராமர் சூரிய குலத்து மன்னர். இவன் சூரிய குமாரன். இனம் இனத்தோடு சேர்ந்தது அன்றியும் சுக்ரீவன் மனைவியை வாலி கவரந்துகொண்டான். இராம பிரான் மனைவியை இராவணன் கவர்ந்துகொண்டான். மனைவியைப் பிரிந்து வாழ்கின்றவர்களுக்குத்தான் மனைவியைப் பிரிந்த கவலை தெியும். ஆதலால், இந்த இருவரும் ஒன்றுபட்டிருந்தனர்.

சுக்ரீவன் இராமரை நோக்கி, "கருணைக்கடலே ! தங்களை நான் துணையாகப் பெற்றேன். நான் பெருந்தவம் செய்திருக்கின்றேன். ஆதலால், தேவரீருடைய துணை எனக்குக் கிடைத்தது. இந்த வகையில் என்னைப்போல் தவம் செய்தவர் எவரும் இல்லை" என்றான்.

இராமர், "அன்பனே ! மதங்காசிரமத்தில் சபரி என்ற சகோதரி உன்னுடைய குணநலங்களை எனக்கு உரைத்து, உன்னையடையுமாறு கூறினாள். நான் உன்னை நாடி வந்திருக்கின்றேன்" என்றார்.

சுக்ரீவன், "ஐயனே ! என் அண்ணனாகிய வாலி குற்றஞ் செய்யாத என்னை அடித்து, உதைத்து நொறுக்கி, ஓடஓட விரட்டி, என்னைத் துன்புறுத்திக் கொல்ல முயற்சி செய்தான். இம்மலைக்கு வந்தால் என் அண்ணன் தலை ஆயிரம் துண்டாக வெடிக்கும். இது மதங்க முனிவரின் சாபம். ஆதலால், இம்மலையில் சுகம் இன்றி வாழுகின்றேன். என்னைக் காப்பது தங்கள் கடன்" என்றான்.

இராமச்சந்திர மூர்த்தி அவனைக் கட்டித்தழுவி, "சுக்ரீவா ! இன்று முதல் நீ எனக்கு தம்பி, தசரதச் சக்ரவர்த்திக்கு ஆறு புதல்வர்கள். உனக்கு உற்றவர் எனக்கு உற்றார். உனக்கு பகைவர்கள் எனக்குப் பகைவர்கள் உனக்குள்ள இன்ப துன்பங்கள் எனக்கும் உள்ளனவானும். இது உண்மை" என்று கூறி ஆறுதல் செய்தார்.

இவ்வாறு இராமர் சுக்ரீவனுக்கு அபயந் தந்தவுடன் வானவர் மலர்மழை பொழிந்தார்கள். அநுமார் புளகாங்கிதம் அடைந்தார். வாநர வீரர்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தார்கள். எல்லாரும் சுக்ரீவன் இருக்கும் குகைக்குச் சென்றார்கள்.

சுக்ரீவன் தன் இருப்பிடத்துக்கு வந்த இராமருக்கு ஆசனந்தந்து அடி வணங்கி, பாக்கு மடலில் கொம்புத் தேனைவிட்டு மா, பலா, வாழை, முதலிய கனிகளைத் திருத்தி எம்பெருமானுக்கு உவகையுடன் தந்து உண்பித்தான்.

இராமர் எண்ணுகின்றார். இல்லற நெறியில் மனைவியோடு வாழ்கின்றவன் விருந்தினருக்கு மனைவியைக் கொண்டு உணவு படைக்க வேண்டும். அதுதான் விதி. மனைவி இருக்க ஆண்கள் படைப்பது விதியாகாது. அங்கே சுக்ரீவனின் மனைவி, உணவு படைக்கவில்லையே என்று கருதி, "தம்பி ! மனை வாழ்வுக்குத் துணைசெய்யும் மனைவியை நீயும் பிரிந்திருக்கின்றனையோ ?" என்று கேட்டார்.

இராமருடைய இன்னுரையைக் கேட்ட சுக்ரீவன் கண் கலங்கி நின்றான். சத்திய வசனத்தையுடைய அநுமார் கூறு வாராயினார் !

"எம்பெருமானே ! வானுலகில் நிகழ்ந்த ஒரு விழாவில் ஆதித்தனுடைய தேர்ப்பாகனாகிய அருணபகவான் பெண் குரங்கா வடிவெடுத்தனன். அப்பொழுது அப்பெண் குரங்கை இந்திரன் மருவிப் பிறந்தவன் வாலி. அப்பெண் குரங்கை ஆதித்தன் மருவிப் பிறந்தவன் சுக்ரீவன். வாலியும் சுக்ரீவனும் சகோதரர்களாய் எழுபது வெள்ளம் வாநர சேனைகளுடன் கிட்கிந்தையை அரசு புரிந்து வந்தார்கள். வாலியின் மனைவி தாரை. சுக்ரீவன் மனைவி ருமாதேவி.

திருமாலின் அம்சமாகிய உபேந்திரன் அங்கதனாக வந்து பிறந்தான். வாலி அளவில்லாத வலிமையை உடையவன். தன்னை எதிர்த்துப் போர் புரிபவரின் வலிமையில் பாதி வலிமை அவன்பால் எய்தும். இது சிவபெருமான் கொடுத்த வரம். தேவரும் அசுரர்களும் பாற்கடலைப் பலநாள் கடைந்ததும் அமிர்தம் தோன்றாமையால் வருந்தினார்கள். சிவபூஜை செய்யும் பொருட்டு அங்கே சென்ற வாலி ஒருவனே பாற்கடலைக் கடைந்து கடைந்து அமிர்தம் தோன்றுமாறு செய்தான்.

ஆதிசேஷன் கிடந்து தாங்கும் உலகை, இவன் நடந்து தாங்குவான். அவனுடைய மார்பில் முருகனுடைய வேலும் செல்லாது, அவனுடைய வால் செல்லாத இடத்தில் மட்டும், இராவணனின் செங்கோல் செல்லும்..

ஒரு சமயம் மாயாவி என்ற கொடிய அரக்கன் வாலியிடம் போர் செய்து தோற்று ஒரு பிலத்துவாரத்தில் ஒளிந்து கொண்டான். அவனைத் துரத்திக் கொண்டு வாலியும் பிலத்துவாரத்தின் உள்ளே சென்றான். பிலத்துவாரத்தினுள் வாலியும் மாயாவியும் இருபத்தெட்டு மாதங்கள் போர் புரிந்தார்கள். அண்ணனுக்குத் துணை செய்யச் சுக்ரீவனும் பிலத்துவாரத்துக்குள் நுழைய முயன்றான். வாநர வீரர்கள் தடுத்து நிறுத்தினார்கள். மாயாவியை வாலி கொன்றான். அவனது உதிரம் பிலத்தின் முகப்பில் கொப்பளித்து வந்தது. அதைக் கண்டு அஞ்சிய வாநரர்கள், சிறு சிறு குன்றுகளைக் கொண்டு வந்து பிலத்துவார முகப்பை அடைத்துச் சுக்ரீவனைக் கொண்டுபோய் அரசனாக முடி சூட்டினார்கள். சுக்ரீவன் பலமுறை மறுத்தும் வாநரர்கள் கேட்கவில்லை.

வாலி மாயாவியை வதைத்துவிட்டு முகப்பில் அடைத்திருந்த குன்றுகளைக் காலால் உதைத்துத் துகளாக்கி, இதைச் செய்தவன் சுக்ரீவன் என்று கருதி,

அவனை அடித்து இடர்ப்படுத்தினான். சுக்ரீவன் வாலியின் காலில் வீழ்ந்து அண்ணா ! என்னைக் கோபிக்காதே. இதை நான் செய்தேனில்லை. தாங்கள் இருக்க நான் அரசு புரிவேனா ? தலையிருக்க வால் ஆடுமா ? நான் உனக்கு என்றும் அடிமை என்று கூறியும் வாலி சினந்தணிந்தானில்லை.

எட்டுத் திக்குகளிலும் உதிரம் சிந்த விரட்டி விரட்டி அடித்தான். இம்மலைக்கு வந்து உயிர் தப்பினான்.

சுக்ரீவனுடைய மனைவி ருமாதேவியையும் வாலி தனக்கு மனைவியாக்கிக் களங்கப்படுத்திக் கொண்டான்."

தம்பிக்குத் தன் அரசைக் கொடுத்த தயாநிதியாகிய இராமர் இதனை கேட்டுப் பொறுப்பாரோ ? அவரது கண்கள் சிவந்தன. மணியதரம் துடித்தது.

"சுக்ரீவா ! வாலி இருக்குமிடம் காட்டு. அவனைக் கொன்று உனக்கு முடி சூட்டுவேன்" என்று கூறினார்.

வாலியை இராமபிரானால் கொல்ல முடியுமா என்று சுக்ரீவன் ஐயுற்றான். அநுமார் சுக்ரீவனைத் தனியாக அழைத்துக் கொண்டுபோய், "மன்னவனே ! அளவில்லாத வலிமையுடைய வாலியை இராமர் கொல்லக் கடவரோ என்று நீ சந்தேகப்படுகின்றனை. வானளாவிய மராமரங்களை இராமருடைய கணை தொளைக்குமானால் வாலியின் மார்பையும் துளைக்கும். நாம் இதனைச் சோதித்து அறியலாம்" என்று கூறினார்.

இருவரும் சேர்ந்து போகின்ற வழியில் வானளாவிய ஏழு மரங்கள் நின்றன. கல்லினும் இரும்பினும் வலியதாக இருந்தன.

சுக்ரீவன் இராமரை நோக்கி, இந்த மரங்களைத் தொளைக்க இயலுமோ ? என்று வினவினான். இராமர், நமது ஆற்றலை இவன் சோதிக்க எண்ணுகிறான் என்று எண்ணிக் கோதண்டத்தை எடுத்த எட்டுச்திசையும் செவிடுபட நாணொலி உண்டாக்கினார். அதைக்கேட்டு வாநரங்களும் வானவர்களும் எட்டுத் திக்கிலும் ஓடி ஒளிந்தார்கள். இலட்சுமணர்

ஒருவர்தான் அஞ்சாமல் நின்றார். மற்றவர்கள் உடலும் குடலும் நடுங்க ஓடினார்கள்.

இரகுநாதர் சிறந்த பாணத்தை ஏவினார். அது ஏழு மரங்களையும் துளைக்க, அந்த ஏழு மரங்களும் வேரோடு வீழ்ந்தன. ஏழு என்ற எண்ணிக்கையுடைய ஏழு முனிவர்களும், ஏழு கடல்களும், ஏழு மாதாக்களும், ஏழு மேகங்களும், ஏழு உலகங்களுடம் ஏழு மலைகளும், ஏழு குதிரைகளும் அஞ்சி ஏழு என்ற எண்ணிக்கையில் இராமர் பாணம் தொளைக்குமோ என்று நடுங்கி நின்றன.

இதைக்கண்ட சுக்ரீவன், ஒரு மரத்தைத் தொளைப்பதே அரிது. ஒரே பாணத்தால் ஏழு மரங்களையும் தொளைத்தார் என்றால்.. . இது மிகவும் பாராட்டுக்குரியது. இந்த மரங்களைத் தொளைத்து கணை வாலியின் மார்பையும் தொளைக்கும் என்று ஐயம் தீர்ந்தான். இராமரை துதி செய்தான்.

## துந்துபி

பின்னர் அவர்கள் போகிற வழியில் துந்துபி என்ற எலும்பு மலைபோல் கிடந்தது. இராமர், "சுக்ரீவா ! இது என்ன எலும்பு ?" என்று கேட்டார்.

சுக்ரீவன், "ஐயனே ! துந்துபி என்ற கொடிய அரக்கன் மலைபோன்ற கரிய பெரிய வடிவை உடையவன், வாலியிடம் போருக்கு வந்தான். வாலி அவனுடன் கடும்போர் புரிந்து அவனைக் கொன்றான். அவனடைய உதிரம் எங்கும் சிந்தின அவனுடைய எலும்பே இது" என்றான்.

இராமர் இலட்சுமணரைப் பார்த்து, "தம்பி ! நீ இதனை அகற்று" என்றார்.

இலட்சுமணர் கால் பெருவிரல் உந்தினார். அந்தத் துந்துபியின் எலும்பு பிரமலோகம் வரை சென்று மீண்டும் மண்ணுலகில் வீழ்ந்தது. சுக்ரீவன் இலட்சுமணருடைய பேராற்றலைக் கண்டு. இவர் இராமபிரானுக்கு இளையான், ஆற்றில் இளையான்.. . என்று மதித்து துதித்து மகிழ்ந்தான்.

## அணிகலன் காணுதல்

இராமபிரான் தம்முடைய அன்பர்களுடன் ஒரு சோலையில் அமைதியாக அமர்ந்தார். அப்பொழுது சுக்ரீவன் இரகு நாயகனை வணங்கி, "ஐயனே ! நாங்கள் இந்த மலையின் உச்சியில் ஒரு சமயம் இருக்கும் பொழுது இராவணன் ஒரு பெண்மணியைக் கவர்ந்து செல்வதைக் கண்டோம். அந்தப் பெண்மணி நாங்கள் தூதுவர்களாகத் தங்களைச் சந்திப்போம் என்று கருதியோ, யாதோ தன் அணிகலன்களைக் கழற்றி கண்ணீர்த் துளிகளோடு எங்களை நோக்கி விட்டெறிந்தாள். அந்த அணிகலன்களை நாங்கள் பாதுகாவலாக வைத்திருக்கின்றோம். எம்பெருமானே ! அதனைக் கொண்டு வந்து காட்டுவேன். அது அம்மையின் அணிகலன்களா என்று பாருங்கள்" என்று கூறிச், சீதாதேவியின் அணிகலன்களைக் கொண்டுவந்து பெருமான் திருமுன் வைத்தான்.

இராமர் அந்த அணிகலன் பொதியை அவிழ்த்துக் கண்ணுற்றார். அவையனைத்தும் தேவியின் அணிகலன்கள். இவை அத்திரி முனிவரின் அருந்தவப் பத்தினியாகிய அநுசூயை தேவிக்கு தந்தவையாகும்.

இராமர் அவற்றைக் கண்டு கண்ணீர் வடித்தார், உள்ளம் துடித்தார்.

"தம்பீ ! இலட்சுமணா இந்தத் தலையில் அணியும் நவரத்னப் பதக்கம் உன் அண்ணியினுடைதுதானே பார் ?"

"அண்ணா, இது எனக்குத் தெரியவில்லை"

"தம்பீ ! இந்தத் தோடு உன் அண்ணியனுடையதுதானே ?"

"தெரியவில்லை அண்ணா"

"தம்பீ ! இந்த மூக்குத்தி உன் அண்ணியினுடையதுதானே ?"

"தெரியவில்லை அண்ணா"

"தம்பீ ! இந்தக் கண்டமாலை உன் அண்ணியினுடையது தானே ?"

"தெரியவில்லை அண்ணா "

"தம்பீ ! இந்த வளையல்கள் உன் அண்ணியினுடையவை தானே !"

"தெரியவில்லை அண்ணா "

"தம்பீ ! இந்த ஒட்டியாணம் உன் அண்ணியினுடையது தானே !"

"தெரியவில்லை அண்ணா "

"தம்பீ ! இலட்சுமணா ! இந்தக் காலாழி உன் அண்ணியினுடையதுதானே ? "

"அண்ணா ! இது என் அண்ணியினுடையதுதான் .. .. சந்தேகமில்லை" என்றார்.

"தம்பீ ! இத்தனை அணிகலன்களுக்கும் அடையாளம் தெரியவில்லையே ? இந்த ஒன்றுக்கு மட்டும் எப்படி அடையாளம் தெரிந்தது ?" என்று கேட்டார்.

"அண்ணா ! இந்தப் பதினான்கு ஆண்டுகளிலும் தேவரீருக்கும் என் தாய் சீதாதேவிக்கும் பாத பூஜை செய்யும் பொழுது பாதந் தவிர வேறு திருமேனி அங்கங்களைப் பார்த்தேனில்லை. அதனால், ஏனைய அணிகலன்களுக்கும் அடையாளந் தெரியவில்லை. காலாழிக்கு மட்டும் அடையாளந் தெரிந்தது. "

இந்த வசனத்தைச் சுக்ரீவன் முதலியோர் கேட்டு, இவரல்லவா தம்பி, இப்படி இருந்தால்தானே இருக்கலாம் நம்பி, இவர் நற்குண நம்பி. ஒழுக்கத்தின் தங்கக் கம்பி என்று பாராட்டினார்கள்.

இராமர், "ஆதித்தன் மகனே ! அருமை நண்பனே ! சீதை துன்பத்தால் துள்ளித் துடித்து, இந்த நகைகளை முடித்து உங்கள் பால் எறிந்தனளே, இதைவிடத் துன்பம் வேறு எனக்கு உண்டா ? கற்புடைய பெண்கள் கணவனை இழந்தபின் அணிகலன்களைக் கழற்றி எறிவார்கள். நான் இருக்கவே சீதை அணிகலன்களைக் கழற்றி எறிந்தனளே. இதனால், நான்

மாண்டேனா, இதனால் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் உள்ளம் உலைகின்றது. "

"சுக்ரீவா ! என்னுடைய முன்னோர்களாகிய சகரர்கள் கடலைத் தோண்டினார்கள். அதனால், அது சாகரம் என்று பேர் பெற்றது.

என் குலத்து மூதாதையாராகிய பகீரதன் விண்ணிலிருந்து கங்கா நதியை மண்ணுலகிற்குக் கொண்டு வந்தார். கங்கை பாகீரதி என்று பேர் பெற்றாள்.

என் தந்தையாகிய தசரதர் சம்பராசூரனைக் கொன்று இந்திரனுக்குப் பொன்னுலகை வழங்கினார்.

இத்தகைய அரிய பெரிய ஆதித்தன் குலத்தில் பிறந்த நான் தாலி கட்டிய மனைவியின் துன்பத்தைக் களையாமல் வில்லையும் பழிச் சொல்லையும் தூக்கிக் கொண்டு அலைகின்றேன். என்று பலவாறாகப் புலம்பி அழுதார்.

அநுமர் எம்பெருமானைத் தொழுது நீங்கள் வருந்தாதீர்கள். வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு முடிசூட்டி விட்டால், எழுது வெள்ளம் வாநரங்களும் நம் வசமாகும். நாம் சீதையைத் தேடி இராவணனைக் கொன்று, சீதையைச் சிறை மீட்கலாம். வாலி வதம் நாளை செய்யலாம் என்றார் எல்லாரும் இளைப்பாறினார்கள்.

## வாலி முத்தி

இராமர் அநுமானுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டார். எல்லாரும் வாலி வாழ்கின்ற கிஷ்கிந்தையை அடைந்தார்கள். ஒரு சோலையில் தங்கினார்கள். இராமபிரான், "தம்பீ ! சுக்ரீவா ! நீ வாலியை அழைத்துப் போர் செய். நான் வாலியை வதைப்பேன்.. ." என்றார். வாலியைப் போருக்கு அழைக்கின்ற ஆற்றலும் தைரியமும் சுக்ரீவனுக்கு இல்லை. வாலி மகா மேருகிரி போன்றவன். சுக்ரீவன் கூழாங்கல் போன்றவன். வாலியின் வீரம் எங்கே ? சுக்ரீவன் வீரம் எங்கே ? இராமபிரானுடைய கட்டளையைத் தட்ட முடியாதவனாகி. மிகவும் முயற்சி செய்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

"அடா வாலீ ! அடா வாலீ !" என்று உரத்த குரலால் அழைத்தான். அப்படி அழைத்தது, விலங்கு அரசாகிய ஒரு சிங்கத்தை, குட்டி யானை போருக்கு அழைத்ததுபோல் இருந்தது. அதிகாலை, வாலி தன் மனைவி தாரையுடன் பஞ்சாணையில் படுத்திருந்தான். வாலிக்கு அது சுக்ரீவனுடைய குரல் என்று தெரியவில்லை. நீண்ட காலத்துக்குப்பின் அவனுடைய குரலைக் கேட்கின்றான்.

இது சுக்ரீவன் குரலா ? என் பேரை சொல்லிப் போருக்கு அழைக்கும் ஆற்றல் அவனுக்கு ஏது ? ஆனையைப் பூனை எதிர்க்குமா ? என்று எண்ணினான்.

வந்தேன், வந்தேன் என்று முழங்கி நரசிம்மம்போல் எழுந்தான். அந்த ஓசை இந்திரன் திசைமுதல் எட்டுத் திசைகளும் கேட்டன.

உடுக்குலங்கள் உதிர்ந்தன. குலமலைகள் அசைந்தன. அவனுடைய கோபக்கனலால் ஏழு கடல்களும் கொந்தளித்தன. வீராவேசத்துடன் எழுந்தான்.

அப்பொழுது வாலியின் மனைவியாகிய தாரை அவனைத் தடுத்தாள். "என் இன்னுயிர்த் துணைவரே ! தாங்கள் தங்கள் தம்பியுடன் போர் புரியப் போக வேண்டாம். சுக்ரீவனுக்குத் துணையாக இராமச்சந்திரர் வந்திருப்பதாக என் இனிய அன்பர்கள் கூறினார்கள். இராமபிரான் சமானம் இல்லாதவர். அவரை வெல்ல முடியாது" என்றாள்.

வாலி, "பெண்ணரசே ! பெண் புத்தி பின்புத்தி என்ற பழமொழியின் படி பேசுகின்றனை. இராமபிரான் தரும மூர்த்தி தருமம் தன்னைத்தானே அழிக்குமா ? அந்த நல்லற மூர்த்தி குரங்குடன் கூட்டுச் சேர்வாரா ? மாற்றாந்தாய் கூற, தனது சாம்ராஜ்யத்தைத் தம்பிக்கு வழங்கிய குணப்பெருங்குன்றம் அவருடைய அருமையும் பெருமையும் தெரியாது பேசுகின்றாய். என்னைத் தடுக்காதே, விலகு" என்று கூறிச் சுக்ரீவனை யணுகிப் போர் புரிந்தான்.

வாலியும் சுக்ரீவனும் வீர உணர்ச்சியுடன் போர் புரிகின்ற திறத்தைக் கண்டு இராமர் வியந்தார். "தம்பி லட்சுமணா ! இந்த வாநர வீரனாகிய சுக்ரீவனுடைய போர் திறத்தை பார்த்தாயா ?" என்றார்.

"அண்ணா ! உடன் பிறந்த அண்ணன் தெய்வம் போன்றவன். தமையனுடன் போர் புரிகின்ற இவனுடைய பண்பு உயர்வு அன்று" என்றார் லட்சுமணர்.

"தம்பீ ! உடன் பிறந்த தம்பியரெல்லாம் பண்புடன் இருந்தால் பரதனுக்குப் புகழ் உண்டாகுமா ?" என்றார் ராமர்.

வாலியும் சுக்ரீவனும் மண்ணிலும் விண்ணிலும் பாய்ந்து போர் புரிந்தார்கள். அடிப்பார், கடிப்பார், கால்களால் உதைத்தும் மார்பினால் இடித்தும் தாக்கினார்கள். வாலியிடம் நன்கு அடிப்பட்ட சுக்ரீவன் உதிரம் கக்கியவனாய் இராமரிடம் வந்து வணங்கினான். "கருணையே ஒருவடிவாய பரம்பொருளே ! நான் என்ன குற்றம் புரிந்தேன் ? வாலியிடம் என்னை அடிபடச் செய்துவிட்டுச் சும்மா இருந்தீரே !" என்று அழுது முறையிட்டான்.

இராமர், "அன்பனே ! உனக்கும் வாலிக்கும் வேற்றுமை தெரியவில்லை. அதனால், பாணம் தொடுக்கவில்லை. இந்தா ! இந்தக் கொடிப் பூமாலையை அணிந்து போருக்குப் போ. இதுவே உனக்கு வெற்றிமாலை. இந்த மாலையினால் அடையாளந் தெரிந்து வாலியை வதை செய்வேன்" என்று மலர் மாலையைச் சூட்டியனுப்பினார்.

சுக்ரீவன் மீண்டும் வந்து வாலியுடன் போர் புரிந்தான். வாலி மிகப் பெருஞ் சீற்றமடைந்தான். சுக்ரீவனுடைய தொடையிலும் கழுத்திலும் கைவைத்துப்பற்றி, மண் மீது அடித்துக் கொல்ல அவனைத் தலை கீழாகத் தூக்கினான்.

## இராமர் கணை தொடுத்தல்



இராமச்சந்திரமூர்த்தி அவனுடைய மார்பில் கணையைத் தொடுத்தார். அந்த அம்பு வாலியின் மார்பைத் தொளைத்தது. மகாமேருகிரி வேருடன் வீழ்ந்தது போல் வாலி மண்ணில் வீழ்ந்தான். அந்த அம்பு ஊடுருவிப் போகா வண்ணம் கரங்களாலும், வாலினாலும் பற்றித் தடுத்தான். வாலியின் வீரச்செயலைக் கண்டு கூற்றுவனும் மெச்சித் தலையசைத்தான். விண்ணோரும் வியந்தார்கள். விழுந்த வாலி, எழுந்து "உலகங்களை அழிப்பேன் என்று எண்ணினான், என்மீது கணை தொடுத்தார் யாவர் ? தேவரோ ? என ஐயுற்றான், தேவர்க்கு இந்த ஆற்றல் உளதோ ?" என்று பலவாறு எண்ணினான். இராம சரத்தைப் பின்னுற ஈர்த்தான். அவனுடைய மார்பில் அருவிபோல உதிரம் பெருகியது. அதனைக் கண்ட சுக்ரீவன் உடன் பிறந்த பாசத்தால் பெரிதும் உருகி "அண்ணா" என்று கதறி நிலத்தில் வீழ்ந்தான்.

வாலி இராம சரத்தை உற்று நோக்கினான், ராமா என்ற மந்திரம் உலகம் அனைத்துக்கும் மூல மந்திரமாகும். ரா என்ற எழுத்து நுனி நா மேல் அண்ணத்தை வருடுவதால் தோன்றுவது.

"அண்ண நுனி நா வருட ரழ வரும்" என்பது நன்னூல்.

மனத்தாலே, வாக்காலே, காயத்தாலே செய்த பாவங்களை ரா என்ற எழுத்து வெளியே விரட்டியடித்து விலக்குகின்றது. ம் என்ற எழுத்து இரு இதழ்களும் மூடுவதால் தோன்றுகிறது.

மீ கீழ் இதழுறப் பம்மப் பிறக்கும் என்பது நன்னூல்.

ம் என்ற எழுத்து வெளியே சென்ற பாவத்தை மீண்டும் உள்ளே புகாதபடி தடுத்து நிறுத்துகின்றது. இந்த ராமா என்ற மந்திரம் அநாதியே உண்டு.

தசரத ராஜகுமாருக்கு ராமா என்ற பேர் சூட்டினார்கள். இந்த அயோத்தியில் வாழ்ந்த தசரத ராஜகுமாரர் பிறப்பதற்கு 21 தலைமுறைக்கு முன் இருந்தவர் ரிசீக முனிவர். இவருடைய மகன் ஜமதக்கினி. இந்த ஜமதக்கினி முனிவருக்கு ஐந்து புதல்வர்கள். இதில் கடைசி மகனுக்கு ராமன் என்று பேர் இட்டார்கள். இந்த இராமன் தவஞ்செய்து சிவபெருமானிடம் பரசு என்ற ஆயுதம் பெற்றார். அதனால், பரசுராமன் என்று பேர் பெற்றார். ஆதலால், ராமா என்ற மந்திரம் மிகவும் தொன்மையானது. ஆன்மாக்களுக்கு நன்மை பயப்பது.

இக்காலத்தில் ஒரு தலைமுறை என்பது 100 வருடங்களாகும்.. அந்தக் காலத்தில் 5000 ஆண்டு 6000 ஆண்டுகளாகும். துசரதர் அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசு புரிந்தார் என்பதனால் அறிக. மும்மை சால் உலகம் என்றது "அவன் அவள் அது எனும் அவைமூ வினமையின்" என்று வரும் சிவஞான போத சூத்திரத்தைக் குறிக்கும்.

"இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை" என்ற சொற்றொடர் மிக உயர்வானது.

தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, நடப்பன, மனிதர், தேவர் என்ற ஏழுவகையான பிறவி நோய்க்கு இது மருந்தாகித் துணை புரிகின்றது.

வாலி இம்மந்திரத்தை ஏற்கனவே உள்ளத்தில் கண்டிருந்தான். இப்போது கண்களில் கண்டான்.

தன் மார்பைத் துளைத்து இராமபாணம் என்று தெரிந்த வாலி பெரிதும் நாணினான். திரிபுரம் எரிந்த விரிசடைக் கடவுள் போலச் சிரித்தான். அம்பு வந்த திசையைப் பார்த்தான். அரச நீதியை இராமர் அழித்து விட்டார் என்று கூறுகின்ற வாலியின் முன்னே அரச நீதியைக் காக்கவந்த காகுத்தன் காட்சியிளித்தார்.

இராமரைப் பார்த்துப் பெருஞ்சீற்றத்துடன் வாலி பேசுகிறான். "ராகவா ! மனுக்குலத்தில் மூத்தவனுக்குத்தான் அரசுரிமை. இது வழிவழியாக வந்த மரபு.. . இந்த மரபைக் காக்க வேண்டும் என்றால் கைகேயியிக்குத் தந்த வாய்மை அழிகின்றது. இந்த வாய்மையைக் காக்க வேண்டுமானால் மரபு அழிகின்றது. ஆகவே, வாய்மையையும், மரபையும் காக்கத் தன் இன்னுயிரை வழங்கிய வள்ளலாகிய தயரத மாமன்னவனுடைய மைந்தனா நீ ?"

இராமா ! உத்தம குணக்குன்றாகிய பரதனுக்கு அண்ணனா நீ ! மனுநூல் என்பது மனுக்குலத்தில் பிறந்த உனக்கே உரிமையானது. ஓவியத்தில் எழுதவொண்ணாத பேரழகனே ! ஜனக மன்னரின் புதல்வியாகிய அன்னம் போன்ற தேவியைப் பிரிந்ததால் உனக்கு எது அறம் எது மறம் என்று தெரியாது திகைப்புற்றிருக்கின்றாய். இராமா ! அரக்கர் வேந்தன் உன் மனைவியைக் கவர்ந்தற்காக, வானர வீரனாகிய என்னைக் கொல்ல மனு தருமம் கூறியிருக்கின்றாதோ ? கருணை நிறைந்த நீ கருணையைத் துறந்தனை. பனை மரததில் தேள் கொட்டினால் தென்னை மரத்தில், நெறிகட்டுவதா ? இராவணன் செய்த பிழைக்கு என்னைத் தண்டித்தனையே !

நான் உனக்கு என்ன பிழை செய்தேன் ? நீ இந்தத் தீமைசெய்தால் புகழைத் தாங்க வல்லார் யார் ? இராமா ! கூட்டுத் சேராத கொற்றவா ! இந்தக் குரங்குடன் கூடினாயே. உன் அரசை உன் தம்பிக்குத் தந்து நாட்டில் ஒரு செயலைச் செய்தாய், என்னைக் கொன்று என் தம்பிக்கு இந்த அரசைத் தந்து காட்டில் இச்செயலைச் செய்தாய், தமையனைக் கொன்று தம்பிக்கு அரசு தரும் செய்கை இத்துடன் முடிந்ததா, இன்னும் இருக்கின்றதா ? தோல்வியறியாத பரம பராக்கிரமசாலியாகிய என்னை வதைத்து. . இந்தச் சுக்ரீவனைத் துணை பற்றினாயே, இது அறிவுடைமையாகுமா ? சிங்கத்தைக் கொன்று முயலைத் துணை பற்றியதுபோல் உளது.

இரகுவீர ! இராவணன் என் இனிய நண்பன். என்னிடம் மிகுந்த அச்சம் உள்ளவன். என் வால் அசைந்தால் அவனுடைய செங்கோல் அசையாது. நான் கூறினால் அடுத்த விநாடியே சீதையைக் கொணர்ந்து விடுவானே. நகத்தினால் கிள்ள வேண்டியதைக் கோடரி கொண்டு வெட்டுகின்றனையே ! உன்னுடைய ஆட்சியில் என் உடல் பாரமா ? இது வீரமா ? நீ வாலியைக் கொல்லவில்லை. அரச நீதியின் வேலியைக் கொன்று விட்டாய். நிராயுதபாணி மீது பாணந்தொடுத்துக் கொன்றது என்ன நியாயம் ? அன்றி மறைந்திருந்து கணை தொடுத்தனையே ?"

இராமபிரான் இத்தனையையும் பொறுமையுடன் கேட்டு, வாலியின் வாதத்தை மறுத்துக் கூறுகின்றார்.

"வாலி ! தம்பியின் மனைவி மகள் போன்றவள். நீ உன் தம்பியின் மனைவியைக் கவர்ந்து அவளைக் களங்கப்படுத்தினாய். இதைவிடப் பெரிய குற்றம் ஒன்று உளதா ? அதனால், உன்னைத் தண்டித்தேன்" என்றார்.

"இராமா ! விலங்குகட்குத் தாய், மனைவி, மகள் என்று பாகுபாடு கிடையாது. நீ மனித தருமத்தைக் கருதி என்னைத் தண்டித்தது தவறு" என்றான் வாலி.

"வாலி ! தருமங்களைப் பற்றி அணுஅணுவாக நுனித்துப் பேசுகின்றனையே ! மனிதன் விலங்கு என்பது உடம்பினால் அன்று. அறிவின் திறமே காரணமாகும்."

தக்க இன்ன தகாதன இன்ன என்று உணராதவர்கள் மனிதர்களே யானாலும் விலங்கேயாகும். நீ தேவரின் புதல்வன், தருமத்தின் சூட்சமத்தை நன்கு உணர்ந்தவன். கஜேந்திரனை யானை என்று கூறலாமா ? ஜடாயுவைப் பறவையென்று பகரலாமா ? நீ கல்லாத கலை இல்லை .. . அதனால் உன்னைத் தண்டித்தேன் என்றார் ராமர்.

"நீ கூறியதை ஒப்புக் கொள்கிறேன். மறைந்திருந்து கணை தொடுத்தது என்ன நியாயம்?"என்று கேட்டான் வாலி.

"களவு செய்தவனைக் காவல் துறைத் தலைவர் நேரே வந்துதான் பிடிக்க வேண்டும் என்பது இல்லை. நீ இந்திரன் - இராவண சம்மாரம் பொருட்டுப் பிறந்த நீ பகைவனுடன் நட்பு கொண்டது பிழை. அவதார நோக்கத்தை அழித்த உன்னை மறைந்து இருந்து கணை தொடுத்தது பிழையாகாது" என்றார்.

வாலி எம்பிரானுடைய அருள் மொழிகளைக் கேட்டுத் தன் பிழையை உணர்ந்து, இறைவனை இறைஞ்சித் துதி செய்கின்றான்.

"அறநெறி வழுவாத அண்ணலே ! சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும். குரங்கினமாகிய அடியேனிடம் தருமத்தின் நுட்பத்தைக் காண முடியாதுதானே.. .. என் தம்பி சுக்ரீவன் இந்தக் குரங்கரசைப் பெற்று இந்திர பதவியை எனக்குத் தந்தான். ஐயனே ! என் தம்பி எனக்கு நல்லது செய்தான்.

பெருமானே ! அடியேனுக்கு ஒரு வரந்தரல் வேண்டும். என் தம்பி சுக்ரீவன் மது உண்டு மதிமயங்கி ஏதாவது குற்றஞ்செய்வானாகில் என்மேல் ஏவிய பாணத்தை என் தம்பிமேல் விடாதே. இவன் தமையனாரைக் கொல்வித்தவன் என்று உன் தம்பியர் இகழ்வார்களேயானல் நீ அவர்களைத் தடுக்க வேண்டும். எம்பெருமானே ! மனுகுல மகாத்மாவே ! இந்தச் சுக்ரீவன் நன்றி மறவாதவன். சீதையைச் சிறை மீட்க உதவுவான் என்று கூறினான். தன்னைப் பார்த்து அழுகின்ற தம்பியை நோக்கி, தம்பி வருந்தாதே. வேதங்களும் முனிவர்களும் காண முடியாத கடவுள் இராமபிரானாக அவதரித்து உலகை உய்விக்க வந்தார். இவரைச் சரணம் அடைவாய்" என்றான்.

"எந்தையே ! இதோ இருக்கின்ற அநுமன் உமது திருத்தோளில் விளங்குகின்ற கோதண்டம் போன்றவன் இவன் எல்லாம் செய்ய வல்லவன்" என்று கூறினான்.

அப்போது அங்கதன் வந்து அழுது நின்றான். வாலி "மகனே ! அழாதே ! பரம்பொருள் இராமனாக வந்துள்ளது. இவர் பிறவிப் பிணிக்கு மருந்தாவார்"

என்று கூறி, அங்கதனை இராமரிடம் அடைக்கலமாகத் தந்தான். இராமபிரான் அங்கதனிடம் தம் உடைவாளைத் தந்து அருள் புரிந்தார்.

வாலி இராமரைத் தன் கண்களால் பார்த்துக்கொண்டே முக்தியுலகஞ் சேர்ந்தான். வாலி மார்பைத் துளைத்த இராம சரம் வான கங்கையில் முழுகி இராமருடைய அம்புப் புட்டிலில் வந்து ஒடுங்கிற்று.

இந்திரன், இராவண வதம் புரிய வாலியாக வந்தான். அவ்வாறு வந்த அவன் இராவணனுடன் உறவு செய்து கொண்டான். உனக்கு உறவு, எனக்கு உறவு, உனக்கு பகை, எனக்கு பகை என்று இருவரும் ஒன்றுபட்டார்கள். இராமர் வாலியுடன் சென்ற இராவண சம்மாரம் நிகழ்த்த இயலாது. பகையாக வந்தவன் உறவு ஆக இணைந்தான். அதனை அவன் உணருமாறு இராமர் உணர்த்தினார்.

தாரை புலம்புதல் வாலியின் மனைவி தாரை விரைந்து வந்து கணவன் மீது வீழ்ந்து புலம்புகின்றாள். தாரையின் புலம்பில் மிகுந்த பொருட் செறிவுடன் கூடியது.

அதிகாலையில் பஞ்சணையில் பார்த்த கணவன். இப்போது உதிரச் சேற்றில் இருக்கின்றான். அவன் தினந்தோறும் திசைகளின் முடிவிற்போய் அன்று அல்ந்த மலர்களால் மூன்று வேளை சிவபூஜை செய்வான். இப்போது வழிபாடு செய்யாமல் மாண்டு கிடக்கின்றான். பிராணபதி போருக்குப் போக வேண்டாம் என்று தடுத்தேனே. ஏன் சொல்லைத் தட்டி வந்து மாண்டு கிடக்கின்றீரே !

சிவபெருமானுடைய வழிபாட்டுக்குப் பாலும் தயிரும் பஞ்சாமிருதமும் தேனும் இளநீரும் ஆயத்தமாக இருக்கின்றனவே. பூக்குடலை ஆணியில் தொங்குகின்றனவே. வழிபாடு செய்யாமல் படுத்திருக்கின்றீரே !

பெருமானே ! பாற்கடலைக் கடைந்து அமுதம் அமரருக்கு அன்ற வழங்கினீரே ! அமுதம் உண்டவர்களில் அறக்கடவுளும் இருந்தாரே. அமுதம் வழங்கிய உமது உயிரைப்பற்றிச் சென்றாரே. நன்றியுணர்வு

அறக்கடவுளுக்கு இல்லையா ? உப்பிட்டவரை உள்ள நாள்வரை நினைக்க வேண்டுமே ? நீர் அமுதத்தை வழங்கினீரே !

உயிர்த் துணைவரே, கணவன் உள்ளத்தில் மனைவியிருப்பாள். மனைவியின் உள்ளத்தில் கணவன் இருப்பான். தங்கள் உள்ளத்தில் நான் இருந்தால் இராம பாணம் என்னையுங் கொண்டிருக்கும். என் உள்ளத்தில் நீர் இருப்பது உண்மையாயில் நான் உயிரோடு இருப்பதனால் நீரும் வாழ வேண்டும். ஆதலால், என் உள்ளத்தில் நீரும் இல்லை, உம் உள்ளத்தில் நானும் இல்லை., இனி எப்பிறப்பில் தங்களைக் காண்பேன் ? என்ற கதறியழுதாள்.

இராமர் அனுமாரை ஏவி ஆறுதல் செய்வித்தார். வாலிக்கு நெருப்புக்கடன், நீர்க்கடன்கள் செய்தார்கள். நல்ல நாளில் இராமருடைய கட்டளைப்படி இலட்சுமணர், சுக்ரீவனுக்கு முடி சூட்டினார். வேத மந்திரங்களுடன் ஆசியுரை கூறினார்கள். குரங்குகள் நடனம் புரிந்தன.

சுக்கரீவன் பட்டாபிஷேகக் கோலத்துடன் சென்று இருவரைப் பணிந்தான்.

இராமருக்கு உள்ளம் குளிர்ந்தது. அவனை வாயார வாழ்த்தினார். "சுக்ரீவா, உன் அரசு ஓங்குக. நான் இளமையில் வேலைக்காரி கூனியின் முதுகில் மண்ணுருண்டை எய்ததன் விளைவு என்ன ஆயிற்று என்று கண்டனையா ? தந்தையார் மாண்டார். பரதன் நந்தியம் மலையில் தவம் புரிகின்றான். சீதை போன இடம் தெரியவில்லை. ஆதலால், உன் அரண்மனையில் வாழும் பணியாளர்களின் மனம் நோக நடக்காதே.

பெண்களால் துன்பம் எய்தும். வாலியின் மரணத்துக்குக் காரணம் பெண்ணாசைதானே. வாலி மிகச் சிறந்த சிவபூஜை செய்தும், ஒழுக்கம் இன்மையால் மாண்டான்.

சீதாதேவி மானைக் கேட்டுத்தானே இத்தனைத் துயரங்கள் விளைந்தன. மழைக்காலம் கடந்த பின் சீதையைத் தேடலாம். நீ போய் அரசு செய்" என்ற உத்தரவு தந்தார்.

சுக்ரீவன் அரண்மனை சென்று தாரையின் காலில் வீழ்ந்து வணங்கினான். அங்கதனுக்கும் இளவரசுப்பட்டம் கட்டப்பட்டது. சுக்ரீவன் தன் மனைவி ருமாதேவியுடன் இன்புற்று வாழ்கின்றான்.

கிஷ்கிந்தை முறைப்படி முடிசூட்டிக் கொண்ட சுக்ரீவன் நன்றியுணர்வுடன் இராமபிரானைப் பணிந்தான், துயரந் தணிந்தான், அவருடைய திருவடியைச் சென்னியில் அணிந்தான். இராமரைத் தனது நகரில் வந்து அரண்மனையில் தங்குமாறு வேண்டினான்.

"காட்டில் இருக்க வந்து நாட்டில் இருப்பது முறையன்று. அன்றிச் சீதாதேவி துன்பப்படுகின்றபோது நான் இன்புறுவது பிழையாகும்" என்று எம்பெருமான் எல்லாரையும் கிஷ்கிந்தைக்கு அனுப்பிவிட்டு, வேறு ஒரு குன்றில் தங்கினார்.

மழைக்காலம் வந்தது. மனைவியைப் பலகாலம் பிரிந்திருந்த சுக்ரீவன் அவன் மனைவி ருமாவுடன் இன்புற்று உலகை மறந்திருந்தான். இளவரசனாகிய அங்கதன் மாட்சியுடன் ஆட்சி புரிந்தான். அநுமார் நீதி நெறியைப் பரப்பி மக்களை நல்வழிபடுத்தி நலம் புரிந்தார்.

வானம் மையெடுத்தது போல இருண்டு மழை பொழிந்தது மின்னலும் இடியுமாக, இடையறாது மேகம் பொழிந்தது.

இராமபிரான் சீதையை நினைத்த வேதனையுற்றார். இலட்சுமணர் ஆறுதல் கூனினார். எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஒடியது. இராமர் எங்கும் போக முடியாத நிலை. உணவு தேடியும் வெளியே போக முடியாத நிலை.

காற்றும் மழையும் கலந்து துன்புறுத்தின. போர்வையில்லை. நாகங்களும் தேள் முதலிய நச்சுப் பிராணிகளும் நிறைந்த வனம்.

"தம்பீ ! லட்சுமணா ! தூக்கணாங்குருவி தன் மனைவியுடன் கூட்டினுள் சுகமே தூங்குகின்றது. இந்தக் குருவி செய்த புண்ணியங்கூட நான் செய்தேனில்லை. சீதை எங்கே என்ன துன்பத்தை அனுபவிக்கின்றாளோ ? வனவாசம் என்பது எத்தனைக் கொடுமையானது. இத்துன்பம் பகைவனுக்கும் வரக்கூடாது" என்றார்.

கார்காலம் கழிந்தது. மரகதக் கம்பளம் விரித்தது போலப் பசும்புல் தழைத்து நிலமகளை அழகு செய்தது. வெயில் சுரீர் என்று வீசியது. மரங்கள் பூத்து குலுங்கின.

இராமபிரான் தம்பியைப் பார்த்த, "தம்பீ ! கார்காலம் கழிந்தவுடன் வருகின்றேன் என்ற கூறிச்சென்ற சுக்ரீவன் அதுபடி வந்தானில்லை. நன்றியை மறந்து நட்பினைத் துறந்தான் போலும். புல்லை எடுத்தால்தான் நெல்லை வளர்க்க முடியும். அரச வாழ்வில் மயங்கிவிட்டான் போலும். செய்ந்நன்றி மறந்த தீயவனை அழிப்பது அரச தருமமேயாகும். ஒரு வேளை வாலியைக் கொன்றபின் பாணம் தீர்ந்து விட்டது என்ற எண்ணுகின்றானோ ? வாலியைக் கொன்ற பாணம்போல் ஆயிரம் ஆயிரம் பாணங்கள் இருக்கின்றன என்று அவனுக்குக் கூறவாயாக, வாலியைக் கொல்லத்துணை தேடினான். இப்போது நம்மைக் கொல்ல வேறு துணை தேடினாலும் தேடுவான்.

சித்திரத்திலும் குரங்கை எழுதாமல் செய்வேன். வாநரம் என்ற பேரே உலகில் இல்லாதவாறு செய்வேன். தம்பி ! அவன் அறநெறியில் மாறுபட்டு ஏதாவது கூறவானாயின் அவன் கூறியதை என்னிடம் வந்து கூறுக. நீ ஒன்றும் செய்து விடாதே. உன்னை ஒப்பார் மூன்று உலகங்களிலும் இல்லை. போய் வருக" என்ற கூறி விடை கொடுத்தார்.

மனோவேகமும் இராம சரத்தின் வேகமும் பிற்பட எரிமலை நடப்பது போல் நடந்தது. இலட்சுமணர் கிட்கிந்தையைச் சேர்ந்தார். வாநரங்கள், இலட்சுமணர் கோபத்துடன் வருவதைக் கண்டு பயந்து நடுங்கி ஒடுங்கி, வணங்கி வரவேற்பு செய்யாமல் கோட்டைக்கதவைச் சாற்றிக் குன்றுகளையடுக்கி மரங்களை வேருடன் பறித்துக் கையில் ஏந்தி நின்றன.

இது எரிகின்ற தீயில் நெய்விட்டதுபோல் ஆயிற்று.

இலட்சுமணர் சீற்றத்துடன் வருகின்றார் என்ற செய்தி ஒரு வானரம் அங்கதனிடம் அறிவித்தது. அங்கதன் சுக்ரீவனுடைய மாளிகை சென்று அவனை வணங்கி, "சித்தப்பா ! இலட்சுமணர் கோபத்துடன் வருகின்றார். அவருடைய நாசியிலும் செவிகளிலும் கனல் பொறிகள் பறக்கின்றன. நமக்கு

அழிவுகாலம் வந்து விட்டது" என்று கூறினான். மதுவுண்டு உலகத்தையும் தன்னையும் மறந்திருந்தான் சுக்ரீவன்.

மதிநலம் படைத்த மாருதி, இந்த நேரத்தில் இலட்சுமணரை யாராலும் சமாதானப் படுத்து முடியாது என்பதை உணர்ந்தான். கங்கா நதியின் பிரவாகத்தை உப்பு மூட்டைகள் தடுத்து நிறுத்தமாட்டா. இதற்கு ஒரே ஒரு வழி தஞ்சம் புகுதல் என்று கருதி, தாரை இருக்குமிடஞ் சென்று அவளது தாள் மலர்மீது வீழ்ந்து வணங்கி, "அம்மா ! இந்த வேளையில் நீங்கள்தான் எல்லாருக்கும் உயிர்ப்பிச்சை தர வேண்டும். இளைய பெருமாள் சீற்றத்தோடு வருகின்றார். சுக்ரீவன் மதுக்கடலில் மூழ்கியிருக்கின்றார். நீங்கள் பெண்மணிகளுடன் சென்று வாயிலை மறைத்து நின்று. அவருடைய கோபத்தை ஆற்ற வேண்டும்" என்று கூறினான்.

## கணையாழி



அநுமார் மேலும் சொன்னார், "தாய், தந்தை, குரு, பசு, குழந்தைகள், பெண்கள் இவர்களை வதைத்தாவர்களுக்கும் கழுவாய் உண்டு. நன்றி

கொன்றவனுக்குக் கழுவாய் இல்லை. தினையளவு நன்றி செய்தவரையே எழுமையும் நினைக்க வேண்டும். மலையளவு நன்றி செய்த தங்களை நாங்கள் மறக்க முடியுமா ? எங்கள் வாநர சேனைகளைத் திரட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது. மன்னித்தருள வேண்டும்" என்றார்.

அங்கதன் சுக்ரீவனை மீண்டும் அணுகி, இளைய பெருமாளின் வரவைக் கூறினான். இப்போது மது மயக்கந் தெளிந்திருந்த சுக்ரீவன் இலட்சுமணரின் வரவை ஏன் முன்னமே எனக்குத் தெரிவிக்கக்கூடாது என்று கோபத்துடன் கேட்டான். "தந்தையயே ! நீங்கள் மதுவுண்டு மயங்கிக் கிடந்தீர்கள். மாதர் குழாம் சூழ என் அன்னை சென்று அவரைச் சாந்தப்படுத்தினாள். தாங்கள் சீக்கிரம் வந்து இளையவரைச் சந்திக்க வேண்டும்" என்றான்.

சுக்ரீவன், "ஓ ! நான் மதுவினால் மயங்கிக் கிடந்தேனா ? நான் பெருந்தவறு செய்துவிட்டேனே. மதுவுண்டவனுக்கு யார் தாய், யார் மகள் என்ற தெளிவில்லாமல் போகும். கள்ளில் நெளிகின்ற புழுவை நீக்கி அதை உண்டு மயங்கி உருளுகின்ற தன்மை எத்தனை அறியாமையால் விளைகின்றது. அந்தோ ! மதுவின் கொடுமையை எண்ணும்போதே மனம் மருளுகின்றது. நஞ்சு உண்டவனைக் கொல்லுமேயன்றி நரகத்தை நல்காது. மது உண்டவனை நரகத்திலே தள்ளும். மதுவுண்ணலை விடக் கொடியது யாதொன்றுமில்லை. இனி மதுவை மனத்தாலும் தீண்டேன். இராகவன் மேல் ஆணை" என்று சத்தியம் செய்தான்.

மனைவியுடன் வந்து இளைய பெருமாளைப் பலமுறை வணங்கினான். "ஐயனே ! அருட்பெருங்கடலே ! சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும். எங்கள் வாநர சேனை வனங்களிலும் மரங்களிலும் வாழ்கின்ற வாழ்க்கையை உடையன. அவற்றை ஒருங்கு திரட்டுவதில் கால தாமதம் ஆயிற்று" என்று இன்னுரை கூறி, அரண்மனைக்குள்ளே அழைத்துக் கொண்டு போய் ஒரு சிறந்த ஆசனத்தில் இருக்கு மாறு வேண்டினான்.

இலட்சுமணர், கண்கள் குளமாகி, "அன்பனே ! எம்பெருமான் துன்பக் கடலில் மூழ்கியிருக்கின்றபோது நான் இந்த ஆசனத்தில் இருக்கலாமா ? அது

முறையா ?" என்று கூறினார். சுக்ரீவன் இலட்சுமணரை உணவு உண்ணுமாறு வேண்டினார்.

இலட்சுமணர் சுக்ரீவா ! எம்பெருமான் உண்ட "பச்சிலை, காய், கிழங்கு இவைகளின் மிகுதியைத்தான் உண்பது முறை. பெருமான் அங்குப் பட்டினி கிடக்க நான் இங்கு உண்ணலாமா ? அவருக்கு உணவு தேடித் தரும் பொருட்டு நான் விரைந்து போக வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டு எல்லாரும் கண்ணீர் வடித்தார்கள். சுக்ரீவன் அனுமனைப் பார்த்துச் "சேனைகளைக் கூட்டி அழைத்துக் கொண்டு வா" என்று கட்டளையிட்டுவிட்டு, இலட்சுமணருடன் சென்று இராமபிரானைப் பணிந்து, கண்ணீரால் இவருடைய பாதமலர்களை அலம்பி, அழுது தொழுது நின்றான்.

இராமர் சுக்ரீவனைத் தழுவி, வாழ்த்தியருளினார். "சுக்ரீவா ! எல்லாரும் நலந்தானே ! உன் ஆட்சி மாட்சியுடன் இருக்கின்றதா ? எங்கே அநுமன் ?" என்று வினாவினார்.

"அநுமன் சேனையுடன் நாளை வருவான்" என்று சுக்ரீவன் கூறினான்.

மறுநாள் கடல் திரண்டது போல் எழுபது வெள்ளம் வாநர சேனைகள் அங்கு வந்து சேர்ந்தன. தனிப்பெருஞ் சேனைத் தலைவன் நீலனும் சாம்பவந்தனும் சதவலி, கேசரி, தூமிரன், தரீமுகன், கவயன், துன்முகன், மயிந்தன், துமிந்தன், குமுதன், பதுமுகன், இடபன் முதலிய படைத் தலைவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

சுக்ரீவன் இராமரைத் தொழுது அழைத்துக் கொண்டு போய் வாநர சேனைகளை காட்டினான். இராமர் அளவற்ற சேனைகளைக் கண்டு அதிசயம் அடைந்தார். ஈசன் வடிவத்தையும் ஐம்பெரும் பூதங்களையும் சமயவாதிகளின் பிணக்குகளையும் அளக்க முடியாததுபோல் அந்தச் சேனைகள் காட்சி தந்தன. அந்தச் சேனைகளின் முடிவைக் காண முடியாமல் அகமிக மகிழ்ந்தார். இனி நான்கு திசைகளிலும் எட்டுக் கோணங்களிலும் வாநர சேனைகளை அனுப்பிய சீதை இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

சுக்ரீவன் நான்கு திசைகளுக்கும் இரண்டிரண்டு வெள்ளம் சேனைகள் தேடுமாறு அனுப்பினான். ஒரு மாதத்துக்குள் வர வேண்டுமென்று ஆணையிட்டான்.

இராவணன் தென் திசை நோக்கிச் சென்றதனால் அநுமாரும் சாம்பவந்தனும் அங்கதனும் நீலனும் ஆகிய முக்கியமான வீரர்கள் தென்திசை சென்று நியமித்தான்.

தென்திசை போகும் அநுமார் முதலியோருக்குச் சுக்ரீவன், அவர்கள் போகும் மார்க்கத்தைத் தெளிவாகக் கூறலானான்.

தென்திசை நோக்கிச் சொல்லுகின்றபோது ஆயிரம் யோசனை கடந்தால் விந்தமலை வரும். பின்னர் நருமதா நதி வரும். அங்கும் தேடுங்கள் பின்னர் ஏம கூட மலையைக் கண்டு தேடுங்கள். அதைக் கடந்து பெண்ணை நதியைப் பார்த்துத் தேடுங்கள். பின்னர் தண்டக நாட்டை அணுகித்தேடுங்கள். அதனைத் தொடர்ந்து பாண்டு மலையில் தேடுங்கள். பின்னர், புண்ணிய நதியாகிய கோதாவரியை அடைந்து அதன் பிரதேசத்திலும் தேடுங்கள் சுவணம் என்ற நதியையும் அதன் அருகிலுள்ள நகரங்களையும் கண்டு தேடுவீர்களாக. அங்கிருந்து தென்திசை நோக்கிப் பல நாடுகளையும் கடந்து கொங்கணம், குலிந்தம் என்ற நாடுகளில் தேடுங்கள். அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்றால், அருந்ததி என்ற ஒரு பெருமலையைக் காண்பீர்கள். அம்மலையின் உச்சியை யாராலும் அடைய முடியாது. சமயவாதிகள் சிவன்தான் பெரியவர் என்பர், விஷ்ணுதான் பெரியவர் என்பர். ஆனால், இரண்டும் ஒன்று என்று அவர்கள் அறியார்.

ஒரு கடிதத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பதபோல் கடவுளுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒருபக்கம் சிவம், மற்றொரு பக்கம் விஷ்ணு. சிவமூர்த்தி இருபத்தைந்து பேதங்களில் கேசவார்த்த மூர்த்தி என்ற ஒரு மூர்த்தி உண்டு. அதில் பாதி சிவம், பாதி விஷ்ணு,

சிவன் – சூடு

விஷ்ணு – குளிர்ச்சி

உலகம் வாழ வேண்டுமானால் வெப்ப தட்பங்கள் சரியாக இருக்க வேண்டும். வெப்பமான சிவம் எரிகின்ற மயானத்தில் எரியைக் கையில் வைத்துக்கொண்டு நடனம் புரிகின்றது. தட்பமாகிய விஷ்ணு நீரிடை உறங்குகிறது.

வெப்பமாகிய சிவத்துக்குக் குளிர்ச்சி தருகிற வில்வத்தை அர்ச்சனை செய்கிறார்கள். தட்பமாகிய விஷ்ணுவுக்கு உஷ்ணத்தைத் தரும் துளசியை அர்ச்சிக்கிறார்கள். தத்துவ ஞானிகள் சிவத்தையும் விஷ்ணுவையும் ஒன்றாக பார்ப்பார்கள். அதனால், சிவனை உயர்த்தி விஷ்ணுவைத் தாழ்த்தி, விஷ்ணுவை உயர்த்திச் சிவத்தைத் தாழ்த்தியும் பேசுவோர் பரகதி அடையமாட்டார்கள்.

ஈசன் விஷ்ணுவைச் சேவைசெய் வோர்தமை இகழ்வோர்கள்
ஈனர் இத்தனை பேர்களும் ஏழ்நரகு உழல்வாரே.

- என்று அருணகிரிப் பெருமான் அருளிச் செய்கின்றார். அதுபோல் நீங்களும் அருந்ததி மலையின் உச்சியைச் சென்று அடைய முடியாது. சென்று காலத்தை வீணாக்காதீர்கள்.

பின்னர், மரகத மலை சென்று தேடுங்கள். தமிழ் நாட்டுக்கு வடக்கு எல்லையாய் விளங்குவதும் தன்னை அடைந்தார் பாவம் நீங்கிப் பரகதி அடைய வைப்பதும், அமரரும் முனிவரும் அனுதினமும் வணங்குவதுமான திருவேங்கட மலையை அடைவீர்கள், அம்மலை தம்மை அடைந்தாரைப் பரகதியில் சேர்க்க வல்லது, அதலினால், அம்மலையைத் தொலைவிலிருந்தே சேவித்துச் செல்லுங்கள்.

பின்னர் சான்றோர்கள் பலர் வாழுகின்ற தொண்டை நாட்டை அடைவீர்கள். அங்கே முத்தி தரும் ஏழு தலங்களில் ஒன்றாகிய காஞ்சி மாநகரை அடைவீர்கள். தொண்டை நாடு, "தொண்டை நாடு" என்று சொல்லி கொண்டிருக்கும். ஒரு மனிதன் தொண்டினால்தான் உயர முடியும். அதனால்தான் தொண்டர் புராணத்தைப் பெரியபுராணம் என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

பின்னர், தொண்டை நாட்டை கடந்து ஏழ்தலம் புகழ் காவேரியால் வளம் பெருகுகின்ற சோழ நாட்டை அடைவீர்கள். அங்குக் காவிரி ஆற்றின்

இருகரையகளிலும் சிவ விஷ்ணு தேவாலயங்கள் பல திகழ்கின்றன. சிதம்பரம், திருவாரூர், திருவேரகம் என்ற பல திருத்தலங்கள் மாட்சியுடன் காட்சி தருகின்றன. நீங்கள் பயபக்தியுடன் அங்குத் தேவியைத் தேடுங்கள்.

அதைக் கடந்தால் முத்தும, முத்தமிழும் தருகின்ற பெருநையாறு பாய்கின்ற பாண்டி நாட்டை அடைவீர்கள். பாண்டிய நாட்டைக் கடந்தால் தமிழ்நாட்டின் தெற்கெல்லையாகிய பொதிய மலையை அடைவீர்கள். அங்குச் செந்தமிழ் தந்த அந்தமில் பெருமையுடைய அகத்திய முனிவருடைய தமிழ்ச் சங்கததைப் பார்ப்பீர்கள். அங்குச் சென்றால், அத்தமிழ் மொழியின் இனிமையால் உள்ளம் உருகி, அங்கேயே தங்கிவிட நேரும். ஆதலால், காதலால் அச்சங்கத்தைத் தொலைவிருந்தே வணங்கிவிட்டுச் செல்லுங்கள். பின்னர், மகேந்திர மலையை அடைவீர்கள். மகேந்திர மலையில் தேடிவிட்டு ஒரு மாதத்துக்குள் இங்கு வந்து அடைய வேண்டும் என்று கட்டளையிட்டான்.

அநுமனிடம் இராமர் கணையாழி தருதல் இராமபிரான் அநுமனைத் தனியே அழைத்து, "அறிவில் மிகுந்த அநுமனே ! நீ சீதையைக் காண்பாய் என்று உறுதியுடன் எண்ணுகிறேன். சீதை பேரழகு உடையவள். சமானமில்லாத அங்கக்களை உடையவள். அவளிடம் இக்கணையாழிகை அடையாளமாகக் கொடுத்து என்னுடைய நலத்தைக் கூறவாயாக" என்று கூறி, சீதையின் திருமேனி நலன்களை அடையாளமாகக் கூறி வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினார்.

இவ்வாறு தேவியைத் தேடிக்கொண்டு அநுமன் முதலியோர்கள் செல்லுகின்ற வழியில், கொதிக்கின்ற ஒரு பாலைவனத்தை அடைந்தார்கள். அதன் வெப்பத்தைத் தாங்காமல் தவித்தார்கள். அங்கே ஒரு பிலம் தெரிந்தது. வெப்பத்தைக் தாங்காத வாநர வீரர்கள் அந்தப் பிலத்துக்குள் நுழைந்தனர், இருளில் இடர்பட்டார்கள். அநுமார் தன் வாலை நீட்டி அதனைப் பற்றிக் கொண்டு வாருங்கள் என்று கூற, திருவாரூர் தேர் வடம் பிடிப்பதுபோல், அநுமாருடைய நீண்ட வாலை நீட்டி அதனைப் பற்றிக்கொண்டு நடந்தார்கள். அங்கே, மனித சஞ்சாரமமே இல்லாத ஒளி நிறைந்த ஒரு நகரத்தைக் கண்டார்கள். சோலைகளும் கொடிப் பந்தல்களும் வானாவிய பூமரங்களும் நிறைந்திருந்தன. ஒரு பக்கத்தில் இனிய உணவுகளும் உடைகளும்

இருந்தன. இதுதான் இராவணன் சீதையைச் சிறை வைத்துள்ள இடமோ என்று ஐயுற்றார்கள். அங்கே ஓர் அழகிய மண்டபத்தில் ஒரு பெண்மணி அமர்ந்து தவஞ்செய்து கொண்டிருந்தாள். அவள் பேர் சுயம்பிரபை. வானார்கள். சுயம்பிரயை கண் விழித்துப் பார்த்தாள். யாரென்று வினாவினாள் நாங்கள் இராமபிரானுடைய அடியார்கள். "தாங்கள் யார் ? ஏன் இங்குத் தனிமையில் இருக்கின்றீர்கள் ?" என்று வாநர வீரர்கள் கேட்டனர்.

சுயம்பிரபை, "இராம பக்தர்களே என் பேர் சுயம்பிரபை ஏமை என்கின்ற தேவ மாதுடன் மயன் என்பவன் கூடா ஒழுக்கத்துடன் வாழ்ந்தான். அதற்கு நான் துணை புரிந்தேன். அதனால், இந்திர பகவான் சீற்றமடைந்து மயனைக் கொன்று ஏமையைத் தேவ மாதருடன் சேர்த்துவிட்டு, என்னை இங்கே தனித்திருக்குமாறும் கூறினார். இராம தூதன் அநுமாராக உனக்கு விமோசனம் கிடைக்கும் என்றார். நான் இத்தனைக் காலம் உங்கள் வரவை நோக்கி மாதவம் செய்து கொண்டிருந்தேன். எனக்கு அருள் புரிந்து இதிலிருந்து விடுவித்து வீடு, பேறு தருவீர்கள்" என்று கூறினாள்.

அநுமார் விஸ்வரூபம் எடுத்து ஆயிரத்து நானூறு யோசனையுள்ள அந்தப் பிலத்தை வேருடன் பிடுங்கி, அது நிலமட்டம் வரும்போது வாநர வீரர்களை மண்ணில் இறங்குமாறு செய்து அந்தப் பிலத்தை மேற்கடலில் எறிந்து விட்டார். சுயம்பிரபை தேவலோகம் சேர்ந்தாள். வாநர வீரர்கள், ஓர் இனிய வனத்தையும் பொய்கையையும் கண்டார்கள். அங்குள்ள காயும் கனியும் தேனும் உண்டு இளைப்பாறிப் பொய்கைக் கரையில் படுத்தயர்ந்து தூங்கி விட்டார்கள்.

துமிரன் நடு இரவில் மலை போன்ற பெரிதும் உடலும் நீண்ட கரங்களும் கரிய உருவமும் கொண்ட ஓர் அரக்கன் வந்து. என்னுடைய ஆட்சியிலுள்ள பொய்கைக் கரையில் இவர்கள் வந்து உறங்கலாமா ? என்று கூறி, அங்கதன் மார்பில் குத்தினான். அங்கதன் எழுந்து அவனுடன் கடும் போர் புரிந்து கொன்றான். மாண்டு கிடக்கின்ற அரக்கனைக் கண்டு அனைவரும் அதிசயம் அடைந்தார்கள். சாம்பவந்தர் இவன் துமிரன் என்ற பேருடைய பொல்லாத

அரக்கன். இவனை அங்கதனையன்றி யாராலும் கொல்ல முடியாது என்று கூறினார்.

வாநர வீரர்கள் மீண்டும் தேவியைத் தேடினார்கள். விதர்ப்ப நாடு, தண்டக வனம், பாண்டு மலை, கோதாவரி நதி முதலிய பல இடங்களில் துருவித், துருவித் தேடினார்கள். பிராட்டியைக் காணாது வாடினார்கள். முண்டகத்துறை சென்று தேடினார்கள். பாண்டு மலையையடைந்து தேடினார்கள். அருந்ததி மலையையடைந்து தேடினார்கள். பின்னர் திருவேங்கட மலையை அடைந்தார்கள். சித்தர்களும், முத்தர்களும் பக்தர்களும் வந்து பணிந்து, வினைதணிந்து நலம் பெறுகின்ற அந்த வேங்கட மலையை வணங்கித் தேவியைத் தேடினார்கள்.

வாநர வீரர்கள் அந்தணர் வடிவை எடுத்துக்கொண்டு சான்றோர்கள் வாழும் தொண்டை நாட்டையடைந்து தேடினார்கள். வடமொழியும் தென் மொழியும் கற்று அதன் முடிவைக் கண்ட மூதறிஞர்கள் அங்கு வாழ்கின்றார்கள். அந்நாட்டில் தேடி, காவேரியால் வளம் பெறுகின்ற சோழ நாட்டில் தேடினார்கள். பின்னர் முத்தும் முத்தமிழும் தருகின்ற பாண்டி நாட்டையடைந்து தேடினார்கள். எங்குத் தேடியுங் காணாது தென் கடலையடைந்தார்கள்.

கடலில் அலைகள் எழுந்து தாழ்கின்ற காட்சி வாநர வீரர்களே ! எம்பிராட்டி கடல் நடுவில் உள்ள இலங்கையில் இருக்கின்றாள் வாருங்கள் , வாருங்கள் என்று கைநீட்டி அழைப்பதுபோல் இருந்தன.

## அசோக வனத்தில் மடக் கொடி



சம்பாதி வானிடை பறந்து சென்றபின், வாநர வீரர்களுக்கு இலங்கை மாநகரில் சீதாதேவி இருக்கின்றாள் என்பது புரிந்தது. அதனால், வறியவனுக்குப் புதையல் கிடைத்தது போல பெரு மகிழ்ச்சியடைந்தார்கள்.

இனி நாம் இலங்கைக்குப் போக வேண்டும். "நம்மில் போக வல்லார் யார் ?" என்று வாநர வீரர்கள் சிந்தித்தார்கள். சிறந்த வாநர வீரர்கள், "நூறு யோசனை பரப்புள்ள கடலை எங்களால் கடப்பது இயலாது" என்று தங்கள் இயலாமையைக் கூறினார்கள்.

நீலன் என்ற சேனைத் தலைவன், நான் எழுபத்தைந்து யோசனை தூரம் தாண்டுவேன் என்ற யோசனை இல்லாமல் சொன்னான். பேராற்றல் படைத்த அங்கதன். நான் நூறு யோசனையும் தாண்டி விடுவேன். திரும்பி வர இயலாது என்றாள். ஜாம்பவந்தன இந்தச் சிறிய கடலை நான் வாய்க்காலைத் தாண்டுவதுபோல், எத்தனை முறை வேண்டுமானாலும் தாண்டுவேன். ஆனால், இப்பொழுது இயலாது. எனக்கு இளமைபோய் முதுமையடைந்திருக்கிறது. நாராயணர் திரிவிக்கரம அவதாரம் எடுத்து உலகை ஓரடியாக அளந்தபோது நான் வெற்றி முரசு அறைந்து உலகாத்தை

வலம் வந்த போது, மேரு மலையின் காலிடறி வீழ்ந்து ஊனமுற்றேன். ஆதலால், இப்பொழுது என்னால் இயலாது என்று கூறினான்.

## அநுமன் ஆற்றல்



எல்லாரும் இவ்வாறு கூறியபோது அநுமார் ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தார். தங்கமணிக்கு ஓசை யிருக்காது, வெங்கலமணிக்கு ஓசையிருக்கும், பச்சோலைக்கு ஓசையிருக்காது. உலர்ந்த சருக சலசல என்று ஒலிக்கும். கையாலாகாதவர்கள் வாய்ச்சொல் வீரராக, கடலைக் குடிப்பேன், மலையை இடிப்பேன், வானில் பறப்பேன் என்ற வாய்ப்பறையறைவார்கள். ஆனால், கையால் ஒன்றும் ஆகாது, அதுபோல், எல்லாரும் பேச, அறிவும் ஆற்றலும் ஒருங்கே படைத்த ஆஞ்சயேர் மௌனமாக இருந்தார். அவருக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்பது அவருக்கே தெரியாது.

ஜாம்பவான் அநுமாரை நோக்கி அடியில் வருமாறு கூறத் தொடங்கினான்.

"அநுமனே ! உன்னை அஞ்சலிக்கிறேன். எல்லாருடைய தலையிலும் எழுதி விதிக்கின்ற பிரமதேவர் மாயினும் மாயாத மிகுந்த வாழ்நாளையுடைவரே !

சிரஞ்சீவிகளில் ஒருவரே ! நீர் கல்லாத கல்லையில்லை. தருமங்களை அதிநுட்பமாக நீர் அறிந்தவர். தங்களைக் கண்டு கூற்றுவனும் அஞ்சுவான். காலனை உதைத்த ஆலமுண்ட நீலகண்டனைப்போல் யாரையும் அடக்கும் பேராற்றல் படைத்தவர். உமக்கு ஐம்பூதங்களாலும் அழிவு கிடையாது. தெய்வப் படைக்கலன்களினால் உமக்கு மரணம் கிடையாது. உமக்கு நிகர் நீர்தான். அண்டத்துக்கு அப்பாலும் குதிக்க வல்லவர். சூமருமலைக்கும் மேம்பட்டு உயரமாக நிற்கும் தன்மையுடையவர். அதேசமயத்தில் மழைத் தூறலுக்கு நடுவே சென்று உடம்பு நனையாமல் செல்லக்கூடிய வல்லமையுடையவர். இந்த மண்ணுலகத்தை ஒரு கையால் எடுக்க வல்லவர். இங்கிருந்து சூரியனையும் தீண்டும் திறனுடையவர். நீதி நெறியில் நின்றவர். மனத்தாலும் மாதரைத் தீண்டாதவர். வேதங்கள் அனைத்தையும் ஓதியுணர்ந்தவர். ஊழியையுங் கடந்தவர். அடுத்துப் பிரமதேவனாக வரும் தகுதியுடையவர். தங்களால் ஆகாது யாதொன்றும் இல்லை. தங்களுடைய பேராற்றலுக்கு இந்தப் பெருங்கடல் வாய்க்கால் போன்றது. ஆகவே, தாங்கள் சென்று பிராட்டியைக் கண்டு மீண்டு வந்து இராமருடைய கவலையை மாற்றி வாநர குலத்திற்குப் பெருமையைத்தர வேண்டும்" என்றான்.

இவ்வாறு, ஜாம்பவான் கூறிய புகழுரையைக் கேட்டு ஆஞ்சநேயர் நாணத்தோடு நின்றார். அறிஞர்கள் தம்மைப் புகழ்வதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஒருவர் புகழ்ந்தாலும் நாணுவார்கள். வாநர வீரர்களை வணங்கி, வீரர்களே ! இராமபிரானுடைய கருணையும் உங்கள் ஆசியும் எனக்கு இரு சிறகுகளாகத் துணை செய்யக் கடலைக் கடந்து கவலையையுங் கடந்து எம்பிராட்டியைக் கண்டு மீளுவேன் என்று கடலைக் கடப்பதற்கு ஆயத்தமாகிப் பேருருவுடன் நின்று காட்சியளித்தார்.

## சுந்தர காண்டம்

அநுமார் நின்ற காட்சி உலகத்தை ஓரடியாக அளக்க திருமால் எடுத்த விசுவரூபம்போல் இருந்தது. இரண்டு கால்களையும் ஊன்றி "இராமா" என்று வானத்திலே பாய்ந்தார். அந்த மகேந்திர மலையே நடுங்கிற்று. விண்ணவர்கள் மலர் மழை பெழிந்தார்கள். இரண்டு கரங்களை முன்னே நீட்டி இருந்தது. இராமலட்சுமணர்கள் அவருக்கு துணை வருவதுபோல்

இருந்தது. பின்னே தொங்கிய வலிமை நிரம்பியவால் இமயனுடைய பாசக்கயிறு ஒளிந்து கொண்டு இலங்கைக்குப் போவதுபோல் இருந்தது. அநுமார் விண்வழியில் வேகமாகச் செல்லும்பொழுது மைந்நாகம் என்ற மலைமேலெழுந்து அவருக்கு உதவி செய்ய வந்தது.

மைந்நாக பர்வதம் இந்திரன் வச்சிரப் படையால் மலைகளின் சிறகுகளை அரிந்தபோது வாயு தேவனால் கடலில் தள்ளி உதவி பெற்றது. வாயுதேவன் செய்த உதவிக்காக வாயுதேவன் மகன் அநுமாருக்கு உதவி செய்ய வந்தது. அநுமார், நான் இராம கைங்கர்யமாகச் செல்லும்பொழுது வழியில் தங்குவது நன்றன்று. உன் அன்புக்கு நன்றி என்று கூறிவிட்டு விண்வழியே சென்றார்.

சுரசை என்ற தேவமாது தேவர்களின் வேண்டுகோளின்படி அநுமாருக்கு நலஞ்செய்யும் பொருட்டு விண்ணில் மிகப்பெரும் வாயைப் பிளந்து நின்றாள். அநுமார் பெண்பிள்ளைக்கு இவ்வளவு வாயா என்று பரிகசித்து, ஒரு கணத்துக்குள் சிறிய உருவுடன் அவள் வாயில் நுழைந்து வெளிப்பட்டார். அவர் அமிர்தமயம் ஆனவள், அதனால் அநுமாருக்கு அமிர்த சம்பந்தம் உண்டாயிற்று. பின்னர். வழியில் அங்காரத்தாரை என்று பேர் பெற்ற கொடிய அரக்கி எதிர்ப்பட்டாள். இவள் பிராணிகளின் நிழலைப்பற்றியே அந்தப் பிராணிகளை உண்ணும் ஆற்றல் படைத்திருந்ததால் சாயாக்கிரகிணி என்ற பேரும், சிம்மிகை என்ற பேரும் படைத்தவள். ஆலகால நஞ்சை விடக் கொடியவள். இவள் விண்ணுக்கும் மண்ணுக்கும் எல்லையாகப் பெருவாயைப்பிளந்து நின்று அநுமாரைத் தடுத்தாள். பேராற்றல் படைத்த அநுமார் அவள் வாயில் புகுந்து பேருருக்கொண்டு அவள் வாயையும் வயிற்றையும் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டார். சாயக்கிரகணி மாண்டொழிந்தாள்.

அநுமார் இராம நாமத்தை இடையறாது செபித்துக் கொண்டு சென்றார். எனக்கு வழியில் இடர் அனைத்தும் நீங்க உதவுவது இராமநாமம் ஒன்றே ஆகும். என்னால் ஆவது யாதொன்றுமில்லை. எல்லாம் இராமபிரானது கருணையே யாகும் என்றெண்ணி இலங்கையில் உள்ள பவள மலையில் இறங்கினார்.

## தேவியைத் தேடுதல்



அநுமார் இலங்கையின் எழிலைக் கண்டு வியந்தார். அங்குள்ள வீடுகள் அனைத்தும் நவரத்தினங்கள் இழைத்து உவகைக் கடலைத் தந்து ஓங்கி நின்றன.

அந்நகர் ஆடலும் பாடலும் ஊடலும் கூடலும் அன்றி வாடலும் வருந்தலுமின்றி இன்ப வெள்ளத்தில் மிதந்து நின்றது.

அநுமார் சிறிய உருவத்தை எடுத்துக் கொண்டார். எங்கும் இருள் சூழ்ந்தது. இலங்கையில் தேவர்கள் எழுதிய சித்திரம் பேல் சென்று காலங்கடந்து வருவதைக் குறித்து இராவணன் சீறுவானே என்றஞ்சி, மேல் ஆடை சரிய ஓடுகின்ற காட்சியை அநுமார் கண்டார். அப்பொழுது சந்திரன் உதித்தான்.

இலங்கையின் மதில்களின் உயரத்தையும் நுழைவாயிலின் திறத்தையும் அங்குக் காவல் செய்கின்றவர்களின் தரத்தையும் பார்த்து வியப்புற்றார். மதிலின் மீதேறித் தாவுவதற்கு முயன்றார். இலங்கையைக் காவல் செய்யும் நகர தேவதையாகிய இலங்கா தேவி அநுமாரை முன்னே செல்லவிடாமல் தடுத்தாள். நான்கு சிரங்களும் ஆயுதம் ஏந்திய எட்டுக் கரங்களும் உடைய அவள் "ஏ குரங்கே, என் அனுமதியின்றி உள்ளே நுழையக் கூடாது" என்று

தடுத்தாள். "இந்த ஊரில் மூவரும் தேவரும் நுழைய அஞ்சுவார்கள். இலைகளையும், மலர்களையும் தின்கின்ற வாநரமாகிய நீ என் அனுமதியில்லாமல் போகலாமா ?" என்று கூறினாள்.

"அநுமார், காவற்காரியே ! ஊர் பார்க்கும் ஆவலுடன் செல்லும் என்னை ஏன் தடுக்கின்றாய் ? நான் சென்றால் உனக்கு என்ன இழவு நேரும் ?" என்றார். இலங்கனி அநுமார் மேல் சூலத்தை எறிந்தாள். அநுமார் அந்தத் திரிசூலத்தைப் பிடித்து ஒடித்து அவள் முகத்தில் எறிந்தார். அவள் எறிந்த ஆயுதங்களையெல்லாம் ஒடித்துத் துகளாக்கினார். தன்னையடிக்க வந்த இலங்காதேவியின் எட்டுக் கைகளையும் பற்றி, அநுமார் ஓங்கியடித்தார். அவள் இடியேறுண்ட நாகம் போல் கீழே விழுந்தாள்.

அவள் எழுந்து அநுமாரைத் தொழுதாள். "ஐயனே, நான் இலங்கையின் காவல் தெய்வம். பிரம தேவருடைய கட்டளையினால் இந்நகரைக் காவல் செய்து கொண்டிருந்தேன். ஒரு குரங்கினால் நீ தாக்கப்படும் வரை இந்தக் காவல் தொழிலைச் செய்வாய்" என்று கூறியிருந்தார். ஆதலினால், என் காவல் தொழில் நிறைவு பெற்றது. நான் விண்ணுலகம் போகின்றேன்.

"உனது வீரத்தைக் காட்டி அசுர குலத்தை வாட்டி, உன் புகழை நீட்டிச் செல்லுக" என்று கூறிவிட்டு வானிடை சென்றாள்.

அநுமார் மதிலேறிக் குதித்து நகருக்குள் சென்றார். எங்கும் எம்பிராட்டியாரை தேடுவாரானார்.

ஒருவனுக்கு சுகம் முன் செய்த தவத்தினால்தான் எய்தும். தவம் செய்யாமல் சுகத்தை நாடுவது இரும்பை விதைத்துக் கரும்பை நாடுவது போலாகும். தவஞ்செய்தவர்கள் எல்லா நலன்களும் பெற்ற இனிது வாழ்வார்கள். இதில் யாருக்வாவது சந்தேகம் இருந்தால் இந்த இலங்கையிலே வந்து பாருங்கள். கதிர்போல் இருக்கின்ற கரிய அரக்கிமார்களை இடையே இல்லாத பொன்மேனியுடைய தேவ மாதர்கள் நீராட்டுகிறார்கள். இது அவர்கள் தவத்தால் விளைகின்றது.

## கும்பகர்ணன்

கும்பகர்ணன் துயிலுகின்ற மாளிகைக்கு அநுமார் சென்றார். அவனுடைய நாசியிலிருந்து வரும் யுகாந்த காலத்து மாருதம் போன்ற மூச்சுக்காற்றும் இவரை ஈர்த்தது. நாசிவரை சென்று பெருமுயற்சி செய்து, காற்றிலிருந்து விலகிக் கொண்டார். அந்த மாளிகையிலுள்ள மேஜைகள், நாற்காலிகள், அண்டாக்கள், குண்டாக்கள் எல்லாம் அவன் மூச்சுக் காற்றினால் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருந்தன. அவனுடைய மிகப் பெரிய உடம்பையும் வலிமையையும் பார்த்து, இவன் இராவணனோ என்ற ஐயுற்றார். பத்துத் தலைகள் இல்லாமையினால் இவன் இராவணன் இல்லன் எனத் தெளிந்தார். இவன் எழுந்து போருக்கு வந்தால் கதி என்னாகும் ? நமது வாநர சேனைகளைப் பொரிக்கடலை உண்பது போல இவன் உண்பான். இவன் இராம சரத்தால் மாண்டொழிவான் என்ற பலப்பல சிந்தித்தார்.

அங்கிருந்து வேறு பக்கமாகச் சென்றார்.

## விபீஷணர்

பயம் இல்லாதவன் என்று பொருள். இது சிவபெருமானுடைய ஆயிரம் நாமங்களில் ஒன்று. ஓம் விபீஷணாய நம, சிவபெருமான் ஒருவர்தாம், அச்சம் இல்லாதவர். நமக்கெல்லாம் இயம் பயம் உண்டு. சிவபெருமான் இயமனை உதைத்த காலகாலன் ஆவார். நாமெல்லாம் நடுங்குகிற நஞ்சை அவர் உண்டார். நமக்கு அச்சத்தைத் தருகின்ற மயானத்தில் அவர் இருக்கின்றார். நாம் அச்சப்படுகின்ற அரவுகளை அணிகலனாகக் கொண்டவர். நாம் பயப்படுகின்ற பேய்களுடன் இருந்து ஆடுபவர். நம்மையெல்லாம் சுடுகின்ற நெருப்பை அவர் கையில் ஏந்தியவர். ஆதலால், சிவமூர்த்தி - விபீஷணா என்று பேர் பெற்றார்.

விச்சிரவசு என்ற முனிவர் தம் மகனாகிய இவனுக்கு விபீஷணன் என்று சிவ நாமத்தைச் சூட்டினார். இவர் நீதியில் நின்றவர், பொறிபுலன்களை வென்றவர், இவருடைய தவப் புதல்வி திரிசடை தேவிக்கு ஆறுதல் சொல்லித் தேற்றி வருபவள். அந்த விபூஷணர் வீட்டில் சென்று தேடினார். மற்ற வீடுகளில் மதுக்குடங்களைக் கண்டார். இங்கே பூஜைக்குரிய பன்னீர்ப்

பாட்டில்களையும், பால், தேன் பஞ்சாமிர்தங்களையும் கண்டார். விபீஷணரது முகத்தில் கருணை குடிகொண்டிருப்பதைக் கண்டார். இவர் நல்லவர் என்று கருதினார். விபீஷணரது தோற்றம் தரும தேவதை கருநிறத்தோடு ஒளித்து வாழ்வது போல் இருந்தது.

## இந்திரசித்து

அநுமார் புகை நுழையாத சிறிய இடங்களிலும் நுழைந்து தேவியைத் தேடினார். பலப்பல இளம் பெண்கள் ஆடுவதும் பாடுவதுமாக அங்கு இருந்தனர். பலர் படுத்து உறங்கினார்கள். அவர்களையெல்லாம் பார்த்து ஒரு மாளிகைக்குள் நுழைந்தார். அங்கே ஆறுமுக கடவுள் ஒரு முகத்துடன் உறங்குவதுபோல் உறங்கிக் கொண்டிருந்த இந்திரசித்துவைக் கண்டார். அவன் முகத்தில் வீரமும், தோள்களில் கம்பீரமும் நிகழ்ந்தன. இவன் மிகச் சிறந்த வீரன். இவனுடன் இராம லட்சுமணர்கள் பலநாள் போர் செய்ய வேண்டிவரும் என்று கருதினார்.

அட்சகுமாரன், அதிகாயன், மகரதக் கண்ணன் முதலிய பலவீரர்களின் மாளிகையைக் கண்டு தேடிச் சென்றார்.

நடு அகழியையும் மதிலையும் கடந்து இராவணனுடைய பொன்மாளிகையை அடைந்தார்.
அதனருகில் வித்தியாதர மாதர் வீடுகளிலும் அரக்க மாதர் வீடுகளிலும், சித்த மாதர் வீடுகளிலும் தேடிவ மயன் மகளாகிய வண்டோதரியின் இல்லத்தையடைந்தார். அவள் அழகிய மஞ்சத்தில் கவலையின்றி உறங்கிக் கொண்டிருந்தாள். இவள்தான் சீதையே என ஐயங் கொண்டார் அநுமார். இராமபிரான் சொன்ன அடையாளங்களில் பல அவளிடம் இருந்தன. அவள் ஏதோ வாய் பிதற்றுவதைக் கேட்டார் ! வடவாக்கினி போன்ற கற்புடைய எம்பிராட்டி இவள் அல்லள். தேவி இங்கே இருக்கமாட்டாள். இவள் இராவணன் மனைவியே என்று சந்தேகம் தெளிந்தார்.

தனிமையில் நின்று சிந்திக்கின்றார். "இறைவனே ! ஏழு நூறு யோசனை பரப்புள்ள இலங்கை முழுவதும் அணுவணுவாகத் தேடினேன். ஏம்பிராட்டியைக் கண்டேனில்லை. கொடுந் தொழிலைச் செய்யும் இராவணன் எம்பிராட்டியைக் கொன்று விட்டானோ ? இரக்கமில்லாத அரக்கன் தேவியைத்

தின்று விட்டானோ ? வேறு உலகத்தில் சிறை வைத்திருக்கிறானோ ? ஒன்றும் எனக்குப் புரியவில்லை. நான்போய் எம்பெருமானுக்கு என்ன சொல்லுவேன் ? நான் எப்படியும் சீதையைப் பார்ப்பேன் என்றெண்ணிக் கணையாழியை என்பால் கொடுத்தார். உலக மாதாவை நான் கண்டு வருவேன் என்ற காகுத்தன் நம்பியிருக்கின்றார். தேவியைக் கொண்டு வருவேன் என்று வாநர வேந்தனாகிய சுக்ரீவன் நம்யிருக்கின்றான். சீதையைக் காணவில்லையென்று ரகுவீரனிடம் கூறுவது முறையன்று. இராவணாதி அரக்கர்களைக் கொன்று அவர்களோடு நானும் மாண்டு ஒழிவேன்.

தேவியை எப்படிக் காண்பேன் ? வலிமை மிகுந்த இராவணனைப் பிடித்து என் கரதலத்தால் அடித்து அவன் எலும்பை ஒடித்து தேவியை எங்கே ஒளித்து வைத்தாய் ? காட்டுதி, எங்கே வைத்தாய் காட்டுதி ? என்று அவன் மூலமாகவே அறிந்து கொள்ளட்டுமா ? இந்த அழகிய நகரம் எரிய தீ வைத்து கொளுத்தட்டுமா ? இலங்கையில் சீதை இருக்கின்றாள். நான் இங்கிருந்தே பார்க்கின்றேன் என்று சம்பாதி கூறினாரே. அவர் உரையும் பொய்யாகிவிட்டதே ! இந்த இலங்கையை எடுத்துக் கடலிலே கரைந்து விடட்டுமா ? இராவணனைக் கொன்று யானும் என் வாழ்நாளை முடித்துக் கொள்வேன் என்று எண்ணி மேல் திசையைப் பார்த்தார். அங்கு ஒரு சிறிய விளக்குடன் கூடிய அழகிய அசோகவனத்தைக் கண்டார்.

## அசோகவனம்



இங்கே எம்பிராட்டி ஒருகணமேதும் தூங்காமலும் கண்கள் இமைக்காமலும் துயரக்கடலில் மூழ்கி உள்ளம் வெந்து நொந்து இருந்தாள். தூக்கம் என்பது யாரையும் வாட்டி வதைக்கும்.

ஒரு நண்பன் ஓய்வு பெறக் கருதி தன் ஆருயிர்த் தோழனின் செல்வ மாளிகைக்குச் சென்றான். அவன் இவனை அன்போடு வரவேற்று நல்லுணவு நல்கி விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வு பெறுமாறு ஏற்பாடு செய்தான். அத் தனிமாளிகையில் உயர்ந்த பஞ்சனை, நறுமணம் வீசும் வத்திகள், அழகிய படங்கள், நட்சத்திரங்களைப் போன்ற சிறிய விளக்குகள், செய்தித்தாள்கள், சிற்றுண்டிகள், இனிய நூல்கள் எல்லாம் இருந்தன. வந்த நண்பன் சிற்றுண்டிகளை உண்டு செய்தித்தாள்களைப் படித்து அயர்ச்சி நீங்க, உயர்ச்சி பெற்ற படுக்கையில் படுக்க முயன்றான். அந்த வீட்டின் தலைவனான நண்பர் சன்னல் புறம் வந்து நண்பரே ! சுகமாகத் தூங்குகள், உங்களுக்கு இங்கு ஒரு குறையும் இல்லை. தாய்ப்பாலைத் தவிர, மற்ற எல்லாம் இங்கு இருக்கின்றன. நான் அயலூர்போய் விடியற்காலை வந்துடுவேன். இது உங்கள் சொந்த இல்லம். இங்கு எந்த விதமான சத்ததும் வராது. அமைதி நிலவிய அழகிய அறை, ஒரு விஷயம், ஆறடி நீளம் ஒரு பெரிய கருநாகம் இந்தச் சன்னல் வழியாக வந்து அந்தச் சன்னல் வழியாகப்

போகும். அது எந்த நேரத்தில் வரும் என்று சொல்ல இயலாது. நேற்று இங்குப் படுத்திருந்த மூன்று பேரை கடித்துக் கொன்றுவிட்டது. ஆதலால், தாங்கள் எச்சரிக்கையாகச் சுகமாகத் தூங்குகள். என்று கூறிவிட்டுச் சென்றார். வந்த நண்பனுக்கு உறக்கம் வருமா ? எந்த நேரத்தில் கருநாகம் வருமோ எனற ஏக்கந்தானே வரும் ? தூக்கம் வராது.

இராவணனாகிய கருநாகம் எந்த நேரத்தில் வருமோ ? இது அவனுடைய இடம். எந்த நேரத்திலும் வரக்கூடும். அவனைத்தடுப்பார் இல்லை என்று எண்ணுகின்ற எம்பிராட்டிக்கு உறக்கம் வராதுதானே !

பிராட்டி தனக்குள் சிந்திக்கின்றாள். இந்தக் காவல் நிறைந்த இடத்தை விட்டு நான் வெளியேறுவது எளிதன்று. என்னை இந்தக் கொடிய அரக்கன் சிறை செய்திருப்பது ஆதித்தன் குலத்துக்கல்லவா இழுக்கு ? வேதங்களின் நாயகனாகிய எம்பெருமான் வருவார், காட்சி தருவார் என்று எண்ணி நான்கு திசையும் நோக்குவாள். பவளத்தால் செய்தது போன்ற இராமருடைய கரங்களையும், கால்களையும் கொண்டு நீலமேகம் போல் விளங்கும் கருணையுருவை எண்ணுந்தோறும் நீண்ட கண்களில் இருந்து வழியும் கண்ணீரினால் தான் உடுத்தியிருந்த மெல்லிய புடைவை நனைந்துவிடும். புடைவை நனைந்தால் மாற்றிக் கட்டிக்கொள்ள வேறு புடைவை இல்லை. உடம்பிலுள்ள ஜாடராக்கினி வெப்பத்தால் நனைந்த புடைவை உலருகிறது. மீண்டும் நனைகிறது. மீண்டும் உலருகிறது. இப்படி நனைவதும் உலருவதுமாக இருந்தது. மெல்லிய புடைவையை மீண்டும் மீண்டும் உடுப்பதே அன்றி வேற ஒன்றையும் அறியாள். உடுத்தியிருக்கிற புடைவையை மீண்டும் மீண்டும் உடுப்பதற்குக் காரணம் என்ன ? உணவு இல்லாமையினால் தேவியின் உடம்பு விநாடிக்கு விநாடி இளைகின்றது. அதனால், புடைவை அவிழ்ந்து விடுகிறது. அவிழ்ந்த புடைவையை மீண்டும் மீண்டும் உடுக்கின்றாள். தேவி நீராடுவதையும் துறந்து உணவையும் மறந்து., துன்பக் கடலில் வீழ்ந்து தவிக்கின்றாள். மன்மதன் அமிழ்தத்தில் வரைந்த ஓவியம் கற்பூரப் புகைபட்டு மங்கியிருப்பதுபோல் இருந்தாள்.

தமையனாரைத் தேடிச் சென்ற இலட்சுமணர் தம் தமையனாரைச் சந்திக்கவில்லையோ ? இந்த இலங்கை கடலின் நடுவில் இருக்கின்றது என்ற

என் கணவரும், மைத்துனரும் அறியவில்லை போலும். என்னை இந்தக் கொடிய அரக்கன் இங்குச் சிறை வைத்த தன்மை தெரியாமல் இருக்கின்றார்களோ ? என்னை இராவணன் கவர்ந்த வந்ததைப் பறவை வேந்தரகிய ஜடாயு பகவான் ஒருவரே பார்த்தார். அவரை அரக்கன் சிவன் தந்த வாளல் சிறகுகளை வெட்டி விட்டான். அவர் என்னடைய நிலையை மைந்தர்களுக்குச் சொல்லாமல் இறந்து விட்டாரோ ? அவர் சொல்லவில்லையானால் என் நிலைமையை யார் சொல்ல வல்லார் ?

## வள்ளல் வழங்கிய கணையாழி



அசோக வனத்திலிருந்தே அன்னை சீதா பிராட்டிக்குப் பழைய நினைவுகள் தொடர்ந்து வந்தன. மாரீசன் சீதா லட்சுமணா என்று புலம்பிய பொய்ம்மொழியை மெய்ம்மொழியாக எண்ணி, இலட்சுமணா அண்ணனுக்கு ஆபத்து நீ போய் துணை செய் என்று அவரை மனம் நோக வைத்தேன். நான் வைத கொடுஞ்சொற்களை இலட்சமணர் தமையனாருடன் கூற, என் அருமைத் தம்பியை வைத இந்தக் கொடியவள் என்று என்னைத் துறந்து விட்டாரோ ? என்னை மறந்து விட்டாரோ ? முற்பிறப்பில் ஒற்றுமையாக வாழ்ந்த தம்பதிகளை நான் பிரித்து வைக்க அந்த வினை இப்பொழுது வந்து

மூண்டதோ ? இப்படிப் புண்ணில் எரி நுழைந்தது போல் புழுங்கி வேதனைப்படுகின்றாள்.

மெல்லிய கீரைகளை நெருப்பில் வாட்டிப் பக்குவமாக என் கணவனாருக்கு வேளை தவறாமல் உணவு தருவேனே. நான் இல்லாதபோது அப்பரம தயாள மூர்த்திக்கு யார் தரப் போகிறார்கள் ? அவரைத் தேடி விருந்தினர்கள் வந்தபோது, அவர் என்ன துன்பத்தை அடைவாரோ ? விருந்தினரை உபசரிக்க முடியவில்லையே என்று வேதனைப்படுவாரோ என்றெல்லாம் எண்ணினாள். தான் இருந்த இடத்தில் செல்லரிக்கவும் எழாமல் துன்பக் கடலில் மூழ்கியிருந்தாள்.

கொடிய அரக்கர்கள் எல்லா உயிர்களையும் புடைத்துத் தின்கின்ற பாவிகள். இத்தனைக் காலம் சீதையை வைத்திருக்க மாட்டார்கள். கொன்று தின்றிருப்பார்கள் என்று எண்ணிச் சட்டி சுட்டது கை விட்டது என்று என்னை விட்டுவிட்டார்களோ ? அல்லது தாயும் தம்பியரும் வந்து அழைக்கக் கானகத்தில் வாழும் காலமும் முடிகின்ற தருணம் ஆயிற்றே என்று அயோத்திக்குத் திரும்பிவிட்டார்களோ ! ஆனால் தாங்கள் மேற்கொண்ட வனவாசம் பூர்த்தியாகாமல் நகருக்குப் போக மாட்டார்கள். என்ன நிகழ்ந்ததோ ? யாதும் அறிகிலேன். என் கணவர் அருந்தவ சீலர், பெருங்குணக் குன்று. என்னுடைய துன்பத்துக்கு முடிவு எப்போது வருமோ ? தவஞ்செய்ய வந்த கணவனாருக்குத் தொண்டு செய்ய வந்த நான், மானைப் பிடித்துக்கொடு என்று கேட்டதும் பிழையல்லவா ? என் வினையை நான்தானே அநுபவிக்க வேண்டும் ?

என் நாயகன் விருப்பும் வெறுப்பும் அற்றவர். தந்தையார் இந்த அரசு உனக்கு உரியது நாளை முடிசூட்டுவிழா என்று சொன்னபோதும், மாற்றாந்தாய் நீ சடைமுடியோடும் மரவுரியோடும் கானகம் போ என்று கட்டளையிட்டபோதும் இன்பமும் துன்பமும் இன்றிச் சித்திரத்தில் எழுதிய செந்தாமரை போல் இருந்த தன்மையை உடையவர். கரன் முதலிய வரபலம் உடைய பதினாலாயிரம் படைகளை மூன்று நாழிகைகளில் கொன்ற வில் திறத்தை எண்ணி வெதும்புவாள்.

கங்கா நதியில் ஓடம் விடுகின்றவனும் கல்வியறிவும் ஆசாரம் இல்லாதவனும் ஊனும் மீனும் உண்பவனுமாகிய ஏழை வேடனாகிய குகனை மார்புறத் தழுவி, நீ எனக்குத் தம்பி என்று சொன்ன கருணைத் திறத்தை எண்ணுவாள்.

திருமண சமயத்தில் இராமச்சந்திர மூர்த்தி தமது புனிதமான கரங்களால் தன் கரங்களைப் பற்றியதையும் அவருடைய மேலான கரங்களால் என் காலைப் பற்றி அம்மி மீது வைத்து வேதமந்திரங்களைச் சொல்லியதையும் நினைத்து நெஞ்சம் நெகிழ்கின்றாள்.

கணவனார் கானகத்துக்குப் புறப்படும்போது தனக்கே உரிய ஆடைகள் அணிகலகன்கள் பசுக்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்களை ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்கின்றபொழுது, ஒரு வேதியனுக்கு ஆசை தணியாமல் மேலும் தரமாட்டாரா என்று ஆசையாய் விழுங்கப்பட்ட தன்மையைப் பார்த்துச் சிரித்த செய்கையை எண்ணுகின்றாள்.

சித்திரக்கூட மலையில் தங்கியிருந்த பொழுது, காலையுணவு தேடி இலட்சுமணர் வில்லையேந்திக் கொண்டு சென்றார். சீதையின் மடியில் பெருமான் தலைவைத்துச் சிறிது உறங்கி விட்டார். அப்போது இந்திரன் மகனாகிய ஜயந்தன் காகமாக வடிவெடுத்துப் பிராட்டியாரின் திருமார்பபைக் கொத்தினான். இராமர் வெகுண்டு அவர் கையில் ஆயுதம் இல்லாமையினால் படுத்திருந்த தர்ப்பைப் புல்லை உருவி மந்திரத்தைச் சொல்லி ஏவினார். அது இராம பாணமாகி அவனை விரட்டியது. அவன் எட்டுக் கோணங்களில் சென்றும், அவனுக்கு உய்வு கிடைக்கவில்லை. வேறு வழியின்றி 'இராகவா சரணம்' என்று எம்பெருமான் திருவடியில் வீழ்ந்தான். பகவான் 'முடனே, பரதார கமனம் செய்யலாமா ? உன் தந்தையாகிய இந்திரன் அகலிகையை விரும்பினான். அவன் மகனாகிய நீ பிறர் மனைவியைப் பேணுகின்ற பெரும் பாவத்தைச் செய்தனை. அடைக்கலம் என்று அடியில் வீழ்ந்த அற்பப் புறாவுக்கு உடல் தசையை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் பேரன் நான். அடைக்கலம் புகுந்தோரை ஆட்கொள்வது என் குலத்துக்கே உரிய பண்பு. நான் உன்னை மன்னித்து உயிர்ப்பிச்சை கொடுக்கின்றேன். ஆனால், இராமபாணம் வெறுமனே திரும்பாது. அதற்கு நீ ஒரு கண்ணைக் கொடுத்துவிடு என்று கூறிக் காககத்தின் ஒரு கண்ணைக் கவர்ந்தார். அன்று முதல் காகங்களுக்கெல்லாம் ஒரு கண்ணாக ஆயிற்று.

இவ்வாறு, காதல் மனைவிக்குத் தீங்கு செய்த காகாசூரனுக்கும் கருணை பாலித்த இராமருடைய கருணா விலாசத்தை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்தாள்.

இவ்வாறு, புலம்புகின்ற சீதா தேவிக்கு விபீஷணருடைய புதல்வியாகிய நற்குண நங்கை திரிசடை, சீதைக்கு ஆறுதல் கூறி அன்புடைத் தோழியாக இருந்தாள். அவள் தாயினும் சிறந்த தயாவுடையவள். சீதாதேவி திரிசடையை நோக்கிக் கூறுகின்றாள்.

"அன்புள்ள திரிசடையே ! பெண்களுக்கு இடத்தோள், இடக்கண், இடப் புருவம் துடித்தால் நல்லது, வலப்பக்கம் துடிக்கக்கூடாது என்பர். ரகுநாயகன் விசுவாமித்திரருடன் மிதிலாபுரிக்கு வந்தபோது, எனக்கு இடப்பக்கம் துடித்தது. அம்மா, நான் கணவருடன் கானகம் வந்தபோது வலப்பக்கம் துடித்தது. இப்பொழுது இடந்துடிக்கின்றது. எனக்கு நன்மை வருமோ ?"

திரிசடை, "அம்மா இப்பொழுது நல்ல நிமித்தங்கள் தோன்றுகின்றன. ஒரு பொன்வண்டு வந்து என் காதில் ஊதுகின்றது. இது இராமபிரானிடமிருந்து தூது வரும் என்பதை உணர்த்துகின்றது. அம்மா ! என் பெரிய தந்தையாகிய இராவணன் தலையில் எண்ணெய் தடவிக் கொண்டு சிவப்பு ஆடையை உடுத்திக் கொண்டு பேய்களும், கழுதைகளும் பூட்டிய தேரில் ஏறிக்கொண்டு தென்திசை போகக் கனாக்கண்டேன். அசோகவனம் அழிவதாகவும், இலங்கை மாநகரம் பற்றி எரிவதாகவும் கனாக் கண்டேன். இராவணனுடைய அரண்மனையிலுள்ள பூரண கும்பங்கள் பொங்கிவரக் கனவு கண்டேன். வண்டோதரி முதலிய தாய்மார்களின் கழுத்திலிருந்து திருமாங்கலியங்கள் தானே அறுந்து விழுவதாகக் கனவு கண்டேன். இரண்டு சிறந்த சிங்கங்கள் வந்து இலங்கையை அழித்துவிட்டுச் செல்வதாகவும், இங்கிருந்த மயில் அச்சிங்களுடன் போவதாகவும் கனவு கண்டேன்."

சீதை இதனைக் கேட்டு மகிழ்ந்து, "நல்ல கனவு கண்டனை, உன்னைப் பாதியில் எழுப்பி விட்டேனே மீண்டும் உறங்கி மற்ற கனவைக் காண்பாயாக என்று கூறினாள்."

அரக்கியர்- இராவணனுடைய கட்டளையின்படி சீதா தேவியைச் சூழ்ந்து பல அரக்கியர்கள் கொடுமைகள் செய்து கொண்டிருந்தார்கள். அந்த அரக்கிமார்கள் வயிற்றிலே வாயும், பருத்த வயிறும், அனப்பொறி பறக்கும் கண்களையும் உடையவர்கள். ஒரு தலையும் பத்துக் கையும் உடையவர்கள் சிலர், இருபது தலைகளையும் இரண்டு கைகளையும் உடையவர்கள் சிலர், சூலம், வாள், சக்கரம், அங்குசம், தோமரம், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியும் உள்ளவர் சிலர், யானை முகமும், புலி முகமும், கரடி முகமும், நாய் நரி முகங்களாகவும், கொடுமையே ஒரு வடிவமாக உடையவராகவும் ஆயிரம் அமாவாசைபோல் இருண்ட உடம்பும் திரண்ட தோள்களை உடையவராகவும் பலர் இருந்தனர்.

அவர்கள் சீதாப்பிராட்டியை நோக்கி, "சீதை ! உன் கண்ணைப் பிடுங்கிப் கழுகுகளுக்குப் போடுவோம், உன்னைத் துவையலாக அரைத்து விலங்குகளுக்கு விருந்து வைப்போம், ஏன் அழுகிறாய் ? உன்னை யார் என்ன செய்தார்கள் ? எங்கள் அரசராகிய இராவணனுக்கு அறிவே கிடையாது. விரும்பாத உன்னை அவர் விரும்புகிறாரே ? என்ன மூடத்தனம் ? முப்பது முழம் புடவை எங்களுக்கு ஒரு சுற்று வரும். எங்கள் பற்களின் இடையிடையே பேய்களும், நாய்களும் அபாயமில்லாமல் உறங்கிக் கொண்டிருக்கும். இத்தகைய எங்களை அவர் விரும்பினால் நாங்கள் மனைவிகளாக இருக்க மகிழ்ச்சியடைவோம். மின்னாம்பூச்சிபோல் இருக்கின்ற உன்னைக் கண்டு அவர் விரும்புகின்றாரே, அவருடைய அறிவின்மையை யாரிடம் சொல்வது ? எங்கள் அரசர் வந்தால் வாருங்கள் இருங்கள் வணக்கம் என்று சொல்லு. ஒன்பது மாதங்களாக அழுது நீ என்ன அடைந்தாய் ? எங்கள் மன்னவரை விரும்பினால் அரண்மனையில் சுகமாக வாழலாம் என்று கூறி, ஆயுதங்களால் இடிப்பது போலும் அடிப்பது போலும் கடிப்பது போலும் அச்சுறுத்தினார்கள்." அப்போது தேவி அடைந்த துன்பத்திற்கு எல்லையே கிடையாது.

அந்த நடுநிசியில் அருளே வடிவாகிய ஆஞ்சநேயர் அங்கு வந்து சேர்ந்தார்.

பிராட்டியாரைக் கண் குளிரக் கண்டார். அரக்கியர்களுக்கு நடுவே கண்ணீர்க் குளத்தில் இருந்த அன்னம்போல் காட்சி தரும் தெய்வக் கற்புடைய

பிராட்டியாரை நோக்கி, இவர்தான் சீதாதேவி என்று எண்ணி அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

தேவியைத் தரிசித்தல்- அருந்தவத்துப் பெண் தெய்வத்தைக் கண்ட அநுமார் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அவர் தமக்குள் எண்ணுகின்றார்.

அறம் அழியவில்லை. நானும் சாகமாட்டேன் என்று எண்ணி ஆடினார். ராம் ராம் என்று பாடினார். அந்த மரத்தின் மீது அங்கும் இங்குமாக ஓடினார். உவகைத் தேனை உண்டார். எம்பெருமான் கூறிய அடையாளங்கள் அனைத்தும் இவரிடம் இருக்கின்றன. எரிகின்ற கொள்ளியைக் கூரை வீட்டில் ஒளித்து வைத்ததுபோல், தான் அழியும் பொருட்டு இராவணன் இவரை இங்குத் கொண்டு வைத்திருக்கின்றான். பரவாசுதேவானகிய நாராயணரே இராமபிரான். தாமரையில் வாழும் மகாலட்சுமியே சீதாதேவி. இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்த அன்னை உண்ணாமலும், உறங்காமலும் நீராடாமலும், உள்ளம் வெந்து நொந்து மெலிந்திருக்கின்றார்கள். ஆ ! ஆ ! நான் இராகவனுடைய அழகிய புயத்தைப் புகழ்வேனா ? பெண்களின் திலகமாக விளங்கும் இத்தேவியின் திருவுளத்தைப் புகழ்வேனா ? அரசர்கட்கு இருக்க வேண்டிய தரும குணம் நிறைந்த ஜனக மன்னரின் குலத்தைப் புகழ்வேனா ? நான் எதனைப் பாராட்டுவேன் ?

பஞ்சாக்கினியில் நின்று உண்ணாதும் உறங்காதும் தவஞ்செய்வோரின் தவ ஆற்றலும், இம்மாதரசியின் கற்புக்கு இணையாகாது. இப்பெண்ணரசின் தவக்கோலத்தை இராமர் பார்க்கத் தவஞ்செய்தாரில்லை.

இந்த் தவப்பெருஞ் செல்வியைத் தருமமே காத்ததோ ? ஜனகராஜாவினுடைய புண்ணியந்தான் இவரைக் காத்ததோ ? கற்பு என்ற ஒன்று இவரைக் காத்ததோ ? இது அருமையிலும் அருமை. இவருடைய பெருமையை உரைக்கலாகாது. ஏன்று எண்ணி ஓர் அசோக மரத்தின் கிளையின் மறைந்து நின்று கொண்டிருந்தார்.

இராவணன் வருகை- இராவணன் ஒளி வீசுகின்ற பற்பல மணிகளைப் பதித்த அணிகலன்கள் பூண்டு சீதையை நோக்கி வருகின்றான். ஊர்வசி

உடைவாள் ஏந்தி உடன் சென்றாள். மேனகை வெற்றிலைப் பாக்கு கொடுத்துக் கொண்டு உடன் வந்தாள். திலோத்தனை அவனுடைய செருப்பைத் தூக்கிக் கொண்டு சென்றாள். ஏனைய தேவ மாதர்கள் அவனுடன் தொடர்ந்து சென்றார்கள்.

அவனது வருகையைக் கண்ட ஆஞ்சநேயர் திடுக்கிட்டார். அவனைக் கண்டு உயிர் உலைகின்ற தேவியையும், ஆசையால் வெதும்புகின்ற அரக்கனையும், அநுமார் கண்டார், தெய்வத்தை நினைத்துத் துதி செய்தார்.

இராவணன் சீதாதேவியின் அருகில் எய்தி, "பெண்கள் நாயகமே ! உனக்கு என்பால் கருணையில்லையா ? என்னை நீ அடைந்தால் மூவுலக செல்வமும் உன்னை வந்தடையும். தேவரும் மற்று யாவரும் உன்னை வணங்குவார்கள். உன் கணவன் உயிர் விடும்பொழுது கூறிய ஒலியை நீ கேட்க வில்லையா ? அடிமையாகிய என்னை நீ ஏற்றுக்கொள். என் ஆசையாகிய அனலை உன் அன்பினால் அணைத்து என்னைக் காப்பாற்று என்று முடிமேல் கரங்களைக் கூப்பிப் படிமேல் வீழ்ந்து பணிந்தான்."

சீதாதேவி எரிமலைபோல் சீறி, மூன்று உலகங்களையும் ஆளுகின்ற பேரரசனாகிய இராவணனைத் துரும்பாகக் கருதி கூறுகின்றாள்.

"ஏ அற்பனே ! என்னுடைய கணவரை என்னவென்று எண்ணுகின்றாய் ? நீ வெள்ளி மலையை அள்ளியெடுத்த பொழுது சிறு கால் விரலால் அடர்த்த சிவபெருமானுடைய வில்லை என் கணவனார் ஒடித்தபோது உண்டாகிய ஓசையைப் பதினான்கு உலகங்களும் கேட்டன. நீ கேட்கவில்லையா ? உண்மையில் நீ வீரனாக இருந்தால் போர் புரிந்து என்னைக் கவர்ந்திருக்க வேண்டும். என் கணவரும் இலட்சுமணரும் இல்லாத நேரம் பார்த்துச் சந்நியாசியாக வந்து, அன்னம் போட வந்த என்னைக் கன்னம் வைத்தனையே, இதுவா வீரம் ?"


"என் கணவரை மனிதன் என்று நீ அலட்சியமாக நினைக்கின்றனையே ! உன்னைச் சிறையில் வைத்த கார்த்தவீரியனை அழித்த பரசுராமனும் மனிதன்தானே ? உனக்கும் உன் அசுர குலத்துக்கும் நாசகாலம் நண்ணியிருக்கின்றது. உன் தங்கையின் மூக்கை அறுத்து உன்

தம்பியர்களாகிய கரதிரிசிர தூஷணாதியர்களைக் கொன்று அஞ்சா நெஞ்சுடன் விளங்குகின்ற இரகுவீரனுடைய ஆற்றலலை நீ உணரவில்லையா ? ஆயிரங் கரங்களையுடைய கார்த்த வீரியன் உன் இருபது கரங்களைப் பற்றி உன் வாயில் உதிரம் ஒழுக உன்னைக் குத்திச் சிறையில் வைத்தான். அவனுடைய ஆயிரந் தோள்களையும் சிதைத்த பரசுராமனை என் கணவனார் கணப்பெழுதில் வென்றதை நீ அறியவில்லையா ? இங்கே நின்று வீண் வார்த்தைகளைப் பேசாதே" என்று கடுமையாக நிந்தித்தாள் சீதை.

இதைக் கேட்டு இராவணன் நாணமும் கோபமும் பொங்கி வரக் காதலால் மதியற்று நின்றான். மரத்தின் கிளையில் இருந்த அநுமார். எம்பிராட்டியை என் முன்னே இவ்வாறு பேசிய இக்கொடியவனுடைய தலைகளை உதிர்த்து, என் திறனை வெளிப்படுத்துவேன் என்று இரு கரங்களையும் பிசைந்து கொண்டிருந்தார்.

இராவணன் "சீதையே ! நீ அறிவில்லாத பேதையே. நான் இராம லட்சுமணரைக் கொன்று உன்னைச் சிறையில் வைத்தால் நீ மாண்டு போவாய். ஆதலால், இந்த மாயஞ் செய்தேன். நான் நினைத்தால் இராம லட்சுமணர்களை ஒரு கையால் தூக்கி வருவேன். அவ்விருவரையும் வாளினால் வெட்டுவேன். ஆனால், உன்னை எனக்குத் தந்த அந்த உதவியை எண்ணி அவர்களைக் கொல்லாமல் இருக்கின்றேன். நான் இராம லட்சுமணரைக் கொல்லுவதேயன்றி அயோத்தினை யடைந்து பரத சத்ருக்னர்களையும் கொன்று மீளுவேன். என்னை யாரென்று எண்ணினாய் ?" என்று கூறிவிட்டு, அங்குள்ள அரக்கிமார்களை நோக்கி, "சீதை எனக்கு வசமாகும்படிச் செய்யுங்கள் !" என்று கூறிவிட்டுச் சென்றான்.

## அநுமார்



அநுமார் இவ்வாறு பல அடையாளங்களைச் சொல்லி முடிவில் கணையாழி - மோதிரத்தைக் கொடுத்தார். அப்பொழுது அம்மை, இந்தப் புனித மோதிரம் பாவம் நிறைந்த அரக்கரின் நகருக்கு வந்ததே என்று கண்ணீரால் அபிஷேகஞ் செய்தாள். அந்தக் கணையாழி, சனகர், திருமணத்தின்போது மருமகனுக்குத் தந்த பரிசு மோதிரம். சீதாதேவி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. நல்ல நாகம் மீண்டும் யாரையும் கடிக்காமல் நீண்ட நாள் வாழ்ந்தால், அதன் நஞ்சு நாகரத்தினமாக மாறும். அந்த நாக ரத்தினத்தை இழந்த நாகம் மீண்டும் அதை அடைந்தால் எத்துணை மகிழ்ச்சியடையுமோ அத்துணை மகிழ்ச்சியடைந்தாள். பழம்பொருளை இழந்தவர்கள் மீண்டும் பெற்றவர்போல் உவந்தாள். நீண்ட நாள் குழந்தையில்லா மலடி குழந்தையைப் பெற்றததுபோல் பெரிதும் மகிழ்ந்தாள். அநுமாரை நோக்கி, வாழ்த்துக் கூறுகின்றாள்.

"அன்பின் வடிவாகிய ஆஞ்சநேயா ! உலகத்தைத் தந்த பிரமதேவனைத் தந்த முதல்வனுக்குத் தூதாக வந்தாய், எனக்கு உயிர் தந்தாய், அம்மையும் அப்பனும் அத்தனும் ஆகி நின்றாய். சிறந்த தோள்களையுடையவனே !

உயிரை கொடுத்து வள்ளலே ! பதினான்கு உலகங்கள் அழிந்தாலும் நீ அழியாமல் நித்திய சிரஞ்சீவியாக இரு" என்று வாழ்த்தினாள்.

சீதாதேவி, அநுமாரை நோக்கி, "மகனே" என்று அழைத்திருக்கலாம். அவ்வாறு அழைக்காமல் வள்ளலே என்று அழைக்கின்றாள். அநுமார் பொன்னும் பொருளுமா தந்தார் ? அன்னமும் ஆடையுமா தந்தார் ? அவர் அப்போது தந்தது எதனை ? தேவிக்கு இன்னுயிரை ஈந்தார். சீதை உள்ளம் வெந்து நொந்து உயிர்விடத் துணிந்தபோது கணையாழியைத் தந்து ஆருயிரை வழங்கினார். சீதைக்கு மட்டுமா உயிரைத் தந்தார் ?

## அஞ்சனை குமாரனின் ஆற்றல்



அநுமாரைச், சீதாதேவி வள்ளலே என்று அழைத்த காரணம் என்ன ?

சீதாதேவி மாண்டால் இராமரும் இலட்சுமணரும் மாள்வார்கள். அக்கணமே சுக்ரீவன் அங்கதன் முதலிய வாநர வீரர்கள் மாள்வார்கள். இந்தச் செய்தியை அறிந்தவுடன் பரதனும், சத்ருக்னனும் மாள்வார்கள். மூன்று தாய்மார்களும் மாள்வார்கள். அதனால், அயோத்தியில் உள்ள மாந்தர்கள் மாள்வார்கள். அதனால், பக்த உலகமே அழியும். அநுமார் சீதைக்கு உயிர் தந்து உலகத்துக்கே உயிர் தந்தார். அதனால் வள்ளலே என்று அழைக்கின்றார்.

சீதாதேவி அநுமாரை நோக்கி, "நீ யார் ? எம்பெருமானுக்கும் உனக்கும் எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது ? இங்கு நீ எவ்வாறு வந்தாய் ?" என்று வினாவினார்.

அநுமார், "தாயே ! இராவணன் தங்களைக் கவர்ந்தபின் இராமலட்சுமணர் தங்களைத் தேடி வரும்பொழுது ஜடாயுவைக் கண்டார்கள். அவர் தங்கள் நிலைமையைக் கூறி இறந்துவிட்டார். பின்னர், தங்களைத் தேடிக் கொண்டு வந்து கிஷ்கிந்தையை அடைந்து சூரிய குமாரனாகிய சுக்ரீவனுடன் நட்பு

கொண்டார். நீங்கள் அன்று எறிந்த அணிகலன்களைக் கண்டு உயிர் தளிர்த்தார். இராவணனை வென்ற மாவீரனாகிய வாலியை ஒரே அம்பினால் வதைத்தார். சுக்ரீவனுக்கு முடிசூட்டினார். சுக்ரீவனுக்கு எழுபது வெள்ளம் வாநர வீரர்கள் துணை செய்ய இருக்கின்றார்கள். அம்மா ! என்னை எவ்வாறு கடல் கடந்து வந்தாய் என்று கேட்கின்றீரே. தங்கள் கணவனாருடைய திருவடியைத் தியானிக்கின்றவர்கள் பிறவிக்கடல் ஏழையும் கடப்பார்கள். நான் இந்த உவர்க்கடலைக் கடந்தது ஒரு சிறப்பா ? தாயே, எம்பெருமானுடைய பணி செய்யும் வீரர்கள் கடலின் மணலைவிட அதிகமாகப் பலர் இருக்கின்றார்கள். அந்த இராம அடியார்களில் அடியேன் கடைப்பட்டவன். அங்கும் இங்கும் போகுமாறு சிறியவர்களுக்குத் தானே கட்டளையிடுவார்கள் ? இராமன் அடியார்களில் ஒருவனாகிய யான் கடலைக் கடந்து வந்தேன்".

சீதை, "அப்பா ! அநுமானே ! இங்கு அதிகம் நீ காலதாமதம் செய்யக்கூடாது. நான் இந்த இலங்கையில் கால் வைத்தபோது ஒரு கர்ப்பவாசம் (பத்துமாதம்) இருப்பதாகத் திட்டமிட்டேன். இன்றுடன் ஒன்பது மாதங்கள் பூர்த்தியாகி விட்டன. அதற்குள் எம்பெருமான் வந்து இராவண சம்மாரம் செய்து என்னைச் சிறை மீட்டுப் போகுமாறு வேண்டினேன். என்று சொல்வாயாக. ஒருக்கால் இந்த ஒரு மாதத்திற்குள் இங்கு வர இயலவில்லையானால் நான் இங்கு மாண்டு ஒழிவேன். எம்பெருமான் அப்படியே அயோத்தி சென்று கங்கைக் கரையில் எள்ளுந் தண்ணீரும் இறைக்கச் சொல்லுவாயாக. குழந்தை இல்லாத எனக்கு நீர்க்கடன் அவர்தானே செய்ய வேண்டும் ? நான் இங்கு மாளுந் தன்மையை அடைந்திருக்கின்றேன். ஆதலால், என்னுடைய சிறந்த மாமியார் மூவருக்கு வணக்கஞ் செலுத்தினாள் என்று கூறுவாயாக. சுக்ரீவனுக்கு என்னுடைய ஆசியைக் கூறுவாயாக. எம்பெருமான் அயோத்திக்குச் செல்லும் பொழுது நீங்கள் உடன் சென்று அவருக்கு முடிசூட்டு விழா செய்யுங்கள். அந்தப் பட்டாபிஷேகக் கோலத்தைப் பாவியாகிய யான் பார்க்கத் தவஞ் செய்திலேன்" என்று கூறினாள்.

அநுமார், சீதையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "அம்மா ! நான் சென்று இராமரிடம் கூறி, அவர் வந்து போர் புரிந்து தங்களை மீட்கின்ற தன்மை வேண்டாம். அது கால தாமதம் ஆகும். அடியேனுடைய தோள் மீது அமருங்கள். அடுத்த விநாடியில் இராமருடைய திருவடியில் தங்களை ஒப்படைப்பேன்" என்று கூறினார்.

சீதாதேவி, "அநுமானே ! உன் அன்புக்கு நன்றி. உன்னுடைய ஆலோசனை நன்றன்று. பாரத நாட்டின் பண்பின்படி வயதுக்கு வந்த மகனைத் தாய் தீண்டக்கூடாது. நீ எனக்குச் சேய், நான் உனக்குத் தாய். என்னைத் தீண்டிக் கொண்டு போவது சிறப்புடையதாகாது. இராவணனே என்னைத் தீண்டாமல் கொண்டு வந்திருக்கிறான் மகனே ! நீ கூறியது சரியன்று" என்று கூறினாள்.

அநுமார், "அம்மா ! நான் தங்களைத் தீண்டவில்லை. இந்த இலங்கையை வேருடன் பறித்து இராமர் முன்னே கொண்டு போய் வைப்பேன். அப்போது தாங்கள் எம்பெருமானை அடையலாம்" என்றார்.

"அநுமானே, நீ சிறிய குரங்காக இருக்கின்றனையே, நீ எவ்வாறு இலங்கையை எடுப்பாய் ?" என்று கேட்டாள் சீதை.

அநுமார், "அம்மா அருந்ததியே ! நானா சிறியவன் ? என் வடிவத்தைப் பாருங்கள் என்று விசுவரூபத்தை எடுத்தார். அவருடைய திருவடி அதல பாதாலத்திலும், திருமுடி சந்திர மண்டலம், சூரிய மண்டலங்களையும் கடந்து நின்றது. சீதாதேவி தலைநமிர்ந்து எட்டியெட்டிப் பார்த்தாள். அநுமாருடைய முழுங்காலும் தெரியவில்லை. அதிசயம் அடைந்தாள். மகனே ! இந்த வடிவத்தைக் காண அஞ்சுகின்றேன். அடங்குவாயாக" என்றாள்.

நல்ல குடும்பத்தில் தாய் தந்தையர் அடக்கினால் பிள்ளைகள் அடங்கும். அல்லாத குடும்பத்தில் தாய் தந்தையரை அடக்கும். சீதாதேவி அநுமாரைப் பார்த்து அக மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கூறுகின்றாள்.

மகனே ! எம்பெருமானுக்கு இலட்சுமணரைத் தவிர வேறு துணையில்லை என்று எண்ணினேன். நீ ஒருவன் துணையாக அமைந்திருப்பதால் பகவானுக்கு ஆகாத காரியம் ஒன்றும் இருக்காது. இலங்கை, கடல் கடந்து இருக்கின்றதே என்று எண்ணினேன். உன்னுடைய பேராற்றலைக் கண்ட பின், ஏழு கடல்களுக்கு அப்பால் இருந்தால் என்ன, என்று எண்ணுகின்றேன். இந்த இலங்கை உனக்குச் சுண்டு விரல் பாரம்.

"ஆனால், என்னைக் கண்ணீர்விட்டு அழுகின்ற அபலை என்று எண்ணாதே. இந்த இலங்கையை அழிக்க எம்பெருமான் இளைய பெருமாளுடன் எழுபது வெள்ளம் வாநர சேனையுடன் வர வேண்டுமா ? கோதண்டத்தை வளைக்க வேண்டுமா ? அம்புகளைத் தொடுக்க வேண்டுமா ? இந்த இலங்கையையும் ஏனைய உலகங்கள் எல்லாவற்றையும் அழிகஎன்று ஒரு சொல்லால் அழித்துவிடுவேன். அத்துணை ஆற்றல் என்பால் அமைந்துள்ளது. நான் இலங்கையையும் இராவணாதி அரக்கர்களையும் ஒரு கணத்தில் எரித்துவிடுவேன். அப்படி எரிந்தால் சீதாயணம் என்றுதானே பேர் வரும் ? இராமாயணம் என்று பேர்வராதே. பெண்ணாகப் பிறந்தவர்கள் கணவனுக்குப் புகழ் தேடிக் கொடுக்க வேண்டும். அதனால், என் கற்புக்கனலை அடக்கிக் கொண்டிருக்கின்றேன். நீ உன் வாலை மடக்கிக் கொண்டு பெருமானிடம் போய் வா".

மகனே, விதியை வென்றவர்கள் யார் ? விதிவழி மதி செல்லும் விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் மாட மாளிகைகளையும் துறந்து வந்த யான், அற்பமான மானை விரும்பினேனே. இதற்குக் காரணம் விதியின் செயலாகும். ஒருகால் இலங்கையில் நான் மாண்டு போவேனானால் மறுபிறப்பில் எம்பெருமான் எனக்குச் கணவனாக வர வேண்டும் என்று வரம் கேட்டதாகப் பெருமானிடம் கூறுவாயாக.

ஆஞ்சநேயா ! இராமச்சந்திர மூர்த்தி அயோத்தியிலிருந்து மதிலாபுரிக்கு வந்து என் கையைப் பற்றிய அன்று, இந்த இராமாவதாரத்தில் இரு மாதரைத் தொடேன் ! என்று எனக்கு வரங் கொடுத்ததை அவருக்கு நிளைவூட்டுவாயாக. மிதிலாபுரிக்குச் சென்றால் என் தாய் தந்தையருக்கு என் அன்பு வணக்கத்தை அறிவிப்பாயாக.

"தாயே ! நீங்கள் சிந்தை நொந்து செப்புவதைக் கேட்டு உளம் நொந்து உரைக்கின்றேன். தாங்கள் அகால மரணம் அடைய வேண்டாம். நான் சென்று இராமரைப் பார்ப்பதுதான் தாமதம். நான் சென்று தெரிவித்தவுடன், என் தோள்களில் இராமரும் அங்கதன் தோள்களில் இலட்சுமணரும் வாநர சேனைகளுடன் இங்கு வருவார்கள. அரக்கர்கள் அழிய உதிர ஆறு ஓடும். ஆரக்கிமாரும் அறுத்து வீசிய வாலினாலும் கடக்க முடியாத தாலி மலை இங்குக் காணப்படும். புண்ணின் நீராகிய உதிரத்தில் குளித்த பறவைகள் அரக்க மாதர்களின் கண்ணீரில் குளிப்பதைக் காண்பீர்கள். தங்கள் திருமேனியை உற்றுப் பார்த்த இராவணனுடைய கண்களைக் காக்கைகள் கொத்தித் தின்பதைக் காணப் போகிறீர்கள்.

உலக மாதாவே ! அரம்பையர் ஆடிய நடன சபைகளில் குரங்குகள் நடிப்பதைக் காண்பீர்கள். ஆகவே, அறம் வெல்லும் மறம் தோற்கும்" என்று கூறினார் அநுமார்.

சீதாதேவி, "நான் ஒரு கிளியை வளர்த்தேன். அது முட்டை யிட்டுக் குஞ்சு பொரித்தது. அதற்கு என்ன பெயர் சூட்டலாம் என்று கேட்டேன். அதற்கு எம்பெருமான் என் தாய் கைகேயின் பெயரைச் சூட்டு" என்றார் இந்த அடையாளத்தைச் சொல் என்றாள்.

**சூடாமணி:** பின்னர் தன் மடியில் முடித்து வைத்திருந்த சூடாமணியை எடுத்து அடையாளமாக கொடுத்தாள் அம்மணி. இளம் ஞாயிறுபோல் அது ஒளி செய்தது. இதனை அநுமார் தொழுது வாங்கினார். கண்களில் ஒற்றிக் கொண்டார். அதனை துணியில் முடிந்து பத்திரப்படுத்திக் கொண்டார். சூடாமணி என்பது செய்யா என்ற வாய் பாட்டின்படி சூடுகின்ற மணி எனக் கருதுக.

தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தத்துடன் சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி என்ற மூன்று மணிகள் தோன்றின. சிந்தாமணியை இந்திரன் அடைந்தான். இந்திரன் விநாயகருடைய திருக்கரத்தில் இருக்கும் தங்கக் கலசத்தில் பதித்து விநாயகருக்கு ஈந்தான்.

அந்தச் சிந்தாமணியுடன் கூடிய தங்கக் கலசத்தால் விநாயகர் நாள்தோறும் அம்மையப்பரை வழிபடுவார்.

இரண்டாவது கௌஸ்துபமணியை நாராயணர் திருமார்பில் அணிந்து கொண்டார். மூன்றாவது சூடாமணியை, பாற்கடல் கடையத் துணிந்த 'நிமி' என்ற மன்னனுக்கு அளித்தார்கள். இவன் பூசித்து வந்தான். இவன் மரபில் வந்த சீரத்துவச ஜனகர், தமக்கு வேறு ஆண் சந்ததி இல்லாமையால் இதைத் தலையில் சூடும் அணிகலனாகச் செய்து, தம் தவப்புதல்வி சீதா தேவிக்குத் தந்தார். இந்த மணியை உயிரினும் உயர்ந்ததாக எண்ணிச் சீதா தேவி இதனைப் பூசித்து வந்தாள். இந்த மணியைத்தான் இப்போது மாருதியிடம் தேவி தந்தாள்.

சூடாமணி மிகுந்த மகத்துவம் உடையது. இந்தச் சூடாமணி போல் முருகப் பெருமானுடைய திருமேனி ஒளி வீசும் என்று அருணகிரிப் பெருமான் கூறுகின்றார்.

**அசோக வனத்தை அழித்தல்:** அநுமார் பிராட்டியாரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். 'நாம் வந்து திருடனைத் தேள் கொட்டியது போல் வெறுமையாகத் திரும்பிப் போவது நன்றன்று. அந்த அசோகவனத்தை அழித்தால் அரக்கர்கள் வருவார்கள், அரக்கரை அழித்தால் இராவணன் வருவான். அவனைக் கண்டு உரையாடி மீளலாம்' என்று கருதினார்.

வானோங்கி வளமோங்கிச் செழித்திருக்கின்ற பூமரங்களையும், மாமரங்களையும் வேராடு அழித்துப் பிடுங்கி வீசினார். சில மரங்களில் தூக்கணாங்குருவி கூடு கட்டியிருந்தன. அம்மரங்களைப் பிடுங்கி வானிலே வீசிய போது அக்குருவிகள் கூட்டுடன் சுவர்க்கத்தை அடைந்தன. புண்ணியம் செய்தவர்கள் கூண்டுடன் கைலாசம் போவார்கள் என்பது பழமொழி. இங்கே இப்பொழுது அநுமார் சீற்றத்துடன் செய்த செய்கையே குருவிகளுக்குக் கூட்டுடன் சுவர்க்கம் கிடைத்தது. அவர் கருணையோடு அருளியிருந்தால் என்ன கிடைக்காது ?

மாருதி ஓர் ஓம மண்டபத்தைப் பிடுங்கி இலங்கை மீது எறிந்தார். அதனால், அரக்கர்கள் பலர் மாண்டார்கள். காவல் செய்கின்ற தேவர்கள்

இராவணனிடம் ஓடி வணங்கி, "மன்னர் பெருமானே, ஒரு வானரம் வந்து அசோக வனத்தை முற்றிலும் அழித்துவிட்டது" என்று கூறினார்கள். "ஆதித்தனும் நுழையாத அசோக வனத்தை ஒரு குரங்கு அழித்தது என்று மூடரும் மொழியார். நீங்கள் என்ன கனவு கண்டீர்களா ?" என்று தோள் குலுங்கச் சிரித்தான் இராவணன்.

**கிங்கரர் வதை:** கிங்கரர் என்ற ஒருவகை அரக்கர்களை அழைத்து, "நீங்கள் சென்று அக்குரங்கை உயிருடன் பிடித்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான். கடல் கொந்தளித்துக் கரை கடந்து வருவது போல் கிங்கிரர் அநுமார் இருக்கும் இடத்தை நோக்கி வந்தார்கள். போர் என்றால் அவர்கட்குத் தேன் போல இனிக்கும். இடி போல முழங்குவார்கள். சக்கரம், உலக்கை, தண்டாயுதம், வாளாயுதம், இரும்புவளைத்தடி, சம்மட்டி, பிண்டிபாலம், சூலம், வச்சிராயுதம், குந்தம், மழு முதலிய ஆயுதங்களை ஏந்திக் கொண்டு வந்தார்கள்.

அநுமார் அந்த அரக்கர் சேனையைக் கண்டு அதிக மகிழ்ச்சியடைந்தார். விண்ணளாவிய ஒரு மரத்தை வேருடன் பிடுங்கி நான்கு திசைகளிலும் சக்கரம்போல் சுழற்றிப் போர் புரிந்தார். தாள்களால் சிலரைக் கொன்றார். தடக்கையால் சிலரைக் கொன்றார். தோள்களால் பலரை மாய்த்தார். அரக்கர் கரங்களில் இருந்த வாள்களால் பலரைக் கொன்றார். அரக்கர் அனைவரும் மாண்டு ஒழிந்தாரகள். தேவர்கள் மகிழ்ந்து அநுமன்மீது மலர்மழை பொழிந்தார்கள். காவல் புரியும் தேவர்கள் இராவணன் முன்சென்று அரக்கர்கள் மாண்டார்கள் என்று சொல்ல அஞ்சினார்கள். வாய் குழறினார்கள். பூமியில் கால் தோயாது கையால் காட்டி உரைத்தார்கள்.

இராவணன் பெருஞ் சீற்றம் அடைந்து, ஜம்புமாலி என்ற சேனைத் தலைவனை, "நீ சென்று அந்த வானரத்தை உயிருடன் பிடித்து வா" என்று பணித்தான்.

ஜம்புமாலி இராவணனுடைய கட்டளையைக் கேட்டு "இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே. இத்தனை வீரர்கள் இருந்தும் என் தலைவன் என்னை மதித்து

இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கினானே ? நான் பெரிய பாக்கியசாலி" என்று எண்ணி உள்ளம் உவந்து சேனைகள் சூழப் போருக்குப் புறப்பட்டான்.

தோமரம், மழு, வச்சிராயுதம், அங்குசம், வேலாயுதம், சக்ராயுதம், வில், தண்டாயுதம் முதலிய ஆயுதங்களைத் தாங்கிய வீரம் மிகுந்த அரக்கர்கள் அவனைச் சூழ்ந்து சென்றார்கள். தேர் வீரர்கள் பதினாயிரவர், யானை வீரர்கள் இருபதினாயிரவர், குதிரை வீரர்கள் நாற்பதினாயிரவர், காலாட்கள் எண்பதினாயிரவர், அவனைச் சூழ்ந்து ஆரவாரஞ் செய்து மகிழ்ச்சியுடன் சென்றார்கள்.

அநுமார் தோரண கம்பத்தின் உச்சியில் அமர்ந்திருந்தார். ஆழமான குளத்தைக் கண்டால் நீந்துகின்றவனுக்கு மகிழ்ச்சி, பெருங் கூட்டத்தைக் கண்டால் பிரசங்கம் செய்கின்றவருக்கு மகிழ்ச்சி. அதுபோல், போரில் மிகுந்த சேனைகளைக் கண்டால் வீரனுக்கு மகிழ்ச்சி. அநுமார் இராமருடைய திருவடியைச் சந்தித்து அங்கு ஒரு பக்கம் இருந்த தண்டாயுதத்தை எடுத்தார். இயமனைப் போல் சுழன்றார். பானைகளை உடைக்கும் கைத்தடியானைப் போலச் சேனைகளைக் கொன்று குவித்தார். பிணமலை குவிந்து உதிர ஆறுகள் ஓடின. ஜம்புமாலி தனித்து நின்றான். அநுமார் அவன்மீது கருணை கொண்டு, "அறிவில்லாத வீரனே ! உனக்கு உயிர்ப் பிச்சை தருகின்றேன். போ !" என்றார். ஜம்புமாலி அநுமாருடைய கருணைத்திறத்தைக் கண்டு வியந்தான். அநுமாரை எதிர்த்துப் போர் புரிந்து மாண்டான். ஒரு தூதன் இராவணனிடம் ஓடிப் போய் ஜம்புமாலி மாய்ந்ததைக் கூறினான். "அரசர் தலைவா ! குரங்கு ஒன்றுதான் அசுர சேனைகளை அழித்தது" என்றான்.

**பஞ்ச சேனாதிபதிகள்:** இதனைக் கேட்ட இராவணன் எரி மலைபோல் சீறினான். "என்னுடைய இலங்கை ஆட்சி நன்று, நன்று, இலைகளையும் மலர்களையும் உண்ணுகின்ற ஒரு குரங்கு இலங்கை வந்து என்னுடைய பலநாள் வளர்த்த அசோகவனத்தை அழித்துக் கிங்கிரர்களையும் ஜம்புமாலியையும் கொன்று ஊருக்கும் போகாமல் இன்னும் போருக்கு என்று இருக்குமானால், இதனைவிடப் புதுமை என்ன இருக்கின்றது ? தேரைக் கொண்டு வருக. நானே போர் புரியச் செல்லுவேன்" என்றான்.

அவனுடைய சீற்றத்தைக் கண்டு அனைவரும் அஞ்சினார்கள். அப்போது, பஞ்சசேனாதிபதிகள் விருட்பாட்சன், யூபாட்சன், துர்த்தரன், பிராசன், பாசகர்ணன் என்று பேருள்ளவர்கள் இராவணனைப் பணிந்து, "எங்கள் தனிப் பெருந்தலைவா ! ஓர் எறும்பைக் கொல்ல மாவீரன் தண்டாயுதத்தைத் தாங்கிப் புறப்பட்டுப் போவதுபோல், ஒரு குரங்கைக் கொல்லப் போவது தங்கள் வீரத்துக்கு இழுக்கல்லவா ? எங்களுக்கு அநுமதி கொடுங்கள். புழுவைக் காலால் தேய்ப்பதுபோல அக்குரங்கை அழித்து வருவோம்" என்றார்கள்.

இராவணன் புன்முறுவல் பூத்து, "நன்று கூறினீர்கள் நல்லது. சென்று வென்று அக்குரங்கைப் பற்றிக் கொண்டுவாருங்கள்" என்றான். பஞ்ச சேனாதிபதிகள் சதுரங்கசேனையுடன் போருக்குப் புறப்பட்டுச்சென்றார்கள். அவ்வாறு, அரக்க வீரர்கள் போருக்குப் போகும்போது, அவர்களின் மனைவி மார்களும் புதல்வர்களும் அவர்களை இடைமறித்து அழுது தொழுது, "போருக்குப் போக வேண்டாம் போனால் திரும்பி வரமாட்டீர்கள். வந்திருப்பது வானரம் அன்று. இலங்கையை அழிக்க வந்த பூதமாகும். காதலால் கூறுகின்றோம், போகவேண்டாம்" என்று கூறிப் புலம்பினார்கள்.

அசுரர்கள் அவர்கட்குச் சமாதானம் கூறிப் போர்க்களம் போனார்கள். சேனாதிபதிகள், "அந்த வானரம் எங்கே ?" என்று கேட்டார்கள்.

அங்கிருந்த தூதர்கள், "அதோ, அந்தக் தோரணத் தூணின் மீது இருக்கின்றது பாருங்கள். அது குரங்கன்று. அசுர குலத்தை அழிக்க வந்த கடவுளாகும்" என்றார்கள். பஞ்சனோதிபதிகளுடன், ஐம்பதாயிரம் தேர்கள், ஐம்பதினாயிரம் யானைகள், ஒரு லட்சம் குதிரைகள், இரண்டு லட்சம் பதாதிகள், கடல் போல் முழங்கியபடி வந்தன. உதிரச்சேற்றில் தேர்கள் வேகமாகச் செல்ல முடியாமல் தவித்தன.

அநுமார் பேருருக்கொண்டு யானையுடன் மற்றொரு யானையை மோதியும், தேருடன் மற்றொரு தேரை மோதியழித்தும், அவர்கள் கையில் உள்ள ஆயுதங்களைப் பறித்தும், அந்த ஆயுதங்களாலேயே அவர்களைக் கொன்றும்,

ஊழிக் காலத்தில் எழுகின்ற அக்கினியைப்போல் அந்த அசுர சேனைகளை அழித்து, ஐந்து சோனதிபதிகளையும் உதைத்து வதைத்தார்.

சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களையும் ஞானி ஒருவரே அடக்குவது போல அநுமார் ஒருவரே பஞ்சசேனாதிபதிகளையும் வதைத்தார். ஆன்மாக்களாகிய நமக்கு மிக்க அல்லல் தருவது இந்த ஐம்புலன்களேயாகும். "ஐம்புல வேடரின் அயர்ந்தனை" என்பது சிவஞானபோதம். "வளைத்து நின் றைவர் கள்வர் மனத்திடை துயரம் செய்து.. ." என்கிறார் அப்பர்பெருமான்.

"ஓரவொட்டார் ஒன்றை உன்ன வொட்டார் மலர் இட்டுனதாள். சேரவொட்டார் ஐவர் செய்வதென்யான்" என்கின்றார் அருணகிரிநாதர். பஞ்ச சேனாதிபதிகள் ஐம்புலன்களை ஒத்தார், அநுமார் அறிவைஒத்தார்.

காவல் வீரர்கள் ஓடி இராவணனைப் பணிந்து துக்கப்படுவார் போல் நடித்து, "வேந்தே ! சேனைகளுடன் சென்ற ஐம்பெருஞ் சேனைத் தலைவர்கள் அக்குரங்கினால் கொல்லப் பட்டார்கள். அந்த வானரம் சோம்பி இருக்கின்றது" என்றார்கள்.

## அட்ச குமாரன்

இலங்கை முழுவதும் மாதர்களின் அழுகை ஒலி நிறைந்தது. "மகன் மாண்டான்" என்றும், "மணவாளன் மாண்டான்" என்றும், "உடன் பிறந்தான் இறந்தான்" என்றும் அரக்கியர்கள் வாய்விட்டு அழுதார்கள்.

பரம பதிவிரதையாகிய சீதாதேவி ஒருத்தியை அழவைத்த பாவம் இன்று இலங்கையே அழுகின்றது.

பஞ்சசேனாதிபதிகள் மாண்டார்கள் எனக் கேட்ட இராவணன் பெருஞ்சீற்றத்தை அடைந்தான். மீண்டும் தானே போருக்கு ஆயுத்தமானான். அப்போது அவனுடைய கடைசி மகன் அட்ச குமாரன் தந்தையை வந்தனம்

புரிந்து, "தந்தையே! நான் ஒருவன் இருக்கின்றேன் என்ற எண்ணமே இல்லையா ? இந்த வாய்ப்பை எனக்கு கொடுங்கள். தூணிலே இருந்து வந்த நரசிங்கனே என்றாலும், உலகை ஒரு பந்துபோலத் தன் தந்தத்தால் தூக்கிய வராகமேயானாலும் நான் கொல்ல வல்லேன். என் ஆற்றலை உலகம் அறிந்து பாராட்டும், எனக்கு கட்டளையிடும். ஒரு நொடியில் குரங்கைப் பற்றி வருவேன்" என்றான்.
இராவணன் மகனை மார்புறத் தழுவி விடை கொடுத்து அனுப்பினான்.

அட்ச குமாரன் தேரில் ஏறியபோது அவனுடன் பன்னீராயிரம் இளம் புதல்வர்களும், மந்திரிகளின் மைந்தர்களும், சேனைத் தலைவர்களின் மைந்தர்களும், வேறு வேறு பதவியில் உள்ளவர்களின் மைந்தர்களும், இராவணனுக்குத் தேவமாதர்களின் வயிற்றில் பிறந்தவர்களும், நான்கு லட்சம் இளம் வீரகுமாரர்கள் அட்ச குமாரனைச் சூழ்ந்து சென்றார்கள்.

இவ்வாறு செல்லுகின்ற மைந்தர்கட்குப் பின்னே காகங்களும், கழுகுகளும், பேய்களும், அந்த அரக்கர்கள் எண்ணிலாத காலமாகச் செய்து வந்த தீவினையும் தொடர்ந்து சென்றன. போர்ப் பறைகள் முழங்கின. மாதர்களின் அழுகை ஒலியும், போர்ப்பறை ஒலியும் எங்கும் முழங்கின. இராக்கதர்கட்கு இடத் தோள்களும் இடக்கண்களும் துடித்தன.

தோரணத் தூணின் உச்சியில் அமர்ந்து "ராம் ராம் ராம்" என்று ஜபித்துக் கொண்டிருந்த அநுமார் அட்சகுமாரன் சேனைகள் சூழ வருகின்ற காட்சியை கண்டார். இவர் இந்திரஜித்தோ ? இராவணனோ ? என்று ஐயுற்றார் ? பல தலைகள் இல்லாமையால் இராவணன் அல்லன், இவன் மிக்க இளமையாக இருப்பதனால் இந்திரஜித்தும் அன்று, இன்று நமக்கு நல்ல வேட்டைதான் ! என்று எண்ணினார். அந்தச் சேனைகளை நோக்கித், தன் அழகிய தோள்களை நோக்கி, இராமபிரானை அகக் கண்களால் நோக்கித் தொழுதார்.

அட்ச குமாரன் அநுமாரைப் பார்த்து, அலட்சியமாகத் தோள் குலுங்க நகைத்தான். "இந்தச் சிறு குரங்கா இத்தனை வீரர்களைக் கொன்றது ?" என்று கூறினான்.

அட்ச குமாரனுடைய சாரதி, "ஐயனே ! இதனைக் குரங்கென்று அலட்சியமாக நினைக்க வேண்டாம். உங்கள் தந்தையாரை வாலால் கட்டியடக்கிய வாலியுங் குரங்குதானே ? வீரம் எங்கெங்கோ இருக்கும்" என்றான்.

காய்ந்து உலர்ந்த புல்வனத்தில் கனல் நுழைந்தது போல் அநுமார் சேனைக்கூட்டத்தில் நுழைந்து, அவர்கள் ஏந்தியிருந்த ஆயுதங்களை பிடுங்கி, அவற்றினாலேயே அவர்களைக் கொன்று அழித்தார். அத்தனைப் பேர்களின் உயிரைப் பற்றிக் கொண்டு போக இயமனுக்கு ஆயிரம் கோடி தூதர்கள் இருப்பர் போலும். அரக்கர் சேனைகளை அழித்துவிட்டு, அட்சகுமாரன் தேர்மீது தாவிக் குதித்து, அவன் வில்லைப் பறித்து நிலத்தில் இட்டுத் தமது பாதத்தால் தேய்த்துக் கொன்றார். அப்படித் தேய்த்துக் கொன்றவர், உலகம் தேய்ந்து அழியினும் தேயாத மாருதி என்று உணர்க.

## தேவியைக் கண்டேன்

உலகில் உயிர் என்றால் வெல்லம்போல் இனிக்குந்தானே !

சில அரக்கர்கள் உயிர்விடத் துணியாதவராகிக் கடலில் மீன் உருவாகி மறைந்தார்கள். சிலர் பசுக்களாய்ப் புல் மேயலானார்கள், சிலர் பறவைகள் ஆனார்கள். சிலர் அந்தணர் வடிவங் கொண்டார்கள்.

சிலர் பெண்கள் வடிவங்கொண்டு கூந்தலை வகிர்ந்து பின்னல் இடுவராயினார்கள். சிலர் மாருதியே சரணம் சரணம் என்றார்கள். சிலர் கழுத்தில் ஜெபமாலையணிந்து கையில் ஜால்ராவை வைத்துத் தாளம் போட்டு அரி பஜனை செய்தார்கள். சாவதற்கு அஞ்சி, பாவத்துக்கு அஞ்சாத அரக்கர் இத்தனை வேடங்கள் போட்டு உயிர் தப்பினார்கள். இதனை எண்ணுந்தொறும் சிரிப்பு வருகின்றது. உயிர் என்றால் யாருக்குத்தான் இனிக்காது ?

"சாதலின் இன்னாத தில்லை" என்றார் தெய்வப் புலவர். அரக்கர்களின் கள்ள வடிவைக் கண்டு மாருதி புன்னகை பூத்து அவர்கட்கு உயிர்ப்பிச்சைத் தந்தார்.

காவல் தேவர்கள் இராவணன் முன்னேபோய், "களிக்கும் சிந்தையுடன் வேந்தரே ! நமது கடைக்குட்டி அட்சகுமாரர் வீர சுவர்க்கம் சேர்ந்தார் !" என்றார்கள்.

இதனைக் கேட்ட மயன் மகளாகிய வண்டோதர் வாய் விட்டுப் புலம்பியழுதாள். இராவணன் அழுதான். இலங்கையே அழுதது. அந்த அழுகையொலி கடல் ஒலியை அடக்கியது. கண்ணீரும் புண்ணீரும் ஓடின.

இந்திரஜித்து தன் மனைவியருடன் ஆடியும் பாடியும் ஊடியும் கூடியும் இன்ப வெள்ளத்தில் முழுகியிருந்தான். செவியில் இலங்கை மாதர்களின் அழுகை ஒலி கேட்டது. அருகில் இருந்தவரைப் பார்த்து, "எங்கும் அழுகை ஒலி கேட்கின்றதே. இதற்கு என்ன காரணம் ?" என்று வினவினான்.

அவனுடைய ஏவலர்கள், "வேந்தரே ! பாரத நாட்டில் இருந்து ஒரு வாநரம் வந்து அசோக வனத்தை அழித்தது. தங்கள் ஆட்சியைப் பழித்தது. கிங்கரர், ஜம்புமாலி, பஞ்ச சேனாதிபதிகளின் உயிர்களை ஒழித்தது. தங்கள் கடைசித் தம்பி அட்ச குமாரரையும் கொன்றுவிட்டது. இதனால், இலங்கை மாநகரமே துன்புறுகின்றது" என்றார்கள்.

இதனைக் கேட்டு இந்திரஜித்து அதிர்ச்சியடைந்தான். "ஒரு குரங்கா இத்தனை பேரையும் வதைத்தது ? அசுர ஆட்சி மாட்சி அழிந்ததே. இது அமரர்கள் சூழ்ச்சியாகும்" என்று எண்ணித் தேர்மீது ஏறி இராவணனுடைய பொன் மாளிகையை அடைந்தான். தந்தையாரைப் பணிந்தான். "தந்தையே, உமக்கு அறிவு கூர் மழுங்கிவிட்டது போலும். தீயின் முன்னே பஞ்சு மூட்டைகளை அனுப்புவதுபோல் அனுப்பி, அத்தனை பேரையும் அழித்து ஒழிந்து போகுமாறு செய்தீர். அரக்கர்களைக் குரங்கு கொல்லவில்லை. நீர்தான் கொன்றுவிட்டீர். அசுர குலத்துக்கு அடங்காப் பழியை உண்டாக்கிவிட்டீர் ! அது வாநரம் அன்று. இலங்கையை அழிக்க வந்த பூதமாகும். நான் போய்க் கட்டியிழுத்து வருவேன்" என்று சீறி, வெற்றித் தேர்மீது ஏறி அசுர சேனைகள் புடைசூழப் புறப்பட்டான்.

போர்களத்தில் சென்று மாண்ட சேனைகளின் உடம்புகள் மலை போலவும், உதிர ஆறுகளையும் கண்டான். "இத்தனை வீரர்களையும் ஒருவனாக நின்று போர் செய்து அழித்த அந்த வாநரத்தின் வீரம் மிகவும் பாராட்டுதற்குரியது. உகாந்த காலத்து ருத்திரமூர்த்திக்கு நிகரான அவ்வாநரத்தின் ஆற்றல் அளவிட முடியாதது." தன் தம்பி அட்ச குமாரன் நிலத்திலே கருவேப்பிலைத் துவையல் போல் தேய்ப்புண்டிருப்பதைக் கண்டு உதிரக் கண்ணீர் வடித்தான். "என் தம்பியா தேய்ந்தான் ? இல்லை, என் தந்தையாரின் புகழ் தேய்ந்தது. இனி எனக்கு என்ன வாழ்வு ?" என்றெல்லாம் எண்ணினான்.

அநுமார் விசுவ ரூபத்தை எடுத்து இந்திரஜித்தின் சேனைகளைக் கொன்றார். இந்திரஜித்து அநுமாருடைய பேருருவைக் கண்டு மயங்கினான். "வாநரமே, நீ நல்லை, நல்லை. உனக்கு நிகரானவர் இல்லை, இல்லை. யாருடனும் போர் செய்ய வல்லை, வல்லை. இன்று உன் ஆயுளுக்கு எல்லை, எல்லை" என உணர்க என்றான்.

அநுமார் இந்திரஜித்தின் வார்த்தைகளைக் கேட்டு அண்டங்கள் குலுங்க ஆர்த்தார். திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளைப் போல் சிரித்தார். "ஏ மூடனே ! உங்கள் வாழ்நாளுக்கு எல்லையும் நீங்கள் தொடர்ந்து உலகங்கட்கு செய்த கொடுமைக்கு எல்லையும், உங்கள் ஆட்சிக்கு எல்லையும் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார்.

சிறியதாய் சொன்ன திருமொழியைச் சென்னியில் சூடி, நெறியில் நின்ற இராமபிரானுடைய புகழ்போல், விண்ணளவும் வளர்ந்து தன் யோக சக்தியால் பேருருக்கொண்டு நின்ற அநுமாரை, இந்திரஜித்து தலை நிமிர்ந்து எட்டி எட்டிப் பார்த்தான். பாதிக்குமேல் திருமேனியைக் காணவில்லை.

அநுமார் இந்திரஜித்தின் தேர்ப்பாகனைக் கொன்று, அவனுடைய வில்லை முறித்து எறிந்தார். ஒரு மரத்தை வேருடன் பிடுங்கி அவன் தலையில் அடித்தார். அவனுடைய தேர்களை யெல்லாம் அழித்தார்.

இந்திரஜித்து பிரமாஸ்திரத்தை எடுத்து, வில்லில் தொடுத்து, மானசீகமாக, அப்படைக்கலத்துக்குத் தூப தீப நிவேதனங்கள் செய்து அநுமார் மீது

ஏவினான். அப்படைக்கலம் பெரிய பாம்பு வடிவாகி அநுமாரைப் பிணித்தது. ஆஞ்சநேயர் மேருமலைபோல் சாய்ந்தார். அவர் முயன்றால் அந்த அஸ்திரத்தை அழித்திருப்பார். அயன் படையை அலட்சியப் படுத்தக்கூடாது. கட்டுண்டு அடங்கிப் போவது நல்லது.

அன்றி இராவணனைக் கண்டு, அவனுக்கு அறநெறிகளைக் கூறலாம். அதனால், அவன் திருந்தி, செய்த பிழைக்கு வருந்தி, சீதா தேவிக்காக எம்பெருமானை பொறாது உய்வு பெறக்கூடும் என்று கருதி, அரக்கர்கள் பாசத்தைப் பற்றிக் கொண்டுவரச் சென்றார்.

அநுமார், தான் வீசிய மரங்களாலும், வீரர்களை எறிந்ததாலும் அழிந்திருந்த இலங்கையைப் பார்த்துக் கொண்டே சென்றார்.

அரக்கியர்கள் அநுமனைக் கண்டு, "இந்தக் குரங்குதான் என் கணவனைக் கொன்றது. இந்தக் குரங்குதான் என் மகன்களைக் கொன்றது, இந்தக் குரங்குதான் என் தந்தையைக் கொன்றது" என்று கூறி இகழ்ந்தார்கள்.

"இந்தக் குரங்கை அடியுங்கள், கடியுங்கள், குட்டுங்கள் உதையுங்கள" என்று சில அரக்கியர் ஆரவாரஞ் செய்தார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட சீதாதேவி பெரிதும் வருந்தி அழுது மூர்ச்சித்தனள். அநுமாருடைய நலத்துக்காக இறைவனை வேண்டிக் கொண்டனள்.

அநுமாரைக் கட்டி இழுத்துக்கொண்டு மேகநாதன் வரும் செய்தியை உரைத்தவர்கட்கு இராவணன் பரிசு தந்தான்.

இந்திரஜித்து இராவணனுடைய அதி அற்புதமான அ,ழகிய அரண்மனைக்கு அநுமனை அழைத்துச் சென்று. அநுமாரைக் காட்டி வணங்கி, "தந்தையே ! இந்த வானரம் குரங்கு அன்று. சிவமூர்த்தியோ, திருமாலோ வானரவடிவில் வந்திருக்கின்றார்கள்" என்று கூறினான்.

உறங்கும்போது கண்ட இராவணனை இப்போது அநுமார் விழித்திருக்கும்போது காண்கின்றார். ஆலகாலம் போலச்சீற்றம் எழுந்தது. "அவனுடைய தலைகளைப் பாதத்தால் பனம்பழம்போல் உருட்டிப்பதைக்கப்

பதைக்க வதைக்கட்டுமா ? இவன் எலும்புகளை ஒடிக்கட்டுமா ?" என்று எண்ணினார். பின்னர், தம் கருத்தை மாற்றிக் கொண்டார். "இவன் சிவனிடம் வரம் பல பெற்றவன். இவனைக் கொல்வது அரிது. இவனாலும் என்னைக் கொல்வது அரிது. போர் புரிவதால் நாள் வீணே கழியும். சீதாதேவி இன்னும் ஒரு மாதந்தான் இலங்கையில் இருப்பேன். பின்னர் உயிர் விடுவேன். என்று கூறியுள்ளார். ஆதலால், நாம் காலத்தை வீணாகக் கழிக்கக் கூடாது." என்று எண்ணிக் கரைகடவாத திரைகடல் போல் நின்றார் !.

## இராவணனும் அநுமாரும்

இராவணன் மாருதியை நோக்கி வினவுகின்றான். "ஏ வாநரமே ? நீ சக்கராயுதமா ? வஜ்ராயுதமா ? சூலாயுதமா ? பிரமதேவனா ? பூமியைத் தாங்குகின்ற ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேஷனா ? இந்த இலங்கையில் போர் புரிந்து அழிக்கும் பொருட்டுப் பேரையும் வடிவத்தையும் மறைத்து வந்திருக்கின்றாய். உயிர்களைக் கவர்கின்ற நீலநிறமுடைய காலனா ? சிரவுஞ்ச மலையைப் பிளந்த வேலேந்திய முருகக் கடவுளா ? தென்திசையில் வாழ்கின்ற அகத்திய முனிவரா ? எண்திசைக் காவலரில் நீ யாவன் ? அந்தணர்கள் அபிசார வேள்வி செய்து இலங்கையை அழிக்க அனுப்பிய அஞ்சாமையுடைய பூதமா ? பிரமதேவன் அனுப்பிய வலிமை மிகுந்த தெய்வமா ? நீ யார் ? உன்னை யார் இங்கே அனுப்பியவர் ? உண்மையை உரைப்பாயாக" என்று வினவினான்.

அநுமார், "இரக்கமில்லாத அரக்கனே ! நீ கூறிய அனைவரும் அல்லன். அந்த அற்பமான வலிமையுடையவர்க்கு ஏவல் புரிகின்றவன் நான் அல்லன், தாமரைக் கண்ணாகிய ஒரு சமானமில்லாத வில்லாளியின் தூதன் யான். இலங்கை எய்தினேன். அந்த வில்லாளி யார் என்று அறிய விரும்புகின்றாயா ? தேவர், மனிதர், முனிவர் முதலிய அனைவராலும் முடிக்க முடியாத அரிய செயலைச் செய்பவர். இராவணா ! நீ பலகாலமாகச் சம்பாதித்த வலிமையையும், தேவர்கள் அளித்த வரங்களையும் , உன்

சேனைகளையும் உன் பெருமிதமான வாழ்வையும் ஒரு கணையால் அழிக்க வல்லவர்".

"அறிவில்லாதவனே, ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள். எக்காலமும் கடந்த மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாகி, சூலத்தையும் கமண்டலத்தையும், சக்கரத்தையும் துறந்து, ஆலம் இலையும் மலரையும் கைலையையும் விடுத்து வந்துள்ளார். தருமத்தை எங்கும் நிலை நிற்கச் செய்து, மக்கள் மீதுள்ள கருணையால் வேதங்கள் கூறிய நீதி நெறிகளை மக்கள் தெரிந்து ஒழுகும்படி, அவர்களைச் செந்நெறியில் செலுத்தித் தீயவரை அழித்துத் தூயவருடைய துன்பத்தைத் தொலைத்துத், தன் திருவடியைச் சிந்திப்பாருடைய பிறப்பை அறுக்கும் பரமாத்மா பிறந்தார். எங்கே பிறந்தார். கிணற்றிலே வீழ்ந்தவனைக் காக்கத் தாமும் கிணற்றில் வீழ்ந்து தூக்கிக் காப்பதுபோல் அப்பரமாத்மா வந்து பிறந்தார் என உணர்க".

"அசுர வேந்தனே ! அயன் அரி அரன் என்ற மும்மூர்த்திகளும் சேர்ந்து ஒருருவாகி, அயோத்தியில் அவதரித்த இராமபிரானுக்கு அடியவன் யான், என் பேர் அநுமான். சீதாதேவியைத் தேடி வந்த அங்கதனுடைய தூதன்".

இராவணன் தோள் குலுங்க நகைத்து, "அங்கதன் தூதனே ! என் நண்பனாகிய வாலி சுகமா ? வாலியின் ஆட்சி சிறப்பாக நடைபெறுகின்றதா?" என்று கேட்டான்.

அநுமார், "அரக்கனே, பயப்பட வேண்டாம். இராமபிரானுடைய ஒரு கணையால் வாலி மாண்டுவிட்டான். இனி பிழைத்து வரமாட்டான். உன்னைக் கட்டி, எண் திசைகளிலும் தாவி, உன்னை வேதனைப்படுத்திய வாலும், தீயில் மூழ்கி விட்டது. இப்போது சூரிய குமாரனாகிய சுக்ரீவன் ஆட்சி புரிகின்றான். நான் இராமருக்கும் சுக்ரீவனுக்கும் இனிய அன்பன். உனக்கு அறிவுரை கூற வந்தேன். உன்னை எனக்குக் காட்டுவார் இல்லாமையால் அசோகவனத்தை அழித்தேன். விளக்கில் வீழ்ந்து மின்மினிப் பூச்சிகள் அழிவதைப்போல் உன்னுடைய படை வீரர்கள் என்பால் போர் புரிந்து மாண்டார்கள்".

"புலத்தியன் மரபில் வந்த நீ ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்கம் உயிரினும் உயர்ந்தது. பிறன் மனைவியை விரும்புவோனைப் பழியும் பாவமும் சேரும், நரகமே வாய்க்கும். அதனால் பெருந்துயர் அடைவான். உனக்குப் பல மனைவியர்கள் இருக்கின்றனர். போக மாதர்கள் பலர் இருக்கின்றார்கள். இத்தனை இருந்தும் பரதாரத்தை நீ விரும்புவது அறிவுடைமையாகுமா ? வீட்டில் பசியாற அன்னமிருக்க, இன்னொருவன் மனையில் உண்ண அன்னத்தைத் திருடலாமா ? நீ அரசனா ? கள்வனா ? சீதாதேவியை இராம பிரானிடம் ஒப்புவித்தால் அப்பரம கருணாநிதி உன்னை மன்னிப்பார். வாழ்வும் வரமும் தருவார். காமத்தால் அறிவிழந்து அசுர குலத்தையே அழிக்காதே. செய்த பிழைக்கு வருந்து, உள்ளந் திருந்து. இராமபிரான் திருவடியைப் பொருந்து. அடைக்கலம் புகுந்தவரை ஆதரிப்பது இராமபிரானுடைய பரம்பரை சொத்து. அடைக்கலம் புகுந்த அற்பப் புறாவுக்கு உடல் தசையை அறுத்துத் தந்த சிபிச் சக்ரவர்த்தியின் பேரன். இராமச்சந்திர மூர்த்தி உன்னை மன்னித்துக் கருணை புரிவார். அவரைப்போன்ற கருணா மூர்த்தியை உலகத்தில் காண்பது அரிது" என்று அநுமார் கூறினார்.

இராவணன் இதைக் கேட்டு பெருஞ்சீற்றம் அடைந்தான்."அற்பக் குரங்கே, நீ எனக்கு அறிவுரை கூறுவதா ? உன்னை இப்போதே நமன் உலகுக்கு அனுப்புவேன்" என்று கூறி, மிகவும் சீறி, அநுமாரைக் கொல்லுவதற்கு வாளை எடுத்தான்.

அப்போது விபீஷணர் இராவணனைத் தடுத்து "அண்ணா, மாதரையும், தூதரையும் கொல்லக் கூடாது. அப்படிக் கொன்றால் நமது புலத்தியர் குலத்திற்கு இழுக்காகும். ஆகவே, கொல்லாதே" என்று கூறினன்.

இராவணன், "நன்று கூறினாய். தூதரைக் கொல்லுவது பாவம்" என்று சீற்றம் ஆறி. "இந்தக் குரங்கின் வாலில் கயிறுகளைச் சுற்றி, நெய்யில் நனைத்துத் தீவைத்துச் சுட்டு அனுப்புங்கள்" என்று கட்டளையிட்டான்.

இந்திரஜித் அநுமாரைப் பிடித்துப் பாசத்தை அகற்றினன். இலங்கையில் உள்ள தாம்புக்கயிறு, ஊஞ்சல் கயிறு, கொடிக்கயிறு முதலிய எல்லாக்

கயிறுகளையும் கொண்டு வந்து அநுமாருடைய வாலில் சுற்றினார்கள். அரக்கிமார்கள் தாலிக் கயிற்றை மட்டும் வாங்கவில்லை. கயிறுகளைச் சுற்றச் சுற்ற வால் நீண்டு கொண்டே இருந்தது. ஒரு லட்சம் அரக்கர்கள் வாலைப் பற்றி நின்றார்கள்.

இராவணன், "சேவர்களே, இந்த குரங்குக்கு நான் செய்த தண்டனையை மக்கள் உணர்ந்து மகிழவேண்டும். அதனால் வீதிகள் தோறும் சுற்றிக் காட்டிவிட்டு, வடக்குக் கடலோரம் தீ வையுங்கள்" என்று பணித்தான்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற சீதாதேவி, "ஏ, அக்கினி பகவானே ! நீ உலகுக்குச் சாட்சியாக இருப்பவன், நான் கற்பில் தூயவள் என்பது உண்மையானால் என் மகன் அநுமனைச் சுடாதே !."

அரக்கர்கள் அநுமாருடைய வாலில் தீயிட்டார்கள். அந்த நெருப்பு அவரைச் சிறிதும் சுடாமல் சந்தனம் போல் குளிர்ந்திருந்தது. அநுமார் அந்த அற்புதத்தைக் கண்டு, இது அன்னையின் அருள் என்று அன்னை இருந்த திசையை நோக்கித் தொழுதார்.

அநுமாருடைய வாலில் அக்கினி கொழுந்துவிட்டு எரிந்தது. அநுமார் உயர்ந்த ஒரு கோபுரத்தின் மீது ஏறி, இலங்கை முழுவதும் வாலை நீட்டி அந்நகர் முழுவதையும் கொளுத்தினார்.

நகர் முழுவதும் தீயினால் எரியலாயிற்று. மாதர்களும், குழந்தைகளும், தீயில் விழுந்து மடிந்தனர்.

அப்போது இலங்கையில் அழுகை ஒலி எங்கும் எழுந்தது.. . எங்கும் புகைப் படலம் மூடியது. இராவணனுடைய அரண்மனை எரிந்தது. இராவணன் முதலியோர் விமானம் ஏறி விண்ணில் இருந்து பிழைத்தார்கள்.

"இலங்கை எரியக் காரணம் என்ன ?" என்று கேட்டான் இராவணன்.

சேவர்கள் அவனைத் தொழுது, "குரங்கின் வாலில் நாம் இட்ட தீ நமக்கு வந்துவிட்டது" என்றார்கள்.

"அந்தக் குரங்கைப் பற்றிக் கொண்டு வாருங்கள்" என்றான். பல அரக்கர்கள் வெப்பம் தாங்காமல் கடலில் மூழ்கினார்கள்.

அநுமார் தன்னைப் பற்ற வந்த ஐம்பதாயிரம் அரக்கர்களை வாலில் உள்ள தீயினால் எரித்து, வானத்தில் இளம் ஞாயிறு போல், ஒளிரச் செய்து அசோக வனத்தை அடைந்து பிராட்டியாரைத் தொழுதார்.

அன்னை, அநுமாருடைய வீரச் செயலைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு அநுமாரை வாழ்த்தினார்.

அநுமார் வந்த காரியம் இனிது முடிந்ததென மகிழ்ந்து வானத்தில் ஓங்கி வடதிசை நோக்கிப் பாய்ந்தனர்.

இடையில் மைந்நாக மலையில் தங்கி, அம்மலையரசன் உபசாரத்தைப் பெற்று, மிக்க வேகத்துடன் பாய்ந்து மகேந்திர மலையில் குதித்தார். தாயின் வரவைக் கண்ட பறக்க இயலாத இளமட பறவையின் குஞ்சுகளைப் போன்ற வாநரங்கள் அநுமாரைப் கணடு அகமகிழ்ந்தார்கள்.

சில வாநரர் அநமாரைக் கண்டு அழுதனர். சிலர், அவர் முன்னின்று ஆரவாரஞ் செய்தார்கள். சிலர், வணங்கினார்கள். சிலர், ஆடினார்கள், சிலர், பாடினார்கள் சிலர் அவரை அள்ளி விழுங்குவதுபோல் பார்த்து நின்றார்கள். சிலர் கிழங்கு காய் முதலிய இனிய உணவுகளைத் தேடிக் கொணர்ந்து அவர் முன்னே உண்ணுமாறு வைத்தார்கள்.

தேவியைக் கண்டு வந்தார் என்று அவர் திருமுகக் குறிப்பே சொல்ல உணர்ந்து கொண்டார்கள்.

அவருடைய தாள்களிலும், மார்பிலும் தோள்களிலும், போரில் ஆயுதங்களில் ஏற்பட்ட புண்களை நோக்கிப் பெருமூச்சுவிட்டு வருந்தினார்கள்.

அநுமார் முதலில் அங்கதனை வணங்கினார். பின்னர், ஜாம்பவானை வணங்கினார்.

எல்லாருக்கும் தேவியினுடைய வாழ்த்துரையைக் கூறினார். வாநரங்கள் மீண்டும் மீண்டும் அவரை வணங்கி போய்வந்த விவரத்தையும், தேவியைத் தரிசித்ததையும் கூறுமாறு வேண்டினார்கள்.

அநுமார், "இராமனடியார்களே, உங்களுக்கு வணக்கம் இராமபிரானுடைய திருவருளினாலும் உங்கள் ஆசியினாலும் இலங்கை மாநகரம் சென்று, தேவதேவனுடைய பத்தினியாகிய சீதா தேவியைக் கண்டு, அடையாளங்களைக் கூறினேன். இலங்கையில் பிராட்டியார் மெலிந்து, நலிந்து, தவநெறியில் இருக்கக் கண்டேன். அம்மையார் கொடுத்த அடையாளத்துடன் இங்கு மீண்டும் வந்தேன்." என்று கூறினார்.

அரக்கரோடு போர் புரிந்ததையும் வெற்றி பெற்றதையும் இலங்கையில் தீ வைத்ததையும் சொன்னாரில்லை. சொன்னால் தற்புகழ்ச்சியாகும் என்று எண்ணி மறைத்துவிட்டார்.

ஆனால், போர் புரிந்ததை அநுமாருடைய உடம்பிலிருந்த புண்கள் தெரிவித்தன. அவர் திரும்பி வந்ததே வெற்றியைத் தெரிவித்தது. அங்கு வானத்தில் எழும் புகையே இலங்கை எரிவதைத் தெரிவித்தது. அங்குள்ள அரக்கரின் பெருமை, தேவி உடன் வராமையே தெரிவித்தது.

அநுமார் வாநர வீரர்களைக் கண்டு, "எம்பிராட்டியார் இலங்கையில் ஒரு மாதந்தான் உயிரோடு இருப்பேன். பின்னர் மாண்டுபோவேன். என்று மிகுந்த வருத்தத்தோடு கூறினார். ஆதலால், நாம் தாமதம் செய்யாமல் புறப்பட வேண்டும்" என்றார்.

## மதுவனம்

சீதாதேவியைக் காண அநுமார் இலங்கைக்கு போனபின் மகேந்திர பர்வதத்தில் இருந்த வாநர வீரர்கள் அநுமார் தேவியைக் கண்டு வரவேண்டும் என்று இராமபிரானுடைய திருவடியை நினைந்து உண்ணாமலும், உறங்காமலும், 'இராம இராம இராம' என்று நாம பாராயணம் செய்து கொண்டிருந்தார்கள். அதனால், எல்லாரும் பசியினால் வாடி வதங்கி இருந்தார்கள். வழியில் மதுவனத்தைக் கண்டார்கள். மதுவனம் இந்திரனுக்கு உரியது. அதனை அந்திரன் மகனாகிய வாலி அடைந்தான். வாலியின் மறைவுக்குப் பின் அம்மதுவனம் சுக்ரீவனுடைய ஆட்சிக்கு வந்தது. அதனை

இப்பொழுது ததிமுகன் என்ற வாநர வீரன் தன் ஏவலர்களுடன் காவல் புரிந்தான்.

வாநர வீரர்கள், அடங்காப் பசியுடன் சோர்ந்து அங்கதனைப் பணிந்து, "இந்த மதுவனத்தில் உள்ள மதுவை நாங்கள் பருக அனுமதி தரவேண்டும்" என்றார்கள். அங்கதன் அவ்வாறே அனுமதி தந்தான். வாநரங்கள் மதுவை ஆடியும் பாடியும் ஊடியும் கூடியும் பருகி மகிழ்ந்தார்கள்.

ஒருவர் வாயில் விட்டு, இட்டு உண்ணும் தேனை, இன்னொரு வாநரம் குடித்துவிட்டுச் செல்லும். ஒருவர் கையில் உள்ள தேனை மற்றொரு வாநரம் பிடுங்கிக் கொண்டுபோய் உண்ணும் ஒரே குரங்கின் மீது ஏறி மற்றொரு குரங்கு அமர்ந்து தேனை உண்ணும். ஒருவரை ஒருவர் தழுவியும், ஒருவரை ஒருவர் ஏசியும், மதுவை உண்டு மகிழ்ந்தார்கள். காவல் செய்யும் வாநரங்கள் தடுக்க அவர்களை இவர்கள் அடித்தார்கள். அவர்கள் போய்த் ததிமுகனிடம் முறையிட்டார்கள். ததிமுகன் என்ற வாநர வீரன் அங்கதனிடம் போரிட்டான். அவனை அவன் நையப்புடைத்தான். துன்பப்பட்ட ததிமுகன் சுக்ரீவனை நாடிச் சென்றான்.

## இராமரின் துயர்

இராமபிரான் ரிசியமூக பர்வதத்தில் துன்பக் கடலில் மூழ்கியிருந்தார். சுக்ரீவன் அவரைத் தேற்றிக் கொண்டிருந்தான். இராமர், "சுக்ரீவா, நாம் அனுப்பிய எல்ல வாநரங்களும் சீதையைக் காணாமல் திரும்பி வந்துவிட்டன. தென் திசைக்குப்போன அநுமன் முதலியோர்கள் வந்தார்களில்லை. சீதையைக் காணாத வருத்தத்தால் மாண்டு போனார்களோ, இராவணனைச் சந்தித்து அவனிடம் போர் புரிந்து கொண்டிருக்கிறார்களோ ? அவன் அவர்களை எங்காவது சிறையில் வைத்துவிட்டானோ ! சீதையைக் காணாது வெந்து நொந்து உள்ளம் உலைந்து தவம் புரிந்துகொண்டிருக்கின்றார்களோ !" என்றெல்லாம் கூறி வருந்திக் கொண்டிருந்தார்.

ததிமுகன் அங்கதனால் அடிப்பட்ட புண்களுடன் சுக்ரீவனை அணுகித் தொழுது நடந்ததை நவின்றான். இதைக் கேட்ட சுக்ரீவன் மகிழ்ந்தான்.

"வாநரங்கள் தேவியைக் கண்டு வந்த மகிழ்ச்சியினால் மதுவனத்தை அழித்து இருக்கிறார்கள். ஆதலால், இராம கைங்கர்யம் நிறைவேறி இருக்க வேண்டும் ததிமுகனே, அங்கதன் இளவரசன், மதுவனத்துக்கு உரியவன் அவனை நீங்கள் எதிர்க்கலாமா ? நீ அங்கு போய் அங்கதனைச் சரணம் அடைவாயாக !" என்று கூறிவிட்டு இராமபிரானைப் பார்த்துச் சொல்லுகின்றான். "ஐயனே ! பிராட்டியைக் கண்ட மகிழ்ச்சியினால் வாநரங்கள் மதுவனத்தை அழித்து மகிழ்கின்றார்கள். ஆதலால், தாங்கள் வருந்த வேண்டாம்" என்று கூறினான்.

## அநுமார் திருவடி தொழுதல்

ஆஞ்சநேயர் அந்த நேரத்தில் இராமபிரானிடம் வந்து தேவியிருக்கும் திசை நோக்கி இராமபிரானுக்கு நேரே கால்கள் நீட்டித் தென் திசை நோக்கி கைகூப்பி வணங்கினார். இக்குறிப்பை நோக்கி ராமபிரான் சீதாதேவி இலங்கையில் கற்பு நெறியில் நிற்கின்றாள் என்பதை உணர்ந்தார்.

அநுமார், "கண்டனன் கற்பினுக்கு அணிகலத்தைக் கண்டனன். அப்பிராட்டியின் கண்களினால் அவளைக் கற்பினுக்கு அணிகலன் என்று கண்டுகொண்டேன். தென் கடலில் இலங்கை மாநகரில் அத்தேவி தவம் இருக்கக் கண்டேன்."

"ஐயனே, தேவரீருடைய தேவியென்னும் தன்மைக்கும் தசரத ராஜாவுடைய மருகியென்னும் வாய்மைக்கும், ஜனக ராஜாவினுடைய மகள் என்னும் தன்மைக்கும் உரியவளாக எம்பிராட்டியைக் கண்டேன்."

"பொன்னுக்குப் பொன்தான் உவமை. தேவிக்குத் தேவிதான் உவமை. உமக்கு நீரே உவமை. எனக்கு நானே உவமை என்று என்னை யெனக்குத் தந்தார். இராகவா, உமது ஆதித்தன் குலத்தைத், தான் தவமிருந்து உயர்த்தி, உமக்கே உரியதாகக் செய்தாள். புகழ் நிறைந்த தான் பிறந்த ஜனக மாமன்னரின் குலத்தைப் பெருமைப்படுத்தினாள். தன்னைத் தனிமை செய்து கொண்டு கொடிய அரக்கர் குலத்தை இயமனுக்குத் தந்தாள். தேவகுலத்தை வாழ்வித்தாள். என் குலத்தை எனக்கே தந்தாள்."

யார் எந்தக் குரங்கைப் பார்த்தாலும் அநுமார் போகிறார் என்பது உலக வழக்கு.

"கோதண்டம் ஏந்திய கோமகனே ! கடல் சூழ்ந்த இலங்கையில் நல்ல தவம் செய்கின்ற ஒரு நங்கையைப் பார்த்தேன் என்று எண்ண வேண்டாம். குடிபிறப்பு என்ற குணமும், பொறுமை என்ற குணமும், கற்பு என்ற குணமும் இந்த மூன்று குணங்களும் சேர்ந்து ஒன்றையொன்று பற்றிக்கொண்டு மகிழ்ச்சியினால் நடனம் புரியக் கண்டேன்."

## இராமனே, பரம்பொருள் !

"எம் பெருமானே, தேவியை நீர் பிரிந்திருக்கின்றீர் என்று உலகத்தார் எண்ணுகின்றார்கள். அந்தக் கற்புத் தெய்வத்தின் கண்களில் நீர் இருக்கின்றீர். அவர் கருத்திலே இருக்கின்றீர் அம்மங்கையர்க்கரசியின் வாக்கினில் இருக்கின்றீர். மன்மதன் எய்த அம்பினால் தொளைத்த புண்ணிலும் இருக்கின்றீர்."

"கடலுக்கு நடுவே இலங்கையென்னும் நகரில் காலை மாலை இன்றி விண்ணளவும் வளர்ந்த பொன் மயமான கற்பகச் சோலைக்குள் தம்பி லட்சுமணர் செய்த தவச் சோலையில் இருக்கின்றாள். தவஞ்செய்த தவமாந் தையல் தூய்மையாக இருக்கின்றாள். பாதகனாகிய இராவணன் தேவியைத் தீண்ட அஞ்சி, பர்ணசாலையோடு பேர்த்துக் கொண்டுபோய், அசோக வனத்தில் வைத்திருக்கின்றான். பிரமதேவர் இராவணனைப் பார்த்து விருப்பமில்லாத ஒரு கற்புடைய பெண்ணைத் தீண்டுவாயாகில், உன் தலை ஆயிரம் துண்டுகளாக வெடிக்க கடவது என்று சாபம் தந்திருக்கின்றார் அதனால், அவன் தீண்டினானில்லை."

"எம்பெருமானே சீதாதேவியின் கற்புத் திறத்தால் பெண் குலமே உயர்ந்துவிட்டது. சோகம் நிறைந்த என் அன்னையின் கற்பு நலத்தால் தேவமாதர்களும் சிறப்புற்றார்கள். சிவபெருமானுடைய இடப்பாகத்தில் இருந்த உமா தேவியார் அவருடைய தலைமேல் இருக்கும் சிறப்பைப் பெற்றாள். திருமாலின் மார்பில் வாழும் லட்சுமி தேவி அத்திருமாலின் ஆயிரந்

தலைகளிலும் இருக்கத் தக்கவள் ஆனாள்."

"அடியேன் இலங்கை முழுவதும் நாடித் தேடித், தேவியைக் காணாமல் வாடி வருந்த, அசோக வனத்தில் எம்பிராட்டியை அவளுடைய கண்ணீர்க் கடலில் கண்டேன். அந்த அன்னையை ஆயுதம் தாங்கிய பேய் முகமும், நாய் முகமும் கொண்ட அரக்கிமார்கள் சூழ்ந்து ஒவ்வொரு விநாடியும் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த நடுநிசியில் பெண்கள் சூழ, அசோகவனத்துக்கு இராவணன் வந்தான். வந்தவன் எம்பிராட்டியை இறைஞ்சிக் கெஞ்சித் தொழுது நின்றான். தேவி ஆலகாலம் போல் சீறி வைதாள். இராவணன் அஞ்சி அகன்று போனான். நான் ஒரு மந்திரம் சொல்லி, அரக்கிமார்களைத் தூங்குமாறு செய்தேன். யாவரும் தூங்கிய பின் அன்னை உள்ளம் உடைந்து, அல்லல் அடைந்து நான் இருந்த அசோக மரத்தின் கிளையில் நார்கொண்ட கொடியைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டாள். அந்த அபாயமான நேரத்தில் இராம நாமம் சொல்லித் தொழுதேன். அழுதேன். தாங்கள் சொன்ன அடையாளங்களைக் கூறினேன். முடிவில் கணையாழி மோதிரத்தைத் தந்தேன்."

"கணையாழியைக் கண்டு அன்னைக்கு மூச்சு வந்தது. பெருமகிழ்ச்சி அடைந்தாள்.
'இந்தப் புனிதமான மோதிரம் பாவிகள் வாழ்கின்ற இலங்கைக்கு வந்ததே' என்று யெண்ணி, கண்களிலிருந்து பெருகிய கண்ணீரால் அபிஷேகம் செய்தாள். அம்மோதிரத்தைச் சென்னியில வைத்துக் கொண்டாள், மார்பில் வைத்துக் கொண்டாள். அப்பொழுது வந்த விரக வெந்தீயினால் மோதிரம் உருகிவிட்டது. உள்ளம் குளிர்ந்ததும் உருகிய மோதிரம் இறுகியது. மோதிரம் உருகியதும், இறுகியதும் ஒரு கணத்தில் நிகழ்ந்தது. இரண்டும் கண்டேன். பின்னர், எம்பிராட்டி என்னை நம்பிக் கண்குளிரப் பார்த்து ஆசி கூறினாள்."

"இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் விரிவாகக் கூறினேன். எம்பிராட்டி அத்தனையும் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாள். அன்னை

என்னைப் பார்த்து, 'மகனே, இன்னும் ஒரு மாதந்தான் இலங்கையில் இருப்பேன். அதற்குமேல் உயிரைவிட்டு விடுவேன். ஆதலால், ஒரு மாதத்துக்குள் என்னைச் சிறை மீட்க வேண்டும்' என்று தேவரீருக்க அறிவிக்கச் சொன்னாள். மெலிந்து நலிந்து உண்ணாமலும், உறங்காமலும் என் அன்னைத் தவநிலையில் இருக்கின்றாள்" என்று சூடாமணியை எடுத்துக் கொடுத்தார். அந்தச் சூடாமணி இளம் ஞாயிறைப்போல் ஒளி செய்தது.

அங்கதன் முதலாய அனைவரும் வந்து இராமபிரானை அழுது தொழுது முடிமேல் கைகூப்பி வணங்கினார்கள். பெருமான் எல்லாருக்கும் அருள் புரிந்தார். சுக்ரீவன் இனி தாமதிக்கக்கூடாது என்று கருதிச் சேனைத் தலைவனான நீலனுக்குச் சேனைகளுடன் புறப்படுமாறு கட்டளையிட்டான்.

அநுமாருடைய வேண்டுகோளுக்கிணங்கி இராமர் ரதத்தில் ஆரோகணித்தார். அங்கதன் வேண்டுகோளுக்கிணங்கி இளைய பெருமாளும் ஆரோகணித்தார். பன்னிரண்டு பகல் நடந்து தென் கடலை அடைந்தார்கள்.

## யுத்த காண்டம்

### இராவணன் மந்த்ராலோசனை

இராமபிரான் தென்கடல் கரையைச் சேர்ந்தார். கடல் அலை வந்து வீசுகின்றது. லட்சுமியாகிய சீதை கடலில் பிறந்தவள். இராமர் ஆகிய திருமால் கடலில் நித்திரை புரிபவர். அதனால், இராமருக்குக் கடல் மாமியார் வீடாகும். மாப்பிள்ளை வந்திருக்கின்றார் என்று கருதித் தென்றற் காற்றாகிய மைத்துனர் அலைகளாகிய பாயைச் சுரட்டிக் கரையிலே முத்தும் நுரையும் சிந்த உதறிப்பாய் விரிப்பதுபோல் இருந்தது அந்தக் காட்சி.

இராவணன் விசுவப் பிரமனை அழைத்து, இலங்கையை முன்னிலும் பன்மடங்கு அழகாக உண்டாக்குமாறு கட்டளை யிட்டான். அத்தெய்வத் தச்சன் பொன்னாலும் நவமணிகளினாலும், அரண்மனைகளும், சாலைகளும், சோலைகளும் தாமரை ஓடைகளும் மாமணி மேடைகளும் விளங்க அதியற்புதமாக உண்டாக்கினான். இராவணன் அதைக்கண்டு மிக்க வெகுமதிகளைத் தந்து அனுப்பினான். பின் மந்திராலோசனை சபையை

அடைந்தான். முனிவர், தேவர், பெண்கள், இளைஞர்கள் முதலியவர்களை வெளியேற்றிவிட்டுத் தன் கருத்துக்குகந்த அமைச்சர் முதலியோர் அருகிலிருக்குமாறு செய்தான். தன் அனுமதியின்றி வண்டுகளும் காற்றுங்கூட அங்கு வரக்கூடாதென்று ஆணையிட்டான்.

"அன்பர்களே ! ஒரு குரங்கு வந்து அசோக வனத்தையும் அரக்கர் குலத்தையும் அழித்து என் மகனாகிய அட்ச குமாரனை மாய்த்து, தேய்த்து, இலங்கையை எரியூட்டித்திரும்பியும் போய்விட்டது. என் வீணைக்கொடி வெந்து எரிந்தது. பல கோடி வீரர்கள் மாண்டதனால் நிலத்தில் உதிரம் ஊறுகின்றது. நாம் படுக்கும் இடங்கள் எல்லாம் கொதிக்கின்றன. அதனால், உணவும் உறக்கமும் இல்லாது ஒழிந்தன. மனைவிமார்களின் கூந்தல் எரிந்து நாறுகின்றன. எனக்கு இதைவிட வேறு என்ன அவமானம் உண்டு ? ஆகவே, மேற்கொண்டு நாம் என்ன செய்யலாம் என்று சிந்தித்துச் சொல்லுங்கள்" என்று இராவணன் கூறினான்.

துன்முகன், மகாபார்சுவன், பிராசன், சூரிய சத்துரு, வேள்விப் பகைஞன், தாமிராட்சன் முதலானோர் இராவணனைப் பணிந்து "எலிகளைக் கண்டு புலிகள் அஞ்சுமா ? இரு மனிதர்களுக்கும் இலைகளையும் மலர்களையும் கோதியுண்ணும் குரங்குகளுக்கும் அஞ்சி ஒரு மந்திராலோசனையும் கூட்டுவதானால் நமக்கு இதைவிட அவமானம் ஏது ? எங்களுக்கு அனுமதி கொடுத்தால் நாங்கள் சென்று மனிதர்களையும் குரங்குகளையும் கொன்று தின்று வருவோம். நாங்கள் ஏழுகடல்களையும் குடிப்போம். மகாமேரு மலையை இடிப்போம். எங்களால் ஆகாத காரியம் ஒன்று உளதோ ? இப்பொழுதே போருக்குப் புறப்படுவோம்" என்று கூறினார்கள்.

## கும்பகர்ணன்

கும்பகர்ணன் எழுந்து அண்ணனை அஞ்சலி செய்து கூறுகின்றான். 'அண்ணே ! நீ ஆயிரம் மறைகளை ஓதினவன். புலத்தியர் மரபில் வந்தவன். குற்றமில்லாத ஒருவன் மனைவியைக் கொண்டு வந்து சிறையில் அடைக்கலாமா ? உலகம் உன்னைப் புகழ வேண்டும் என்று எண்ணுகிறாயே.

பரதார கமனம் செய்வோரைப் பார் புகழுமா ? இகழுமல்லவா ? தன்மானம் தன்மானம் என்று பேசுகின்றாயே ? இராமரும் இலட்சுமணரும் இல்லாத நேரத்தில் சந்நியாசி வடிவில் சென்று சீதையைக் கவர்ந்து வந்தனையே. இது மானமுள்ளவர் செய்கின்ற காரியமா ? காம வசப்பட்டுக் கலங்குகின்றனை நமது வீரம் நன்றாக இருக்கின்றது ?'

'அண்ணே ! உன்னுடைய வாழ்க்கை புலி சவாரிபோல் முடிந்தது. புலியின் மேல்
ஏறிய ஒருவன், புலியை விட்டிறங்கினால் புலி அவனைக் கொல்லும். இறங்காமல்
இருப்பினும் ஆபத்து வரும். அதுபோல் சீதையைச் சிறை விட்டுவிட்டால் அச்சத்தால் செய்தோம் என்று உலகம் எண்ணும். போர் செய்து மாண்டால் புகழ்
நம்பால் பொருந்தும்' என்று கூறினான்.

## இந்திரஜித்து

இந்திரஜித்து தந்தையைத் தொழுது சொல்வான். "தந்தையே ! உமக்குச் சிந்தை ஏன் ? அசோகவனம் அழியவில்லை. மூவுலகங்களையும் ஆளும் உமது கீர்த்தி அழிந்துவிட்டது. புழுக்களையும் எறும்புகளையும் எவ்வாறு கொல்வது என்று ஒரு வீரன் ஆய்ந்தானாம். அதுபோல் இருக்கிறது நம்முடைய ஆலோசனை. எனக்கு அனுமதி கொடுங்கள். அம்மானுடர்களையும் கூனல் குரங்குகளையும் கொன்று குவிப்பேன். இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை" என்று அணற்பொறி பறக்க வீரத்துடன் விளம்பினான்.

## விபீஷணர்

விபீஷணர் இந்திரஜித்தைப் பார்த்து "மகனே ! நீ சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகின்றாய். அறிவுக்கும் உனக்கும் ஆயிரம் காதம். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பது பழமொழி. நீ அடங்கியிரு" என்று கூறிவிட்டுத் தம் தமையனைப் பார்த்து அறவுரை கூறுகின்றார்.

"அன்புள்ள அண்ணா ! அடியேனுக்குத் தாயும் நீ, தந்தையும் நீ, தமையனும் நீ,
குருவும் நீ, நான் வணங்குகின்ற கடவுளும் நீ, இங்குள்ளவர்கள் யாரும் உன் நலத்தை நினைத்து பேசினாரில்லை. இவர்கள் கூறிய ஆலோசனை 'கையில்லாதவன் எழுதிய சித்திரத்தைக் கண்ணில்லாவன் கண்டு மகிழ்ந்தான்' என்பதை ஒக்கும். இந்திரனுக்கும் எய்தாத பெரும் பதவியை நீ இழக்கப் போகின்றாயே என்ற கருதி, மனம் மறுகி, உளம் உருகி இந்த அறவுரையை உனக்குக் கூறுகின்றேன்."

"நான் கூறும் அறவுரை முழுவதும் கேட்டபின், பின்னர் கோபிக்கலாம். அண்ணா !
ஆதித்தன் கதிரும், காற்றும் நுழையாத இலங்கையில் ஒரு வாநரம் நுழையுமா ?
நுழைந்து எரிக்குமா ? இந்த இலங்கையை வாநரம் எரிக்கவில்லை. சீதா தேவியின்
கற்புக்கனல் எரித்தது. இதுதான் உண்மை. நந்தித்தேவர் சாபத்தால் குரங்கு இந்நகரத்தை அழித்தது என்று உணர்க. விருப்பமில்லாத வேதவதி என்ற கற்புக்கரசியை நீ களங்கப்படுத்தினாய். ஆவள் உனக்குச் சாபம் தந்து தீயில் விழுந்தாள். அந்த வேதவதியே உன் குலத்தை அழிக்கச் சீதையாகப் பிறந்துள்ளாள்."

"அண்ணா ! குரங்குகள் என்று நீ அலட்சியம் செய்கின்றனையே. குரங்காகிய வாலியினால் நீ அடைந்த துன்பங்களுக்கு அளவேது ? மானுடர் என்று அலட்சியம் செய்கின்றனையே, மானுடனாகிய கார்த்தவீரியன் உன்னை அடக்கிச்
சிறை வைத்தான் என்பதை எண்ணுதி. அன்றியும், கார்த்தவீரியனை வதைத்த பரசுராமனை இராமர் வென்றார் என்பதை மறக்கலாமா ? இராமரைப் பகைப்பது
நன்றன்று. சீதையைச் சிறைவிட்டு உய்வு பெறுக" என்று அன்புடனும் பாசத்துடனும்
இராவணன் மேலுள்ள நேசத்துடனும் கூறினான்.

இராவணன் தோள் குலுங்க நகைத்தான். "விபீஷணா ! 'எதிர்த்தவர் வலிமையில்
பாதி உனக்கு எய்தும்' என்று சிவன் தந்த வரத்தால் வாலி என்னைக் வென்றான்.
நான் வெள்ளி மலையை அள்ளியெடுத்தவன். திசைக் களிறுகளை வென்றவன்.
பழுதுபட்ட வில்லை முறித்து, ஓட்டை மரங்களைத் துளைத்துக் கூனியால் அரசிழந்து, என் சூழ்ச்சியால் மனைவியைப் பிரிந்து உயிர் தாங்கி உழலும் ஒரு சிறிய மனிதனை பரம்பொருளென்று உன்னைத் தவிர வேறு யார் மதிப்பர் ?"

"நந்தி சாபம் என்று நவின்றனையே ! தேவர்களும் முனிவர்களும் எனக்கு இட்ட
சாபங்களெல்லாம் பலித்தனவா ? இரும்புண்ட நீர் திரும்புமா ? உயிரை விட்டாலும்
விடுவேன். சீதையை விடமாட்டேன்" என்று சீறினான்.

## இரணியன்

"அண்ணா ! உன்னைக் காட்டிலும் பன்மடங்கு வலிமையுடைய இரணியன் என்ற மகாவீரன் வாழ்ந்தான். காசிப முனிவருக்குத் திதி வயிற்றிலே பிறந்தவன். அவன் தம்பி இரண்யாட்சன். இவன் ஆணவத்தால் மக்களுக்குப் பெரிய துன்பங்களைச் செய்து வந்தான். பூ மண்டலத்தை எடுத்துக் கடலில் அமுத்தி உலகத்தை அழிக்க முயன்றான். காத்தற் கடவுளாகிய நாராயணர் வராக வடிவமெடுத்து அவனைக் கொன்று, தம் இரண்டு கொம்புகளில் பந்து போல் உலகத்தை எடுத்து, உலகத்துக்கு நன்மை செய்தார். தன் தம்பியைத் திருமால் கொன்றதனால் சீற்றம் அடைந்து இரணியன் திருமாலைப் பகைத்தான். நமக்கும் மரணம் வருமே என்று அஞ்சினான். மகாமேரு கிரியில் ஒரு காலில் நின்று ஆயிரம் ஆண்டுகள் பிரமதேவரைக் குறித்து அரிய பெரிய தவம் செய்தான். இவன் மனைவி லீலாவதி, இவனுக்கு ஹிலாதன், அனுஹிலாதன், சமஹிலாதன் என்று மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். இவனது மனைவி நான்காவதாக கருவுற்றிருந்தாள். நாரத முனிவர் அவளைத் தம் ஆசிரமத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தார். அவள் சிறந்த பதிவிரதை கரு மேற்கொண்டு

வளராவண்ணம் செய்தாள். நாரதருடைய ஹரி பஜனையைக் கருவிலிருந்த குழந்தை கேட்டுக் கருவிலேயே திருவுடையதாக விளங்கியது."

"பிரமதேவர் அன்னவாகனத்தில் இரணியனுக்குக் காட்சிளித்தார். இரணியன் பிரமதேவரிடம் 'தனக்கு விண்ணிலும், மண்ணிலும், நீரிலும், நெருப்பிலும், வீட்டிலும், வெளியிலும், இரவிலும், பகலிலும், அஸ்திர சஸ்திரங்களாலும், தேவர்களாலும் மூவர்களாலும் முனிவர்களாலும் யட்சர்களாலும், அசுரர்களாலும், விலங்குகளாலும், வேறு எதனாலும் மரணம் வரக்கூடாது' என்று வரம் பெற்றான்."

"இரண்யபுரம் என்ற தன் நகரத்தை அடைந்தான். நாரதர் அவனது மனைவியைக்
கொண்டு வந்து சேர்த்தார். அவள் ஆணி முத்துப் போன்ற அரிய மகவைப் பெற்றாள். பிரகலாதன் என்று பெயர் சூட்டினார்கள்."

"இரணியன் கடவுள் இல்லை என்ற கொள்கையை எல்லாரும் கடைப்பிடிக்குமாறு
செய்து, தானே கடவுள் என்று, தன்னையே எல்லாரும் வணங்க வேண்டுமென்று
ஆணையிட்டான். எல்லாரும் தன் பெயரையே ஜபிக்க வேண்டுமென்றும், தன்னையே எல்லாரும் வணங்க வேண்டுமென்றும், தன்னையே வழிபட வேண்டும் என்று கட்டளையிட்டான். தன்னைத் தவிர வேறு கடவுள் இல்லை.
என்று கருதி, வேதத்தில் தன் பெயரைச் சேர்த்துப் பாராயணம் செய்ய வேண்டுமென்றும் 'ஹிரண்யாய நம, ஹிரண்ய நமோத்து சித்தம்' என்று பள்ளிகளில் ஓதுமாறும் செய்தான். எல்லா ஆலயங்களிலும் தன் உருவத்தையே பிரதிஷ்டை
செய்து தன் உருவத்தைப் பூஜிக்குமாறு செய்தான்."

"அசுர குருவாகிய சுக்ராசாரியார் இரணியனுடைய போக்கைக் கண்டு. தம் மகனாகிய சண்டமார்க்கனைப் புரோகிதராக நியமனஞ் செய்துவிட்டுத் தீர்த்த யாத்திரை

போய்விட்டார். பிரகலாதர் தொட்டிலிலேயே நாராயணருடைய எட்டு அட்சரத்தை
ஓதித் தியான சீலராக வளர்ந்தார்."

"இரணியன் ஆட்சி அராஜமாக, அக்கிரமங்கள் கோர தாண்டவம் புரிந்தன. தேவர்களும் முனிவர்களும் பெருந்துயரமடைந்து வருந்தினார்கள். இரணியன் ஆற்று நீர் சிறியது என்றும், கடல் நீர் உவர் நீர் என்றும் கருதி, அண்டை முகட்டைப் பிளந்து, அங்கிருந்து வரும் குளிர்ந்த நீரிலும் நன்னீர்க் கடலிலும்
நீராடுவான். பகற்பொழுதைப் பரலோகத்திலும் இரவுப் பொழுதைத் தேவலோகத்திலும் ஆடல் பாடலுடன் கழித்து இன்புறுவான். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென அகங்கரித்து வாழ்ந்தான்."

## பிரகலாதரின் பெருமை

பிரகலாதருக்கு ஐந்து வயது நிரம்பியது. மிகுந்த ஆடம்பரத்துடம் அவரைப் பள்ளிக்கு இரணியன் அனுப்பினான். புரோகிதராகிய சண்டமார்க்கன் பிரகலாதரைப் பார்த்து, 'ஹிரண்யை நமோத்து சித்தம், ஓம் ஹிரண்யாய நம' என்று ஓதுமாறு கூறினான். பிரகலாதர் ஆசிரியர் வார்த்தைகளைக் கேட்டு புன்னகை புத்து 'ஹரி நமோத்து சித்தம், ஓம் நமோ நாராயணாய' என்று கூறினார். இதைக் கேட்ட புரோகிதர் இரண்டு கரங்களால் காதுகளை மூடிக்கொண்டு நெருப்பை மிதித்தவன் போல் துள்ளிக் குதித்து, "அந்தோ ! கெட்டேன். இந்த இழிந்த வார்த்தையைச் சொன்னால் நரகம் எய்துமே. நாவில் புழு வருமே" என்று கருதினான். "அரச குமாரா ! இந்தத் தகாத வார்த்தையைச் சொல்லலாமா ? இது உன் தந்தைக்குத் தெரிந்தால் கண்டங் கண்டமாக வெட்டி யெறிவாரே ! இனி, இதைச் சொல்லாதே, ஹிரண்யாய நம என்று சொல்" என்றான்.

பிரகலாதர், "குருவே ! இன்றிருந்து நாளை அழிகின்ற ஒருவன் கடவுள் ஆவானா ? நாராயணர் ஒருவர்தமாம் பரம் பொருள். அவருடைய திருவடிதான் உய்வைக்
கொடுக்கும் அப்பரம்பொருளைச் சரணாகதி அடைவதே ஆத்ம சாந்தியாகும்.

வேதங்களின் முடிவு இதுதான். வீணே கூலிக்கு மாரடிக்காதே. இனி, நீயும் இந்த
மந்திரத்தைச் சொல்லுவாயாக" என்று கூறினார்.

புரோகிதன் நடுங்கி ஒடுங்கிப் பிரகலாதரை அழைத்துக் கொண்டு இரணியனிடம்
வந்தான். இரணியனை வணங்கி "தானவ குலத் தலைவனே ! தங்கள் குமாரர்
சாஸ்திர விரோதமான வார்த்தைகளைச் சொல்லுகின்றார். அந்தக் கொடிய சொற்களை
அடியேன் சொல்லமாட்டேன். சொன்னால் நரகம் வரும்" என்று கூறி முறையிட்டான்.

இரணியன் தன் அருமந்த மகனை மார்புறத் தழுவி உச்சி மோந்து முத்தமிட்டு
அளவற்ற மகிழ்ச்சியடைந்து வினவினான். "என் தவச் செல்வமே ! நீ என்ன
சொல்கின்றாய் ?"

"தந்தையே ! அகிய உலகங்களுக்கும் தனிப்பெருந் தலைவராக விளங்குபவர்
நாராயணர் ஒருவரே ஆவார். அவருடைய திருநாமம் உலகத்தை ரட்சிக்குந்
தன்மையுடையது. ஓம் நமோ நாரயணாய நம இதுதான் வேதத்திலுள்ள
மந்திரம், இந்த மகா மந்திரம் நமக்குக் குலந்தரும், செல்வந்தரும், குறைவற்ற
நலந்தரும், மாசில்லாத வலந்தரும், இந்த மகாமந்திரத்தை நான் சொன்னேன்.
நீரும் சொல்வீர், நீர் கடைத்தேறுவீர்."

இரணியன் ஆலகாலம் போல் சீறி, "மூடனே ! மதிகேடனே ! இந்தக் கொடிய
சொற்களை உனக்குச் சொல்லிக் கொடுத்தவர் யார் ? அந்த நாராயணன் உன் சிறிய
தந்தையைக் கொன்றவன். நம் அசுரகுல வைரி. அவன் துராத்மா. நான்
ஒருவன்தான் பரமாத்மா. தேவரும் மூவரும் முனிவரும் இருடியர்களும்
என்நாமத்தைச் சொல்லி வாழ்கின்றார்கள். உலகெங்கும் என் நாமமே ஒலிக்கின்றது.
நீ அந்தக் கள்வனுடைய பெயரைச் சொல்லாதே. என் பெயரைச் சொல்வாய்.
அதனால், உனக்கு நன்மையுண்டாகும். "

பிரகலாதர் மீண்டும் மீண்டும் நாராயண மந்திரத்தையே நவின்று கொண்டிருந்தார்.

அடங்காத கோபமடைந்த இரணியன். இரக்கமில்லாத அரக்கரை ஏவி. ஆயுதங்களினால் பிரகலாதருடைய உடம்பைக் கண்டங் கண்டமாகத் துண்டஞ் செய்யுமாறு கட்டளையிட்டான். பிரகலாதர் 'நாராயணம், நாராயணம், நாராயணம்' என்று பாராயணஞ் செய்துகொண்டிருந்தார். அரக்கர்கள் கத்தி, கோடாலி, சம்மட்டி முதலிய ஆயுதங்களை அவர்மீது செலுத்த, அந்த ஆயுதங்கள் பொடிப் பொடியாகத் துகள்பட்டு ஒழிந்தன.

இதனையறிந்த இரணியன் தீயிலிட்டுக் கொல்லுமாறு கட்டளையிட்டான். அந்தத் தீ, மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலுமாக அவருக்கு நலஞ் செய்தது.

இதனையறிந்த இரணியன், கோபக்கனலால், கொதித்துக் கொடிய நஞ்சையுடைய அநந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தசாடிகன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்ற அஷ்ட நாகங்களை ஏவினான். அந்த நாகங்கள் அக் குழந்தையைக் கடித்துத் தத்தம் பற்கள் ஒடிந்து சோகங் கொண்டு வாடி ஓடின.

பிரகலாதர், "ஏ நாகங்களே ! நீங்கள் எம்பெருமானுடைய பள்ளியணையல்லவா ? எம்பெருமான் அரவணையில் துயில்கின்றவர். அவருக்குத் தொண்டு செய்கின்ற நீங்கள் நலம் பெற்று வாழுங்கள்" என்றார்

இரணியன் நாகங்களின் அவல நிலையைக் கண்டு, கவலை கொண்டு ஐராவதம் புண்டரீகம் வாமனம், குமுதம், அஞ்சனம் புட்பதந்தம், சாருவ பௌமம், சுப்ர தீபம்

என்ற அஷ்ட கஜங்களை அழைத்து, "இந்த மூடனைக் கொல்லுங்கள்" என்று ஏவினான். அஷ்ட கஜங்களும் பிரகலாதர்பால் அணுகின. பிரகலாதர், யானைகளே ! உங்கள் குலத்தில் வந்த கஜேந்திரனுக்குக் கருணை புரிந்த கமலக்கண்ணனுக்கு நீங்கள் அடிமைகள் அல்லவா ? அதனை நான் சொல்லவா ?

எம்பெருமான் கஜேந்திர வரதன்" என்று கூறி, நாராயணரைத் துதி செய்து நின்றார்.

அந்த யானைகள் அவரை வலஞ்செய்து வணங்கிச் சென்றன. இதைக் கண்ட இரணியன் அந்த யானைகளைக் கொல்லுமாறு காவலர்களை ஏவினான். இரணியனுக்குப் பயந்த யானைகள் தம் தந்தங்களால் பிரகலாதரைக் குத்திக் கொலை
செய்ய முயன்றன. வாழைத் தண்டு போல் தந்தங்கள் ஒடிந்து மடிந்தன.
இரணியன் மிகவும் சீற்றமடைந்து, "இவனைக் கட்டுச் சோறாகக் கட்டி மலையின்
உச்சியிலிருந்து உருட்டிக் கொல்லுங்கள்" என்றான். இதனைக் கேட்ட பிரகாலதருடைய தாயார் மிகவும் வருந்தினாள்.

இரக்கமில்லாத அரக்கர்கள் குற்றஞ் செய்யாத குணக்குன்றை மணிக்கயிறுகளால்
கட்டி, அவர் தலையில் குட்டி, மலையுச்சியிலிருந்து உருட்டினார்கள். பிரகலாதர்,
'குன்றத்தை குடையாகப் பிடித்த குணப் பெருங்குன்றமே' என்று கருமாலை நீக்குந்
திருமாலை நினைந்து விழுந்தார். நிலமகள் பெண் வடிவந்தாங்கி அவரைப் பூச்செண்டுபோல் ஏந்திக் காப்பாற்றினாள். பிரகலாதர் நிலமகளை 'அம்மா' என்று
அழைத்துத் தலையாலே கும்பிட்டார். நிலமகள், "மகனே ! உனக்கு என்ன வரம்
வேண்டும் ?" என்று கேட்டாள். "தாயே ! பூவுலகில் சின்னஞ்சிறு சிசுக்கள் ஆடி
ஓடி விளையாடுகிற போதும், மாடி ஏறி மகிழ்கின்ற போதும் தடுக்கி விழுந்தால்

இன்று என்னைத் தாங்கிக் காப்பாற்றியது போல் எல்லாக் குழந்தைகளையும் காப்பாற்றுவாயாக" என்று வரங்கேட்டார்.

இரணியன் எல்லா வகையினாலும் பிரகலாதருக்கு மரணம் வராமையைக் கண்டு
அதிசயம் அடைந்தான். அவரைக் கொல்லக் கருதி ஆழமாகக் குழி தோண்டிப்
புதைக்குமாறு கட்டளையிட்டான். அவ்வாறு அரக்கர்களும் அவரைப் புதைத்தார்கள். அவர் திருமாலின் பத்தினியாகிய பூமி தேவியின் மடியில் தவழ்ந்து பஜனை செய்யலானார். இதைக் கண்டு அரக்கர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். இரணியன் கொடிய நஞ்சைக் கொடுத்து குடிப்பித்தான். திருமாலின்
குடையாகிய பாம்பின் நஞ்சையுண்டு அதை ஜீரணம் புரிந்து பரமானந்த வெள்ளத்தில் அழுந்தினார்.

பாறாங்கல்லினாற் கட்டி ஆழ்கடலில் வீழ்த்தினர். பிரகலாதர், "ஆழியில் அறிதுயில்
புரியும் அரிமுகுந்தா ! வைகுந்தா ! கோவிந்தா ! உன் திருவடியே சரணம். உன்
அடியார்க்கு ஏது மரணம் ? எனக்கு உலகம் ஒரு திரணம்" என்று துதி செய்தார்.

அந்தக் கல் தெப்பமாக மிதக்கக் கரையேறினார். பிரகலாதர் பிதா இருக்குமிடம்
வந்தார். பல காலத்துக்குப் பிறகு அவரைப் பார்த்த அனைவரும் அதிசயப்பட்டார்கள்.

இரணியன் தன் அமைச்சர்களை நோக்கி, "என் உயிரினும் சிறந்த உத்தம மித்திரர்களே ! ஆனை வயிற்றிலே பூனை பிறக்காது. புலி வயிற்றில் எலி பிறக்காது. அவரைக் கொடியில் துவரை காய்க்காது. மாங்காய் மரத்தில் தேங்காய்
உண்டாகாது. நான் விஷ்ணுவுக்குச் சத்துரு. என் மகன் விஷ்ணுவுக்கு மித்ரு. சத்ரு
வயிற்றில் மித்ரு எப்படிப் பிறப்பான் ? என் தம்பியைக் கொன்ற நாராயணரை ஐந்து கோடி எழுபதினாயிரத்து அறுபத்தோராண்டுகள் தேடினேன். அந்தத்

திருடன்
எனக்குக் கிடைக்கவில்லை. என் மகன் கடைக்குட்டி, சிங்கக் குட்டி
சர்க்கரைக் கட்டி,
பகையாளிக் குடியை உறவாடிக் கெடுக்க வேண்டும் என்ற பழமொழியின்படி
நாராயணரைப் பக்தி செய்வது போல் நடித்து, அவனை வசஞ்செய்து
என்னிடம்
காட்டிக் கொடுத்துத் திருமாலைக் கொல்லுவதற்கு என் மகன் செய்யும் தந்திரச்
சூழ்ச்சியாகும். இதனை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறி
அண்டங்
குலுங்கச் சிரித்தான்.

"மகனே ! அசுர குலத்தழைக்க வந்த அருமருந்தே ! நம் குல வைரியாகிய
அந்தக்
திருமாலைத் தேடித் தேடி வாடி விட்டேன். அவன் எங்கே இருக்கின்றான்
என்று சொல். "

பிரகலாதர், "அப்பா, நான் வணங்கும் தேனினுமினிய திருமால் சாண்
நிலத்திலும்
இருக்கிறான். அணுவை நூறு கூறிட்ட கோணிலும் இருக்கின்றான். மகமேரு
குன்றிலும் இருக்கின்றான். இதோ எதிரிலிருக்கும் இந்தத் தூணிலும்
இருக்கின்றான். உன் சொல்லிலும் இருக்கின்றான். அவன் எல்லா இடத்திலும்
இருக்கின்றான். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கின்றான்.
துரும்பிலும் இருக்கின்றான். இரும்பிலும் இருக்கின்றான். மண்ணிலும்
இருக்கின்றான். விண்ணிலும் இருக்கின்றான்" என்று கூறினான்.

இரணியன், "மூடனே ! உம்பர்க்கும் உனக்கும் உதவுகின்ற அந்த நாராயணன்
இதோ
இருக்கின்ற இந்தத் தூணில் இருக்கின்றானா ? இல்லையென்றால் கும்பமத
யானையைச் சிங்கம் கொன்று தின்பதுபோல், உன்னைக் கொன்று உன்
உதிரத்தைக்
குடிப்பேன்." என்றான்.

"தந்தையே ! நான் சொன்ன நாராயணமூர்த்தி இந்தத் தூணில் இல்லையென்றால்,
என்னைக் கொல்ல உம்மால் ஆகாது. அவர் திருவடி சாட்சியாக நானே உயிரை
விட்டு விடுவேன். இது சத்தியம்." ஆயிரந் தூண்களையுடைய அந்த ஆயிரங்கால்
மண்டபத்தில் இருந்த இரணியன், "இந்தத் தூணில் இருக்கிறானா ?" என்று ஒரு தூணைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

பிரகலாதர், "இந்த ஒரு தூண் அன்று, எல்லாத் தூண்களிலும் இருக்கின்றார்" என்றார். அப்பொழுது இரணியன் எந்தத்தூணை அறைவானோ என்று எம்பெருமான் எண்ணி, ஆயிரம் தூண்களிலும் ஆயிரம் நரசிம்மமாக நின்றார். அவர் எதிரிலிருந்த தூணை ஓங்கி அறைந்தான். அப்பொழுது நாராயணர் நர வடிவமும் சிங்கவடிவமும் சேர்ந்து கூட்டணியாக, நரசிம்மமாகத் தோன்றிச் சிரித்தார். அதைக்கண்டு இரணியனும் சிரித்தான்.

"ஏ கள்வனே ! எனக்கு அஞ்சி நீரில் ஒளிந்திருந்தாய் இப்பொழுது தூணிலும்
ஒளிந்திருக்கின்றாய். போர் செய்யப் புறப்பட்டுவா" என்றான். நரசிம்மர் அண்டகடாகங்கள் அதிர, ஆயிரம் ஆயிரம் சிரங்களும், ஆயிரம் ஆயிரம் கரங்களுமாக பேருருவுடன் நின்று காட்சியளித்தார். அப்போது பிரகலாதர், "தந்தையே இவரை வணங்கினால் இவர் கருணை புரிவார்" என்று அன்புடன் கூறினார். இரணியன், "பிரகலாதா ! நான் கூறுவதைக் கேள். இந்த நரசிம்மத்தின் தோளையும் வாளையும் வெட்டி, என் வாளை வணங்குவேன். நான் மகளிர் ஊடுகின்ற நாளிலும் வணங்காதவன். அதனால், என் வாளை வணங்குவேனேயன்றி நரசிம்மத்தின் தாளை வணங்கமாட்டேன்" என்றான்.

நரசிம்மப் பெருமான் இரணியனுடைய ஆயிரங்கோடி அசுர சேனைகளை ஆயிரம்
ஆயிரங் கரங்களால் வெட்டி, மண்ணில் வீசியும், விண்ணில் வீசியும் குலமலைகளில் வீசியும் கொன்று குவித்தார். இரவுமல்லாமல் பகலுமில்லாமல் சந்தி
வேளையில், வீட்டிலுமல்லாமல் வெளியிலுமல்லாமல், வாசற்படியில்,

விண்ணிலுமல்லாமல் மண்ணிலுமல்லாமல் மடித்தலத்தில் வைத்து, அஸ்திரத்திலுமல்லாமல் சஸ்திரத்திலுமல்லாமல் நகங்களினால், நரனுமல்லாமல் விலங்கு மல்லாமல் நரசிம்மமாகக் கூட்டணியாக வந்து அவனைக் கொல்லத் தொடங்கினார். அப்பொழுது நரசிம்மமூர்த்தி இரணியனைப் பார்த்து, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார்.

இரணியன், "நீ ஒரு வீரனா ? ஒரு சிரமும் இரு கரங்களும் உடைய என்னை,
ஆயிரம் ஆயிரம் சிரங்களால் கொல்லுகின்றனையே, மறுபிறப்பில் நான் பத்துச்
சிரங்களும் இருபது கரங்களுமாகப் பிறக்க நீ ஒரு சிரம் இரண்டு கரங்களுமாகப்
பிறந்து என்னைக் கொல்லுவாயாக" என்று வேண்டினான்.

அவனது உதிரத்தைக் குடித்து நரசிம்மப் பெருமான் வெறி கொண்டு வீராவேசத்துடன் விளங்கினார். அவரை அணுகத்தேவர்கள் யாவரும் அஞ்சினார்கள். மகாலட்சுமி வந்து வணங்கினாள். நரசிம்ம சுவாமி பிரகலாதரைத் தழுவி, "உனக்கு என்ன வரம் வேண்டும் ?" எனக்கேட்டார். என் தந்தைக்குச் சுவர்க்கம் கொடுங்கள் என்று கேட்டார்.

"மகனே ! ஞானக்கொழுந்தே ! பக்த சிகாமணியே ! நீ உன் தாய் உதிரத்தில் கருவடைந்த அன்றே இருபத்தோரு தலைமுறைக்கு வைகுண்டத்தில் இடம் ஒதுக்கியாகிவிட்டது. ஒரு சத்புத்ரன் பிறந்தால் அந்தக் குலமே உய்யும். உன் புகழ்
வாழ்க. இனி, உன் குலத்தாரை நான் கொல்லமாட்டேன்." என்று வரமளித்தார். பிரகலாதர் பெருமானைத் தொழுது, "புழுவாய்ப் பிறந்தாலும் உன்னை வழுவாமற் துதிக்க வரமருள்வாய்" என்றார்.

பெருமான், பிரகலாதருக்கு முடி சூட்டி வாழ்த்தியருளினார். பிரகலாதர் ஹரிபக்தி
செய்து அறநெறி வழுவாமல் ஆட்சி புரிந்தார். "அண்ணா, அந்த நரசிம்ம

சுவாமிதான் இராமர். அந்த இரணியன்தான் தாங்கள். ஆதலால், இராமனைப் பகைக்க வேண்டா. பகைத்தால் அழிவு வரும்" என்று அறவுரை பகர்ந்தார்.

இராவணன் சீறி, விபீஷணரைக் கொல்ல முயன்றான். விபீஷணர், இராவணன் கையால் இறக்க வேண்டாம் என்று கருதி, அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற நான்கு அமைச்சர்களுடன் விண்வழியே இராமரை நோக்கிச் சென்றார். அண்ணனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ஜீவான்மா அறம், பொருள், இன்பம், வீடு என்று உறுதிப் பொருள்களுடன் புறப்பட்டார்.

## விபீஷணன் சரணாகதி

"இராகவா ! சரணம், எந்தையே ! சரணம்" என்று விபீஷணர் உரத்த குரலில் கூறினார். அங்கிருந்த வாநரங்கள் விபீஷணரைப் பகைவன் என்று கருதி, "இவனைப் பற்றுங்கள், எற்றுங்கள், கொல்லுங்கள்" என்று கூறி ஆரவாரம் செய்தன. 'மயிந்தன்', 'துமிந்தன்' என்ற இரு வாநர வீரர்கள் அநுமாரின் ஏவலால் அங்கு வந்து விபீஷணரைப் பாரத்து, "நீங்கள் யார் ? இங்கு வந்த காரணம் யாது ? போர் செய்ய வந்தீர்களா ? சமாதானஞ் செய்து கொள்ள வந்தீர்களா ? உள்ளதை உரைப்பீர்களாக" என்று கேட்டனர்.

விபீஷணர், "நான் இராவணனுடைய தம்பி, என் பேர் விபீஷணன். இராமபிரானிடம் அடைக்கலமாக வந்திருக்கிறேன்." என்ற கூறினார். மயிந்தன், "நீங்கள் இங்கே இருங்கள். நான் இராமபிரானிடம் அனுமதி பெற்று வருகிறேன்" என்று கூறி விட்டுத் தருமம் ஞானம் தவம் என்று மூன்று மதில்களுடன் பெருமை, பொறுமை என்று இரண்டு வாயில்களுடன், கருணையாகிய கோயிலில் இருந்த காகுத்தனைக் கண்களாற் கண்டு கை தொழுதான்.

"எம்பெருமானே ! இராவணனுடைய தம்பியாகிய விபீஷணன் தங்களிடம் சரணாகதியடைய நான்கு துணைவர்களுடன் அடைக்கலம் என்று

வந்திருக்கின்ளறான். அழுத கண்ணும் தொழுத கையுமாக இருக்கின்றான். உள்ளே வர அவனுக்கு அனுமதி தருவதா ? அல்லது அவனை விரட்டி விடுவதா ? தங்கள் திருவுளம் யாதோ ? உத்தரவு செய்தால் அதன்படி செய்வேன்" என்று கூறினான்.

## இராமபிரானுடைய ஆலோசனை

இராமபிரான், எந்தக் கருமத்தையும் தம் துணைவர்களுடன் கலந்து ஆலோசித்துச் செய்வதே முறை என்று கருதினார். தாமே எதனையும் செய்ய வல்லவராயினும், அறிவின் சிகரமாக இருந்தும் உடனிருக்கும் துணைவர்களை மதித்து அவர்களைக் கேட்டுச் செய்வதே நன்மையாகும், அவர்களை மதித்ததாகவும் ஆகும் என்று கருதினார். முதலில் சுக்ரீவனை நோக்கி, "சுக்ரீவா, என் இனிய அன்பனே ! இராவணனுடை தம்பி விபீஷணன் நம்மிடம் அடைக்கலம் புக வந்திருக்கின்றான். நான் இப்பொழுது அவனை அங்கீகரிப்பதா ? புறக்கணிப்பதா ? என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துச் செப்புக" என்றார்.

சுக்ரீவன், "எம்பெருமானே ! விபீஷணன் நல்லவன் அல்லன். ஒரு தாய் வயிற்றில் பிறந்து, ஒரு முலைப்பால் உண்டு, ஒரு பாயில் படுத்து வளர்ந்த தமையனைத் தக்க தருணத்தில் கைவிட்டு வந்தவனை நம்பக்கூடாது. பெற்ற தந்தை, தாய் மாமன், ஆசாரியன், பெண் கொடுத்த மாமன், தமையன் இந்த ஐவரும் ஐம்பெருங்குரவர் ஆவரர்கள். இவர்கள் வணங்கத்தக்கவர்கள். ஐயனே ! விபீஷணன் தமையனாரைப் பகைத்துக் காட்டிக் கொடுக்க வந்திருக்கின்றான். அவனைத் தூயவன் என்று எண்ணக்கூடாது. தீயவன் ஆனான். அவனுக்கு அடைக்கலம் கொடுப்பது நன்றன்று" என்று கூறினான்.

ஜாம்பவான், இராமரைத் தொழுது "ஐயனே ! கருணைக் கடலே ! சிறியேனுடைய கருத்தைக் கேட்டருளும். அரக்கர்களும் இரக்கமற்றவர்கள் அவர்களுக்குப் பாவம் என்றால் பாயசம். இராவணன் இரக்கமற்று வந்து எம்பிராட்டிடைக் கவர்ந்து

சென்றான். இவன் அவனுடைய தம்பிதானே ? இவனை எவ்வாறு நம்புவது ? இவனை நம்மிடம் அணைத்துக் கொள்ளாமல் அகற்றுவதே நன்மை" என்றான். நீலன், "எம்பெருமானே ! இதுபற்றி நாயினேன் கருத்தை நவில்வேன். தேவரீருடைய திருவுளம் திருப்பாற்கடலையனையது. தங்கள் திருவுளம் அறியாதது யாதொன்றும் இல்லை. எனினும் எங்களை ஒரு பெருட்டாக மதித்துக் கேட்கின்றீர். இந்த உலகில் யாரை நம்புவது ? நல்லவரைப் போல் நடித்து வாழும் வல்லவர்கள் தாம் அதிகம். அரக்கர்கள் மாயையில் வல்லவர்கள். இதற்கு சான்று மாரீசன். மாரீசன் மானாக வந்து தேனாக விளையாடி நமக்குத் துன்பத்தை விளைவித்தான். ஆதலால், விபீஷனும் அந்த வரிசையில் வைத்து எண்ண வேண்டியவன்தான். நாம் ஒருபோதும் இவனை நம்பக்கூடாது" என்று கூறினான்.

அங்கதன், "அண்ணலே அரக்கர்கள் அநியாயத்தை அஞ்சாமல் செய்வார்கள். பேச்சுக்கு முன் சிரிக்கின்ற பெண்ணையும் நம்பக்கூடாது. தொழுகின்ற கையில்
ஆயுதம் ஒடுங்கியிருக்கும். இவன் அழுது நம்மை அணுகி நமக்குத் தீங்கு செய்ய
வந்திருக்கின்றான். இவர் பாங்குடையவன் அல்லன்" என்றான்.

இவ்வாறே எல்லாரும் விபீஷணனுக்கு அடைக்கலம் தரக்கூடாது என்று வெறுத்து
மறுத்து உரைத்தார்கள். இறுதியில் அறிவின் சிகரமாகிய ஆஞ்ச நேயர், வணக்கத்துடன் கரத்தால் வாயை மறைத்துக்கொண்டு பயபக்தியுடன் பகரத் தொடங்கினார்.

"கருணைக்கடலே ! அடியேனுடைய கருத்தை அறிவிக்கின்றேன். அடியேன் இலங்கை சென்று எல்லாருடைய இல்லங்களிலும் எல்லாவற்றையும் கண்டவன் பேச்சைக் கேளுங்கள், கண்டவர்கள் பேச்சையெல்லாம் கேட்க வேண்டாம். காணாமலேயே கண்டதாக சொல்லுகிறவர்கள் உண்டு. ஐயனே ! அடியேன் இலங்கைக்குச் சென்று தேவியைத் தேடிய போது அரக்கர்கள் வீட்டில மதுபாட்டில்கள் ஏராளமாக இருந்தன. விபீஷணனன் வீட்டில் பூஜைக்குரிய பன்னீர் பாட்டில்களே இருந்தன. விபீஷணன் பரம சாது. அவன் அசுர குலத்தில் பிறந்த அந்தணன், செந்தண்மை பூண்டவன். இப்போது சீதை உயிருடன் வாழ்வது திரிசடை என்ற பெண் மணியால்தான். அந்தத் திரிசடை

விபீஷணனுடைய தவப்புதல்வியாகும். தந்தையைப்போல் திரிசடை நற்குணவதியாக என் தாய்க்கு உதவி செய்து கொண்டிருக்கின்றாள். அன்றியும் நான் நீதிநெறிகளை இராவணனுக்கு எடுத்துரைத்த போது இராவணன் என்னை வாளினால் வெட்ட வந்தான். அப்பொழுது மாதரையும் தூதரையும் வெட்டக்கூடாது என்று தடுத்து அறிவுரை கூறினான். எம்பெருமானே ! விபீஷணனை நல்லவன் அல்லன்
என்றே வைத்துக் கொண்டு வேறொரு கோணத்தில் பார்த்து சிந்தித்தால், தேவர்கள்
மூவர்கள், முனிவர்கள் மற்றும் யாவரும் செய்ய முடியாத அரிய பெரிய காரியத்தைச் செய்வேன் என்று கோதண்டத்தை ஏந்தியிருக்கின்ற தாங்கள், ஆபத்தில அடைக்கலம் என்று அடைந்தவனை நல்லவன் அல்லன் என்று சந்தேகிப்பது கிணற்றுத் தண்ணீரைக் கண்டு சமுத்திரம் இந்த கிணற்றுத் தண்ணீரால் நமக்கு ஆபத்து வருமோ ? என்று ஐயுறுவது போலாகும். தேவாதி தேவா ! விபீஷணன் தீயவன் அல்லன், தூயவன் ஆவான். அவன் நம்மிடம் வந்து சேருவது பாலோடு தேன் கலந்தது போலாகும். வேதமே அனைய தங்கள் திருவுளம் எப்படியோ அப்படியே செய்யுங்கள்" என்று கூறினார்.
இவ்வாறு கூறிய அநுமார் பிரமதேவனாலும் கணக்கிட்டுப் பார்க்க முடியாத அத்தனை நூல்களையும் ஆதித்தன் முன்சென்று ஓதினவர் ஆவார்.

## இராமரின் கருத்து

இராமச்சந்திர மூர்த்தி தம் அன்பர்கள் அனைவரின் சீரிய வசனங்களைச் செவி
மடுத்துத் தம் திருவுளக் கருத்தைக் கூறுவாராயினார். "அன்பர்களே ! நீங்கள் எல்லாரும் என்பால் அன்புடையவர்கள். தெளிந்த மதிநலம் படைத்தவர்கள். எல்லாரும் என் நன்மைக்காகவே பேசுகின்றவர்கள். அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிப்பது என் குல தர்மம் ஆகும். அடைக்கலம் என்று தன்பால் வந்த அற்பப் புறாவுக்குத் தன் உடல் தசையை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்ரவர்த்தியின் பேரன் நான். அடைக்கலம் என்று வந்தவர்கள் நல்லவர்களோ அல்லவர்களோ அவர்களை ஆதரிப்பது அரச தருமமும் ஆகும். இமயனுக்கு அஞ்சித் தன்பால் அடைக்கலம் புகுந்த மார்க்கண்டேயரைச் சிவபெருமான அபயந் தந்து ஆதரித்த அருள் திறத்தை மறக்கலாமா ? முதலை பற்றிக் கொள்ள அதனுடன போர் புரிந்து வெல்லுந் திறமையின்றி மெலிந்து, நலிந்த யானை, நம்பிக்கையோடு தும்பிக்கையை

தூக்கி ஆதிமூலம் என்று பொதுவான பேரிட்டு அழைத்த பொழுது, அந்த யானையை நாராயணர் ஓடிவந்து காத்ததை அபயம் என்ற யானைக்கு உபய பாதங்களைத் தந்ததை மறக்கலாமா ? அன்றி மற்றொரு வரலாறுங் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள்.

## புறா வரலாறு

ஒரு கானகத்தில் ஓர் ஆல மரத்தில் கணவனும் மனைவியுமாக இரண்டு புறாக்கள் வாழ்ந்தன. அப்புறாக்கள் ஈருயிர் ஓருடம்பாக ஒற்றுமையாக வாழ்ந்தன. பெண் புறா தன் கணவனாகிய ஆண் புறாவுக்கு வேர்க்குமானால் தன் சிறகினால் விசிறி விடும். குளிர்காலத்தில் தன் கணவனை அணைத்துச் சூடு தந்து உதவும். அந்த புறாக்களிடம் இருந்த ஒற்றுமை மனித குலத்திலேயே காண முடியாது. அன்புடன் ஒன்றை ஒன்று நேசித்து இனிது வாழ்ந்தன.

ஒரு நாள் ஆண் புறா உடல் நலம் குன்றி நலிவுற்று மெலிவுற்றது. பெண் புறா,
கணவனைப் பார்த்து உள்ளம் வருந்தி, "என் அருமை நாயகரே ! தங்கள் உடம்புக்கு
என்ன வருத்தம் ? தங்கள் நலம் ஒன்றையே நாடும் என் மனம், தாங்கள் சுகமின்றி
இருப்பதைக் கண்டு பெரிதும் வருந்துகின்றது. தாங்கள் கூட்டில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் சென்று இரைதேடிக் கொணர்ந்து தங்களுக்குத் தருவேன்."
என்று அமுதம் போன்ற அன்பு வசனங்களைக் கூறியது. ஆண் புறா தன் மனைவியைப் பார்த்து, "பெண்மணியே ! இரை தேடி அதிக தூரம் செல்ல வேண்டாம். இந்த உலகம் மரக்கறி இருக்க, புலால் உண்டு மகிழ்கின்றது. ஆடு,
கோழி பறவைகளுக்கும் தன் வயிற்றையே இடுகாடாகச் செய்கின்றார்கள். பதறிக்
கதற ஆடு, கோழிகளைக் கொன்று மென்று தின்று கடிக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் என்ன நரகம் எய்துமோ ? பெண்மணியே ! நீ அதிக எச்சரிக்கையாகச் சென்று அண்மையில் உள்ள இரைககளை உண்டு எனக்குக் கொணர்க" என்று கூறியது.

பெண் புறா பறந்து சென்றது. ஒரு வேடன் ஒரு மரத்தின் கீழ் பொரி, கடலையைச் சிந்தி வலையை விரித்து வைத்திருந்தான். சூதுவாது அறியாத பெண்புறா அந்த உணவை உண்ணும்போது சுருக்கை இழுத்துப் பெண்புறாவைப் பற்றிக் கொண்டான். பற்றிய புறாவைக் கூட்டில் அடைத்துக் கொண்டு, வேறு விலங்குகளை வேட்டையாடித் திரிந்தான். திடீரென்று மேகங்கள் கூடி, இடியும் மின்னலுமாகப் பெரு மழை பொழிந்தது. அதனால், வேடன் நனைந்து பசியாலும் குளிரினாலும் வேதனை அடைந்தான். பெண் புறாவை அடைத்து வைத்திருக்கிற கூட்டையும் வில்லையும் எடுத்துக் கொண்டு, நடக்க முடியாமல் நடந்து, ஆண் புறா இருக்கும் ஆலமரத்தையடைந்தான். பசி தாகம் அவனை வாட்டின. அவன் கண்ணை மூடி அயர்ந்து விட்டான்.

ஆண் புறா நெடுநேரம் ஆகியும் தன் மனைவி வராமையால் உள்ளம் நொந்து புலம்பலாயிற்று. "என் அன்புள்ள பெண் மணியே ! இத்தனை நேரமாகியும் வரவில்லையே, நீ ஒரு பொழுதும் வீண் காலம் கழிக்க மாட்டாயே, காலமறிந்து எனக்கு உணவு தந்து உபசரிப்பாயே. என் மனம் வருந்த நடக்க மாட்டாயே. என் உடம்பில் தினவெடுத்தால் உன் மூக்கினால் சொறிந்து விடுவாயே. கண்ணை இமை காப்பது போல் என்னைக் காத்து நலம் புரிவாயே. உனக்கு என்ன ஆயிற்றோ ? எந்தப் பாவி உன்னைப் பற்றிக் கொண்டானோ ? இனி, உன்னை இந்தப் பிறப்பில் காண முடியாதோ ? உன்னைப் பிரிந்து எங்ஙனம் வாழ்வேன் ?" என்று அழுது புலம்பியது.

பெண் புறா தன் கணவனுடைய அமுத மொழிகளைக் கேட்டு களிப்புற்றது. கணவன் தன்னைப் புகழ்வதைக் கேட்டு புளகாங்கிதம் அடைந்தது. இந்தப் பிறப்பில்

எனக்குக் கணவனார் அன்பு ஒன்றே போதும் என்று கருதித் தன் கணவனை நோக்கிக் கூறலாயிற்று.

"பிராணபதீ ! நான் இவ்வேடனுடைய கூட்டில் அடைப்பட்டுக் கிடக்கிறேன். இவ்வேடன் என்னை ஏமாற்றி வலை வைத்துப் பிடித்துக் கொண்டான். தாங்கள்
என்னைப் புகழ்ந்து கூறிய அன்பு வசனங்களைக் கேட்டு அகமிக மகிழ்ந்தேன்.
இந்த உலகில் எனக்கு என்ன வேண்டும் ? கணவன் அன்பு ஒன்றே வேண்டும்.
என் அருமை நாயகரே ! இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் விருந்தோம்ப வேண்டும்.
இல்லறத்தாருக்கு விருந்தோம்பல் தலையான கடமையாகும். இந்த வேடன் நாம்
வாழ்கிற வீட்டிற்கு வந்திருக்கிறான். இவனுக்குள்ள இடரை நீக்கிப் பசியாற ஏதாவது பறந்து உதவி செய்யுங்கள்" என்று கூறியது.

இதைக் கேட்ட ஆண்புறா, "என் அருமை மாதரசே ! இந்த பிறப்பில் உன்னைக்
காண முடியாமல் போகுமோ ? என்ற எண்ணினேன். கடவுளின் கருணை உன்னை என்பால் சேர்த்தது. இனி எனக்கு ஒரு குறையும் இல்லை. நீ சொல்லியபடியே இவ்வேடனுக்கு உதவி செய்வேன்" என்று கூறியது.

அங்கு ஒருபுறம் எரிகின்ற காட்டில் ஒரு சிறு கொள்ளியைத் தன் அலகினால் கொண்டுவந்து வேடனுக்கு முன்னே வைத்து, உலர்ந்த சிறு சிற சுள்ளிகளை வைத்துத் தீயை வளர்த்தது. வேடன் குளிர் நீங்கி மகிழ்ச்சி அடைந்தான்.

ஆண்புறா, "அன்பரே ! இந்த ஆலமரம் இதோ என் எதிரில் இருக்கும் என் மனைவியும் நானும் வாழ்கின்ற வீடு ஆகும். இல்லறத்தார் விரும்தோம்ப வேண்டும். எங்கள் வீட்டிற்கு வந்த நீ பசியோடு இருக்கக் கூடாது."

"புறாக்களாகிய நாங்கள் புலால் உண்ணாத சைவப் பிராணிகள். எத்தனைக் காலம்

வாழ்ந்தாலும் மரணம் என்பது ஒன்றுண்டு. நான் இந்தத் தீயில் வீழ்வேன். என்னை உண்டு நீ பசியாறுக" என்று கூறித் தீயில் விழுந்துவிட்டது.

வேடன் அப்புறாவின் அன்பைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான். இந்தப் பறவைக்கு
உள்ள நற்குணம் நமக்க இல்லையே. நான் இரக்கமில்லாத அரக்கனாக வாழ்ந்தேனே. எனக்கு நற்கதி கிடைக்குமா ? இனி இந்த ஈனத் தொழிலைச் செய்யேன்" என்று கூறிப் பறவையை அடைத்து வைத்திருந்த கூட்டைப் பிய்த்தெறிந்தான். வில்லையும் அம்பையும் வீசி யெறிந்தான். கண்ணீர் வடித்தான்,
உள்ளம் துடித்தான். கூட்டிலிருந்து பெண் புறா வெளிவந்து வேடனைப் பார்த்து
கூறுகின்றது.

"அன்புள்ள வேடனே ! கணவனை இழந்து வாழ்கின்ற மானிடப் பெண்களைப்போல் நான் வாழ மாட்டேன். கணவன்தான் எனக்கு உயிர். அவர் மறைந்ததும் எனக்கு என்ன வாழ்வு இருக்கின்றது. நீ களைத்திருக்கிறாய். பசியால் இளைத்திருக்கிறாய். உன் கடும் பசிக்கு என் கணவனுடைய சிறிய உடல் போதாது. நானும் இத்தீயில் வீழ்ந்து மாளுவேன். என்னையும் தின்று திருப்தி அடைவாயாக" என்று கூறித் தீயில் வீழ்ந்து விட்டது.

வேடன் இப்புறாக்களின் அன்பையும் பண்பையும் பார்த்து அதிசயம் அடைந்தான்.
"இவை பறவைகளா ? உயிர்களைக் கொன்று தின்று வாழ்கின்ற நான், மனிதனா ?
நான் செய்த பாவங்களுக்கு என்ன என்ன நரகம் உண்டாகுமோ ? இனி வாழகில்லேன்" என்று கூறி, அவனும் அத்தீயில் வீழ்ந்து மாண்டுவிட்டான். அந்த
மூன்று உயிர்களும் பொன்மேனி பெற்றுப் புண்ணிய உலகத்தை அடைந்தன.

## இராவணன் ஆலோசனை

விபீஷணனுக்கு ஏன் அடைக்கலம் தர வேண்டும் என்பதற்கு மேலும் விளக்கம்
அளிக்கின்றார் இராமர்.

"அன்பர்களே ! அடைக்கலமாக நம் இருப்பிடத்துக்கு வந்த வேடனுக்கு உதவி
செய்த புறாக்களின் அன்பு எனக்கு இருக்க வேண்டாமா ?"

"தேவர்கள் பாற்கடலைக் கடைந்த பொழுது அதில் ஆல கால விஷம் தோன்றி
வருத்த, அத்தேவர்கள் சிவபெருமானை அடைந்தபோது. அச்சிவபெருமான்
ஆலகாலம் உண்டு நீல கண்டனானதை நாம் சிந்திக்க வேண்டாமா ?
அத்திருவருளை வந்திக்க வேண்டாமா ? ஒருவன் அபயமென்பவருக்கு அருள
வில்லையானால், உள்ளத்தைப் பிறருக்கு ஈய வில்லையானால், தருமத்துக்கும்
ஆண்மைக்கும் என்ன பெருமையுண்டு ? சிந்தியுங்கள்."

சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது அபயம் என்று அழுத சானகியின்
குரலைக் கேட்டு, இராவணனைத் தடுத்துக் கடும்போர் புரிந்து. சிவபெருமானுடைய
வாளினால் சிறகையும் உயிரையும் இழந்து, தெய்வ மரணம் பெற்ற என் பெரிய
தந்தையாகிய சடாயு பகவானுடைய கருணைத் திறத்தை நாம் மறக்கலாமோ ?"

"ஆதலினால் அன்பர்களே, அடைக்கலம் என்றாலே ஆட்கொள்வது தான் சிறந்த
அறமாகும். கடமையுமாகும். நம்பால் அடைக்கலமாக வந்த விபீஷணனை
ஆதரிக்க வேண்டும். தம்பீ ! சக்ரீவா, நீயே போய் விபீஷணனை அழைத்து வா"
என்று கட்டளையிட்டார். சுக்ரீவன் விபீஷணரிடம் வந்து அவனைத் தழுவிக்
கொண்டு "எம்பெருமான் உன்னை அழைத்து வருமாறு என்னை
அனுப்பினார்" என்று கூறினான்.

இதைக் கேட்ட விபீஷணர் அழுதார், இராமபிரானைத் திசை நோக்கித் தொழுதார்.

"பஞ்சு என்று சொன்னவுடனேயே சிவக்கின்ற மெல்லிய பாதங்களையுடைய சீதாதேவியைக் கவர்ந்த வஞ்சகனுடைய தம்பியாகிய என்னை, வருகவென்று அருள் செய்தாரோ ! பரமேசுவரன் நஞ்சை உண்டு நஞ்சையும் கண்டத்தில் தரித்து அருள் செய்தது போல் எனக்கும் அருள் புரிந்தார்" என்று கூறி எண்ணினார்.

"தன்னைக் கடைந்து துன்பஞ் செய்த தேவர்களுக்குக் கடல் அமிர்தத்தை வழங்கியதுபோல், எம்பெருமான் எனக்கு அருள் புரிந்தார்" என்று எண்ணினார்.

சுக்ரீவனுடன் விபீஷணர் சென்று மரகத மலைபோல் சாய்ந்திருக்கும் மணிவண்ணனைக் கண்டு ஆனந் வெள்ளத்தில் அழுந்தினார். "ரகு வீரா ! அபயம். இராமச்சந்திரா ! அபயம். தசரத நந்தனா ! அபயம்" என்று கூறி. ஐயன் திருவடியில் வீழ்ந்தார்.

விபீஷணர், "என் அண்ணனாகிய இராவணன் என்மேல் சீறி, என்னை வெறுத்து ஒதுக்கியதும் ஒரு நன்மையாயிற்று தேவருக்கும் யாவருக்கும் கிடைக்காத இராமருடைய திருவடி எனக்குக் கிடைத்தது. நான் பிறவித் துயரத்தைத் தீர்ப்பேன்" என்றார்.

இராமர், "விபீஷணா ! இன்று முதல் நீ எனக்குத் தம்பியாகும். தசரதச் சக்ரவர்த்திக்கு இராமன், பரதன், இலட்சுமணன், சத்ருக்னன் என்று நான்கு புதல்வர்கள் உண்டு. குகனுடன் ஐந்து புதல்வர்கள் ஆனோம். சுக்ரீவனோடு அறுவரானோம். இப்பொழுது உன்னுடன் எழுவரானோம். உன் தந்தையாகிய தசரதனுக்குப் புத்திர பாக்கியங்கள் அதிகரிக்கின்றன." என்று கூறி

விபீஷணனுடைய தலையில் திருமுடியைச் சூட்டி, "நீ இலங்கைக்கு அரசனாக ஆட்சி புரிவாயாக" என்று அருள் புரிந்தார்.

"தம்பீ ! நீ இலங்கையை வேதம் உள்ளளவும், இராமன் என்று என் பேர் உள்ளளவும், சிரஞ்சீவியாக இருந்து ஆட்சி புரிவாயாக" என்றார்.

விபீஷணர், "எம்பெருமானே ! தேவரீருடைய திருவடிப் பாதுகையை எனக்குக் சூட்ட வேண்டும்" என்று வேண்டினார். அதுபடியே பெருமான் சூட்டினார். விபீஷணர் பாடி வீட்டை வலம் வந்து மகிழ்ந்தார்.

இராமச்சந்திர மூர்த்தி கருணைக் கடல். உலகிலுள்ள எல்லா உயிர்களையும் தன்னுயிராக எண்ணுபவர். ஆன்ம நேய ஒருமைப்பாடு உடையவர். எல்லாரையும் சகோதரராக எண்ணுபவர். வடகோடி கங்கை, தென்கோடி லங்கை, வடக்கே கங்கைக்கரையில் ஒரு தம்பி குகன், தெற்கே லங்கையில் ஒரு தம்பி விபீஷணன். வடகோடியில் ஒரு தம்பி, தென் கோடியில் ஒரு தம்பி என்றதனால் இடையிலுள்ள அனைவரும் தம்பிகள் என்பது பெருளாகும்.

பின்னர், விபீஷணரை அழைத்துத் தம் அருகில் நிறுத்தி, "விபீஷணா ! இலங்கையைப் பற்றி அறிய விரும்புகின்றேன். அதனை எனக்குச் சொல்லுக" என்று கேட்டார்.

விபீஷணர், "பெருமானே ! ஆதிசேஷனுடன் நேர்ந்த பலப் பரீட்சையினால், மேருகிரியிலிருந்து பறித்துவிட்ட மலைச் சிகரமே இலங்கையாகும். அது வளமையான தீவு. இராவணன் இதனை ஆட்சி புரிகின்றான். நான்கு வாயில்களிலும் கோடிக் கணக்கான அரக்கர்கள் காவல் புரிகின்றார்கள். ஆஞ்சநேயர், இலங்கைக்கு வந்து அசோக வனத்தை அழித்தார். கிங்கரர்களைக் கொன்றார். ஜம்புமாலியை வதைத்தார். ஞ்சசேனாதி பதிகளைக் பஞ்சாக

நொறுக்கினார். இராவணனுடைய கடைசிக் குமாரனான அட்சகுமாரனையும், நிலத்தில் தேய்த்து அழித்தார். இலங்கைக்குத் தீ வைத்து அழித்தார். இராவணன்
முதலியோர் ஏழுநாள் விமானத்தில் பறந்து வானத்தில் தங்கினார்கள். அநுமார்
செய்த போர்த்திறத்தை யாராலும் சொல்ல முடியாது" என்று விபீஷணர் கூறினார்.

இதைக் கேட்ட இராமபிரான் அநுமாரை அருட்கண்ணால் பார்த்து "ஆஞ்சநேயா !
என் வில் திறத்தை உலகம் உணரும் பொருட்டு இலங்கையையும் அசுரரையும்
மிச்சமாக வைத்தனை போலும். இப்போது ஆட்சியிலுள்ள பிரமதேவர் தம் ஆட்சிக்காலம் முடிவுற்றபின், பிரமதேவராக ஆட்சி புரிவாய்" என்று பிரமபதத்தைத் தந்தருளினார்.

வருணனை வழி வேண்டல்

இராமபிரான் பெருங் கடலை எழுபது வெள்ளம் வாநரங்களுடன் எப்படிக் கடப்பது என்று ஆழ்ந்து சிந்தித்தார். விபீஷணனைப் பார்த்து, "அன்ப ! நமது சேனைகளுடன் நூறு யோசனை தூரமுள்ள கடலை எவ்வாறு கடப்பது ?" என்று வினவினார்.

விபீஷணர், "அண்ணலே ! வருணனை வேண்டி வழுத்தி அவருடைய துணையினால் கடலைக் கடப்போம்." என்றார்.

இராமமூர்த்தி ஏழுநாள் தர்ப்ப சயனத்தில் படுத்து வருணனை வேண்டித் தியானம்
புரிந்தார். வருணன் வெளிப்படவில்லை. அதனால், இராமர் பெருஞ்சீற்றம் அடைந்தார். அவருடைய புருவம் நெளிந்தது. தாமரைக்கண் சிவந்தது. இலட்சுமணரைப் பார்த்து, "தம்பீ ! திசை பாலகனாகிய வருணனை நான் வேண்டியது அவனுக்கு அகங்காரத்தை உண்டாக்கியது போலும். வருணன் தன் சிறுமையை உணர்ந்தானில்லை. கோதண்டத்தைக் கொண்டுவா" என்று கூறினார்.

இலட்சுமணர் கோதண்டத்தைக் கொடுக்கக் கடல் மீதில் அக்னிப் படையை இராமர்
ஏவினார். அதனால், கடல் எரியத் தொடங்கியது. மீன்கள் எண்ணெயில் வேகும்
பொருளைப்போல் வெந்தன. முடிவில், இராமபிரான் பிரமாஸ்திரத்தை எடுத்து விடுவதற்குத் தொடங்கினார். அப்பொழுது அகில உலகங்களும் நடுங்கின. கடல்
வற்றிச் சேறாகியது. ஊடுக்குலங்கள் உதிர்ந்தன. நெடுநிலங்கள் அதிர்ந்தன. வருண
பகவான் நடுங்கி, ஒடுங்கி மிக உயர்ந்த நவரத்தின மாலையுடன் பெருமானைக்
கண்டு வணங்கினான்.

"ஐயனே ! அருளாழிக் கையனே ! இரண்டு திமிங்கலங்கள் போர் புரிந்து, உலகத்துக்கு இடர் செய்தன. நான் அத்திமிங்கலங்களைச் சமாதானம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தேன். அதனால், தேவரீர் அழைத்ததை அறிந்தேனில்லை.
சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும். சேய் செய்த பிழையைத்
தாய் பொறுப்பது இயல்புதானே. அகில உலகங்களுக்கும் தாயாகவும்
தந்தையாகவும் இருக்கின்ற தயாபரனே ! சரணம் ! சரணம்" என்று பணிந்தான்.

இராமபிரான், "வருணனே ! அஞ்சற்க, அபயமளித்தேன. என் கணைக்கு இலக்கு
யாது ?" என்று கேட்டார்.

"பெருமானே ! மருகாந்தாரம் என்னும் தீவில் மக்களுக்குத் தீங்கு செய்யும் அரக்கர்கள் நூறுகோடி பேர் வாழ்கிறார்கள். அவர்கள் மீது கணையை ஏவுவீர்."

இராமர் பிரமாஸ்திரத்தை மருகாந்தாரத் தீவின் மீது ஏவி நூறு கோடி அவுணரை
வதஞ் செய்து அருளினார். வருணனைப் பார்த்து "இலங்கைக்குப் போக வழி

தர
வேண்டும்" என்றார். வருணன், "என் மேல் சேது கட்டிச் செல்வீராக" என்றான்.

சேது பந்தனம் இராமர் சேது அணைக்கட்டு ஏற்பாடு செய் என்றார். விசுவப் பிரம்மா நளன் என்னும் வாநர வீரனாகப் பிறந்திருக்கின்றான். அதனால், சுக்ரீவன்
நளனை அழைத்துச் சேது கட்டுமாறு கட்டளையிட்டான். சேது பந்தனஞ் செய்வதில் இராமர் இலட்சுமணர், சுக்ரீவன், விபீஷணர் இந்த நால்வரும் ஈடுபடவில்லை. ஏனைய எழுபது வெள்ள வாநர வீரர்கள் அநுமார் உட்பட ஈடுபட்டார்கள். மலைகளைச் சில வாநரங்கள் பேர்த்தன. சில வாநரங்கள் வாலால்
கட்டி ஈர்த்தன. அவைகளைச் சேதுவில் சேர்த்தன. கடலைத துார்த்தன. சில
வாநரங்கள் வேலை செய்யாமலே ஆர்த்தன பத்து வாநரங்கள் சேர்ந்து ஒரு மலையைத் துாக்கி கொண்டு வந்தன. மலையைச் சென்னியில் துாக்கிக் கொண்டு
வந்தன. அநுமார் வாலில் ஒரு மலை, காலில் இருமலை, கையில் நான்கு மலை,
தோளில் எட்டு மலை, சிரத்தில் பத்து மலையாகக் கொண்டு வந்து அணையில்
சேர்த்தார். வாநரங்கள் எல்லாம் பம்பரமாகச் சுழன்று அணை கட்டின.

வாநரங்கள் பல மலைகளைப் பறித்து எறிய, அவற்றை நளன் இடக்கையில் வாங்கித் தாங்கி அணையில் சேர்த்தான். அந்தக் காட்சி சடையப்ப வள்ளல் வெண்ணெய் நல்லுாரில் தஞ்சமென்று வந்தவரைத் தாங்குவதுபோல் இருந்தது.

## நளன்

ஆஞ்ச நேயர் தான் கொண்டுவந்து கொடுக்கும் மலைகளை வலக்கையில் கொல்லுாரைத் தாங்கியிருப்பதனால் இடக்கையில் வாங்கி வாங்கி அணையில் சேர்த்தார். அநுமார் "நான் முதலமைச்சர், இந்த நளன் கொத்தன், நான் கொடுக்கும்

மலைகளை அலட்சியமாக இடக்கையில் வாங்குகிறானே என்னை மதிக்கின்றானில்லை" என்று கருதி, தானே அணையில் மலைகளைச் சேர்க்கத் தொடங்கினார். ஆனால் அம்மலைகள் அணையில் சேராமல் கடலில் மூழ்கிவிட்டன. இதைத் தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பரந்தாமன்,

"ஆஞ்சநேயா ! தொழில் துறையில் பெரியவர் சிறியவர் என்று பார்க்கக்கூடாது. நீ மலைகளை நளன் மூலமாகவே அணையிற் சேர்ப்பாயாக" என்றார்.

இலட்சுமணர் இராமரைப் பார்த்து, "அண்ணா ! நளன் கையால் சேர்கின்ற மலைகள் நீரில் அழுந்தாமல் மிதக்கின்றன. அநுமான் சேர்க்கின்ற மலைகள் நீரில் அழுந்தி விடுகின்றன. இதற்கு என்ன காரணம் ?" என்று கேட்டார். இராமர் விளக்கம் அளித்தார்.

"ஒரு கானகத்தில் மாதவேந்திரர் என்ற மகரிக்ஷி தவஞ்செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் சூரிய கிரகணம். கிரண காலத்தில் தெய்வத்தைக் குறித்து ஜபம் செய்தால் ஒன்றுக்கு ஆயிரமாகப் பலன் உண்டாகும். அன்றியும் தண்ணீரில் முழுகிச் சொன்னால் ஒன்றுக்கு லட்சமாகப் பலன் அதிகப்படும். அதனால், ஆன்றோர்கள் நீரிடை நின்று தவஞ் செய்வார்கள். "

"சூரிய கிரகணமாகிய அன்று மாதவேந்திரர் நீரிடை முழுகி நிலை தவம் புரிந்து கொண்டிருந்தார். நளன் என்ற வானரம் அப்போது குட்டிக் குரங்காக இருந்தது. குரங்குகளுக்குச் சேட்டை அதிகம். நீரில் தவஞ் செய்யும் முனிவர் மீது கற்களையெறிந்து குறும்பு செய்தது. முனிவர் தவத்தைவிட்டு எழுந்து வந்து குரங்கை விரட்டிவிட்டு மீண்டும் நீரில் முழுகித் தவஞ் செய்தார். "

"குரங்குகளும் குழந்தைகளும் வேண்டாம் என்பதை வேண்டுமென்று செய்வார்கள். இவர் பலமுறை அக்குரங்கை விரட்டியும், அந்த குரங்குக் குட்டி கல்லைவிட்டு எறிந்து கொண்டேயிருந்தது. ஜபம் செய்யும்போது கோபங் கொண்டு சாபங் கொடுத்தால் ஜபசக்தி குறைந்துவிடும். அதனால், அம்முனிவர் குரங்குக்குச் சாபங் கொடுக்காமல் இக்குரங்கு என்மேல் எறியும் கற்கள் தண்ணீருக்குள் முழுகாமல் மிதக்க உடவன என்று கூறிவிட்டுத் தண்ணீருக்குள் நின்று கொண்டு ஜபஞ்செய்வராயினார். குரங்கு தான் எறியும்

கற்கள் முழுகாமல் மிதப்பதனால் விளையாட்டில் சுவை குன்றி விலகிச் சென்றது. அப்பொழுது தன்னுடைய ஜபத்திற்கு நன்மையாகக் கூறிய கட்டுரையால் இந்த நளன் இடுகின்ற கற்கள் தண்ணீரில் அழுத்தாமல் மிதக்கின்ற தன்மையைப் பெறுகின்றன. அதனால் நளன் மூலந்தான் அணைக்கட்ட வேண்டும். " இவ்வாறு வாநரங்கள் இரவு பகலாகப் பணி செய்து மூன்று நாட்களில் அணை கட்டி முடித்தன. அந்த அணையின் அழகைக் கண்டு இராமர் அகமகிழந்து, வருணன் தனக்குமுன் கொடுத்த நவரத்தின மாலையை நளனுக்குப் பரிசாக வழங்கினார். அவனுடைய ஆற்றலைப் பாராட்டினார். நல்ல நேரத்தில் அணை மீது வலக்காலை முன் வைத்து நடந்து இலங்கைத் தீவையடைந்தார்கள்.

## சுகசாரணர்

நளன் சுக்ரீவன் முதலியோர் தங்குவதற்குப் பாசறை வீடுகளை அமைத்துக் கொடுத்தான். இராவணனால் அனுப்பப்பட்ட சுகன், சாரணன் என்று இரண்டு ஒற்றர்கள் குரங்கு வடிவங் கொண்டு வாநர வீரர்களின் ஆற்றலை ஆராய்ந்து திரிந்து கொண்டிருந்தார்கள்.

விபீஷணர், பாம்பறியும் பாம்பின் கால் என்றபடி இவர்களை அறிந்து கொண்டு,
அவர்கள் வாயில் உதிரம் வரக் குத்தி தண்டித்தார். அதைக் கண்டு வாநரங்கள்
வருந்தினார்கள். இராமச்சந்திர மூர்த்தி, "தம்பி ! இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? இவர்களை ஏன் அடிக்கின்றாய்?" என்று வினவினார்.

"ஐயனே ! இவர்கள் வாநரங்கள் அல்லர், இராவணனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள்.
இவன் சுகன், இவன் சாரணன் நம்முடைய நிலைமைகளை ஆய்ந்து பார்க்க வந்தவர்கள். அதனால் தண்டித்தேன்" என்று கூறிய விபீஷணர் ஒரு மந்திரத்தை
ஜபித்தார். அவர்களுக்கு வாநர வடிவம் நீங்கி அசுர வடிவம் வந்தது. அவர்கள்
நடுங்கி நின்றார்கள். இராமபிரான் அவர்களுக்கு அபயம் கொடுத்துக் கூறுகின்றார்.

"ஒற்றர்களே ! சீதையைச் சிறை வைத்த இராவணன் வாழும் இலங்கையை அறியாது இருந்தபடியால் இராவணன் இத்தனைக் காலம் வாழ்ந்தான். இப்பொழுது அவனுக்கு அழிவுக்காலம் வந்து விட்டது என்பதை அவனிடம் சொல்லுங்கள். தருமம் வெல்லும் அதருமம் தோற்கும் என்பதை அவனுக்குக் கூறுங்கள். இலங்கைக்குத் தீ வைத்த அநுமனைப் போன்ற வாநரங்கள் எழுபது வெள்ளம் இருக்கின்றன என்று தெரிவியுங்கள்" என்று கூறிக் கருணையுடன் அவர்களைச் சேனை வெள்ளத்தை விட்டு அப்புறப்படுத்தி அனுப்பினார்.

இராவணன் ஒரு மணி மண்டபத்திலிருந்து மந்திராலோசனை புரிந்தான். "அன்புடைய தோழர்களே ! வாநரங்கள் மலைகளை வேருடன் பறித்து நூறு யோசனை தூரம் கடலில் அணை கட்டி இலங்கைக்கே வந்துவிட்டன. இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் ?" என்று வினவினான். சீதையைச் சிறை விட்டுச் சமாதானம் செய்து கொள்வது நலம். என்று பாட்டனாராகிய மாலியவான் கூறினான். ஏனையோர் அதை மறுத்தார்கள். இராவணன் பாட்டனார் மீது கோபித்துக் கொண்டான். அப்பொழுது சுக சாரணர் வந்து, இராமருடைய கருணைத் திறத்தையும் வாநர வீரர்களின் ஆற்றலையும் விரித்துக் கூறினார்கள். சாகின்றவனுக்கு மருந்து பிடிக்காது. அதுபோல், இராவணனுக்கு மாலியவான் கூறிய அறிவுரை ஏற்கவில்லை.

இராமர் பரிவாரங்களுடன் சுவேல மலை மீது ஏறி இலங்கையைப் பார்த்தார். அதனுடைய தோற்றத்தையும் ஏற்றத்தையும் கண்டு வியந்தார். தம்பிக்கு இலங்கையை இவ்வாறு அமைத்த தெய்வத் தச்சன் பெருமையை உணர்த்தினார்.

## மகுட பங்கம்

இராவணன் வாநர சேனைகளைக் காணும் பொருட்டு ஊர்வசி முதலிய அரம்பையர்கள் பணி செய்ய வானளாவிய கோபுரத்தின் மீது ஏறி நின்றான். தன் அண்ணன் நின்று பார்ப்பதை விபீஷணர் இராமருக்கு தெரிவித்தார். அங்கிருந்து சுக்ரீவன், இராவணனைப் பார்த்து, 'கற்புத் தெய்வத்தைக்

காவல்சிறையில் வைத்த கள்வன் இவன். இவனைக் கண்டு நான் வெறுமனே இருப்பது என் வீரத்துக்கு இழுக்காகும்' எண்றெண்ணி, இராவணன் மீது பாய்ந்தான். அரம்பயைர் முதலிய பெண்கள் அலறி ஓடி ஒளிந்தார்களை. இராவணனுடைய மார்பின் மீது சுக்ரீவன் குத்தினான். இராவணனுக்கும் சுக்ரீவனுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. ஒருவரை ஒருவர் அடித்தும் கடித்தும், பிடித்தும் மற்போர் நிகழ்த்தினர்.

இராமர், சுக்ரீவன் தனிமையில் சென்று இராவணனுடன் போர் புரிவதைக் கண்டு பெருந்துயரமடைந்தார். "சுக்ரீவா ! என்ன காரியம் செய்தனை ? ஒரு கருமத்தை எண்ணித் துணிய வேண்டாமா ?

'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியும் தூக்கிச் செயல். '

என்னும் மூதுரையை நீ படிக்கவில்லையா ? உன்னை இராவணன் கொன்றுவிட்டால் உன் மனைவி ருமாவிடம் நான் என்ன சொல்வேன் ? உன்னை இழந்து நான் சீதையைப் பெற்றால் எனக்கு அது வெற்றியாகாது. தானத்தில் நிதானம் பெரிதல்லவா ? வரபலம் மிகுந்த இராவணனைக் கொல்வது எளிதல்லவே. மனிதனுக்கு அவசரம் கூடாதே. ஆராயும் திறம் வேண்டாமா ?" என்றெல்லாம் கூறி வருந்தினார்.

சுக்ரீவன் இராவணனுடைய மகுடங்களில் இளஞ் சூரியனைப் போல் ஒளி செய்கின்ற மணிகளைப் பறித்துக் கொண்டு வந்து இராமபிரான் திருவடிகளில் வைத்து வீழ்ந்து வணங்கினான்.

இராமபிரானுக்குச் சென்ற உயிர் திரும்பியதுபோல் மகிழ்ச்சியுண்டாயிற்று. சுக்ரீவனை மார்போடு தழுவிக் கொண்டார். அவன் உடம்பெல்லாம் உதிர வெள்ளம் பொங்கியெழுந்ததைக் கண்டு இராமர் மிகவும் வருந்தினார்.

இராமர் சுக்ரீவனைப் பார்த்து "தம்பி, நீ தனிமையில் வர பலம் நிறைந்த இராவணனைச் சென்று எதிர்க்கலாமா ? அவன் உன்னைக் கொன்றிருப்பானாயின் நான் வென்றும் தோற்றவனாகவே ஆவேன். சீதையைச் சிறை மீட்டும் நான் சிந்தை மகிழேன். நீ எழுபது வெள்ள வாநரங்களின்

உயிர் அல்லவா ? உன் உயிர் போனால் வேறு என்ன இருக்கின்றது ? இனி இவ்வாறு செய்யாதே" என்று வருத்தத்துடன் கூறினார்.

"இராவணனுடைய தலைகளைக் கொண்டு வராமல் அவனது மகுட மணிகளைத்தானே கொண்டு வந்தேன். நாட்டிலே குகப் பெருமான் செய்த திருத்தொண்டைப் போலே செய்ய இல்லேன். காட்டிலே கழுகு வேந்தனாகிய ஜடாயு பகவானைப் போலே உயிரை வழங்கிப் புகழ் பெற்றேனில்லை. எம்பிராட்டியைச் சிறை வைத்த பரம பாதகனைப் பார்த்ததும் அவனது பத்துத் தலைகளையும் கொண்டு வராமல் வெறுங் கையுடன் வந்தேன். என்னுடைய தொண்டு சிறப்புடையதாகாதே" என்று கூறி வருந்தினான் சுக்ரீவன்.

"சுக்ரீவ மன்னர் செய்தது அரிய பெரிய காரியமாகும். சிவ பெருமானுடைய சென்னியிலிருந்து திங்களையும் பறிக்கலாம், நாராயண மூர்த்தியின் திருமார்பிலிருக்கும் கவுத்துவ மணியையும் பறிக்கலாம். ஆனால், என் அண்ணன் தசமுகன் தலையிலுள்ள மகுடத்தின் மணிகளைப் பறிக்க ஒல்லாது. அதனைப் பறித்து வந்த பிரிதி குமாரனுடைய பராகிரமம் பாராட்டுதற்குரியது. இது செயற்கரிய செயலாகும்" என்று வியந்து செப்பினார் விபீஷணர்.

### அணிவகுப்பு

வானர சேனைத் தலைவனாகிய நீலன் தன் சேனைகளை அணிவகுத்து நிறுத்தினான். மேற்கு வாயிலில் 17 வெள்ளம் சேனையுடன் அநுமாரும், வடக்கு வாயிலில் 17 வெள்ளம் சேனையும் சுக்ரீவனும், கிழக்கு வாயிலில் 17 வெள்ளம் சேனையுடன் நீலனும், தெற்கு வாயிலில் 17 வெள்ளம் சேனையுடன் அங்கதனும் நின்றனர். இந்த வானர வீரர்களுக்கு போனகம் தேடுகின்றவர் இரண்டு வெள்ளம்.

## தூதும் போரும்

### அசுர சேனைகள்

கீழ்த்திசை வாயிலில் 200 வெள்ளம் சேனையுடன் பிரகஸ்தனும், தென் திசை வாயிலில் 200 வெள்ளம் சேனையுடன் மகோதரனும், மேல்திசை வாயிலில் 200 வெள்ளம் சேனையுடன் இந்திரஜித்தும், நகரின் வாயிலில் 200 வெள்ளம்

சேனையுடன் விரூபாக்ஷனும், வடதிசை வாயிலில் 200 வெள்ளம் சேனையுடன் இராவணனும் அணிவகுத்து நின்றனர்.

## அங்கதன் தூது

தூது என்பது ஒரு புரட்சியான சொல். முன்னெழுத்து பின்னெழுத்தாகவும் து – தூ என்பது திரும்பி என்றாயிற்று. இதுபோன்ற சொல் தமிழில் வேறில்லை.

தூது என்பது கண்போன்றது. கண் சென்று பற்றுங் கருவி. கண் ஒளியுடன் தொலைவிலுள்ள பொருளைச் சென்று பார்க்கின்றது. காதில் ஓர் ஒலி வந்து விழுகின்றது. ஒரு மன்னவனுடைய கருத்தை மற்றொரு மன்னவனுக்குச் சென்று சொல்லுகிறவன் தூதன். கந்தபுராணத்தில் வீரவாகுதேவர் தூது, இராமயணத்தில் அங்கதன் தூது, மகாபாரதத்தில் உலூக முனிவர் தூது, சஞ்சயன் தூது. கண்ணன் தூது, கடோத்கஜன் தூது என்ற நான்கு தூதுகள் வருகின்றன. ஆனால், எல்லா தூதுகளும் தோல்வியடைந்தன. உலகம் அளந்த உத்தமனாகிய கண்ணபிரான் துரியோதனிடம் ஐந்து வீடுகள் பெற முடியாமல் வீணே திரும்பிவிட்டார். திருவாரூரில் சிவபெருமான் இரவிலே பரவையார் மனைக்குச் சென்ற அந்த ஒரு தூதுதான் வென்றது.

சிற்றியலக்கியங்களில், மேகவிடு தூது, நாரைவிடு தூது, கிள்ளைவிடு தூது, வண்டுவிடு தூது, விறலிவிடு தூது, பணவிடு தூது, தமிழ்விடு தூது, நெஞ்சுவிடு தூது, மயில்விடு தூது இவ்வாறு பல தூதுகள் இருக்கின்றன. தூது இலக்கியம் சுவையாக இருக்கும்.

இனி, அங்கதன் யார் என்பதை விளக்குகின்றேன். பதவியில் இருப்பவர்க்குப் பகைவர்களால் பல துன்பங்கள் விளையும் உதாரணமாக இராமர், தருமர், நளன், அரிச்சந்திரன், பாரி இப்படிப் பலரும் பகைவரால் வேதனைப்பட்டிருக்கின்றார்கள்.

இந்திரன், மூவுலகநாதன், அவனுக்கு எப்போதும் பகை. ஒரு சமயம் முசுகுந்தச் சக்ரவர்த்தி இந்திரனுக்குத் துணையாகச் சென்று அவனது பகைவர்களை வதைத்து உதவி செய்தார். அதனால், இந்திர பகவான் திருமாலின் மார்பில் இருந்து தன்னிடம் வந்த, வழிபாட்டு மூர்த்தியாகிய தியாகராஜப் பெருமானை முசுகுந்தனுக்குத் தந்தார். முசுகுந்தச் சக்ரவர்த்தி அப்பெருமானைத் திருவாரூரில் எழுந்தருளச் செய்தார். திருவாரூரில் ஆண்டுக் கொருமுறை முசுகுந்தச் சக்ரவர்த்திக்குப் பூஜை நடைபெறுவது கண்கூடு.

மற்றொரு முறை அர்ச்சுனன் இந்திர உலகம் சென்று இந்திரனுக்கு இருந்த பகைகளைக் களைந்து உதவி புரிந்தார். ஆகவே, இந்திரனுக்கு எப்போதும் பகையுண்டு. காத்தற் கடவுளாகிய நாராயணர் இந்திரனுக்கு நிரந்தரமாக உதவி புரியக் கருதி, இந்திரனுடைய தாய் அதிதி வயிற்றில் ஆயிரம் ஆண்டுகள் கருவிருந்து, குழந்தையாகப் பிறந்து இந்திரனுக்குத் தம்பியாகிய உபேந்திரன் என்ற பேருடன் வளர்ந்து, தன் தமையனாகிய இந்திரனுக்குத் உதவி புரிவாரானார். திருமாலே
உபேந்திரனாகப் பிறந்தார். அந்த உபேந்திரன் அங்கதனாகப் பிறந்தார். ஆகவே, அங்கதன் திருமாலின் அம்சமாகும். அதனால் இராமயணத்தில் அங்கதனுக்குச் சிறந்த இடமுண்டு. இராமருக்குத் திருமுடி சூட்டும் இடத்தில் அரியணை அநுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த என்ற சொற்றொடரைச் சிந்திக்க.

அங்கதன் அஞ்சா நெஞ்சையுடையவன். தன் தந்தையைப் போல் அளவில்லாத ஆற்றலுடையவன். இராம பக்தி பூண்டவன், தன் சிறிய தந்தையாகிய சுக்ரீவனுக்கு நலஞ் செய்கின்றவன், நற்குண நம்பி, ஞாலம்போற்றும் சீலம் உடையவன்.

இராமச்சந்திர மூர்த்தி "அரசியல் முறைப்படி இராவணனுக்கு ஒரு தூது அனுப்பிச் சீதையைச் சிறை விடுமாறு சொல்ல வேண்டும். அவன் திருந்திச், செய்த பாவத்துக்கு வருந்தி, நம்மைப் பொருந்துவானாயின், போர் புரிய வேண்டிய அவசியம் இல்லை. அவன் திருந்தவில்லையானால் போர் புரிய வேண்டும். அன்பர்களே ! ஒரு தூதனை அனுப்புவதே நீதியும் நெறியும் ஆகும்" என்றார். தூதனை அனுப்புவது அரச நெறியே என்று விபீஷணரும் சுக்ரீவனும் உடன்பட்டார்கள்.

## இலட்சுமணர்

இலட்சுமணர் தூது அனுப்புவதற்கு இசையாமல் மறுத்துரைத்தார். "மனிதனை மனிதன் அறிவான், மட நாயைத் தடிக் கொம்பு அறியும் என்பது பழமொழி. இராவணன் பண்பாடில்லாதவன். உலக மாதாவைச் சிறையில் வைத்தான். தேவருக்கு இடுக்கண் செய்தான். அந்தணர்களுக்கு அலக்கண் செய்தான், மன்னுயிர்களைப் புடைத்துத் தின்றான், ஜடாயு பகவானைக் கொன்றான்.

அவன் செய்த - செய்யும் - கொடுமைகளுக்கு அளவேயில்லை. ஆகவே, தூது அனுப்புவது சரியன்று" என்று இலட்சுமணர் இயம்பினார்.

இராமர், "தம்பி இலட்சுமணா ! நீ மொழிவது முற்றும் உண்மை. அரக்கர்கள் அழிவதும் உண்மை, நாய் வாலை நிமிர்த்த முடியாது. ஆனாலும், நாம் அரசியல் நெறிப்படி தூதனை அனுப்புவது நமது பெருந்தன்மைக்கு அழகாகும். அன்றி, மீண்டும் அநுமனையே தூது அனுப்பினால் அவனைத் தவிர வேறு சிறந்தவர்கள் இல்லையோ என்று எண்ணுவார்கள். ஒரு தூதனுக்கு அறிவாற்றல், பேசுந் திறமை, அஞ்சாமை, துணிவு, பணிவு, கனிவு முதலிய பல குணங்கள் அமைந்திருக்க வேண்டும். இத்தனைக் குணங்களும் அநுமானுக்கு உண்டு. வீட்டிற்கு வந்த மருமகனுக்கே தின்பண்டங்கள் மாறி மாறிச் செய்து படைப்பார்கள். நாம் அநுமனையே மீண்டும் அனுப்புவது கூடாது. அநுமனுக்கு அடுத்த இடம் அங்கதனாகும்" என்று கூறி அங்கதனை அழைத்தார். அங்கதனுக்கு, மாருதிக்கு அடுத்த இடம் தனக்குக் கிடைத்ததே என்று மட்டற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று.

இராமர், "அன்புள்ள அங்கதனே ! நீ தூது சென்று இராவணனுக்கு நீதி நெறி புகன்று, எதிர்த்தவரை வென்று, பகைவரைக் கொன்று இனிது மீளுக" என்ற கூறி விடை கொடுத்தார்.

அங்கதன் இராமரது கணையைவிட வேகமாக விண்ணில் பாய்ந்து சென்றான். இராவணனுடைய மணி மண்டபத்தை அடைந்தான். இராவணன் பலர் சூழப், பொன்மேருகிரி அமர்ந்திருந்தது போல் வீற்றிருந்தான். அவனுடைய இணையில்லாத ஏற்றத்தையும் தோற்றத்தையும் அங்கதன் கண்டான். அங்கதன் தனக்குள், "ஆ ! இவனது பெருமிதம் மிகச் சிறந்தது. இவனை இராமபிரானையன்றிக் கொல்ல வல்லார் யார் ? இவனுயை மகுடமணியைப் பறித்த என் சிறிய பிதாவின் ஆற்றல் மிகவும் சிறந்தது," என்று கூறிக் கொண்டான்.

அங்கதனுடைய வீரத் தோற்றத்தைக் கண்ட இராவணன் உள்ளுக்குள் அஞ்சினான். "மகோதரா ! இது முன் வந்த வாநரமா ?" என்று கேட்டான். மகோதரன் "அசுர குல வேந்தே இது முன் வந்த குரங்கைவிட இளந் துடிப்புடன் இருக்கின்றது" என்றான்.

இராவணன், "வாநரமே நீ யார் ? வந்த கருமம் யாது ? இங்கே உள்ளவர்கள் உன்னைக் கொன்று தின்பதற்கு முன் விரைந்து சொல்" என்று மண்டபம் அதிர நகைத்துக் கேட்டான்.

அங்கதன் கூறுகின்றான் "இராவணா ! பூதங்களுக்கு நாயகனும், கடல்சூழ்ந்த பூமிக்கு நாயகனும், திருமகளையொத்த சீதைக்கு நாயகனும், தெய்வ நாயகனும் நீ ஓதுகின்ற வேதங்களுக்கு நாயகனும், விதிக்கு நாயகனும் ஆகிய இராமபிரான் அனுப்பிய தூதன் யான். இராமர் கூறிய அறிவுரையைச் சொல்ல வந்தேன்" என்று கூறினான்.

அங்கதன் வார்த்தையைக் கேட்ட இராவணன், "ஏ, வாநரமே ! சிவமூர்த்தி அன்று, திருமாலும் அன்று, பிரம தேவனும் அன்று, இவர்கள் என்பால் வரத் தயங்குவார்கள். குரங்குகளைக் கூட்டிச் சிறிய கடலைச் சேதுகட்டி வருந்துகின்ற இராமனா உலகநாதன் ? நீ யார் ? உன் பேர் யாது ?" என்று வினாவினான்.

அங்கதன் கூறுகின்றான். "தசக்கிரீவா ! இலங்கையில் இராவணன் என்றொருவன் இருந்தான். அவனை வாலில் கட்டி அவன் உதிரம் எங்கும் சிந்த, மலைகள் தோறும் பாய்ந்து அவனை அடக்கி ஒடுக்கிய மகா வீரன் வாலி. அந்த வாலி கடலைக் கலக்கி அமிர்தத்தைத் தோன்றச் செய்தவன். அத்தகைய வித்தக வாலியின் மைந்தன் நான். என் பேர் அங்கதன்".

இதைக் கேட்ட இராவணன் புன்னகை புரிந்து "என் அருமை மகனே, உன் தந்தையாகிய வாலி என் உயிர்த் தோழன், தந்தையைக் கொன்ற இராமன் பின்னே நீ அடங்கி ஒடுங்கி, நடுங்கிச் சென்று வாழலாமா ? இது உன் பெருமைக்கு இழுக்கல்லவா ? நான் சீதையை உடைமையாக பெற்றேன், உன்னை மகனாகப் பெற்றேன். இதைவிடப் பெரும் பேறு எனக்கு என்ன இருக்கின்றது ? அந்த மானுடர்கள் இன்று நாளை அழிந்து விடுவார்கள். உனக்கு நான் முடி சூட்டுவேன். உன் அரசை உனக்குத் தருவேன்" என்றான்.

அங்கதன் "ஏ ! மூடனே ! இங்குள்ளார் அனைவருக்கும் மரணவாசம் நெருங்கிவிட்டதென்று விபீஷணன் எங்கள்பால் வந்தான். இலங்கைக்கு

அரசனாக அவனுக்கு நாங்கள் முடி சூட்டினோம். வாயில் வந்ததைச் சொல்லி என்னை வசஞ்செய்ய முயல்கின்றாயோ ! நீ பட்டங் கொடுக்க, நான் அரசாட்சியைப் பெறுவேன் என்பது, நாய் நல்லரசைக் கொடுக்க, சிங்கம் பெற்றுக் கொண்டதுபோல் ஆகும். நீ இப்படி ஆனாயே, இவ்வாறு கெட்டுப் போனாயே ! பெண்ணாசையால் அழிந்தவர் பலர். சந்திரன், இந்திரன், சுந்தோபசுந்திரர் முதலியோர் பெண்ணாசையால் அழிந்தார்கள். இலங்கை வேந்தனே ! நீ புலத்தியர் மரபில் வந்தவன், புலத்தியர் பிரம குமாரர். பிரம குலத்தில் வந்த நீ ஆயிரம் வேதங்களை ஓதினாய். நீ பரதாரகமனம் செய்யலாமா ? உனக்குள்ள மனைவியர் போதாதா ? அசுரர்குலம் அழிய, ஆசைக்கு அடிமையாகாதே. தேவியை விடுக, இல்லையேல் ஆவியை விடுக. இரண்டில் ஒன்று செய்க" என்ற கூறினான்.

இராவணன் இதைக் கேட்டுச் சினந்து, "இவனைப் பற்றுங்கள், ஏற்றுங்கள்" என்று அரக்க வீரர்களை ஏவினான். அங்கதன் அவர்களைக் கொன்று, முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா என்று கருதி, வானவெளியாக வந்து இராமரை வணங்கி, "பெருமானே வளவளவென்று கூறுவதனால் என்ன பயன் ? மூடன் தலை அற்றாலன்றி அவன் ஆசையறாது" என்று கூறினான்.

## முதல்நாள் போர்

வானர சேனைகள் முதல்நாள் போருக்குப் புறப்பட்டன. இலங்கை நகரத்தின் வாயிலில் புகுந்து இராமனின் கட்டளையின்படி மரங்களையும் மலைகளையும் எடுத்து அகழியைத் தூர்த்தன. வாநர சேனையும் அசுர சேனையும் எதிர்த்துக் கடும்போர் புரிந்தன.

வடக்கு வாயிலில் வச்சிரமுட்டி என்ற அசுர வீரன் கடும் போர் புரிந்தான். அதனால், வாநரங்கள் பல மாண்டன. ஆதித்தன் மகனாகிய சுக்ரீவன் ஆலகால விஷம்போல் சீறி வச்சிர முட்டியுடன் போர் புரிந்து அவனை மாய்த்தான். கிழக்கு வாயிலில் அரக்கர் சேனைத் தலைவனாகிய பிரகத்தன் ஆயிரமாயிரம் அம்புகளை ஏவி, அரிக்குலங்களைக் கொன்று குவித்தான். வாநர சேனைத் தலைவானாகிய நீலன் அவனை எதிர்த்துப்போர் புரிந்து கொன்றான். தெற்கு வாயிலில் சுபாரிசன் என்ற அசுர வீரன் பெரும் போர் புரிந்தான். வாநரங்கள் வருத்தமுற்றன. அங்கதன் அவனை எதிர்த்து வதைத்தான். மேற்கு வாயிலில் துன்முகன் என்ற அசுர வீரனையும் இருநூறு

வெள்ளம் சேனைகளையும் அநுமார், அறவற்ற ஆற்றலுடன் போர்புரிந்து அழித்தார்.

தூதர்கள் ஓடி, கிழக்கு வாயிலில் சேனாதிபதி பிரகத்தனும் தெற்கு வாயிலில் சுபாரிசனும், வடக்கு வாயிலில் வச்சிர முட்டியும், மேற்கு வாயிலில் துன்முகனும் ஏனைய சேனைகளும் மாண்டார்கள் என்று இராவணனிடம் கூறினர்.

இராவணன் ஆயிரம் குதிரைகள் பூட்டியதும், இந்திரன் தந்ததுமாகிய கடல் போன்ற விசாலமுள்ள தேரில் ஏறிப் போருக்கு வந்தான். இராவணன் போருக்கு வருகிறான் என்று தூதர்கள் ஓடி இராமருக்கு அறிவித்தார்கள்.

இராமர், கோதண்டபாணியாய் மூதண்டம் நடுங்கப் போர்க்களத்திற்கு வந்தார். இராமனுடைய வில்லோசையைக் கேட்டு வாநர வீரர்கள் மூலைக்கொருவராக ஓடி ஒளிந்தார்கள். சூராதி சூரனாகிய சுக்ரீவன் இராவணனைத் தடுத்து அவனுடன் போர் புரிந்தான். இராவணன் விட்ட அம்பினால் சுக்ரீவன் மயங்கி வீழ்ந்தான். ஆஞ்ச நேயர் சுக்ரீவன் மயங்கி வீழ்ந்தது கண்டு, சீற்றங் கொண்டு இராவணனைப் பார்த்து "இலங்கை வேந்தனே ! என்னுடன் போர்செய்ய வா !" என்று கூறி மலையொன்றைப் பேர்த்து இராவணன் மீது வீசினார். இராவணன் கணைகளை ஏவி அம்மலையைத் துகள் படுத்தினன். அநுமார் ஒரு மாமரத்தைப் பிடுங்கி இராவணன் மீது எறிந்தார். இராவணனுடைய சாரதி தலை வீழ்ந்தது. வேறு சாரதி தேரில் ஏறினான். இராவணன் நூறு அம்புகளை ஏவ, அதனால், அநுமாருடைய திருமேனி ஆறுபோல் உதிரம் சோர அல்லல் பட்டார்.

இலட்சுமணர் இதனைக் கண்டு, உள்ளம் உலைந்து, ஆயிரம் ஆயிரம் பாணங்களை ஏவி, அசுர சேனைகளை அழித்தார்.

## முஷ்டி யுத்தம்

அநுமார் இராவணன் எதிரில் வந்து "இலங்கை வேந்தனே ! இப்பொழுதும் நீயும் நானும் முஷ்டி யுத்தம் புரிவோம். உன்னுடைய மார்பில் நான் குத்துவேன். நீ பிழைத்துக் கொண்டால் என் மார்பில் குத்து, நான் பிழைத்துக் கொண்டால், இனி உனக்கும் எனக்கும் போர் புரியும் நிலைமையில்லை"

என்றார். இராவணன் அநுமாருடைய வீரவசனத்துக்கு இணங்கித் தன் மார்பைக் காட்டி நின்றான்.

அநுமார் ஐந்து விரல்களையும் மடக்கி இராவணன் மார்பில் ஓங்கி குத்தினார். அக்குத்து மேருமலையில் இடி விழுந்ததுபோல் இருந்தது. இராவணன் சிறிது நேரம் மயங்கித் தயங்கி நின்றான். அநுமாருடைய குத்தினால் துன்பத்தை அடைந்தான். தலையிலுள்ள மூளை அவனுடைய காது வழியாகவும் மூக்கு வழியாகவும் தயிர் சிந்துவது போல் வெளிவந்தது.

இராவணன் அநுமாரை நோக்கி, "வாநர வீரனே ! வலிமை என்பது ஒன்று உண்டு என்பதையும் அது உன்னிடம் இருக்கிறது என்பதையும் உணர்ந்தேன். நீ சிறந்த வீரன் என்பதையும் அறிந்தேன். தளர்வு என்பதையும் உணர்ந்தேன் நீ என்னை வென்றனை. உனக்கு நிகரான வீரர் பதினான்கு உலகிலும் இல்லை. இனி உன் மார்பில் நான் குத்துவேன். அக்குத்தினால் நீ மாண்டு ஒழிவாய். ஒருகால் நீ பிழைத்துக் கொண்டால் உனக்கு அழிவில்லை. உன்னால் என்னைக் கொல்ல முடியவில்லை. என்னால் உன்னைக் கொல்ல முடியவில்லை. ஆதலால் உனக்கும் எனக்கும் போரில்லை" என்று புகழ்ந்து கூறினான். பின்னர், அநுமாருடைய மார்பிலே வஜ்ஜிரம் போன்ற தன் பத்துக் கரங்களால் ஓங்கிக் குத்தினான். இராவணனுடைய குத்தினால் ஆஞ்சநேயர் மூர்ச்சித்துச் சலித்து மேரு மலைபோல் உலகை மறந்து நின்றார். அநுமார் சலித்தது கண்டு உலகங்கள் சலித்தன.

வாநரங்கள் மலைகளைப் பிடுங்கி இராவணன் மீது வீசிக் கடும்போர் புரிந்தன. இராவணன் ஆயிரங் கோடி அம்புகளால் அம்மலைகளைச் சாம்பலாக்கினான். இராவணனது போர்த் திறத்தைக் கண்டு இமையவர் வியந்தனர்.

இலட்சுமணர் வில்லை வளைத்து நூறுகோடி, நூறு நூறாயிரங்கோடி அம்புகளை ஏவிப், பாண மழை பொழிந்தார். அதனால், அசுர சேனைகள் மாண்டன. இராவணனுடைய பத்துக் கொடிய விற்களையும் துண்டு செய்தார். இராவணன் இலட்சுமணரின் போர்த்திறத்தை மிகவும் வியந்து பாராட்டினான். அவருடைய கர வேகத்தையும் சர வேகத்தையும் கண்டு திகைத்தான். வீரத்துடன் நகைத்தான். ஒரு சிறந்த வேலை இலட்சுமணர் மீது ஏவினான். இலட்சுமணர் வேல் பட்டு உணர்ச்சியற்று வீழ்ந்தார். இராவணன், இலட்சுமணரைக் கொண்டு போய் சிறையிலடைக்கக் கருதித் தன் இருபது

கரங்களாலும், அவரை எடுக்க முயன்றார். வெள்ளி மலையை அள்ளியெடுத்த அவனால் இலட்சுமணரை எடுக்க முடியவில்லை. ஆனாலும், முயற்சியை விடாமல் அயர்ச்சியுடன் இலட்சுமணரைத் தூக்க எத்தனித்தான். வேறிடத்தில் போர் புரிந்து கொண்டிருந்த அநுமார் இதனைப் பார்த்துக் கோழிக் குஞ்சைத் தூக்குவதுபோல் இலட்சுமணரை ஒரு கையில் தூக்கிக் கொண்டு வானத்தில் பறந்து சென்றார். தன்னால் தூக்கமுடியாத இலட்சுமணரை ஒரு கரத்தால் எளிதாகத் தூக்கிக் கொண்டு போகும். அநுமாரின் ஆற்றலைக் கண்டு அரக்கர் கோமகன் அதிசயம் அடைந்தான்.

## இராமரும் இராவணனும்



இராவணன் எதிரில் வந்து போர் செய்யத் தொடங்கினார் இராமர், அப்பொழுது ஆஞ்சநேயர் தம் தோளில் ஏறுமாறு இராமரை வேண்டினார். இராமர் அநுமாருடைய தோளில் ஏறி, வலிமை மேவி போர் புரிந்தார். இராமரைச் சுமந்திருக்கும் அநுமார், வாலினாலும் கால்களினாலும் கரங்களாலும் அசுர சேனையைக் கொன்று குவித்தார்.

இராமரும் இராவணனும் மிகவும் கொதித்துக் கடும்போர் புரிந்தார்கள். அநுமார் இராவணனுடைய ஒவ்வொரு முகத்துக்கு முன்னின்று போர் புரிந்தார். அவன் கையிலிருந்து விற்களைப்பிடுங்கி எறிந்தார். தேர்க்

குதிரைகளைக் கொன்றார். இராவணனுடைய பத்து விற்களையும் இராமர் அறுத்தெறிந்தார். இராமர் ஒரு விநாடியில் இராவணனுடைய பத்து மணி மகுடங்களையும் நிலத்தில் வீழ்த்தினார். அதனால், இராவணன் சந்திரனை இழந்த இரவையும் சூரியனை இழந்த பகலையும் ஒத்து நின்றான்.

சந்திரன் இல்லையானால் அது இரவாகும் சூரியன் இல்லாத பகல் கிடையாது. இப்போது கவிச்சக்ரவர்த்தி ஆதித்தன் இல்லாத பகலும் ஒத்தான் என்று கூறுகின்றார். இதனை இல்பொருள் உவமை என்று புலவர்கள் கூறுவர். அது முற்றும் பொருந்தாது.

சூரியன் இல்லையானால் பகலே கிடையாது. இராவணனுக்குப் பூத உடம்பு, புகழுடம்பு என்று இரண்டு உடம்புகள் இருந்தன. மணிமகுடம்போய் அவன் ஒளியிழந்து சந்திரனில்லாத இரவைப்போல் பூத உடம்புடன் இருந்தான். சூரியன் இல்லாமையால் பகல் இல்லாமல் போவதுபோல், அவனடைய புகழுடம்பு இல்லாமல் மறைந்துவிட்டது. கம்பநாடருடைய கவித்திறம் கண்டு களிக்கத் தக்கது.

இராவணன் தேரிழந்து. வீரன் என்ற பேரிழந்து, சேனைகள் சூழ நின்ற சீரிழந்து, படையிழந்து, கம்பீரமான நடையிழந்து மார்பிலிருந்து பூந்தொடையிழந்து, பூச்சக்கரக் குடையிழந்து, வில்லிழந்து, தனிப்பெருந்தலைவன் என்ற சொல்லிழந்து மானம் இழந்து விழுதுடன் கூடிய ஆலமரம்போல் வெறுங் கையனாய் நின்றான், நாணினான், கால் பெருவிரலால் நிலங் கிளைத்துக் கடைக்கண்ணால் இராமரைப் பார்த்து நின்றான்.

கருணைக்கடலாகிய இராமச்சந்திர மூர்த்தி ஓர் அம்பினை ஏவி, இராவணனுடைய பத்துத் தலைகளையும் கீழே தள்ளியிருக்கலாம். எளிதிலே இதனைச் செய்திருக்கலாம். அவ்வாறு எம்பெருமான் செய்யவில்லை. தேய்ந்த சந்திரனை ராகு கேதுகள் பற்றுவதில்லை. தேய்ந்து ஒய்ந்தவனைக் கொல்லுதல் தம் வீரத்துக்கு அழகன்று என்று எண்ணினார். இராவணன் மீது இரக்கங் கொண்டார். தம்முடைய தர்மபத்தினியைக் கவர்ந்த மகாபாதகனைக் கண்டு சீற்றம் அடைந்தாரில்லை. அவனுடைய நிலைமைக்கு இரங்கினார். சில அறவுரைகளைப் பகர்கின்றார்.

"தசக்ரீவா ! தருமத்தினாலல்லது வலிமையால் மட்டும் பெரும் போரில் வெற்றி பெறுவது தேவர்களுக்கும் அரிது என்பதை உன் மனத்தில் உறுதியாக

எண்ணுக. பாவீ ! இலங்கைக்குப் போக வேண்டுமென்று பரபரக்கின்றாய். மெலிந்திருக்கும் உன்னை நான் கொல்ல விரும்பவில்லை. அறந்தான் வெல்லும் ஆயுதம் வெல்லாது என்பதை. இதனால் உணர்ந்து கொள். நீ அறம் வெல்லும் என்பதை இப்போதாவது உணரக்கடவாய். ஐயா, உன்னுடைய சேனைகள் யாவும் சூறாவளிக் காற்றில் இலவம்பஞ்சு பறப்பதுபோல் அழிந்து ஒழிந்தன. உன் மனைவி வண்டோதரி உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். அவள் சிறந்த உத்தமி. நீ இன்று போய், உண்டு உறங்கி இளைப்பாறி விட்டு வேறு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாளைக்குப் போருக்கு வா" என்று கூறி அருள் புரிந்தார்.

கங்கை நதி பாய, பாக்குக் குலைகளில் வாளைமீன் தாவும் வளமையுடைய கோசல நாட்டுக்குரிய வள்ளலாகிய இராமச்சந்திர மூர்த்தி வாரத்துடனும் ஈரத்துடனும் கருணை ததும்ப கூறினார்.

இராமச்சந்திர மூர்த்தி பரம சத்துருவும் தமது மனைவியைக் கவர்ந்தவனும் துர்க்குணக் களஞ்சியமுமான இராவணனுக்கு கருணை புரிந்து, பரிந்து அருளுரை கூறினார்.

இராவணன், இராமபிரானுடைய கருணைத் திறத்தை எண்ணி இலங்கையை நோக்கிப் போகின்றான்.

## கும்பகர்ணன்

போரில் தோல்வியுற்ற இராவணன், திசை யானைகளுடன் போர் செய்த மார்பின் வலியையும், கைலை மலையை எடுத்த தோளின் திறமையையும் இசை வல்லாராகிய நாரத முனிவர் மகிழச், சாமவேதம் பாடிய நாவையும், மாலையணிந்த பத்து மணிமகுடங்களையும், சிவபெருமான் தந்த வாளாயுதத்தையும் தன் ஒப்பற்ற வீரத்தையும் போர்க்களத்தே விட்டு, வெறுங்கையுடன் இலங்கை மாநகரம் சென்றான்.

தன்னைத் தக்க தருணத்தில் பயன்படுத்திக் கொள்ளாததால் சிவபெருமான் தந்த வாள் அவனைவிட்டு விலகிப் போயிற்று. அப்படி இராவணன் சென்ற பொழுது. ஒரு மனிதனுக்குத் தோற்றான் என்ற பழி அவனைத் தொடர்ந்து

சென்றது. நாணத்தினால் கரங்களைத் தொங்கவிடாமல் தூக்கிக் கொண்டு நடந்து தன் நகரத்தையடைந்தான். ஆதித்தன் அஸ்தகிரியை அடைந்தான்.

இராவணன் போரில் தோற்ற நாணத்தால் திசைகள் எவற்றையும் பார்க்கவில்லை. தன்னைக் காணவந்த மைந்தர்களையும் பார்க்கவில்லை. கடல் போன்ற தன் சேனைகளையும் பார்க்கவில்லை. பெண்கள் தங்கள் கண்களால் தனித்தனியே அவனை நோக்கத்தான் அவர்களை நோக்காதவனாய் நில மகள் என்ற பெண்ணையே நோக்கிக் கொண்டு போனான்.

தனியான இடத்தில் சென்று மணித்தவிசில் இருந்தான். மனகதி, வாயுவேகன், மருத்தன், மாமேகன் என்ற நான்கு தூதுகளிலும் உள்ள நமது சேனைகளை அழைத்து வாருங்கள் என்று கூறியனுப்பினான்.

இராவணன் தன்னைக் கண்டு வானுலகில் இருப்பவர்களும் மண்ணுலகில் இருப்பவர்களும், தான் கண்டு நகைத்த பகைவர்களும் சிரிக்கின்றார்களே என்று நாணினானில்லை. நீண்ட கண்களையுடைய சீதை சிரிப்பாளே என்று பேதையாகிய அவன் நாணி வருந்தலானான்.

## கும்பகர்ணன் போர்த்திறன்

சீதை தன் நிலையைக் கண்டு ஏளனமாகச் சிரிப்பாளே என்று எண்ணி நாணி வருந்திய இராவணனை, அவனுடைய இளைய பாட்டனாராகிய மாலியவான் கண்டார். அவன் அருகில் அமர்ந்து அன்புடன் கேட்டார்.

"பேரப்பிள்ளையே ! வாடியிருக்கின்றனையே. உனக்கு வந்த துன்பம் என்னே ?" என்று வினவினார். இராவணன் கூறத் தொடங்கினான்.

"தாத்தா ! சிவபெருமானைத் தலைமையாகக் கொண்டு மூன்று புவனங்களும் எதிர்த்தாலும் இளையவனாகிய இலட்சுமணனை வெல்ல முடியாது."

"இராமன் என்னுடன் போர் செய்தபோது அவனுக்குக் கோபமோ, பரபரப்போ, வேகமோ உண்டாகவில்லை. தன் சிறிய தாயின் செவிலித் தாயாகிய மந்தரையின் கூன்மீது, அந்தக் கூன் நிமிரட்டுமே என்று கருணையால் மண்ணுண்டையை எறிந்ததுபோல், என்னுடன் விளையாட்டாகப் போர் புரிந்தான். அவனுக்குக் கோபம் வந்திருந்தால் நான் இங்கு

வந்திருக்கமாட்டேன். நமனுலகம் போயிருப்பேன். என்னுடைய இருநூறு வெள்ளம் சேனைகளையும் இராமன் அழித்த வீரத் திறத்தை என்னென்று சொல்லுவேன் ? இராமனுடைய பாணங்களை உலகமெங்கும் புகுவனவேயன்றி, ஊழிக் காலம் சென்றாலும் ஓய்வடையா. நெருப்பையும் எரிக்கும். எட்டுப் பொருப்பையும் எரிக்கும். திசைகளையும் எரிக்கும். சொல்லும் வாயையும் எரிக்கும். நினைக்கின்ற மனத்தையும் எரிக்கும். நான் இந்திரனுடைய வச்சிராயுதத்தையும், ஈசனுடைய சூலாயுதத்தையும் திருமாலுடைய சக்ராயுதத்தையும் பார்த்திருக்கின்றேன். ஆனால், இந்த இராமனுடைய ஆயுதங்களைப்போல் எங்கும் கண்டதில்லை. அந்த ஆயுதங்களின் தாக்குதல்களை என்னையன்றி யார் தாங்கவல்லார் ? தாத்தா ! ஆயிரந் தோள்களையுடைய கார்த்தவீரியன் சிறந்த வீரன். அவனை ஒப்பார் இல்லையென்று எண்ணியிருந்தேன். ஆனால், இப்போது இந்த இராமனுடைய காலில் உள்ள ஒரு தூசுக்கும் அந்த கார்த்தவீரியன் இணையாக மாட்டான் என்பதையுணர்ந்தேன். இராமனுடைய வலிய வில் மேற்குத்திசையில் உள்ளதோ ? கிழக்குத் திசையில் உள்ளதோ ? மூலத்திசைகளில் தான் உள்ளதோ ? வடக்கே உள்ளதோ ? தெற்கே உள்ளதோ ? என்று இன்னும் நான் உணர்ந்தேனில்லை."

"ஒரு புலவனுடைய சொல் வேகத்தைக் காட்டிலும் அவன் வில்வேகம் இருந்தது. இராகவனுடைய போர்த்திறத்தின் வேகத்தையும், அவருடைய திருமேனி நலத்தையும் சீதை பார்த்து, என்னையும் மன்மதனையும் பார்த்தால் நாங்கள் நாய்க்குச் சமானம் ஆவோம். எனக்கு நாசகாலம் வந்தபோது நல்லதொரு பகையைப் பெற்றேன். இதுதான் இன்று நிகழ்ந்தது." என்று தன் தோல்வியைக் கூறி, இராவணன் வருந்தினான்.

இதைக்கேட்ட மாலியவான், "பேரக் குழந்தையே ! முந்தியே உனக்கு அறிவுரை புகன்றேன். இராமனுடைய பகை கூடாது. இராமன் உலக நாயகன். அவன் மனைவியை விரும்புவது நெருப்பை விழுங்க நினைத்த புழுவின் தன்மையாகும். ஆதலால், சீதாதேவி கற்புக்கனல். அப்பெருமாட்டியை விரும்புவது பெரும் பாவம். நீ சீதையைச் சிறைவிட்டு அவருடைய கருணையைப் பெறுவாயாக. இதனால், அசுரர் குலம் வாழும்" என்று இன்னுரை கூறினார்.

அந்த சமயத்தில் மகோதரன் என்ற முதலமைச்சன் அங்கு வந்தான். அவன் மாயையில் வல்லவன், தீயவையே புரிகின்றவன். இராவணனைப் பார்த்து, "ராவணேஸ்வரா ! அச்சம் ஒருவனை அழிக்கும். சிவபிரானுடன் கைலை மலையை அள்ளியெடுத்த உன் ஆற்றலுக்கு இணையுண்டா ? வென்றவர் தோற்பார், தோற்பவர் வெல்வார். வெற்றியும் தோல்வியும் உலக இயல்பு ஆவியை விட்டாலும் விடலாம். தேவியை விடக்கூடாது, சீதையைச் சிறைவிட்டால் தேவர்கள் சிரிப்பார்கள். ஆதலால், உன் தம்பி கும்பகருணனை அனுப்பி பகைவரை அழித்து நலம் பெற்று வாழ்க" என்று கூறினான்.,

இராவணன் அவன் சொல்லை மெச்சி, "என் தம்பி கும்பகருணனை எழுப்பி வாருங்கள்" என்று ஏவலரை ஏவினான்.

காவலராகிய தேவரில் சிலர் சென்று கும்பகருணனை எழுப்புகின்றார்கள். "ஏ ! கும்பகருணா ! உங்கள் மாய வாழ்வு அனைத்தும் இன்றுடன் முடியப் போகிறது. எழுந்திரு. எழுந்திரு. இன்னும் தூங்க வேண்டுமென்று விருப்பம் இருந்தால், காலதூதன் கையிலேபோய் உறங்குவாய்" என்று எழுப்பினர். அவன் எழுந்தானில்லை.

குதிரைகள், யானைகள், யானிகள் இவைகளை ஆயிரமாயிரமாக அவனை மிதிக்கவிட்டு எழுப்பினார்கள். அந்த விலங்குகள் ஏறி மிதிப்பது அவனுக்குச் சொறிந்துவிட்டது போலிருந்தது. அவன் திரும்பிப் படுத்துக் கொண்டான். இராவணன் அவனை எழுப்புமாறு ஆயிரம் மல்லரை ஏவினான். அவர்கள் சென்று தாரை, சங்கு முதலிய கருவிகளை அவன் காதில் வைத்து ஊதினார்கள். அவன் அருகில் சென்றவுடன் மூச்சுக் காற்றால் அவன் நாசிக்குள்ளே போவதும், வருவதுமாக அவர்கள் இடர்பட்டார்கள். அங்குள்ள நாற்காலிகளும் வேறு பல ஆசனங்களும் அவன் மூக்கில் சென்று ஊசலாடின. ஆயிரம் குதிரைகளை அவன் மீதில் ஏற்றி மிதிக்க வைத்தார்கள். பல மல்லர்கள் அவன் மூக்கிலும் காதிலும் உள்ளே சென்று எழுப்பினார்கள். அடித்தும் இடித்தும் அவனை துயிலுருணருமாறு செய்தார்கள்.

## கும்பகருணனும் இராவணனும்

சம்மட்டியாலும், கோடரியாலும் அவன் கன்னத்தில் அடிக்கக் கும்பகருணன் துயிலைத் துறந்து எழுந்தான். உணவு எங்கே என்று கேட்டான். அறுநூறு

வண்டியிலுள்ள அன்னத்தையும் பதினாயிரங் குடங்களிலுள்ள மதுவையும் உண்டு பசியாறாது பரிதவித்தான். பின்னர், ஆயிரத்து இருநூறு எருமைகளைப் பொரிகடலையைத் தின்பது போலத் தின்றான். தின்றுவிட்டு மீண்டும் கண்மூடி உறங்கலானான். கிங்கரர்கள் அவன் காதில் சங்கநாதம் போல் உன் அண்ணன் அழைக்கின்றான் என்று கூறத் துண்ணென எழுந்து அண்ணனிடம் சென்றான்.

கும்பகருணன் அண்ணனிடம் போகின்ற காட்சி ஒரு நெடுமலை நடந்து போவது போலிருந்தது. கும்பகருணன் தன் அண்ணனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

வணங்கிய தம்பியை இராவணன் மார்புறத் தழுவிக் கொண்டான். கும்பகருணன் ஒரு விசாலமான ஆசனத்தில் அமர்ந்து தூக்க மயக்கத்திலேயே இருந்தான். இராவணன் கும்பகருணனுக்கு மார்பில் கவசத்தை இட்டு, நெற்றியில் வீரப் பட்டத்தைக் கட்டிப் போர்க்கோலம் புனைந்தான்.

கும்பகருணன் நித்திரை மயக்கம் கலைந்து, "என் அன்புடைய அண்ணா ! இந்தப் போர்க்கோலம் எதற்காகப் புனைகின்றாய் ?" என்று கேட்டான்.

"அருமைத் தம்பீ இரண்டு மானிடர்கள் எழுபது வெள்ளம் வாநரங்களோடு இலங்கைக்கு வந்திருக்கின்றார்கள். உனக்குப் போதிய உணவு ஆயத்தமாகவில்லை. ஆதலால், நீ சென்று அத்தனைப் பேரையும் பசியாற உண்டு உவந்து வருவாயாக" என்று இராவணன் கூறினான்.

இதைக் கேட்டு கும்பகருணன் திடுக்கிட்டான். தேள் கொட்டியது போல் துடித்தான்.

"அண்ணா ! போர் மூண்டுவிட்டதா ? அளவில்லாத கற்புடைய உலக மாதேவியாகிய சீதா தேவியின் துயர் இன்னும் தீரவில்லையோ ? மண்ணும் விண்ணும் வளர்ந்த நின் பெரும் புகழ் தீயிடைப் பஞ்சுபோல் அழிந்துவிட்டதோ ? அசுரர்களும் நாமும் அழியுங் காலம் வந்துவிட்டதோ ?"

"ஒருவனுக்கு நிலம் காரணமாகவும், பதவி காரணமாகவும் போர் மூளும். ஆனால், உனக்கு ஒரு பெண்மணியின் காரணமாகப் போர் மூண்டுவிட்டது. நெடுந் தொலைவிலிருந்து ஒரு நாகம் பார்க்குமானாலும் விஷம் ஏறி மாண்டு போவார்கள். அந்த நாகத்திற்குத் திருஷ்டி விஷம் என்று பேருண்டு. சீதை திருஷ்டி விஷம் போன்றவள். அவளுடைய பார்வையினாலேயே உனக்கு அழிவு வரும். முன்பு பாட்டனாராகிய மாலியவானும், விபீஷணனும் அடியேனும் சீதையைச் சிறை விடுவதுவே செய்யத் தக்கது என்று பலமுறை கூறினோம். உனக்கு விதி வழி மதி போகின்றது. சாகின்றவனுக்கு மருந்து செல்லாது. அதுபோல், நாங்கள் கூறிய அறிவுரை பயனற்று விட்டது. விதியை வென்றவர் யார் ? பிரம தேவருடைய திருக்குமாராகிய புலத்தியருடைய மரபில் நாம் தோன்றினோம். அந்த உயர்குலத்தின் பண்பு அழிந்துவிட்டது. அண்ணா ! இந்திராதி தேவர்களுக்கு உன் தீண செயலால் வாழ்வு தந்துவிட்டாய். உன்னுடைய சுற்றமும் சேனையும் அழிவதற்கு வழிவகுத்து விட்டாய். உன்னை இராம பாணம் கொல்லாது. சீதையின் கண்ணீரே கொன்றுவிடும். பதிவிரதையின் கண்ணீர் பதினான்கு உலகங்களையும் அழிக்கும். அறம் மறைந்து விட்டது, மறம் நிறைந்துவிட்டது. அந்தோ ! பரிதாபம். உன் நிலைமை நினைக்கும்போது உள்ளம் உலைகின்றது. நம் அசுர குலம் இனி வாழாது. "

"இராம இலட்சுமணருக்கு மனம், வாக்கு காயம் என்று மூன்று கரணங்களில் மனத்தில் கருணையும் வாக்கில் சத்தியமும், காயத்தில் நல்லொழுக்கமும் நிறைந்திருக்கின்றன. நமது நெஞ்சில் வஞ்சகமும், வாக்கில் பொய்யும் செயலில் பாவமும் நிறைந்திருக்கின்றன. இத்தகைய நமக்கு எவ்வாறு வெற்றியுண்டாகும் ? காற்றைப் பஞ்சு எதிர்க்க முடியுமா ? இரும்பை எறும்பு உண்ணுமா ? நெருப்பை புழு அழிக்குமா ? "

"கருங்கடலைக் காற்றினால் கடந்த வாநரம் இன்னும் இருக்கின்றது. சீதையும் சிறையில் இருக்கின்றாள். வாலியைக் கொன்ற பாணமும் இருக்கின்றது. நாமும் இருக்கின்றோம். உய்வு நமக்கு இல்லை. ஆகவே, சீதையைச் சிறைவிட்டு இராமரை வணங்கி அருமைத் தம்பியாகிய ஒழுக்கம் நிறைந்த விபீஷணனோடு சேர்ந்து வாழ்வதே நமக்கு நன்மை. அசுர குலத்துக்கும் நன்மை. இதனை நீ கேளாமல் அசுர சேனைகளை மேலும் மேலும் அனுப்பி அழிப்பது நன்றன்று." இவ்வாறு கும்பகருணண் அறவுரை கூறினான்.

கும்பகருணனுடைய அறவுரையைக் கேட்டுக் கொதித்தான், காலினால் நிலத்தை மிதித்தான் "கும்பகருணா ! எனக்கு அறிவுரை கூறும்பொருட்டு நான் உன்னை அழைக்கவில்லை. எனக்கு நீ புத்தி சொல்ல வேண்டியதில்லை. நான் ஆயிரம் பேருக்குப் புத்தி புகட்டுவேன். நான் வெல்லாத் போரும், கல்லாத கலையும் இல்லை. வெள்ளிமலையை அள்ளி எடுத்த தோள்களையுடைய என்னை மனிதர்களால் அசைக்க முடியாது என்பதைத் தெரிந்துகொள். இரு மனிதர்களை வணங்கியும், மரங்களில் பூவுந் தழையும் உண்டு, கூனி உலாவும் குரங்குகளைக் கும்பிட்டு வாழ்வதும் உனக்கும் உன் தம்பிக்குமே பொருந்தும். வீராதி வீரனாகிய எனக்குப் பொருந்தாது. நிரம்ப ஊனும், மதுவும், சோறும் உண்டு உறங்குகின்ற உனக்கு வீரம் அழிந்துவிட்டது. நான் தேடிய பகையை நானே அழிப்பேன். நீ போய் உண்டு உறங்குவாயாக. ஏழுந்திரு. உன் இருப்பிடம் போவாயாக." என்று கூறினான். மிகவும் சீறினான். தன் அருகிலுள்ளவர்களைத் "தேரும் வில்லுங் கொண்டு வாருங்கள். நானே போர் செய்து அத்தனை பேரையும் அழிப்பேன்." என்று போருக்கு எழுந்தான்.

கும்பகருணன் அவனை வணங்கி, "அண்ணா ! நீ போருக்குப் போக வேண்டாம். விதி என் பிடர் பிடித்துத் தள்ளுகிறது. அடியேன் போருக்குப் போகின்றேன். திரும்பி வரமாட்டேன். நமது மூத்த மைந்தன் இந்திரஜித்து இலட்சுமணனால் மடிவது திண்ணம். என்னை வென்றவர் தங்களையும் வெல்லுவார்கள். எல்லாம் அழிவதற்கு முன் சீதையைச் சிறைவிட்டு விடுவதே அறத்தின் பாலதாகும். என்னை வளர்த்து ஆளாக்கிய அண்ணலே, சிறியேன் ஏதாவது பிழை செய்திருந்தால் மன்னித்து விடுங்கள். தங்கள் முகத்தில் விழிப்பது இனியில்லை" என்று கூறி, உதிரக் கண்ணீர் வடித்துக் கொண்டு பலமுறை அண்ணனை ஏற இறங்கப் பார்த்து, உள்ளம் வெந்து, நொந்து போருக்குப் புறப்பட்டான். இராவணன் இருபது கண்களிலும் கண்ணீர் வழிய அசையாது தம்பியை நோக்கிச் சித்திரம் போல் இருந்தான். சேனைகள் புடை சூழ வானமும், வையமும் நடுங்க, திசைக்களிறுகள் ஒடுங்க, தேரின்மேல் ஏறிச் சென்றான். யானைகளும், சிங்கங்களும் பேய்களும், பூதங்களும் அவனது தேரை ஈர்த்துச் சென்றன. தோமரம், சக்கரம், சூலம், மழு. வேல், உலக்கை, தண்டு, வில் முதலிய ஆயுதங்கள் நிறைந்த சேமத் தேர்கள் அவன் பின்னே தொடர்ந்து சென்றன.

இராமபிரான் கும்பகருணனைப் பார்த்து, “மலை போன்ற பெரிய வடிவுடன் போருக்கு வருபவன் யாவன் ? இராவணனாக இருந்தால் வீணைக் கொடி இருக்குமே ! சிம்மக் கொடியுடன் வருகின்றானே ! பேராற்றல் படைத்த சிவனுடைய தோளையும், மற்றொரு தோளையும் பார்க்க மிகுதியான காலம் வேண்டும். இவனைப்பற்றித் தெரிய விரும்புகிறேன்.“ என்று விபீஷணரிடம் வினவினார்.

விபீஷணர், “அண்ணா ! இவன் கும்பகருணன் இராவணனுக்கு இளவல், அடியேனுக்கு மூத்தவன். நீதி தங்கிய நெஞ்சினன். தன்னிகர் இல்லாத தனிப்பெரும் வலிமையுடையவன். இவன் உயர்ந்த தவத்தினன். சிறந்த வரம் பெற்றவன். தூக்கமே ஆக்கமாக உடையவன். இவன் சூலத்தை எடுத்தால் ஞாலம் பொடிபடும். ஆலம் உண்டவனைப்போல் சூலத்தினால் பகைவரை அழிக்குந் திறமுடையவன். தன் தமையனுக்குப் பலபல அறவுரை கூறி, அவன் கேளாமையால் போருக்கு வந்திருக்கின்றான்.“ என்று கூறினார்.

சுக்ரீவன் இராமபிரானைப் பார்த்து, “அருட் பெருங்கடலே ! கும்பகருணன் முரட்டுத் தன்மையுடையவன், பேராற்றல் படைத்தவன், ஆனால், நற்குணசீலன். இவனைக் கொல்வதால் நமக்கு என்ன பயன் ? இவனை நம்பால் சேர்த்துக் கொள்வது நல்லது“ என்று நவின்றான்.

இரகுவீரன், “தம்பீ ! விபீஷணா ! நீ கும்பகருணனிடம் சென்று, இன்னுரை இயம்பி, அவன் விரும்பினால் நம்பால் அழைத்துக் கொண்டு வருக“ என்று பணித்தருளினார்.

விபீஷணர் சேனைக்கடலை நீந்திக் கும்பகருணனை அணுகி, அவன் பாதங்களில் பணிந்தான். கும்பகருணன் அவனை எடுத்து மார்புறத் தழுவிக் கொண்டான். உள்ளம் உருகி, அன்பு பெருகிக் கூறுகின்றான்.

“தம்பி ! விபீஷணா ! அறத்தைக் கைவிட்டு மறத்தைத் தொட்டுக் காலன் வாயில் களிக்கின்ற எங்கள்பால் ஏன் வந்தனை ? நீ சிறந்த உத்தம குணசீலன், கவிஞரில் அறிவு மிக்கவன். அமுதத்தை உண்ணுகின்ற நீ, ஆலகால விடத்தை உண்ணலாமா ? புலத்தியன் குலத்தியல்பு அழிந்ததேனும், உன்னால் இந்தப் புலத்தியன் மரபு அழியாத புண்ணியமும், புகழும் பெற்றது

என்று எண்ணினேன். என் எண்ணத்தைப் பொடியாக்கி என் உள்ளத்தை உலையச் செய்து என் வாயை உலர்த்தினாய். அந்தோ ! அபயம் என்று அடைக்கலாம் புகுந்த உன்னை இராமர் புறக்கணிக்க மாட்டார். நீ மரண பயத்தை அகற்றினாய். நீ இங்கு வரக் காரணம் யாது ? தரும மூர்த்தியாகிய தாசரதிக்கு அடிமையாகிய உன்னுடைய பெருமை யாருக்கு வரும் ? பரதார கமனம் செய்கின்ற எங்களை நீ அணுகக்கூடாதே. இராம பிரானைச் சரணாகதி அடைந்த உன் தவத்தின் ஆற்றல் யாருக்கு வரும் ? வேத வேதாந்த வித்தகனாகிய இராமபிரானை நீ அடைந்தது பற்றி நான் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தேன். அத்தகைய உத்தமனாகிய நீ எங்களை நாடி வந்தது நன்றன்று. உனக்கு அசுர குலத்தின் குணம் இன்னும் போகவில்லையா ? தம்பி, எங்களைக் கூற்றுவன் தன் கொடிய நரகுக்கு அழைக்கின்றான். எங்கள் விதியும் அவனுக்குத் துணை செய்கின்றது. நாங்கள் போர் புரிந்து மாண்டால் நீ இருந்தால்தானே ஈமக் கடன் செய்ய முடியும் ? நீயும் இல்லையானால் எங்களுக்கு நீர்க்கடன் செய்வார் யார் ?“

விபீஷணர், “அண்ணா ! இராமபிரான் உன்னைத் தன்பால் அழைக்கின்றார். அவர் பிறவி நோய்க்கு மருந்தானவர். தாங்கள் எம்பெருமானிடம் வந்து உய்வு பெற வேண்டுகிறேன். இராமபிரான் எனக்குத் தந்த இலங்கைச் செல்வத்தை நான் தங்களுக்குத் தந்து, தங்கள் திருவடித் தொண்டனாக ஏவல் புரிவேன். ஆதலால், இராமன் மீதுள்ள காதலால் தாங்கள் இராகவனிடம் வந்து சேருக. ஒழுக்கமில்லாதவருடன் கூடியிருப்பது இழுக்காகும். ஆனபடியால், இராம மூர்த்தியுடன் சேர்ந்து நன்மையடைவாயாக. இராமபிரானுடைய கருணை உன்னைத் தேடி வருகின்றது. இதை இழந்துவிடாதே, கனிவரும் காலத்தில் பூக்கொய்யக் கூடாது. வேதநாயகனே உன்னைக் கருணையால் வேண்டி என்னை அனுப்பினார் ஆகவே, பெருமானிடம் வந்து சேருக“ என்று கூறி வணங்கினார்.

கும்பகருணன் தம்பியைத் தழுவிக் கூறுகின்றான், "தம்பி, இந்த உலக வாழ்வு நீர்மேல் எழுதிய எழுத்துக்கு நிகராகும். மின்னல்போல் தோன்றி மறைகின்ற வாழ்வைப் பெரிதாக எண்ணி, என்னை நெடுங்காலம் வளர்த்துப் போர்க்கோலம் புனைந்து அனுப்பிய தமையனுக்கு உயிர் கொடுப்பதுவே என் கடமை. கடமையை உணராதது மடமை. கடமையே எனது உடைமை. என்னுடைய கவலையை நீ தீர்க்கும் பொருட்டு நீலமேக வண்ணனை மீண்டும் சென்று சேர்வாயாக."

"தம்பி ! தாமரையில் வாழும் பிரமதேவர் உனக்கு எண்ணிலாத சிறந்த வரங்களை வழங்கியிருக்கின்றார். இராமபிரானால் நீ சிரஞ்சீவி பதம் பெற்றிருக்கின்றாய். நீ இராமபிரானையடைந்து புலத்தியர் மரபுக்கு வந்த பழியைப் போக்கி, நாட்டுக்கு நலஞ் செய்து நற்கதியடைவாயாக. நான் போர் செய்து புகழ் பெறுவேன். பிறரைக் கும்பிட்டு வாழ மாட்டேன். நமது அண்ணன் போர்க்களத்தில் தனியே மாண்டு கிடப்பது நன்றன்று. எல்லாம் விதியின்படிதான் நடைபெறும். நான் அண்ணனுடைய உணவை உண்டதனால் அவனுக்கு முன் உயிர் கொடுத்து மாள வேண்டும். அதுதான் எனக்குக் கடமை, நான் அநுமன், சுக்ரீவன், நீலன், அங்கதன் முதலிய வாநர வீரர்களை வென்று, என் பேராண்மையை உலகுக்குக் காட்டுவேன், என் போர்த் திறத்தை நீட்டுவேன். வாநரங்களின் உயிரை ஒட்டுவேன். தம்பீ, நீ காலங் கடத்தாமல் இராமபிரானை அடைவாயாக" என்று அவனுக்கு விடை கொடுத்தான். விபீஷணர் அண்ணனை வணங்கிப் புறப்பட்டார். கும்பகருணன் பாசத்தால், தம்பிமேல் உள்ள நேசத்தால் தம்பியைப் பார்த்தான். கண்ணீர் நீராகச் சொரிந்தது. விபீஷணர் இராமபிரானைக் கண்டு கும்பகருணனுடைய கருத்தை அறிவித்தார்.

கும்பகருணன் போர் புரியத் தொடங்கினான்.

## கும்பகருணன் போர்த் திறம்

அரக்கர் சேனைகளும் வாநர சேனைகளும் வீரத்துடன் எதிர்த்துப் போர் புரிந்தன. அரக்கர்கள், வாள், வேல், தண்டு, இருப்புலக்கை முதலிய ஆயுதங்களைக் கொண்டு வீரத்துடன் அமர் புரிந்தார்கள். வாநரங்கள் வானளாவிய மரங்களையும், மலைகளையும் வேருடன் பறித்து அசுர சேனைகள்மேல் வீசிப் போர்புரிந்தன.

சேனைத் தலைவனாகிய நீலன், காலன் வருவதுபோல் கும்பகர்ணனை எதிர்த்துக் குன்றுகளைச் சிந்திப் போர்செய்தான். கும்பகருணன் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே நீலனை மார்பில் குத்தி மயங்குமாறு செய்தான். அங்கதன் கும்பகருணன் தேர் மீதேறி அஞ்சாது அமர் புரிந்தான். கும்பகருணன் அங்கதனைப் பார்த்து, "வாநரமே, நீ சுக்ரீவனா ? வாலியின் மகனாகிய அங்கதனா ? இலங்கைக்கு தீ வைத்த அநுமனா ? புலிக்கு முன்

எலி வந்து போர் புரிவதுபோல் என்னுடன் பொருத வந்துள்ளனை. நான் ஒரு யானை, நீ ஒரு பூனை, நீ யார் ?" என்று வினவினான்.

அங்கதன், "அரக்கர் தலைவனே ! உன் தமையனாகிய இராவணனை வாலில் கட்டி மலைகளில் உதிரம் சிந்த, எட்டு திசைகளிலும் தாவிப் போர் புரிந்த வீராதி வீரனாகிய வாலியின் மைந்தன் யான். உன் உயிரைப் பருக வந்திருக்கின்றேன்" என்று கூறி, மலைகளைப் பறித்து அவன் மீது விசினான். அம்மலைகள் அவன் உடம்பில் பட்டுப் பொடிகளாயின. கும்பகருணன் அங்கதன் மீது ஏழு முனைகளையுடைய சூலத்தை வீசினான். அங்கதன் அந்தச் சூலத்தைக் கையால் பற்றிக் கொண்டு வீரத்துடன் நகைத்துக் கும்பகருணன் மீதே திருப்பி வீசினான். அங்கதன் வீரத்தைக் கண்டு விண்ணவர் வியந்தார்கள். கும்பகருணன் அந்த ஏழு முனைச் சூலத்தைப் பொடியாக்கி அங்கதன் மார்பில் குத்தினான். அங்கதன் மூர்ச்சித்து விட்டான்.

இதனைக் கண்ட ஆஞ்சநேயர் கும்பகருணனை எதிர்த்து ஒரு பெரிய மலையைப் பறித்து வீசினார். அவன் அதனை தன் இடக்கையால் விலக்கினான். அநுமார் கும்பகருணனின் வீரத்தினை வியந்து, "இனி உனக்கும் எனக்கும் போரில்லை" என்று கூறி விலகிச் சென்றார்.

கும்பகரணன் வாநரங்களைத் தாக்கினான். உயிரைப் போக்கினான். வாநரங்களை விண்ணிடை எறிந்தான், கடலிடை வீசினான். கால்களால் துகைத்தான். அண்டங்கள் வெடிப்பட நகைத்தான்.

## இலட்சுமணர்

வாநர சேனையின் அழிவையும், கும்பகருணனுடைய பேராற்றலையும் இலட்சுமணர் கண்டு அவனுடைய ஆற்றலை வியந்து, வில்லை வளைத்து, ஆயிரம் ஆயிரம் அம்பு மழைகளைப் பொழிந்தார். இலட்சுமணருடைய பாணங்களால் தேர்ப்படைகள் அழிந்தன. யானைப் படைகள் அவிந்து குவிந்தன. குதிரைப் படைகள் மாய்ந்து ஓய்ந்தன. காலாட் படைகள் உருண்டு புரண்டு மாய்ந்தன. மாண்ட அரக்கரை வீர சுவர்க்கத்தில் அரம்பையர் தழுவி மகிழ்ந்தனர்.

கும்பகருணன், இலட்சுமணருடைய கரவேகத்தையும் சரவேகத்தையும் பார்த்து வியந்தான். போரில் மாண்டவரின் பெருமையையும், இலட்சுமணருடைய வில் திறமையையும் நோக்கிய கும்பகருணன் திரிபுரத்தை எரித்த சிவபிரானும் இந்த இலட்சுமணனுமே சிறந்த வில்லாளிகள் என ஆயிரம் முறை கூறிப் பாராட்டினான். கும்பகருணன் இலட்சுமணனின் முன் வந்து நின்றான். இலட்சுமணர் அநுமாருடைய வேண்டுகோளின்படி அவருடைய தோளின்மீது ஆரோகணிந்தார். அநுமாருடைய தோள் ஆறு தேரின் பரப்புடையதாய் இருந்தது. அக்காட்சி வெள்ளிமலை மீது பொன்மலை இருந்ததுபோல் விளங்கியது. கும்பகருணன் இலட்சுமணரைப் பார்த்து. "வீர குமாரனே ! நீ இராமன் தம்பி, நான் இராவணன் தம்பி. உனக்கு நான் இளைக்க மாட்டேன். என் வில்லம்பால் இப்பொழுது நீ விண்ணுலகம் புகுவாய்" என்று கூறினான்.

இலட்சுமணர், "மூடனே, வீரர்கள் சொல்லால் அளக்க மாட்டார்கள் வில்லால் அளப்பார்கள். நீ சொல்லம்பை விட வேண்டாம். வில்லம்பை விட்டுப் போர் புரிவாய்" என்று கூறினார்.

இருவரும் பெரும் போர் புரிந்தனர். கும்பகருணன் தொடுத்து விடுத்த கணைகளையெல்லாம் இலட்சுமணர் அழித்து ஒழித்தார். கும்பகருணனுடைய சீரை அழித்தது போல் அவன் தேரையும் அழித்தார். இதைக் கண்ட வானவர், கும்பகருணனுடைய சேனையையும் தேரையும் இலட்சுமணர் அம்பு எய்துதான் கொன்றாரோ, மந்திர வார்த்தைகளால் வைதுதான் கொன்றாரோ ? என்று அதிசயம் அடைந்தார்கள்.

கும்பகருணன் ஆலத்தையும் விழுங்கும் சூலத்தை எடுத்து நின்றான். இலட்சுமணர், அவன் தரையில் நிற்பதைக் கண்டு இரங்கி, அநுமார் தோளைவிட்டு இறங்கி, அவரும் பார்மிசை நின்று போர்புரிந்தார். இராவணன் கும்பகருணனுக்குத் துணை புரிய, கணைகளைச் சொரியும் சேனைகளை அனுப்பி வைத்தான்.

### சுக்ரீவன்

வாநர வேந்தனாகிய சுக்ரீவன், சினந்து கும்பகருணனை எதிர்த்துப் போர் புரிந்தான். ஒரு மலையைப் பிடுங்கிக் கும்பகருணன் மேல் எறிந்தான். கும்பகருணன் அம்மலையை தன் இடக்கையால் தடுத்துப் பொடியாக்கினான். கும்பகருணன் திரிசூலத்தை எடுத்துச் சுக்ரீவன் மேல் ஏவினான். அநுமார்

அதைக் கண்டு அதிர்ச்சியடைந்து அச்சூலத்தைத் தன் கரங்களால் பிடித்துத் தலையில் வைத்து ஒடித்தார். அப்போது உண்டாகிய, ஒலி, இராமபிரான் மிதிலாபுரியில் சிவபிரானுடைய வில்லை ஒடித்தபோது, அண்டகடாகங்கள் அதிர ஒலித்த ஒலியை ஒத்திருந்தது. அத்திறத்தைக் கண்டு கும்பகருணன் வியந்து நின்றான்.

சுக்ரீவன் கும்பகருணனை எதிர்த்து அவன் மார்பில் பலமுறை குத்தினான். அது கும்பகருணனுக்குச் சொறிந்துவிடுவது போல் இருந்தது. சுக்ரீவனுக்கும் கும்பகருணனுக்கும் கடும்போர் நடந்தது. கும்பகருணன் சுக்ரீவனை எடுத்து மார்பில் இறுகப் பிடித்துக் கொண்டு இலங்கையை நோக்கிப் புறப்பட்டான். சுக்ரீவன் உணர்வின்றி, அடக்கி மடக்கி இருந்தான்.

தங்கள் தலைவன் கும்பகருணன் கையிலகப்பட்டுச் சிறை புகுந்ததைக் கேட்ட வாநர சேனைகள் அழுது புலம்பின. ஒரு தூதன், இராமரிடம் ஓடி, அவரது திருவடியைச் சென்னியில் சூடி, "எம்பெருமானே ! எங்கள் மன்னவனாகிய சுக்ரீவனைக் கும்பகருணன் பற்றிக் கொண்டு இலங்கைக்குப் போகின்றான்" என்றான்.

## மாயா ஜனகன்

இதைக் கேட்ட இராமபிரான் கன்றை நாடும் தாய்ப் பசுவைப்போல் உள்ளங் குலைந்து மூதண்டத்தையும் பிளக்கும் கோதண்டத்தை எடுத்து, அம்பு மழை பொழிந்து கும்பகருணன் இலங்கை புகாத வண்ணம் சரக்கூடம் கட்டி அவனைத் தடுத்துவிட்டார். கும்பகருணன் இலங்கைக்குப் போக இயலாமல் திரும்பினான்.

தாமரை பூத்த மழை மேகம் போன்ற இராமபிரானைக் கும்பகருணன் கண்ணாரக் கண்டான். இராமருடைய திருமுகத்தில் கருணை நீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது. "இராகவா ! இத்துணை நேரம் உன்னைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். கவந்தனென்றும் வாலியென்றும் என்னை எண்ணற்க. நான் உன் உயிர் குடிக்க வந்த கூற்றுவனாகும். என் கையிலகப்பட்ட சுக்ரீவனை மீட்பாயானால் சீதையை மீட்டதாக ஆகும்." என்றான்.

இராமபிரான் புன்னகை பூத்து, அவனது நெற்றியல் இரண்டு அம்புகளைப் பாய்ச்சினார். குருதி அருவிபோல் சிந்தியது. அவ்வுதிரத்தால் நனைந்த சுக்ரீவன் உணர்ச்சி பெற்றுக் கும்பகருணன் கைச்சிறையிலிருந்து விடுபட்டு அவனுடைய மூக்கையும், செவியையும் கடித்து எடுத்துக் கொண்டு இராமபிரானுடைய திருவடிகளை வணங்கி, இணங்கி நின்றான். வாநரங்கள் ஆர்த்தன, வானவரும் ஆர்த்தனர். மலர் மழை தூர்த்தனர். இராமபிரான் சுக்ரீவன் மீண்டு வந்ததற்கு. பெருமகிழ்ச்சியடைந்தார். சுக்ரீவன் கடித்துக் கொண்டு வந்த கும்பகருணனின் மூக்கையும் காதையும் இராமபிரான் பார்த்தருளினார்.

கும்பகருணன் மூர்ச்சை தெளிந்து தன் காதும் மூக்கும் போனது கண்டு, உதிரக் கண்ணீர் வடித்தான். வைர வாளையும் கேடகத்தையும் தாங்கிக் கடும்போர் புரிந்தான். அவன் செய்த கொடும்போரால் வாநர வீரர்கள் பலர் மாண்டனர்.

சாம்பவான், இராமரை நோக்கி, விரைந்து கொல்லுமாறு வேண்டிக் கொண்டார். இராமனிரான் கும்பகருணனால் அனுப்பப்பட்ட சேனைகள் அனைத்தையும் அழித்தார். கும்பகருணன், சூலப் படையை ஏந்திப் போர் புரிந்தான். இராமபிரான் அவனுடைய ஆலத்தையொத்த சூலத்தை அழித்தார். அவன் வெறுங்கையனாக நின்றான். இராமர் அவனைப் பார்த்து "வாளுடன் வந்து போர் புரிந்த நீ எல்லாம் இழந்து நிற்கின்றாய். நீ, நீதி தங்கிய விபீஷணனுடன் பிறந்தனை. ஆதலால், உன்னிடம் கருணை காட்டுகின்றேன். உனக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன். இப்போது இலங்கைக்குப் போகின்றாயா ? அல்லது போர் செய்து சாகின்றாயா ? உன் விருப்பம் யாது ?" என்று கூறியருளினார்.

"இராகவா ! நான் என் தந்தைபோல் மூக்கிழந்து வாழ விரும்பவில்லை. நான் வீரந்தணியாது போர் புரிந்து வீர சுவர்க்கம் அடைவேன்." என்று கூறி ஒரு மலையை இராமர் மீது எறிந்தான். இராமர் அஸ்திரத்தால் அம்மலையை துகளாக்கினார். கும்பகருணன் தண்டாயுதத்தை ஏந்திச் சூறாவளி போல் சுழன்று மாளாத கோபத்துடன் போர் புரிந்தான்.

இராமபிரான் ஒரு சிறந்த அம்பை ஏவி, அவனுடைய வலக்கரத்தை அறுத்து வீழ்த்தினார்.

கும்பகருணன் வஜ்ஜிரம் போன்ற கரத்தால் வாநரங்களைப் பிடித்து அடித்துக் கரத்தையும் அறுத்து வீழ்த்தினார். இரண்டு கரங்களையும் இழந்த அவன் வீரத்தை இழந்தானில்லை. கால்களால் உதைத்து வாநர சேனைகளைக் கொன்றான். இரகுவீரன் அம்பினால் அவன் வலக்காலை அறுத்துத் தள்ளினார். அவன் ஒற்றைக் காலால் குதித்து வாநரங்களைத் துன்புறுத்தினான். கால்களையும் கைகளையும் இழந்த வாயினால் குன்றுகளைக் கடித்து ஊதி வாநரங்களைக் கொன்றான்.

கும்பகருணன் தனக்குள் எண்ணுகின்றான், "இராமச்சந்திர மூர்த்தியின் வில்லாண்மைக்கு ஆயிரம் இராவணர்கள் வேண்டும். நான் கால்களும், கைகளும் இழந்து துணையின்றி இருக்கிறேன். காலவரம்பு இன்றி வாழ வேண்டிய இராவணன், இனி உய்ய மாட்டான். குலத்தோடு அழிந்துவிடுவான். இத்தனைக்கும் காரணம் பெண்ணாசையாகும்."

## கும்பகருணன் வரம்

"அபயம் புகுந்த அற்பப் புறாவுக்காகத் துலையில் ஏறித் தன்னையே தியாகம் செய்த சிபிச் சக்ரவர்த்தியின் மரபில் வந்த இராகவேந்திரா ! என் தம்பி விபீஷணன் அரக்கர் குலத்தில் வந்த அந்தணன், குணசீலன். அவனைக் கடைசிவரை காப்பது தேவரீருடைய கடன். அவன் நீதி தவறாத நெறியாளன். அரக்கர் குலத்தில் பிறந்தும் அரக்கர் குணம் இல்லாத உத்தமன். இராகவா ! நீ அரசர் குலத்தில் வந்த அந்தணன். என் தம்பியைக் கொல்வதற்கு இராவணன் முயற்சி செய்கின்றான். தம்பி என்ற பாசமும், நேசமும் இல்லாதவன் என் தம்பியை எப்போதும் தேவரீர், இலட்சுமணர், அநுமார் இந்த மூவரில் ஒருவர் காவல் புரிய வேண்டும். மூக்கிலா முகமென்று இருடியரும் இமையவரும் என்னைக் கண்டு பரிகாசிப்பார்கள். ஆதலால், என் தலையைக் கடலில் வீழ்த்துமாறு வேண்டுகிறேன். உன் திருவடிக்கு வணக்கம்" என்றான்.

இராமபிரான் அவன் தலையை அறுத்து, வாயுப்படையினால் கடலில் எறியுமாறு செய்தருளினார். தேவர்கள் நடனம் ஆடினார்கள். அரம்பையர்கள் பாடினார்கள். மாதவரும், வேதியரும் அச்சம் அகன்றனர்.

இராவணன் மந்திராலோசனை செய்யும் மணி மண்டபத்தை யடைந்து, "சீதாதேவியை அடையும் வழி யாது ? சீதை இலங்கைக்கு வந்து ஒன்பது மாதங்கள் ஆகியும், அவளை நான் அடைந்தேனில்லை. இனி என்ன செய்தால் அவளை எளிதாக அடையலாம் ?" என்று ஆழமாகச் சிந்தனை செய்து கொண்டிருந்தான். அப்போது மாயையில் வல்லவனாகிய முதலமைச்சன் மகோதரன், அங்கு வந்து அவுணர் வேந்தனை அஞ்சலி செய்து அருகில் அமர்ந்தான். "வேந்தர் பெருமானே ! ஏதோ ஒரு பொருளை நாடி, முகம் வாடிச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றீரே ? உமக்கு என்ன சிந்தனை ?" என்று வினவினான்.

இராவணன், "அன்பனே ! நீ மதிவாணன் மந்திரத்திலும் தந்திரத்திலும் வல்லவன். எனக்கு ஒருகணமும் மகிழ்ச்சியில்லை. அழகின் கருவூலமாகிய சீதையை நான் அடையச் செய்தால், உனக்கு ஒரு கோடி புண்ணியம் வரும். என்ன செய்தால் அவளை அடையலாம் ? மதி மந்திரியாகிய நீ இதற்கு ஒரு வழி சொல்" என்று கேட்டான்.

மகோதரன் கூறினான், "அசுரகுல திலகமே ! பெண்களுக்கு இயல்பாகத் தாய்வீட்டில் பாசம் அதிகம். தாய் தந்தையரிடம் நேசம் அதிகம். இதற்குச் சான்று, தன்னை அழைக்காத தன் தந்தையாகிய தட்சப் பிரஜாபதி செய்த வேள்விக்குத் தாட்சாயணி சென்றாள் என்பது. பெண்களுக்குத் தாய் வீட்டிற்குப் போய் வருவதில் மிகுந்த பிரியம் உண்டு. கணவனிடம் அவனுக்குத் தெரியாமல் பணம் எடுத்துச் சேமித்து விலையுயர்ந்த பட்டுப் புடவையை வாங்கி உடுத்திக் கொண்டு, தன் தந்தையார் வாங்கிக் கொடுத்தார் என்று தன் கணவனுக்குக் காட்டி மகிழ்வார்கள். தாய் தந்தையரின் நலத்தில் அதிக கவனம் செலுத்துவார்கள்."

"பெருந்தகையே, மாயையில் வல்லவனாகிய மருத்தன் மிதிலாபுரியை ஆளுகின்ற சீதையின் தந்தையாகிய சீரத்துவஜசனகனாக வருமாறு செய்தும், அவன் உன்னை அடையுமாறு சீதைக்கு வற்புறுத்திக் கூறுமாறும் செய்தால், தந்தையின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்துத், தந்தைக்கு இடர் வரக்கூடாது என்று எண்ணி, சீதை மனம் மாறித் தங்களை நேசிப்பாள்."

"கைகேயி தன் தந்தைக்குச் சனகனால் அழிவு வரும் என்ற எண்ணித்தானே இராகவனைக் கானகம் போக வரங் கேட்டாள் ? தாய் வீட்டிற்கு அழிவு வரும் என்று எண்ணிக் கைகேயி இமயம் போன்ற காரியத்தைச் செய்த முடித்தாள். ஆகவே, மருந்தனைச் சனகனாக வருமாறு செய்து ஒரு நாடகம் போட்டு நடித்து நமது காரியத்தை முடித்துவிடலாம்."

இராவணன் இதைக் கேட்டுத் துள்ளினான். "முகோதரா ! உன் மதிநலத்தை மெச்சினேன். நன்று கூறினாய். ஆ ! ஆ ! என்னே உன் மதிநுட்பம் ? இந்த மந்திர சூழ்ச்சியில் நான் சீதையை நிச்சயமாக அடைவேன். நான் சீதையிருக்கும் சோலைக்குச் சென்று அவளுடன் உரையாடிக் கொண்டிருப்பேன். அப்பொழுது நீ மாயா சனகனுடன் அங்கு வருக" என்று கூறி அவனை மார்புறத் தழுவிக் கொண்டான்.

## சீதையும் இராவணனும்

இராவணனால் முடியாத துன்பக் கடலில் மூழ்கிக் கண்ணீர் வடித்து, உள்ளந் துடித்து, ஆறாக் கவலையில் ஆழ்ந்திருக்கின்ற அருந்ததிக்கு நிகராகிய சீதாதேவி இருக்கும் சோலைக்கு இளம் பெண்கள் தன்னைச் சுற்றிவர இராவணன் சென்றான்.

பெண்குலத் தெய்வமாகிய சீதாதேவியின் திருமுன் நின்று கைகூப்பி வணங்கினான். "பெண்ணாரமுதமே ! தண்ணார் தாமரைத் தையலே ! நான் மையலில் வீழ்ந்து, மதிகெட்டு வாடுகின்றேன். விரக தாபத்தால் வெந்து நொந்து செத்துச் செத்துப் பிழைக்கின்றேன். சூரியனுக்கும் சந்திரனுக்கும் வேற்றுமை தெரியவில்லை. உன் மீதுள்ள ஆசையால் அல்லல்படுகின்றேன். பெண்களுக்கு எப்போதும் இளகிய உள்ளம் உண்டு என்று கூறுவார்கள். கருணையால் பிறர்படும் துன்பத்தைக் களைவார்கள். உனக்கு ஏனோ என்மீது இத்தனை வன்மம் ? இது தர்மமா ? என்னை அஞ்சேல் என்று அபயந் தந்து ஆட் கொள்வாயாக. பெண்ணரசியாகிய உனக்கு அடிமை செய்து என் வாழ்நாளைக் கழிப்பேன். என் அரண்மனையிலுள்ள அத்தனைப் பெண்மணிகளும் உனக்கு அடிமையாகக் குற்றேவல் புரிவார்கள். என்மீது கருணை காட்டு" என்று பிதற்றி மண்ணில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

இராவணனைச் சீதை எரிமலையாகக் கொதித்து நோக்கி, "பாதகனே ! தோதகஞ் செய்யாதே, சிங்கத்தை விரும்பும் நான், ஒரு நாய்க்குட்டியை விரும்புவேனா ? அந்தணர்கள் செய்யும் வேள்வித் தீயின் முன், கொதித்துக் கொண்டிருக்கும் நெய்யைக் குட்டிநாய் விரும்பலாமா ? ஆசையால் கெட்டழியாதே. உனக்கு விநாசகாலம் வந்திருக்கிறது. அதனால், விபரீத வழியில் போகின்றாய். இங்கே நின்று மதிகெட்டுப் பிதற்றாதே. விரைந்து போ" என்று கடிந்து கூறினாள்.

அன்னையின் நிந்தனை உரைகளை அமுதமொழிகளாக எண்ணி, "பெண்குலப் பெருந்தகையே ! இராவணனாகிய என்னை எளிமையாக எண்ணற்க. எனக்கு நீ இணங்கவில்லை யானால் நீ பிறந்த நகரையும் புகுந்த நகரையும் பொடியாக்கிவிடுவேன். என்னை யாரென்று எண்ணினாய் ? கண்ணுதல் பெருமான் இருக்கும் வெள்ளிமலையை அள்ளியெடுத்தவன். மூன்று உலகங்களையும் வென்றவன். அயோத்திக்கும், மிதிலாபுரிக்கும் அசுர வீரர்களை அனுப்பியிருக்கின்றேன். அயோத்தியில் வாழும் பரத சத்ருக்னர்களையும் மிதிலையில் வாழும் உன் தந்தையாகிய சனகனையும் வெட்டுமாறும் கட்டிக் கொணருமாறும் ஏவியிருக்கின்றேன். சிறிது நேரத்தில் அந்த சோகக் காட்சியை நீ காண்பாய்" என்று சினத்துடன் செப்பினான்.

அப்பொழுது மகோதரன் மாயையில் வல்ல மருத்தனைச் சனகன் ஆக்கி அவன் கையில் விலங்கு பூட்டி இழுத்துக் கொண்டு வந்தான். சீதாதேவி கட்டுண்டு வரும் தன் தந்தையின் அவலநிலை கண்டு நெருப்பை மிதித்தது போல் துள்ளி, ஆறாத்துயரம் அடைந்தாள். கைகளைப் பிசைந்து கொண்டாள், கண்களை எற்றினாள், நிலத்தில் வீழ்ந்து புரண்டாள், அது மாய வஞ்சம் என்று உணராமல் தேம்பினாள்.

"தெய்வமே ! என் தந்தைக்கு இத்துயரம் எய்தியதே. பரம ஞானியாகிய என்னுடைய தந்தை கட்டுண்டு பரிதவிக்கும் அவலக் காட்சியைக் கண்டேனே. தருமம் என்பது ஒன்றில்லையா ? அப்பா, என்னைப் பெண்ணாகப் பெற்ற ஒரு பாவத்திற்கு நீர் இப்பெருந்துயரம் அடைந்தீரே ! அந்தோ ! நான் என் செய்வேன் ! ஆயிரம் ஆயிரம் வறியவர்க்கு அன்னதானம் செய்வீரே ! எண்ணற்ற வேள்விகளைச் செய்து, இமையவருக்கு அவிர்ப்பாகம் தந்தீரே, பகைவரை அழித்தீரே, இப்போது என் பொருட்டுக்

கட்டுண்டு கலங்குகின்றீரே. என்னைப் பெற்ற பாவத்திற்கு உமக்கு இந்தத் துன்பம் எய்தியதே" என்று பலவாறு புலம்பி மண்மிசை வீழ்ந்தாள்.

சீதாதேவி இவ்வாறு அழுது தெய்வத்தைத் தொழுது "என்னுடைய சிறையை மீட்பவரே இல்லையே, தந்தையே உன்னுடைய சிறையை மீட்பார் யாருளர் ? தரும மூர்த்தியாகிய தங்களுக்கு இத்துன்பம் நேர்ந்ததே. பெண்ணாகிய நான் என்ன செய்யக் கடவேன் ?" என்று கூறி இடர்பட்டாள்.

இராவணன் சீதையை நோக்கி, "பெண்கள் நாயகமே ! நீ வருந்தாதே. நீ என்னை ஏற்றுக் கொள்வாயானால் நான் ஆளுகின்ற இலங்கைப் பதவியை உன் தந்தைக்கு வழங்குவேன். உன் தந்தை இலங்கை வேந்தனாக அரசு புரிவார். நீயும் நானும் இனிமையான தனிமையான இடத்தில் வாழலாம். உன்னைப் பெற்று எனக்குத் தந்த தந்தையாரை நான் கொல்ல மாட்டேன். கொன்றால் நன்றி கொன்ற பாவம் எனக்கு வரும். ஆதலால், காதலால் வாடும் என்னை அஞ்சேல் என்று கூறி ஆதரிப்பாயாக" என்றான்.

சீதாதேவி "ஏ, மூடனே ! என் கற்பு கல்லினும் வலியது. இந்த இலங்கை முன்னமே உன் தம்பியாகிய விபீஷணனுக்கு வழங்கப்பட்டுவிட்டது. சிங்கக் குரளை விரும்பும் நான் ஒரு குறநரியுடன் வாழ்வேனா ?" என்று சினந்து கூறினாள். இராவணனும் சீதையின் மீது சீற்றமடைந்தான். அப்போது மகோதரன் இராவணனைப் பார்த்து, "அசுர வேந்தே ! நீ சீதையைக் கோபிக்க வேண்டாம். தந்தையாகிய சனகரே மகளுக்கு இதமொழி கூறுவார்" என்று கூறினான்.

சனகன் சீதையைப் பார்த்து, "என் செல்வமே ! அழாதே. நீ இராவணனை அடைவாயானால் என் துன்பம் தீரும். சீரும் பெறுவேன். இந்திரனை மருவிய அகலிகை பெருமையுடன் வாழவில்லையா ? பெண்கள் நவரத்தினம் போன்றவர்கள். நவரத்தினம் எல்லாருக்கும் பொதுவானது. ஆதலால், நீ இராவணனை நேசிப்பதால் பிழையில்லை, உனக்கும் துன்பம் நீங்கும், எனக்கும் இன்பம் வவ்வும்" என்று கூறினான்.

இதைக் கேட்ட சீதை பெருஞ் சீற்றமடைந்தாள். "இந்த வார்த்தை கூறுகின்ற நீ எனக்குத் தந்தையா ? இது சனகர் பேசும் வார்த்தையா ? வடவைக்கனல் பனிக்கட்டியாக மாறினாலும் முகாமேருகிரி கடலில் மிதப்பதானாலும், சீதை கற்பிலிருந்து திறம்ப மாட்டாள். ஆலகால விஷம் போன்ற கொடிய வசனத்தைச் சொல்லி உன் பெருமையை இழக்காதே" என்று கூறி வெஞ்சினத்தால் வெதும்பினாள்.

அப்போது கும்பகருணன் மாண்டதின் பொருட்டு வானவரும் வாநரங்களும் ஆரவாரஞ் செய்தனர். ஒரு தூதன் இராவணனுடைய காதில், உமது தம்பி கும்பகருணன் மாண்டு விட்டான் என்று கூறினான். இதைக் கேட்ட இராவணன் இடியேறுண்ட நாகம் போல் நடுங்கி படியின் மீது விழுந்து புரண்டான்.

"என் அன்புடைத் தம்பியே ! வானவரை வதைத்த தும்பியே ! நம்பியே இருந்த என்னை நட்டாற்றில் தள்ளினாய். உன் பிரிவினால் வெம்பியே வாடுகின்றேன். பொன்னையும் பெருளையும் மனைவியையும் மக்களையும் இழந்தால் மீண்டும் பெறலாகும். என் உடன் பிறப்பாகிய உன்னை எக்காலத்தும் எவ்விடத்தும் இனிப் பெற முடியாதே. உன்னை இழந்து நான் எங்ஙனம் உயிர்வாழ்வேன் ? இனி வானவர்கள் வாழ்வார்கள். அரக்கர்கள் தாழ்வார்கள். நம்முடைய மரபினர் துன்பக் கடலில் வீழ்வார்கள்" என்றெல்லாம் புலம்பித் தன் அரண்மனையை அடைந்தான்.

"சனகனாகிய இவனைக் கொண்டுபோய்ச் சிறையில் அடையுங்கள்" என்று மகோதரன் கூறித் தன் இருப்பிடத்தை யடைந்தான்.

திரிசடை சீதாதேவியைப் பார்த்து, "தாயே நீயேன் வருந்துகின்றாய் ? மாயையில் வல்லவனாகிய மருத்தனைச் சனகனாகச் செய்து மகோதரன் நடித்த நாடகம் இது. இங்கே வந்தவன் உண்மையாகிய சனகர் அல்லர். நீ துயரப்பட வேண்டா" என்று கூறிச் சீதையின் துயரத்தை மாற்றினாள்.

சீதை, கும்பகருணன் மாண்டதை அறிந்து மகிழ்ச்சியுற்றாள்.

## அதிகாயன்

இராவணன் அழகிய நவமணிகள் இழைத்த பொன்மயமான ஆலோசனைக் கூடத்தை அடைந்தான். அங்கு நின்ற அமைச்சர்களையும் அசுர தீரர்களையும் பார்த்து, சினத்தால் உடல் வேர்த்து, கண்சிவந்து கூறுகின்றான். "நீங்கள் எல்லாம் வீரர்களா ? கோழைகளா ? உடம்பிலே வீர உதிரம் ஓடவில்லையா ? கழுநீரா ஓடுகின்றது ? என் அருமைத் தம்பி கும்பகருணன் இரு மானிடப் பதர்களால் மாய்ந்து போனான். நீங்களெல்லாம் இடித்த புளியைப்போல், இங்கு ஆடாமல் அசையாமல் நிற்கின்றீர்களே. உங்கள் உள்ளம் துடிக்க வில்லையா ?"

இராவணனுக்குத் தானியமாலினிடம் பிறந்தவன் அதிகாயன். மலை போன்ற பெரிய உடம்பை உடையவனாதலால் அவன் அதிகாயன் என்று பெயர் பெற்றான். பிரம்ம தேவரிடம் வரங்கள் பல பெற்றவன். சூதாள் உரம் படைத்தவன். அறநெறி யுணர்ந்தவன். வீராதி வீரன். இவன் தந்தையைப் பணிந்து, "தந்தையே ! தாங்கள் கோபிக்க வேண்டாம். தம்பியை இழந்து தாங்கள் தவிப்பதுபோல், இலட்சுமணனைக் கொன்று இராமனையும் தவிக்கும்படிச் செய்வேன். அதிகாயனாகிய நான் நினைத்தால் முடியாத காரியம் மூன்று உலகங்களிலும் இல்லை" என்று வஞ்சினங் கூறி வெஞ்சினத்தோடு சதுரங்கச் சேனைகள் புடைசூழப் போர்க்களம் போனான்.

மயிடன் என்ற தூதுவனை நோக்கி, "நீ இலட்சுமணனைத் தனிமையில் சந்தித்து என்னைப் போர்களத்தில் சந்திக்குமாறு நான் அழைத்ததாகக் கூறுவாய். ஏன் தந்தையைத் தம்பில்லாதவனாகச் செய்தது போல், இராமனையும் தம்பியில்லாதவனாகச் செய்வேன் என்று நான் கூறியதாகக் கூறுக" என்று அனுப்பினான். அவன் இராமரைச் சந்தித்தான். அங்குள்ள வாநரங்கள் மயிடனை அடித்து இடித்து இடர் செய்தன. இராமர் தடுத்துத் தூதரைத் துன்புறுத்தக் கூடாது என்று கூறி, மயிடனைப் பார்த்து. "எங்கு வந்தாய் ?" என்று கேட்டருளினார். "நான் இராவணேஸ்வரனுடைய மகனாகிய அதிகாயம் அனுப்பிய தூதனாக வந்திருக்கின்றேன். தங்களுக்குத் தம்பியில்லாமல் செய்யப் போருக்கு வந்திருக்கின்றார். இலட்சுமணரைப் போருக்கு அழைக்கின்றார்."

"தூதனே ! என் தம்பியை வெல்லுவாரும் கொல்லுவாரும் பதினான்கு உலகங்களிலும் இல்லை. போர்க்களத்தில் அவனது புயவலிமையைப் பார்ப்பாயாக" என்று கூறி விடை கொடுத்தார். தன் அருகில் நிற்கும் விபீஷணன் முதலிய அன்பர்களைப் பார்த்து. "அன்புடையீர் ! இலட்சுமணனைச் சாமானியனாக எண்ணாதீர். அவன் என்னைப்பார்க்கிலும் பன்மடங்கு சிறந்த வீரன்" என்றார் இராமர்.

"விபீஷணா ! நீ இலட்சுமணனுடன் போர்க்களஞ்சென்று அவனுடைய கரவேகத்தையும் காண்பாயாக. நிறைமொழி மாந்தர் கூறிய மந்திர மொழிபோல் அவனுடைய பாணங்கள் ஒவ்வொன்றும் சக்தி வாய்ந்தவை. பகைவரைக் கொல்லும் தகையன்" என்று கூறினார்.

அதிகாயன் போர்க்களத்தில் இலட்சுமணரை எதிர்த்துக் கடும்போர் புரிந்தான். அவருடன் வந்த கோடிக்கணக்கான யானைப் படைகளைக் கொன்று குவித்தான். அதிகாயனுடைய அரிய பெரிய கணைகளால் வாநர வீரர்கள் பலர் மாண்டனர். இலட்சுமணர் வாநர வீரர்களுக்கு அபயந் தந்து அம்பு மழை பொழிந்தார். தாருகன் என்ற சிறந்த வீரன் இலட்சுமணருடன் போர் புரிந்து மாண்டான். அதனைக் கண்ட காலன் முதலிய ஐவர், விளக்கில் வீழும் விட்டில் பூச்சிகளைப் போல் இலட்சுமணரை எதிர்த்து மாண்டு ஒழிந்தனர்.

இராவணன் இலங்கையிலிருந்து மூன்றாவது முறையாக யானைப் படைகளை அதிகாயனுக்குத் துணை செய்ய அனுப்பினான். அத்தனை யானைப் படைகளும் நெருப்புக்கு முன் வந்த பஞ்சுபோல் அழிந்தன. இலட்சுமணருடைய சர வேகத்தை ஆயிரங் கண்படைத்த இந்திரனாலும் காண முடியவில்லை.

அநுமார் மற்றொருபுறம் யானைப் படைகளை அழித்து ஒழித்தார். தேவாந்தகன் என்ற அசுர வீரன் அநுமாருடன் அமர் செய்து அழிந்தான். தேவர்ந்தகனுடைய அழிவைக் கண்டு அதிகாயன் எரிமலை போல் கொதித்தான். அநுமாரைப் பார்த்து, "ஏ, வாநரமே ! நீ எனது தம்பியாகிய அட்ச குமாரனைத் தேய்த்து மாய்த்தனை. இலங்கையைத் தீக்கு

இரையாக்கினை. இப்போது உன்னை இயமனுக்கு இரையாக்குவேன். சிறிது நில்" என்று கூறிப் போர் புரிந்தான்.

அதிகாயன் தன் வஞ்சினத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சுமத்திரை பெற்ற தங்கமாகிய சிங்கத்தை எரித்தான். அப்பொழுது, அங்கதன் வேண்ட, இலட்சுமணர் அவன் தோள் மீது ஆரோகணித்தார். அதிகாயனுக்கும் இலட்சுமணருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அதிகாயன் சொரிந்த பாணங்களால் அங்கதனுடைய உடம்பில் அருவிபோல் உதிரம் ஒழுகியது. அதனைக் கண்ட இலட்சுமணர், சிறந்த அம்புகளை ஏவி அதிகாயனின் தேரையும் தேரை செலுத்தும் பாகனையும் அழித்தார். அப்போது வாயுதேவன் இலட்சுமணரை நோக்கி "பெருமானே ! அதிகாயன் அயன் படையாலன்றி வேறுபடை யால் அழிய மாட்டான்." என்று கூறினான். இலட்சுமணர் பிரமதேவனுடையப் படைக்கலத்தை மந்திர மலர்கள் தூவி, மானச பூசை செய்து அதிகாயன் மீது ஏவினார். அந்தப் பிரமாஸ்திரம் அதிகாயனுடைய தலையைத் துண்டித்து எறிந்தது. வானவர் மலர் மழை பொழிந்தார்கள்.

அதிகாயன் மாண்டதைக் கண்ட அவன் தம்பியாகிய நராந்தகன் போர் புரிய முன்வந்தான். அங்கதன் இடியைப் போல் எதிர்த்து, நராந்தகன் கைத்தலத்திலிருந்த வாளைப் பிடுங்கி, அவ்வாளினால் அவன் வாழ்நாளை முடித்தான் போர் மத்தன் வாநர சேனாதிபதியாகிய நீலனோடு போர் செய்து மாண்டான். வயமத்தன் என்ற அசுர வீரனை இடபன் படைத்த அசுரத் தலைவனைச் சுக்ரீவன் கொன்றான். நிகும்பன் என்ற வீரன் அங்கதனைக் கொல்ல சூலத்தை எறிந்தான். அநுமார் அதனைப் பிடித்தெறிந்து நிகும்பனை மாய்த்தார். இவ்வாறு, அசுர சேனைகள் அழிந்தன. தூதர்கள் சென்று இராவணனை வணங்கி, தங்களுடைய புதல்வராகிய அதிகாயன் போருக்குச் சென்றார், பின் எமன் ஊருக்குச் சென்றார் என்று அழுது கொண்டே கூறினர்.

இராவணனுடைய மனைவியும் அதிகாயனுடைய அன்னையுமாகிய தானியமாலை மகன் மாண்ட செய்தி அறிந்து இராவணன் கால் மேல் விழுந்து கதறிக் கதறி அழுதாள். "பெருமானே, என் மகன் எங்கே ? மகன் மாண்ட பிறகு எனக்கு என்ன வாழ்வு இருக்கின்றது ? உன்னைக் கண்டு அஞ்சிய இயம தூதர்கள் அச்சத்தை விட்டு, என் மகன் உயிரைப் பறித்துச் சென்றனரே ! என் மகன் எங்கே ? அவன் திருமுகத்தை எங்கே காண்பேன்

? இத்தனைக்கும் காரணம் நீ பிறன் மனையை விரும்பிய கொடுமையேயாகும். மேதையாகிய நீ சீதையை விரும்பிப் பேதையாகிவிட்டனையே. தங்கள் பாட்டானாராகிய மாலியவான் கூறிய அறவுரையைக் கேட்டாயில்லை. அறிவுற்ற தம்பி விபீஷணன் விளம்பிய நன்னெறியை நயந்தாயில்லை. என் கொழுந்தனராகிய கும்பகருணன் கூறிய இன்னுரையை ஏற்றாயில்லை. அசுரர் குலமே நீ மேற்கொண்ட பெண்ணாசையால் மண்ணாகிவிட்டது. நாளைக்கு இந்திரஜித்துக்கும் இக்கதிதானே வரும் ?" என்றெல்லாம் கூறிப்புலம்பியழுதாள்.

உருப்பசியும் மேனகையும் ஆறுதல் கூறி அழைத்துச் சென்றனர். சீதையாகிய ஒரு பெண் தெய்வம் அழுததினால் இன்று அரக்கர் மாதர்கள் அனைவரும் புலம்பியழ நேர்ந்தது. இலங்கையே சோகக் கடலில் மூழ்கியது. இராவணன் ஆறாத்துயரம் அடைந்தான்.

## நாக பாசம்

இலங்கையில் எப்பொழுதும் ஆடலும் பாடலும் நாதகீத ஓசைகளும் ஒலித்துக் கொண்டிருக்கும். இப்பொழுது அந்த இன்னிசை ஓசை மாறி, அரக்கியர்கள் தங்கள் இரு கரங்களால் தலையிலும் மார்பிலும் ஒற்றிக்கொண்டு அழுகின்ற ஓசை எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அந்த அழுகை யோசையைக் கேட்டு இந்திரஜித்து திடுக்கிட்டான். என்ன நிகழ்ந்தது ? என்று அருகில் உள்ளவரை வினவினான். அவர்கள் அவனிடம் சொல்ல அஞ்சிக் கைகட்டி வாய்புதைத்துக் கொண்டு, “அரசுகுல வேந்தரே ! அதிகாயனும் நிகும்பனும் மகாபார்சுவனும் ஆகிய உமது தம்பியர்கள் இலட்சுமணனால் உயிர் துறந்தார்கள், இலங்கை வாழ்க்கையை மறந்தார்கள். விண்ணுலகுக்குப் பறந்தார்கள். இலங்கையில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்த அரக்கர்கள் கோடிக்கணக்கில் மாண்டனர். அதனால், கணவனையும் மக்களையும் இழந்த அரக்கியர்கள் அழுகிறார்கள்“ என்று கூறினர்.

இதனைக் கேட்ட இந்திரஜித்து ஆறாத்துயரம் அடைந்தான். ஒருபுறம் கவலையும் மற்றொரு புறம் சீற்றமும் கொண்டான். இராவணனுடைய பொன் மாளிகைக்குச் சென்று தந்தையை வணங்கி, “தந்தையே ! தங்களுக்கு அறிவு கூர்மழுங்கி விட்டதா ? ஒவ்வொருவராக அனுப்பி மனிதர்களால் கொல்வித்து.

நமக்கு நல்வித்தாக இருந்த என் தம்பியரை இழந்து தவிக்கின்றீரே. கர, திரிசர தூஷணாதியரையம், கும்பகருணனையும் கொன்றவர்களை மனிதர் என்று அலட்சியப்படுத்தலாமா ? தனிமையில் எண்ணலாமா ? தெய்வமே மனித உருவாகவும் வாநர உருவாகவும் வந்ததென்று எண்ண வேண்டாமா ? இனி நடந்ததைப் பற்றிச் சிந்திப்பது அறிவுடைமை யாகாது. எனக்கு விடை கொடுங்கள். நான் போருக்குச் சென்று அத்தனைப் பேரையும் கொன்று, வெற்றிமாலை சூடிவருவேன்" என்றான். இராவணன் மகிழ்ந்து அவனை மார்புறத் தழுவி, போருக்குச் சென்று மீளுக என்று விடை தந்தான்.

இந்திரஜித்து இந்திரன் தேரினும் சிறந்து விளங்குகின்ற மிகப் பெரிய தேரில் ஆரோகணித்தான். ஆயிரம் சிங்கங்களும் ஆயிரம் பேய்களும் பூட்டிய தேரில் ஏறி, இந்திராதி தேவர்களை வென்ற பெரிய வில்லை ஏந்தி, நாற்பது வெள்ளம் சேனை புடைசூழப் போர்க்களத்துக்கு வந்தான்

இந்திரஜித்து கொதித்துக் கூறுகின்றான். "என் தம்பியாகிய அதிகாயனை, அதி காயம்படுத்திக் கொன்ற இலட்சுமணனை இன்று நான் கொல்லவில்லையானால் இராவணேஸ்வரனுடைய மகனாக மாட்டேன். இலட்சுமணனுடைய உதிரத்தை நிலமகள் பருகத் தருவேன். அங்ஙனம் செய்யவில்லையானால் என்னைத் தேவரும் மற்று யாவரும் இகழ்வார்களாக. என் போர்த்திறத்தைக் கண்டு விண்ணுலகும் மண்ணுலகும் வியப்பு அடையும்" என்று வெஞ்சினத்தால் வஞ்சின உரை கூறிப், பேய்க் கொடியுடன் நிமிர்ந்து நின்றான். விபீஷணர் இலட்சுமணரைப் பார்த்து, "எம்பிரானே ! இப்பொழுது எச்சரிக்கையாகப் போர் செய்ய வேண்டும்" என்றார். இலட்சுமணர், "விபீஷணா ! மிகுந்த ஆற்றலுடன் இங்குப் போர் செய்ய வந்தவன் யார் ?" வினவினார்.

விபீஷணர், "சௌமித்திரியே ! இந்திரனை வென்றவன் இவன். இராவணனுடைய மூத்த மகன் இந்திரஜித்து எனப்படுபவன். எட்டுத் திசைகளிலும் தன் புகழை எட்டுமாறு செய்தவன். இவன் நிகரில்லாத வீராதி வீரன், தாங்கள் இவனுடன் போர் புரியும் பொழுது அநுமார் தங்கள் அருகில் இருக்க வேண்டும். இது அடியேனுடைய விண்ணப்பம். அன்றிச், சுக்ரீவன், அங்கதன், நீலன் சாம்பவான் முதலிய வீரர்கள் தங்கள் அருகில் இருக்கவேண்டும். இன்றைய போர் மிகவும் உக்கிரமாக இருக்கும்" என்று கூறினார்.

மேலை வாயிலில் போர் செய்து கொண்டிருந்த அநுமார் இலட்சுமணருடன் வந்தார். இலட்சுமணர், இந்திரஜித்து என்ற வீரர்களின் போர்த்திறத்தைக் காணும் ஆவலுடன் வானத்தில் தேவரும் மூவரும் வந்து குழுமினார்கள். வாநரங்களுக்கும் அரக்கர்களுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அரக்கர் சேனையில் தலையற்ற கவந்தங்கள் நாத்தனமாடின. உதிர வெள்ளம் ஓடியது. இரு திறத்தும் சேனைகள் மாண்டன. குரங்குகள் குன்றுகளை எடுத்து அரக்கர் மேல் வீசி அரக்கர்களைக் கொன்று குவித்தன.

ஒருபுறம் அங்கதன் உருத்திர மூர்த்தியைப் போல் சினந்து அரக்கர் சேனையை அழித்தான். ஒருபுறம் சேனைத் தலைவனாகிய நீலன், காலனைப் போல் போர் புரிந்தான். குமுதன், இடபன், சாம்பவன், பனசன், மயிந்தன் முதலிய சிறந்த வாநர வீரர்கள், வானவரும் வியக்க வீரத்துடன் போர் புரிந்தார்கள்.

ஆஞ்ச நேயர் இந்திரஜித்தின் முன்னே நின்றார். இந்திரஜித்து அநுமாரைப் பார்த்துப் புன்னகைத்துப் புகலுகின்றான். “ஏ, வாநரமோ ! சிறிது நில்லடா, உன்னைச் சந்தித்து உன்னுடன் போர்புரிய நினைத்தே வந்தேன். வாநரங்களாகிய நீங்கள் கல்லெடுத்தும் மரம் எடுத்தும் போர் புரிகின்றார்கள். கல்லாலும் மரத்தாலும் வெற்றிபெற முடியுமா ? இப்பொழுதே உங்கள் உயிரை உண்பேன்“ என்றான்.

பேசுவதில் வல்லவரும் ஐந்தாயிரம் என்னும் இலக்கணத்தைக் கற்றவரும் நவயாகரண பண்டிதரும் ஆகிய அநுமார் இந்திரஜித்தைக் கண்டு சிரித்து, “ஏ , மூடனே ! வில்லெடுத்துப் போர் புரிகின்ற வீரரும் இங்கு இருக்கின்றார்கள். அன்றி, நீங்கள் மாண்டபின் உங்களுக்குக் கல்லெடுப்பு செய்ய இங்கே ஒருவன் (விபீஷணன்) இருக்கின்றான். அதை, இன்று நாளை பார்க்கலாம். உங்களுடன் போர் செய்து புல்லைக் கவ்விய தேவர்களைப் போல் எங்களை அற்பமாகக் கருதாதே. வீரர்கள் வாயால் பேசுவது சிறப்பன்று. கரத்தாலும் பேசுக“ என்று கூறினார்.

அநுமார் ஒரு குன்றை எடுத்து இந்திரஜித்தின் மேல் வீசி ஆர்த்தார். அம்மலை, அவன் மார்பில் பட்டுத் துகளாயிற்று. அதுபோல், நீலன் எறிந்த மலையையும் இந்திரஜித்து தன் அம்புகளால் பொடியாக்கினான். நீலனும் அங்கதனும் இந்திரஜித்துடன் போர் செய்து இளைத்தனர். இந்திரஜித்துதும்

இலட்சுமணரும் எதிரெதிரே நின்ற பொழுது இந்திரஜித்து சாரன் என்ற ஒற்றனைப் பார்த்து இவன் யார் ? என்று கேட்டான்.

சாரன், இவன்தான் பரதனுடைய தம்பி இலட்சுமணன் என்றான்.

இலட்சுமணர் அம்பு மழைகளைப் பொழிந்து அரக்கர் படைகளை அழித்தார். யானைப்படைகள், பூனைப்படைகளைப்போல் அழிந்தொழிந்தன. இலட்சுமணர், பாணங்களை அம்பறாத் தூணியிலிருந்து எடுப்பதும், வில்லில தொடுப்பதும், அரக்கர்மேல் விடுப்பதும் ஆகப் போர் செய்தபோது, அவருடைய கை வில்லிலும் அம்பறாத் தூணியிலும் மாறிமாறிப் போய்வரும் இடைவெளி தெரியவில்லை. அவருடைய கரவேகத்தையும் சர வேகத்தையும் கண்டு, இந்திரஜித்து வியப்படைந்தான். இவனே சிறந்த வில்லாளி என்று புகழ்ந்து கூறினான்.

இலட்சுமணர் அநுமாருடைய தோள்மீது ஏறிப் போர் செய்தார். அநுமார் இலட்சுமணரைத் தோளில் சுமந்து கொண்டே கரங்களாலும் கால்களாலும் அரக்கர்களைக் கொன்று குவித்தார்.

இந்திரஜித்து ஆயிரங்கோடி அம்புகளை ஏவினான். இலட்சுமணரும் ஆயிரங்கோடி அம்புகளை ஏவி அவைகளை விலக்கினார். இருவருடைய பாணங்களும் ஒன்றையொன்று தாக்கித் துகள் செய்தன.

இலட்சுமணர் இந்திரஜித்தின் மார்பில் அணிந்திருந்த வச்சிரக் கவசத்தைத் துகள் செய்தார். அநுமார் இந்திரஜித்தின் தேரைக் காலால் உதைத்து அழித்தார். இந்திரஜித்தின் பெரிய வில்லை அரிய பாணத்தால் இலட்சுமணர் அழித்தார். அவன் வேறு வில்லை எடுத்துக் கொண்டு வேறொரு தேரின் மீது ஏறிக் கொண்டு போர் புரிந்தான். இலட்சுமணர் விட்ட பாணத்தால் அவனுடைய மார்பு புண்ணாகி, உதிரம் அருவி போல் ஒழுகியது. இந்திரஜித்து எய்த பாணங்களால் அநுமாருடைய நெற்றியிலிருந்தும் மார்பிலிருந்தும் உதிரம் பெருகியது. இந்திரஜித்தின் ஆயிரம் சேமத் தேர்களை இலட்சுமணர் அழித்தார். இந்தப் போர்த் திறத்தை விண்ணிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த இமையவர்களும் இருடியர்களும் அதிசயம் அடைந்தார்கள்.

துமிராட்சன், மகாபார்சுவன் ஆகிய இருவரும் இலட்சுமணரின் அம்பு மழையால் அழிந்து ஒழிந்தார்கள்.

ஆதித்தன் தன் குல மகனாகிய இலட்சுமணர் மீது வெயில் வீசி இடர்ப்படுத்தக்கூடாது என்று மேற்கடலில் மூழ்கினான். வஞ்ச மனிதர்களின் நெஞ்சம்போல் எங்கும் கரிய இருள் சூழ்ந்தது.

தேர் இழந்த இந்திரஜித்து வீரன் என்ற பேரையும் இழந்து மேக மண்டலத்தில் மேகத்துக்கிடையே மறைந்து நின்றான். அட்டமா சித்திகளிலும் வல்லவனாதலால் அணுரூபம் எடுத்தான். அவன் பயந்து தோற்று ஓடினான் என்று எண்ணி இலட்சுமணரும் வாநரரும் மகிழ்ச்சியடைந்தார்கள். இலட்சுமணர் அநுமாரின் தோளிலிலிருந்து இறங்கி இளைப்பாறிக் கொண்டிருந்தார். இந்திரஜித்து மிகச் சிறந்த தெய்வத்தன்மையுடன் கூடிய நாகபாசத்தை எடுத்து வீசினான்.

அந்த நாகபாசத்தால் இலட்சுமணர் கட்டுண்டு மதியுங்கதியுங் கலங்கி மண்மிசை விழுந்தார். இந்திரஜித்தைக் கட்டிப் பிடித்து அழிப்பேன் என்று கூறி விண்ணிலே தாவ முயன்ற ஆஞ்ச நேயரையும் நாக பாசம் கட்டிக் கருத்தழியச் செய்தது. இலட்சுமணருடைய உடம்பு உதிரம் ஒழுக, ஆதித்தனைப் போல் ஒளிவீசிக் கிடந்தது. மாயா பாசத்தினால் கட்டுண்ட ஞானிகளைப்போல் நாக பாசத்தினால் கட்டுண்டு செயலற்றுக் கிடந்தார். வாநரங்கள் எல்லாம் மயங்கிக் கிடந்தன.

இந்திரஜித்து இராவணனிடம் சென்று, “தந்தையே ! வணக்கம். இராமனைத் தவிர ஏனையோரைக் கொன்றுவிட்டேன். சற்று இளைப்பாறிக் கொண்டு நாளை சென்று இராமனையும் கொன்று வருவேன்“ என்று கூறித் தன் இருப்பிடம் போய் இளைப்பாறினான்.

இலட்சுமணருடைய அவல நிலையைக் கண்டு விபீஷணர் மிகவும் வருந்தினார். அனலன் என்ற வாநர வீரன் இராமரிடம் ஓடி, நாக பாசத்தால் கட்டுண்டு இலட்சுமணர் அசைவற்றிருப்பதைக் கூறினான். இராமர் அக்னிப் படையை ஏவி இருளை யகற்றி அந்த ஒளியில் தம்பி இருக்கும் இடத்தை அடைந்து, தம்பியைக் கண்டு ஆறாத் துயருற்றார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் நதிபோல் குதித்துச் சென்றது. தம்பியின் பாதத்தைத் தம் கையினால் தடவினார். மார்பில் கையை வைத்து மெய்யுற நடுங்கினார். வெய்ய மூக்கில் விரலை வைத்துச் சோதித்தார். மூடிய கண்களை நீடிய துயரத்தோடு பார்த்தார். தன் கோதண்டத்தைப் பார்த்தார். எண் திசைகளையும் நோக்கினார்.

தனக்கு வந்த பழியை நோக்கினார். தம்பியின் விழியை நோக்கினார். தம்பியினுடைய தோளை நோக்குவார். சூகாளை நோக்குவார், வாழ்நாளை நோக்குவார். “விபீஷணா ! இந்த கணையின் வரலாறு யாது ? இதைத் தந்த கடவுள் யார் ? எனக்கு ஏன் அறிவிக்கவில்லை ?“ என்று வினவினார்.

விபீஷணர், “அண்ணா ! இலட்சுமணரின் போர்த்திறத்தால் தோற்று ஓடிய இந்திரஜித்து பிரமதேவர் தந்த இந்த நாக பாசத்தை ஏவி இவ்வாறு செய்தான்“ என்று கூறினார்.

## கருடாழ்வார்

பெருந்துயரம் நிறைந்த இந்தப் போர்க்களத்தில் நஞ்சை மாற்றும் நெஞ்சையுடைய கருட பகவான் செம்பொன் குன்றுபோல் பறந்து வட்டமிட்டார். அவருடைய அமுத நிழல் எங்கும் பரவியது. கருடாழ்வார் இராமரை விண்ணில் இருந்து பணிந்து, அன்பின் மிகுதியால் இன்பம் நிறைந்த சொற்களால் துதி செய்கின்றார். "தேவாதி தேவா ! உலக நாயகனே, அலகிலாத பெருமையுடையவனே, பிறவிப் பெருங்கடலைத் தாண்ட வைக்கும் அறத்தின் நாயகனே, உலகங்களைக் காத்தும் கவலை தீர்த்தும், கருணை புரிகின்ற காகுத்தரே, ஆன்மாக்களின் பிறப்பையகற்ற மண்ணில் பிறந்த பெருந்தகையே, உன்னுடைய மாயையை அறியவல்லார் யாவர் ? தொழுவார்க்கு அருளும் வழுவாத கருணையங் கடலே, திருஞான தீபமே, அருட்பெருஞ் சோதியே, ஆணவ இருளையகற்றும் இன்பச் சோதியே. ஆரா இன்பம் அருளும் அமலனே, கூர் ஆழி ஏந்தும் கொற்றவனே" எனத் துதி செய்தார்.

கருடாழ்வாருடைய நிழல் பட்டவுடன் அந்த நாக பாசம் தாமரை நூல் போல் சுருங்கி, இல்லாமலேயே போய்விட்டது அது, சடையப்ப வள்ளலை அணுகினோர், பசியும் வறுமையும் தீர்வது போல் இருந்தது. தவ ஞானிகளைக் கண்ட ஆன்மாக்களின் அறியாமையைப்போல் அழிந்து ஒழிந்தது.

மாண்ட அரக்கர்கள் மீண்டு எழவில்லை. ஆதித்தன வரவால் குமுதம் மலர்வதில்லை. அதுபோல், கருடருடைய வரவு தீயவர்களுக்கு நலஞ்

செய்யவில்லை. இராம கைங்கர்யம் செய்கின்ற வாநரங்கள் மீண்டும் உயிர்பெற்று உடல் புண்கள் ஆறிப், புதிய ஆற்றலைப் பெற்று உயிர்த்து எழுந்து இராம் இராம் என்று இராம நாம சங்கீர்த்தனம் செய்தன.

இலட்சுமணர் எழுந்து நலஞ்செய்யும் இராமரை வலஞ் செய்து வணங்கினார். இராமர் தம்பியை மார்புறத் தழுவி இன்பக் கடலில் மூழ்கினார். கருட பகவானைப் பார்த்து, அன்பனே, கைம்மாறு கருதாமல் எங்கட்கு உதவி செய்த உன் அன்புக்கு நன்றி. நீ அன்பு மயமாகத் திகழ்கின்றாய். உன்னை முன்பு கண்டிலேன். நீ வந்து எங்களுக்குத் தாழ்வை நீக்கி வாழ்வைத் தந்தாய். மாரிபோல் வந்து அருள்மழை பொழிந்து உதவி செய்தனை. நீ யார் ? உனக்கு என் அன்பைக் காணிக்கையாகத் தருகின்றேன்" என்று அருளுரை பகர்ந்தார். வைணதேயன் இராமரைத் தொழுது, "என்னைப் பற்றி பின்னர் கூறுவேன். உங்கள் திருவடிக்குப் பல கோடி வணக்கம்" என்று கூறிப் பறந்தார்.

அநுமார் இராமரை அஞ்சலி செய்து, "நாம் இறந்து விட்டோம் என்று எம்பிராட்டி இன்னல் அடைவாள், அரக்கரும் மகிழ்வார்கள் ஆதலால், நாம் தேவியின் ஆவி மகிழ ஆரவாரம் செய்வோம்" என்றார். இராமரும் "அப்படியே செய்க" என்றார்.

எழுபது வெள்ளம் சேனைகளும் ஒருங்கே எழுகடல் போல் ஒலித்தன.

இலங்கை மாநகரில் தூங்காதவர் இருவர் உளர். ஒருவர் எம்பெருமானையே இடையறாது சிந்திக்கின்ற சீதாதேவி, மற்றொருவர் சீதையையே எண்ணுகின்ற பேதையாகிய இராவணன்.

இராவணன் வாநரங்களின் ஆர்ப்பொலியைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். பின்னர், இந்திரஜித்து இருக்கும் பொன்மாளிகையில் புகுந்தான். அப்போது தூதர்கள் வந்து இராவணனைத் தொழுது, "அசுரேந்திரா ! வானத்தில் கருட தேவன் வந்து நிழல் சேய்ய, மாண்ட வாநர வீரர்களும், இலட்சுமணரும் உயிர்த்தொழுந்து முன்னிலும் பன்மடங்கு வலிமை எய்தி ஆரவாரம் புரிகின்றார்கள்" என்றார்கள். இதைக்கேட்ட இராவணன், "என்னிடம் தோல்வி அடைந்த கருடனுக்கு இவ்வளவு ஆற்றலா ? என்னுடைய கொற்றம் நன்று

நன்று. மகனே, நீ இப்போதே சென்று பிரமாஸ்திரத்தால் அவர்களைக் கொன்று வெற்றியுடன் மீளுக" என்றான்.

"தந்தையே, இன்று ஒருநாள் ஓய்வு பெற்று நாளைக்குப் போருக்குச் சென்று வெற்றி பெற்றுத் தங்களுடைய மனத்துயரை மாற்றுவேன்" என்று இந்திரஜித்து வீரத்துடன் கூறினான்.

இராவணன் தன் இருப்பிடம் சேர்ந்தான்.

## படைத்தலைவர்கள் வதை

வாநர வீரர்களின் ஆரவாரத்தைக் கேட்ட மாபக்கன் முதலிய படைத் தலைவர்கள் இராவணனைத் தொழுது, "எங்கள் தனிப்பெருந் தலைவா ! எங்களைப் போருக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்" என்றார்கள். அப்பொழுது அங்கிருந்த ஒருவன், "இந்த மாபக்கனும், புகைக் கண்ணனும் போரில் புறங்கொடுத்து ஓடி வந்தவர்கள்" என்று இராவணனிடம் கூறினான். அதுகேட்டு இராவணன் பெருஞ் சீற்றத்தை அடைந்து. "புறங்கொடுத்த புல்லியர்களே, நீங்களும் ஒரு வீரர்களா ?" என்று கூறி, அருகிலிருந்தவர்களைப் பார்த்து, "இவர்களது மூக்கையரிந்து மானபங்கம் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அப்போது மாலி என்ற வீரன், இராவணனை வணங்கி, "வீரம் மிகுந்த வேந்தர் பெருமானே ! வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். நேற்று இளவரசராகிய இந்திரஜித்தும், தோற்று வந்தார். ஆதலால், தோற்றவர்களின் நாசியை அறுப்பது நல்லது அன்று" என்று தடுத்துரைத்தான். இராவணன் சீற்றந்தணிந்து படைத் தலைவர்களுடன் பத்து வெள்ளம் சேனைகளைப் போருக்கு அனுப்பினான்.

## மகரக் கண்ணனின் மாயப்போர்

இராவணனுடைய மனம் மாறியது. பிறகு அவன் படைத்தலைவர்களான வேள்விப் பகைஞன், பானுப் பகைவன், மாலில் பிசாசன், வச்சிரப்பல்லன் போன்றவர்கள் வீரத்துடன் புறப்பட்டார்கள். சிறப்பான ஆயுதங்களை ஏந்திப் போர்க்களம் ஏகினர். விபீஷணர் அந்த் படைத் தலைவர்களின் ஆற்றலைப் பற்றி இராமபிரானிடம் எடுத்தியம்பினார். அரக்க வீரரும் வாநர வீரரும் கடும்போர் புரிந்தனர். புகைக் கண்ணன் என்ற தலைவனை அநுமார் அடித்து மடித்தார். மாபக்கன் அங்கதனோடு போர் புரிந்து இயமன் ஊருக்கு வந்தான். மாலி என்ற மாபெரும் வீரனை வாநர சேனைத் தலைவனாகிய நீலன் கொன்றான். வேள்விப்பகைஞனை இலட்சுமணர் கொன்றார். வச்சிரப்பல்லனை அநுமார் வதைத்தார். பிசாசன் என்ற வீரனை இலட்சுமணர் கொன்றார்.

படைத் தலைவர்களுடன் வந்த ஆறுவெள்ளம் சேனைகளை இராமர் அழித்தார். நான்கு வெள்ளம் சேனைகளை இலட்சுமணர் அழித்தார். தூதர்கள் இராவணனிடம் சென்று படைத்தலைவர்கள் அழிந்ததைப் பகர்ந்தார்கள்.

இராவணனுடைய தாய் கேகசி, அவளுடைய தங்கை கும்பீரசி, அவளுக்குக் கரன், திரிசிரன், தூஷணன் என்று மூன்று புதல்வர்கள். கரன் அரன்பால் வரம் பெற்ற பேராற்றல் உடையவன். ஜனஸ்தானத்தை அரசு புரிந்து கொண்டிருந்தான். பஞ்சவடியில் இராமர் தங்கியிருந்த பொழுது, இராமருடன் போர் புரிந்து மாண்டான். அந்த கரனுடைய மகன் மகரக் கண்ணன். அவன் இராவணனைத் தொழுது, "என் உயிரினும் சிறந்த பெரிய பிதாவே ! என் தந்தையைக் கொன்ற இராமனை நான் கொன்று எனக்கு உற்ற பழியைத் தீர்த்துக் கொள்ளுவேன். தயவு செய்து என்னைப் போருக்கு அனுப்பி வையுங்கள். நான் இராம லட்சுமணர்களைக் கொன்று வெற்றி மாலையோடு மீள்வேன்" என்று கூறி விடை கேட்டான்.

இராவணன் அவனைத் தழுவி, "மகனே ! உன்னுடைய வீரம் மேருமலையைப் போன்றது. நீ போருக்குச் சென்று இராம இலட்சுமணர்களைக் கொன்று வானை மாலை சூடிக் கொண்டு ஓகையுடன் திரும்புக" என்று விடை கொடுத்தான்.

இராவணன் அனுப்பிய ஐந்து வெள்ளம் சேனைகளும், மகரக் கண்ணனுடைய ஐந்து வெள்ளம் சேனைகளும், புடை சூழ யுத்தப் பறை முழங்க மகரக்கண்ணன் போர்க்களம் புகுந்தான். சோணிதக் கண்ணன், சிக்கன் ஆகிய

இருவரும் அவனது தேர் சக்கரத்தைக் காத்துச் சென்றனர். வெஞ்சினம் பூண்ட மகரக் கண்ணன், இராமபிரானைப் பார்த்து, வஞ்சினம் கூறுகின்றான்.

"இராகவா ! நீ என் தந்தையைக் கொன்று என் அசுர குலத்துக்குப் பெரும் பழியை உண்டாக்கினாய். இப்போது உன்னை நான் கொன்று, அப்பழியைத் தீர்த்துக் கொள்ளுவேன்" மகரக் கண்ணன் தான் கற்ற மாயையினால் நெருப்பு மழை சிந்தியும், புயற்காற்று வீசச் செய்தும் வானத்தில் இடி விழச் செய்தும், தன் உருவை மறைத்துப் பல்வேறு மகரக் கண்ணனாகக் காட்சியளித்து மாயப்போர் புரிந்தான். இராமர் பல பாணங்களை ஏவினார். உதிரம் ஒழுகும் உருவமே பல மகரக் கண்ணர்களாகக் காட்சியளித்தது. இராமர், மேலும் பல பாணங்களை ஏவினார். உதிரம் ஒழுகும் உருவமே மகரக் கண்ணனின் உண்மை உருவம் என்று கண்டுகொண்டார் ஏனைய உருவங்களில் உதிரச் சுவடு இல்லை. அதனால், அவை மாயவடிவம் என்று உணர்ந்து சிறந்த ஒரு தெய்வப் படையை ஏவி, அவனது சிரத்தைத் துணித்தருளினார். மகரக் கண்ணன் வலிமை ஓய்ந்து வீரந் தேய்ந்து மாய்ந்தான். இயமனுடைய தூதர்கள் அவனது உயிரைப் பற்றிச் சென்றனர். அரக்க தூதர்கள் அவனது மரத்தைப் பற்றி இராவணனிடம் கூறினார்கள். இராவணன் துன்பக் கடலில் மூழ்கினான்.

இலங்கையில் வாழும் அரக்கியர்கள் தங்கள் உயிரினும் இனிய கணவர்கள் இறந்ததையறிந்து தம் தம் கணவர்களின் பிணங்களைப் பேய்களும் நாய்களும் நரிகளும் காக்கைகளும் கழுகுகளும் உண்பதைக் கண்டு உள்ளந் துடித்து, கண்ணீர் வடித்துப் புரண்டு அழுது உயிர் துறந்தார்கள்.

கற்புடைய ஒரு பெண்ணின் கண்ணீர் சிந்துங் காரணத்தால் இலங்கை வாழும் பெண்மணிகள் அனைவரும் கண்ணீர் வடித்துத் துடிக்கலானார்கள்.

### பிரமாஸ்திரம்



இராவணன் இந்திரஜித்தை அழைத்து, "மகனே ! உனக்கு நிகரான மகாவீரர்கள் பதினான்கு உலகிலும் இல்லை. கரன் மகனாகிய மகரக்கண்ணன் முதலியோர் போர்க்களத்தில் மாய்ந்தார்கள். மற்றை வீரர்கள் போர் செய்து ஓய்ந்தார்கள். இராம லட்சுமணர்களை உன்னையன்றி வெல்வாரில்லை. உன் பராக்கிரமம் மாமேருகிரி போன்றது. நீ போருக்குப் போய் வா" என்று விடை கொடுத்தான்.

இந்திரஜித்து தந்தையை வணங்கி, ஆயிரம் சிங்கங்கள் பூட்டிய பெரிய தேரில் ஏறினான். அறுபது வெள்ளம் அசுரச் சேனைகள் அவனைச் சூழ்ந்து சென்றன. இந்திரஜித்தைச் சூழ்ந்து வந்த அசுர சேனையின் பெருக்கத்தையும் அவை இருக்கின்ற நெருக்கததையும் கண்ட வாநர வீரர்கள் நடுங்கி ஒடுங்கி ஓடினர்.

இராமர் அந்தச் சேனைகளுக்கு அச்சம் நீங்க ஆறுதல் கூறி, அநுமார் தோள்மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டார். அங்கதன் தோளில் இலட்சுமணர் ஏறிச் சென்றார்.

இராமரும் இலட்சுமணரும் கரவேகமும் சரவேகமும் காட்டி இந்திரஜித்துடன் வந்த சேனைகள் அனைத்தையும் கொன்று குவித்தனர். இராம

இலட்சுமணருடைய வில்வன்மையைக் கண்டு இந்திரஜித்து வியந்து நின்றான். அவனது தேரும் அழிந்தது.

இலட்சுமணர், "அண்ணா ! இப்பொழுது இவன் மீது பிரமாஸ்திரத்தைப் பிரயோகம் செய்வேன்" என்றார். இராமர், "தம்பீ ! பிரமாஸ்திரத்தை விடுவாயானால் ஒரு நொடியில் உலகமே அழிந்துவிடும். ஆதலால், அயன் கணையைத் தொடுக்க வேண்டாம்" என்று தடுத்தருளினார்.

இந்திரஜித்து மறைந்தொழிந்தான். ஆதித்தனும் கடலில் மூழ்கினான்.

இராமர், "விபீஷணா ! நமது சேனைகளுக்கு உணவு தேடிக்கொடு" என்று பணித்தருளினார்.

தாம் போர்க் களத்தினின்று நீங்கி, அஸ்திரபூஜை செய்வாராயினார். இந்திரஜித்து ஓர் ஆலமரத்தின் கீழ் அபிசார வேள்வி செய்து பிரமாஸ்திரத்துக்கு வழிபாடு செய்து புறப்பட்டான். மகோதரன், இராவணனுடைய கட்டளையினால், வெள்ளை யானையில் இந்திரன் வருவதாகவும் தேவர்களும் முனிவர்களும் உடன் வருவதாகவும் மாயஞ் செய்து கடும்போர் புரிந்தான். போர் புரிபவன் மகோதரன் என்று உணராத வாநரவீரர்கள் இந்திரன் ஏன் போருக்கு வந்தான் ? என்று கலக்கமுற்றார்கள்.

இலட்சுமணர், "நாம் இந்திராதி தேவர்கள் பொருட்டே இராவணனோடு போர் புரிகின்றோம். அப்படியிருக்க இந்திரன் முதலியோர் நம்மீது போருக்கு வரக் காரணம் யாது ?" என்று கூறிக் கொண்டிருக்கும்போது இந்திரஜித்து மேகத்தில் மறைந்து நின்று, மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு சிறந்த படைக்கல மாகிய பிரமாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான்.

அந்தத் தெய்வப்படைக்கலம் தாக்க இலட்சுமணர் மாய்ந்தார். பிரமாஸ்திரத்தால் அ,நுமார் மூர்ச்சித்தார். சுக்கிரீவன், அங்கதன், இடபன், பனசன், குமுதன் ஆகிய சிறந்த வாநர வீரர்கள் உயிர்நீத்தார்கள். இன்னும், நளன், மைந்தன் துமிந்தன, கவயன், கேசரி, கதவலி, சுசேடணன், கந்தமாதனன், இடும்பன், ததிமுகன் முதலிய வீரர்களும் மாண்டனர்.

பிரமதேவனே சாம்பவான். ஆதலினால், பிரமாஸ்திரத்தால் மாளாமல் மயக்கம் அடைந்தார்.

இந்திரஜித்து, வானரக் குழுவுடன் இலட்சுமணன் மாண்டான், இராமன் போர்க்களத்தில் இல்லாமையால் அவன் மட்டும் மாளவில்லை என்று எண்ணி வெற்றிச் சங்கை ஊதியபடி தந்தையாரிடம் சென்று வணங்கி, "தந்தையே ! இனி உங்களுக்குச் சிந்தை ஏன். போர்க்களத்தில் இராமன் காணப்படவில்லை. ஆகவே, இராமனைத் தவிர, இலட்சுமணன் முதலிய அனைவரையும் கொன்றுவிட்டேன். பிரமாஸ்திரத்தால் வெற்றி பெற்றேன்." என்று கூறினான்.

இராவணன் பெருமகிழ்ச்சி அடைந்தான். "மகனே ! நீயும் மகோதரனும்போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு விடை கொடுத்தான். இந்திரஜித்து தன் மாளிகை சென்றான்.

## இராமரது துயரம்

தெய்வப் படைக்கலன்களுக்கு வழிபாடு செய்த இராமச்சந்திர மூர்த்தி போர்க்களத்துக்கு வந்தார். எல்லாரும் மாண்டு கிடக்கும் அவல நிலையைக் கண்டார். மாண்டு கிடக்கும் சுக்ரீவனுடைய உடலைத் தடவி, "அன்பின் கருவூலமே ! நட்பின் நாயகமே ! எனக்குத் துணை செய்ய வந்த வயிரத்தூணே ! நீ மாண்டு கிடக்கின்றாயே, என்னை மறந்தாயோ ?" என்று கூறிப் புலம்பியழுதார்.

அநுமாரைத் தழுவி, ஆறாத் துயரம் அடைந்தார். "என் ஆருயிரே ! என் பொருட்டுக் கடல் கடந்து அசுரர் உடல் கடைந்து, சானகிக்கு உயிர் கொடுத்துச் சேவை ஒன்றே எனக்குத் தேவை என்று பணிபுரிந்த பண்பாளனே, உனக்குத் தேவர்களும் சாவா வரம் தந்தார்களே. அந்த வரம் பொய்யாகுமா ? இப்படியும் நிகழுமென்று நான் கனவிலும் கருதினேனில்லை. ஆஞ்சநேயா ! நீ எங்கே சென்றாய் ? தெய்வப் படைக்கலம் உன் உயிரை உண்டு விட்டதா ?" என்று கூறி மிகவும் புலம்பினார்.

பின்னர், பிரமாஸ்திரத்தால் மாண்டு கிடக்கும் வயிரத்தூண் போன்ற இலட்சுமணரைக் கண்டார். துயரத்தால் "தம்பீ, தம்பீ" என்று கூறி மூர்ச்சித்துவிட்டார். அவரது மூச்சு ஒரு நாழிகைப் பொழுது நின்றுவிட்டது.

வேறொன்றையும் உணர்ந்தாரில்லை. பின்னர், மூர்ச்சை தெளிந்து தம்பியின் உடலைத் தனித்தனியே தடவிப் புலம்பலுற்றார்.

"தம்பீ ! எனக்குத் தாயும் நீயே, தந்தையும் நீயே, தவமும் நீயே என் சேயும் நீயே, தம்பியும் நீயே, செல்வமும் நீயே. இப்பொழுது எவ்வாறு மனம் துணிந்து என்னைப் பிரிந்து சென்றனை ? கானகத்தில் பதினாலு ஆண்டுகள் இனிய கனியும் தேனும், காயும் கிழங்கும் என்னை உண்பித்து நீ உண்ணாதிருந்தாய். என்னை உறங்குவித்து நீ உறங்காதிருந்தாய். பதினாலு ஆண்டுகள் நின்ற வண்ணமாக் சேவை செய்தாய். ஒரு தம்பி, தமையனுக்கு இவ்வாறு சேவை செய்தான் என்ற வரலாறே இல்லை. இப்பொழுது முழுமையாகக் கண்மூடி உறங்குகின்றாய். தம்பீ ! உன்னையே இருந்தேன் நம்பி, நீ என்னை விட்டு நீங்கி நீட்டி விட்டாய் கம்பி. நான் அழுகிறேன் வெம்பி, இனி எனக்கு யார் துணைவர் ?"

"தம்பீ நீ மாண்ட பின் உயிர்வாழ மாட்டேன். மாண்டு ஒழிவேன். நான் மாண்டால், பரதனும் சத்ருக்கனும் மாள்வார்கள். இளமையான மனைவியைத் துறந்து, மணிமாளிகைளைத் துறந்து, நாட்டையும் நகரையும் துறந்து, உணர்வையும் உறக்கத்தையும் மறந்து, எனக்கு பணி செய்தாய். எள் என்றால் எண்ணெயைக் கொணர்வாய், பருத்தி என்றால் ஆடையைக் கொணர்வாய்" என்று பலவாறு புலம்பியழுது அறிவு தேய்ந்து, உள்ளம் ஓய்ந்து நிலத்தில் சாய்ந்து மூர்ச்சித்து விட்டார்.

இராமபிரானுடைய ஆற்றொணாத் துயரத்தைக் கண்டு தேவர்கள் அழுதார்கள், துதி செய்து தொழுதார்கள்.

## சீதாதேவி போர்க்களம் காணுதல்

இராவணன் இந்திரஜித்துக் கூறிய சொற்களைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்து வெற்றிப் பறை அறைந்து ஆடலும் பாடலும் முழங்க, களியாடல் செய்யுமாறு கட்டளையிட்டான். மருத்தன் என்ற வீரனை அழைத்து "நீ சென்று போர்க்களத்தில் மாண்ட அரக்கர்களின் உடல்கள் அனைத்தையும் கடலில் இடுக" என்று கட்டளையிட்டான். "இதனைப் பிறரறியாமல் இரகசியமாகச் செய்" என்றும் கூறினான்.

சீதையைப் போர்க்களம் காண அழைத்துப் போவதனால் போர்க்களத்தில் அரக்கர்கள் ஒருவரும் மாளவில்லை என்று சீதை நினைக்கும்படி இந்த சூழ்ச்சியைச் செய்தான். இவ்வாறு செய்யவில்லையானால் அநுமார் மருந்துமலையைக் கொண்டு வந்த பொழுது மாண்ட அரக்கர் அனைவரும் மீண்டு எழுந்திருப்பார்கள். அவ்வாறு அவனைச் செய்யவொட்டாமல் திருவருள் தடுத்து அவனது புத்தி குறுக்கே சென்றது.

மருத்தன் போர்க்களத்தில் மாண்ட அத்தனை அரக்கர்களின் சடலங்களையும் கடலில் இட்டான். இப்போது வாநர வீரர்களின் சடலங்கள் மட்டும் இருந்தன.

சீதையைப் விமானத்தில் ஏற்றிப் போர்க்களத்தைக் காட்டுமாறு இராவணன் கட்டளையிட்டான். இராம இலட்சுமணர் போர்க்களத்தில் மாண்டனர் என் அறிந்து சீதை தனக்கு வசப்படுவாள் என்று மூடன் கருதினான். அரக்கியர்கள் சீதையை விமானத்தில் ஏற்றிப் போர்க்களம் கொண்டு போய்க் காட்டினார்கள். தன் கணவரும், கொழுந்தனாகிய இலட்சுமணரும் அநுமார் முதலிய மகா வீரர்களும் மாண்டு கிடப்பதைக் கண்ட எம்பிராட்டி அடைந்த துயரத்தைச் சொல்ல வல்லார்யாவர் ? தண்ணீரில் விளைந்த தாமரை தீணில் வீழ்ந்து கரிவது போல், பெருந்துயரமடைந்து பெரிதும் புலம்பி அழுதாள்.

"என் தெய்வமே ! இராவணாதியரக்கர்களைக் கொன்று, உங்களுக்கு அனுகூலம் புரிவேன் என்று தண்டக வனத்தில் வாழும் முனிவர்களுக்கு வாக்குறுதி கொத்தீரே. இத்தனைத் துன்பங்களுக்கும் காரணம் நான்தானே. தவஞ்செய்ய வந்த கணவனுக்குத் துணை செய்ய வந்த நான் விளையாட்டு மானைக் கேட்டது பெரும் பிழையல்லவா ? இது மாயமான் என்று என் கொழுந்தர் தடுத்தும் கணவரை வற்புறுத்தி மான் பின்னே அனுப்பி இத்தனைத் துன்பத்துக்கும் காரணம் ஆனேன். இலட்சுமணர் என்னைக் காவல் புரிந்திருந்தால் ஆயிரம் இராவணர்களாலும் என்னைச் சிறை பிடிக்க முடியாது. பதினாலு ஆண்டுகள் உணவையும் உறக்கத்தையும் துறந்து இளம் மனைவியை மறந்து, எனக்குப் பாதபூஜை செய்த அந்தப் பரம பக்தனை, நீ நயவஞ்சகன் என்று வைது இந்தப் துன்பத்துக்கு ஆளானேன். பெண்புத்தி பின் புத்தி என்பதை உலகம் அறியச் செய்துவிட்டேன்" எனறு கூறி, விதியையும் தன் மதியையும். இராவணனுடைய சதியையும், தனக்கு நேர்ந்த கதியையும் நினைந்து வாய்விட்டு அழுதாள்.

அவ்வாறு, அந்தத் தெய்வ மங்கை அழுவதைக் கண்டு தேவ மாதர் அழுதார்கள். பரமசிவனுடைய பங்கிலுறையும் பார்வதியும் அழுதாள். திருமாலின் தங்கையாகிய கொற்றவை அழுதாள். தாமரையில் வாழும் திருமகளும் அழுதாள். கலைமகள் அழுதாள். திருமாலின் தங்கையாகிய கொற்றவை அழுதாள். இரக்கம் என்பதை ஒரு சிறிதும் அறியாத அரக்கிமார்களும் அழுதார்கள்.

## மாயா சீதை

சீதாதேவி, "இரவி குல திலகமே ! என் பொருட்டு உனக்கு இந்த இடர் எய்தியது. தம்பி இலட்சுமணா ! கண்ணை இமை காப்பது போல் என்னைக் காத்து வந்தாய். அண்ணனுக்கு முடிவு வருமானால் அவனுக்கு முன் நீ முடிய வேண்டும் என்று அன்னை சுமித்திரா தேவி கூறிய வாக்கை நிறைவேற்றி விட்டாய். நான் தீராப் பழி பெற்றேன். கடலைக் கடந்து வந்த ஆஞ்ச நேயா ! உன் உடலைக்கண்டு வருந்துகின்றேன்" என்றெல்லாம் அழுது கணவன் மீது விழ முயன்றாள்.

அப்பொழுது, விபீஷணன் புதல்வியாகிய திரிசடை சானகியைத் தடுத்து, "என் அன்னையே ! இவையெல்லாம் அசுர மாயை. மானை அனுப்பியதும், மாயா சனகரைக் கொணர்ந்ததும் அசுரர்கள் செய்யும் மாயா ஜாலமென உணர்வாயாக. உங்கள் கணவனார் மீது கணை பாய்ந்த சுவடு இல்லை. அவர் மீது உதிரக் குறியில்லை. போர்க்களத்தில் அசுரப் பிணங்கள் ஒன்றுகூட இல்லை. நித்திய சிரஞ்சீவியாக நீ இருக்க வேண்டுமென்று அநுமானுக்கு நீ கொடுத்த வரம் பொய்யாகாது. நான் கண்ட கனவும் பொய்க்காது. ஆதலால், தாங்கள் மனம் கலங்காது தெளிவு அடையுமாறு வேண்டுகிறேன்" என்று தேற்றினாள்.

சீதாதேவி திரிசடையைப் பார்த்து, "அம்மா ! தெய்வம்போல் எனக்கு உதவி செய்கின்றாய். என் கணவரைக் காண வேண்டுமென்ற ஆவலாலும் உன் கருணை மொழியாலும் நான் உயிர் வாழுகின்றேன். இன்று ஓரிரவு உயிர் தாங்குவேன்." என்றாள். பிராட்டியாரை மீண்டும் அசோகவனத்தில் சேர்த்தார்கள்.

## மருந்து மலை



இராமருடைய கட்டளையின்படி வாநர சேனைகளுக்கு உணவு தேடிச் சென்ற விபீஷணர், போர்க் களத்திற்கு வந்தார். இராமர் மூர்ச்சித்திருப்பதையும் ஏனையோர் மாய்ந்து வீழ்ந்திருக்கின்ற அவல நிலையையும் கண்டு பெரிதும் வருத்தம் அடைந்தார். அவர் கண்ணில் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. உள்ளம் உருகியது. இது பிரமாஸ்திரத்தின் செயல் என்று உணர்ந்தார். பிரமாஸ்திரத்தால் மாளாதவர் யாரேனும் உளரோ என்று அந்த நள்ளிரவில் தேடினார். மூச்சிருக்கும் அநுமாரைக் கண்டார். அவரது உடம்பில் தைத்திருந்த அம்புகளை எடுத்து, முகத்தில் தண்ணீர் தெளித்தார். மயக்கந் தெளிந்த மாருதி, விபீஷணரைக் கட்டித் தழுவிக் கொண்டார். "அண்ணலே ! இராமச்சந்திர மூர்த்திக்கு ஆபத்தில்லையே" என்று வினாவினார். "மாருதியே ! இராமபிரான் மூர்ச்சித்திருக்கின்றார்" என்று விபீஷணர் கூறினார். மாருதி விபீஷணரைப் பார்த்து "ஜாம்பவானை அடைந்தால் நமக்கு நன்மை உண்டாகும்" என்று , இருளில் ஜாம்பவானைத் தேடி அவர் இருக்கும் இடத்தை அடைந்தார்கள். ஜாம்பவான் இருளில் வந்தவர் யாரென்றே அறியாதவராய், "நீங்கள் யார் ?" என்று கேட்டார். ஆஞ்சநேயர், "அடியேன்

அநுமன் வந்திருக்கின்றேன்" என்றார். இதைக் கேட்ட ஜாம்பவான் துள்ளி குதித்தார். "உய்ந்தனம் உய்ந்தனம்" என்று கூறி உவந்தார்.

நிலைமையை உணர்ந்த ஜாம்பவான், "அநுமனே ! நீ வடக்கே நெடுந்துாரத்தில் உள்ள சாவா மருந்தைக்கொண்டு வந்தால் எல்லாரும் பிழைத்தெழுவார்கள். இது ஆதித்தன் உதிப்பதற்கு முன் செய்ய வேண்டும். தென் கடலுக்கு ஒன்பதினாயிரம் யோசனை தொலைவில் இமயமலை இருக்கின்றது. இமயத்துக்கு அப்பால் ஒன்பதினாயிரம் யோசனை தொலைவில் ஏமகூட மலை இருக்கிறது.அம்மலைக்கு அப்பால் ஒன்பதனாயிரம் யோனை தூரத்தில் நிடதமலை இருக்கின்றது. அதற்கு அப்பால் ஒன்பதினாயிரம் யோசனை தொலைவில் மேரு மலை இருக்கிறது. மேரு மலைக்கு அப்பால் ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் நீலகிரி இருக்கின்றது. நீலகிரிக்கு அப்பால் நாலாயிரம் யோசனை கடந்தால் மருந்துமலை இருக்கின்றது. தாங்கள் வாயு வேகம். மனோவேகம் பிற்படச் சென்று சூரியன் உதிப்பதற்கு முன் மருந்து மலையைக் கொண்டு வர வேண்டும்" என்று அநுமாரிடம் வேண்டிக் கூறினார்.

அநுமான், "இராமா" என்று கூறி வானத்தில் பாய்ந்தார், பேருருக் கொண்டார். ஜாம்பவான் கூறிய வழியில் சென்று இமயமலையை அடைந்தார். அங்கே கயிலைமலையைக் கண்டு கண்ணுதற்குரிய கடவுளைக் கண்டு, எண்ணுதற்கரிய புண்ணியமென்று வணங்கி அவரது தண்ணருளைப் பெற்றார். ஏம கூட மலையையும் நிடத மலையையும் கடந்து சென்றார்.

மேரு மலையில் பெரிய வெண்ணாவல் மரத்தைப் பார்த்தார். அந்த வெண்ணாவல் மரம் இருப்பதனால் இத்தீவு நாவலந்தீவு எனப்பட்டது. இது வடமொழியில் ஜம்புத்தீவம் என்று பெயர் பெற்றது. அங்குப் பிரமதேவனைக் கண்டு வணங்கினார். பின்னர், இலட்சுமி தேவியுடன் வீற்றிருக்கின்ற விஷ்ணு மூர்த்தியைக் கண்டு வியந்து நயந்து பயபக்தியுடன் பணிந்தார். ஆயிரம் ஆதித்தர்கள் ஒருங்கே உதித்தது போன்ற பேரொளிப் பிழம்பாக விளங்கும் சதாசிவ மூர்த்தியையும் மனோன்மணி அம்மையையுங் கண்டு பிறவியின் பேறாக எண்ணி, ஆறாகக் கண்ணீர் வடித்து, ஆனந்த நர்த்தனஞ் செய்து அஞ்சலி செய்தார். பின் இமையவர் புடைசூழ வீற்றிருக்கின்ற இந்திரபகவானை இறைஞ்சினார். எண்திசைக் காவலரைக் கண்டு கைகூப்பினார். உத்தர குரு என்ற புண்ணிய பூமியைக் கண்டார். அங்கே

ஆதித்தனைக் கண்டார். பொழுது விடிந்து விட்டதோ என்று துணுக்குற்றார். பின் அறிவு தெளிந்து மேருகிரிக்கு வட திசையாதலின் சூரியன் மேற்கே உதித்துக் கிழக்கே செல்லும் நியதியினால், கதிரவனைக் காண்கின்றோம் எண்றெண்ணி மகிழ்ந்தார். அங்கு இளமை மாறாது உயிரும் உடலும்போல் ஒன்றுபட்டு வாழ்கின்ற புண்ணிய ஆத்மாக்களைக் கண்டார். மருந்து மலையை அடைந்தவுடன் அதனைக் காக்கின்ற தெய்வங்கள், "அப்பா ! நீ யாவன் ? இங்கு வந்த காரணம் யாது ?" என்றன. அநுமார், "தெய்வங்களே ! நான் வாயு குமாரன், அநுமான், இராம தூதன். போரில் மாண்ட இராம பக்தர்களை உயிர்ப்பிக்க மருந்து கொண்டு வர வந்தேன்" என்று விநயத்துடன் விளம்பினார். அத்தெய்வங்கள், "இம் மருந்தைக் கொண்டு போய் மீண்டும் இங்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்" என்று கூறி மறைந்தன.

பின்னர், திருமாலின் சக்கரத்தாழ்வார் வந்து காட்சி தந்து கருணை காட்டி மறைந்தார். அறிவே ஒரு வடிவாகிய ஆஞ்சநேயர் ஜாம்பவான் கூறிய மருந்துகளைப் பிரித்தெடுப்பது அரிதென்று எண்ணினார். அம்மருந்தின் விவரம்.

சஞ்சீவ கரணி - இறந்தவர்களைப் பிழைக்க வைப்பது

சந்தான கரணி - உடம்பு, வேறு வேறு கூறுகளாகப் பிரிக்கப்படினும் ஒன்றுபடச் செய்வது.

விசல்லிய கரணி - உடம்பிலுள்ள புதைந்த படைக்கருவிகளை வெளிப்படும்படியாகச் செய்வது.

சாவருணிய கரணி - உருவழிந்த உடம்பை உருவாக்கி வைப்பது.

பின்னர், ஆயிரம் யோசனை பரப்பும் ஆழமும் உடைய அம்மருந்து மலையை வேரோடு பெயர்த்து, ஒரு கையில் ஏந்திக் கொண்டு இலங்கை நோக்கிப் புறப்பட்டார்.

அங்கே போர்க்களத்தில் ஜாம்பவானும் விபீஷணரும் இராமரிடம் சென்று அவரது திருவடியைத் தொட்டு வணங்கினார்கள்.

இராமர் கண் விழித்தார். எதிரில் நின்றிருந்த விபீஷணனைப் பார்த்து, "அன்பனே ! இலட்சுமணன் பிரமாஸ்திரத்தை ஏவி இந்திரஜித்தை அழிப்பேன் என்றான். அயன்படை அனைத்துலகங்களையும் அழிக்கும். அதனை இப்போது ஏவாதே என்று தடுத்தேன். அதனால் வந்தது இந்த விளைவு. இலட்சுமணனைத் தனித்து விட்டு ஆயுத பூஜைக்குப் போனதும் பிழை. நான் இனியிருந்து என்ன பயன் ? மடிந்து வானுலகஞ் சென்று என் அருமைத் தம்பியைச் சந்திப்பேன்" என்று கூறினார்.

ஜாம்பவான், "எம்பெருமானே ! தேவரீர் மனந் தளர வேண்டா. பாற்கடலில் அமிர்தத்துடன் பிறந்து இதுவரையாரும் அதனை அனுபவிக்காத மருந்து மலை வடக்கே இருக்கின்றது. அதைக் கொணருமாறு அநுமனை அனுப்பியிருக்கின்றேன். அறிவுடைய அநுமார் அதனைக் கொணர்வார். அதனால், அனைவரும் பிழைப்பர்" என்று கூறினார்.

இவ்வாறு உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோதே பேரொளி மயமான மருந்து மலையை ஒரு கையிலேந்திக் கொண்டு அநுமார் விண்ணிலிருந்து மண்ணில் இறங்கினார். மருந்தின் நறுமணம் வீசியவுடன் இலட்சுமணர் முதலிய அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர்.

இராமர் தம்பியைத் தழுவி மகிழ்ந்தார். அநுமாரைப் பார்த்து கண்ணீரால் குளிப்பாட்டி, "ஆஞ்சநேயா, தசரதச் சக்ரவர்த்தியின் மக்களாகிய நாங்கள் மாண்டொழிந்தோம். இப்பொழுது உன்னால் பிழைத்து எழுந்தோம். எங்களுக்கு உயிர் கொடுத்த உத்தமனே, உன் புகழ் நீடு வாழ்க" என்று வாழ்த்தினார்.

யாவரும் உயிர்பெற்று எழுந்ததும் ஜாம்பவான் சொற்படி அநுமார் அந்த மருந்து மலையைப் பழையபடியே இருந்த இடத்தில் வைத்துவிட்டுத் திரும்பினார்.

பிரமாஸ்திரம் இராமனைத் தொழுது தன் இருப்பிடம் சேர்ந்தது.

## களியாடுதல்

இராவணன் வெற்றி விழா கொண்டாடுவானாயினன். மகளிரும் இளங் குமரர்களும் கள்ளுண்டு, மயக்கத்தால் தள்ளுண்டு மயங்கிப் பாடி ஆடி மகிழ்ந்தார்கள்.

சஞ்சீவி மருந்தினால் உயிர் பெற்று எழுந்த வாநர வீரர்கள் கடல்போல் ஆரவாரம் செய்தார்கள். வெற்றி விழாவில் களித்திருந்த இராவணன் இதனைக் கேட்டான். அசுர தூதர்கள் வண்டுருவாகச் சென்று, பிறர் அறியாவண்ணம், "அநுமார் மருந்துமலையைக் கொண்டு வர, அதனால் மாண்டவர்கள் மீண்டு எழுந்து ஆரவாரஞ் செய்கின்றார்கள்." என்று கூறினர். இராவணன் மனம் உலைந்தது களியாட்டம் கலைந்தது.

இராவணன் மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தான். அங்கே மாலியவானும் இந்திரஜித்தும் மகோதரனும் மற்ற மந்திரக் தலைவர்களும் வந்து வணங்கி, இராவணனைச் சூழ்ந்து அமர்ந்தார்கள்.

## மாலியவான் கூறும் அறவுரை

இராவணனுடைய சிறிய பாட்டனராகிய மாலியவான் மதிநலம் படைத்தவன். "இராவணேஸ்வரா ! இறந்த அசுரர்களின் சடலங்களைக் கடலில் இடாமல் இருந்திருந்தால் அவர்கள் அனைவரும் பிழைத்திருப்பார்கள். இலங்கையிலிருந்து இமைக்கும் நேரத்திற்குள் மேரு மலையைத் தாண்டிச் சென்று சஞ்சீவி மலையைக் கொண்டு வந்த அநுமார் இந்த இலங்கையை வேரோடு பறித்துக் கடலில் எறிந்தாலும் வியப்பில்லை. அநுமான் நினைத்தால் மேருமலையைக் கொண்டு இலங்கை மீது வீசினாலும் வீசுவான். அவனைத் தடுப்பார் யார் ? ஆதலால், நீ மேதையாக இருப்பாயானால் பேதைபோல் பிடிவாதம் செய்யாதே. சீதையைக் கொண்டு போய் இராமபிரான் திருவடியில் வைத்துச் சரணாகதியடைவாயாக. அதனால், மாண்டவர்கள் போக எஞ்சி நின்ற நம் குலத்தவர்கள் வாழ்வார்கள்" என்று கூறினான். இராவணன் முதியவர் வார்த்தையை மதியிலாமையினால், விதி வந்து உருத்த, அவனது கூற்றை ஏற்றுக் கொண்டானில்லை.

இந்திரஜித்து தந்தையை வணங்கி, "என் அன்புள்ள பிதாவே ! நான் எல்லாரையும் கொல்லுமாறு பிரமாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தேன். அது அனைவரையும் கொன்று இராமனை மட்டும் கொல்லாமல் விட்டது. ஆதலால், இராமனை மனிதன் என்று எண்ணுவது அறிவுடைமையாகாது. என் சிறிய

தந்தையாகிய விபீஷணர் கூறியவாறு இராமன் பரம்பொருள் என உணர்க" என்று கூறினான்.

இராவணன் மிகவும் சீற்றமடைந்து, "நீங்கள் என் ஆற்றலை அறியவில்லை, கூற்றுவனையும் ஆவி மாற்றுவன். நீங்கள் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் ஒருவனே நாளை அவர்களைக் கொல்லுவேன்" என்று வஞ்சின வார்த்தை பகர்ந்தான்.

இந்திரஜித்து, "தந்தையே ! நாளை நிகும்பலை என்ற இடத்திற்குச் சென்று யாகம் செய்து அழியாத தேரையும் வில்லம்புகளையும் பெற்று இராம இலட்சுமணர்களைக் கொல்லுவேன். இதற்கு ஒரு தடை இருக்கின்றது. விபீஷணன் உளவு சொல்லுவான். ஆதலால், நான் ஒரு மாயச் சீதையை வெட்டி அயோத்தி போவதாகப் போக்குக் காட்டி நிகும்பலை சென்று யாகத்தை முடிப்பேன்" என்று கூறினான். இராவணன் அதற்கு அனுமதியளித்தான்.

போர்க்களத்தில் இராமனை வணங்கிய சுக்ரீவன், இலங்கையைச் சுட்டெரிக்க அநுமதி தர வேண்டும் என்று வேண்டினான். இராமரும் அனுமதியளித்தார்.

சுக்ரீவனின் கட்டளையின்படி எழுபது வெள்ளம் வாநரங்களும் ஆளுக்கொரு கொள்ளிக்கட்டையைத் தூக்கி கொண்டு ஒவ்வொரு வீட்டிலும் தீ வைத்துக் கொளுத்தின.

## மாயா சீதை

ஆஞ்ச நேயர் மருந்துமலையை அதன் இருப்பிடம் வைத்துத் திரும்பினார். மேற்கு வாயிலில் வந்து சேர்ந்தார். இந்திரஜித்து ஓர் அரக்கனை மாயா சீதையாகச் செய்து கொண்டு ஒரு கையில் கூந்தலையும் மற்றொரு கையில் வாளையும் ஏந்தியபடி, "ஏ, வாநரமே, இத்தனையும் இந்தச் சீதையினால் விளைந்தவையே. ஆகவே, இவளைக் கொல்லுவேன். அயோத்தி செல்லுவேன். பரதன் முதலியோரிடம் போர் செய்து வெல்லுவேன்" என்று கூறினான்.

அநுமார், "அப்பா ! பெண்ணைக் கொல்வது பெரும் பாவம். நீ புலத்திய முனிவருடைய பேரன், அறநெறியை அழிக்காதே. பாவ மூட்டைகளைக் கட்டிக் கொள்ளாதே. நாடு சிரிக்கும், கேடு செய்யாதே !" என்று தடுத்தும் இந்திரஜித்து மாயா சீதையை வெட்டத் துணிந்து, "நான் அயோத்தி சென்று பரத சத்ருக்னரைக் கொன்று மீளுவேன்" என்று கூறி வடக்கே போவதாக நடித்து நிகும்பலை போய்ச்சேர்ந்தான்.

அநுமார், உண்மையில் சீதை இறந்ததாகக் கருதிக் கதறிப் புலம்பியழுதார்.

இராமச்சந்திர மூர்த்தி சீதை மாண்டதைக் கேட்டு அசைவற்று இருந்தார். சித்திரப் பதுமை போல், உயிர்ப்படைந்து ஓய்ந்திருந்தார். இலட்சுமணர் தமையனாரைத் தேற்றினார். "அண்ணா ! தேவி மாண்டாள் என்ற சேதியைக் கேட்டு வருந்திச் செயலற்று கிடப்பது அறிவுடைமையாகாது. இப்பொழுது அசுர குலத்தையும் மூவுலகையும் அழிக்க வேண்டும்" என்று கூறினார்.

அப்பொழுது ஆஞ்ச நேயர், இந்திரஜித்து அயோத்திக்குச் சென்ற செய்தியைக் கூறினார். அச்சொல் இராமருக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததுபோல் இருந்தது. வாநரங்கள் அனைவரும் வாய்விட்டு அழுது புலம்பினார்கள். அப்பொழுது விபீஷணர் வண்டுருக்கொண்டு அசோகவனம் சென்று பிராட்டியார் சுகமே இருப்பதைக் கண்டு வந்து கூறினார். இதைக் கேட்டு எல்லாரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

இந்திரஜித்து நிகும்பலை சென்று வேள்வி செய்து வெற்றி பெற முயல்கின்றான் என்பதை விபீஷணர் கூறினார்.

## நிகும்பலை யாகம்

இராமபிரான், சீதாதேவி உயிருடன் இருக்கின்றாள் என்றும், இந்திரஜித்து வெட்டிய உருவம் மாய வடிவம் என்றும், அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். விபீஷணரைக் கட்டியணைத்துத் தழுவினார்.

"விபீஷணா ! எங்களுக்கு வரும் துன்பத்தைப் போக்க நீ இருக்கின்றாய், தெய்வத் திருவருள் இருக்கின்றது. அநுமன் இருக்கின்றான். எங்கள் தவம்

இருக்கின்றது. ஆற்றல் இருக்கின்றது. வேறென்ன வேண்டும் ? எனக்கு ஏது குறை ?" என்று கூறி விபீஷணரை இராமபிரான் பாராட்டினார்.

விபீஷணர், இராமபிரானைப் பணிந்து, "அண்ணலே ! மாயையில் வல்லனாகிய இந்திரஜித்து நிகும்பலையில் வேள்வியை முடிப்பானாயின் அவனை வெல்லுவார் பதினாலு உலகங்களிலும் இல்லை. யாகம் முடிவதற்குள் அவன் ஆகம் முடிய இலட்சுமணரை என்னுடன் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்" என்றார்.

"என் அருமைத் தம்பி ! பிரமாஸ்திரம் நாராயணாஸ்திரம், பாசுபதாஸ்திரம் முதலிய தெய்வப் படைக்கலன்களை நீ முந்திப் பிரயோகம் செய்யாதே. செய்தால் உலகம் அழிந்துவிடும். இந்திரஜித்து அப்படைக்கலன்களை ஏவுவானாயின் அப்படைகளால் தடுத்து அவனை வெற்றி பெறுவாயாக. தருமந்தான் வெல்லும், அதர்மம் ஒருபோதும் வெல்லாது" என்று கூறி இலட்சுமணருக்கு இராமர் கவசத்தையும் திருமால் வில்லையும் ஒழியாத அம்பறாத் துணியையும் கொடுத்துப் போருக்கு விடைதந்து வாழ்த்தி யனுப்பினார்.

வாநரங்கள் ஆளுக்கொரு கொள்ளிக்கட்டையினை ஏந்திக் கொண்டு இரகசியமாகச் செய்யும் அவ்வேள்வியைக் காத்து நிற்கும் அசுர சேனைகளுடன் போர் செய்தன.

அசுர சேனைகளில் பலர் மாண்டனர். வேள்வியில் வைத்திருந்த தீர்த்தக் கும்பங்களும், யாகக் குண்டங்களும் சிதைந்தன. அங்கே ஆஞ்ச நேயர் வந்து, "ஏ மூடனே குறைக் கேடனே, மாயா சீதையை வெட்டிய மதியிலியே ! பரதனோடு போர் செய்து வந்தனையா ? பொய்யே வடிவான புன்மகனே, உனக்கு அழிவு காலம் வந்துவிட்டது. இன்னுஞ் சிறிது நேரத்தில் உன்னை இழந்து உன் தந்தை அழப் போகின்றான், உன் தாய் வாய்விட்டுப் புலம்பப் போகின்றாள்," என்று கூறிப் பரிகசித்தார்.

இந்திரஜித்து நாகம் போல் சீறி, "அநுமானே ! உங்களைக் கொல்வதற்கு யாகம் வேண்டியதில்லை. உங்களுக்கு அழிவு காலம் வந்துவிட்டது. விளக்கில் விழுகின்ற விட்டில் பூச்சிகளைப்போல் அழியப் போகின்றீர்கள்."

என்று வெஞ்சினத்துடன் வஞ்சின வீர வசனங்களைக் கூறிப் போருக்கு வந்தான்.

அநுமார் தோள், மீது இலட்சுமணர் ஆரோகணித்தார். விபீஷணர், "இளைய பெருமானே ! இந்திரஜித்தைக் கொல்லுவதற்கு இது ஏற்ற சமயம். காலம் தாழ்த்தாது அவனைக் கொன்று காலனுக்கு விருந்து வையுங்கள்" என்று கூறினார்.

இந்திரஜித்துக்கும் இலக்குமணருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. விண்ணில் வானவரும் முனிவர்களும் பிரமாதி தேவர்களும் அப்போரைக் காண்பாராயினர்.

இந்திரஜித்து வாயுப்படையை ஏவினான். இலட்சுமணர் தன்பாலிருந்த அக்னிப் படையை ஏவி அதனை அழித்தார்.

இந்திரஜித்து வருணாஸ்திரத்தை விட்டான், இலட்சுமணர் தம்மிடமிருந்த வருணாஸ்திரத்தால் அதனைத் துகளாக்கினார்.

இந்திரஜித்து சூரியாஸ்திரத்தை ஏவினான். இலட்சுமணரும் அப்படையினால் அப்படையை அழித்தார்.

இந்திரஜித்து பிரமாஸ்திரத்தை அபிமந்திரித்து ஏவினான். அப்படைக்கலம் அக்னி மழையைப் பொழிந்து கொண்டு வந்தது. தேவரும் மூவரும் இந்த அஸ்திரத்தால் உலகம் அழியுமே, இலட்சுமணர் பிழைக்கமாட்டாரே என்று வருந்தினார்கள்.

இலட்சுமணர் தன்பாலிருந்த மிகப் பெருமை வாய்ந்த பிரமாஸ்திரத்தை எடுத்து வில்லில் தொடுத்து, "நீ இந்திரஜித்தின் உயிரையும் ஏனைய உலகையும் அழிக்காதே. அவன் விட்ட படைக்கலத்தை மட்டும் அழிப்பாயாக" என்று கூறிப் பிரமாஸ்திரத்தை விழுங்கவிட்டு மீண்டது. இதைக் கண்ட வானவர் வாழ்த்தினர். இந்திரஜித்து திகைத்தான். இலட்சுமணரை மேலும் பகைத்தான். இலட்சுமணரைப் பார்த்து "ஏ, வீரனே ! இப்போது நான் விடுகின்ற கணையால் மாண்டொழிவாய், நிச்சயமாகத் தப்பிக்கவே முடியாது" என்று கூறி மிகச் சிறந்த நாராயணாஸ்திரத்தை ஏவினான். அதைக் கண்ட தேவர்கள் நாராயணாஸ்திரம் இளைய பெருமாளைக் கொல்லுமே என்று வருந்தினார்கள்.

## இராமர் விபீஷணரை வியந்து பாராட்டல்

இராமர் இலட்சுமணரைப் பார்த்து "ஆண்களின் திலகமே ! இந்த வெற்றிக்குக் காரணம் நீயும் அல்லன், அநுமனும் அல்லன், தெய்வமும் அல்ல, விபீஷணனே ஆவான்" என்று கூறினார்.

எல்லாரும் இன்ப சாகரத்தில் அழுந்தினாரகள்.

இராவணனிடம் இந்திரஜித்து மாண்ட செய்தியைக் கூறினால், இவன் சோகமும் கோபமும் கொண்டு நம்மைக் கொல்லுவானே ? என்றெண்ணித் தூதர்கள் அஞ்சினார்கள். பணி செய்கின்ற தேவர்களும் அரக்கர்களும் மூலை முடுக்குகளில் ஒளிந்து கொண்டார்கள்.

ஓர் ஒற்றன் சென்று இராவணனை வணங்கி மொழி பதற கைகால்கள் நடுங்க. "அரக்கர் குல வேந்தே ! இளைய வேந்தராகிய இந்திரஜித்து மாண்டார்" என்று கூறினான். அதைக் கேட்ட் சோகமும் கோபமும் பொங்கி அவனை வாளால் வெட்டி விட்டான். பின்னர் வாய்விட்டுப் புலம்பலானான்.

"என் அன்புச் செல்வமே ! எனக்கு முன் மாண்டனையே. அந்தோ ! உன் உயிரைப் பற்றுவதற்குக் கூற்றுவனுக்கு ஆற்றல் உண்டா ? உன் வலிமை மகாமேரு போன்றதாயிற்றே. நீ எனக்குச் செய்ய வேண்டிய நெருப்புக் கடன், நீர்க்கடன்களை நான் உனக்குச் செய்யுமாறு விதி விளைந்ததே."

"என் ஆருயிரே ! நீ இறந்ததை அறிந்து, தன் பகையழிந்தது என்று எண்ணி. இந்திரன் மகிழ்ந்திருப்பான். உன்னைக் கண்டு அஞ்சிய அமரர்கள் ஆனந்த வெள்ளத்தில் அழுந்தியிருப்பார்கள். கரத்தை முடிய கண்ணுதற் கடவுகளும், பாற்கடலிற் துயிலும் கள்வனாகிய திருமாலும் பகையொழிந்து உள்ளம் உவந்திருப்பாரகள். நீ போய் எனக்கு என்ன வாழ்வு உளது ?"

இராவணன் துன்பத்தால் துடித்து நிலத்தில் விழுவான், மீண்டும் எழுவான், தேம்பித் தேம்பி அழுவான். தலையில் அடித்துக் கொள்வான். கைகளைப்

பிசைவான், பிரும்முவான். பெருமூச்சு விடுவான். அவனுடை கண்களில் உதிர நீர் பெருகியது. பத்துத் தலைகளும் தனித்தனியே அழுது புலம்பின.

இவ்வாறு அழுத இராவணன் வெறி பிடித்தவன்போல் அங்குமிங்கும் ஓடினான். போர்க்களம் சென்று மகனுடைய உடம்பைத் தேடுவானாயினான். அசுரப் பிணங்களையும் யானைப் பிணங்களையும் புரட்டிப் புரட்டித் தேடினான். வில்லோடு அறுபட்டு வீழ்ந்திருக்கின்ற ஒரு கையைக் கண்டான். ஆறாத் துயரம் அடைந்தான். கையை எடுத்து மார்பிலும் தலையிலும் வைத்துக் கொண்டான். பெருந்துயரம் அடைந்தான். இந்திரஜித்தின் உடலை எடுத்துக் கொண்டுபோய் அரண்மனையில் பட்டு மெத்தையில் இட்டு ஓலம் இட்டான்.

## வண்டோதரி அழுதல்

இந்திரஜித்தைப் பத்து மாதஞ் சுமந்து பெற்ற வண்டோதரி, மகனுடைய உடலைக் கண்டு தலையிலும் மார்பிலும் கைகளால் அடித்துக் கொண்டு, "மகனே ! மகனே !" என்று புலம்பி அழுதாள்.

நெடுநேரம் உயிர்ப்படங்கி மூர்ச்சித்துக் கிடந்தாள். பின்னர் மயக்கந் தெளிந்தாள். "என் அருமை மகனே ! எங்களை இவ்வாறு ஏங்கவிட்டு நீ எங்குச் சென்றாய் ? நீ இளம் பருவத்தில் தண்டைச் சதங்கை ஒலிக்கத் தளர்நடையிட்டுச் சென்று இரு சிங்கக் குரளைகளைக் கொணர்ந்து, நம் அரண்மனை முன்னே நிறுத்தி அவற்றுக்குச் சினமூட்டி விளையாடிக் கைகொட்டி மகிழ்வாயே ! இந்தக் காட்சி இனி என்று, எங்கே காண்பேன் ? நாளைக்கு மன்னவருக்கும் இந்த நிலை தானே உண்டாகும் ?" என்று கூறிப் புலம்பி அழுதாள்.

இந்திரஜித்தின் மனைவியர் வந்து மாண்ட கணவன் மீது வீழ்ந்து புலம்பி அழுதார்கள்.

இந்த அவல நிலையைக் கண்ட இராவணனுக்குக் கோப வெளி மூண்டது. இத்தனைத் துன்பத்துக்கும் காரணம் சீதை தானே ? அவளை இப்பொழுதே வெட்டுவென் என்று கூறி இராவணன் வாளை உருவிக் கொண்டு சீதாதேவி இருக்கும் இடத்தை நாடி ஓடினான்.

உடனே மகோதரன் இராவணனைத் தடுத்துக் கூறுகின்றான்.

"இராவணேஸ்வரா ! பொறு, அவசரப்பட்டு அநியாயத்தைச் செய்யாதே. சீதை பெண். தவஞ் செய்கின்ற தபோதனி. நீ அவளைக் கொன்றால், சிவபெருமானும் திருமாலும் பிரமதேவனும், இராவணன் பெண்ணைக் கொன்ற பேதை என்று கைகொட்டிச் சிரிப்பார்கள். நீ புலத்தியல் குலத்தில் பிறந்த வீரப் பிரதாபன்."

"அன்றியும் மன்னவனே ! நாளை இராம, லட்சுமணரைக் கொன்றபின், சீதையை இழந்து விடுவாய். ஆதலால், சாந்தமடை வாயாக" என்று கூறி இராவணன் ஆறதலடையச் செய்தான்.

இந்திரஜித்து உடம்பை எண்ணெய்க் கொப்பரையில் இட்டார்கள்.

படைக்காட்சி



இராவணனுடைய கட்டளைப்படி ஆங்காங்கு இருந்த மூலபல சேனைகள் வந்து இலங்கையில் குவிந்தன. தூதுவர் இராவணனுக்குப் படைகளைக் காட்டி அறிவித்தார்கள். இவர்கள் சாகத் தீவினர், இவர்கள் குசைத் தீவினர், இவர்கள் ஆலகால நஞ்சினில் தோன்றிய இலவத் தீவினர். கடல்போல் பெருகிக் காட்சியளிக்கும் ஆயிரம் வெள்ளம் சேனைகளைக் கொண்ட இந்தப்

படையினர் கோபம் கொண்டால் தாயைக் கொன்று தின்பார்கள். பாவந்தோன்றிய காலத்தே பிறந்தவர்கள். எல்லாரும் மேருவைத் துகள் படுத்துவார்கள். கருங்கடலைக் குடிப்பார்கள். இவர்களால் ஆகாத செயல் ஒன்றும் கிடையாது என்று படைகளின் பெருமையைக் கூறினார்கள்.

அத்தனை பேரும் மாண்டொழிந்தார்கள் என்று அருகிலுள்ளவர்கள் கூறினார்கள்.

வன்னி இதனைக் கேட்டுத் துணுக்குற்றான்.

அப்போது மாலியவான், "அப்பா ! வன்னி ! நீ மனிதர்கள் என்றும், வாநரங்கள் என்றும் அலட்சியப்படுத்தானே ! அந்த இராமன் கடல் கடைந்த வாலியை ஓரம்பால் கொன்றவன். கர திரிசிர தூஷணாதியரை ஒரு நாழிகையில் கொன்றவன். ஒரு குரங்கு அசோகவனத்தை அழித்து, இலங்கையை எரியூட்டி, ஒரு சிறிய பொழுதில் சஞ்சீவி மலையைக் கொணர்ந்து இறந்தவரைப் பிழைப்பித்த பெருமையுடையது" என்றான்.

வன்னி, "வேந்தர் வேந்தே ! இத்தனைப் பேர் மாண்ட போது நீ ஏன் போருக்குப் போகவில்லை ?" என்று கேட்டான்.

இராவணன், "மனிதர்கள், குரங்குகள் மீது போருக்குப் போகக் கூசினேன்" என்று கூறினான். முதல் நாள் போரில் தோற்றதைக் கூறினானில்லை.

"நான் வாநர சேனைகளுடன் போர் செய்து கொன்று வருவேன். இன்றுடன் நமது போர் முற்றுப் பெறுவதாக" என்று கூறி வாநர சேனைகள் மீது போர் புரியப் புறப்பட்டான்.

## இராம - இராவண யுத்தம்



வன்னி முதலிய படைத்தலைவர்கள், "இரு மானிடர்களைக் கொல்லும் சிறிய செயலுக்கு நம்மை இராவணன் அனுப்பினானே ?" என்று நாணினார்கள். "எலியைக் கொல்லப் புலி போவதா ? பூனையைக் கொல்ல யானை போவதா ? வாழைநார் அறுக்க ஒரு ஜாம்பவானை அனுப்பியது போல, எறும்புகளைக் கொல்லப் பெரும் பலசாலியை அனுப்பியது போல, இருக்கிறது இச்செய்கை" என்று எண்ணி வெட்கத்துடனும் வீரத்துடனும் போர்க்களம் போனார்கள்.

கடல் திரண்டு வந்தது போல் தேர்ப்படைகளும் யானைப் படைகளும் குதிரைப் படைகளும், காலாட் படைகளும் திரண்டு, மேகம் இடிப்பது போல், கர்ஜனை செய்து கொண்டு அசுர சேனைகள் வருவதைக் கண்டு வாநரப்படையின் வீரர்கள் மதிகலங்கிக், கதிகலங்கி மூலைக்கொருவராக ஓடினார்கள். சிலர் சேது வழியாக ஓடினார்கள். சேது வழியில்லாமையால் தண்ணீரில் நீந்தி சிலர் சென்றார்கள். "அம்மம்மா, இந்த அசுர சேனைகளை அழிக்க ஆயிரம் இராமர்களாலும் ஆயிரம் இலட்சுமணர்களாலும் ஆகாது. இந்த அசுர சேனை ஒருவேளை எல்லா உலகத்தையும் அழிக்கும். நமக்கு மனைவி மக்கள் இருக்கிறார்கள். இந்தப் போரில் நாம் இறந்தால் நம்முடைய

மனைவி மக்கள் வாடி வருந்தி, வேதனை அடைவார்கள்" என்று மனம் நடுங்கி ஓடினார்கள்.

அங்கதன், ஓடிய வாநரப் படைகளைத் தடுத்து, "வாநர வீரர்களே, அசுர சேனைகளைக் கண்டு நீங்கள் ஓடி ஒளியலாமா ? இராமச்சந்திர மூர்த்தியின் கோதண்டம் நமக்குத் துணை புரியும். நீங்கள் போருக்குத் திரும்பி வாருங்கள்" என்று அழைத்தான்.

வாநரங்கள் அங்கதனை நோக்கி, "அங்கதா உனக்கு கண்ணில்லையா ? இந்த அசுர சேனைகள் ஒரு நொடிக்குள் இந்த உலகத்தை அழிக்கும் பேராற்றல் படைத்தவை. "

"இந்திரஜித்தினால் நாம் பட்ட துயரம் போதாதா ? இந்த அசுர வீரர்கள் இந்திரஜித்தைவிடப் பேராற்றல் படைத்தவர்கள். இவர்கள் எமனையும் கொல்லும் வலிமையுடையவர்கள். இவர்களுடன் போர் புரிய இராமராலும், இலட்சுமணராலும் முடியாது. அநுமாராலும் முடியாது. நாம் உயிர் வாழ்வதற்கு மலைகளிலும் வனங்களிலும் காய்கனிகள் இருக்கின்றன. ஒளிந்து வாழ்வதற்குக் குகைகளும் இருக்கின்றன. இந்த வையகத்தை இராமர் ஆண்டால் என்ன ? இராவணன் ஆண்டால் என்ன ?" என்று கூறினார்கள்.

கை நடுங்கி, மெய்நடுங்கி, உள்ளம் ஒடுங்கி, உரை நடுங்கிச் சொல்லிய வாநரங்களின் சொற்களைக் கேட்டு அங்கதன் புன்னகை பூத்தான். ஒரு புறம் நாணத்தால் நிலத்தை நோக்கி நின்றிருந்த ஜாம்பவானைப் பார்த்து, "மதிநலம் படைத்த மாவீரனே ! நீங்கள் இப்படி அசுர சேனைகளுக்கு அஞ்சலாமா ? நம்மை ஆள வந்திருக்கின்றவரை மனிதன் என்று எண்ணலாமா ? பரம்பொருளே மனிதனாக வந்திருக்கின்றது அல்லவா ? இராமர் ஒருவரே இத்தனைப் பேரையும் அழித்துக் கொல்லுவார். நீங்கள் அஞ்ச வேண்டாம். அச்சத்தால் துஞ்ச வேண்டாம். அஞ்சாமல் இருங்கள்" என்று கூறித் தேற்றினார்.

இராமரைவிட்டு அகலாமல், ஓடாமல், விடாமல் இருந்தவர்கள் சுக்ரீவன், அநுமார், அங்கதன் என்று மூவரேயாவர்.

விபீஷணர் இராமரை நோக்கி கூறுகின்றார். "எம் பெருமானே ! இந்த படைகள் மூலபலப் படைகள் ஆகும். எட்டுத் திசைகளிலும் நவகண்டத்திலும் பாதலத்திலும் இருந்த இராவணனுடைய சேனைகளாகும். இப்படை வீரர்கள் உலகத்தை வெல்லும் பேராற்றல் படைத்தவர்கள். விதி கிழிந்து தேவரீரை எதிர்க்க வந்துள்ளார்கள்" என்று கூறினார்.

இராமர் தம்பியை நோக்கி, "நான் மூலபலச் சேனைகளை அழிப்பேன. நீ வாநர சேனைகளுக்குத் துணையாக இரு. விபீஷணனைப் பாதுகாத்துக் கொள்" என்று பணித்தருளிக் கோதண்டத்துடன் தன்னந்தனியே மூலபலச் சேனைகளுடன் போர் புரிவாராயினர்.

வானுலகில் இந்திராதி தேவர்களும் பிரமாதி அமரர்களும் போர்த்திறத்தைப் பார்த்து இராமருடைய தனிமை கண்டு இறக்கம் எய்தினார்கள். ஆயிரம் வெள்ளம் சேனைகளையும் இரகுவீரன் ஒரு வில்லோடு, தரையில் நின்று போர் புரிந்து அழிப்பது என்பது சிந்தனைக்கு எட்டாத செயலாகும். இராமச்சந்திர மூர்த்தி தருமகுண சீலனாகும். அரக்கர்கள் அதர்மத்தின் வடிவங்கள். அதர்மம் மலைபோல் இருந்தாலும் அறமே வெல்லும், மறம் தோற்கும். கோதண்டம் வெற்றி அடைக என்று வாழ்தினார்கள்.

வானுலகில் இருந்த மகா புனிதமுடைய முனிவர்கள் இராம பிரானுக்கு வெற்றி உண்டாவதாகுக என்று வேத மந்திரங்களைக் கூறி வாழ்த்தியருளினார்கள்.

இராமர் வில்லை வளைத்து நாணோசையை உண்டாக்கி வீர மூர்த்தியாக அரக்கர் முன்னே நின்றார். இராமருடைய தோற்றத்தைக் கண்டு அரக்கர்கள், "இச்சிறுவனா நம்மைக் கொல்லப் போகிறான் ? மலையைச் சிறு ஊசியினால் பெயர்த்து எடுக்க முடியுமா ?" என்று கூறி ஆயிரம் ஆயிரம் பாணங்களை இராமர் மீது எறிந்தார்கள்.

இராமர் எடுக்கும்போது ஒன்று, வில்லில் தொடுக்கும் போது ஆயிரம், நடக்கும் போது இலட்சம், தாக்கும் போது கோடி எனப் பெருகும் பாணங்களை அபி மந்திரித்து ஆயிரம் ஆயிரங் கோடியாக அரக்கர் மேல் விடுத்தார். மழைபோல் பொழிகின்ற அஸ்திரங்களால், யானைப் படைகளும், குதிரைப் படைகளும், தரைப்படைகளும் தேர்ப்படைகளும் தலையறுந்து நிலத்தில் உருண்டு மாய்ந்தன. இராமர் சக்கரம் போல் சுழன்று திருவடி

நிலத்தில் படாமல் தாவித் தாவிப் பாண மழையைச் சொரிந்தார். ஒவ்வோர் அரக்கன் முன்னும் இராமர் நின்று போர் புரிந்தார். ஒவ்வொருவரும் இராமன் என் எதிரில் நிற்கின்றார், என் எதிரில் நிற்கின்றார் என்று கண்ட இடங்களில் எல்லாம் இராமரைக் கண்டார்கள். இராமர் போர்க்களத்தில் பல கோடி இராமர்களாகக் காட்சியளித்தார்.

ஆயிரம் ஆயிரம் அசுர வீரர்கள் அணி வகுத்து நின்றார்கள். ஆயிரம் வீரர்களுக்கு அப்பால் நிற்கும் ஒரு வீரன், முன்னே நிற்கும் வீரனைக் கண்டு, சற்றே விலகு, சற்றே விலகு என்று கூறுவான். முன்னிற்கின்றவன், நான் என்ன வளையலா அணிந்திருக்கின்றேன் ? என்று கூற, விலகாமல் முன்னிற்கும் வீரர் தலையையும், விலகு என்று கூறிய வீரனின் தலையையும் இடையேயுள்ள வீரர்களின் தலைகளையும் இராமபாணம் அறுத்துத் தள்ளும்.

ஆயிரம் தாமரை இதழ்களில் ஒரு வைர ஊசி நுழைவது போல், இராமபாணம் ஒய்வு பெறாமல் அசுரர்களை வதைத்தது. உதிர நதிகள் பெருகி ஓடின.

யானைப் பிணங்களும் குதிரைப் பிணங்களும் அசுரப் பிணங்களும் மலைபோல் குவிந்தன. இராமருடைய வீரச் செயலைக் கண்டு பகைவர்களும் வியப்படைந்தார்கள். வானுலகில் தேவர்கள் இதனைக் கண்டு களிப்புற்றார்கள்.

இராமருடைய கோதண்டத்தில் பதினாறு தங்க மணிகளும், பதினாறு நீளம் குறைந்த கவந்த மணிகளும் தொங்க விட்டிருந்தன. ஆயிரம் யானைகள், பதினாயிரம் தேர் ஒரு கோடி குதிரைகள், ஆயிரம் சேனை வீரர்கள் ஆகியன இறந்தால் இராமருடைய வில்லில் உள்ள கவந்த மணி ஒரு முறை ஒலிக்கும். அந்தக் கவந்த மணி ஆயிரம் முறை ஒலித்தால் பெரிய தங்கமணி கணீரென்று ஒலிக்கும். இப்பொழுது இராமருடைய கோதண்டத்தில் உள்ள முப்பத்திரண்டு மணிகளும் இடையறாது ஏழரை நாழிகை ஒலித்து முழங்கின என்றால், அசுர சேனைகள் இறந்த எண்ணிக்கையை யாரால் இயம்ப முடியும் ? இராமருடைய தெய்விகச் செய்கையை இந்த மூலபலப் போரினால் தெளிக.

ஆனை யாயிரம் தேர்பதி னாயிரம்
அடல்பரி ஒருகோடி
சேனை காவலர் ஆயிரம் பேர்படின்
கவந்தமொன் றெழுந்தாடும்
கான மாயிரம் கவந்தம்நின் றாடிடின்
கவின்மணி கணில் என்னும்

ஏனை யம்மணி ஏாரை நாழிகை
ஆடியது இனிது அன்றே

இவ்வாறு, இராமச்சந்திர மூர்த்தி மூலபலச் சேனைகளை வதைத்துவிட்டு, வாகை மாலை சூடி வாநரங்கள் இருக்குமிடத்தை அடைந்தார்.

## வேலேற்ற வீரம்

இராவணன் வாநர வீரரைக் கொல்லும் பொருட்டு, ஆதித்தனைப் போல் ஒளிச் செய்யும் தேர்மீதேறித் தேவர்களை வென்ற வில்லும், அம்பறாத் தூணியும் தாங்கியவனாய், நூறு கோடித் தேர்களும் பத்துக் கோடி யானைகளும், இருநூறு கோடி குதிரைகளும் இவற்றின் இரட்டியான காலாட் படைகளும் புடைசூழப் போர்க்களம் வந்தான்.

வாநர வீரர்களும், அசுர வீரர்களும் அஞ்சாமல் எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர். இராவணன் இலட்சமணரை எதிர்த்துச் சீற்றத்துடன் போர் புரிந்தான். இராவணன், இவனைச் சாமான்யமான அஸ்திரங்களால் கொல்ல முடியாது என்று கருதித் தெய்வப் படைக்கலன்களை எடுத்து வில்லில் தொடுத்துப் போர்புரிந்தான்.

பின்னர் சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட மோகாஸ்திரத்தை இளையவர் மீது பிரயோகம் செய்தான். அப்பொழுது, விபீஷணர்மீது பெரும் சீற்றம் கொண்டான். விபீஷணரைக் கொல்ல வேண்டும் என்று கருதிப் பிரமதேவர் வேள்வியில் உண்டாக்கியதும், வண்டோதரியின் தந்தையாகிய மயன், வண்டோதரிக்குத் திருமண விழாவில் தந்ததும், யாரை நோக்கி விட்டாலும் அவரைக் கொன்றே மீள்வதுமாகிய வச்சிராயுதத்தையும் சூலாயுதத்தையும் நிகர்த்த வேலாயுதத்தை விபீஷணர் மேல் ஏவினான்.

இதனால் இன்று என் உயிர் அழியும் என்று விபீஷணர் அந்த வேலுக்கு முன் ஏவினார். இலட்சுமணர் ஏவிய பாணங்கள் அத்தனையும் வேலினால் துகள் பட்டொழிந்தன. அடைக்கலம் புகுந்த விபீஷணரைக் காக்கும் பொருட்டு அவரைத் தள்ளிக் கொண்டு இலட்சுமணர் முந்தினார். இலட்சுமணருக்கு முன்னே அங்கதன் வந்து நின்றான். அங்கதனைத் தள்ளிக் கொண்டு சுக்ரீவன் நின்றான். சுக்ரீவனைப் பிந்த வைத்து ஆஞ்ச நேயர் முந்தினார். முடிவில் ஆஞ்சநேயரைத் தள்ளிக் கொண்டு இலட்சுமணர் முந்தினார். வேல் இலட்சுமணருடைய மார்பில் பட்டு அவருடைய உயிரைப்

பருகி கொண்டு சென்றது. இலட்சுமணர் நிலத்தில் வீழ்ந்து மாய்ந்தார். விபீஷணர் பெரிதும் சோகமும் கோபமும் அடைந்து இராவணனுடைய தேரையும் தேர்க்குதிரைகளையும் அழித்தார். இராவணன் இத்துடன் போர் முடிந்தது என்று கருதித் தன் அரண்மனை சேர்ந்தான்.

இலட்சுமணருடைய மரணத்தைக் கண்டு விபீஷணர் பெரிதும் துயரமடைந்தார். "அந்தோ அந்தோ" என்று கதறிப் பதறி அழுதார். அப்பொழுது ஜாம்பவான் அநுமார் மீது இருந்த அம்புகளை அகற்றி, மருந்து கொண்டுவந்து இலட்சுமணரை உயிர்ப்பிக்க வேண்டும் என்று கூறினார்.

ஆஞ்ச நேயர் மனோவேகமாகச் சென்று மருந்து கொண்டு வந்து, இலட்சுமணரைப் பிழைப்பித்தார். உயிர்த்தெழுந்த இலட்சுமணர், "விபீஷணர் நலமா ?" என்று கேட்டார். அநுமாரைத் தழுவி அகமகிழ்ந்தார். எல்லாரும் இராமரை அணுகினார்கள். விபீஷணரைக் காக்கும் பொருட்டு இலட்சுமணர் உயிர்த்தியாகம் செய்த புனிதமான அருட்செயலை எண்ணி இராமர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்.

"அடைக்கலம் புகுந்த அற்பப் புறாவுக்காகத் தன்னுடலை அறுத்துக் கொடுத்துக் துலையில் ஏறிய சிபிச் சக்ரவர்த்தியும் என் தம்பிக்கு நிகராகமாட்டான். இலட்சுமணருடைய கீர்த்தி இமயமலையைப் போல ஓங்கி நிற்கும்" என்று கூறி மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

இராமர் இலட்சுமணருடன் வில்லையும் அம்பறாத் தூணியையும் அநுமாரிடம் கொடுத்துப் போர் செய்த அயர்ச்சி நீங்க இளைப்பாறிக் கொண்டிருந்தார்.

வாநரர்கள் மூல பலச்சேனைகள் அழிந்திருந்ததைக் கண்டு, இராமருடைய வீரத்தை வியந்து பரவசமடைந்தார்கள். இராமரைத் துதித்து, மதித்துப் போற்றினார்கள்.

இராவணன், இலட்சுமணரைக் கொன்று விட்டோமென்று கருதிப் பெருங்களிப்பை அடைந்து, தன் ஏவலர்களை அழைத்து, "மூலபலச் சேனையினால் இராமன் மாண்டிருப்பான். இலட்சுமணனை நான் கொன்றுவிட்டேன். போர் முடிந்தது. என் பொருட்டுப் போர்புரிந்த சேனைத்

தலைவர்களுக்கு விருந்து செய்யவேண்டும். ஆகவே, விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கட்டளையிட்டான்.

ஆயிரம் ஆயிரம் அண்டாக்களில் சுவையான அன்னங்களும், பட்சணங்களும் குடிநீர் வகைகளும், தாம்பூலம் சந்தனம் முதலிய வாசனைப் பொருட்களும் மிகுதியாகச், சேகரித்து நிரப்பினார்கள். ஆடலும் பாடலும் நிகழ்ந்தன.

தூதர்கள் இராவணனை அணுகி, "இங்கு விருந்திற்கு ஏற்பாடு செய்கின்றாயே. உன்பால் யார் உளர் ? இராமன் ஒருவனே மூலபலச் சேனை முழுவதையும் ஏழரை நாழிகையில் அழித்துவிட்டான். அத்தனைப்பேரும் மாண்டொழிந்தார்கள். இந்த உணவை மாண்டு போனவர்களுக்குப் பிண்டம் போட வைத்துக் கொள்" என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட இராவணன் இறும்புது எய்தினான். "ஒரு தனி மனிதன் மூலபலச் சேனைகளைக் கொன்றானா ? இது நம்பக் கூடியதா ? அப்படியிருப்பினும் நான் இலட்சுமணனைக் கொன்றுவிட்டேன். தம்பியின் மரணத்தைக் கண்டு இராமன் உயிர் தாங்கமாட்டான், மாண்டொழிவான். ஆதலால், வெற்றி எனக்குத்தான்" என்று கூறி மகிழ்ந்தான்.

மற்றொரு தூதன் வந்து, இராவணனை வணங்கி, "அரசே ! அநுமன் கொண்டு வந்த சஞ்சீவ மருந்தால் இலட்சுமணன் பிழைத்துக் கொண்டான்" என்று கூறினான்.

இதனைக் கேட்ட இராவணன் அதிர்ச்சி அடைந்தான். கோபுரத்தின் மீதேறி, மூலபலச் சேனைகள் மாண்டிருப்பதைக் கண்டு அதிசயமும் கோபமும் துயரமும் அடைந்தான்.

செய்வது என்ன என்று தெரியாமல் திகைத்தான். மந்திரா லோசனை மண்டபத்தையடைந்தான். அப்பொழுது அவனுடைய சிறிய பாட்டனாராகிய மாலியவான் வந்து இராவணனைக் கண்டு, "அசுர குல வேந்தனே ! இப்போதாவது விபீஷணன் கூறிய அறிவுரையை நினைக்கின்றாயா ? ஆயிரம் வெள்ளம் சேனைகளையும் இராமன் ஒருவனே கொன்றானே என்று அதிசயம் அடைகின்றாயே. சர்வ சம்ஹார காலத்தில் சிவபெருமான் ஒருவரே அகில உலகங்களையும் அழித்தார் என்று நீ கேட்டதில்லையா ? நாராயணரே



இராமராக வந்து அவதரித்தார். தெய்வம் சீறினால் வையம் வாழுமா ? இனியாவது மறச்செயலை மறந்து, அறச்செயலை மேற்கொள்வாயாக" என்று கூறினார்.

மாலியவானின் பேச்சை மதித்தானில்லை இராவணன். கோபம் கொண்டு சீறினான்.

## தேரேறுதல்

இராவணன் மகோதரனை அழைத்து இலங்கையில் மாண்டவர்கள் போக எஞ்சியிருக்கின்ற அசுர சேனைகளைப் போருக்குப் புறப்படுமாறு பறையறிவிக்கும்படிக் கட்டளையிட்டான். அதன் படி பறையறைய நால்வகைச் சேனைகளும் போருக்குப் புறப்பட்டன. அதனால், நீர் வற்றிய கடல் போல் இலங்கை வெறுமையாகியது.

இராவணன் நீராடிச் சிவபூஜை செய்தான். கருவூலத்தில் இருந்த பொன்மணி, ஆடை முதலிய விலையுயர்ந்த பொருள்களைத் தக்கவர்க்குத் தானம் செய்தான். பிரமதேவன் யாகம் செய்து படைத்ததும், இந்திரன் தந்ததுமான இரத்தின கவசம் அணிந்து, அம்பறாத் தோணியைத் தோளில் கட்டி, மேருகிரியைப் போன்ற வில்லை ஏந்திக் கொண்டு தேரில் ஏறினான். அந்தத் தேர் பொன்னும் மணியும் இழைத்து, இளஞ் சூரியனைப் போல் ஒளி செய்தது. அதில் பூட்டிய குதிரைகள் ஆற்றலும் அழகும் உடையனவாய்க் காற்றைவிட வேகமாகச் செல்லும் தன்மையுடையவை. அத்தேரில் வாள், வேல், தண்டு, தோமரம் முதலிய ஆயுதங்கள் நிறைந்திருந்தன. இராவணன் அத்தேருக்கு மலர்களை அர்ச்சித்துக் களப கஸ்தூரி தெளித்து வழிபாடு செய்தான். அவனுடைய பத்துத் தலைகளிலும் நாக ரத்தினங்கள் இழைத்த மணி மகுடங்கள் அழகு செய்தன.

இராவணன், கணவனை இழந்து சீதை வயிற்றில் எற்றிக்கொண்டு அழ வேண்டும். அது இல்லையென்றால், அதனை வண்டோதரி செய்ய வேண்டும். இரண்டில் ஒன்று நடைபெற வேண்டும். என்று சூளரை பகர்ந்து சிங்கக்குரளைபோல் தேர்மீது ஏறிப் போர்க்களத்தை அடைந்தான்.

அவனுடைய வீரப் பிரதாபங்களைக் கண்டு, தேவர்கள், இன்று என்ன நிகழுமோ என்று எண்ணிக் கலங்கினார்கள்.

இராவணனுடைய உக்கிரமான வருகையைக்கண்டு வாநர வீரர்கள் நடுங்கி ஒடுங்கினார்கள். இராமச்சந்திர மூர்த்தி கருணையுடன் வாநர வீரர்களைப் பார்த்து, "நீங்கள் அஞ்சாதிருங்கள். இன்று இராவணவதம் நிகழும், இன்று உங்கள் துயரம் தீரும்" என்று அபய வசனம் கூறிப் போர்க்கோலம் புனைந்து புறப்பட்டார்.

வானத்தில் தேவர்கள் குழுவுக்கு நடுவே விளங்கும் சிவபெருமான், "தேவர்களே ! இராவணன் இன்று மாள்வான். உங்கள் பெருங்கவலை நீங்கும். இராம பிரானுக்கு இந்திரனுடைய நிகரில்லாத தேரை அனுப்புங்கள்" என்று பணித்தருளினார்.

இந்திரன் தன்னுடைய சுந்தரத் தேரைக் கொண்டு போகும் படித் தேர்ப்பாகனாகிய மாதலிக்குக் கட்டளையிட்டான். மிக்கவலிவும், பொலிவும் பொருந்திய இந்திர ரதம் இராமர் முன் வந்து நின்றது. இராமபிரான் அத்தேரைக் கண்டு, "இது அசுர மாயையோ ?" என்று ஐயுற்றார். அப்பொழுது விபீஷணரும் அருகில் இருந்த தேரை உற்று நோக்கினார். மாதலி இராமபிரானைத் தொழுது, "கருணைக் கடலே ! நற்குணக் குன்றமே ! உன் திருவடிக்கு வணக்கம் தேர்மீது நின்று போர் புரியும்போது, தேவரீர் பார்மீது நின்று போர் புரிவது நன்றன்று. பிரமதேவனும் கண்ணுதற் கடவுளும் கட்டளையிட, மாதலி என்னும் நான் இந்திர பகவானுடைய தேரைக் கொண்டு வந்திருக்கின்றேன். தேரின் மீது ஆரோகணித்துப் போர்புரிவீர்" என்று பணிவன்புடன் கூறினான். இப்பொழுது இந்திரன் தேரில் பூட்டப்பட்டிருந்த வேகமும் வலிமையும் நிறைந்த குதிரைகள் வேத மந்திரங்களைக் கூறின. இராமர், மகிழ்ந்து தேரின்மீது ஏறி அமர்ந்தார். அந்த விசாலமான தேர் இராவணனுக்கு முன் சென்றது.

## மகோதரன் மாய்தல்

இராவணனுடைய முதலமைச்சனாகிய மகோதரன் இராம பிரானை எதிர்த்துக் கடுங்கணைகளைச் சொரிந்து போர் புரிந்தான். இராம பிரான் அம்பு மழை பொழிந்து, அவனுடன் வந்த நாலுவகைச் சேனைகளையும் அழித்தார். மகோதரன் இப்போது தனியே நின்றான். இராமபிரான் இராம சரங்களைத் தொடுத்து அவன் தலையை அறுத்து வீழ்த்தினார். மகோதரன் மாண்டொழிந்தான்.

மகோதரனுடைய மரணத்தைக் கண்டு இராவணன் மிகவும் கொதித்தான். தன் தேரைச் செலுத்திக் கொண்டு இராமருக்கு முன்னே வந்து நின்றான். இராம பிரான் புன்னகை புத்துக் கரவேகத்தாலும் சரவேகத்தாலும் பாண மழை பொழிந்து இராவணனைச் சூழ்ந்து வந்த அத்தனைச் சேனைகளையும் அழித்து ஒழித்தார். இப்பொழுது இராவணனுக்குப் பல துன் நிமித்தங்கள் உண்டாயின். இடக்கண்ணும் இடத் தோள்களும் துடித்தன. அவன் மார்பில் இருந்த மாலைகள் கரிந்து பிண நாற்றம் வீசின. உதிர மழை பொழிந்தது. அதனை இராவணன் பொருட்படுத்தவில்லை. இராவணன், "இந்த அற்ப மனிதனா என்னை வெல்லப் போகிறான் ? நான் வெள்ளி மலையை அள்ளி எடுத்தவன். திசை யானைகளை வென்றவன். இப்பொழுதே இவனை அழிப்பேன்" என்று எண்ணினான்.

இராவணன் பெரிதும் சீற்றம் கொண்டு "இராமனாகிய அற்பப் புழுவைத் தேரோடு விண்ணிலே வீசி எறிந்து கொல்வேன் !" என்று கர்ஜனை புரிந்தான். இராமருடைய வில்லோசையும், இராவணனுடைய வில்லோசையும் ஆயிரம் இடிபோல் முழங்கி எட்டுத் திசைகளும் செவிடுபடும்படிச் செய்தன.

## மனச்சிறை

இராவணன் எண்ணற்ற அம்புகளை மழைபோல் சொரிந்தான். அந்தப் பாணங்கள் விண்ணையும் மண்ணையும் மறைத்தன. இராமரையும் மறைத்தன. அது கண்டு வானவர்கள் அஞ்சினார்கள். வாநரங்கள் பயந்தன. இராவணனடைய தேர் விண்ணிலேயும், மேருமலை மீதும், உதயகிரி மீதும், அஸ்தகிரி மீதும், சுழன்று சாரி செய்தன. அவன் தேர் சென்ற இடமெல்லாம் மாதலி தன் தேரைச் செலுத்தி, அவனை நடுங்குமாறு செய்தான். இராவணன் அர்த்த சந்திர பாணத்தை ஏவி, இந்திரத் தேரில் இருந்த இடிக்கொடியை அறுத்துத் தள்ளி ஆரவாரம் புரிந்தான். இதைக் கண்டு கருடபகவான் இராமருடைய கொடியாக நின்றார். இராமபிரான் கூரிய அம்பைத் தொடுத்து இராவணனுடைய தேரில் இருந்த வீணைக்கொடியைத் துணித்து வீழ்த்தினார்.

இராவணன் மிகச் சிறந்த தாமதப் படையை ஏவினான். அப்படை பல்வேறு முகங்களுடன் புயல், மழை, நெருப்பு இவைகளைச் சிந்திக் கொண்டு இராமரை நோக்கிச் சென்றது. இராமர். சிவாஸ்திரம் ஏவித் தாமதப் படையை அழித்தார்.

இராவணன் மிகக் கொடிய அசுராஸ்திரத்தைத் செலுத்தினான். அது கோடிக்கணக்கான அம்புகளாகப் பிரிந்து நெருப்பு மழையைச் சிந்திக் கொண்டு இராமர் மீது சென்றது. இராமர் அக்னிப் படையால் நொடிப்பொழுதில் அழித்தார். இராவணன் தன் மாமனாகிய மயன் தந்த மயாஸ்திரத்தை இராமர் மீது ஏவினான். இராமர் காந்தர்வக் கணையால் அதனைப் பொடிப்படுத்தினார்.

இராவணன், "இனி இந்த இராமனை மிகச் சிறந்த ஆயுதத்தால் கொல்லுவேன்" என்று கூறி மாயாஸ்திரத்தை எடுத்து, அதனை மந்திர புஷ்பங்களால் அர்ச்சித்துத் தூபதீபம் காட்டிச் சிவபெருமானை வழிபட்டு இராமர் மீது ஏவினான். அந்த அஸ்திரம், மாண்ட கும்பகருணன், இந்திரஜித்தன், அதிகாயன், மகரக்கண்ணன், மூலபலச் சேனைகள் எல்லாம் எழுந்து ஆரவாரம் செய்வதுபோல் தோன்றி, உலகத்தை நடுங்க வைத்தது. இதனைக் கண்டு வாநரங்களும் வானவர்களும் திகைப்புற்று அஞ்சினார்கள். எம்பெருமான் அந்த மாயச் செயலைக் கண்டு நகைத்து, ஞானாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தார். இருளை ஒளி விழுங்குவது போல் மாயாஸ்திரத்தை ஞானாஸ்திரம் தொலையும்படிச் செய்தது.

பின்னர், இராவணன் மிகப் பெரிய வரபலமுடைய சூலாயுதத்தை இராமர் மீது ஏவினான். அது இடிபோல் ஒலித்துக் கொண்டு இராமரைக் கொல்ல வந்தது. இராமர் அச்சூலத்தின் மேல் பலப்பல கணைகளை ஏவினானர். அக்கணைகள் சூலத்தில் பட்டுப் பொடியாக உதிர்ந்தன. இராமருடைய பாணங்கள் அச்சூலத்தை அழிக்க முடியாது அமிந்தன. சூலம் இராமருடைய மார்புக்கு நேராக வந்தது. விண்ணுலகில் இப்போரைப் பார்த்துக் கொண்டிருந்த தேவர் யாவரும் இனி இராமர் பிழைக்க மாட்டார் என்று கலங்கி மயங்கினார்கள். தரும சொரூபியாகிய இராமர் ..ம்.... என்ற ஓங்கார ஓசையால் உரப்பினார். அந்த ஓங்காரத்தால் சூலாயுதம் பொடிப் பொடியாகத் துகள் பட்டு ஒழிந்தது. இதைக் கண்ட இராவணன் அதிசயமும் அச்சமும் அடைந்தான்.

"இவன் சிவபெருமானோ ? சிவபெருமானானால் மூன்று கண்களும் பவள மேனியும் இருக்க வேண்டுமே ! இவன் இரண்டு கண்களையுடையவனாகியும் நீலமேகம் போன்ற நிறமுடையவனாகவும் இருக்கின்றான். இவன் சிவன் அல்லன்."

"இவன் பிரமதேவனோ ? இவன் பிரமதேவனாக இருந்தால் நான்கு முகங்களும் எட்டுக் கண்களும் இருக்க வேண்டுமே ? ஆதலால், இவன் பிரமதேவனுமல்லன்."

"இவன் திருமாலோ ? அவன் திருமாலாக இருப்பானாயின் சங்கு சக்கரம் இருக்க வேண்டுமே ? ஆதலால், இவன் திருமாலும் அல்லன்."

"இவன் தவமுனிவனோ ? என்னுடைய - நான் பலகாலும் முயன்று பெற்ற - வரங்கள் அனைத்தையும் இவன் அழித்து விட்டான். இவன் தவமுனிவனாக இருப்பானாயின், இந்த இளம் வயதில் இவ்வளவு தவ வலிமை பெற இயலாதே. அகில உலகத்தையும் அழிக்கவல்ல சூலாயுதத்தை வெறும் ஓங்காரத்தால் அழித்துவிட்டானே. ஆதலால்., இவன் வேத முதற் காரணனாகிய பரம்பொருளாக இருக்க வேண்டும். என் தம்பி விபீஷணன் இவனைப்பற்றி அன்று கூறிய வசனங்கள் உண்மைதான் என்பதை இப்போது உணர்கின்றேன்."

மேலும், இராவணன், "இவன் யாராக இருப்பினும் போர் செய்து வெல்லுவேன். புறங்கொடுத்துப் போக மாட்டேன்" என்று எண்ணி, இராமர்மீது நிருதிப் படையை ஏவினான். இராமர் கருடப் படையால் அதனை நிர்மூலம் செய்தார்.

இராமச்சந்திர மூர்த்தி ஒரு சிறந்த கணையை ஏவி இராவணனுடைய நடுத்தலையை அறுத்துத் தள்ளினார். இதைக் கண்டு தேவர்கள் மகிழ்ச்சியால் துள்ளினார்கள். அற்ற தலை நிலத்தில் விழுமுன் வேறுதலை முளைத்தது. இராமர் இராவணனுடைய சிரங்களையும் கரங்களையும் பலமுறை அறுத்துத் தள்ளினார். ஆனால், அவன் பெற்ற வரங்களால் சிரங்களும் கரங்களும் மீண்டும் மீண்டும் முளைத்துக் கொண்டேயிருந்தன. இராவணன் தன் அறுபட்ட கரத்தால் இராமருடைய தேர்ப்பாகனாகிய மாதலியை அடித்தான். அவன் மீது தோமரம் என்ற ஆயுதத்தையும் ஏவினான். அடிபட்ட மாதலி உதிரம் கக்கினான். இராமர் தோமரத்தைப் பஞ்சமுகப் படையால் அழித்தார். இராவணனுக்கு வீரமும் வலிமையும் குன்றின.

இராமர் எறிந்த பாணங்கள் அவன் அணிந்த கவசத்துக்குள் நுழைந்து உடலைத் துளைத்து உதிரம் பெருகுமாறு செய்தன. இராவணன் மூர்ச்சையடைந்தான். சாரதி அவன் தேரை வேறு பக்கம் திருப்பி அவனுக்கு உதவி செய்வான். அப்பொழுது மாதலி இராமரை நோக்கி, "பெருமானே இராவணன் மூர்ச்சை தெளிந்தால் அவனைக் கொல்வது அரிது. ஆதலால், அவனை இப்போதே கொல்லுதல் வேண்டும்" என்று கூறினான்.

இராமர், "பாகனே, மூர்ச்சையடைந்த பகைவனைக் கொல்வது பெரிய பாவம் ஆகும். அது வில்லறமாகாது. ஆதலால், அவன் மூர்ச்சை தெளிந்து, எழுந்த பின்னரே போர் செய்து கொல்ல வேண்டும். இதுதான் தரும நெறி" என்று கூறினார். இதைக் கேட்டு வானவர்கள் கரக்கம்பம் செய்து மகிழ்ந்தார்கள்.

இராவணன் மூர்ச்சை தெளிந்து பாகனைக் நோக்கிக் கோபித்து, "மூடனே ! தேரைத் திருப்பிப் போர்க்களத்தில் நான் புறங்காணுமாற செய்தனையே, இது என் வீரத்திற்கு இழுக்கல்லவா ? தேவர்கள் என்னைக் கண்டு பரிகசிப்பார்களே ? எனக்குப் பெரிய அவமானத்தைச் செய்தனையே ? வெகுமதி பெற வேண்டிய உன்னை, வெகுண்டு தண்டிக்குமாறு செய்தாயே. உன்னை உயிருடன் விட மாட்டேன்" என்று கூறி வாளினால் வெட்டப் போனான்.

தேர்ப்பாகன் இராவணனை வணங்கி, "வீரப் பெருந்தகையே, தாங்கள் வலிமை குன்றி மயங்கியதால் தங்களைக் காக்கும் கடமையுடைய நான் தேரை ஒரு பக்கம் திருப்பித் தங்களுக்கு உதவி செய்து என் கடமையைப் புரிந்தேன். இல்லையேல் தாங்கள் மாண்டிருப்பீர்கள்" என்றான்.

இராவணன் கோபந் தணிந்தான். இராமருக்கு முன்னே வந்து நின்று ஆலகால விஷம்போல் சீறிக் கோடிக்கணக்கான கணைகளை எறிந்தான். அணைகின்ற தீபம் அதிக சுடர்விட்டு எரிவது போல், அவன் கடும்போர் புரிந்தான். இராமர் அவனுடைய விற்களை அழித்தார். அவன் தண்டு, வாள், வேல் முதலிய அஸ்திரங்களை எறிந்தான். அத்தனையும் இராமர் அழித்துப் பிரமாஸ்திரத்தை எடுத்து மானசீக பூஜை செய்து இராவணன் மீது ஏவினார். அந்தத் தெய்வப் படை இராவணனுடைய மார்பில் புகுந்து அவனுடைய

உயிரைப் பருகி, வான கங்கையில் நீராடி, எம்பெருமானுடைய அம்பறாத் தூணியை வந்தடைந்தது. இராவணன் மாண்டான்.

இராமபாணம், இராவணனுடைய வாழ்நாளில் முக்கோடி ஆயுளையும், அவன் செய்த பெரும் தவத்தையும் முதல்வன் தந்த வரத்தையும், தோள் உரத்தையும் உண்டு, உயிரையும் உண்டு அவனை அழித்தது.

போர்க்களத்தில் வீழ்ந்த இராவணனுடைய முகங்கள் மூன்று மடங்கு அதிகமாகப் பொலிவுற்ற திகழ்ந்தன. அவனுடைய தோள்களும் கரங்களும் கோபமும் வீரமும் அடங்கி மடங்கி ஒடுங்கின.

இராமர் தேரை விட்டிறங்கி மாதலியை வாழ்த்தி, "மங்களம் உண்டாகுக" என்று கூறித் தேரினைக்கொண்டு போகும்படி விடையளித்தனுப்பினார். பின்னர், தம்பி முதலியவர் உடன் வர இராவணன் உடல் அருகில் சென்று அவனுடம்பைக் கருணைக் கண்களால் கண்டார். இராவணனுடைய முதுகில் இருந்த புண்களைக் கண்டு, "தம்பீ, விபீஷணா ! உன் தமையனுடைய முதுகில் புண்கள் இருக்கின்றனவே. முதுகில் புண்ணுள்ளவனைக் கொன்றது பழிக்கு இடமாயிற்றே. என் வீரம் குன்றியதே" என்று கூறி வருந்தினார்.

விபீஷணர், "அண்ணலே, என் தமையன் முதுகில் உள்ளவை வடுக்கள், புண்கள் அல்ல. என் அண்ணன் திக்விஜயம் செய்த போது திசை யானைகள் எட்டும் தந்தங்களால் என் அண்ணனைத் தாக்க அந்தத் தந்தங்களை அறுத்து அணிகலன்களாகக் கொண்டான். ஆதலால், இது புறப்புண் அன்று" என்று கூறினார்.

இராமர் சமாதானம் அடைந்தார்.

.

## விபீஷணர் சோகம்

விபீஷணர், உடன் பிறப்பென்ற பாசத்தால் நேசத்தால், உள்ளம் வருந்தி, மனமுருகிக் கண்ணீர்பெருகித் தமையன்மேல் வீழ்ந்து அழுவாராயினர். " அண்ணா ! நீ வீரவுலகம் சென்றனையோ ? பரமலோகத்தை அடைந்தனையோ ? திருக்கயிலாயத்தை அடைந்தனையோ ? அண்ணா,

நான் அன்று சொன்ன அறவுரைகளை இப்போது எண்ணிப் பார்க்கின்றீரோ ? என் அமுதான சொல் அன்று உனக்கு நஞ்சாக இருந்தது. உன்னால் தீண்டப்பட்ட வேதவதி நெருப்பிடை வீழ்ந்து உன் குலத்தை அழிக்கச் சீதையாகப் பிறந்தாள். அவளைச் சிறை வைக்காதே என்று இடித்து கூறினேனே. என் சொல்லை நீர் கேட்டீரில்லை. நஞ்சு உண்டவரைத் தான் கொல்லும், கண்டாரைக் கொல்லாது. ஆனால், சீதையாகிய நஞ்சு கண்ணால் கண்ட உன்னைக் கொன்று விட்டது. பிறர் மனை விழைவது பெரும்பாவம் ஆயிற்றே. பெருந்தவம் செய்து பெற்ற செல்வங்கள் அத்தனையும் பெண்ணாசையால் தொலைத்து விட்டாயே ! கள் உண்டாரை மயக்கும், காமம் கண்டாரையும் தொட்டாரையும் மயக்கும் வலிமையுடையது. உன்னால் அசுரகுலமே அழிந்துவிட்டது. இலங்கை அசுரர்கள் இன்றி வெறுமை ஆகிவிட்டதே. "

"சூர்ப்பணகை, அவள் கணவனை நீ கொன்றதை மனதில் உட்பகையாகக் கொண்டு, சீதையின் அழகை உன்னிடம் சொல்லிக் குலத்தோடு உன்னையழித்துப் பழி தீர்த்துக் கொண்டாள். நாத்தியால் - நாத்தியால் இங்குக் குலம் அடியோடு அழிந்துவிட்டது. இனி எப்பிறப்பில் காணப் போகிறேன்." என்று கூறிப் புலம்பி அழுதார், பின்னும் விபீஷணர், "அண்ணா ! வீரர்களைத் தழுவிய நீர், பார்மகளைத் தழுவிப் பரிதாபமாக இறந்த கிடக்கின்றீரே. உம்முடைய அவல நிலையைக் கண்டு கவலையடைகின்றேன் " என்றார்.

ஜாம்பவான் விபீஷணரைக் கண்டு அவருடைய கண்ணீரைத் துடைத்து, "மதிநலம் படைத்த மாமன்னரே, இவ்வாறு நீர் புலம்புவது அறிவுடைமையாகாது. விதியை வென்றவர் யார் ? இராவணனுடைய விதி அவனை வேரோடு அழியச் செய்து விளையாடியது. அண்ணனுக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன், நெருப்புக்கடன்களைச் செய்வாயாக " என்று தேற்றினார்.

## மண்டோதரி மரணம்

இராவணனுடைய இல்லக் கிழத்தியும் சிவமூர்த்தியை வழிபடுபவளும், நல்லறம் பயின்றவளும், மயன் மகளுமாகிய வண்டோதரி, மாண்டுகிடந்த கணவனைப் பார்க்கப் புறப்பட்டு வந்தாள். அவளுடன் இராவணனுடைய

ஏனைய மனைவிமார்கள் ஆகிய அசுரமாதர், தேவமாதர், நாகமாதர், யட்சமாதர் முதலிய பெண்மணிகள் தொடர்ந்து அழுது புலம்பிக் கொண்டு வந்தார்கள்.

மண்டோதரி பெரிதும் புலம்பினாள். " பஞ்சணையில் கிடந்த உம்மை இப்பொழுது உதிரச் சேற்றில் பாக்கின்றேனே. நீர் இறந்து போவீர் என்று கனவிலும் கருதினேனில்லை. பெண்ணாசையால் மதிமயங்கிப் பல்லாயிரம் போகமாதர் இருந்தும் சீதைமேல் வைத்த மையலால் மாண்டு கிடக்கின்றீரே. தங்களை இவ்வாறு கண்ட கண்களை நான் பிடுங்கி எறிய வேண்டாமா ? என் அன்புக் கருவூலமே ! ஆருயிர்ச் செல்வமே ! தாங்கள் சிவ மூர்த்தியையும் சேர்த்து வெள்ளிமலையை அள்ளியெடுத்தவராயிற்றே. அத்தகைய பேராற்றல் படைத்த தங்கள் திருமேனியில் எள் இருக்க இடமின்றி இராமபாணம் துளைத்திருக்கின்றதே. ஞானம் நிறைந்த அக்கணை உயிர் இருக்கும் இடம் தெரிந்து ஒரு தரம் துளைத்தே உயிர் கவரத் தெரியாதா ? இத்தனைத் துளைபோட்டு உயிரை எடுக்க வேண்டுமா ? சீதையைச் சிறையில் வைப்பதற்கு முன்னரே, அப்புனிதவதியை மனச் சிறையில் வைத்தீர். அந்தச் சீதைமேல் வைத்த காதல் உன் உடம்புக்குள் எங்கே இருக்கின்றது என்று எண்ணி ஆயிரம் ஆயிரம் துளையிட்டுத் தேடியதோ ? ஆயிரம் துளையிட்டுத் தேடியதோ ?"

"பெருமானே, மனிதனுக்கு துன்பம் ஆசையினால்தான் வரும். ஆசைகள் பலவிதங்கள் உண்டு. எல்லா ஆசைகளிலும் பொல்லாதது பெண்ணாசை. தாங்கள் பெண்ணாசையால் மதியிழந்து, கதியிழந்து, பதியிழந்து, நிதியிழந்து மாய்ந்துவீட்டீர்." என்று கதறியழுது கணவன் மார்பின்மேல் விழுந்தாள். கற்புக்கரசியாகிய வண்டோதரியின் உயிர் பிரிந்துவிட்டது.

இராவணனுடைய உடம்பையும் வண்டோதரியின் உடம்பையும் பன்னீரால் அலம்பிக், களப கஸ்துாரி தெளித்து மலர் மாலை சூட்டிச் சந்தனம், அகில் முதலிய வாசனைக் கட்டைகளை அடுக்கி, விபீஷணர் தீ மூட்டி நெருப்புக்கடன் செய்தார். பின்னர், நீர்க்கடன் செய்தார். ஏனைய அரக்கர்களுக்கெல்லாம் ஈமக் கடன்களை முறையே செய்தார்.

இராமர் பதினாலு ஆண்டுகள் வனத்தில் இருப்பதாக உறுதி பூண்டதால், இலங்கை மாநகருக்குப் போவது அவருடைய விரதத்திற்கு ஏற்றதன்று.

ஆதலால், இலட்சுமணரைப் பார்த்து, "தம்பி ! நீ சென்று விபீஷணனுக்கு முடிசூட்டி வருவாயாக" என்று கட்டளையிட்டார்.

## விபீஷணர் முடிசூடுதல்

இளைய பெருமாள், சுக்ரீவன் அங்கதன், ஜாம்பவான், நீலன் முதலியோர் புடைசூழ இலங்கை மாநகருக்குப்போய், நகரத்தை அலங்கரிக்கச் செய்தார். புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டு வரச் செய்து, வேள்வித் தீ வளர்த்து தரும நாயகராகிய விபீஷணரை அரியணைமேல் இருத்தி அபிஷேகம் செய்வித்துத், தம் திருக்கரங்களால் மகுடாபிஷேகம் செய்தார். முனிவர்கள் மந்திரட்சதை தெளித்து விபீஷணரை வாழ்த்தினார்கள். இசைவாணர்கள் பாடினார்கள். அரம்பையர்கள் ஆடினார்கள். விபீஷணருடைய தரும பத்தினியாகிய சரமை மகிழ்ச்சியுற்றாள். அவருடைய புதல்வியாகிய திரிசடை உள்ளம் உவந்தாள். விபீஷணர் வறியவர்க்குப் பொன்னும் மணியும் அன்னமும் ஆடையும், அள்ளியள்ளி வழங்கினார். இலங்கை மாநகரம் விழாக்கோலத்தினால் மகிழ்ச்சியுற்றது.

விபீஷணர் போர்க்களத்திற்கு வந்து இராமபிரானுடைய சரண கமலாலயத்தில் விழுந்து பலமுறை பணிந்தார். இராமர் தன் தம்பியாகிய விபீஷணரை ஆனந்தக் கண்ணீரால் அபிஷேகம் புரிந்து மார்புடன் இறுகத் தழுவிக் கொண்டார்.

"விபீஷணா ! இந்த உலகம் அறத்தால் நிலை பெறுகிறது. அறம் வாழும், மறம் தாழும். ஏழைகள் அழுத கண்ணீர், செல்வத்தை அழிக்கும் ஆயுதமாகும். அரச வாழ்வில் இருக்கின்ற நீ, ஏழை மக்களுக்கு எப்பொழுதும் தொண்டு செய்ய வேண்டும். மக்களுக்கு நீ தந்தையும் தாயும்போல் நலஞ் செய்ய வேண்டும். நான் மன்னவன் என்ற எண்ணம் உன் மனத்தில் கடுகளவும் வரக்கூடாது. நீ மக்களுக்குக் காவலனாக இருக்க வேண்டும். மக்கள் நலத்தில் கண்ணுங் கருத்தும் வைத்து மாட்சியுடன் ஆட்சி செய்ய வேண்டும். அரசாட்டு அரசாட்சியாக இருக்க வேண்டும். வாழ்க" என்று வாழ்த்தியருளினார்.

## சீதையின் சந்திப்பு

இராமபிரான் அநுமாரை நோக்கி, " அன்புள்ளவனே ! நீ சீதையிடம் சென்று இராவண வதத்தைத் தெரிவிப்பாயாக" என்று கூறினார். அநுமார் மிகவும் மகிழ்ந்து, அசோகவனம் சென்று திருமலரடிகளில் வீழ்ந்து வணங்கி, "அன்னையே, ஸ்ரீ ராம ஜெயம் தேவரீர்க்குப் பத்து மாதங்கள் இடுக்கண் செய்த இராவணன் இராம பாணத்தால் மாய்ந்து போனான். இப்பொழுது விபீஷணருக்கு முடிசூட்டி விழா நடைபெற்றது" என்று கூறினார்.

இந்த மங்கல வார்த்தையைக் கேட்ட சீதை என்ன சொல்வது என்று அறியாது நெடுநேரம் திகைப்புற்றிருந்தாள். "மகனே அநுமனே ! நீ எனக்கு செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன் ? அன்று மாணையின் கொடியில் கழுத்தில் சுருக்கிட்டபோது நீ வந்து, எம் பெருமானுடைய கணையாழியைக் கொடுத்தாயில்லை, என் உயிரையே கொடுத்தாய். இப்பொழுது வந்து. இந்த அமுத வசனத்தால் என்னுள்ளத்தைக் குளிர வைத்தாய். மூன்று உலகங்களையும் காணிக்கையாகத் தந்தாலும் நீ செய்த உதவிக்கு அது ஈடாகாது. ஏனென்றால், உலகம் அழியக்கூடியது. அழியாத உதவி செய்த உனக்கு இந்த அழிகின்ற உலகத்தையா தருவது ? உன்னை என் தலையினால் தொழுவதே தகும்."

"உத்தம வித்தகனே, உனக்கு என்ன வரம் வேண்டும். கேள் தருவேன்" என்று சீதாதேவி கூறினார்.

அநுமார், "அம்மா, நான் திருமணம் ஆகாத நைஷ்டிக பிரமச்சார், உலகத்தில் எனக்கு வேண்டுவது ஒன்றுமில்லை. தாங்கள் வரம் கொடுக்கின்றேன் என்று கூறுகின்றீர்கள். அம்மா ! நாய் முகமும் பேய் முகமும் கொண்டு கத்தியும் கோடாலியும் தாங்கி இந்தப் பத்து மாதங்களாக அடி, உதை, குத்து என்று சீறிச் சித்ரவதை செய்த இந்தக் கொடிய அரக்கியரைக் கொளுத்துவேன். இந்த வரத்தை எனக்குத் தரவேண்டும்."

இதைக் கேட்ட அரக்கிமார்கள் நடுங்கி ஒடுங்கி பிராட்டியாரைத் தஞ்சம் புகுந்தார்கள்.

## தந்தையும் தனயனும்

இந்த நிகழ்ச்சியில் மற்றவர்களானால் பழிக்குப் பழி வாங்க எண்ணுவார்கள். மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்து என்பார்கள். ஆனால், கருணையே வடிவாகிய சீதாதேவி அவ்வாறு கூறவில்லை. விநாடிக்கு விநாடி தீங்கு செய்த அந்தப் பொல்லாத அரக்கியருக்கு அபயம் அளித்தார்.

"ஆஞ்சநேயா ! இந்த அரக்கிமார்கள் எனக்குத் தீங்கு செய்ய வில்லை. நான் இழைத்த வினையினால் இந்தத் துன்பம் ஏற்பட்டது. வினையை நோக வேண்டுமே அன்றி, இவர்களை நோகக் கூடாது."

"ஒரு சிறுவன் நாய்மீது கல்லை எறிந்தால் அந்த நாய் கல்லைக் கடிக்கப்போகுமா ? அல்லது எறிந்தவனைக் கடிக்கப் போகுமா ? நாய் கல்லின் மேல் சீறிப் போகாமல கல் எறிந்தவன் மேல்தான் போகும். அந்த நாய்க்குக் கல்லை நோகாமல் எறிந்தவனை நோகும் தன்மை இருக்கின்றபோது, ஆறறிவு படைத்த மனிதனுக்கு இந்த நற்குணம் அமைய வேண்டுமா ? நான் இத்தனைக் காலம் அனுபவித்த துன்பத்திற்குக் காரணம் இந்தப் பெண்கள் அல்லர். இராவணன் ஏவலினால் இவர்கள் எனக்கு இடர் செய்தார்கள். என் துன்பத்திற்குக் காரணம் நான் செய்த வினைதான். வினையை நோக வேண்டுமேயன்றி இவர்களை நோகக் கூடாது."

"எம்பெருமான் தவஞ் செய்யக் கானகத்திற்கு வந்தார். அவருக்குத் துணை செய்ய நான் வந்தேன். தவஞ் செய்ய வந்த நான் விளையாட்டு மானைக் கேட்டது பிழையல்லவா ? எஜமான் இருக்க, அந்த மானை விரும்பலாமா ? மானைக் கேட்க வில்லையென்றால் இந்தத் துன்பமே வந்திருக்காது. அன்றியும் பதினாலு ஆண்டுகள் கண்களை இமை காப்பது போல், உண்ணாமல் உறங்காமல், நிலத்தில் உட்காராமல் தொண்டு செய்த என் மைத்துனரை, நீ மாற்றாந்தாய் மகன் நயவஞ்சகன் என்று அவர் மனம் புண்பட வைதேன் அல்லவா ? அவ்வினையினால் இவ்வினை வந்தது. அன்றியும் என் வீட்டில் இருந்து கொண்டு, என் உணவை உண்டு கொண்டு, நான் கொடுத்த உடையை உடுத்திக் கொண்டு எனக்கு தீங்கு செய்த கூனியைவிடக் கொடியவர்களா ? நான் நினைத்தால், அக்கொடிய கூனி அன்றே மடிந்திருப்பாள். கூனியின் குற்றத்தையே பொறுத்த நான், இவர்கள் செய்த குற்றத்தைப் பொறுக்க வேண்டாமா ? அன்பும் அறமும் பண்பும் நிறைந்த நீ, இவர்களிடம் கருணை செய்" என்று கூறினாள்.

இராமர் விபீஷணரைப் பார்த்து, " தம்பீ ! நீ சீதையை நீராட வைத்து ஆடையணிகலன்கள் அலங்கரிக்கச் செய்து அழைத்து வா " என்று கட்டளையிட்டார். விபீஷணர், அசோகவனம் சென்று தேவியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அருகில் இருந்த திரிசடை, "அம்மா ! இவர்தான் என் தந்தை " என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

விபீஷணர், "தாயே ! தங்களைக் காண எம்பெருமான விரும்புகின்றார். தேவர்களும் தங்கள் திருவடியைத் தொழ எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். உங்களை அலங்கரித்து அழைத்து வருமாறு கட்டளையிட்டார் " என்று கூறினார்.

சீதை, "அன்பனே ! இங்கு உண்ணாமலும், உறங்காமலும், தவம் செய்து கொண்டிருந்த என் தவக் கோலத்தை அவர்கள் பார்க்க வேண்டாமா ? ஆகவே, நான் தவக்கோலத்துடனே வருவேன்" என்றாள்.

விபீஷணர், "தாயே ! எம்பெருமானுடைய கட்டளையை எப்படி மீறுவது ? " என்று கூறினார். தேவி இணங்கினாள்.

ஊர்வசி, ரம்பை, திலோத்தமை, மேனகை முதலிய தேவமாதர்கள் வந்து தேவியைத் தீண்டி தலைக்கு நறுமணத் தைலம் பூசி, வியாச பகவான் வேதங்களைச் சிக்கெடுத்து ஒழுங்கு செய்ததுபோல, தலைமுடி மயிரைச் சிக்கெடுத்து ஒழுங்கு செய்து நறுமண நீரால் முழுக வைத்து ஆடையணி கலன்களால் அலங்கரித்துப் பல்லக்கில் ஏற்றி இராமபிரான் திருமுன்னே கொண்டு வந்து சேர்த்தார்கள்.

வாநர வீரர்கள் எம்பிராட்டியை விழுங்குவது போலப் பார்த்துப் பணிந்து, வினைதணிந்து நின்றார்கள்.

எம்பிராட்டி எம்பிரானைத் தொழுது நின்றாள். இராம பிரான் கருணையுடன் அவரை வரவேற்காமல் முகத்தில் கோபக்குறி தோன்ற அவரை நோக்கினார். இராமர் அந்த கற்புத் தெய்வத்தைக் கனிந்து பார்க்காமல் சுளித்துப் பார்த்தார்.

"ஜானகி, நீ நலந்தானே. நான் உன்னைச் சிறை மீட்கும் பொருட்டு இத்தனைப் பெரிய யுத்தத்தைச் செய்தேனல்லன். இட்சுவாகு குலத்தில் பிறந்த என் மனைவியை ஓர் அரக்கன் கவர்ந்தான் என்ற பழியைத் தீர்க்கும் பொருட்டு இந்த பிரம்மாண்ட போரைச் செய்தேன். நீ இங்க ஏன் வந்தனை ? இந்த ஆடையணிகலன்கள் இராவணன் தந்தவையா ? உனக்கு நல்ல ஊண் உணவுகள் கிடைத்திருக்குமே ? கற்புடைய பெண்கள் கணவனைப் பிரிந்த அக்கணமே உயிரை விடுவார்களே ! நீ உயிரோடு இருக்கின்ற தன்மை, பெண் குலத்திற்கே பழிப்பை உண்டாக்குகிறது. உன்னால் மங்கையர் குலமே மாசு அடைந்தது. நீ இந்த இடத்தைவிட்டுப் போகலாம் அல்லது சாகலாம். நீ நிலத்தில் புழுவைப்போல் தோன்றினாய். அதனால், உனக்கு நற்குணம் அமையவில்லை. "

இப்படி கருணையே வடிவாகிய இராமபிரான் கற்புக்கரசியைப் பலர் முன்னே இழிவாகப் பேசியது என்ன நியாயம் ? என்று அன்பர்களுக்குத் தோன்றும்.

இராமர் சக்ரவர்த்தி, யார் குற்றம் செய்தாலும் தண்டிக்கும் நடுநிலையுடையவர். அத்தகைய பெருமான் சீதை, இலட்சுமணரை மாற்றாந்தாய் மகன் நயவஞ்சகன் என்றெல்லாம் நிந்தித்து மனம் நோகப் பேசினார். அதற்குப் பின்னர் இப்போதுதான் சீதையைச் சந்திக்கின்றார். நாட்டைத் துறந்து வீட்டைத் துறந்து, மனைவியைத் துறந்து, பஞ்சணையைத் துறந்து, உணவைத் துறந்து, உறக்கத்தைத் துறந்து, சுகபோகம் அனைத்தும் துறந்த உத்தமனை மனம் நோகப் பேசிய பிழைக்கு இப்போது மனைவியின் மனம் நோகப் பேசித் தண்டனை கொடுக்கின்றார் என்று தெளிவு பெறுக.

இராமபிரானுடைய கூரிய பாணங்களைப் போன்ற சொற்கள் கொடுஞ் தன்மைக்கு எம் பெருமான் கொடுக்கின்ற தண்டனை என்று உணர்ந்தாள். இராமபிரான் சொல்லிய சொற்களைக் கேட்டு அநுமார் பதறிக் கதறி அழுதார். வாநரங்களும் வானவர்களும் உள்ளந் துடித்து, உயிர் துடித்து உலைந்தார்கள்.

சீதாதேவி எம்பெருமானைப் பார்த்துக் கரைகடவாத திரைக் கடல் போல் நின்று, "ஐயனே ! நான் அசோக வனத்தில் செய்த தவத்தின் தன்மையை மதிநலமிகுந்த அதிநலமுடைய அநுமான் தங்களிடம் கூறவில்லையா ? தங்கள் மேலிருந்த அன்பினால், ஆர்வத்தால் இன்னம் ஒருமுறை தங்கள் சேவடியை வணங்க வேண்டும் என்று உயிர் தரித்திருந்தேன். தங்களைத் தரிசித்து விட்டேன். என் தவம் பூர்த்தியாகிவிட்டது. பலகோடி வணக்கம் "

என்று கூறி, ஒருபுறம் நின்று கொண்டிருக்கும் இளைய பெருமாளை நோக்கி, " செம்மனச் செம்மலே ! நான் தீக்குளிக்க நெருப்பை வளர்த்திக் கொடு " என்று கூறினாள். "அன்று நான் உன்னை வாயினால் சுட்டேன், இன்று தீயினால் சுடப் பெறுகிறேன்."

இலட்சுமணர் மிகுந்த வேதனையுடன் தமையனாரை நோக்கினார். அவர் கண்ணினால் கட்டளையிட்டார்.

இலட்சுமணர் கண்ணீரைச் சொரிந்து கொண்டே மந்திர பூர்வமாகப் பெருந்தீயை வளர்த்தினார். சீதாதேவி இராமரையும் அக்னிக் குண்டத்தையும் வலமாக வந்தார். "கருணைக் கடலே ! உமது திருவருள் ஒன்றே எனக்கு வேண்டியது. தேவரீர் என் கற்பின் நிலையறியாமல் பேசிவிட்டீர். இனி எனக்கு மரணம் தவிர வேறு சுகமில்லை" என்று கூறிவிட்டு அக்னிக்கு அருகில் சென்றார்.

இதைக் கண்டு உலகிலுள்ள எல்லா உயிர்களும் வாய்விட்டு அரற்றின. வானத்தில் இந்திராணி, "அந்தோ ! இப்படியும் ஒரு கொடுமையா ? இதைப் பார்க்க நான் என்ன பாவம் செய்தேனோ ?" என்று கண்களை மூடிக் கொண்டாள். சீதாதேவி, "உலகில் பிரமதேவனும் சிவபெருமானும் திருமாலும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிவாராயினும் மங்கையர் மன நிலையை அறியமாட்டார்கள். ஏ, தீக்கடவுளே ! நீதான் உலகுக்குச் சாட்சி. உலகிலுள்ள அனைவரும் அக்னியை வலம் வந்து திருமணம் செய்த கொள்கிறார்கள். நான் மனமொழி மெய்களால் பிழை செய்திருப்பேனாயின் என்னைச் சுடுக" என்று கூறித் தீயில் பாய்ந்தாள்.

அந்த அக்னி சீதையின் கற்புக் கனலால் சடசடவென்று சுடப்பட்டது. அக்னிக் கடவுள் சீதாதேவியை விட்டு, "ஐயனே ! நான் என்ன குற்றம் செய்தேன் ! என்னை ஏன் இத்தாயின் தீயினால் வேதனை செய்தீர் !" என்று கூறினான். இராமருடைய கடுஞ் சொற்களைக்கேட்டுச் சீதாதேவியின் முகத்தில் தோன்றிய வேர்வை அப்படியே இருந்தது. அவர் மார்பில் இருந்த மாலைகளும், அதில் இருந்த வண்டுகளும் பசுமையாக இருந்தன.

அம்மையின் கற்பின் ஆற்றலைக்கண்டு உலகமெல்லாம் கைகூப்பித் தொழுதது.

பிரமதேவன், சிவபெருமான் முதலியோர் இராமரைப் பார்த்து " எம்பெருமானே ! சீதை கற்புத் தெய்வம். அவள் சீறினால் உலகமே அழிந்துவிடும். நீ நெருப்புடன் விளையாடாதே. அவளை ஏற்றுக்கொள் " என்று கூறினார்கள். பகவான் கருணையோடு சீதையைப் பார்த்து அருளினார்.

## தசரதர் வருகை

சிவபெருமானுடைய கட்டளைப்படி தேவர்கள் புடை சூழ விண்ணுலகத்தில் வாழ்ந்த தசரதச் சக்ரவர்த்தியை விமானத்தில் ஏற்றி அழைத்து வந்தார்கள். தந்தையாரைக் கண்ட இராமபிரான் ஆனந்தமும், அற்புதமும் ஒருங்கேயடைந்து தசரதருடைய பாத கமலங்களில் வீழ்ந்து வணங்கினார். வீழ்ந்த மைந்தனைத் தசரதர் எடுத்து மார்புறத் தழுவிக் கொண்டார். ஆனந்தக் கண்ணீரால் அபிஷேகம் செய்தார்.

"அன்புள்ள மகனே ! அன்று கைகேயி கேட்ட வரமாகிய அரம் என் மார்பில் தைத்திருந்தது. என்னைக் கொன்றும் அந்தக் கொடிய இரும்பணி என்னைவிட்டு அகலவில்லை. இப்போது நீ என்னைத் தழுவிக் கொண்டதால், காந்தமணியால் ஆணி வெளிப்படுவதுபோல் அகன்றுவிட்டது. "

கண்ணில் பாய்ந்த ஊசியை மருத்துவன் காந்தத்தால் எளிதாக எடுப்பதுபோல், தசரதருடைய மார்பில் இருந்த கைகேயியின் வரமாகிய அரத்தை, இராமருடைய காந்தமா மணியாகிய மார்பு எளிதாக எடுத்துவிட்டது.

"மகனே ! நான் பெற்ற பேறு யார் பெறுவார் ? உலகங்களுக்கெல்லாம் தந்தையாகிய உனக்கு நான் தந்தையாக இருந்தேன். முன்னர் நான் மண்ணுலகத்தில் வாழ்ந்தபோது, நான் வணங்கிய தேவர்கள் எல்லாரும் இப்பொழுது என்னை வணங்குகின்றார்கள். அந்தக் காட்சியை உன் கண்ணால் காண்பாயாக. பிரமதேவனுக்குச் சரிசமமாக அமர்ந்திருக்கின்ற ஒப்பற்ற பெருமை எனக்கு உண்டாகியிருக்கின்றது" என்று கூறிச், சீதையின் அருகில் சென்றார்.

மைதிலி, மாமனார் மலர்த் திருவடியில் வீழ்ந்து வணங்கினாள். தசரதர் மருமகளை வாழ்த்தி, "அம்மா ! தங்கத்தை நெருப்பிலிடுவதைப்போல் கற்புக்கரசியாகிய உன்னை அக்னியில் இட்டு உன் கற்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு இராமன் இதனைச் செய்தான். நீ சீற்றங் கொள்ளாதே " என்றார்.

இலட்சுமணர், தந்தையாரை வீழ்ந்து வணங்கினார். தசரதர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, இலட்சுமணரைத் தழுவி, "அருமை மைந்தனே ! உன் தமையனுக்காகப் பதினாலு ஆண்டுகள் உண்ணாமலும், உறங்காமலும் நிலத்தில் இருகால்களும் நின்ற வண்ணம் வனம் வந்து சேவை செய்தாயே. தேவராலும் மற்ற யாவராலும் வெல்லமுடியாத இந்திரஜித்தைக் கொன்று, இந்திராதி தேவர்களின் இடுக்கண்களை அகற்றி, விண்ணவர்க்கு உதவி செய்தாயே, வான உலகில் எங்கே பார்த்தாலும், எந்த நேரத்திலும் உன்னுடைய பெருமையையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். கைகேயின் வரமாகிய அறம் நீங்கிய புண், உன் ஸ்பரிசத்தால் ஆறியது. உன் புகழ் வாழ்க !" என்று உள்ளம் குளிர்ந்து ஆசி கூறினார்.

தசரதர் இராமனைப் பார்த்து, " உனக்கு வேண்டிய வரம் கேள்" என்றார். முன் மனிதனாக இருந்தபோது கைகேயிக்கு வரம் கொடுத்துத்தான் இத்தனை இடர்களும் வந்தன.

இராமர், "தந்தையே ! தங்களைத் தரிசித்ததே எனக்குப் பேரானந்தம். எனக்கு வேண்டியது ஒன்றுமில்லை " என்று சொன்னார்.

தசரதர், "மகனே ! உனக்கு வரம் தர விரும்புகின்றேன். ஏதாவது கேள்" என்றார்.

இராமர் தன்னலமில்லாதவர். தனக்கு என்று கேட்பது அவருடைய பெருமைக்கு இழுக்கு. வரம் கேட்பது பிறர் பொருட்டு இருக்க வேண்டும். ஆனால், அதில் தனக்கும் தொடர்பு இருக்க வேண்டும். அந்த வரம் தசரதர் ஒருவரே தரக்கூடியதாக இருக்க வேண்டும். முன்னர் வசிட்டர் திருமுன் கைகேயி எனக்கு மனைவி அல்லள், பரதன் எனக்கு மகன் அல்லன் என்று தசரதர் கூறி விலக்கினார்.

ஆகவே, இராமன் அயோத்தியில் சென்று மகுடாபிஷேகம் செய்து கொண்டால் கைகேயியைச் சிற்றன்னை என்று வணங்கும் வாய்ப்பிருக்காது. பரதனைத் தம்பி என்று ஏற்க இயலாது. குருவுக்கு முன் விலக்கிய கைகேயியையும் பரதனையும் தசரதர் ஏற்றுக் கொண்டால்தானே இவருக்கு தாயும், தம்பியும் ஆகமுடியும் ?

முடிசூட்டு விழாவில் கைகேயி கலந்து ஒருபுறம் கண்ணீர் வடிப்பாள். அன்றி, இராமர் தந்தையாரைப் பார்த்துக், கைகேயியை மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்பது நாகரிகமாக இருந்தது. அது இராமருக்கு வரமும் ஆகாது. அன்றித் தசரதர் ஏற்றுக் கொண்டால்தான் இவருக்குச் சிறிய தாயாராக ஆக முடியும். ஆகவே, என் சிற்றன்னை என்று சொல்லவும் வழியில்லை. கைகேயி என்று பெரியவர்கள் பெயரை உச்சரிப்பதும் பிழை. அதனால் வாக்கு வன்மையுள்ள இராமபிரான் சிறிய தாய் என்று கூறாமல் கூறுகின்ற அதியற்புதமான வாக்கு ஒளி செய்வதை இங்குக் காண்க.

கைகேயியைத் தெய்வம் என்று இராமர் கூறுகின்ற அருந்திறம் எண்ணியெண்ணி மகிழ்வதற்குரியது. என் தெய்வமும் மகனும் என்ற பிரயோகம் மிகமிக உயர்ந்தது. இதைக் கேட்ட தசரதர், "மகனே, குற்றம் செய்யா குணக்குன்றாகிய பரதனை மகனாக ஏற்றுக் கொள்வேன். நமது மனுக்குலத்தில் மூத்தவன்தான் அரசு புரிய வேண்டும் என்றிருந்த பரம்பரையைக் கெடுத்துத் துகளாக்கி உனக்கு மரவுரியும், சடை முடியும் கொடுத்துக் காட்டிற்கு அனுப்பிய பாவியை என் மனைவி என்று ஏற்கமாட்டேன் " என்றார்.

இப்போது இராமர் கூறுகின்றார் " தந்தையே ! சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள். என் அருமைத் தாய் செய்ததில் அணுவளவும் பிழையில்லை. தாங்கள் என்னை முடிசூட்டிக் கொள்ளுமாறு கட்டளையிட்டீர். நான் அதை மறுக்காது ஒப்புக் கொண்டது என் பிழை. நான் தேவர்கள் வேண்டுகோளின்படி அயோத்தியில் பிறந்தது கோசல நாட்டை ஆள்வதற்கா ? இல்லை. பல காலமாக தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இடர் செய்த இராவணனைக் கொல்வதற்காக. என் அவதார நோக்கமே இராவண சம்மாரந்தானே !"

"அந்தக் கோட்பாட்டுக்கு மாறாக, நான் அரசாள நினைத்தது என் பிழையாகும். அந்தத் தேவகாரியத்துக்கு உதவியாக இருந்தது என் தாயின் செய்கை. அதனைச் சிந்தியாமல் என் தாயைக் கோபிப்பது என்ன முறை ?"

இதைக் கேட்ட தசரதர் இராமபிரான் அவதார நோக்கத்திற்கு உறுதுணையாக இருந்தது. கைகேயியின் செயல் என்றுணர்ந்து தெளிவு பெற்றுச் சீற்றம் ஆறினார்.

தசரதர் கைகேயியிக்குக் கொடுத்த வரம் இரண்டாகும். இப்போது இராமருக்கும் இரண்டு வரம் கொடுத்தார் என்று வானவர்கள் வழுத்தினார்கள்.

தேவர்கள் இராமபிரானைப் பார்த்து " ஐயனே ! உமக்கு என்ன வரம் வேண்டும் " என்று கேட்டனர்.

இராமபிரான், " போர்க்களத்தில் இறந்து போன வாநரங்கள் அத்தனைப் பேரும் பிழைக்க வேண்டும் என்றும், வாநரங்கள் வாழ்கின்ற கானகம் முதலான இடங்களில் வன வளமும், காய்கனிகளும். சூதனும், நீரும் பெருகி, வாநரங்களுக்கு நலம் செய்ய வேண்டும் " என்றும் வரம் கேட்டார். அதுபடி தேவர்கள் வரம் கொடுத்தனர்.

மாண்ட வாநரங்கள் மீண்டு எழுந்தன. பிரமதேவனும், சிவமூர்த்தியும் அநுமாரை நோக்கி, "இராமபிரானுடைய பதினாலு ஆண்டு வனவாச காலம் நிறைவேறுகிறது. நீ இன்று சென்று பரதனை அடையவில்லையானால் பரதன் அக்னியில் வீழ்ந்து இறப்பான். ஆதலால், நீங்கள் இப்போது அயோத்தி செல்லுங்கள் " என்று கூறி இராமரை வாழ்த்தி தங்கள் தங்கள் உலகங்களுக்குச் சென்றார்கள்.

## இராமர் திரும்புதல்

இராமபிரான் விபீஷணரைப் பார்த்துத் " தம்பீ, வனவாசம் பதினாலு ஆண்டுகள் இன்றுடன் நிறை வேறிவிட்டன. நான் இன்றே அயோத்தி போக

வாகனம் உண்டா ?" என்று கேட்டார். விபீஷணர். " எம்பெருமானே ! இராவணன் தன் தமையனாராகிய குபேரனிடம் இருந்து கவர்ந்து கொண்ட புட்பக விமானம் இருக்கின்றது. அதில் எல்லாரும் போகலாம் " என்று கூறி விமானத்தைக் கொண்டு வந்தார்.

இராமர், "தோழர்களே ! நீங்கள் எல்லாரும் உங்கள் இருப்பிடத்துக்குச் செல்லுங்கள். உங்கள் உறவினர்களுக்கு என் சுகத்தைச் சொல்லுங்கள். நான் அவசரமாக அயோத்திக்குப் போகின்றேன்" என்றார்.

விபீஷணர் முதலிய அன்பர்கள் இராமரை வணங்கிப் " பெருமானே ! நாங்கள் எல்லாரும் வந்து தேவரீரின் முடிசூட்டு விழாவைக் கண்டு களிக்க வேண்டும். எங்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் " என்று வேண்டினர். இராமர், "அவ்வண்ணமே வாருங்கள் " என்று கூறினார். எல்லாரும் விமானத்தில் ஏறிக் கொண்டார்கள்.

வடக்கு நோக்கி வருகின்ற வழியில் இராமர் சீதையைப் பார்த்து "ஜனகராஜன் பெற்ற தவக்கொழுந்தே ! இதோ இந்தச் சேது அணையைப் பார்ப்பாயாக. இதனைப் பார்த்த மாத்திரத்தில் எல்லாப் பாவங்களும் போகும். இகபர நலன்கள் உண்டாகும்" என்று சேதுவின் பெருமையைக் கூறினார்

விமானம் கிட்கிந்தைக்கு அருகில் வந்தவுடன் இராமர் விமானத்தில் இருந்தபடியே கிட்கிந்தையைச் சீதைக்குக் காட்டினார். சீதாதேவி, " பெருமானே ! இந்த வாநரப் பெண்களையும் அயோத்திக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். நான் ஒருத்தி மட்டும் .இந்த விமானத்தில் போவது சிறப்பன்று " என்று கூறினாள்.

விமானத்தைக் கிட்கிந்தையில் இறக்கி அங்குள்ள தாரை முதலிய பெண்மணிகளை விமானத்தில் ஏற்றிக் கொண்டார்கள்.

அந்த வாநரப் பெண்கள் மனித வடிவம் எடுத்துச் சென்றார்கள்.

விமானம் சித்திர கூடத்தை அடைந்தது. பாரத்துவாசர் மண்ணுலகில் நின்றுகொண்டு இராமரை, இங்கு இறங்க வேண்டும் என்று வேண்டிக்

கொண்டார். பாரத்துவாசர், "இராமா ! என்னைவிட்டுப் பிரிந்த பின் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அத்தனையும் இங்கேயிருந்து பார்த்து மகிழ்ந்தேன். இன்று என்னிடம் தங்கி உணவருந்த வேண்டும்" என்றார். பரதன் அங்கு உயிர்விடத் துணிந்திருக்கின்றான் என்றறிருந்தும், இராமர் சாப்பாட்டிற்கு ஒப்புக் கொண்டார், அதனால், அவர் சாப்பாட்டு இராமன் என்று பெயர் பெற்றார்.

இராமர், "அநுமனே ! நீ விரைந்து சென்று பரதனிடம் என் கணையாழியைக் காட்டி, என் வரவைப் பரதனுக்குத் தெரிவிப்பாயாக" என்று கூறினார்.

இராமபிரானுடைய வருகையைப் பரதருக்கு அறிவிக்கும் பொருட்டு அநுமார் வான்வழிச் சென்றார். தன் தந்தையாகிய வாயு வேகமும் இராம பாண வேகமும் பிற்பட, தனது மனமும் பிந்த அத்துணை வேகமாகச் சென்றார்.

## பரதரின் பரிவு



இராம பக்தியே ஓர் உருவெடுத்தது போன்ற பரதர் அயோத்தி மாநகரையும், அரண்மனையையும் துறந்து, அயோத்திக்கு அருகிலுள்ள நந்திக் கிராமத்தில்

ஒரு மண்டத்தில் இராமருடைய பாதுகையை வைத்து வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

இறைவனை அடியார்கள் காலை, உச்சி, மாலை என்று முப்போதும் வணங்குவார்கள். பரதரோ எப்போதும் வணங்கிக் கொண்டிருந்தார். பொறி புலன்களை அவித்து உள்ளந் தவித்து அழுத கண்ணும் தொழுத கையுமாக, நறுமண மலர்களால் அர்ச்சித்து வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

இராமர் சென்ற திசை தெற்கு, ஆதலின் தென் திசையைத் தவிர வேறு திசைகளை நோக்கார். பதினான்கு ஆண்டுகள் இன்று பூர்த்தியாகின்றது. அரிச்சந்திரன் மரபில் வந்த என் அண்ணன் சொன்ன சொல் தவறமாட்டார். 14-வது ஆண்டு முடிவிலே வருவேன் என்றாரே, அந்த வாக்கின்படி அவர் வந்தாரில்லை. அவருக்கு என்ன இடரோ ? பகைவரால் துன்பம் விளைந்ததோ ? அரசாட்சியைப் பரதனே ஆளட்டும் என்று கருதி வராது இருக்கின்றாரோ ? இனி நான் வாழ மாட்டேன். மாண்டு ஒழிவேன் ? என்றெண்ணிப் பரதர் உயிர் விடத் துணிந்தார்.


பக்தியே ஒருருவாக வந்தது போன்ற பரதர் பெருந்துயரமடைந்து சத்ருக்னரை அழைத்து வரச் சொன்னார். சத்ருக்னர் விரைந்து வந்து பரதருடைய பாத தாமரை மீது வீழ்ந்து வணங்கினார்.

பரதர், என் அன்புடைத் தம்பீ ! குறிப்பிட்டபடி அண்ணா வரவில்லை. இனி ஒரு கணமும் உயிருடன் வாழ விரும்பவில்லை. எனக்கு நெருப்பு வளர்த்திக் கொடு. அந்த அரசாட்சியை நீ ஏற்றுக் கொண்டு வாழ்வாயாக என்றார். அதனைக் கேட்ட சத்ருக்னர் நடுநடுங்கினார். தீயில் வீழ்ந்த புழுவைப் போல் துடிதுடித்தார். பரதரைத் தொழுது பகர்கின்றார்.

அண்ணா ! நிலமகள் வருந்த அவளைக் கைவிட்டுக் கானகம் புகுந்த எம்பிரானைக் காத்து நிழல் போல், தொடர்ந்து தொண்டு செய்யப் போன இலட்சுமணரும் ஒரு தம்பி கானகம் சென்றவர் திரும்பிவரும் தவணை நாள் முடிந்தது என்று, மடிந்து போகத் துணிந்து நின்ற தேவரீரும் ஒரு தம்பி. மற்றொரு தம்பியாகிய அடியேன் இந்த ஆட்சியைப் புரிவதா ? இந்த அரசாட்சி இனிக்குமா ? தாங்கள் தீயில் வீழ்ந்தால் அடியேனும் வீழ்ந்து மாண்டு போவேன். ஒரு கணமும் உயிர் தரியேன் என்று கூறித் தொழுது அழுது நின்றார்.

பரதன் தீயில் வீழ்ந்து மாண்டு போகத் துணிகின்றார் என்ற செய்தியைக் கேட்ட அயோத்தியில் வாழும் மக்கள் ஆராத் துயரமடைந்து நந்திக்கிராமம் வந்து, புத்தி நொந்து, சிந்தாகுலம் அடைந்தார்கள்.

## திருமுடி சூட்டுதல்



கௌசலா தேவி இதனைக் கேட்டு உள்ளம் துடிக்கக், கண்ணீர் வடித்து வயிற்றில் அடித்துக் கொண்டு பரதனிடம் வந்து, என் அன்பு மகனே ! நீ என்ன காரியம் செய்கின்றாய் ? எண்ணில்லாத கோடி இராமர்கள் கூடினாலும் உன் அன்புக்கும், பண்புக்கும் நிகராக மாட்டார்கள். அண்ணன் இன்று வரவில்லை யென்றால் நாளை வருவான். வந்த இராமன் நீ மாண்டதை அறிந்து தானும் மாண்டு போவான். அதனையறிந்து அயோத்தியிலுள்ள அத்தனை மக்களும் மாண்டு போவார்கள். விண்ணுலகமும் மண்ணுலகமும் மாண்டு ஒழியும்.

மகனே ! உன்னைப் போன்ற உத்தம தம்பி உலகில் தோன்றியதுமில்லை, இனித் தோன்றப்போவதுமில்லை. உன்னுடைய அன்பு மகாமேரு மலையினும் பெரியது. நீ தீயில் விழாதே என்று கூறி அழுது தடுத்தாள்.

பரதர், அம்மா ! தாயின் சொல்லைக் கேட்பதும், தந்தையின் சொல்லைக் கேட்பதும் இராமருக்கே உரியவை. இராமர் வராமையினால் நான் உயிர் விடுவேன். பதினான்கு ஆண்டுகள் பொறுத்து நான் வருவேன் என்று அண்ணா உறுதி கூறினார். அப்பொழுது நான் அண்ணனைப் பார்த்து அண்ணா ! தாங்கள் கூறியபடி பதினான்கு ஆண்டுகள் கழித்து வரவில்லையானால் நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்று சபதம் செய்தேன். அண்ணன்தான் சொன்ன சொற்படி வரவில்லை ஆகவே, நான் வாழ்வது முறையில்லை. தீயில் வீழ்வதுதான் முறை. என் தாய்க்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்ற உயிரை விடுத்த தசரதருடைய மகன்தானே நான் ? சத்தியத்துக்காக அவர் உயிரைவிட்டது போல், நானும் உயிரை விடுவேன். இது உறுதி என்றார்.

அக்னிக்கு அருகில் சென்ற பரதர் அக்னி பூஜை செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது ஆஞ்சநேயர் இராமருடைய வரவைக் கங்கைக் கரையில் குகனிடம் கூறிவிட்டு, விண் வெளியே வந்து, சபதத்தையே விரதமாகக் கொண்ட பரதரே ! இராமச்சந்திர மூர்த்தி வந்துவிட்டார். இன்னும் நாற்பது நாழிகையில் இங்கு வருவார். பாரத்துவாச முனிவரின் ஆசிரமத்தில் தங்கியிருக்கின்றார் என்று கூறினார்.

.

இவ்வாறு அநுமார் கூறி, இராமபிரானுடைய கணையாழியைக் கொடுத்தார். பரதர் மோதிரத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். சிரசின்மீது வைத்துக் கொண்டார் எல்லையில்லாத மகிழ்ச்சியை அடைந்தார். ஆடினார், பாடினார், அங்கும் இங்கும் ஓடினார் அநுமார் திறத்தை நாடினார். கூறியவனுக்குப் பொன் புதையல் கிடைத்ததுபோல் பெரும் மகிழ்ச்சியடைந்தார். அங்கு நிறைந்திருந்த வேத வித்துக்களான அந்தணர்களை அஞ்சலி செய்தார். தனக்குச் சமானமான அரசர்களைத் தொழுதார். வட்டிப் பெருக்கும் பணியாளர்களாகிய தாதியர்களைத் தொழுதார் தன்னையே தான் தொழுது கொண்டார்.

மகிழ்ச்சி ஒரு கள் போன்றது. கள்ளுண்டார்க்கு இன்னது செய்வது என்று தெரியாது.

அநுமாரைப் பார்த்து, வானவெளியாக வந்து என் ஊனம் தீர்த்த ஞான மூர்த்தியே ! நீ யார் ? உன் பேர் யாது ? என்று கேட்டார்.

அநுமார் பரதருக்குத் தன் விசுவ ரூபத்தைக் காட்டினார். அந்தப் பேருருவத்தைக் கண்டு வசிஷ்டரும், பரதரும் சத்ருக்னரும் அச்சமும், அதிசயமும் அடைந்தார்கள். மற்றவர்கள் விண்ணும், மண்ணும் மூடி நின்ற அநுமாருடைய விசுவ ரூபத்தைக் கண்டு வெருண்டு, மருண்டு, நடுங்கி ஒடுங்கி நின்றார்கள். அந்தண வடிவத்தில வந்த அநுமார் இப்பொழுது தன் சுயவடிவத்தைக் காட்ட, எல்லாரும் வியந்து நயந்து நின்றார்கள்.

பரதர் அநுமாருக்குப் பொன்னும்பொருளும் மிக விலையுயர்ந்த ரத்தினமணிகளும் பொன்னாடைகளும் பரிசாகக் கொடுத்து மகிழ்வித்தார். பின்னர், பரதர் அநுமாரைப் பார்த்து எங்களை வாழ்விக்க வந்த வள்ளலே ! உன் வரலாறு யாது ? என்று கேட்டார். அநுமார் அடியேன் வாயு குமாரன். என் தாய் அஞ்சனா தேவி. என் பெயர் அநுமன். நான் இராமருக்கு அடியேன் என்று கூறிப் பரதர் இராமர் பிரிந்த பிறகு நடந்த வரலாற்றைச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் கூறினார். இதைக் கேட்டுப் பரதர் இராமருக்கு நேர்ந்த துன்பங்களை எண்ணிப் பெரிதும் துயரமடைந்தார்.

பரதர் அயோத்தியை அலங்கரிக்குமாறு கட்டளையிட்டார். அறுபதினாயிரம் அக்ரோணி சேனைகளும் அயோத்திவாழ் மக்களும் இராமரை எதிர்கொண்டு அழைக்கச் சென்றார்கள்.

இராமர் உடன் வந்தாருடன் புஷ்பக் விமானத்தில் ஏறிக் கங்கா நதியைக் கண்டு இறங்கினார். குகன் பாசத்துடனும் நேசத்துடனும் இராமருடைய திருவடிகளை வணங்கினான். அவன் கண்களில் ஆறாக நீர் பெருகியது. இராமர் விபீஷணருக்கும், சுக்ரீவனுக்கும் குகனை அறிமுகப்படுத்தி வைத்தார்.

குகன், விபீஷணரையும் சுக்ரீவனையும் மார்புறத் தழுவி ஆனந்தக் கண்ணீரால் நனைத்தான்.

இராமச்சந்திர மூர்த்தியும் சீதாதேவியும் இலட்சுமணரும் வேத வேதாந்த வித்தகராகிய வசிஷ்ட முனிவருடைய பாதார விந்தம் பணிந்தார்கள். வசிஷ்டர் இராம இலட்சுமணர்களைத் தழுவி, உள்ளம் உருகி, கண்ணீர் பெருகி, இராகவா எல்லா நலன்களையும் பெற்று நீடு வாழ்க என்று வாழ்த்தினார்.

இராமபிரான் முதலில் கைகேயியின் கமல பாதத்தில் வீழ்ந்து அன்புக் கண்ணீரால் அவள் பாதத்தை அபிஷேகம் செய்தார்.

கைகேயி இராமரை எடுத்து அன்புடன் ஆசீர்வதித்தாள். பின்னர், கௌசலையையும் சுமத்திரையையும் அணுகி, அன்புடன் அவர்களுடைய தாமரைத் தாள்கள் மீது வீழ்ந்து வணங்கினார்.

பரதர் தாரை தாரையாக அழுது கொண்டே தம் தலை மேலிருந்த பாதுகையை இராமபிரான் திருவடியில் வைத்து உயிரைப் பிரிந்த உடம்பு மீண்டும் அவ்வுயிரை அடைந்தது போல் ஒப்பில்லாத உவகையுடன் பரமனைப் பணிந்தார். இலட்சுமணர் அன்பு வடிவமாக அருந்தவக் கோலத்துடன் அழுதவண்ணம் தொழுத கையுடன் நிற்கும் பரதருடைய பாத கமலத்தைப் பிடித்துக் கண்ணீர் வடித்தார்.

பரதர் இலட்சுமணரை மார்புறத் தழுவி, தம்பீ இலட்சுமணா ! நீ என்ன புண்ணியம் செய்தனையோ ? நிழல் போல எம்பிரானைத் தொடர்ந்து சென்று அல்லும் பகலுமாக, அன வரதமும் உண்ணாமல் உறங்காமல் தொண்டு செய்தனை. எனக்கு அப்பேறு கிடைக்கவில்லை. நீ புண்ணியத்தின் கருவூலம், நீ என்ன மாதவம் செய்தனையோ ? இந்தப் பாக்கியம் யாருக்கும் கிடைக்காது. உன் கீர்த்தி வாழ்க என்று அன்புடன் மொழிகளால் இலட்சுமணனை வாழ்த்தினார்.

சத்ருக்னர் இராமரையும், இலட்சுமணரையும் சீதாதேவியையும் அன்புடன் எட்டு அங்கங்களும் நிலத்தில் தோய வணங்கினார். இராமபிரான் அவரை வாழ்த்தினார்.

இராமபிரான் பரத சத்ருக்னர்களுக்குத் தம்முடன் வந்தவர்களை அறிமுகஞ் செய்தார்.

தம்பீ ! இவன் அநுமான், உயிரினும் சிறந்த உத்தமன். இவனுக்கு நிகர் இவன்தான். ககன மார்க்கமாகக் கடலைக்கடந்து இலங்கைக்குச் சென்று சீதையைக் கண்டு, இலங்கையை எரியூட்டி வந்தவன். மேருவரையின் மேம்பட்ட பேராற்றல் பெற்றவன். ஆதித்தனிடம் ஒன்பது வியாகரணங்களையும் ஓதியுணர்ந்தவன். இவனை நவ வியாகரணப் பண்டிதன் என்று எட்டுத் திக்கும் மதிக்கும். இவனுடைய சொல்லாற்றல் மிகவும் உயர்ந்தது. அயன்கணையால் அனைவரும் மாண்ட போது கைலை மலைக்கு

வடக்கேயுள்ள சஞ்சீவி மலையை ஒரு கையால் கொண்டு வந்து அனைவருக்கும் உயிர்ப்பிச்சை கொடுத்த உத்தமன். இவன் பெருமை அளவிடற்கரியது. சிலரிடத்தில் அன்பிருந்தால் அறிவிருக்காது, அறிவிருந்தால் ஆற்றலிருக்காது. இந்த உத்தம சீலனிடம் எல்லாக் குணங்களும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. இவன் சேவையின் சிகரம். சீதைக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த உத்தமன். சுக்ரீவனுடைய முதலமைச்சன். அஷ்டமா சித்திகளும் இவனிடம் கைகட்டி வாய் பொத்திப் பணிபுரியும்.

இவன் சுக்ரீவன் சூரிய குமாரன், கிஷ்கிந்தையை மாட்சியுடன் ஆட்சி புரிபவன். உற்ற இடத்து உயிரையும் கொடுக்கும் உண்மை நண்பன்.

இவன் விபீஷணன், இராவணனுடைய தம்பி. உனக்கும் எனக்கும் சகோதரன். சாந்தமே வடிவானவன். சகல கலா வல்லவன். இராவண யுத்தம் நடந்தபொழுது பல நட்பமான இரகசியங்களைச் சொல்லித் துணை புரிந்தவன். இவனுடைய புதல்வி திரிசடை, சீதைக்கு உற்ற துணைவியாக இருந்து உதவி செய்தவள். சீதை அசோக வனத்தில் சிறையில் துன்பத்தில் துடித்துக் கொண்டிருந்தபொழுது ஆறுதலும் தேறுதலும் செய்தவள்.

இவன் அங்கதன், வாலி குமாரன் பேராற்றல் படைத்தவன் நற்குண நம்பி, கிஷ்கிந்தைக்கு இளவரசன்.

இவன் ஜாம்பவான், அறிவாற்றலில் சிறந்தவன், அநுபவம் முதிர்ந்தவன், எல்லா வகையிலும் சிறந்தவன்.

இவன் நீலன் சேனாதிபதி, எழுபது வெள்ளம் சேனைகளுக்குத் தனிப்பெருந் தலைவன். பகைவராகிய வைக்கோல் புல்லுக்கு நெருப்பு போன்றவன்.

இவ்வாறு இராமபிரான் தமக்குத் தொண்டு செய்த அத்தனைப் பேரையும் அறிமுகம் செய்து வைத்தார். பரதர் அத்தனைப் பேரையும் தனித்தனியே தழுவி, எண்ணரிய புண்ணியத்தால் உங்களுக்கு இராம கைங்கரியம் கிடைத்தது. இந்தப் பாக்கியம் யாருக்கும் கிடைக்காது. நீங்கள் எல்லா நலன்களுடன் பல்லாண்டு வாழ்க என்று கூறி உபசரித்தார்.

சுமந்திரர் முதலிய அமைச்சர்கள் வந்து, இராம இலட்சுமணர்களைப் பணிந்தார்கள். இராமர் எல்லாரையும் வாழ்த்தினார். எல்லாரும் விமானம் ஏறி அயோத்தியை அடைந்தார்கள்.

இராமரும் மற்ற தம்பியரும் தலைமுடியைச் சிக்கெடுத்துத் தைலம் தடவிச் சரயு நதியில் நீராடி அலங்கரித்துக் கொண்டார்கள். சிறந்த மணித் தேரில் இராமர் ஏறினார். இலட்சுமணர் குடை பிடித்தார். சத்ருக்னர் வெண்சாமரம் வீசினார். பரதர் சாரதியாக இருந்து தேர் செலுத்தினார். தேரின் இரு பக்கங்களிலும் விபீஷணரும், சுக்ரீவனும் யானைகள் மீது சென்றார்கள். அங்கதன் முன்னே சென்றார். அநுமார் பின்னே சென்றார்.

மனித வடிவங் கொண்டு இருந்த வாநர மாதர்கள பெண் குதிரையின் மீதும் யானைகள் மீதும், பல்லக்கு முதலிய ஊர்திகளிலும் சென்றார்கள். பொன் விமானத்தில் சீதாதேவி சென்றாள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். அதனால் பூக்கள் எங்கும் நிறைந்து மண்ணுலகம் பூவுலகம் ஆயிற்று.

இராமர் தேரைவிட்டு இறங்கி அரண்மனைக்குள் சென்றார். பதினான்கு ஆண்டுகள் பிரிந்திருந்த அயோத்தி நகரத்து மக்கள் தாயைக் கண்ட சேயைப் போல் மகிழ்ந்தார்கள். உடைகள் அவிழ்ந்து போவதையும் உணராமல் கூத்தாடினார்கள்.

முடிசூட்டி நாளை நிச்சயித்து எண் திசைக்கும் ஓலை அனுப்பினார்கள். லட்சோப லட்சம் பேர் முடிசூட்டு விழாவுக்கு வந்து சேர்ந்தார்கள். அநுமார் தங்கக் குடங்களில் நவீரத்தங்களையும் கொண்டு வந்தார். முடிசூட்டு மண்டபத்தைப் பொன்னாலும் மணியாலும் பூவாலும் அலங்கரித்தார்கள். வசிஷ்டர் முதலானோர் வேள்வி செய்தார்கள். ஆஞ்சநேயர் சிங்காதனத்தைத் தாங்கிக் கொண்டு நின்றார். பரதாழ்வார் வெண் கொற்றக்கொடை பிடித்தார். இலட்சுமணரும் சத்ருக்னரும் வெண் சாமரம் வீசினார்கள். சீதாதேவி இராமர் அருகிலே விளங்கிக் கொண்டிருந்தார். வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலின் மூதாதைகள் மணி மகுடத்தை எடுத்துக் கொடுக்க, இராமருக்கு வசிஷ்டர் திருமுடி சூட்டினார்.

பாவங்களுக்கெல்லாம் பெரிய பாவம் செய்ந்நன்றி மறத்தல். புண்ணியங்களுக்கெல்லாம் தலையாய புண்ணியம் செய்நன்றியறிதல்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு என்பார் திருவள்ளுவர்.

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்

குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்
உய்தி உண்டு செய்திகொன் றோர்க்கு
உய்தி யின்றென அறம்பா டிற்று.

–புறநானூறு.

கம்ப நாடர் நன்றி மறவாத நற்குண சீலர். தமக்கு அன்னமும் ஆடையும் பொன்னும் பொருளும் வழங்கி ஆதரித்த சடையப்பரைத் திருமுடி சூட்டும் இடத்தில் பாராட்டிக் கவி புனைந்தார்.

திருமுடிசூட்டும்போது வானவர் மலர்மழை பொழிந்தார்கள். அரம்பையர்கள் ஆடினார்கள். நாரதர் முதலியவர்கள் பாடினார்கள். வசிட்டாதி முனிவர்கள் மந்திராட்சை தூவினார்கள்.

எல்லாருமே தங்கள் தங்களுக்கு முடிசூட்டியது போல மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்கள்.

இராமர், அந்தணர்கட்கு ஆடையும் அணிகலன்களும் பசுக்களும் வழங்கினார். வறியவர்க்கு அள்ளியள்ளிப் பொன்னும் மணியும் தந்தார்.

விபீஷணருக்குத் தேவர்கள் தந்த இரத்தின கடகத்தைத் தந்து, உனக்கு ஒப்பாரில்லை என்று முகமன் கூறி விடை கொடுத்தார்.

சுக்ரீவனுக்கு சம்பரனைத் தசரதர் வென்றபோது பிரமதேவர் தந்த இரத்தின கடகத்தையும், தேர் யானைகளையும் பரிசாக வழங்கினார்.

இந்திரன் கொடுத்த மணிக்கடகத்தை அங்கதனுக்கு அளித்தார். நீலன், ஜாம்பவான் முதலிய வாநரத் தலைவர்கட்கு இரத்தின மணிமாலைகளை வழங்கினார். குகனுக்கு உயர்ந்த இரத்தினா பரணங்களைத் தந்தார்.

அநுமாரைப் பார்த்து, ஆஞ்சநேயா, உனக்கு ஒப்பார் ஒருவரும் இல்லை. சஞ்சீவிமலை கொணர்ந்து மாண்டவரை மீண்டெழுமாறு செய்த உன் தியாகமும் சேவையும் மேருவரையினும் மேம்பட்டது. நீ தூய பிரம்மசாரி. உனக்கு என்ன பரிசு வழங்குவேன் ? என்னையே தருகின்றேன் என்று கூறி மார்புறத் தழுவிக் கொண்டார்.

இராமபிரான் சீதாதேவியைக் கடைக்கண்ணால் பார்த்தார். குறிப்புணர்ந்து சீதாதேவி தனக்குச் சரஸ்வதி தந்த நன்முத்து மாலையை அநுமாருக்கு அளித்தார்.

இந்த முடிசூட்டுவிழா தொடர்ந்து அறுபது நாள் நடந்தது.

விபீஷணர், சுக்ரீவன் முதலிய அனைவரையும் இராமபிரான் பார்த்து, அரசனில்லாத நாடு காடாகிவிடும். நீங்கள் சென்று, உங்கள் நாட்டை நன்கு அரசு செய்யுங்கள் என்று கட்டளையிட்டார்.

எல்லாரும் எம்பெருமானிடம் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டார்கள்.

விபீஷணர் எழுபது வெள்ளம் சேனைகளையும் விமானத்தில ஏற்றிக் கொண்டு குகனைச் சிருங்கிபேரத்திலும், சுக்ரீவன் முதலியவர்களைக் கிஷ்கிந்தையிலும் இறக்கிவிட்டு இலங்கை போய் ராம பக்தி செய்து ஆட்சி புரிந்தார்.

ஸ்ரீ இராமபிரான் தம்பியர்க்கு இளவரசுப் பட்டம் தந்து மனுநெறியில் ஆட்சி புரிந்தார். மண்ணுலகம் செழிக்கத் தொடங்கியது.

## நூற்பயன்

உலகம் உய்ய உதித்திட்ட
ஒளிசேர் இராமன் வரலாற்றை
நிலமேல் ஓதும் மெய்யன்பர்
நிறைந்த இன்பம் பெறுவார்கள்
அலகில் லாத மெய்ஞ்ஞானம்
அடைவர், அடையார் ஆகுலங்கள்,
பலரும் புகழும் பண்புடனே
பரம பதத்தில் வாழ்வாரே.

(நிறைந்தது)

**SRIRAMAJAYAM**

## ஸ்ரீ ராம நவமி

இன்னைக்கு பகவான் ஸ்ரீ ராமர் பிறந்த நாள்
நம்ம பண்டிகைகளிலேயே முக்கியமானது இந்த ஸ்ரீ ராம நவமிதான்!

## ஸ்ரீராமநவமி பூஜை

**ஸ்ரீராமநவமி பூஜையை ஒவ்வொரு ஆண்டும் பங்குனி அல்லது சித்திரை மாதத்தில் புனர்பூசம் சுக்லபட்ச நவமி திதியன்று பகலில் செய்திட வேண்டும். ஸ்ரீ ராமரை தாமரை மலர்கள் அல்லது இதழ்களால் அர்ச்சிப்பது மிகச் சிறந்தது நிவேதனத்திற்கு பானகம். பருப்பு வடை, நீர் மோர், பாயசம் செய்தல் வேண்டும்.**

பூஜை நன்கு நிறைவேற கணபதியை வேண்டி விக்னேச்வர பூஜை செய்திடவும் பின்னர் ராமரின் படத்துக்கு அல்லது விக்ரகத்திற்கு ஸ்ரீராம ஸஹஸ்ர நாமாவளி அல்லது ஸ்ரீராமாஷ்டோத்தர சத்நாமாவளியைச் சொல்லி, அர்ச்சனை செய்யலாம். இவை தெரியாதவர்கள், ஸ்ரீராம ஜெய்ராம ஜெய ராமா என்று மனமுருகி 108 முறை சொன்னாலும் போதும், பானகம், நீர் மோர் விநியோகம் செய்வது சிறப்பான பலன்தரும்.

இப்பூஜையை செய்வதால் என்ன நன்மை ஏற்படும் என்பதற்கு கன்னடத்தில் இந்த விரதத்தின் மகிமை கூறப்பட்டுள்ளது. கரபுரம் திருத்தலத்தில் கேசவப்பட்டர் என்பவர் வாழ்ந்த வந்தார். அவருடைய மகன் நாராயணன், ஏழையான அப்பெரியவர் தெய்வ பக்தி மிக்கவர்.

ஒருநாள் அவர் பூஜை விக்ரகங்கள் அடங்கிய பெட்டி, பஞ்சபாத்திரம் போன்ற பொருள்களுடன் தேசாந்திரம் புறப்பட்டார். நீண்ட நாட்கள் கழிந்தபின் வியாசர், சுகர் பராசரர் ஆகிய முப்பெரும் முனிவர்களையும் ஓரிடத்தில் அவர் சந்தித்தார். அவர்களிடம் தங்களது கஷ்டத்தைச் சொல்லி வருந்தினார். முனிவர்கள் அவரது கஷ்டம், தீர, ஸ்ரீராமநவமி விரதத்தை அவருக்கு உபதேசம் செய்து தவறாமல்

கடைபிடிக்கும்படியும் ராமாயண உபன்யாசம் கேட்கவும் சொன்னார்கள். அத்துடன் இப்பூஜையைச் செய்வதால் லக்ஷ்மி கடாட்சம் கிடைக்கும்; வியாதிகள் நீங்கும்; பகைவர்கள் நண்பர்களாக மாறுவர் தொலைந்துபோன பொருள்கள் கிடைக்கும்; சந்ததி இல்லாதவர்களுக்கு குழந்தைகள் பிறக்கும் என அம்மூன்று முனிவர்களும் சொல்ல, கேசவபட்டர் அவர்களை வணங்கி வீடு திரும்பினார்.

அம் மகா முனிவர்களின் உபதேசப்படி ஸ்ரீராமநவமி விரதத்தை முறையாகச் செய்து வறுமை நீங்கி சகல ஐஸ்வர்யங்களையும் அடைந்தார். கேசவ பட்டர்.

இவ்விரதத்தின் பெருமையைக் கேட்டறிந்த ஏழை சுமங்கலிப் பெண் ஒருத்தி அதனைக் கடைப்பிடித்து தன்னை விட்டுப் பிரிந்து காசிக்குப் போன கணவன் திரும்ப வரப்பெற்றாள். அந்த தேசத்து மன்னன் இறந்து போக பட்டத்துயானை தன்னிடம் இருந்த மாலையை அம்மங்கையின் மகன் கழுத்தில் போட்டு அவனை மன்னாக்கியது. இதுவும் ஸ்ரீராமநவமி பூஜையின் மகிமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. நாமும், ராமநவமி பூஜை செய்து சகல சுகங்களையும் அடைந்து வாழ்வோம்

“கடவுள் மனிதனாக பிறக்க வேண்டும் காதலித்து வேதனையில் வாட வேண்டும்” என்று விவரம் தெரியாமல் கேட்டு கொண்டிருப்பதற்கு பல லட்சம் வருடங்களுக்கு முன்பே அரசனாக பிறந்து, சாதாரண மனிதனாக கஷ்டப்பட்டு ஒவ்வொரு கஷ்டத்திலும் உயர்நிலையில் நடந்து கொள்வது எப்படி என்று வாழ்ந்தே காட்டினான் ராமன்! அவன் தன் மனைவியை மட்டும் காதலிக்க வில்லை. தர்மத்தை காதலித்தான். அதனால்தான் தர்ம சங்கடங்கள் வரும்போதெல்லாம் ஸ்ரீ ராமாயணத்தில் ஸ்ரீ ராமன் என்ன செய்தான் என்று நம்மை யோசித்து பார்க்க வைக்கிறது. ஸ்ரீ ராமன் மனிதப்பார்வையில்

தர்மத்தினின்று சிறு இழையளவாவது பிறழ்ந்திருப்பானோ என்று மீண்டும் மீண்டும் ஆராய்ச்சி செய்ய வைக்கிறது.

பெற்ற தாய் தந்தையரிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? தன்னை நம்பி வாழும் மக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அரசன் எப்படி இருக்க வேண்டும்? சகோதரர்கள் எப்படி இருக்க வேண்டும்? மனைவி எப்படி கணவனிடம் நடக்க வேண்டும்? கணவன் மனைவியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? நண்பர்களிடம், பெரியோர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? விரோதிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இன்னும் கேட்டுக் கொண்டே போகலாம். இதற்கெல்லாம் ஒரே பதில் தான் - ஸ்ரீ ராமாயணத்தை படியுங்கள்!

தியாக ராஜரையும், கம்பரையும் சொன்னேன். அவர்கள் எல்லாம் ராம பக்தர்கள். ராமர் யாரென்றே தெரியாத ஒருவர் அதுவும் நமது மொழிகள், கலாச்சாரங்கள், உணர்வுகள் எதுவும் தெரியாத ஆங்கிலேயர் அவருக்கு கிடைத்த பேற்றை சொல்கிறேன்.

இது நடந்தது 1884-ம் வருடம். ஆங்கிலேயர் தமிழகத்தை ஆண்டு வந்த நாட்கள். சென்னையை அடுத்த மதுராந்தகத்தில் இன்றும் இருக்கிற ஏரி நீர் நிரம்பியிருந்தது. ஏரியைப் பார்வையிட அப்போதைய கலக்டர், ப்ரைஸ் என்பவர் வந்திருந்தார். அவர் கோவிலையும் பார்வையிட்டார். அந்த சமயத்தில் பெரு மழையொன்று பிடித்தது. தொடர்ந்து விடாமல் பெய்து வந்தது.

ஏரி உடைப்பு எடுத்துக் கொண்டு ஊர் அழியுமோ என்று மக்கள் பயப்பட ஆரம்பித்தார்கள். அன்று நள்ளிரவில் கலக்டர் தமது தங்குமிடத்தை விட்டு ஏரியை காண சென்றார். பெய்யும் மழையில் ஏரி நிரம்பி மிக பயங்கரமாக காட்சி அளிக்க, நாடு விட்டு நாடு வந்து இங்கே இறந்து போய்விடுவோமோ என்று கலங்கினார் கலக்டர். தாம் கண்ட கோவிலில் இருந்த ஸ்ரீ ராமரை நினைத்து “இறைவா எங்களை காப்பாற்று! ” என்று கேட்க ஏரிக்கரையில் ராமரும் லக்ஷ்மனரும் வில்லேந்தி காவலிருப்பதாக கலக்டரின் கண்களுக்கு தெரிந்தது.

ஏரி உடைப்பு எடுக்க வில்லை. மறு தினம் மழையும் நின்றது. தனது பிரார்த்தனைக்கு பலன் கிடைத்ததாக மகிழ்ந்த கலக்டர் ஸ்ரீ ராமர் கோவிலுக்கும் திருப்பணிகளை எல்லாம் மேற்கொண்டார். அந்த ராமருக்கு "ஏரி காத்த ராமர்" என்றே பெயர் ஏற்பட்டது. "இந்த தர்மம் கும்பினி ஜாகிர் கலக்டர் லியோநேல் ப்ரைஸ் துரை அவர்களுடையது" என்று கல்வெட்டுக்களை இன்றும் காணலாம்.

தமிழகத்தில் ஸ்ரீ ராமர் கோவில் இல்லாத ஊர்களே இல்லை என்றே சொல்லலாம். ராமர் வாழ்ந்த அடையாளங்கள் இல்லாத பகுதிகளே இந்தியாவில் இல்லை. சின்ன சின்னதாக சிதறி பாரதமெங்கும் வாழும் மக்களின் இந்த நம்பிக்கைகள் தான் பாரத நாட்டையே ஒன்று படுத்துகிறது. ஒரு சில நூறு கிலோமீடர்களுக்குள்ளேயே மொழி வித்தியாசம் ஏற்படுகிற நாடு நம்முடையது. ஆனால் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ராமர் பெயரைச் சொன்னால் புரிந்து கொள்ளாத இந்தியன் இருக்க முடியாது.

**ஜெய் ஸ்ரீ ராம்! ஜெய் சீதா ராம்!**

**ஸ்ரீ ராமாய ஸ்ரீ ராம பத்ராய ராம சந்த்ராய வேதஸே !**
**ரகுநாதாய நாதாய சீதாய: பதயே நம: !! என்றும்**

**ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே !**
**சகஸ்ரநாம தத்துல்யம் ராம நாம் வராணனே !!**

என்று ஈஸ்வரரே திருவாய் மலர்ந்தருளிய சகஸ்ர நாமத்தின் சாரமான ராம நாமத்தை மனமுருக ஜபித்து நின்றால் மனது அப்படியே லேசாகி விடுகின்றது,

**பானகம்**

தேவையான பொருள்கள்:
வெல்லம் - 250 கிராம்

தண்ணீர் - 4 கப்
ஏலப்பொடி - 2 சிட்டிகை
சுக்கு - 1 சிட்டிகை
எலுமிச்சம் பழம் - 1

**செய்முறை:**

வெல்லத்தை நீரில் நன்கு கரைத்து, தேவைப்பட்டால் வடிகட்டிக் கொள்ளவும்.
ஏலப்பொடி, சுக்குப் பொடி சேர்த்துக் கலக்கவும்.
இறுதியில் எலுமிச்சம் பழச் சாறையும் சேர்க்கவும்.

**சக்ரவர்த்தி திருமகனின் பிறந்தநாளை முன்னிட்டு**

நீர்மோர் | வடைபருப்பு

தேவையான பொருள்கள்:
தயிர் - ஒரு கப்
தண்ணீர் - 3 கப்
இஞ்சி - சிறு துண்டு
கறிவேப்பிலை - 4,5 இலை
கொத்தமல்லி - சிறிது
பச்சை மிளகாய் - 1/2
உப்பு - தேவையான அளவு
பெருங்காயம் - 1 சிட்டிகை
விரும்பினால்..
வெள்ளரி - 1 துண்டு
கேரட் - 1 துண்டு
மாங்காய் - 1 துண்டு

**செய்முறை:**

புளிக்காத தயிரை நன்கு கடைந்து, 2 கப் தண்னீர் சேர்த்துக் கொள்ளவும்.

இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி, பச்சை மிளகாய், வெள்ளரி, கேரட்,
மாங்காய் எல்லாவற்றையும் மிக்ஸியில் அரைத்து அத்துடன் மீதம் இருக்கும் ஒரு கப் தண்ணீரைச் சேர்த்து நன்கு டீ வடிகட்டியில் வடிகட்டவும்.

வடிகட்டிய நீரையும் மோரோடு சேர்த்துக் கொள்ளவும்.

மேலே உப்பு, பெருங்காயம் சேர்த்துக் கலக்கவும்.

மாங்காய் இல்லாவிடில், தேவைப் பட்டால் சிறிது எலுமிச்சம் பழச் சாறும் சேர்த்துக் கொள்ளலாம்.

பொதுவாக எல்லா வேலைகளுக்கும் அம்மி ஆட்டுரல் என்று பழைய பொருள்களை நாடினாலும், தயிர் கடைவதில் மட்டும் மத்தை விட மிக்ஸி மிக மிகச் சுவையான மோரைக் கொடுக்கும்.

வெயில் காலத்தில் இதைத் தயாரித்து ஃப்ரிட்ஜில் வைத்துக் கொண்டால் மதிய வேளைகளில் தேவைப்படும் பொழுதெல்லாம் எடுத்துக் குடிக்கலாம். ஆடை நீக்கிய தயிர் அல்லது வெண்னை எடுத்த மோர் என்றால் நலம்.

**வேறு முறை**

1. பானகம்

2. நீர் மோர்

3. பயத்தம்பருப்பு கோஸ்மல்லி

1. பானகம். வெல்லம் அதை எடுத்துத் தண்ணீரிலே ஒரு கலக்கு கலக்கி, கொஞ்சம் ஏலக்காய்ப் பொடியும்,சுக்குப் பொடியும்( ட்ரை ஜிஞ்சர்) கலந்தா ஆச்சு!

2. நீர் மோர்.. இதுக்கு நிஜமாவே ரெஸிபி வேணுமா? தயிர்+ தண்ணீ கலந்து ப்ளெண்டர்லெ ஒரு அடி அடிச்சு உப்பும் கருவேப்பிலையும் சேர்த்துடுங்க

3. பயத்தம் பருப்பு கோஸ்மல்லி தேவையான பொருட்கள்: பயத்தம்( பாசிப்) பருப்பு 1 கப்வெள்ளரிக்காய் 1/2 . சாதாரண வெள்ளரிக்காய் அப்புறம், உப்பு, தேங்காய்த்துருவல் 2 டேபிள் ஸ்பூன்) பச்சை மிளகாய் 2/3, ஒரு சிட்டிகைப் பெருங்காயத்தூள்தாளிக்கக் கொஞ்சம் கடுகும் ஒரு டீஸ்பூன் எண்ணெய்யும், கொஞ்சம் கறி வேப்பிலையும்.

**செய்முறை:**

பாசிப் பருப்பை ஒரு மணிநேரம் தண்ணிலே ஊற வச்சுடுங்க. வெள்ளரிக்காயைத் தோல்சீவி, சின்னத்துண்டா ( பல்லுபல்லா!) நறுக்கிடுங்க.
தேங்காய் பத்தையையும் இப்படியே! துருவல்ன்னா துருவிக்கணும். ஊறின பருப்பைக் கழுவிட்டு, தண்ணியை வடிச்சுட்டு( சும்மா கொஞ்சம் தண்ணி 2 டீஸ்பூன்போல இருக்கட்டும்.இப்ப ஒரு வாணலி/நான்ஸ்டிக் பேன் அடுப்பிலே வச்சு எண்ணெய் ஊத்தி, அது காய்ஞ்சதும் கடுகு, கறிவேப்பிலை,நறுக்கின பச்ச மிளகாய்த்துண்டுங்க, ஒரு சிட்டிகை பெருங்காயம்போட்டு வதக்கி, வெந்த பருப்பையும் போட்டுக் கிளறி, உப்பும் தேங்காய்த்துருவல், வெள்ளரிக்காய் எல்லாம் சேர்த்து ஒரு நிமிஷம் வதக்கி எடுத்தா ஆச்சு.நம்ம ஊருலே பருப்பை ஊற வச்சு,அப்படியே பச்சையாப் போடுவாங்க. அது நறுக் நறுக்குன்னு நல்லாத்தான் இருக்கும்.அது ஒரு பச்சைவாசனையா இருக்குன்னு சொல்றதுனாலேதான் இப்படி!அது போகட்டும். மாங்காய்

கிடைக்கிற ஊருலே இருக்கற புண்ணியவதிகளும், புண்ணியவான்களும் மாங்காயைப்பல்பல்லா நறுக்கி, இதோட சேர்த்துக்குங்க.

**ஸ்ரீ ராமாய ஸ்ரீ ராம பத்ராய ராம சந்த்ராய வேதஸே ரகுநாதாய நாதாய சீதாய: பதயே நம: !**

**"ஸ்ரீ ராம மஹா மந்திரம்**

பார்வதி பரமனிடம் கேட்கின்றாள்_ "பிரபோ! இந்தக் கலியுகத்தில் மக்கள் உய்ய எளிய வழியைக் கூற வேண்டும்."

ஈஸ்வரன் பரம கருணையுடன் பார்வதிக்குக் கூறிய அந்த மகா மந்திரமே "ராம" மந்திரமாகும்.

**"ஸ்ரீ ராம ராமேதி**
**ரமே ரமே மனோரமே**
**சகஸ்ர நாம தத்துல்யம்**
**ராம நாம வரானனே"**

`ராம்' என்ற அந்த ஈரெழுத்து மந்திரத்தைச் சொன்னால் ஆயிரம் திருநாமத்தை உச்சரித்த பலன் கிடைக்கும் என்கிறார். அது மட்டுமா?

**"நன்மையுஞ் செல்வமு**
**நாறு நல்குமே,**
**தின்மையும் பாவமுஞ்**
**சிதைந்து தேயுமே,**
**சென்மமு மரணமு**
**சூன்றித் தீருமே,**
**இம்மையே இராமா**
**வென்றிரண்டு எழுத்தினால்"**

என்று கம்பன் உறுதியுடன் கூறுகின்றார். அதைக் கலிச்சக்ரவர்த்தி ஆஞ்சநேயன் வாயிலாகவும் கூறுகின்றார்.

சுந்தர காண்டத்தில் மாருதி, சூழ்கின்ற துன்பங்களையும், துயர்களையும் ராமநாமத்தை உச்சரிப்பதன் மூலமே துரத்தி விட முடியும் என்பதை வலியுறுத்துகின்றான்.

"இராம! என
எல்லாம் மாறும்,
அதின் மாறு பிறிது இல்,
என வலித்தான்"

இதை நிரூபிக்கும் விதத்தில் ராம கதையில் ஒரு நிகழ்ச்சி. இலங்கைக்குச் செல்ல பாலம் அமைக்கப்படுகிறது. குரங்குப் படைகள் எல்லாம் பெரிய பெரிய பாறைகளை பெயர்த்து வந்து கடலில் போடுகின்றன. கடலில் போடப்பட்ட கற்கள் தண்ணீரில் மூழ்கி விடுகின்றன. சற்று நேரம் செய்வதறியது தவித்த ஆஞ்சநேயர் உடனே இந்த சிக்கலுக்கு விடை கண்டவராக மனம் தெளிந்து ஒவ்வொரு கல்லிலும் "ராம" நாமத்தைப் பொறிக்கச் செய்து கடலிலே போடச் சொல்கிறான். என்ன ஆச்சர்யம்! அந்தக் கற்கள் நிரில் மூழ்காமல் சூதக்கின்றன. எளிதில் பாலம் அமைக்கப்பட்டு விடுகிறது. `ராம' நாமத்துக்கு அவ்வளவு மகிமை.

இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அண்ணல் தானும் ஒரு கல்லை எடுத்துப் போடுகிறார்.
ஆனால் ராமன் போட்ட கல் சூதக்காமல் கடலில் மூழ்கி விடுகிறது. காரணம் கடவுளைவிட கடவுளின் நாமத்துக்கே மகிமை அதிகம் என்பதை நிரூபிப்பதை போல இருக்கிறது ராமனின் அந்தச் செயல். ராமனின் நாமம் எவ்வளவு ருசியானது. சொல்லச் சொல்ல இனிக்கும் திருநாமம் அல்லவா? "ராம ஸ்ரீராமமு எந்த ருசிரா? ஏசூ ருசிரா?" என்று சொல்லிச் சொல்லிப் புளாங்கிதம் அடைகிறார் ஸ்ரீதியாக பிரம்மம்.

சைவ, வைணவக் கோட்பாடுகளை ஐக்கியப்படுத்தும் திருநாமமாகவும் `ராம' நாமம் அமைந்துள்ளது. அஷ்டாக்ஷர மந்திரத்தில் நாராயணாய என்ற சொல்லில் இரண்டாவது எழுத்து "ரா", சிவாக்ஷரத்தில் நமசிவாய என்பதில் இரண்டாவது எழுத்து `ம' இரண்டையும் இணைத்து `ராம' என்றாகிறது என்று சொல்வார்கள்.

"ரா_ஆ_மா" என்பதே `ராமா' என்றாயிற்று. இது பிரம்மனையும் (படைக்கும் கடவுள்), விஷ்ணுவையும் (காக்கும் கடவுள்) சிவனையும் (சம்ஹார மூர்த்தி) குறிக்கும் சொல் என்று 36 அழகான விளக்கத்தை ஸ்ரீ சுவாசூ சிவானந்தர் கூறுகின்றார். அவனது திருநாமத்தை பக்தியுடன் உச்சரிப்பவர்கள் எல்லா நலனும் பெறுவர் என்பது அவரது அருள்வாக்கு.

ஸ்ரீராமன் மனிதனாக அவதரித்து, பக்தர்களின் மகிழ்ச்சிக்காக தான் எல்லா துன்பங்களையும் அனுபவித்தவன். ஆனால், அவனது பக்தர்கள் அவன் திருநாமத்தை உண்மையான பக்தியுடன் சொன்னாலே போதும். இந்தப் பிறவிக் கடலை எளிதில் நிந்தி விடலாம்.

காந்தி அண்ணல் தம் இறுதி மூச்சுவரை `ராம' நாமத்தில் நம்பிக்கை வைத்திருந்தார். குண்டடிபட்டு மண்ணிலே தலை சாயும் போதும், அவர் "ராம, ராம" என்று சொல்லிக்கொண்டே உயிர் நித்ததை நாம் அறிவோம்.

`ராம' நாமத்தின் மகிமையை பற்றி காந்திஜி கூறுகையில், "ராம" நாமம் சிலருக்கு மட்டுமே சொந்தமல்ல, அது அனைவருக்கும் சொந்தமானது. அதைப் பக்தியுடன் ஜெபிப்பவர் என்றும் வற்றாத, விலை மதிக்கவொண்ணாத அருட் பொக்கிஷத்தைத் தனக்கென சேகூத்துக் கொள்கிறார்கள். நாம் அதிலிருந்து எடுக்க, எடுக்க அமுத சுரபி போல மேன் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும். அதற்கு முடிவே இல்லை. உபநிஷதம் கூறுவதுபோல முடிவிலாப் பரம்பொருள் அது."

ராம நாமமே கதி என்றிருப்பவர் விருப்பம் அனைத்தும் நிறைவேறும். ராம நாம அமுதம் உள்ளத்திற்கு மகிழ்ச்சி தருவதுடன் உடற்கோளாறுகள் அனைத்தையும் அகற்றி விடும் என்கிறார் காந்திஜி.

பிங்களை ஒரு தாசி. அவளுக்கு ராம நாமத்தின் பெருமையைப்பற்றி எதுவும் தெரியாது. ஒரு திருடன் அவளுக்கு கிளி ஒன்றை தனது அன்பளிப்பாகத் தந்து விட்டுப்போனான். அந்தக் கிளி எப்போதும் "ராம, ராம" என்று சொல்லும்படி பழக்கப்படுத்தப்பட்டிருந்தது. ராம நாமத்தைப் பற்றி எதுவும் அறியாத பிங்களை கிளியின் வாய் மூலமாக அந்த நாமத்தை அறிந்து கொண்டு, கிளி சொல்லச் சொல்லக் கேட்டு, கேட்டு தானும் இடையறாது உச்சரித்து உய்வு பெற்றாள் என்றால், ராம நாமம் சகல தளைகளையும் அறுத்து மேன்மை அளிக்கும் மந்திர மன்றோ.

அனுமன் வாலில் அரக்கர்கள் தீ மூட்டிய போது, அந்தத் தீ ஆஞ்சநேயனைச் சுட்டெரிக்காமல் இலங்கையை எரித்து விட்டது. அனுமன் ராம நாமத்தை பக்தியுடன் ஸ்மரித்ததால் அன்றோ அவனுக்கு ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை. இலங்கை முழுதும் எரியும் போது விபீஷணனின் மாளிகை மட்டும் தீப்பிடிக்கவில்லை. அவன் ராம நாமத்தில் கொண்டிருந்த பக்தியே காரணம்.

உள்ளும் புறமும் ஒளி வேண்டுமானால் ராம நாமம் என்ற ரத்தினத்தை உனது நாவில் வைத்துக்கொள் என்று கூறுகிறார் துளசி.

இராமாயணம் ஒரு தலை சிறந்த பக்தி காவியம் ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீசுகர் குறிப்பிட்டுள்ள ஒன்பது பக்தி வகைகளும் ராமாயணத்தில் ஒன்பது கதாபாத்திரங்களின் மூலம் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன.

**தன்யா ராமகதா ஸ்ருதௌ ஹனுமான்**
**வல்மீகயு கீர்தனே சீதா ஸமஸ்மரணே, தைதவ பரத:**
**ஸ்ரீ பாதுகா ஸேவனே**
**அர்ச்சாயாம் சபரீ, ப்ரணமாகரணே**
**லங்காதிபோ, லக்ஷ்மண:**
**தாஸ்யோ ஸக்யக் ருதே அர்கஜ:**
**தனுத்ராணே ஜடாயுர் நவ.**

கேட்டலுக்கு அனுமன், பாடலுக்கு வால்மீகி, நினைப்பதற்கு சீதை (ஸ்மரணம்), பாத சேவைக்கு பரதன் (ஸேவனே), அர்ச்சிப்பதில் சபரி, வணங்குவதில் விபீஷணன், தொண்டு புரிவதில் லக்ஷ்மணன், நட்புக்கு சுக்ரீவனும்_குகனும், தன்னையே அர்ப்பணிப்பதில் ஜடாயு என பத்துவித கதாபாத்திரங்களின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

போஜ மகாராசன் தனது அந்தம காலத்தில் உயிர்வாழ ஒன்றரை மணி நேரமே இருக்கிறது என்ற நிலையில் மகாகவி காளிதாசனுடன் சேர்ந்து நாடும், தானும் உய்ய இயற்றிய போஜசம்பூ என்ற கவிதையுடன் கலந்த உரை நடைக்காவியம் ராமகதையின் பெருமையை விளக்கும்.

இராமாயணம் ஒரு சரித்திர நூல் மட்டுமன்றி, வேதம் நிடதங்களில் கூறப்பட்டுள்ள பரம்பொருள் தத்துவத்தை எளிய முறையில் விளக்கும் நடைமுறை வேதாந்த நூலாகும்.
பாரதப் போருக்குப் பின் யுதிஷ்டிரர் பீஷ்மரிடம், "பல அரசர்கள் போரில் இறந்து விட்டதால் நாட்டில் நிலவும் குழப்பத்தை எப்படி நிக்குவது?" என்று கேட்டார்.
"நாடெங்கும் ராமாயணம் பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்தால் நாட்டில் அமைதி நிலவும்." என்று பீஷ்மர் பதிலளித்தார்.
ராமாயணம் நவரசங்களும் அடங்கிய காவிய இலக்கண நூலாகும்.

வில் ஒடித்தலில் வீரம், சீதையுடன் சிருங்காரம், ராமனைப் பிரிந்த தசரதன் துயரில் கருணை விராதன் கபந்தன் வதங்களிலும் சேது பந்தனத்திலும் ஆச்சரியம், பஞ்சவடியில் சூர்ப்பணகை நடந்து கொண்ட விதத்தில் நகைச்சுவை, பாபம் செய்வதில் பயம், தாடகை மற்றும் அசோகவனத்தில் சீதையைச் சுற்றியுள்ள அரக்கிகளின் வர்ணனையில் வெறுப்பு, ராவணனை வதம் செய்ததில் ரௌத்திரம் மற்றும் தண்ட கார்ண்ய வர்ணனையில் அமைதியும் சுளிர்கின்றன.

ராமாயணம் ரிக்_சாம_யஜுர்_அதர்வண என்னும் நான்கு வேதங்களுக்கும் இணையானவை ஆகும்.
லவ_குசர் ராமனின் அசுவமேதயாகத்தின்போது அங்கு தோன்றி இராமாயணக்கதையைப் பாடியபோது ராமர் அதை கேட்டபோது தம்மைவிட உயர்ந்தது இராமாயணமே என்று அரியணையிலிருந்து இறங்கி தாமும் மக்களில் ஒருவராக அமர்ந்து கொண்டாராம்.

ராமர் தம் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும் தம்மை நேரில் கண்டவர்களுக்கும் முக்தியளித்தார். ஆனால் ராமாயணமோ காலத்தைக் கடந்து, அதை இன்று கேட்பவர்களுக்கும் முக்தி அளித்து வருகிறது.

